ரா.—ஸா. முதல் ப்ரச்நத்திற்கு உத்தரஞ்சொல்லுகிறார். "ஏதஸ்மாஜ்ஜாயதே ப்ராணோமநஸ் ஸர்வேந்த்ரியாணிச" (இந்த பரமாத்மாவினிடத்தி லிருந்து ப்ராணனும், மநஸ்ஸும், எல்லா இந்த்ரியங்களும் பிறக்கும்) என்கிற ச்ருதியின்படி பரமாத்மாவினிடத்தில் இந்த ப்ராணனுண்டாகிறது. இச்சரீரத்தில், எப்படி சேருகிறது, என்கிற ப்ரசநத்திற்கு உத்தரம்சொல்லுகிறார். புருஷன் நடக்கும்போது நிழலானது யத்நமின்றியிலே கூடச்செல்லுகிறாப்போலே, இந்த ஜீவனிடத்தில் மனதானது, யத்நமில்லாமலே விட்டுப்பிரியாமல் சேர்ந்திருக்கிறது. இப்படியே ப்ராணனும் யத்நமில்லாமலே சரீரத்தில் சேர்ந்திருக்கிறது. மனஸ்ஸு, ப்ராணன், இவ்விரண்டுக்கும்புருஷன்வழியாலே சரீரத்தில் ப்ரவேசம் ஸித்திக்கிறது. புருஷனை விட்டுப்பிரியாததாகையாலே புருஷனோடேயே ப்ராணனுக்கு ஸம்பந்தம். ஆகையாலே, ப்ராணனுடைய வ்யாபாரத்திலும் மநஸ்ஸினுடைய வ்யாபாரத்திற்போல வேறுகாரணம் வேண்டப்படாது.

௪. 𑌯𑌥𑌾 𑌸𑌮𑍍𑌰𑌾𑌡𑍇𑌵𑌾𑌧𑌿𑌕𑍃𑌤𑌾𑌨𑍍𑌵𑌿𑌨𑌿𑌯𑍁𑌙𑍍𑌕𑍍𑌤𑍇 । 𑌏𑌤𑌾𑌨𑍍𑌗𑍍𑌰𑌾𑌮𑌾𑌨𑍇𑌤𑌾𑌨𑍍𑌗𑍍𑌰𑌾𑌮𑌾𑌨𑌧𑌿𑌤𑌿𑌷𑍍𑌠𑌸𑍍𑌵𑍇𑌤𑍍𑌯𑍇𑌵𑌮𑍇𑌵𑍈𑌷𑌪𑍍𑌰𑌾𑌣𑌃 𑌇𑌤𑌰𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑍍𑌪𑍃𑌥𑌕𑍍𑌪𑍃𑌥𑌗𑍇𑌵𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌤𑍍𑌤𑍇॥

౪. యథాసమ్రాడేవాధికృతాన్వినియుఙ్క్తే । ఏతాన్గ్రామానేతాన్ గ్రామానధితిష్ఠస్వేత్యేవమేవైషప్రాణః ఇతరాన్ ప్రాణాన్ పృథక్పృథగేవ సన్నిధత్తే॥

(ப-ம்) ஸம்ராட் ஏவ-அரசனே, அதிக்ருதாந்-வேலைக்காரர்களை, யதா-எப்படி, ஏதாந்-க்ராமாந்-ஏதாந் க்ராமாந் - இந்தவிந்தக்ராமங்களிலே, அதிதிஷ்ட-வேலைபார். இதி-என்று, விநியுங்க்தே-நியமிக்கிறானோ ஏவமேவ-இப்படியே, ஏஷ:ப்ராண: - இந்தப்ராணன், இதராந் ப்ராணாந்-மற்றப்ராணங்களை, ப்ருதக்ப்ருதக் ஏவ - வெவ்வேறாகவே, ஸந்நிதத்தே-நியமிக்கிறது.

ஸ0.—ஸா. அரசன் தன் வேலைக்காரர்களை நியமிக்கிறாப்போல் முக்யப்ராணன், மற்றப்ராணங்களை அதாவது இந்திரியங்கள் முதலியவற்றை தங்கள் தங்கள் ஸ்தாநங்களில் நியமிக்கிறது.

ரா.—ஸா. தன்னைப்பிரித்துக்கொண்டு எப்படி ப்ரதிஷ்டை யடைந்திருக்கிறதென்கிற மூன்றாம் ப்ரசநத்திற்கு உத்தரம்சொல்லுகிறார்.—அரசன் தன் சேவகர்களை கார்யங்களில் நியமிக்கும்போது இந்த க்ராமத்து வேலையை நீ பார்; இந்த க்ராமத்து வேலையை நீ பார் என்று பிரித்துப்பிரித்து நியமித்து, அவர்கள் வழியாலே அங்கங்குகார்யங்களை நடத்துகிறாப்போலே இதர ப்ராணங்களை வ்ருத்தி மார்க்கங்களாலே ஸந்நிதிசெய்து முக்யப்ராணன் நியமிக்கிறது.

ரு. 𑌪𑌾𑌯𑍂𑌪𑌸𑍍𑌥𑍇𑌽𑌪𑌾𑌨𑌂 𑌚𑌕𑍍𑌷𑍁𑌃𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑍇 𑌮𑍁𑌖𑌨𑌾𑌸𑌿𑌕𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌪𑍍𑌰𑌾𑌣𑌃 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌪𑍍𑌰𑌾𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑍇 𑌮𑌧𑍍𑌯𑍇 𑌤𑍁 𑌸𑌮𑌾𑌨𑌃 । 𑌏𑌷 𑌹𑍍𑌯𑍇𑌤𑌦𑍍𑌧𑍁𑌤𑌮𑌨𑍍𑌨𑌂 𑌸𑌮𑌂 𑌨𑌯𑌤𑌿 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍇𑌤𑌾𑌃 𑌸𑌪𑍍𑌤𑌾𑌰𑍍𑌚𑌿𑌷𑍋 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿॥

౫. పాయూపస్థేఽపానం చక్షుశ్శ్రోత్రే ముఖనాసికాభ్యాం ప్రాణస్స్వయం ప్రాతిష్ఠతే మధ్యే తు సమానః । ఏష హ్యేతద్ధుతమన్నం సమం నయతి తస్మాదేతాస్సప్తార్చిషో భవంతి॥

(ப-ம்) 𑌪𑍍𑌰𑌾𑌣𑌃-ப்ராணனானது, 𑌪𑌾𑌯𑍂𑌪𑌸𑍍𑌥𑍇-மலம்வெளிவருகிற பாயுவென்கிற விந்த்ரியத்திலும், மூத்ரம்வெளிவருகிற உபஸ்தமென்கிறவிந்திரியத்திலும், 𑌅𑌪𑌾𑌨𑌂-அபாநவாயுவை, ஜலமலங்களை வெளியாக்கும்படி நியமித்துக்கொண்டிருக்கிறது. 𑌮𑍁𑌖𑌨𑌾𑌸𑌿𑌕𑌾𑌭𑍍𑌯𑌾𑌂-வாய்மூக்குகளினால்வெளிவருகிற, 𑌸𑍍𑌵𑌯𑌂-தான், 𑌚𑌕𑍍𑌷𑍁𑌃𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑍇 - கண்செவிகளிலே, 𑌪𑍍𑌰𑌾𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑍇 - அவைகளின் வ்யாபாரங்களைநடத்திக்கொண்டு நிற்கிறது. 𑌮𑌧𑍍𑌯𑍇 𑌤𑍁-நடுவில், 𑌸𑌮𑌾𑌨𑌃-ஸமாநவாயுவாய்க்கொண்டுநிற்கிறது. 𑌏𑌷𑌃, 𑌹𑌿-இந்தஸமானனென்கிற வாயுவானது, 𑌹𑍁𑌤𑌂-ஹோமம்செய்த, 𑌏𑌤𑌤𑍍-𑌅𑌨𑍍𑌨𑌂-இந்தவன்னத்தை, 𑌸𑌮𑌂-ஸாம்யத்தை, 𑌨𑌯𑌤𑌿-அடைவிப்பிக்கிறது, 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍-ஆகையால், 𑌏𑌤𑌾𑌃-𑌸𑌪𑍍𑌤𑌾𑌰𑍍𑌚𑌿𑌷𑌃 - இந்த ஏழுஜ்வாலைகள், 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿-உண்டாகின்றன.

ஸ0.—ஸா. முக்யப்ராணன் மற்ற ப்ராணங்களை அவைகளின்ஸ்தாநங்களில் நியமிக்கிறதென்று கீழ்சொல்லியபடி இந்த ஸ்தாநத்தில் இந்த ப்ராணனை நியமிக்கிறதென்று பிரித்துச்சொல்லுகிறது, பாயூபஸ்தங்களில் அபாநவாயுவைத் தன் காரியத்தை நடத்தும்படி நியமிக்கிறது. கண்செவி இவைகளை, தானே, வாய், மூக்குஇவைகளினால் வெளிவந்து அவைகளின் கார்யங்கள் நடக்கும்படிநியமித்து அரசன்போல் விளங்குகிறது, ப்ராணன், அபாநன், இவைகளுக்கு நடுவே நாபியில் ஸமானவாயு, உண்ணப்படுகிற சோறுமுதலியவற்றை ஸாம்யமடையும்படி செய்துகொண்டு நிற்கிறது. ஆத்மாக்நியில் ஹமம் செய்விக்கிறதென்கை. இப்படி, புசிக்கப்பட்ட அந்நத்தையும், குடிக்கப்பட்ட தண்ணீரையும் இந்தநமாகவுடைய வயிற்று நெருப்பிலிருந்து ஏழுவகையான ஜ்வாலைகள் உண்டாகின்றன. அதாவது இரண்டுகண்கள், இரண்டுசெவிகள், இரண்டுமூக்குகள், நாக்கு ஆக ஏழுஜ்வாலைகளென்கை. ஜ்வாலைகளில் பக்வமான அந்நம்முதலியவற்றின் ரஸத்தினால் விளங்குகின்றனவாகையாலே இவ்விந்திரியங்களை ஜ்வாலைகளென்றே காரியங்களைக்காரணமாக உபசரித்துச்சொல்லலாகும்.

பதாந்வயார்த்தபேதங்கள்.

இராமாநுஜபாஷ்யத்திலு மிக்கருத்தேகொள்ளப்பட்டது. ஆயினும் ஏழுஜ்வாலைகளென்கிற விடத்தில், இந்திரியங்களாகிய காரியங்களைக்காரணங்களாக உபசரிக்கையாகிற உபசாரத்தைநீக்கி, காளீ, கராளீ, முதலிய ஏழுஜ்வாலைகளுண்டாகின்றனவென்று முக்யார்த்தம் சொல்லப் பட்டது. 'தஸ்மாத்' என்கிறபதத்திற்கு, சங்கரபாஷ்யத்தில், அந்தஜாடராக்நியிலிருந்து என்றுபொருள். இராமாநுஜபாஷ்யத்தில் அந்தகாரணத்தாலே என்று பொருள். இப்படிபேதமறிந்துகொள்க.

௬. 𑌹𑍃𑌦𑌿 𑌹𑍍𑌯𑍇𑌷 𑌆𑌤𑍍𑌮𑌾 । 𑌅𑌤𑍍𑌰𑍈𑌤𑌦𑍇𑌕𑌶𑌤𑌂 𑌨𑌾𑌡𑍀𑌨𑌾𑌂 𑌤𑌾𑌸𑌾𑌂
𑌶𑌤𑌂𑌶𑌤𑌮𑍇𑌕𑍈𑌕𑌸𑍍𑌯𑌾𑌂 𑌦𑍍𑌵𑌾𑌸𑌪𑍍𑌤𑌤𑌿𑌰𑍍𑌦𑍍𑌵𑌾𑌸𑌪𑍍𑌤𑌤𑌿𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌶𑌾𑌖𑌾𑌨𑌾𑌡𑍀
𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌣𑌿𑌭𑌵𑌨𑍍𑌤𑍍𑌯𑌾𑌸𑍁 𑌵𑍍𑌯𑌾𑌨𑌶𑍍𑌚𑌰𑌤𑌿॥

౬. హృదిహ్యేషఆత్మా । అత్రైతదేకశతంనాడీనాంతాసాంశతం శతమేకైక
స్యాంద్వాసప్తతిర్ద్వాసప్తతిః ప్రతిశాఖానాడీసహస్రాణిభవన్త్యాసువ్యానశ్చరతి॥

(ப்-ம்) 𑌏𑌷𑌃-𑌆𑌤𑍍𑌮𑌾- இந்த ஜீவாத்மாவானவன், 𑌹𑍃𑌦𑌿𑌹𑌿- ஹ்ருதயத்திலிருக்கிறானன்றோ, 𑌅𑌤𑍍𑌰- இந்தஹ்ருதயத்தில், 𑌨𑌾𑌡𑍀𑌨𑌾𑌂 - 𑌏𑌕𑌶𑌤𑌂- நூற்றொருநாடிகள், 𑌏𑌤𑌤𑍍- ப்ரஸித்தங்கள், 𑌤𑌾𑌸𑌾𑌂 - 𑌏𑌕𑍈𑌕𑌸𑍍𑌯𑌾𑌂- அவைகளுக்குள் ஒவ்வொன்றிலும், 𑌶𑌤𑌂𑌶𑌤𑌂- நூறுநூறுநாடிகளிருக்கின்றன. 𑌪𑍍𑌰𑌤𑌿𑌶𑌾𑌖𑌾𑌨𑌾𑌡𑍀𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌣𑌿 - அவற்றினுள்பிரிந்த நாடிகளினாயிரங்கள், 𑌦𑍍𑌵𑌾𑌸𑌪𑍍𑌤𑌤𑌿𑌃-𑌦𑍍𑌵𑌾𑌸𑌪𑍍𑌤𑌤𑌿𑌃- எழுபத்திரண்டு, 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿- இருக்கின்றன, 𑌆𑌸𑍁- இந்நாடிகளில், 𑌵𑍍𑌯𑌾𑌨𑌃- வ்யானவாயுவானது, 𑌚𑌰𑌤𑌿 - ஸஞ்சரிக்கிறது.

ஸ0.—ஹா. புண்டரீகமென்று சொல்லப்படுகிற தாமரைப்பூபோன்ற மாம்ஸ கண்டத்தினால் வளைந்துகொள்ளப்பட்ட ஆகாயத்தில், ஆத்மாவோடு சேர்ந்த லிங்காத்மா அதாவது ஜீவாத்மாவென்கை. இருக்கிறானன்றோ. அந்த ஹ்ருதயபுண்டரீகத்தில், நூற்றொரு ப்ரதாநநாடிகளிருக்கின்றன. இந்த நூற்றொருநாடிகளிலொவ்வொன்றும், நூறுநூறாகப்பிரிந்திருக்கின்றது. நூறுநூறாகப்பிரிந்த நாடிகளிலொவ்வொன்றும், எழுபத்திரண்டாயிரம் எழுபத்திரண்டாயிரமாகப் பிரிந்திருக்கிறது. இந்த நாடிகளெல்லாவற்றிலும், வ்யாநவாயுஸஞ்சரிக்கிறது.

ரா.—ஹா. சாகோபசாகைகளாகப்பிரிந்திருக்கிற பலவகைப்பட்ட நாடிகளுக்கு முதல் நிலமானஹ்ருதய புண்டரீகத்தில் ஸமாநவாயு ஸ்தாநத்தில், ஜீவாத்மா இருக்கிறான். இந்த எல்லாநாடிகளிலும் வ்யாநவாயுவுக்கு ஸஞ்சாரமுண்டு.

௭. 𑌅𑌥𑍈𑌕𑌯𑍋𑌰𑍍𑌧𑍍𑌵 𑌉𑌦𑌾𑌨𑌃 𑌪𑍁𑌣𑍍𑌯𑍇𑌨 𑌪𑍁𑌣𑍍𑌯𑌂।
𑌲𑍋𑌕𑌂 𑌨𑌯𑌤𑌿 𑌪𑌾𑌪𑍇𑌨 𑌪𑌾𑌪𑌮𑍁𑌭𑌾𑌭𑍍𑌯𑌾𑌮𑍇𑌵 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌲𑍋𑌕𑌂॥

౭. అథైకయోర్ధ్వఉదానః పుణ్యేనపుణ్యంలోకం నయతిపాపేనపాపముభాభ్యామేవ
మనుష్యలోకం॥

(ப்-ம்) 𑌅𑌥- இனிஉதாநவாயுவின் ஸ்திதிகார்யங்கள் சொல்லப்படுகின்றன. 𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌃-மேல்முகமாயிருக்கிற, 𑌉𑌦𑌾𑌨𑌃-உதாநவாயுவானது. 𑌏𑌕𑌯𑌾-𑌨𑌾𑌡𑍍𑌯𑌾-ஒருநாடிவிசேஷத்தாலே, 𑌪𑍁𑌣𑍍𑌯𑍇𑌨 - புண்யஞ்செய்திருந்தால், 𑌪𑍁𑌣𑍍𑌯𑌂, 𑌲𑍋𑌕𑌂-புண்யலோகமாகியஸ்வர்க்காதிலோகங்களை, 𑌪𑌾𑌪𑍇𑌨-பாபம்செய்திருந்தால், 𑌪𑌾𑌪𑌂-பாபலோகமாகிய நாகம்முதலியவற்றையும், 𑌉𑌭𑌾𑌭𑍍𑌯𑌾𑌂-இரண்டும்செய்திருந்தால், 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌲𑍋𑌕𑌂 - மனுஷ்யலோகத்தையும், 𑌨𑌯𑌤𑌿-சேர்ப்பிக்கிறது.

ஸ0.—ஹா. இனி உதாநவாயுவின் ஸ்தாநம் சொல்லத்தொடங்கி எதினால் வெளிவருகிறதென்கிற ப்ரச்நத்திற்குத்தரம் சொல்லுகிறது. நூற்றொருநாடிகளுக்குள் மேலே செல்லுகிற ஸுஷும்நை, என்கிற நாடியின் வழியாலே, கால்முதல்

தலைவரையிலும் ஸஞ்சரிக்கிற உதாநவாயுவானது, சாஸ்த்ரங்களில் சொல்லியபுண்ய கர்மங்களைச் செய்தவர்களை புண்யமானதேவர்களிருப்பிடமாகிய லோகங்களையடைவிக்கிறது. சாஸ்த்ரங்களால் தள்ளப்பட்ட பாபங்களைச்செய்தவர்களை பாபத்தாலாகிய திர்யக்யோநிகளிலே தள்ளுகிறது. புண்யபாபங்களிரண்டையும் ஸமமாகச்செய்தவர்களை மநுஷ்யர்களாய் பிறக்கும்படிசெய்கிறது.

பா.—ஸா. ஊர்த்வகதியுடைய வ்யாநவாயுவானது ஒரு நாடியாலே புண்யபாபங்களுக்குத்தக்கபடி ஸ்வர்க்க நரகபூலோகங்களை யடைவிக்கிறது. கீழ்த்தொடங்கிய ப்ரச்நப்ரதிவசநத்தின் மத்யத்தில், எதினால் வெளியாகிவருகிறது, என்கிற ப்ரச்நத்திற்கு முத்தரம் சொல்லப்பட்டதாகிறது.

அ. ஆதித்யோ ஹ வை பாஹ்ய: ப்ராண உதயத்யேஷ ஹ்யேநம் சாக்ஷுஷம் ப்ராணமநுக்ருஹ்ணாந: ப்ருதிவ்யாம் யா தேவதா ஸைஷா புருஷஸ்யாபாநமவஷ்டப்யாந்தரா யதாகாஶஸ் ஸ ஸமாநோ வாயுர்வ்யாந:॥

౮. ఆదిత్యో హ వై బాహ్యః ప్రాణ ఉదయత్యేష హ్యేనం చాక్షుషం ప్రాణమనుగృహ్ణానః । పృథివ్యాం యా దేవతా సైషా పురుషస్యాపానమవష్టభ్యాన్తరా యదాకాశస్స సమానో వాయుర్వ్యానః ॥

(ப-ம்) பாஹ்ய:-வெயிலிருக்கிற, ப்ராண:-ப்ராணன், ஆதித்ய-ஸூர்யனே, ஏஷ:-இந்தஸூர்யன், உதயதி ஹி- உதிக்கிறானன்றோ, ஏநம், சாக்ஷுஷம், ப்ராணம் - இந்த சக்ஷுரிந்த்ரியத்தை, அநுக்ருஹ்ணாந:-அநுக்ரஹிக்கிறான். ப்ருதிவ்யாம்- பூமியில், யா தேவதா ஸைஷா-ப்ராணகலாரூபியாயிருக்கிற தேவதையானது, புருஷஸ்ய-புருஷனுடைய, அபாநம்-அபாநமென்கிற வாயுவை, அவஷ்டப்ய- நிலைபெறும்படி, அநுக்ருஹ்ணாந:-அநுக்ரஹிக்கிறது. அந்தரா-நடுவிலுள்ள, யதாகாஶ: ஆகாயமானது, ஸமாந:-ஸமாநவாயுவாகிறது, வாயு:-காற்றானது, வ்யாந:-ஸாமாந்யமாய் வ்யாநரூபியானது.

ஸ௦.—ஸா. அதிதைவதமாகிய பாஹ்யப்ராணன்ஸூர்யனே; அவனுதிக்கிறான். இவனே, ஆத்யாத்மிகமாகிய சக்ஷுரிந்த்ரியத்திற்கு ப்ரகாசத்தை யுண்டு பண்ணி ரூபத்தை யறியும்போது துணையாகிறான். பூமியில் ப்ரஸித்தமாயுள்ள தேவதையானது, (அதாவது பூம்யபிமாநிதேவதை) புருஷனுடைய அபாநவ்ருத்தியைப் பிடித்துக்கீழிழுத்துக்கொண்டு விழவொட்டாமல் பாரமானசரீரத்தைக்காக்கின்றது பூலோகம் ஸ்வர்க்கலோகமிவற்றுக்கு நடுவிலிருக்கிற ஆகாயமானது அதாவது-ஆகாயத்திலிருக்கிற காற்றானது என்கை. மஞ்சத்திலிருப்பவனை மஞ்சமென்பதுபோல் ஆகாயத்திலிருக்கிற காற்றை ஆகாயமென்று இலக்ஷணை என்கிற சப்தவ்ருத்தியாலே சொல்லக் கூடுமென்றறிக. ஸமானவாயுவை அநுக்ரஹிக்கிறது. காற்றெல்லாம் ஸாமான்யமாக வ்யாநவாயுவை அநுக்ரஹித்துக்கொண்டிருக்கிறது.

பா.—ஸா. அடுத்த ப்ரச்நத்திற்குத்தரம் சொல்லுகிறது. சக்ஷுரிந்த்ரியமாகிய ப்ராணனை பாஹ்யப்ராணனாகிய ஸூர்யன், ப்ரகாசத்தைத்தருவதினால் ரூபத்தை க்ரஹிக்கும்படி செய்கிறான். ஸூர்யனுக்கு ப்ராணனென்கிற பெயரிட்டுச்சொல்லுகிறது கூடாதாயினும், ப்ராணகலையின் ஸம்பந்தாலும், உபாஸநைசெய்யவேண்டிய விதியாலும் கூடும். இப்படியே ப்ராணகலா ஸம்பந்தமுடைய பூமிக்கபி

மாகியான பூதேவதையானது, புருஷனுடைய அபாநவாயுவ்ருத்தியை கூஹ்யம் முதலிய விடங்களுக்கு நடத்திக்கொண்டு ஸஹாயமாகிறது. இந்த ப்ராணகலையின் ஸம்பந்தமுடைய ஆகாயமும்; ஸமாநவாயுவுக்குத்துணையாகி ஸமாநமென்கிறபெயரையடைகிறது.ஸாமாந்யவாயுவானது வ்யாநவ்ருத்திக்குத்துணையாகிறது.

பதாந்வயார்த்தபேதங்கள்.

பூம்யபிமாநிதேவதை புருஷனுடைய அபாநவ்ருத்தியைக் கீழ்முழுத்து விழவொட்டாமல் செய்கிறதென்கிறவிதியில் தூணைநிருத்துவார்கயிறுகொண்டு கீழிழுத்துக்கட்டிவிழவொட்டாமல்செய்வதையுபமாநமாயுணர்க.

௯. தேஜோ ஹ வா உதாநஸ்தஸ்மாதுபஶாந்ததேஜா:।
புநர்ப⁴வமிந்த்³ரியைர்மநஸி ஸம்பத்³யமாநை:॥

౯. తేజో హ వా ఉదాన స్తస్మాదుపశాంత తేజాః।
పునర్భవమింద్రియై ర్మనసి సంపద్యమానైః॥

(ப்-ம்) தேஜோ ஹ வை-தேஜஸ்ஸானது, உதாந:- உதாநசப்தத்தாலேசொல்லப்படுகிறது. தஸ்மாத்-ஆகையாலே, மநஸி-மநஸ்ஸிலே, ஸம்பத்யமாநை:-சேருகிற, இந்த்ரியை: - இந்த்ரியங்களோடே, உபஶாந்ததேஜா:-சாந்தியடைந்த தேஜஸ்ஸையுடைய முமூர்ஷு, அதாவதுமரணத்தையடைகிறவன், புநர்ப⁴வம்-மறுபிறவியடைவதற்கு, "ப்ராணமாயாதி - ப்ராணனில்சேருகிறுன்" என்கிற அடுத்தச்லோகத்திலுள்ள பதங்களோடே அந்வயம் கண்டுகொள்க.

ஸம-ஹா. முன் ஸூர்யரூபமான தேஜோவிசேஷம் சொல்லப்பட்டது. இங்கு ஸாமாந்யமானதெஜஸ்ஸு சொல்லப்படுகிறதாகையால் புநருக்திதோஷமில்லை. இப்படி ஸாமாந்யதேஜஸ்ஸானது உதாநவாயுவுக்குத்துணையாயிருக்கிறது,ஆதலாலுஷ்ணத்தைத் தருகிறதேஜஸ்ஸினுடைய ஸஹாயமில்லாதபோது உதாநவாயுவுக்கு பலமில்லாமல் போகிறபடியால் சரீரத்திலுஷ்ணங்குறைந்த புருஷனை யப்போதேமரிக்கப்போகிறுனென்று நிச்சயிக்கலாகிறது. அப்படிதேஜஸ்ஸுகுறைந்த புருஷன் மநஸ்ஸில் சேருகிறவிந்த்ரியங்களோடு சரீராரந்தரத்தையடைகிறுன். அதாவது மரிக்கிருனென்கை.

பதாந்வயார்த்தபேதங்கள்.

இந்தச்லோகத்துக்கு மேல்ச்லோகத்திலுள்ளபதங்களோடே ஸம்பந்தமிருப்பதைப் பதஉரையிலேகாட்டியிருக்கிறபடியால் இராமாநுஜபாஷ்யம்மேல்ச்லோகத்திலேயே இந்தச்லோகத்தின் கருத்தையும் சேர்த்துக்காட்டப்படும்.

௧௦. யச்சித்தஸ்தேநைஷ ப்ராணமாயாதி ப்ராணஸ்தேஜஸா யுக்த:।
ஸஹாத்மநா யதா²ஸங்கல்பிதம் லோகம் நயதி॥

౧౦. యచ్చిత్తస్తేనైష ప్రాణమాయాతి ప్రాణస్తేజసాయుక్తః।
సహాత్మనా యథాసంకల్పితం లోకం నయతి॥

(ப்-ம்) யச்சித்த:-எந்தநினைவுடனிருக்கிறுனே, தேந-அந்தஸங்கல்பத்தோடே, ஏஷ:-இவன், ப்ராணமாயாதி-ப்ராணவ்ருத்தியோடு சேருகி

ளுன். ப்ராணஃ-ப்ராணன், தேஜஸா-தேஜஸ்ஸோடு, யுக்தஃ-கூடினதாய், ஆத்மநாஸஹ-ஆத்மாவோடு, யதாஸங்கல்பிதம்-நினைவுக்குத்தக்கபடி, லோகம்-லோகத்தை, நயதி-அடைவிப்பிக்கிறது.

ஸா0-ஹா. மரணகாலத்தில் எந்த ஸங்கல்பத்தோடு கூடியிருக்கிறானே, அந்த ஸங்கல்பத்தோடு, இந்த ஜீவாத்மா, இந்திரியங்களோடு முக்யப்பாணவ்ருத்தியை யடைகிறான், இந்த்ரியவ்யாபாரங்களெல்லாமடங்கி மரணகாலத்தில் முக்ய ப்ராணவ்யாபாரத்தோடிருக்கிறானென்கை. ச்வாஸமிருப்பதுகொண்டு பிழைத்திருப்பதாக பந்துக்கள் சொல்லுகிறார்களன்றோ; அந்த ப்ராணனும். உதாநவ்ருத்தியாகிய தேஜஸ்ஸோடு கூடி போக்தாவாகிய தலைவனுடன், ப்ராணவ்யாபாரமடங்கினபின், புண்யம், பாபம், இவைகளிரண்டாகிய ஸங்கல்பத்தின்படி, உத்தேசித்தபோகத்தை யடைவிப்பிக்கிறது.

ரா.—ஹா. பாஹ்யமான தேஜஸ்ஸு, உஷ்ணத்துக்கு ஹேதுவாகையாலே உதானமென்னப்படுகிறது. ஆகையாலே உஷ்ணம் சாந்தியடைந்தஜீவன், எத்தை விரும்புகிறானே; அதற்குத்தக்கபடி, இஷ்டமான தேவாதி சரீரங்களை யடைகையாகிற புநர்பவமென்கிற புநருத்பத்தியை யடைவதற்கு, "வாங்மநஸி ஸம்பத்யதே" (வாகிந்திரியம் மநஸில் சேருகிறது) என்கிற ச்ருதிவிஷயத்தில், "வாங்மநஸி தர்சநாச்சப்தாச்ச" (வாகிந்திரியம்மநஸில் சேருகிறது; அப்படி காண்கையாலும், ச்ருதியாலும்,) என்கிற ஸூத்ரம், அதின்பாஷ்யம், இவைகளில் சொன்னபடி, மனதோடு ஸம்ச்லேஷ விசேஷத்தை யடைந்த வாகிந்திரியம் முதலியவற்றோடு கூடின ப்ராணனை, மரிக்கிற ஜீவனடைகிறான். "ஏவமேவேமமாத்மாநமந்தகாலே ஸர்வே ப்ராணா அபிஸமாயந்தி" (மரணத்தை யடைகிற காலத்திலிந்த ஜீவாத்மாவை முக்ய ப்ராணன், முதலிய எல்லாப்ராணங்களும் ஜீவனையடைகின்றன) என்று சொல்லப்பட்டது; ஜீவன் ப்ராணங்களையடைவதாகச் சொல்லப்படவில்லை. ஸூத்ரகாரரும், "ஸோத்யக்ஷே ததுபகமாதிப்ய:" (அந்த ப்ராணன் ஜீவனிடத்தில் சேருகிறது; அப்படி சேருதல் முதலியவை யோதப்படுகையால்.) என்கிறஸூத்திரத்தில் அப்படியே சொன்னார். இந்தஸூத்திரத்திற்குப்பொருளு மிப்படிப்ராணன் ஜீவனிடத்தில் சேருகிறதாக ச்ருதியிருக்கையால் ப்ராணன் ஜீவனிடத்தில் சேருகிறது; என்று பாஷ்யகாரரால் சொல்லப்பட்டது. ஆயினுமிங்கிப்படி சொன்னது ப்ராணத்தைக்கொண்டாடுவதற்காகவென்று கொள்க. பின்பு, "ப்ராணஸ்தேஜஸி" (ப்ராணன்தேஜஸ்ஸில் சேருகிறது) "தேஜ: பரஸ்யாம் தேவதாயாம்" (தேஜஸ்ஸுபரமாத்மாவினிடத்தில் சேருகிறது) என்கிற ச்ருதியின்படி, தேஜஸ்ஸோடும் பரமாத்வோடும் சேர்ந்து' அந்தந்த ஜீவர்களின் ஸங்கல்பாநுஸாரத்தாலே, அந்தந்த லோகங்களை யடைகிறான். ஆக, தேஜஸ்ஸோடு கூடிய ப்ராணனுக்கே, உந்நயநசக்தியிருக்கையால், தேஜஸ்ஸிலுமுந்நயநசக்தியிருப்பதுபற்றி உதானமென்கை தகுமென்கை. "ப்ராணஸ்தேஜஸி" (ப்ராணன் தேஜஸ்ஸில் சேருகிறது) என்கிறவிடத்தில், தேஜச்சப்தத்திற்கு, பூதஸூக்ஷ்மம்பொருளென்று ஸூத்ரபாஷ்யங்களில் சொல்லப்பட்டது. ஆயினும் தேஜஸ்ஸு ப்ரதாநமானதால் இப்படி சொல்லலாகுமென்றறிக.

கக. யஏவம்வித்வாந்ப்ராணம்வேத நஹாஸ்ய ப்ரஜா ஹீயதேऽம்ருதோ பவதி ததேஷ ச்லோக:॥

౧౧. య ఏవం విద్వాన్ ప్రాణం వేద।
న హాస్య ప్రజా హీయతేఽమృతో భవతి తదేష శ్లోకః।

(ப-ம்) யः-எவன், ஏவம்-இப்படி, வித்வாந்-அறிந்தவனாய், ப்ராணம்-ப்ராணனை, வேத-உபாஸிக்கிறானோ, அஸ்ய-இப்படியுபாஸிக்கிறவனுக்கு, ப்ரஜா-ஸந்தாநம், ந ஹீயதே-இல்லாமல்போகாது. அம்ருதோ பவதி முக்தியடைகிறான். ததேஷ ச்லோகः-இங்குச்லோகமிருக்கிறது.

௩௦.—ஹா. எவனொருவன், இப்படி யறிந்தவனாய் கீழ்ச்சொல்லியபடி, ஆத்மாவினிடத்தில் ப்ராணன் பிறக்கிறதென்றும், ஸங்கல்பத்தால் செய்யப்பட்ட புண்ய பாபங்களால் சரீரத்தையடைகிறதென்றும், தன்னையைவகையாகப்பிரிந்து பாயுபஸ்தங்களில் வ்யாநவ்ருத்தியையும், ஸ்வரூபத்தை கண், செவி, இவைகளிலும், நாபியிலே ஸமாநவ்ருத்தியையும், நாடீஸமூகத்தில் வ்யாநவ்ருத்தியையும் ஸுஷும்னையிலுதாநவ்ருத்தியையும், நிறுத்துகிறதென்றும், உதாநவ்ருத்தியாலே உத்க்ரமிக்கிறதென்றும், ப்ராணன், அபானன், வ்யானன், உதானன், ஸமானன் என்கிற விவைகளுக்கு ஸஹகாரிகளான வெளியிலுள்ள ஸூரியன், பூமிக்கபிமானியான தேவதை, ஆகாயம், வாயு, தேஜஸ்ஸு, இவைகளாலே, அதிதைவமென்கிற ஆதித்யன்முதலானவற்றையும் அவைகளால் ஸஹகரிக்கப்பட்டு அத்யாத்மமென்கிற கண் வாய் காது மூக்கு ஸ்பர்சேந்திரியமாயவைந்தையும் தரிக்கிறதென்றும், உதாநவ்ருத்தியோடும், போக்தாவோடும் கூடிபோக்தாவை லோகாந்தரத்தை யடைவிப்பிக்கிறதென்றும், ச்ரேஷ்டமான ப்ரஜாபதி அத்தாரயி என்னப்படுகிறது மிதுநமென்றும், உபாஸிக்கிறானோ; அவனுக்கு இவ்வுலகத்திலும் பிறவுலகத்திலு முண்டாகிற பயன் கூறப்படுகிறது. பிள்ளைபேரன் முதலிய ஸந்தாநமழியாம லிவ்வுலகத்தில் விளங்கும். சரீரம் விழுந்தபின் ப்ராணஸாயுஜ்யத்தையடைந்து முக்தனாகும். இவ்விஷயத்தைச் சுருங்க ஓதுகிற சுலோகமொன்றிருக்கிறது.

௩௧.—ஹா. இப்படி ப்ராணனையுபாஸிப்பவனுக்கு இவ்வுலகத்தில் ஸந்தாந வ்ருத்தியுடன் நெஞ்சம்தெளிந்து ப்ரம்மோபாஸநத்தில் ப்ரீதியுண்டாகி அதில் ப்ரவர்த்திக்கச்செய்து அவ்வழியாலே மோக்ஷத்தையும்தருகிறது.

பதார்வயார்த்தபேதங்கள்.

உபாஸநாப்ரகாரங்கள் இரண்டுபாஷ்யங்களிலு மொத்திருக்கிறபடியால்சங்கரபாஷ்யமொன்றிலேயே அதுவிவரிக்கப்பட்டது. இஃதிதராமாநுஜபாஷ்யத்திற்குமொக்கும்.

௧௨. உத்பத்திமாயதிம் ஸ்தாநம் விபுத்வம் சைவ பஞ்சதா ॥ அத்யாத்மம் சைவ ப்ராணஸ்ய விஜ்ஞாயாம்ருதமச்நுதே விஜ்ஞாயாம்ருதமச்நுத இதி ॥

౧౨. ఉత్పత్తిమాయతిం స్థానం విభుత్వం చైవ పఞ్చధా। అధ్యాత్మం చైవ ప్రాణస్య విజ్ఞా యామృతమశ్నుతే విజ్ఞాయామృతమశ్నుత ఇతి॥

(ப-ம்.) உத்பத்திம் - பிறப்பையும், ஆயதிம் - சரீரப்ராப்தியையும், ஸ்தாநம் - இருப்பிடத்தையும், பஞ்சதா ஐவகையாக, விபுத்வம் - பிரிந்திருப்பதையும், ப்ராணஸ்ய - ப்ராணனுடைய, அத்யாத்மம் - அத்யாமத்தை

யும், விஜ்ஞாய - அறிந்துகொண்டு, 𑌅𑌮𑍃𑌤𑌂 - மோக்ஷத்தை 𑌅𑌶𑍍𑌨𑍁𑌤𑍇 அடைகிறான்.

ஸா.—ஹா. உத்பத்தி முதலியவற்றையறிந்தவன், க்ரமத்தில் மோக்ஷத்தைப் பெறுகிறான். "விஜ்ஞாயாம்ருதமச்நுதே" என்றிரட்டித்தது இந்த ப்ரசநம் முற்று மென்று பெறுதற்காம்.

பதான்வயார்த்த பேதங்கள்.

சங்கரபாஷ்யத்திலு மிக்கருத்தேயமைக்கப்பட்டதாயினும், ப்ராண ஸாயுஜ்யமாகிய மோக்ஷம் அம்ருதபதத்திற்குப் பொருளென்று அமுக் யார்த்தங்கொள்ளப்பட்டது. வேறுபேதமில்லாமையின் சங்கரபாஷ்யம் தனித்துக்காட்டப்படாதாயிற்று.

மூன்றும்ப்ரசநம் முற்றும்.

𑌅𑌥 𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑌃 𑌪𑍍𑌰𑌶𑍍𑌨𑌃.

க. 𑌅𑌥 𑌹𑍈𑌨𑌂 𑌸𑍌𑌰𑍍𑌯𑌾𑌯𑌣𑍀 𑌗𑌾𑌰𑍍𑌗𑍍𑌯𑌃 𑌪𑌪𑍍𑌰𑌚𑍍𑌛 । 𑌭𑌗𑌵𑌨𑍍𑌨𑍇𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌪𑍁𑌰𑍁𑌷𑍇 𑌕𑌾𑌨𑌿 𑌸𑍍𑌵𑌪𑌨𑍍𑌤𑌿 𑌕𑌾𑌨𑍍𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌜𑌾𑌗𑍍𑌰𑌤𑌿 𑌕𑌤𑌰 𑌏𑌷 𑌦𑍇𑌵𑌃 𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑌾𑌨𑍍 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 𑌕𑌸𑍍𑌯𑍈𑌤𑌤𑍍 𑌸𑍁𑌖𑌂 𑌭𑌵𑌤𑌿 𑌕𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑍁 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌸𑌂𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌾 𑌭𑌵𑌨𑍍𑌤𑍀𑌤𑌿 ॥

౧. అథహైనంసౌర్యాయణీగార్గ్యః పప్రచ్ఛ । భగవన్నేతస్మిన్పురుషే కానిస్వపన్తి కాన్యస్మిన్ జాగ్రతికతరఏషదేవస్స్వప్నాన్ పశ్యతికస్యైతత్సుఖంభవతి కస్మిన్నుసర్వే సంప్రతిష్ఠితాభవన్తీతి॥

(ப்-ம்.) 𑌅𑌥 - பிறகு, 𑌏𑌨𑌂 - ஹ. இந்த பிப்பலாதமகாமுநியை, 𑌗𑌾𑌰𑍍𑌗𑍍𑌯𑌃 - 𑌸𑍌𑌰𑍍𑌯𑌾𑌯𑌣𑍀 - கார்க்ககோத்திரத்திலவராகிய ஸௌர்யாயணி என்கிற முநிவர், 𑌇𑌤𑌿 - இந்தபடி, 𑌪𑌪𑍍𑌰𑌚𑍍𑌛 - வினவினார். 𑌭𑌗𑌵𑌨𑍍 - மூன்றுகாலங்களிலுள்ள எல்லாவற்றையு மறிந்த முநிச்ரேஷ்டரே, 𑌏𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍-𑌪𑍁𑌰𑍁𑌷𑍇 - இந்தஜீவன், (𑌸𑍍𑌵𑌾𑌪𑍇 - உறங்கும்போது) 𑌕𑌾𑌨𑌿 - எவைகள், 𑌸𑍍𑌵𑌪𑌨𑍍𑌤𑌿-உறங்குகின்றன. 𑌏𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍- இந்தஜீவன், 𑌸𑍍𑌵𑌾𑌪𑍇- உறங்கும்போது, 𑌕𑌾𑌨𑌿 - எவைகள், 𑌜𑌾𑌗𑍍𑌰𑌤𑌿- உணர்ந்திருக்கின்றன. 𑌏𑌷𑌃 - 𑌦𑍇𑌵𑌃 விளங்காநின்ற இந்த ஜீவன், 𑌕𑌤𑌰𑌃-எப்படிப்பட்டவனைக் கொண்டு, 𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑌾𑌨𑍍 ஸ்வப்நங்களை, 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿-காண்கிறான். 𑌕𑌸𑍍𑌯 - எந்த காரணத்தால் 𑌏𑌤𑌤𑍍 - 𑌸𑍁𑌖𑌂 - இந்தவிஷயஸுகமானது. 𑌭𑌵𑌤𑌿-உண்டாகிறது. 𑌕𑌸𑍍𑌮𑌿𑌨𑍍-எவ்விடத்தில், 𑌸𑌰𑍍𑌵𑍇 - எல்லா இந்திரியங்களும், 𑌸𑌂𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌾𑌃 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 - நிலைபெற்றுநிற்கின்றன.

ஸா.—ஹா. யாதாமொரு பயனைப்பற்றிச் செய்யப்படுமுபாஸநத்திற்கு, வேதாந்தங்களில் 'வித்யை' என்று பெயரிடப்பட்டிருக்கிறது, அவ்வித்யைதானும் 'பர

வித்யை, 'அபரவித்யை, என விருவகைத்து. இவற்றுள், பரப்ரம்மத்தைப்பெறுதற்குறிய,வித்யை, பரவித்யை, என்றும், வேறுபயன்களைத் தரும்வித்யை,அபரவித்யை என்றும் கூறப்படும். சென்றமூன்று ப்ரச்னங்களாலும் அபரவித்யையை யுணர்த்தி மேல்மூன்று ப்ரச்நங்களாலும் பரவித்யை கூறப்படுகிறது. இந்த பரவித்யையில், கார்யகாரணங்களின் தன்மைபொருந்தியதும் உற்பத்தியுடையதும் அதனாலேயே அழிவுடையதுமான ஸம்ஸாரத்தைநீக்கி, கார்யகாரணவிலக்கணம் நீங்கியதும், ப்ராணசம்பந்தமில்லதும், உள்ளிந்த்ரியமாயமனதுக்கு மெட்டாததும், தண்டாபூபிகாந்யாயத்தாலே, † இந்த்ரியங்களுக்குப்புலப்படாததும்,இதற்குக்காரணமாயபுலப்படும் தன்மை நீங்கியதும், சிவமானதும், சாந்தமானதும், விகாரங்களற்றதும் அழிவற்றதும், ஸத்யஸ்வரூபமானதும் புருஷனென்கிற பெயர்பெற்றதும், உள்புறம் முதலிய எல்லாமாயதும், பிறப்பிலாததும், ஆகிய பரப்ரம்மமோதப்படுகிறது. முண்டகோபநிஷத்தில் "ஸுதீப்தாத்பாவகாத் விஸ்புலிங்காஸ் ஸஹஸ்ரச: ப்ரபவந்தே ஸரூபா: ததாக்ஷராத் விவிதா: ஸோம்ய பாவா: ப்ரஜாயந்தே தத்ரைவாபியந்தி" (எரிகிற நெருப்பிலிருந்து பொறிகளுண்டாவதுபோல் யாதொரு அக்ஷரபரப்ரம்மத்தினின்றும் எல்லாப்பொருளுமுண்டாகின்றனவோ; எந்த அக்ஷரபரப்ரம்மத்தின்கணடங்குகின்றனவோ) என்றோதப்பட்டது. அவ்வாறு அக்ஷர பரப்ரம்மத்திலிருந்து பிரிந்துதோற்றுகிற பொருள்களெவை. அப்படி பிரிந்தவை யதன்கண்ணே யடங்குவதெங்ஙனம் அவ்வக்ஷர பரப்ரம்மம் எவ்விலக்கணம்பொருந்தியதாகும். என்றிவைகளையுணர்வதற்கு ப்ரச்நங்களை இங்கெடுக்கிறது. தலை கைகால்முதலிய விலக்கணமுடைய புருஷனென்கிற ஜீவனிடத்தில், எந்தகரணங்களுறங்குகின்றன. தங்களுக்குறிய தொழில்களி லொழிவு பெறுகின்றன. எந்தகரணங்கள் உணர்ந்துகொண்டு தந்தம்வேலையைச்செய்கின்றன. காரியகாரண விலக்கணத்தாரில், காரியவில்க்கணமுடைய தேவனோ அல்லது காரண விலக்கணமுடைய தேவனோ; உறங்கும்போதும், உணர்ந்திருக்கும்போது வெளியிலிருக்கிறவற்றைக்காணுவதுபோல், உள்ளிருப்பவற்றைக் காண்கையாகிற ஸ்வப்நத்தைக்காண்கிறான். உணர்ந்தகாலத்தில் செய்யப்படும் வியாபாரங்களும், உறங்கும்போது செய்யப்படும் வ்யாபாரங்களும் நீங்கிபேருறக்கமுறங்கும்போது, ஆயாஸம் நீங்கிதுன்பமற்றுத் தெளிந்து பிறக்கிற ஸுகம் யாருக்குண்டாகிறது. எவனிந்தஸுகத்தை யநுபவிக்கிறான். இங்கன மூணர்ச்சியுறக்கங்களிலுள்ள ப்ரத்யக்ஷ ஸ்வப்ந வ்யாபாரங்களற்றிருக்கும்போது, இக்கரணங்கள் எவ்விடத்திலொடுங்கியடங்கி தேனில்சுவை போலவும், கடலில்கலந்த ஆறுகள்போலவும் பிரித்தறியத்தகாத தன்மையனவாயிருக்கின்றன. என்றுபிப்பலாத மகாமுனியை ஸௌர்யாணி வினவினார். தந்தம் தொழில் நீங்கினபின் தனித்தனியே அங்கங்கு, தொழில்முடிந்தபின் கிழ்வைக்கப்பட்ட கருவிகள் போல் ஜீவாத்மாவினுடைய கரணங்களும், அவ்வவ்விடங்களிலேயே நிற்கின்றனவென்று கொள்ளாது, புருஷனாகிய ஜீவனுறங்கும்போது, அவனது கரணங்களெவ்விடத்திலொன்று சேர்ந்தடங்குகின்றன வென்றையமுண்டாவதற்குக் காரணம்யாது? எனில்; இங்கையப்படுவது கூடும். இக்கரணங்களொன்று சேர்ந்து தங்களுக்கு ஸ்வாமியாகிய ஜீவனுணர்ந்திருக்கும்போது அவனுக்குப் பரதந்திரங்களாயிருக்கின்றனவாகையால், உறங்கும்போது மொன்றுசேர்ந்து பரதந்திரங்களாயோரிடத்திலடங்கியிருப்பது வேண்டுமானதாலென்க. ஆகையாலிவ்வினாப் பொருத்தமுண்டயதேயாகும். காரிய காரணங்களின் ஸுஷுப்தி என்கிற பேருறக்கத்திலும், ப்ரளயத்திலுமெங்குலயம்பெறுமோ; அதனையறிய விரும்பி, அவனையின்னென்றறிதற்கு, இவையெல்லா மெங்கு நிலையுறுமென்றது.

பா.—ஹா. இந்த ஜீவனுறங்கும்போது றங்கியுணரும்போதுணர்ந்து இப்படி யவனுக்குப்பாரதந்திரங்களாகி யவனுக்கநுகூலங்களாய் அவன்காரியங்களைச்செய்துகொண்டிருக்கு மிந்திரியங்களாகிய கரணங்களெவையாம். தனக்குத்தானே விளங்குகிற ஜீவன் எப்படிப்பட்டவனாய்க்கொண்டு ஸ்வப்நங்களில் இரதம் முதலியவற்றைக்காண்கிறான். எந்தகாரணத்தால் இந்த விஷயஸுகமிவனுக்குண்டாகின்றது. என்று பிப்பலாத மகாமுனியை, ஸௌர்யாணிமுனிவர் தத்வத்தையறிய விருப்பமுடையவராய் வணக்கத்துடன் நமஸ்கரித்து, தானிதையறிந்துகொள்ளவேணுமென்று ப்ரச்நம் பண்ணினார்.

பதார்வயார்த்த பேதங்கள்.

கீழிப்படி அபரவித்யையை யோதியது இவைகளினுண்மையறிந்து வைராக்கியமுண்டாவதற்கும் நெஞ்சம் நிலைநிற்பதற்கும், அது சுத்தமாவதற்குமென உரைப்பர். கீழ்ச்சொல்லிய அம்ருதமென்கிற மோக்ஷமமுக்யம், அல்லது கிரமத்தில்வருவது, என்பதற்கு இஃதுமோர் ஸாக்ஷியாகின்றது. அன்றேல் மோக்ஷமாகிய அம்ருதத்தையடையும்வழி முன்சொன்ன வித்யையினாலே பெறப்படுமோகையா லிவ்வினா வீணாமன்றோ.

உ. 𑌤𑌸𑍍𑌮𑍈 𑌸 𑌹𑍋𑌵𑌾𑌚 𑌯𑌥𑌾 𑌗𑌾𑌰𑍍𑌗𑍍𑌯 𑌮𑌰𑍀𑌚𑌯𑍋𑌰𑍍𑌕𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑌂 𑌗𑌚𑍍𑌛𑌤𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾 𑌏𑌤𑌸𑍍𑌮𑌿𑌂𑌸𑍍𑌤𑍇𑌜𑍋𑌮𑌣𑍍𑌡𑌲 𑌏𑌕𑍀𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 । 𑌤𑌾𑌃 𑌪𑍁𑌨𑌃 𑌪𑍁𑌨𑌰𑍁𑌦𑌯𑌤𑌃 𑌪𑍍𑌰𑌚𑌰𑌨𑍍𑌤𑍍𑌯𑍇𑌵𑌂 𑌹 𑌵𑍈 𑌤𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌂 𑌪𑌰𑍇 𑌦𑍇𑌵𑍇 𑌮𑌨𑌸𑍍𑌯𑍇𑌕𑍀𑌭𑌵𑌤𑌿 । 𑌤𑍇𑌨 𑌤𑌰𑍍𑌹𑍍𑌯𑍇𑌷 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋 𑌨 𑌶𑍃𑌣𑍋𑌤𑌿 𑌨 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 𑌨 𑌜𑌿𑌘𑍍𑌰𑌤𑌿 𑌨 𑌰𑌸𑌯𑌤𑍇 𑌨 𑌸𑍍𑌪𑍃𑌶𑌤𑍇 𑌨𑌾𑌭𑌿𑌵𑌦𑌤𑍇 𑌨𑌾𑌦𑌤𑍍𑌤𑍇 𑌨𑌾𑌨𑌨𑍍𑌦𑌯𑌤𑍇 𑌨 𑌵𑌿𑌸𑍃𑌜𑌤𑍇 𑌨𑍇𑌯𑌾𑌯𑌤𑍇 𑌸𑍍𑌵𑌪𑌿𑌤𑍀𑌤𑍍𑌯𑌾𑌚𑌕𑍍𑌷𑌤𑍇 ॥

౨. తస్మైస హోవాచ యథా గార్గ్య మరీచయో ఽర్కస్యాస్తంగచ్ఛతః సర్వా ఏతస్మిం స్తేజోమండల ఏకీభవంతి | తాః పునః పునరుదయతః ప్రచరంత్యేవం హ వై తత్సర్వం పరే దేవే మనస్యేకీభవతి | తేన తర్హ్యేష పురుషో న శృణోతి న పశ్యతి న జిఘ్రతి న రసయతే న స్పృశతే నాభివదతే నాదత్తే నానందయతే న విసృజతే నేయాయతే స్వపితీత్యాచక్షతే॥

(ப-ம்.) 𑌤𑌸𑍍𑌮𑍈 - அந்த ஸௌர்யாயணிக்கு, 𑌸𑌃𑌹 - அந்த பிப்லாதமகாமுனிவர், 𑌉𑌵𑌾𑌚 - சொன்னார். 𑌗𑌾𑌰𑍍𑌗𑍍𑌯 - ஓகார்க்யரே 𑌯𑌥𑌾 எப்படி 𑌅𑌰𑍍𑌕𑌸𑍍𑌯 - ஸூர்யனுடைய, 𑌮𑌰𑍀𑌚𑌯𑌃 - கிரணங்கள், 𑌅𑌸𑍍𑌤𑌂 𑌗𑌚𑍍𑌛𑌤𑌃 - அஸ்தாசலத்தையடையும்போது, ஸூரியன் மறையும்போது, 𑌸𑌰𑍍𑌵𑌾𑌃 𑌏𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌤𑍇𑌜𑍋𑌮𑌣𑍍𑌡𑌲𑍇 - இந்த ஸூர்யஸ்வரூபமான தேஜோமண்டலத்தில், 𑌏𑌕𑍀𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 சேர்ந்தொன்றாய்விடுகின்றனவோ; 𑌉𑌦𑌯𑌤𑌃 - உதயமாம்போது, 𑌯𑌥𑌾 - எப்படி 𑌪𑍁𑌨𑌃 - 𑌪𑍁𑌨𑌃 - மறுபடியும், 𑌤𑌾𑌃 அந்தகிரணங்கள் - 𑌪𑍍𑌰𑌚𑌰𑌨𑍍𑌤𑌿 - ப்ரஸரிக்கின்றனவோ; 𑌏𑌵𑌮𑍍 - இப்படியே 𑌸𑌰𑍍𑌵𑌮𑍍 - இவை எல்லாம், 𑌪𑌰𑍇 - 𑌦𑍇𑌵𑍇 - 𑌮𑌨𑌸𑌿 - இந்திரியங்களில் சிறந்ததாய் விளங்குகின்ற மனதில், 𑌏𑌕𑍀𑌭𑌵𑌤𑌿 - ஒன்றாய்ச் சேருகின்றன. 𑌹𑌵𑍈 - இதுசுருதிகளில் ப்ரஸித்தம். 𑌤𑍇𑌨 𑌤𑌰𑍍𑌹𑌿 - ஆகை

யால், ஏஷ: - புருஷ: - இந்தஜீவன், நஶ்ருணோதி-சப்தத்தையறிவதில்லை. நபஶ்யதி-ரூபத்தையறிவதில்லை. நஜிக்ரதி - கந்தத்தையறிவதில்லை. நரஸயதே - சுவையறிவதில்லை. நஸ்ப்ருஶதே-ஸ்பர்சத்தையறிவதில்லை. நாபிவததே - பேசுவதில்லை. நாதத்தே - க்ரகிப்பதில்லை. நாநந்தயதே - ஆநந்திப்பதில்லை. நவிஸ்ருஜதே - விடுக்றதில்லை. நேயாயதே - நடக்கிறதில்லை. ஸ்வபிதி - உறங்குகிறானென்று, ஆசக்ஷதே ஜநங்கள் சொல்லுகின்றார்கள்.

ரா.—ஸா. எப்படி ஸாயங்காலத்தில், ஸூர்யனிடத்தி லிருந்து வெளிவந்த கிரணங்கள் நாநாதிக்குகளிலும் ப்ரஸரிப்பதைவிட்டு ஸூரியமண்டலத்திலொன்றாய் விடுகின்றனவோ; மறுபடியும் ஸூரியனுதிக்கும்போது, கிரணங்களெல்லாமெல்லாத்திசைகளினும் ப்ரஸரித்து ப்ரகாசமாய்ச்செய்கின்றனவோ; விஷயங்களை க்ரகிக்ற சக்திநீங்கி இப்படியே இந்த விந்திரயங்களெல்லா மிந்திரயங்களில் சிறந்ததாய் விளங்குகிற மனதில்சேர்ந்தொன்றாய் விடுகின்றன. ஆகையாலப்பொழுது, ஜ்ஞாநகர்மேந்திரியங்களெல்லாவற்றினுடைய வ்யாபாரமும் நீங்கிப்போகிறது. ஒன்றுமறியாநாகிறான். ஒன்றும் செய்யாநாகிறான். ஜநங்களப்போதிந்த ஜீவனை யுறங்குகிறானென்கின்றார்கள். இப்படி நீகேட்டவிஷயத்தை யறிந்து கொள்ளென்று பிப்பலாத மகாமுனி கார்க்யராகிய ஸௌர்யாணிமுநிக்குச் சொன்னார். இத்தால், இந்த ஜீவனுறங்கும்போது எவையுறங்குகின்றன வென்கிற ப்ரசநத்திற்கு புருஷனாகிய ஜீவனுறங்கும்போது, ஜ்ஞாநேந்திரிய கர்மேந்திரியங்களுறங்குகின்றன வென்று விடையளிக்கப்பட்டதாயிற்று.

பதாந்வயார்த்த பேதங்கள்.

கண்முதலிய விந்திரியவ்யாபாரங்களெல்லாம் மனது துணைப்படாதபோது கூடாமையின் இந்திரியங்களி விதனைச் சிறந்ததென்றது. புருஷனாகிய ஜீவனுறங்கும்போது இந்திரியங்களுறங்குகின்றனவென்றதால் புருஷனுணர்ந்திருக்கும்போது, அவைகளு முணர்ந்து தந்தம் காரியங்களைச் செய்கின்றனவென்று பெறப்படுகிறது. இந்த்ரியங்கள் மனதிலொன்று சேருகையாவது - தந்தம் விஷயங்களை க்ரகிக்கிற சக்தி நீங்கி மனதோடொருவாறாகக் கலந்திருக்கை. லயம்பெறுதலன்று; காரியத்திற்குக் காரணத்திலே லயமானதால், காரணமாகாத மனதில் இந்த்ரியங்கள் லயிப்பது கூடாதாகலின். உறங்கும்போதும் ஸ்வப்நத்தில் ரூபம் முதலியவற்றையறிகையால், விஷயங்களை க்ரகிக்கிற சக்திநீங்கி யொன்றுசேருமென்பதெங்கனமெனின்; வெளிப்பட்ட ரூபம் முதலியவற்றை யறியாமையாலென்க. ஸம்ஸ்காரசக்தியாலென்றோ ஸ்வப்நத்தில் ரூபம் முதலியவை தோற்றுகின்றன. ரூபம், ரஸம், கந்தம், ஸ்பர்சம், சப்தம், என்கிறவிவைகளையறிவதில்லை என்றதனால் ஜ்ஞாநேந்திரியங்களின் வ்யாபாரமொழிந்தமை சொல்லப்பட்டது. பேசுவதில்லை, என்றதால், வாகிந்திரியவ்யாபாரமொழிந்தமையும், க்ரகிப்பதில்லை, என்றதினால். பாணீந்திரியவ்யாபாரமொழிந்தமையும், ஆநந்திப்பதில்லை, என்றதனால், உபஸ்தேந்திரிய வ்யாபாரமொழிந்தமையும், விடுகிறதில்லை, என்றது - மலத்தை விடுகிறதில்லை

என்றதாய், பாயு இந்திரியவ்யாபாரமொழிந்தமையும், நடக்கிறதில்லை, என்றதால், பாதேந்திரிய வ்யாபாரமொழிந்தமையும, ஆக பஞ்சகர்மேந்திரிய வ்யாபாரங்களும் நீங்கியபடி சொல்லப்பட்டது. பாயு என்பது மலத்வாரத்திலிருக்கின்ற விந்திரியத்தை; உபஸ்தம் என்பது யோநிசிச்நங்களாகிய மூத்ரத்வாரத்திலிருக்கிற விந்திரியத்தை; பாதம் என்பது - காலை; பாணி - என்பது கையை; வாக்கென்பது வாயை இவையைந்தும் - கர்மேந்திரியங்களென்று கூறப்படும். "தேநதர்ஹி" என்கிற பதத்திற்குப் பின் "𑌤𑌦𑌾" என்று, கூட்டிக்கொண்டு, அப்பொழுது, என்று பொருள் கொள்க. "𑌤𑌰𑍍𑌹𑌿" என்பதற்காயினுமப்பொருளை யுரைக்கலாகும். "𑌸𑍍𑌵𑌪𑌿𑌤𑌿" என்கிறபதத்திற்குமுன் "𑌤𑌤𑌃" என்றொருபதம் வருவித்துக்கொண்டு, ஆகையாலென்று பொருளறிக. இப்படி பதவுரையை யந்வயித்துக் கொள்க. சங்கரபாஷ்யத்திலு மிந்தச்லோகத்திற்கு இக்கருத்தே கொள்ளப்பட்டதாகலின், விரித்துரைத்த விராமாநுஜபாஷ்யமே காட்டப்பட்டது.

௩. 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌗𑍍𑌨𑌯 𑌏𑌵𑍈𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌪𑍁𑌰𑍇 𑌜𑌾𑌗𑍍𑌰𑌤𑌿 𑌗𑌾𑌰𑍍𑌹𑌪𑌤𑍍𑌯𑍋 𑌹𑌵𑌾 𑌏𑌷𑍋𑌽𑌪𑌾𑌨𑍋 𑌵𑍍𑌯𑌾𑌨𑍋𑌽𑌨𑍍𑌵𑌾𑌹𑌾𑌰𑍍𑌯𑌪𑌚𑌨𑍋 𑌯𑌦𑍍𑌗𑌾𑌰𑍍𑌹𑌪𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌣𑍀𑌯𑌤𑍇 𑌪𑍍𑌰𑌣𑌯𑌨𑌾𑌦𑌾𑌹𑌵𑌨𑍀𑌯𑌃 𑌪𑍍𑌰𑌾𑌣𑌃 ||

௪. 𑌯𑌦𑍁𑌚𑍍𑌛𑍍𑌵𑌾𑌸𑌨𑌿𑌶𑍍𑌵𑌾𑌸𑌾𑌵𑍇𑌤𑌾𑌵𑌾𑌹𑍁𑌤𑍀 𑌸𑌮𑌂 𑌨𑌯𑌤𑍀𑌤𑌿 𑌸 𑌸𑌮𑌾𑌨𑌃 𑌮𑌨𑍋 𑌹 𑌵𑌾𑌵 𑌯𑌜𑌮𑌾𑌨 𑌇𑌷𑍍𑌟𑌫𑌲𑌮𑍇𑌵𑍋𑌦𑌾𑌨𑌃 𑌸 𑌏𑌨𑌂 𑌯𑌜𑌮𑌾𑌨𑌮𑌹𑌰𑌹𑌰𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌗𑌮𑌯𑌤𑌿 ||

3. ప్రాణాగ్నయ ఏవైతస్మిన్పురే జాగ్రతి । గార్హపత్యో హవా ఏషోఽపానో వ్యానో న్వాహార్యపచనో యద్గార్హపత్యాత్ప్రణీయతే ప్రణయనాదాహవనీయః ప్రాణః॥

4. యదుచ్ఛ్వాసనిశ్వాసావేతావాహుతీ సమం నయతీతి స సమానః । మనో హ వావ యజమాన ఇష్టఫలమేవోదానః స ఏనం యజమాన మహరహర్బ్రహ్మ గమయతి॥

(ப-ம்.) 𑌏𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 - 𑌪𑍁𑌰𑍇 - இந்த சரீரத்தில், 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌗𑍍𑌨𑌯𑌃 - 𑌏𑌵 - ப்ராணங்களாய வக்நிகளே, 𑌜𑌾𑌗𑍍𑌰𑌤𑌿 - உணர்ந்திருக்கின்றன. 𑌯𑌤𑌃 எக்காரணத்தால், 𑌗𑌾𑌰𑍍𑌹𑌪𑌤𑍍𑌯𑌾𑌤𑍍 - 𑌪𑍍𑌰𑌣𑌯𑌨𑌾𑌤𑍍 ப்ரணயனமென்கிற கார்ஹபத்யாக்நியாகச் சொல்லப்பட்ட அபாநவாயுவிலிருந்து, 𑌆𑌹𑌵𑌨𑍀𑌯𑌃 - ஆஹவநீயமென்கிற அக்நிரூபியாகச் சொல்லப்பட்ட, 𑌪𑍍𑌰𑌾𑌣𑌃-ப்ராணன், 𑌪𑍍𑌰𑌣𑍀𑌯𑌤𑍇-கொண்டுவரப்படுகிறதோ; அந்தகாரணத்தால் 𑌏𑌷𑌃 𑌅𑌪𑌾𑌨𑌃 - இந்த அபாநவாயு, 𑌗𑌾𑌰𑍍𑌹𑌪𑌤𑍍𑌯𑌃-கார்கபத்யாக்நியாகின்றது. 𑌵𑍍𑌯𑌾𑌨𑌃 - வ்யாநவாயு, 𑌅𑌨𑍍𑌵𑌾𑌹𑌾𑌰𑍍𑌯𑌪𑌚𑌨𑌃 - தக்ஷிணாக்நியாகிறது, 𑌉𑌚𑍍𑌛𑍍𑌵𑌾𑌸𑌨𑌿𑌶𑍍𑌵𑌾𑌸𑍌-மூக்கின்வழியால் உள்புகுகிற காற்று வெளிவருகிற காற்று இவைகள், 𑌆𑌹𑍁𑌤𑍀 - ஆகுதிகள். 𑌯𑌤𑌃 - எதினால், 𑌉𑌚𑍍𑌛𑍍𑌵𑌾𑌸𑌨𑌿𑌶𑍍𑌵𑌾𑌸𑍌- முன்சொன்ன காற்றுக்கள், 𑌆𑌹𑍁𑌤𑍀-ஆகுதியாகின்றனவோ; 𑌯𑌤𑌃 - எங்

துகாரணத்தால், உச்ச்வாஸநிச்வாஸௌ அப்படி ஆகுதிகளாயஸ்வாஸங்களை, ஸமம் - நயதி-ய:-ஸ: - ஸாம்யத்தையடைவிக்குமோ அந்தகாரணத்தால், எந்தவாயு இப்படி செய்கிறதோ; அந்த வாயு, ஹோதா - ஹோதாவாகிறான். ஸ: - அந்த ஹோதாவானவாயு, ஸமாந: - ஸமாநவாயுவாகும். மந: - மனஸ்ஸானது, யஜமாந:-யாகபலத்தையநுபவிக்கிறவனுயாகிறது. உதாந: - உதாநவாயுவானது, இஷ்டபலம் - ஏவ - யாகபலமாகின்றது, ஸ: - அந்த உதாநவாயு, ஏநம்-யஜமாநம்-இந்த யாகபலத்தை யநுபவிக்கிற புருஷனை, அஹரஹ: - திநந்தோறும், ப்ரஹ்ம பரப்ரம்மத்தை, கமயதி - அடைவிப்பிக்கிறது.

ரு௦.—ஸா. செவிமுதலிய இந்திரியங்களெல்லா முறங்கும்போது, ஒன்பது வாசலான இந்த சரீரமாகிய கோட்டையில், ப்ராணன், அபாநன், வ்யாநன், உதாநன், ஸமாநன், என்றிப்படி ஐவகையாயிருக்கிற அக்நிகள்போன்றவை யாகையாலே அக்நிகளென்னப்படுகிற ப்ராணுக்நிகள், உணர்ந்திருக்கின்றன. இந்த ஐவகை ப்ராணங்களுக்கு மக்நிஸாம்யம் சொல்லுகின்முர். அக்நிஹோத்ரம் செய்யும்போது, கார்ஹபத்தியமென்கிற அக்நியிலிருந்து அதில் வேருன ஆஹவநீயமென்கிறஅக்நியானது ப்ரணயநம் பண்ணப்படுகையாலே (எடுத்துக்கொள்ளப்படுகையாலே)கார்ஹபத்யாக்நிக்கு ப்ரணயநாக்நியென்றுபெயர்; இங்கு புருஷனுறங்கும்போது, வாய்மூக்குகளினுல் ஸஞ்சரிக்கிற ஆஹவநீயாக்நிக்கொப்பான ப்ராணனபான வ்ருத்தியிலிருந்து ப்ரணயநம் பண்ணப்படுகையாலே அபாநம் ப்ரணயநாக்நியாகிறது. ஆகவே, கார்ஹபத்தியாக்நியாயிற்று. அடுத்த வ்யாநயு, ஹ்ருதயத்திலிருந்து தென்புறத்திலிருக்கிறவிரந்திரத்தால் வெளிவருகிறபடியால் தென்திக்கின் ஸம்பந்தத்தாலேதக்ஷிணுக்நி என்கிற அந்வாஹார்யபசநமென்று சொல்லப்படுகிற தக்ஷிணுக்நியாகிறது. ப்ராணவாயு, ஆகவநீயாக்நிக்கொப்பாகிற யுக்தியும் அபாநம் கார்ஹபத்யாக்நியாகிற வழிசொன்னபோதே சொல்லப்பட்டதாயிற்று. ஆக அக்நிஹோத்ரத்திற்குரிய கார்ஹபத்ய ஆகவநீய தக்ஷிணுக்நி என்கிற மூன்றக்நிகளும் ப்ராணன் அபாநன், வ்யாநன், என்கிற விம்மூன்றுமெனப்பெறப்பட்டது. இனி ஹோதா முதலியவைகள் சொல்லப்படுகின்றன. உச்சவாஸம், நிச்வாஸம், இவ்விரண்டு மிரண்டாயிருக்கையாலே இரண்டாகுதிகள் ஆகுதிகளாயஇவ்விரண்டையும் ஸமம்பண்ணுகையாலே,ஸமாநவாயுவென்கிறஸமாநவாயு ஆகுதிகளை ஸமமாகச்செய்கிற ஹோதாவாகிறது. இப்படி ப்ராணுக்நிகள் உணர்ந்திருக்கும்போது கண்முதலிய பாஹ்யேந்திரியங்களையும் அவைகளால் கிரகிக்கப்படுகிற விஷயங்களையும் நீக்கி அக்நிஹோத்ரபலமாகிய ஸ்வர்க்கம்போலே ஸுகரூபமான ப்ரம்மத்தையடைவதற்கு ஸித்தப்பட்டிருக்கையாலும்,எல்லாக்கார்யங்களிலும் ப்ராதாந்யமிருப்பதாலும், மநஸ்ஸு, யஜமாநுகிறது. உதாநவாயுவினுல், ஸ்வப்நவ்ருத்தியை நீக்கி, தினந்தோறும், ஸுஷுப்தியில் யாகபலமான ஸ்வர்கம்போலே ஸுகரூபமாகிய ப்ரம்மத்தை யஜமாநனுகிய மநஸ்ஸு அடைவிக்கப்படுகையால், கார்யகாரணங்களுக்குண்டான உபசாரத்தாலேற்பட்ட அபேதத்தாலே உதாநவாயுவே யாகபலமாகிறது. ஆகையால், உறங்கும்போதும் ப்ரம்மஜ்ஞாநிக்கு அக்நிஹோத்ரம் ஸித்திக்கிறபடியால் ப்ரம்மஜ்ஞாநியை கர்மாநுஷ்டாநமில்லாதவனென்று நினைக்கப்போகாது. என்றிப்படி ஸ்துதிசெய்கிறது.

௫ா.—ஸா. இந்த சரீரத்தில் ஜீவனுறங்கும்போது மெவையுணர்ந்துகொண்டிருக்கின்றன? என்று கேட்ட ப்ரச்நத்திற்கு விடையளிக்கப்படுகிறது. ப்ராணன் அபாநன் முதலிய வாயுக்களே இந்த சரீரத்தில் உணர்ச்சியோடு ஜீவனுறங்கும்போ

து விளங்குகின்றன. இப்படியுணர்ந்திருக்கிற ப்ராணாஹுதிகளில், அக்நிஹோத்ர க்ரமத்தை உபாஸனைசெய்யும்பொருட்டு, காட்டவேணுமென்று அங்கு ப்ரதாநமானமநஸ்ஸையஜமானனென்றும்,மூலாதாரத்லிதிருக்கிற அபாநவாயுகார்ஹபத்யாக்நியென்றும், அதின்ஸமீபத்திலிருக்கிற வ்யாநவாயு அந்வாஹார்ய பசநமென்கிற தக்ஷிணாக்நியென்றும், கீழ்ச்சொல்லியபடி,கார்ஹபத்யாக்நியாகிய அபாநவாயுவிலிருந்து ப்ரணயநம்பண்ணப்படுமாகையால், ப்ராணவாயுவானது, கார்ஹபத்யாக்நியிலிருந்து ப்ரணயநம் பண்ணப்படுகிற ஆஹவநீயாக்நியென்றும், அத்தையாதாரமாகவுடைய உற்ச்வாஸநிச்வாஸங்களாகிய மூச்சுக்காற்றுகள் இரண்டாகுதிகளென்றும், இப்படியாகுதிகளாய உற்ச்வாஸநிச்வாஸங்களை ஸமமாக்குகிற ஸமாநவாயு ஆகுதிகளை ஸமம்பண்ணுகிற அத்வர்யுவென்றும், உதாநவாயுயாகம் செய்து பலத்தையநுபவிக்கிறயஜமாநனை யாகபலமாகிய லோகாந்தரத்தை யடைவிப்பிக்கையால், யாகபலமென்றும் இப்படி அக்நி ஹோத்ரத்திற்கு வேண்டிய யஜமாநன், மூன்றக்நிகள், இரண்டாகுதிகள், அத்வர்யு, யாகபலம், ஆகிய வெட்டுப்பொருள்களையும், பஞ்சப்ராணங்கள்,உற்ச்வாஸ நிச்வாஸங்கள் மநஸ்ஸு, இவையாகிய எட்டுவஸ்துக்களிலும்,ரூபித்துகாட்டியவாறு.திநந்தோறும் ப்ரம்மத்தையடைவது ஜீவாத்மாவாகிலும், மநஸ்ஸு புரீதத்தையடைகையால், புரீதத்திலிருக்கிற ப்ரம்மத்தை யடைகிறதென்று சொல்லப்பட்டது.

பதாந்வயார்தபேதங்கள்.

ப்ராணன் முதலிய மூன்றுவாயுக்களுக்கே அக்நிஸாம்யம் சொல்லப்பட்டாலும் சத்திரிநியாயத்தாலே அவைகளையு மக்நி என்று சொன்னது. மற்றயிரண்டு வாயுக்களும் அத்வர்யுவாகவும், யாகபலமாகவும் சொல்லப்பட்டன. இது உபாஸிக்கிறப்ரகாரமென்று இராமாநுஜபாஷ்யத்தில்சொல்லப்படுகிறது. கேவலஸ்தோத்ரமேயன்றி உபஸநத்திற்காக வன்றென்று சங்கரபாஷ்யத்தின்கருத்தென்று பேதமறிக.

௫. 𑌅𑌤𑍍𑌰𑍈𑌷𑌦𑍇𑌵𑌸𑍍𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑍇𑌮𑌹𑌿𑌮𑌾𑌨𑌮𑌨𑍁𑌭𑌵𑌤𑌿। 𑌯𑌦𑍍𑌦𑍃𑌷𑍍𑌟𑌂𑌦𑍃𑌷𑍍𑌟
𑌮𑌨𑍁𑌪𑌶𑍍𑌯𑌤𑌿𑌶𑍍𑌰𑍁𑌤𑌂𑌶𑍍𑌰𑍁𑌤𑌮𑍇𑌵𑌾𑌰𑍍𑌥𑌮𑌨𑍁𑌶𑍃𑌣𑍋𑌤𑌿𑌦𑍇𑌶𑌦𑌿𑌗𑌨𑍍𑌤𑌰𑍈
𑌶𑍍𑌚𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌨𑍁𑌭𑍂𑌤𑌂𑌪𑍁𑌨𑌃𑌪𑍁𑌨𑌃 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌨𑍁𑌭𑌵𑌤𑌿𑌦𑍃𑌷𑍍𑌟𑌞𑍍𑌚𑌾𑌦𑍃𑌷𑍍𑌟
𑌞𑍍𑌚𑌶𑍍𑌰𑍁𑌤𑌞𑍍𑌚𑌾𑌶𑍍𑌰𑍁𑌤𑌞𑍍𑌚𑌾𑌨𑍁𑌭𑍂𑌤𑌞𑍍𑌚𑌾𑌨𑌨𑍁𑌭𑍂𑌤𑌞𑍍𑌚𑌸𑌰𑍍𑌵𑌂𑌪𑌶𑍍𑌯𑌤𑌿
𑌸𑌰𑍍𑌵𑌃𑌪𑌶𑍍𑌯𑌤𑌿॥

౫. అత్రైషదేవస్స్వప్నే మహిమానమనుభవతి । యద్దృష్టందృష్టమనుపశ్యతి శ్రుతం శ్రుతమేవార్థ మనుశృణోతి దేశదిగంతరైశ్చ ప్రత్యనుభూతంపునఃపునః ప్రత్యనుభవతిదృష్టం చాదృష్టంచ శ్రుతఞ్చాశ్రుతఞ్చ నుభూతఞ్చాననుభూతఞ్చ సర్వంపశ్యతి సర్వఃపశ్యతి॥

(ப்-ம்) 𑌅𑌤𑍍𑌰 -இந்தநித்ராகாலத்தில், 𑌏𑌷𑌃𑌦𑍇𑌵𑌃 - இந்தஜீவன், 𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑍇-ஸ்வப்நத்தில், 𑌮𑌹𑌿𑌮𑌾𑌨𑌮𑍍-அதிசயத்தை, 𑌅𑌨𑍁𑌭𑌵𑌤𑌿 - அநுபவிக்கிறான், 𑌯𑌤𑍍-𑌦𑍃𑌷𑍍𑌟𑌮𑍍𑌦𑍃𑌷𑍍𑌟𑌮𑍍-அடிக்கடிபார்க்கப்பட்டவஸ்துவை, 𑌅𑌨𑍁𑌪𑌶𑍍𑌯𑌤𑌿-பார்க்கிறான், 𑌶𑍍𑌰𑍁𑌤𑌂𑌶𑍍𑌰𑍁𑌤𑌮𑍍𑌅𑌰𑍍𑌥𑌮𑍍 - 𑌏𑌵 - அடிக்கடிகேட்கப்பட்டவிஷயங்களையே, 𑌅𑌨𑍁𑌶𑍃𑌣𑍋𑌤𑌿-கேட்கிறான், 𑌦𑍇𑌶𑌦𑌿𑌗𑌨𑍍𑌤𑌰𑍈𑌃𑌚-தேசாந்தரத்திலும் அதிதூரத்திலும், 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌨𑍁𑌭𑍂𑌤𑌮𑍍 - அநுபவித்தவ

ற்றை, புந: புந: - அடிக்கடி, ப்ரத்யநுபவதி - அநுபவிக்கிறான், த்ருஷ்டஞ்சாத்ருஷ்டஞ்ச - பார்த்ததையும், பாராததையும், ச்ருதஞ்சாச்ருதஞ்ச - கேட்டதையும் கேளாததையும், அநுபூதஞ்சாநநுபூதஞ்ச - அநுபவித்ததையும் அநுபவியாததையும், ஸர்வம் - இப்படி எல்லாவற்றையும், ஸர்வ: - எல்லாரூபியுமாய்க்கொண்டு, பச்யதி பச்யதி - அடிக்கடிபார்க்கிறான்.

ஸ௦.—ஸா. இப்படி கீழ்ச்சொல்லியவற்றை யறிந்தவித்வானானவன், செவி முதலிய விந்திரியங்களடங்கும் காலந்தூடங்கி உறங்கி எழுந்திருக்கிற வளவுயில் அநேகயாகபலங்களை யநுபவிக்கிருனுகையாலே அறியாதாருறக்கம்போலன்று வித்வானுடைய உறக்கமென்று வித்வாங்கொண்டாடப்படுகிறான். அறியாதவற்கு அநர்த்ததைத்தருகிற உறக்கமே, வித்வானுக்கு யாகபலத்தைத் தருகிறதென்று; வித்யையின் கொண்டாட்டமேயின்றி விதியன்று.வித்வாங்களல்லாதபேர்களுக்கும் செவிமுதலிய வெளியிந்திரியங்களுறங்குவது ப்ராணுக்கிகளுணர்ந்திருப்பது,உறங்கும்போது முணர்ந்திருக்கும்போதும், நெஞ்சுஸ்வதந்திரமாய் ஸுஷுப்தியையடைவது முதலியவை யொத்திருக்கையால், வித்வானுக்கிவையுண்டாகுமென்று விதிக்கிறதென்று சொல்லப்போகாது. இவ்விஷயத்தையறிந்தவன் யாகபலத்தை யடைந்தவனுகிறுனென்று ஸ்துதிசெய்கிறது என்பதே யமைந்திருக்கிறது. ஸ்வப்நங்களைக்காண்பவன் யார் என்று கேட்ட ப்ரச்நத்திற்கு விடையளிக்கப்படுகிறது. ஸுஷுப்தி யடைவதற்கு முன் செவிமுதலிய விந்திரியங்களுறங்கும்போது சரீரத்தை இரக்ஷிப்பதற்கு ப்ராணங்கள் உணர்ந்திருக்கும்போது, எல்லா இந்திரியங்களுமொடுங்கி யொன்று சேருமிடமாகிய மநமென்கிற தேவன் ஸ்வப்நத்தில் விசித்திரமான ப்ரபஞ்சத்தின் பெருமையைப் பார்க்கிருன். இங்கு நெஞ்சம் ஸ்வதந்திரமாய் ஸ்வப்நத்தையடையுமென்பது கூடாது. ஜீவாத்மாவன்றோ எல்லாவற்றுக்கும் கர்த்தாவெனில்; அன்று. இந்த ஜீவாத்மாவுக்குண்டாகிய ஸகலங்களுக்கும் நெஞ்சே முக்யகாரணமாகலின் இந்த ஜீவாத்மாஸ்வதந்திரமாய் ஒன்றையும் செய்யானன்றோ; உறக்கமுணர்ச்சி என்கிறவெல்லாமிந்த ஜீவனுக்கு மனதினலயதென்று வாஜஸனேயத்தில் சொல்லப்பட்டது.ஆதலால்மனது ஸ்வதந்திரமாய் ஸ்வப்நம் காண்கிறதென்றுசொன்னதுபொருத்தமுடையதேயாம்.நெஞ்சமாகியஉபாதிஸ்வப்நகாலத்தி லிருக்குமாயின்,ஸ்வப்நத்தில் ஸ்வயஞ்ஜ்யோதியாய் விளங்குவது கூடாதே; எனில்,ஸ்வப்நத்தில் ஸ்வயஞ்ஜ்யோதியாய் விளங்குகிருனென்கிற ச்ருதியின் பொருளறியாமையாலே அவ்வாறு சொல்லுகிறாய், ஸ்வயஞ்ஜ்யோதி யென்பதும் மோக்ஷம் வருகிறவளவுயில் கல்பிக்கப்பட்டதா யிருப்பதன்றோ ; அவித்தை நீங்குகிறவளவுயில் இந்த பிரமவ்யவகாரம் விடாதன்றோ; அநேகச்ருதிகளினுலு மிவ்விஷயம் புலப்படுகிறது. ஆனதால் ஸ்வப்நத்தில் ஸ்வயஞ்ஜ்யோதியென்கிற ச்ருதிவிரோதம் வருகையால் ஸ்வப்நத்தில் நெஞ்சில்லை என்று மந்தர் சொல்லுவர். ஓராத்மாவே யுள்ளதென்றறிந்தவர் சொல்லார். ஆனால் ஸ்வயஞ்ஜ்யோதியாயிருக்கை, நெஞ்சு முதலியவை யிருந்தாலும் கூடுமாயின் ஸ்வப்நத்தில் ஸ்வயஞ் ஜ்யோதியாகிருனென்று ஸ்வப்நகாலத்தைக் குறிப்பிட வேண்டியதில்லையே என்றால், நெஞ்சுமுதலியவை யில்லாவிட்டாலும் "உள்ளிருக்கிற வாகாசத்தில் படுத்துக்கொண்டிருக்கிறான்" என்கிற ச்ருதியால், அந்தராகாசம் முதலியவை யப்போது முண்டாகையால் ஸ்வயம் ஜ்யோதியாகைக்கு வேறுவஸ்துக்களிருக்கக்கூடாதென்று சொல்வது பல மற்றவார்த்தை. ஆமாயினும் மனதுமுதலிய சிலபொருள்கள் நீங்குகைபற்றி ஸ்வப்நத்தி லிரண்டுபோகம் சுமைநீங்குகையால்

அடுத்த ஸுஷுப்த்யவஸ்தையில் எல்லாச்சுமையும் நீங்குதலால் ஸ்வப்நத்திலேயே ஸ்வயஞ் ஜ்யோதியென்று சொல்லப்பட்டதென்று கொள்ளலாமெனில் ஸுஷுப்தியிலும் புரீதத்தில் நாடிகளில் படுத்திருக்கிறானென்று சொல்வதினால் புரீதத்நாடி முதலியவையப்போது முண்டாகையால் எல்லாச்சுமையும் ஸுஷுப்தியிலு நீங்காமையாலே, ஸ்வப்நத்திலிரண்டுபாகம் சுமைநீங்கி; ஸுஷுப்தியி லெல்லாச்சுமையும் நீங்குகிறதென்றிப்படி சொல்லக்கூடாதன்றோ; ஸ்வப்நத்தில் ஸ்வயஞ்ஜ்யோதியாகிறானென்று சொல்லுகிற ச்ருதி வேறுசாகையாகவி னிங்கு அந்த ச்ருதி விரோதத்திற்கு ஸமாதாநம் சொல்லவேண்டாவெனில், ஸர்வவேதாந்த ப்ரத்யய நியாயத்தாலே எல்லாச்சுருதிகளும் ஒரு தாத்பர்யத்தை யடைந்திருக்குமாகையாலப்படி சொல்லத்தகாது. ஒரு ஆத்ம ஸ்வரூபத்தையேயன்றோ எல்லாச்சுருதிகளும் போதிக்கின்றன, ஆனதால் ஸ்வப்நத்தில் ஸ்வயஞ் ஜ்யோதியாகிறானென்று ஸ்வப்நகாலத்தைக் குறிப்பிட்டுச் சொன்னதற்கு கருத்துரைக்கவேணும், ச்ருதி எல்லாமுண்மையை யுரைக்குமாகையாலுண்மையானவதின்கருத்து இன்னதென்று சொல்லத்தக்கது. என்றிப்படி அபிமாநத்தைவிட்டு வேதாந்தப்பொருளையறிய விரும்பினுயாகில் ஜாகரூகனாய்க் கேழ்க்கக்கடவாய். தன்னைத்தானே பண்டிதனாக நினைத்தபிமானித்திருக்கிற பேர்களனேகமாயிரம் வருடங்களானாலும் வேதாந்தப்பொருளையறியார். ஸுஷுப்தியில்போல ஸ்வப்நத்திலும் மநம்முதலிய பொருளிருக்கை வாஸ்தவமாயாத்மாவுக்குண்டான ஸ்வயஞ் ஜ்யோதியானதன்மைக்கு விரோதப்பட்டதல்ல. ஆனால் ஜாக்ரத்தசையில் ஸூர்யாதிபாஹ்ய தேஜஸ்ஸு இந்திரியதேஜஸ்ஸு முதலியவையிருக்கையா லாத்மாவினுடைய ஸ்வயஞ்ஜ்யோதிரூபமறியப்படாது. ஸ்வப்நத்தில் ஸ்புடமாகவறியப்படுமென்று, ஸ்வப்நத்தில் ஸ்வயஞ்ஜ்யோதியாகிறானென்று சொல்லப்பட்டது. ஆனாலுமாத்மாவுக்குண்டான ஸ்வயஞ்ஜ்யோதி ரூபமானது எக்காலத்திலுமென்றநியாயத்தாலு மெந்ததார்கிகனாலும்இல்லையென்றுசொல்லமுடியாது ஆனதால், இந்திரியங்கள் விஷயங்களைத்தொடாம லடங்கியபோது மநஸ்ஸு, பலவகையாக ஸ்வப்நத்தில் மகிமையைக் காண்கிறதென்பதில் ஒரு விரோதமுமில்லை. இப்படி ஸ்வப்நங்காண்கிற மனஸ்ஸு இந்த ஜந்மத்திலநுபவிக்கப்பட்ட புத்ரமித்ராதிகளையும், ஜந்மாந்தரத்திலநுபவித்த வஸ்துக்களையும் ஸம்ஸ்காரத்தாலே தோற்றுவிக்கப்பட்டபடி காண்கிறது.

ரா.—ஹா. ஸ்வப்நம் காண்பது யாரென்றுகேட்ட ப்ரசநத்திற்குவிடையளிக்கின்றார். மநதில் வேறாயநானென்று தோற்றுகிற ஜீவாத்மா கண்டவற்றையும் காணாதவற்றையும் பரமபுருஷனாகிய பரமாத்மா ஸ்ருஷ்டித்துக் காட்டக்காண்கிறான். அப்போது காண்பதற்கு வேண்டிய சரீரம், இந்திரியம் முதலியவற்றையும் பரமாத்மா ஸ்ருஷ்டிக்கின்றார்.

பதாந்வயார்த்தபேதங்கள்.

இராமாநுஜபாஷ்யத்தில் ஸ்வப்நத்தி லந்தகாலத்தி லந்தபுருஷனுக்கு மாத்திரமே யநுபவமுண்டாம்படி ஈச்வரன் ஸ்ருஷ்டிக்கையாலே, ஸ்வப்நம் ஸத்யமென்றும், இதனாலேயே எப்போதும் காணாதபொருளையும் பரமபுருஷன் காட்டக்காணலாமாகையாலே, காணாதவற்றையும் காண்கிறானென்றும், காரணமாகிய மனது கர்தாவாகாமையின் ஜீவாத்மாவே இப்படி ஸ்வப்நம்காண்பவனென்றும், கருத்துகொள்ளப்பட்டது, உலகமெல்லாம் பொய்யென்பதற்கு முக்யத்ருஷ்டாந்தம் ஸ்வப்நமாகையால் ஸ்வப்நம்பொய்யென்றும், பொய்யான உலக க்ரமம் அநாதிவாஸனையா லாவதுபோல்;

இந்த ஸ்வப்நாநுபவமும் வாஸனையாலேயே பிறக்குமாகையால், காணாத வற்றில் ஸம்ஸ்காரமுண்டாகதாகலின் காணாதவற்றை யென்பதற்கு, இந்த ஜந்மத்தில்காணாதவற்றை என்றுபொருள் சொல்லி ஜந்மாந்தரத்தில் காணப்பட்டவஸ்துவே இப்போது தோற்றுகிறதென்றும் கருத்து சங்கரபாஷ்யத்தில் சொல்லப்பட்டது.

௬. ஸ யதா தேஜஸாபிபூதோ பவதி। அத்ரைஷ தேவஸ்ஸ்வப்நாந் ந பஶ்யத்யத ததைதஸ்மிஞ்சரீர ஏதத்ஸுகம் பவதி॥

౬. స యదా తేజసాభిభూతో భవతి।
అత్రైష దేవస్స్వప్నాన్న పశ్యత్యథ తదైతస్మిఞ్ఛరీర ఏతత్సుఖం భవతి॥

(ப-ம்) ஸ:-அந்தஜீவன், யதா-எப்போது, தேஜஸா - தேஜோரூபி யான பரமாத்மாவினால், அபிபூதோ பவதி - அடங்கிப்போகிறானோ; அத்ர-இந்தகாலத்தில், ஏஷ: தேவ:-இந்தஜீவன், ஸ்வப்நாந் - ஸ்வப்நங்களை, பஶ்யதி ந-காண்பதில்லை, அஸ்மிந் ஶரீரே-இந்தசரீரத்தில், ததா-ஏதத், ஸுகம்-அப்படிப்பட்ட இந்தவிஷயஸுகமானது, பவதி-உண்டாகிறது- அத-என்பது, "அஸ்மின்சரீரே" என்பதுதுடங்கி வேறுப்ரசநத்திற்குத் தரமென்பதைவிளக்குகிறது.

ஸம்.—ஶா. இந்த மனதாகிய ப்ரகாசவஸ்துவானது சிந்தை என்கிற தேஜஸ் ஸினாலும் சித்ரூபமான பிரம்மத்தாலு மடங்கி நாடிமத்யத்தில் வாஸனைகளெல்லா மொழிந்து அவைகளின்வழி மூடப்பட்டு கரணங்களோடு மற்றுள்ளவையும் ஹ்ருதயத்தில் சேரும்போது இந்த மநஸ்ஸானது காட்டுத்தீபோல விஜ்ஞாந ஸ்வரூபமாய் சரீரம்முழுதும் வ்யாபித்து, விசேஷமில்லாததாயிருக்கின்றது, இந்த ஸுஷுப்தி என்கிறவவஸ்தையில், இந்த மநஸ்ஸாகிய தேவன் விஷயங்களையறியும் வழி தேஜஸ் ஸினால் மூடப்பட்டமையால் ஸ்வப்நங்களைக்காண்பதில்லை. இப்படி எல்லாமடங்கின இந்த ஸமயத்தில் நித்யமாய் ப்ரகாசமாய் வியாபித்தசித்ஸ்வரூபாநந்தகஸுகம் தடங்கலின்றி விளங்குகிறது. ஆக, எவனுக்கு ஸுகமுண்டாகிறதென்கிற ப்ரசநத்திற்கு விடையளிக்கப்பட்டதாயிற்று.

ரா.—ஹா. "ஸத்தான ப்ரம்மத்தோடுசேருகிறான்" "தேஜஸ்ஸோடு சேருகிறான்" என்று ஸுஷுப்தியைப்பற்றிச் சொல்லுகிற ச்ருதிகளின்படி எல்லாவற்றையும் ப்ரகாசிக்கச்செய்கையாலே தேஜஸ்ஸென்று சொல்லப்பட்ட ப்ரம்மத்தின் ஸம்பந்தத்தையடைந்து கலந்து ப்ரம்மத்தினாலணைத்துக்கொள்ளப்பட்டு, தன்னுடைய ப்ரகாசம் தனித்தில்லாமல், இந்த ஜீவாத்மா அடங்கியிருக்கும்போது; ஸ்வப்நங்களைக் காண்பதில்லை. இப்படிசொல்லியதால், ஸ்வப்நங்காண்பது எந்த காரணத்தாலென்கிற ப்ரசனத்திற்கு இவ்வாறு ப்ரம்மத்தோடு கலவாமலிருக்கும்போது மநஸ்ஸு கூடியிருக்கையால் ஸ்வப்நத்தில் வஸ்துக்களைக்காண்கிறானென்றுத்தரம் சொல்லப்பட்டதாயிற்று. இனி ஸுகாநுபவம் பண்ணுகிறவன் யாரென்ற வினாவுக்கு விடையளிக்கப்படுகிறது. சரீரஸம்பந்தமுண்டானபோதே இந்த ஜீவனுக்கு விஷயஸுகாநுபவமுண்டாகிறது.—"சரீரமில்லாதானை ஸுகதுக்கங்கள் சேரா" வென்று சுருதியிருக்கையாலே, சரீரஸம்பந்தமில்லாதபோது விஷயஸுகமுண்டாகாது.

ஏ. 𑌸𑌯𑌥𑌾𑌸𑍋𑌮𑍍𑌯𑌵𑌯𑌾𑌂𑌸𑌿𑌵𑌾𑌸𑍋𑌵𑍃𑌕𑍍𑌷𑌂𑌸𑌂𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍𑌤𑍇। 𑌏
𑌵𑌂𑌹𑌵𑍈𑌤𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌂𑌪𑌰𑌆𑌤𑍍𑌮𑌨𑌿𑌸𑌂𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑍇॥

౭. సయథాసోమ్యవయాంసివాసోవృక్షంసంప్రతిష్ఠంతే।
ఏవంహవైతత్సర్వంపరఆత్మనిసంప్రతిష్ఠతే॥

(ப-ம்) 𑌸𑌃-இந்தஜீவன் 𑌯𑌥𑌾-எப்படி, 𑌵𑌯𑌾𑌂𑌸𑌿-பக்ஷிகள், 𑌵𑌾𑌸𑍋𑌵𑍃𑌕𑍍𑌷𑌂 - இருப்பிடமாகியவிருக்ஷத்தை, 𑌸𑌂𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍𑌤𑍇-அடைந்து ப்ரதிஷ்டைபெறுகின்றனவோ, 𑌏𑌵𑌂-𑌹𑌵𑍈-இப்படியே, 𑌤𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌂-அதெல்லாம், 𑌪𑌰𑌆𑌤𑍍𑌮𑌨𑌿-பரமாத்மாவில், 𑌸𑌂𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑍇-ப்ரதிஷ்டையடைகின்றது.

𑌭𑌂.—𑌹𑌾. இக்காலத்தில் அவித்யை, காமம், கர்மம், இவைகளே ஹேதுவாகவுடைய கார்யகாரணரூபமான உபாதிகளெல்லாமொழிந்து போகின்றன. இப்படி உபாதியொழிந்து போகும்போது உபாதியினாலே வேறுபோல் தோற்றுகிற ஆத்மாக்களும், உபாதியில்லாமையால், ஜ்ஞாநரூபமான ப்ரம்ஸ்வரூபத்தோடொன்றாய் விடுகின்றனர். என்று மேலே சொல்லப்போகிறவிது நிலைபெறும்படி திருஷ்டாந்தம் காட்டப்படுகிறது. பக்ஷிகளெல்லாம் தங்களுக்கிருப்பிடமாகிய விருக்ஷத்தில் நிலைபெற்றிருப்பதுபோல் எல்லாப்பொருளுமந்த ப்ரம்மத்தினிடத்தில் நிலைபெறுகின்றன.

𑌶𑌾.—𑌹𑌾. எங்கு இப்பொருளெல்லாம் சேர்ந்திருக்கின்றனவென்று கேட்ட ப்ரசநத்திற்குத்தரம் சொல்லப்படுகிறது.—ஒரு விருக்ஷத்தில் பலபக்ஷிகளும் தங்கியிருப்பதுபோல இவ்வுலகெல்லாம் ப்ரம்மத்தினிடத்தில் சேர்ந்திருக்கின்றன.

அ. 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀𑌚𑌪𑍃𑌥𑌿𑌵𑍀𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌚𑌾𑌪𑌶𑍍𑌚𑌾𑌪𑍋 𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌚𑌤𑍇𑌜𑌶𑍍𑌚
𑌤𑍇𑌜𑍋 𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌚𑌵𑌾𑌯𑍁𑌶𑍍𑌚𑌵𑌾𑌯𑍁 𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌚𑌾𑌕𑌾𑌶𑌶𑍍𑌚𑌾𑌕𑌾𑌶 𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌚
𑌚𑌕𑍍𑌷𑍁𑌶𑍍𑌚𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌵𑍍𑌯𑌂𑌚𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌂𑌚𑌶𑍍𑌰𑍋𑌤𑌵𑍍𑌯𑌂𑌚𑌘𑍍𑌰𑌾𑌣𑌂𑌚𑌘𑍍𑌰𑌾𑌤𑌵𑍍𑌯𑌂𑌚𑌰
𑌸𑌶𑍍𑌚𑌰𑌸𑌯𑌿𑌤𑌵𑍍𑌯𑌂𑌚𑌤𑍍𑌵𑌕𑍍𑌚𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌯𑌿𑌤𑌵𑍍𑌯𑌂𑌚 𑌵𑌾𑌕𑍍𑌚𑌵𑌕𑍍𑌤𑌵𑍍𑌯𑌂𑌚𑌹𑌸𑍍𑌤𑍌𑌚𑌾𑌦𑌾
𑌤𑌵𑍍𑌯𑌂𑌚𑍋𑌪𑌸𑍍𑌥𑌶𑍍𑌚𑌾𑌨𑌨𑍍𑌦𑌯𑌿𑌤𑌵𑍍𑌯𑌂𑌚𑌪𑌾𑌯𑍁𑌶𑍍𑌚𑌵𑌿𑌸𑌰𑍍𑌜𑌯𑌿𑌤𑌵𑍍𑌯𑌂𑌚𑌪𑌾𑌦𑍌𑌚
𑌗𑌨𑍍𑌤𑌵𑍍𑌯𑌂𑌚𑌮𑌨𑌶𑍍𑌚𑌮𑌨𑍍𑌤𑌵𑍍𑌯𑌂𑌚𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌶𑍍𑌚𑌬𑍋𑌦𑍍𑌧𑌵𑍍𑌯𑌂𑌚𑌾𑌹𑌙𑍍𑌕𑌾𑌰𑌶𑍍𑌚𑌾𑌹𑌙𑍍𑌕𑌰𑍍𑌤
𑌵𑍍𑌯𑌂𑌚𑌚𑌿𑌤𑍍𑌤𑌂𑌚𑌚𑍇𑌤𑌯𑌿𑌤𑌵𑍍𑌯𑌂𑌚𑌤𑍇𑌜𑌶𑍍𑌚𑌵𑌿𑌦𑍍𑌯𑍋𑌤𑌯𑌿𑌤𑌵𑍍𑌯𑌂𑌚𑌪𑍍𑌰𑌾𑌣𑌶𑍍𑌚
𑌵𑌿𑌧𑌾𑌰𑌯𑌿𑌤𑌵𑍍𑌯𑌂𑌚॥

౮. పృథివీచపృథివీమాత్రా చాపశ్చాపోమాత్రాచతేజశ్చ తేజోమాత్రాచవాయుశ్చ
వాయుమాత్రాచాకాశశ్చాకాశమాత్రాచచక్షుశ్చ ద్రష్టవ్యంచశ్రోత్రంచ శ్రోతవ్యంచఘ్రాణం
చఘ్రాతవ్యం చరసశ్చరసయితవ్యంచ త్వక్చస్పర్శయితవ్యంచ వాక్చవక్తవ్యంచహస్తౌచాదాత
వ్యంచోపస్థశ్చానందయితవ్యఞ్చపాయుశ్చ విసర్జయితవ్యంచ పాదౌచగన్తవ్యంచమనశ్చ
మంతవ్యంచబుద్ధిశ్చబోద్ధవ్యం చాహంకారశ్చాహంకర్తవ్యఞ్చ చిత్తఞ్చచేతయితవ్యఞ్చ తేజశ్చ
విద్యోతయితవ్యంచప్రాణశ్చ విధారయితవ్యంచ॥

(ப-ம்) 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀𑌚 - ப்ருதிவியும், 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌚 - கந்ததந்மாத்திரையும், 𑌆𑌪𑌶𑍍𑌚 - ஜலதத்வமும், 𑌆𑌪𑍋𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌚-இரஸதந்மாத்திரையும், 𑌤𑍇𑌜𑌶𑍍𑌚 - தேஜஸ்தத்வமும், 𑌤𑍇𑌜𑍋𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌚 - ரூபதந்மாத்திரையும்;

வாயுஶ்ச-வாயுவும், வாயுமாத்ரா ச-ஸ்பர்சதந்மாத்திரையும், ஆகாஶஶ்ச-ஆகாசமும், ஆகாஶமாத்ரா ச-சப்ததந்மாத்திரையும், சக்ஷுஶ்ச- சக்ஷுரிந்திரியமும், த்ரஷ்டவ்யம் ச-காணப்படும் ரூபம்முதலியவையும், ஶ்ரோத்ரம் ச-ச்ரோத்திரேந்திரியமும், ஶ்ரோதவ்யம் ச - கேட்கப்படுகிற சப்தமுதலியவையும், க்ராணம் ச-கிராணேந்திரியமும், க்ராதவ்யம் ச- கந்தம்முதலியவையும், ரஸஶ்ச-இரஸநேந்திரியமும், ரஸயிதவ்யம் ச- உப்புமுதலிய அறுசுவைகளும், மற்றுளசிலவும், த்வக்ச - த்வகிந்திரியமும், ஸ்பர்ஶயிதவ்யம் ச-ஸ்பர்சம்முதலியவையும், வாக்ச-வாகிந்திரியமும், வக்தவ்யம் ச-பதவாக்யமுதலியவையும், ஹஸ்தௌ ச-பாணீந்திரியமும், ஆதாதவ்யம் ச - கலசமுதலியவையும், உபஸ்தஶ்ச-உபஸ்தேந்திரியமும், ஆநந்தயிதவ்யம் ச-ஸம்போகஸுகபோகியும், பாயுஶ்ச-பாயுவென்கிறஇந்திரியமும், விஸர்ஜயிதவ்யம் ச-புரீஷம்முதலியவையும், பாதௌ ச-பாதேந்திரியமும், கந்தவ்யம் ச - கமநாகமநம் செய்கிற கிராமநகர முதலியவையும், மநஶ்ச - அந்தரிந்திரியமான மநஸ்ஸும், மந்தவ்யம் ச - ஸ்ம்ருதியில் புலப்படும் புண்யபாபம் முதலியவையும், புத்திஶ்ச - அத்தியவஸாயம் முதலியவையும், போத்தவ்யம் ச - மோக்ஷஸாதநம் முதலிய அத்யவஸிக்கப்படும் பொருளும். அஹங்காரஶ்ச - அஹங்காரமும், அஹங்கர்தவ்யம் ச - அபிமாநம் முதலிய வஸ்துக்களும், சித்தம் ச - சித்தமும், சேதயிதவ்யம் ச - சேதனையென்கிற ஜ்ஞாநத்திற்கு விஷமாகியபொருளும், தேஜஶ்ச-சரீரத்திலிருக்கிற சர்மமென்கிற ப்ரகாசவஸ்துவும், வித்யோதயிதவ்யம் ச - அதினால் ப்ரகாசிக்கும் பொருளும், ப்ராணஶ்ச-ப்ராணனும், விதாரயிதவ்யம் ச - அதினால் தரிக்கப்படும்பொருளும், பரே ஆத்மநி ஸம்ப்ரதிஷ்டதே - பரமாத்மாவினிடத்தில்ப்ரதிஷ்டையடைகின்றது, என்று முந்தியச்லோகத்திலிருக்கிற இந்தபதங்களோடே அந்வயம்.

பதாந்வயார்த்தபேதங்கள்.

இங்குசங்கர ராமாநுஜபாஷ்யங்களுக்கு பேதமில்லை. இப்படி எல்லாப்பொருளும் பரமாத்மாவினிடத்தில் சேர்ந்திருக்கிறது என்று அந்தபரமாத்மாவின்வைபவம் சொல்லப்பட்டதென்றும் கருத்து பதவுரையாலே விளங்கும். ஆனதாலும் விசேஷார்தங்களென்று மில்லாமையாலும் பாஷ்யங்கள்காட்டப்படவில்லை. பஞ்சதந்மாத்திரைகள், பஞ்சபூதங்கள், பஞ்சேந்திரியங்கள், பஞ்சவிஷயங்கள், பஞ்சகர்மேந்திரியங்கள், அவைகளின்தொழில்கள், மநம், புத்தி, அஹங்காரம், சித்தம், என்றுநாலுவகைப்பட்டஅந்தக்கரணம், அவைகளின் விஷயங்கள், தேஜஸ்ஸென்கிற சர்மம், அதின்விஷயம் ப்ராணன், அதின்வியாபாரங்கள் இவைகளிங்கு சொல்லப்பட்டன. இப்படி பிரித்துச்சொன்ன விதற்குக்கருத்து எவ்வகைப்பட்டபொருளாயினும் பரமாத்மாவையேபற்றி யிருக்குமென்பதாம். இப்படி பிரித்துச்சொன்ன வி

வைகளுக்குள், சிலவற்றிற்கு ஸ்தூலபேதமில்லையானாலும் ஸூக்ஷ்மபேதமுண்டென்றறிக.

௯. 𑌏𑌷 𑌹𑌿 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌾 𑌸𑍍𑌪𑍍𑌰𑌷𑍍𑌟𑌾 𑌶𑍍𑌰𑍋𑌤𑌾 𑌘𑍍𑌰𑌾𑌤𑌾 𑌰𑌸𑌯𑌿𑌤𑌾 𑌮𑌨𑍍𑌤𑌾 𑌬𑍋𑌦𑍍𑌧𑌾 𑌕𑌰𑍍𑌤𑌾 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌤𑍍𑌮𑌾 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃। 𑌸 𑌪𑌰𑍇𑌽𑌕𑍍𑌷𑌰 𑌆𑌤𑍍𑌮𑌨𑌿 𑌸𑌂𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑍇

౯. ఏషహి ద్రష్టా స్ప్రష్టా శ్రోతా ఘ్రాతా రసయితా మన్తా బోద్ధా కర్తా విజ్ఞానాత్మాపురుషః సపరేఽక్షరే ఆత్మనిసంప్రతిష్ఠతే॥

(ப்-ம்.) 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌾-ரூபத்தையறிபவனும், 𑌶𑍍𑌰𑍋𑌤𑌾-சப்தத்தை யறிபவனும், 𑌘𑍍𑌰𑌾𑌤𑌾 - கந்தத்தையறிபவனும், 𑌰𑌸𑌯𑌿𑌤𑌾 - ரஸத்தையறிபவனும், 𑌮𑌨𑍍𑌤𑌾-ஸ்மரிக்கிறவனும், 𑌬𑍋𑌦𑍍𑌧𑌾 - அநுபவிப்பவனும், 𑌕𑌰𑍍𑌤𑌾- செய்பவனும், 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌤𑍍𑌮𑌾 - ஜ்ஞாநஸ்வரூபியானவனுமாகிய, 𑌸𑌃-𑌏𑌷𑌃-𑌪𑍁𑌰𑍁𑌷𑌃-அப்படிப்பட்ட இந்தஜீவாத்மா, 𑌅𑌕𑍍𑌷𑌰𑍇-𑌪𑌰𑍇 - 𑌆𑌤𑍍𑌮𑌨𑌿-அக்ஷரபரப்ராம்மமாகிய பரமாத்மாவில், 𑌸𑌂𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑍇 - ப்ரதிஷ்டையையடைகிறான். 𑌹𑌿-இதுவேதாந்தங்களிலேப்ரஸித்தம்.

𑌶𑌂-𑌸𑌾-இப்படி ப்ரபஞ்சமெல்லாம் பரமாத்மாவினிடத்தில் லயிப்பதுபோல் இந்த உபாதிகளாலே ஜீவாத்மாவாகத்தோற்றி யிருந்தபுருஷனும், பரமாத்மாவினிடத்திலைக்யத்தை யடைகிறதென்கிறது.—ரூபம்முதலியவற்றை கிரகியாநிற்கிற இந்த ஜீவாத்மாவும், உபாதிநசிக்கும்போது ஜலம்முதலியன நசித்தபோது ப்ரதிபிம்பம் நசிப்பதுபோல் உபாதிநீங்கி விளங்குகிறது. அப்போது ஜீவாத்மாபரமாத்மா இவர்களுக்கு ஐக்யமுண்டாகிறது. இங்கு ஆத்மாவுக்குச்சொன்ன கர்த்ருத்வாதிகள் உபாதிதசையிலாரோபிக்கப்பட்டன.

𑌰𑌾-𑌸𑌾-சேதநாசேதநரூபமாயும் கர்த்ருகர்மகரணரூபமாயுமுள்ள எல்லாம் பரமாத்மாவை யாச்ரயித்து நிற்கின்றனவென்றுகருத்து. இங்கு ஆத்மாவையறிபவனென்றும், அறிவைவடிவாகவுடையவனென்றும் சொன்னதால், கேவலம் அறிவே யாத்மா அறிபவனல்லனென்கிற அத்வைதிகள் மதமும், அறிபவனேயன்றி அறிவைவடிவாகவுள்ளவனன்று என்கிற தார்க்கிகர்மதமும் நிரஸிக்கப்பட்டது.

௧௦. 𑌸 𑌯𑍋 𑌹 𑌵𑍈 𑌤𑌦𑌚𑍍𑌛𑌾𑌯𑌮𑌶𑌰𑍀𑌰𑌮𑌲𑍋𑌹𑌿𑌤𑌂 𑌶𑍁𑌭𑍍𑌰𑌮𑌕𑍍𑌷𑌰𑌂 𑌵𑍇𑌦𑌯𑌤𑍇 𑌯𑌸𑍍𑌤𑍁 𑌸𑍋𑌮𑍍𑌯 𑌸 𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌃 𑌸𑌰𑍍𑌵𑍋 𑌭𑌵𑌤𑌿 𑌤𑌦𑍇𑌷 𑌶𑍍𑌲𑍋𑌕𑌃॥

౧౦. సయోహవై తదచ్ఛాయమశరీరమలోహితం శుభ్రమక్షరం వేదయతే యస్తుసోమ్య|
ససర్వజ్ఞస్సర్వోభవతి తదేషశ్లోకః॥

(ப்-ம்.) 𑌯𑌃-எவன், 𑌏𑌤𑌤𑍍-இந்த, 𑌅𑌚𑍍𑌛𑌾𑌯𑌂-கர்மஸம்பந்தமில்லாததும், 𑌅𑌶𑌰𑍀𑌰𑌂-சரீரமில்லாததும், 𑌅𑌲𑍋𑌹𑌿𑌤𑌂- வர்ணமில்லாததும், 𑌶𑍁𑌭𑍍𑌰𑌂-சுத்தமானதும், 𑌅𑌕𑍍𑌷𑌰𑌂-அழிவில்லாததுமான ப்ரம்மத்தை, 𑌵𑍇𑌦𑌯𑌤𑍇-அறிகிறானோ; அவன் துர்லபன் அப்படி, 𑌯𑌃,𑌹𑌵𑍈-எந்தபுருஷன், 𑌵𑍇𑌦𑌯𑌤𑍇-அறிகிறானோ, 𑌸𑌃-அவன், 𑌸𑍋𑌮𑍍𑌯-ஸோம்யரே, 𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌃 - எல்லாவற்றையுமறிந்தவனும், 𑌸𑌰𑍍𑌵𑌃-எல்லாவற்றையுமுடையவனும், 𑌭𑌵𑌤𑌿- ஆகிறான், 𑌤𑌦𑍇𑌷 𑌶𑍍𑌲𑍋𑌕𑌃-இந்தவிஷயத்தில் சுலோகமொன்றுண்டு.

௧௧. விஜ்ஞாநாத்மா ஸஹ தேவைஶ்ச ஸர்வை: ப்ராணா பூதாநி ஸம்ப்ரதிஷ்டந்தி யத்ர । ததக்ஷரம் வேதயதே யஸ்து ஸோம்ய ஸ ஸர்வஜ்ஞ: ஸர்வமேவாவிவேஶேதி ॥

౧౧. విజ్ఞానాత్మాసహదేవైశ్చసర్వైః ప్రాణాభూతానిసంప్రతిష్ఠంతియత్ర । తదక్షరంవేదయతేయస్తుసోమ్యసనర్వజ్ఞస్సర్వమేవావివేశేతి॥

(ப்-ம்) யத்ர-எந்தவக்ஷரபரப்ரம்மத்தில், தேவைஸ்ஸஹ- இந்திரியங்களோடுகூட, ப்ராணா:-ப்ராணங்களும், பூதாநி-பஞ்சபூதங்களும், விஜ்ஞாநாத்மா-ஜ்ஞாநஸ்வரூபியான ஜீவாத்மாவும், ஸம்ப்ரதிஷ்டந்தி-ப்ரதிஷ்டையடைகின்றனவோ, தத்-அப்படிப்பட்ட, அக்ஷரம்- அக்ஷரபரப்ரம்மத்தை, ஸோம்ய-ஓ ஸோம்யரே, ய:-எவன், வேதயதே-நன்றாகவறிகிறானோ, ஸ:-அப்படிப்பட்டவன், ஸர்வஜ்ஞ:-எல்லாவற்றையுமறிந்தவனாய், ஸர்வம்-எல்லாவற்றையும், ஆவிவேஶ - பிரவேசிக்கிறான். இதி - என்பதாம்.

பதாந்வயார்த்தபேதங்கள்.

ஸர்வாதாரமான ப்ரம்மத்தையறிந்தவன் ஸர்வகாமங்களையுமடைகிறானென்கிற தாத்பர்யமிரண்டுபாஷ்யத்திற்கு மொக்கும்.

நாலாம்ப்ரச்னம்முற்றும்.

அத பஞ்சமப்ரச்ந ப்ராரம்ப:.

௧. அத ஹைநம் ஶைப்ய: ஸத்யகாம: பப்ரச்ச । ஸ யோ ஹ வை தத்பகவந்மநுஷ்யேஷு ப்ராயணாந்தமோங்காரமபித்யாயீத । கதமம் வாவ ஸ தேந லோகம் ஜயதீதி ॥

౧. అథహైనంశైబ్యస్సత్యకామః ప్రపచ్ఛ । సయోహవైతద్భగవన్మనుష్యేషు ప్రాయణాంతమోంకారమభిధ్యాయీత। కతమంవావసతేనలోకంజయతీతి॥

(ப்-ம்) அத-கார்க்யமுனி ப்ரச்நத்திற்குத்தரம் சொல்லி முடிந்தபின், ஏநம்-இந்த பிப்பலாதரை, ஶைப்ய:-சிபியின் குமாரராகிய, ஸத்யகாம:-ஸத்யகாமரென்பவர், பப்ரச்ச - கேட்டார். ஹே பகவந் - பூஜ்யரே, மநுஷ்யேஷு-மநுஷ்யர்களுக்குள், ய: ஹ வை - யவனொருவன், ப்ராயணாந்தம்-மரணபர்யந்தம், தத்-அப்படி, ஓங்காரம்-ப்ரணவத்தை, ஸ:-அப்படிப்பட்டவனாய், அபித்யாயீத-உபாஸிக்கிறானோ; ஸ: - அவன், தேந- அந்தஉபாஸநத்தால், கதமம்-லோகம்வாவ-எந்தலோகத்தை, ஜயதி- ஜயிக்கிறான்.

பா-ஸா—இப்படி கீழ்ச்சொல்லிய அக்ஷரபரப்ரம்ம விவேகஜ்ஞாநம் பிறவாத மந்தாதிகாரிக்கு, ப்ரணவோபாஸநத்தால் க்ரமத்தில்க்ஷரபரப்ரம்ம ப்ராப்தியுண்டாம்படி ப்ரணவோபாஸநத்தை விதிக்கிறது இந்தப்ரசநம்.

ஶா-ஹா—இப்படி கார்க்யப்ரசநத்திற்கு விடைதந்தபின், இந்த பிப்பலாதனை ஸத்யகாமர், பூஜ்யரே, மநுஷ்யர்களில் எவன் ப்ரணவத்தாலே மகாபக்தியுடனே ப்ரம்மத்தைதியாநித்து அஸத்யம்சொல்லாமை, ஸ்திரீஸங்கமில்லாமை, கொல்லாமை, தாநம்வாங்காமை, தாநம்செய்கை, ஸந்யாஸம் யமம், நியமம், ஆஸநம், ப்ராணயாமம், ப்ரத்யாஹாரம், த்யாநம், தாரணம், என்கிற வகைகளிலே இதரவிஷயங்களில் மநஞ்செல்லாமல் ஸமாதிபெற்ற மநதையுடையவனாய், ப்ராணனுள்ளவரையில் வேறுவிஷயங்களின் ஸ்ம்ருதிகலவாமலும், இடைவிடாமலும் ஸ்மரிக்கையாகிற தியாநத்தைச் செய்கிறானோ, காற்றில்லாதவிடத்தில் வைத்த விளக்கைப்போலே சலியாமலிருக்கிறானோ, அப்படிப்பட்டவன், ஜ்ஞாநகர்மங்களுக்கு பலமாயுள்ளலோகங்களுள் எந்த லோகத்தை யிந்த உபாஸநத்தாலே யடைகிறான், என்று ப்ரசநம்பண்ணினார்.

உ. 𑌤𑌸𑍍𑌮𑍈 𑌸 𑌹𑍋𑌵𑌾𑌚 𑌏𑌤𑌦𑍍𑌵𑍈 𑌸𑌤𑍍𑌯𑌕𑌾𑌮 𑌪𑌰𑌞𑍍𑌚𑌾𑌪𑌰𑌞𑍍𑌚
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌯𑌦𑍋𑌙𑍍𑌕𑌾𑌰𑌸𑍍𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍇𑌤𑍇𑌨𑍈𑌵𑌾𑌯𑌤𑌨𑍇𑌨𑍈𑌕𑌤𑌰𑌮𑌨𑍍
𑌵𑍇𑌤𑌿॥

௨. తస్మైస హోవాచ । ఏతద్వైసత్యకామపరఞ్చా పరఞ్చబ్రహ్మయదోంకారస్తస్మా ద్వి
ద్వానేతేనైవాయతనే నైకతరమన్వేతి॥

(ப ம்) 𑌤𑌸𑍍𑌮𑍈-அந்த ஸத்யகாமருக்கு, 𑌸𑌃𑌹 𑌉𑌵𑌾𑌚 - அந்த பிப்பலாதர்சொன்னார். 𑌹𑍇 𑌸𑌤𑍍𑌯𑌕𑌾𑌮-ஓய்ஸத்யகாமரே, 𑌓𑌙𑍍𑌕𑌾𑌰𑌃- ப்ரணவமாகிய, 𑌏𑌤𑌤𑍍-இதானது, 𑌪𑌰𑌂𑌚-𑌅𑌪𑌰𑌂𑌚-𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 - பரப்ரம்மமாயும் அபரப்ரம்மமாயுமாகிறது. 𑌵𑍈-ப்ரஸித்தம், 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍- ஆகையால், 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍- உபாஸகன், 𑌏𑌤𑍇𑌨𑍈𑌵 𑌆𑌯𑌤𑌨𑍇𑌨 - இந்த ஆலம்பநத்தாலே, 𑌏𑌕𑌤𑌰𑌮𑍍- பரப்ரம்மத்தையாகிலு மபரப்ரம்மத்தையாகிலும், 𑌅𑌨𑍍𑌵𑍇𑌤𑌿- அடைகிறான்.

ஶஂ-ஹா—இப்படிகேட்ட ஸத்யகாமனைநோக்கி பிப்பலாதர்சொல்லுகின்றார். ஸத்யகாமரே அபரப்ரம்மமாகிய ப்ராணனும் அழிவற்றஸத்யமான பரப்ரம்மமாகிய பரமபுருஷனும், இந்தப்ரணவமேயாகும். இவ்விரண்டுக்கும் ப்ரதீகமாகுமென்கை. ஸாக்ஷாத்பரப்ரம்மத்திற்கு விசேஷங்களொன்று மில்லாமையால் சப்தம் இந்திரியம்முதலியவற்றிற்குத் தோற்றாதாகையால், நெஞ்சால்நினைக்கப்படாது. ஆகையால் ப்ரம்மத்திற்கு ப்ரதீகமாகிய ப்ரணவத்தில் ப்ரதிமையிலேபோல பக்தியோடு ப்ரம்மதிருஷ்டியோடுபாஸநம்செய்பவனுக்கு அந்தபரப்ரம்மம் ஸ்வயமாகவே விளங்குமென்று இந்தசாஸ்திரத்தின் ப்ரமாணத்தாலே யறியப்படுகிறது. இப்படியே அபரப்ரம்மமும் விளங்கும் ஆகையால் பராபரப்ரம்மமே ப்ரணவமென்றுபசரித்து சொல்லப்பட்டது ஆகையால் இந்தப்ரணவோபாஸநத்தாலே இஷ்டப்படி பரப்ரம்மத்தையாகிலுமபரப்ரம்மத்தையாகிலு மடைவான். ஆலம்பநங்களுக்குள் ப்ரணவம் சிரேஷ்டமான ஆலம்பநமன்றோ.

ஶா-ஹா—இந்த ப்ரணவமானது பரப்ரம்மம், அபரப்ரம்மம் ஆகிய விரண்டையும்சொல்லும் இந்தவாச்யவாசகஸம்பந்தத்தாலே, ப்ரணவமே ப்ரம்மமென்று சொல்லப்பட்டது. இக்கருத்து ஸ்ரீவியாஸாசாரியராலும் ஈக்ஷதிகர்மாதிகரணத்தில் காட்டப்பட்டது. ஆகையாலே ப்ரணவமாகிய வாசகத்தைக்கொண்டு வாச்யமானப்ரம்மத்தையுபாஸிக்கிறான். என்றுகருத்து இப்படி பிப்பலாதர்சொல்லுகிறார்.

பதாந்வயார்த்தபேதங்கள்.

சங்கரபாஷ்யத்தில் இந்தஉபாஸநம் ப்ரதீகோபாஸநமென்று கொள்ளப்பட்டது. ப்ரதீகோபாஸநமாவது ஒன்றையொன்றாக உபாஸிக்கை. இங்கு பரப்ரம்மமாகாத ப்ரணவத்தை பரப்ரம்மமென்றுபாஸிப்பதுப்ரதீ கோபாஸநமேயாம். ஆக, இந்தப்ரணவத்தைய பரப்ரம்மமாக உபாஸிப்பவன் அபரப்ரம்மத்தையும், பரப்ரம்மமாக உபாஸிப்பவன் பரப்ரம்மத்தையுமடைகிறானென்றுகருத்து விளங்கும், இராமாநுஜபாஷ்யத்தில் ப்ரணவார்த்தமாகிய பராபரப்ரம்மங்களை ப்ரணவத்திற்சொல்லியபடி குணங்களுடன் உபாஸகனுபாஸிப்பானென்று ஸாக்ஷாதுபாஸநமாகவே கொள்ளப்பட்டது என்று பேதம் ஸ்புடமாகவேதோற்றும்.

௩. 𑌸 𑌯𑌦𑍍𑌯𑍇𑌕𑌮𑌾𑌤𑍍𑌰𑌮𑌭𑌿𑌧𑍍𑌯𑌾𑌯𑍀𑌤 𑌸 𑌤𑍇𑌨𑍈𑌵 𑌸𑌂𑌵𑍇𑌦𑌿𑌤𑌸𑍍𑌤𑍂𑌰𑍍𑌣𑌮𑍇𑌵 𑌜𑌗𑌤𑍍𑌯𑌾𑌮𑌭𑌿𑌸𑌂𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 𑌤𑌮𑍃𑌚𑍋 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌲𑍋𑌕𑌮𑍁𑌪𑌨𑌯𑌨𑍍𑌤𑍇 𑌸 𑌤𑌤𑍍𑌰 𑌤𑌪𑌸𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌰𑍍𑌯𑍇𑌣 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌯𑌾 𑌸𑌂𑌪𑌨𑍍𑌨𑍋 𑌮𑌹𑌿𑌮𑌾𑌨𑌮𑌨𑍁𑌭𑌵𑌤𑌿 ॥

3. స యద్యేకమాత్ర మభిధ్యాయీత స తేనైవ సంవేదితస్తూర్ణ మేవ జగత్యామభిసంపద్య తే తమృచో మనుష్యలోకముపనయంతే స తత్ర తపసా బ్రహ్మచర్యేణ శ్రద్ధయా సంపన్నో మహిమానమనుభవతి॥

(ப்-ம்) 𑌸𑌃-அந்தப்ரணவோபாஸகன், 𑌏𑌕𑌮𑌾𑌤𑍍𑌰𑌂-ஒருமாத்திரையுடையப்ரணவத்தை, 𑌅𑌭𑌿𑌧𑍍𑌯𑌾𑌯𑍀𑌤-யதி-தியாநம்செய்வானேயானால், 𑌸𑌃 - அப்படிப்பட்டவன், 𑌤𑍇𑌨𑍈𑌵-அவ்வுபாஸநத்தாலேயே, 𑌸𑌂𑌵𑍇𑌦𑌿𑌤𑌃 - ஸத்தைபெற்றவனாய், 𑌤𑍂𑌰𑍍𑌣𑌂-𑌏𑌵-அப்போதே, 𑌜𑌗𑌤𑍍𑌯𑌾𑌂 - பூமியில், 𑌅𑌭𑌿𑌸𑌂𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 - ச்ரேஷ்டனாகிறான். 𑌤𑌂-அந்தபுருஷனை, 𑌋𑌚𑌃 - இருக்குக்கள், 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌲𑍋𑌕𑌂-மநுஷ்யலோகத்தை, 𑌉𑌪𑌨𑌯𑌨𑍍𑌤𑍇-அடைவிப்பிக்கின்றன 𑌸𑌃-அப்படிமநுஷ்யலோகத்தையடைந்த புருஷன், 𑌤𑌪𑌸𑌾 தபஸ்ஸாலும், 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌰𑍍𑌯𑍇𑌣 - ஸ்த்ரீஸங்கமற்றிருக்கையாலும், 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌯𑌾-சிரத்தையாலும், 𑌸𑌂𑌪𑌨𑍍𑌨𑌃-விளங்கினவனாய், 𑌮𑌹𑌿𑌮𑌾𑌨𑌂- மகிமையை, 𑌅𑌨𑍁𑌭𑌵𑌤𑌿-அநுபவிக்கிறான்.

𑌭𑌾0-𑌸𑌾—இந்த ப்ரணவமானது அகரம்முதலிய மூன்றுமாத்திரையுள்ளது, இம்மூன்றுமாத்திரையும்சேர்ந்த பூர்ணப்ரணவத்தையுபாஸியாமல் அதின்கண்டமாகிய அகரத்தையே உபாஸித்தாலும், இந்தப்ரணவத்தின் மகிமையினாலே உத்தமகதியையடைகிறான். அதாவது-இந்தப்ரணவத்தினுடைய ஸ்வரூபங்களை எல்லாமுணராது கண்டப்ரணவத்தையுபாஸித்தாலும் அவ்வுபாஸநத்தாலே அவ்வளவிலே விவேகஜ்ஞாநம்பெற்றவனாய், மிகச்சீக்கிரத்தில் பூமியில் மநுஷ்யஜந்மத்தையடைகிறான். பூமியில்பலவகைப்பட்ட ஜந்மங்களிருக்கவும் இந்தப்ரணவத்தின் முதல்மாத்திரையாகிய அகரம் இருக்குவேதவடிவுடையதாதலால் அந்த இருக்குக்கள் இப்படியுபாஸித்த புருஷனுக்கு பூலோகத்தில் மநுஷ்யஜந்மத்தையே தருகின்றன. இப்படியந்தப்ரணவமாத்திரையின் மகிமையாலே மநுஷ்யஜந்மத்தையடைந்து அதிலும்ப்ராம்மண ஜந்மத்தைப்பெற்று அதிலும் சிறந்தவனாகி தவம்புரிந்து விரக்தனாகி

பக்திசிரத்தைகளுடன், மகிமையநுபவிக்கிறான். தீயவழியில் விருப்பமுடையனு காணுனதால் துர்க்கதியையடையான். பாபகர்மங்களைச்செய்யான். இந்தயோகத்தில் குறை நேரிட்டாலும் இவனுக்கு துன்பம்வாராது நல்லவிருப்பமுண்டாகி நல்நடக்கையிலிருப்பான்.

ரா-ஹா—இந்த ப்ரணவத்தையுபாஸிப்பவன், ஒருமாத்திரையுடைய ஹ்ரஸ்வமாகிய அபரப்ரம்மவாசகமான ப்ரணவத்தை உபாஸிப்பானுகில் அதாவது-அபரப்ரம்மத்தை போதிக்கிற ஹ்ரஸ்வமான ப்ரணவத்தாலே அபரப்ரம்மத்தையுபாஸித்தானுகிலென்கை. இப்படி ஒருமாத்திரையுடைய ப்ரணவத்தைக்கொண்டு அபரப்ரம்மத்தையுபாஸிப்பதினுல், ஸத்தைபெற்றவனுகி இப்புவியில் மிகச்சிறந்தவனுகிறான் அந்தபுருஷனை இருக்குமாத்திரைகள் மநுஷ்யலோகத்தை யடைவிப்பிக்கின்றன இப்படி மநுஷ்யலோகத்தை யடைவிப்பிக்கப்பட்ட அந்தபுருஷன் தவத்தாலும் அதாவது உணவுநீக்குதலாலும், ஸ்த்ரீஸங்கத்தை விடுவதினுலும். ஆஸ்திக்கிய புத்தியாலும் நடப்பானுயின், மோக்ஷஸாதநமாகிய ப்ரம்மோபாஸநத்தைச்செய்து மோக்ஷத்தைப்பெறுவான். ஒ, ஐ, ஔ, இவைகளுக்கு ஹ்ரஸ்வம்வியாகரணநூலில் சொல்லப்படாமையால் ஹ்ரஸ்வமாகிய ப்ரணவமில்லையேயெனி னுலகத்தில் ஹ்ரஸ்வப்ரணவமும் வழங்கிவருவதால் ப்ரணவத்துக்கு ஹ்ரஸ்வமுண்டென்று கருத்து.

ச. அத யதி த்விமாத்ரேண மநஸி ஸம்பத்யதே ஸோந்தரிக்ஷம் யஜுர்பிருந்நீயதே ஸஸோமலோகம் ஸஸோமலோகே விபூதிமநுபூய புநராவர்த்ததே ||

౪. అథయదిద్విమాత్రేణ మనసిసంపద్య తేసోన్తరిక్షంయజుర్భిరున్నీయతే । ససోమలోకంససోమలోకే విభూతిమనుభూయపునరావర్తతే॥

(ப ம்) அத-யதி த்விமாத்ரேண மநஸி ஸம்பத்யதே-ஸ:- இனிஇரண்டு மாத்திரையுடைய ப்ரணவத்தினுபாஸநம் நெஞ்சில் ஒருவனுக்குநிலைபெறுமாயினவனும், அந்தரிக்ஷம் ஸோமலோகம் - அந்த ரிக்ஷலோகத்தி லிருக்கிற சந்திரலோகம் முதலியலோகங்களை, யஜுர்பி: - உந்நீயதே-யஜுர்மந்திரங்களாலே யடைவிப்பிக்கப்படுகிறான் ஸ:- அப்படிப்பட்டவனுகிய, ஸ: - அந்தபுருஷன், ஸோமலோகே விபூதிம் அநுபூய புநராவர்த்ததே - சந்திரலோகாதிகளில் போகத்தையநுபவித்து மறுபிறவியையடைகிறான். பூலோகத்தைச்சேருகிறானென்கை.

மா-ஹா—இப்படியே ப்ரணவகண்டமாகிய உகாரத்தையுபாஸித்தவனும் யஜுர்வேதமந்திரங்களால் சந்திரலோகத்தையடைவிக்கப்பட்டு அங்குள்ள ஸுகங்களையநுபவித்து மீண்டும் பூலோகத்தில் ஜந்மத்தையடைகிறான்.

ரா-ஹா—இரண்டுமாத்திரையுள்ள அபரப்ரம்மவாசகமான ப்ரணவத்தாலே எவனுக்கு அபரப்ரம்மத்தியாநம் நெஞ்சில் நிலைபெறுகிறதோ அவனும் பரலோகஸுகங்களையெல்லாமனுபவித்து பூலோகத்தில் புநர்ஜந்மத்தையடைகிறான் ஸோமலோகமென்றது மேலுள்ளஎல்லாலோகங்களுக்கு முபலக்ஷணமென்னு ஈக்ஷதிகர்மாதிகரணத்தில் பகவத்பாஷ்யகாரரால் ஸமர்த்திக்கப்பட்டது. இப்படி இவனையஜுர்மந்திரங்கள் சந்திராதிலோகங்களை யடைவிக்கின்றன.

பதாந்வயார்த்தபேதங்கள்.

ப்ரணவவாசக சப்தங்கள் சங்கரபாஷ்யத்தில் மூன்றாம்வேற்றுமையனவென்றும், இராமாநுஜபாஷ்யத்தில் நாலாம்வேற்றுமையனவென்றுங் கொள்ளப்பட்டது.

௫. 𑌯𑌃 𑌪𑍁𑌨𑌰𑍇𑌤𑌂 𑌤𑍍𑌰𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑍇𑌣𑍋𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌤𑍇𑌨𑍈𑌵𑌾𑌕𑍍𑌷𑌰𑍇𑌣 𑌪𑌰𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌮𑌭𑌿𑌧𑍍𑌯𑌾𑌯𑍀𑌤 𑌸 𑌤𑍇𑌜𑌸𑌿 𑌸𑍂𑌰𑍍𑌯𑍇 𑌸𑌮𑍍𑌪𑌨𑍍𑌨𑌃 । 𑌯𑌥𑌾 𑌪𑌾𑌦𑍋𑌦𑌰𑌸𑍍𑌤𑍍𑌵𑌚𑌾 𑌵𑌿𑌨𑌿𑌰𑍍𑌮𑍁𑌚𑍍𑌯𑌤 𑌏𑌵𑌂 𑌹 𑌵𑍈 𑌸 𑌪𑌾𑌪𑍍𑌮𑌨𑌾 𑌵𑌿𑌨𑌿𑌰𑍍𑌮𑍁𑌕𑍍𑌤𑌃 𑌸 𑌸𑌾𑌮𑌭𑌿𑌰𑍁𑌨𑍍𑌨𑍀𑌯𑌤𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌲𑍋𑌕𑌂 𑌸 𑌏𑌤𑌸𑍍𑌮𑌾𑌜𑍍𑌜𑍀𑌵𑌘𑌨𑌾𑌤𑍍𑌪𑌰𑌾𑌤𑍍𑌪𑌰𑌂 𑌪𑍁𑌰𑌿𑌶𑌯𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌮𑍀𑌕𑍍𑌷𑌤𑍇 𑌤𑌦𑍇𑌤𑍌 𑌶𑍍𑌲𑍋𑌕𑍌 𑌭𑌵𑌤𑌃 ॥

౫. యః పునరేతం త్రిమాత్రేణోమిత్యేతేనైవాక్షరేణ పరం పురుషమభిధ్యాయీత స తేజసి సూర్యే సంపన్నః । యథా పాదోదర స్త్వచా వినిర్ముచ్యత ఏవం హ వై స పాప్మనా వినిర్ముక్తః స సామభిరున్నీయతే బ్రహ్మలోకం స ఏతస్మాజ్జీవఘనా త్పరాత్పరం పురిశయం పురుషమీక్షతే తదేతౌ శ్లోకౌ భవతః ॥

(ப-ம்) 𑌯𑌃 𑌪𑍁𑌨𑌃- எவனொருவன், 𑌏𑌤𑌂𑌨 𑌓𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌤𑍇𑌨 𑌤𑍍𑌰𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑍇𑌣 𑌅𑌕𑍍𑌷𑌰𑍇𑌣 - மூன்றுமாத்திரையுடைய ஓமென்கிற இந்தப்ரணவாக்ஷரத்தாலே, 𑌪𑌰𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌅𑌭𑌿𑌧𑍍𑌯𑌾𑌯𑍀𑌤 - பரமபுருஷனை யுபாஸிக்கிறானோ, 𑌸𑌃 𑌤𑍇𑌜𑌸𑌿 𑌸𑍂𑌰𑍍𑌯𑍇 𑌸𑌮𑍍𑌪𑌨𑍍𑌨𑌃 - அவன் ஸூர்யதேஜோமண்டலத்தில் சேர்ந்தவனாய், 𑌯𑌥𑌾 𑌪𑌾𑌦𑍋𑌦𑌰𑌃 𑌤𑍍𑌵𑌚𑌾 𑌵𑌿𑌨𑌿𑌰𑍍𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 𑌏𑌵𑌂 𑌹 𑌵𑍈 - பாம்புபழையதோலால் விடப்படுவதுபோல், 𑌪𑌾𑌪𑍍𑌮𑌨𑌾 𑌵𑌿𑌨𑌿𑌰𑍍𑌮𑍁𑌕𑍍𑌤𑌃-பாபங்களாலே விடப்பட்டவனாய், 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌲𑍋𑌕𑌂 𑌸𑌃 𑌸𑌾𑌮𑌭𑌿𑌃 𑌉𑌨𑍍𑌨𑍀𑌯𑌤𑍇-ஸாமமந்திரங்களால் ப்ரம்மலோகத்தை யடைவிக்கப்படுகிறான். 𑌸𑌃- அப்படி ப்ரம்மலோகத்தையடைந்தவன், 𑌏𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍-𑌜𑍀𑌵𑌘𑌨𑌾𑌤𑍍- 𑌪𑌰𑌾𑌤𑍍-𑌪𑌰𑌂-ஸம்ஸாரிஜீவர்களில் சிறந்தசுத்தாத்மஸ்வரூபத்திலும் பரிசுத்தனான, 𑌪𑍁𑌰𑌿𑌶𑌯𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌂-புரமென்று சொல்லப்படுகிற அந்ததேசத்திலந்தராத்மாவாயிருக்கிற பரமபுருஷனை, 𑌈𑌕𑍍𑌷𑌤𑍇 - காண்கிறான், 𑌤𑌦𑍇𑌤𑍌 𑌶𑍍𑌲𑍋𑌕𑍌 𑌭𑌵𑌤𑌃- இந்தப்ரணவத்யானத்தைப்பற்றி இரண்டுச்லோகங்கள்சொல்லப்பட்டிருக்கின்றன.

𑌸𑌾𑌰𑌂-ஸா—யவனொருவன் மூன்றுமாத்திரையோடு கூடிய பூர்ணப்ரணவத்தை ப்ரம்மமென்று பாஸிக்கிறானோ,[அதாவது-ஸூர்யாந்தரத்திலிருக்கின்ற புருஷனாக மூன்றுமாத்திரையுடையதாக அறியப்பட்டப்ரணவத்தை யுபாஸிக்கை. ப்ரணவத்தாலே பரமபுருஷனையுபாஸிக்கையன்று.ப்ரணவத்தை பராபரப்ரம்மங்களாக உபாஸிக்கும் ப்ரகாரமேதொடங்கப்பட்டது. இவைகளுக்கு அபேதமும் சொல்லியிருக்கிறது. இங்கனமன்றாயின் இரண்டாம்வேற்றுமைபகைக்கும். இவ்வாறு ப்ரதீகமெனிலும் மூன்றாம் வேற்றுமைப்பகையுண்டு. ஆயினும் தொடக்கத்திற்குப்பொருந்த மூன்றாம்வேற்றுமையை யிரண்டாம்வேற்றுமையாகக்கொள்க.அன்றியிலே ஒருகூட்டம்வாழ ஒருவனையழிப்பதுபோல் இந்தப்ரணவம் ப்ரதீகமென்பதற்குயுத்திகள்பலவாகையாலிவைகளுக்குச்சேர மூன்றாம்வேற்றுமை தன்னுண்டாலும் குற்றமில்லை.]

அவன், மூன்றும்மாத்திரைஸ்வரூபியாய் ஸூரியதேஜஸ்ஸில் சேருகிறான் மறுபிறவியடைவதில்லை. இரண்டுமாத்திரைப்ரணவத்தை யுபாஸித்து சந்திரலோகத்தையடைந்தவனுக்கேயதுளது. இப்படிஸூரியனைச்சேர்ந்தவன் அப்போதே ஸர்பமானது தோல்புறைநீங்கி விளங்குவதுபோல் எல்லாப்பாவங்களாலும் விடப்பட்டவனாய் விளங்கி த்ருதீயமாத்ராஸ்வரூபங்களான ஸாமமந்திரங்களாலே ஊர்த்வலோகமாகியஹிரண்யகர்பனுடைய ஸத்யலோகத்தை யடைவிக்கப்படுகிறான். பரமமான பரமாத்மாவாகிய பரமபுருஷனை அங்குள்ள ஜீவகநனாகிய ஹிரண்யகர்பனுக்கும் எல்லாதேஹங்களுக்கு முள்ளிருப்பவனாகக்காண்கிறான். இவ்விஷயத்திலிரண்டுமந்திரங்களிருக்கின்றன.

ரா-ஹா—மூன்றுமாத்திரையுள்ள ப்ரணவத்துக்கு வாச்யபூதனான பரமாத்மாவை நிரந்தரத்யாநம்பண்ணுகிற உபாஸகன் பரப்ரம்மலோகமாகிய பரமபதத்தை யடைந்து பரமாத்மாவைக்காண்கிறான். இங்குப்ரம்மலோகமென்பது ஸத்யலோகத்தையன்று. அங்குள்ளவன் பரவாஸுதேவமூர்த்தியாகிய பரமாத்மாவையநுபவிப்பதுசேராதன்றோ இங்குச்லோகங்களிருக்கின்றன.

பதாந்வயார்த்தபேதங்கள்.

இராமாநுஜபாஷ்யம் சுருங்கஉரைக்கப்பட்டது. மற்றவிஷயங்களில் சங்கரபாஷ்யத்தை யொக்கும். இங்கு ப்ரணவம்ப்ரதீகமென்றும், ப்ரம்மலோகம் ஸத்யலோகமென்றும் சங்கரபாஷ்யத்தில் சொல்லப்பட்ட கருத்துமறுக்கப்பட்டது. "𑌸𑌸𑌾𑌮𑌭𑌿𑌃" என்கிறவிதை ஒருபதமாகக்கொண்டு ஸாமகாநங்களோடு, அல்லது ப்ரியவசநங்களோடு என்றும் பெரியோருரைப்பர். "𑌸𑌃" "𑌸𑌾𑌮𑌭𑌿𑌃" என்றுபிரித்துப் பொருள்கூறில், "𑌸𑌵𑌾𑌜𑌨𑌾" என்றவிடத்தில் "𑌸𑌃" என்றும்பதமிருக்கையால் ஒருபதம்வீணாகும் என்றுஅவர்கருத்து. இரண்டுவாக்கியமாக்குகையும் தகாது. ஆயினும், முந்தியச்லோகங்களில், "𑌋𑌗𑍍𑌭𑌿𑌃" "𑌯𑌜𑍁𑌰𑍍𑌭𑌿𑌃" என்கிறபதங்களிருக்கையால், தோற்றுகிறகிரமத்திற்கு விரோதம்வருகிறது. ஆகையாலவ்விடங்களுக்குப்பொருந்த அவர்கருத்தை யூகித்துக்கொள்க.

௬. 𑌤𑌿𑌸𑍍𑌰𑍋 𑌮𑌾𑌤𑍍𑌰𑌾 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌮𑌤𑍍𑌯𑌃 𑌪𑍍𑌰𑌯𑍁𑌕𑍍𑌤𑌾 𑌅𑌨𑍍𑌯𑍋𑌨𑍍𑌯𑌸𑌕𑍍𑌤𑌾 𑌅𑌨𑌵𑌿𑌪𑍍𑌰𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌃 । 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌸𑍁 𑌬𑌾𑌹𑍍𑌯𑌾𑌭𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑌮𑌧𑍍𑌯𑌮𑌾𑌸𑍁 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍𑌪𑍍𑌰𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌸𑍁 𑌨 𑌕𑌮𑍍𑌪𑌤𑍇 𑌜𑍍𑌞𑌃 ॥

౬. తిస్రోమాత్రామృత్యుమత్యః ప్రయుక్తా అన్యోన్యసక్తా అనవిప్రయుక్తాః। క్రియాసు బాహ్యాభ్యంతర మధ్యమాసు సమ్యక్ప్రయుక్తాసు న కంపతే జ్ఞః॥

(ப-ம்) 𑌅𑌨𑍍𑌯𑍋𑌨𑍍𑌯𑌸𑌕𑍍𑌤𑌾𑌃 - ஒன்றோடொன்று சேர்ந்தவையாகவும், 𑌅𑌨𑌵𑌿𑌪𑍍𑌰𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌃-மிகவும் பிரிந்தவையாகவும், 𑌪𑍍𑌰𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌃- ப்ரயோகிக்கப்பட்ட, 𑌤𑌿𑌸𑍍𑌰𑌃-𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌃- இந்தப்ரணவாக்ஷரத்தின் மூன்றுமாத்திரைகளும், 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌮𑌤𑍍𑌯𑌃-அநர்த்தத்தைத்தருமவையாம். 𑌬𑌾𑌹𑍍𑌯𑌾𑌭𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑌮𑌧𑍍𑌯𑌮𑌾𑌸𑍁 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌸𑍁 - யஜ்ஞாதிகர்மங்களிலும், த்யாநங்களிலும, ஜபங்களிலும், 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍 𑌪𑍍𑌰𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌸𑍁-நன்றாகப்ரயோகிக்கப்படுமேயானால், 𑌜𑍍𑌞𑌃-இப்படியுபா

ஸிப்பவன், 𑌨𑌕𑌾𑌂𑌵𑌨𑌦𑍇𑌤𑌿-சலியான் உபாஸநத்தை நிறைவேற்றி யநிஷ்டங்களையடையாமல் பலத்தைப்பெறுகிறானென்கை.

ஸ௦-ஹா—மூன்றுமாத்திரைகளும் சேர்ந்தப்ரணவத்தை ப்ரம்மதிருட்டியோடுபாஸநம்செய்யாமல் தனித்தனியே அகரம், உகரம், மகரம், ஆகியமூன்றுமாத்திரைகளையுபாஸிப்பவர்களுக்கு ஸம்ஸாரபந்தம் நீங்காது. ப்ரம்மதிருட்டியோடு மூன்றுமாத்திரைகளையும்சேர்த்து, உபாஸநத்தில் ப்ரயோகிப்பவர் தோஷங்களையடையார். ஜாகரதசை, ஸ்வப்நதசை, ஸுஷுப்தி இவைகளைப்பற்றிய ஆத்மாவிநுபாஸநமாகிய யோகங்களில் வழியோடு ப்ரயோகித்து இவைகளைநன்குணர்ந்து, த்யாநிப்பவன் சலநத்தையடையான்.

ரா-ஹா—மநோவாக்காயங்களென்கிற கரணத்ரயத்தாலாகிய கர்மங்களிலும் மூன்றுமாத்திரைகளையும் மிகப்பிரித்தும் மிகச்சேர்த்துமன்றியே நன்கு ப்ரயோகிப்பவர்கள் அநிஷ்டங்கள்நீங்கி பயமற்றவர்களாகிறார்கள். இதனைத்தப்பாக ப்ரயோகிப்பார் துன்பத்தையடைவார்கள்.

௭. 𑌋𑌗𑍍𑌭𑌿𑌰𑍇𑌤𑌂𑌯𑌜𑍁𑌰𑍍𑌭𑌿𑌰𑌨𑍍𑌤𑌰𑌿𑌕𑍍𑌷𑌂𑌸𑌸𑌾𑌮𑌭𑌿𑌰𑍍𑌯𑌤𑍍𑌤𑌤𑍍𑌕𑌵𑌯𑍋𑌵𑍇𑌦𑌯𑌨𑍍𑌤𑍇। 𑌤𑌮𑍋𑌂𑌕𑌾𑌰𑍇𑌣𑍈𑌵𑌾𑌯𑌤𑌨𑍇𑌨𑌾𑌨𑍍𑌵𑍇𑌤𑌿𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍𑌯𑌤𑍍𑌤𑌚𑍍𑌛𑌾𑌨𑍍𑌤𑌮𑌜𑌰𑌮𑌮𑍃𑌤𑌮𑌭𑌯𑌂𑌪𑌰𑌂𑌚𑍇𑌤𑌿॥

౭. ఋగ్భిరేతంయజుర్భిరన్తరిక్షంససామభిర్యత్తత్కవయోవేదయన్తే। తమోంకారేణైవాయతనేనాన్వేతి విద్వాన్యత్తచ్ఛాన్తమజరమమృతమభయం పరంచేతి॥

(ப-ம்) 𑌸𑌃𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍- அந்த உபாஸகன், 𑌋𑌗𑍍𑌭𑌿𑌃-இருக்குக்களாலே, 𑌏𑌤𑌂-இந்தமநுஷ்யலோகத்தையும், 𑌯𑌜𑍁𑌰𑍍𑌭𑌿𑌃- யஜுர்வேதங்களாலே, 𑌅𑌨𑍍𑌤𑌰𑌿𑌕𑍍𑌷𑌂- அந்தரிக்ஷலோகத்தையும், 𑌆𑌯𑌤𑌨𑍇𑌨-மோக்ஷமார்க்கமாகிய, 𑌓𑌂𑌕𑌾𑌰𑍇𑌣𑍈𑌵 - ப்ரணவமாஹாத்ம்யத்தாலெயெ 𑌯𑌤𑍍𑌤𑌤𑍍 - யாதொன்றை, 𑌕𑌵𑌯𑌃-ஸூரிகள், 𑌵𑍇𑌦𑌯𑌨𑍍𑌤𑍇-காண்கின்றார்களோ, 𑌤𑌂-அப்படிப்பட்டப்ரம்மலோகத்தை, 𑌸𑌾𑌮𑌭𑌿𑌃 - ஸாமவேதமந்திரங்களாலேயும், 𑌅𑌨𑍍𑌵𑍇𑌤𑌿-அடைகிறான். இப்படியடைந்து, 𑌶𑌾𑌨𑍍𑌤𑌂 - சாந்தமானதும், 𑌅𑌜𑌰𑌂-ஜராமரணங்களில்லாததும், 𑌅𑌭𑌯𑌂-பயமில்லாததுமான, 𑌯𑌤𑍍𑌤𑌤𑍍-அந்தபிரம்மத்தையும், 𑌏𑌤𑌿-அடைகிறான்.

ஸ௦-ஹா—கீழ்ச்சொல்லிய எல்லாவற்றையும் சுருங்கவிந்த மந்திரமோதுகின்றது.—இருக்குக்களாலே பூலோகத்தையும், யஜுஸ்ஸுக்களாலே, சந்திரலோகத்தையும் ஸாமங்களாலே, யோகிகள்காண்கிற ப்ரம்மலோகத்தையுமடைந்து நிர்விசேஷமாய், தோஷங்களற்று சுத்தமாயிருக்கிற ப்ரம்மத்தையுமோங்காரமாகிய ஆயதநத்தாலேயடைகிறான்.

ரா-ஹா—நித்யஸூரிகளால் காணப்படுகிற பரமபதத்தையடைந்து பரப்ரம்மத்தையநுபவிப்பதும் ஐஹிகாமுஷ்மிகஸுகங்களையும் ப்ரணவத்தாலே பெறுகிறான் அந்தந்தலோகங்களை இருக்குமுதலியமந்திரங்களடைவிப்பிக்கின்றன.

அஞ்சாவதுப்ரச்நம் முற்றிற்று.

𑌅𑌥 𑌷𑌷𑍍𑌠𑌪𑍍𑌰𑌶𑍍𑌨𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌨𑌂

௧. 𑌅𑌥 𑌹𑍈𑌨𑌂 𑌸𑍁𑌕𑍇𑌶𑌾 𑌭𑌾𑌰𑌦𑍍𑌵𑌾𑌜𑌃 𑌪𑌪𑍍𑌰𑌚𑍍𑌛 𑌭𑌗𑌵𑌨𑍍 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌨𑌾𑌭𑌃 𑌕𑍌𑌸𑌲𑍍𑌯𑍋 𑌰𑌾𑌜𑌪𑍁𑌤𑍍𑌰𑍋 𑌮𑌾𑌮𑍁𑌪𑍇𑌤𑍍𑌯𑍈𑌤𑌂 𑌪𑍍𑌰𑌶𑍍𑌨𑌮𑌪𑍃𑌚𑍍𑌛𑌤। 𑌷𑍋𑌡𑌶𑌕𑌲𑌂 𑌭𑌾𑌰𑌦𑍍𑌵𑌾𑌜 𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌵𑍇𑌤𑍍𑌥 𑌤𑌮𑌹𑌂 𑌕𑍁𑌮𑌾𑌰𑌮𑌬𑍍𑌰𑍁𑌵𑌂 𑌨𑌾𑌹𑌮𑌿𑌮𑌂 𑌵𑍇𑌦 𑌯𑌦𑍍𑌯𑌹𑌮𑌿𑌮𑌮𑌵𑍇𑌦𑌿𑌷𑌂 𑌕𑌥𑌂 𑌤𑍇 𑌨𑌾𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌮𑌿𑌤𑌿 𑌸𑌮𑍂𑌲𑍋 𑌵𑌾 𑌏𑌷 𑌪𑌰𑌿𑌶𑍁𑌷𑍍𑌯𑌤𑌿 𑌯𑍋𑌽𑌨𑍃𑌤𑌮𑌭𑌿𑌵𑌦𑌤𑌿 𑌤𑌸𑍍𑌮𑌾𑌨𑍍𑌨𑌾𑌰𑍍𑌹𑌾𑌮𑍍𑌯𑌨𑍃𑌤𑌂 𑌵𑌕𑍍𑌤𑍁𑌂 𑌸 𑌤𑍂𑌷𑍍𑌣𑍀𑌂 𑌰𑌥𑌮𑌾𑌰𑍁𑌹𑍍𑌯 𑌪𑍍𑌰𑌵𑌵𑍍𑌰𑌾𑌜 । 𑌤𑌂 𑌤𑍍𑌵𑌾 𑌪𑍃𑌚𑍍𑌛𑌾𑌮𑌿 𑌕𑍍𑌵𑌾𑌸𑍌 𑌪𑍁𑌰𑍁𑌷 𑌇𑌤𑌿॥

౧. అథ హైనం సుకేశా భారద్వాజః పప్రచ్ఛ భగవన్ హిరణ్యనాభః కౌసల్యో రాజపుత్రో మాముపేత్యైతం ప్రశ్నమపృచ్ఛత షోడశకలం భారద్వాజ పురుషం వేత్థ తమహం కుమారమబ్రువం నాహమిమం వేద యద్యహమిమమవేదిషం కథం తే నావక్ష్యమితి సమూలో వా ఏష పరిశుష్యతి యోఽనృతమభివదతి తస్మాన్నార్హామ్యనృతం వక్తుం స తూష్ణీం రథమారుహ్య ప్రవవ్రాజ । తం త్వా పృచ్ఛామి క్వాసౌ పురుష ఇతి॥

(ப்-ம்) 𑌭𑌗𑌵𑌨𑍍-ஓ பூஜ்யரே, 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌨𑌾𑌭𑌃-ஹிரண்யநாபனென்கிற, 𑌕𑍌𑌸𑌲𑍍𑌯𑌃-கோஸலதேசாதிபதியாகிய, 𑌰𑌾𑌜𑌪𑍁𑌤𑍍𑌰𑌃-இராஜகுமாரன், 𑌮𑌾𑌮𑍍-என்னை, 𑌉𑌪𑍇𑌤𑍍𑌯-கிட்டி, 𑌭𑌾𑌰𑌦𑍍𑌵𑌾𑌜-பாரத்வாஜரே, 𑌷𑍋𑌡𑌶𑌕𑌲𑌮𑍍-𑌪𑍁𑌰𑍁𑌷𑌮𑍍 - பதினாறுகலைகளையுடைய புருஷனை, 𑌵𑍇𑌤𑍍𑌥- அறிவீர் ஆகையாலந்தபுருஷனை எனக்குச் சொல்லவேணுமென்று, 𑌏𑌤𑌮𑍍 𑌪𑍍𑌰𑌶𑍍𑌨𑌮𑍍-இந்தப்ரச்நத்தை, 𑌅𑌪𑍃𑌚𑍍𑌛𑌤-கேட்டான். 𑌨𑌾𑌹𑌮𑍍 𑌇𑌮𑌮𑍍 𑌵𑍇𑌦- இந்தபுருஷஸ்வரூபத்தை நானறியேன், 𑌯𑌦𑌿 𑌅𑌹𑌮𑍍 𑌇𑌮𑌮𑍍 𑌅𑌵𑍇𑌦𑌿𑌷𑌮𑍍-நானிந்தபுருஷனையறிவேனேயானால், 𑌕𑌥𑌮𑍍, 𑌤𑍇 𑌨𑌾𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌮𑍍 - உனக்கெப்படிசொல்லாமல்போவேன். 𑌯𑌃 𑌅𑌨𑍃𑌤𑌮𑍍 𑌅𑌭𑌿𑌵𑌦𑌤𑌿 - எவன்பொய்சொல்லுகிறானோ, 𑌏𑌷𑌃-இவன், 𑌸𑌮𑍂𑌲𑌃 𑌪𑌰𑌿𑌶𑍁𑌷𑍍𑌯𑌤𑌿 - அடியோடுநாசத்தையடைகிறான். 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌨𑌾𑌰𑍍𑌹𑌾𑌮𑌿 𑌅𑌨𑍃𑌤𑌮𑍍 𑌵𑌕𑍍𑌤𑍁𑌮𑍍 - ஆகையால் பொய்சொல்லமாட்டேன், 𑌇𑌤𑌿 𑌅𑌹𑌮𑍍 𑌕𑍁𑌮𑌾𑌰𑌮𑍍 𑌅𑌬𑍍𑌰𑍁𑌵𑌮𑍍-என்று நானப்போதுராஜகுமாரனைநோக்கிச் சொன்னேன். 𑌸𑌃 𑌤𑍂𑌷𑍍𑌣𑍀𑌮𑍍 𑌰𑌥𑌮𑍍 𑌆𑌰𑍁𑌹𑍍𑌯 𑌪𑍍𑌰𑌵𑌵𑍍𑌰𑌾𑌜 - பின்பு அந்தராஜகுமாரன் ஒன்றும் சொல்லாமல்தேரிலேரிக்கொண்டு புறப்பட்டுப்போனான். 𑌤𑌮𑍍 𑌤𑍍𑌵𑌾 𑌪𑍃𑌚𑍍𑌛𑌾𑌮𑌿 𑌕𑍍𑌵 𑌅𑌸𑍌 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌇𑌤𑌿 - அந்தபுருஷனெங்கிருக்கின்றானென்று அந்தப்ரஶ்நத்தை, உம்மைக்கேட்கிறேன் என்று, 𑌅𑌥 𑌹 𑌏𑌨𑌮𑍍 𑌸𑍁𑌕𑍇𑌶𑌾 𑌭𑌾𑌰𑌦𑍍𑌵𑌾𑌜𑌃 𑌪𑌪𑍍𑌰𑌚𑍍𑌛-பாரத்வாஜரின்குமாரராகிய ஸுகேசாஎன்பவர் இந்தபிப்பலாதனைநோக்கிபின்பு ப்ரச்நம்பண்ணினார்.

ஸம்-ஹா—கார்ய காரணரூபமாகிய வுலகெல்லாம் விஞ்ஞாநஸ்வரூபியான ஆத்மாவோடு அக்ஷரபரப்ரம்மத்தில் ஸுஷுப்தி காலத்தில் ப்ரதிஷ்டையையடைகிறதென்று சொல்லப்பட்டது. இந்த அர்த்தஸாமார்த்யத்தாலே ப்ரளயத்திலுமந்தவ

க்ஷரபரப்ரம்மத்திலேயேலயம்.பிறப்பு மிவ்வுலகுக்கு அந்தஅக்ஷரபரப்ரம்மத்தினின் றுமென்று ஸித்திக்கிறது.காரணமாகாத பொருளில் லயம்கூடாதன்றோ ஆத்மாவினிடத்தில் ப்ராணன் பிறக்கிறதென்று சொல்லப்பட்டது. இவ்வுலகத்துக்குக் காரணமாகிய பொருளை யறிவதால் மோக்ஷமுண்டாகுமென்று எல்லாஉபநிடதங்களுக்கும்கருத்து இதையறிந்தவன் எல்லாவற்றையு மறிந்தவனாகிறான் எல்லாமாகிறானென்று சொல்லப்பட்டது. மேலும்சொல்லும். அந்தஅக்ஷரபரப்ரமத்தையறிந்து கொள்வதுமுக்கியம் ஆகையால் புருஷனென்கிறதை எங்கறியவேணுமேன்றறிந்துகொள்வதற்கு இந்தப்ரச்நம் துடங்கப்படுகிறது. இங்குராஜகுமாரன்கதை சொல்வது, இந்தப்ரம்மஞ்ஞாநம் லபிப்பது மிகவருத்தமென்றுகாட்டி முமுக்ஷுக்களுக்கு இதில்விருப்பமுண்டாம்படி செய்வதற்கும் யத்நப்படும்படிசெய்வதற்கும். க்ஷத்திரியனான ஹிரண்யநாபனென்பவன் என்னையடைந்து பாரத்வாஜரேபதினாறுகலைகளையுடைய புருஷனை நீரறிவீராகையால் எனக்குச்சொல்லவேணுமென்று கேட்டான். அப்படிகேட்டஅந்தராஜகுமாரனைநோக்கி நான்சொன்னேன் அப்பா எனக்கு இந்தபுருஷஸ்வரூபம் தெரியாது. நீகேட்டவிஷயத்தை நானறியாமலுனக்கு நானெப்படி சொல்லுவேன் என்றுசொன்னேன். இப்படிசொல்லியும் எனக்குத்தெரியாதென்கிற விஷயத்தில் ஸந்தேகித்தானப்போது எனக்குத்தெரிந்தாலுனக்குச் சொல்லமாட்டேனா இவ்வளவுசிஷ்யலக்ஷணம் நிறைந்த உனக்குச்சொல்லமாட்டேனா என்று சொன்னேன். அப்போதும் அவன் நம்பவில்லை பின்பு நான், பொய்சொல்லுவோனடியோடே யழிந்துபோவானாகையால் உனக்குநீகேட்டபுருஷனை நானறியாதிருக்க பொய்யாகச் சொல்லமாட்டேன் நானறிந்திருக்க அறியேனென்று பொய்சொல்லமாட்டேன். என்று சொன்னேன். இப்படி அவனுக்கு விச்வாஸத்தையுண்டாக்கினேன். பின்பவன் தேரிலேறிக்கொண்டு பேசாமல்புறப்பட்டுப்போனான். ஆகையாலந்தபுருஷனை நானறியும்படி சொல்லவேணும் எனக்குநெஞ்சத்தில் சல்யம்போலிருக்கிற இந்தசந்தேகத்தை நீக்கவேணுமென்று பிப்பலாதரை ஸுகேசாஎன்பவர் ப்ரச்னம் பண்ணினார். இந்தசுலோகத்தால் யோக்யனானசிஷ்யனுக்கு அர்த்தங்களை யுபதேசிக்கவேணுமென்றும் பொய்சொல்ல லாகாதென்றும் கூறப்பட்டது.

ரா-ஸா—இந்தபுருஷன் ஜீவனாபரமாத்மாவாஎன்று ஸந்தேகத்தை நீக்குவதற்கு இந்தப்ரச்நம் கொடுக்கப்பட்டது. இரதத்திலே போனானென்று சொல்லுகையாலந்தராஜாப்ரபுவென்று ஸூசிப்பிக்கப்படுகிறது.

பதாந்வயார்த்தபேதங்கள்.

இங்குகாட்டிய விஷயங்களையொழிந்த விஷயங்களில் சங்கரராமானுஜ பாஷ்யங்களொக்கும். இராமானுஜபாஷ்யத்தில் இரதத்திலேபோனானென்கையால் அவ்விராஜகுமாரன் ப்ரபுவென்று ஸூசிப்பிக்கப்படுகிறது என்றதற்கு விவேகிகள் ஆத்மஜ்ஞாநத்தையே வேண்டுவார்கள் ஐச்வரியத்தைமதியாரென்பது தோன்ற ப்ரபுவாகிய அரசனும் ஆத்மஜ்ஞாநத்தை விரும்பியபடியைக்காட்டி அதின் சிறப்புகூறப்பட்டது என்றுகருத்து.

௨. தஸ்மை ஸ ஹோவாச இஹைவாந்தஶ்ஶரீரே ஸோம்ய ஸ புருஷோ யஸ்மிந்நேதா: ஷோடஶகலா: ப்ரபவந்தீதி॥

౨. తస్మైసహోవాచ । ఇహైవాంతశ్శరీరేసోమ్యసపురుషోయస్మిన్నేతాఃషోడశకలాః ప్రభవన్తీతి॥

(ப்-ம்.) யஸ்மிந்நேதா: ஷோடஶகலா: ப்ரபவந்தி - யவனொருவனிடத்தில் மேலேசொல்லப்போகிற பதினாறுகலைகளு முண்டாகின்றனவோ; ஸ: புருஷ:-அந்தபுருஷன், இஹைவாந்த:ஶரீரே - இந்த சரீரத்தினுள்ளேயே வஸிக்கிறான். இதி தஸ்மை ஸ ஹோவாச - என்றுபிப்பலாதர் அந்தபாரத்வாஜருக்குச் சொன்னார்.

ஶம்-ஸா—ஹ்ருதயபுண்டரீகத்தினுகாயமத்யத்தில் அவித்யையினாலே பதினாறு கலைகளாகிற உபாதியோடுகூடியவன்போல் தோற்றுகிற கலைகளில்லாத ஆத்மா அறியத்தக்கவன் மற்றவிடங்களிலன்று.

ரா-ஸா—சரீரத்தில் ஏகதேசத்திலிருப்பவனென்கையால் ஜீவாத்மாவென்றுபெறப்படுகிறது. பரமாத்மாவே மேலேசொல்லப்போகிற பதினாறுகலைகளுக்கு மிருப்பிடமாகியவைகளை ஸ்ருஷ்டிப்பவனானாலும் இந்தபதினாறுகலைகளையு மநுபவிக்கிறவன்ஜீவனே யாகையால் ஜீவாத்மா ஷோடசகலனென்று சொல்லப்படுகிறான்.

௩. ஸ ஈக்ஷாஞ்சக்ரே, கஸ்மிந்நஹமுத்க்ராந்த உத்க்ராந்தோ பவிஷ்யாமி கஸ்மிந்வா ப்ரதிஷ்டிதே ப்ரதிஷ்டாஸ்யாமீதி॥

3. స ఈక్షాంచక్రే । కస్మిన్నహముత్క్రాన్త ఉత్క్రాన్తో భవిష్యామి కస్మిన్వా ప్రతిష్ఠితే ప్రతిష్ఠాస్యామీతి॥

(ப்-ம்.) ஸ:-அந்த, ஆத்மா, அஹம்-நான், கஸ்மிந்உத்க்ராந்தே உத்க்ராந்தோ பவிஷ்யாமி-எதுவெளியேறும்போது வெளியேறுவேன். கஸ்மிந் வா ப்ரதிஷ்டிதே வ ப்ரதிஷ்டாஸ்யாமி - எதுநிலைபெறும்போது நிலைபெறுவேன். இதி ஈக்ஷாஞ்சக்ரே-என்றுபார்த்தான்.

ஶம்-ஸா—இங்கு உபாதியினால் ஆரோபிக்கப்பட்டகலைகளைநீக்கி வித்யையினால் கேவலனானபுருஷனைக்காட்டநினைத்து, பிராணாதிகலைகள் இந்தபுருஷனிடத்தில்பிறந்தனவென்று சொல்லுகிறது. ஒருவிசேஷமுமில்லாத சுத்தாத்விதீயப்ரம்மத்தைப்பேசுவது கூடாதாகையால் அவித்யையினாலே கற்பிக்கப்பட்ட கலைகளினுடையபிறப்பிருப்பிறப்புமுதலியவை ஏற்றப்படுகின்றன. இப்படி ஏற்றினாலன்றி ஒருபிரதிபாத்யப்பிரதிபாதகமும் நடவாதன்றோ. இவ்வாறு ஞாநரூபமான ப்ரம்மத்தில் எல்லாம் கற்பிக்கப்பட்டதென்பது அறிவுடையார்க்கு நன்றாய்விளங்கும் ஒவ்வொருபொருளுமறிவின்றி யறியப்படுவதில்லையன்றோ ஒவ்வொன்றினுடையவும் பிறப்பிருப்பிறப்புமுதலியவை யெல்லாமறிவாலேயே தோற்றுகிறனவன்றோ; இதுகொண்டே சிலர் நெருப்போடுசேருகையால் நெய்யுருகுவதுபோல் வாஸனைஎன்கிற தோஷத்தின் ஸம்பத்தாலே நானென்றுதோற்றுகிற ஆலயவிஞ்ஞானமே விஷயரூபமாகபரிணமிக்கிறதென்றும் க்ஷணந்தோறும் உண்டாகியழிகிறதென்றும் சொல்லுகிறார்கள். இதுவும் ஜ்ஞாநத்துக்கும் விஷயத்துக்குமுண்டான ஸம்பத்தாலேபிறந்த பிரமம் இதுகொண்டே சிலர்ஸுஷுப்தியில் ஸர்வசூன்யவாதம்பண்ணினார்கள். இதுவும், ஜ்ஞாநமில்லாதபோது விஷயம் தோற்றாமையாலும் விஷயம்தோற்றாதபோது ஜ்ஞாநம்தோற்றாமையாலும், விஷயம்தோற்றாதகாலமாகிய ஸுஷுப்தியில் ஜ்ஞாநமுமில்லை என்கிற யுக்திமூலமாகப்பிறந்த ப்ரமம். ஆகஇவைஎல்லாவற்றாலும், ஜ்ஞாநத்தைவிட்டு விஷயம்தோற்றுவதில்லை என்பது விளங்கும். இனி, இக்கலைகள்முதலியவையெல்லாம் ஜ்ஞாநத்தில் கல்பிக்கப்பட்டதென்று சொல்லுவது கூடாது; ஆத்மாவுக்குகலை

களின் ஸம்பந்தத்தாலேபிறக்கிற ஜ்ஞாநம் கலைகளின் ப்ரமத்திற்கதிஷ்டாநமாகாதன்றோ; கடம்முதலியவிஷயங்களை கோசரிக்கிறஜ்ஞாநம் நித்யனையறிபவனாகிய ஜீவாத்மாவுக்கு கலைகளின் ஸம்பந்தத்தாலே பிறந்தழிந்துகொண்டிருக்குமென்று தார்க்கிகர்கள் சொல்லுகிறார்களன்றோ. லோகாயதிகரும்பூதங்களின் தர்மமே ஜ்ஞாநமென்று சொல்லுகிறார்களன்றோ; ஆனதாலிது கூடும்வழியாதெனில், "ஸத்யம்ஜ்ஞாநமநந்தம்ப்ரஹ்ம" "ப்ரஜ்ஞாநம்ப்ரஹ்ம" "விஜ்ஞாநமாநந்தம்" இவைமுதலிய சுருதிகளில் ஆவதழிவதில்லாத ஜ்ஞாநமே யாத்மாவென்றும், அந்தஜ்ஞாநமே நாமரூபமுதலிய உபாதிகளினால் தோற்றுகிறதென்னும் போதிக்கையாலே இந்தநையாயிகர்முதலானாருடையபக்ஷம் சுருதிக்குச் சேராமையால் அந்தபக்ஷங்களைக்கொண்டு கலைகளாலே பிறக்கிற ஜ்ஞாநம் கலைகளின்ப்ரமத்துக்கு எவ்வாறு அதிஷ்டாநமாமென்று சங்கிக்கைதகாதென்க. ஜ்ஞாநமுண்டானபோது விஷயங்களில்லாமலு மிருக்கின்றமையாலும், விஷயங்கள்தோற்றும்போது ஜ்ஞாநமில்லாதிருப்பதில்லாமையாலும், விஷயத்தில் ஜ்ஞாநம் வேறென்றும் நித்யமென்றும் விளங்குகிறதன்றோ. ஒருபொருளையறியும்போது மற்றொருபொருளிராமை கூடுமாகையாலும், எவ்விஷயத்தையறியும்போதும் ஜ்ஞாநமிருக்கையாலு மிதுவிளங்கும். ஒருபொருளையறியும்போது மற்றொருபொருளின் ஜ்ஞாநமில்லையாயினும் ஜ்ஞாநஸ்வரூபமெப்போதுமுண்டன்றோ. எப்பொருளெவ்வாறறியப்படுமோ அவ்வாறறியப்படுதலாலே அப்பொருளுள்ளகாலத்திலறிவு பொருளைப்பிரியாதென்பது விளங்கும். இதனாலறியப்படாத பொருளில்லையென்பது பெறப்பட்டது. இனி பிறந்தவுடனே யழிந்துபோன பொருளும் மேருமலைமுதலிய மனிதர்நடமாடாத மலைகளின் குகைகளிலிருக்கும்பொருளு மொருவராலு மறியப்படாதாகையா லறியப்படாதபொருளில்லை என்பதெங்கனமெனில்; அறியப்படாதபொருளை யுண்டென்றுரைப்பது கூடாமையால் அறியப்படாத பொருளிஃதென்று காட்டுவானார். ஆனதால் பொருளென்று பெயர்பெற்றறியப்படாதிருப்பதொன்றுமில்லை. இப்படியறியப்படாத பொருளுண்டென்றுரைப்பவன் ரூபத்தைக்கண்டான் கண்ணில்லையென்றும் சொல்லுவான். ஆகையாலறிவின்றிப் பொருளின்லை. பொருளின்றியறிவுண்டு; ஒருபொருளையறியும்போது மற்றொருபொருளில்லாமை கூடுமன்றோ. ஒருபொருளில்லாவிடினும் மற்றொருபொருளிலேயறிவிருக்குமன்றோ. அறிவில்லாதபோதறியப்படும் பொருளென்பது ஒருவனுக்குண்டோ. இனிஸுஷுப்தியென்கிற பேருறக்கத்திலொரு பொருளையுமறியாமையாலே யறிவென்பதுமில்லையே எனில்; விஷயங்களை தீபம்முதலியது தோற்றுவிப்பதுபோல அறிவும்தோற்றுவிப்பதாகலின், தோற்றுவிக்கப்படும் பொருளில்லாமையாலே தோற்றுவிக்கிறதீபமில்லை என்பதுபோல அறியப்படும்பொருளில்லாமையாலே அறிவில்லை என்பது பொருந்தாது. இருளில்வஸ்துக்கள் புலப்படாமையால் கண்ணில்லை என்பதுசேருமோ; ஸர்வசூன்யவாதியல்லாதவன் இப்படிசொல்லானன்றோ; சூன்யவாதிக்குதோற்றுவிக்கப்படும் பொருளில்லாதபோதும் தோற்றுவிக்கிற தீபம்முதலியவையிருப்பதுபோலவென்பது, தோற்றுவிக்கப்படும் விஷயங்களில்லாதபோதும் தோற்றுவிக்கிற ஜ்ஞாநமிருக்குமென்பதில், தீபமுதலிய திருஷ்டாந்தப்பொருள் சூன்யமாகையால் திருஷ்டாந்தமாகாமையின் தோற்றுவிக்கப்படும் பொருளில்லாத போது தோற்றுவிக்கிறவனில்லை என்று சூந்யவாதிசொல்லுவானெனில்; அறியப்படும்பொருளில்லாமையாலே யறிவில்லையென்கிறவாதி அறியப்படும்பொருளில்லாமையையறிந்தன்றோ சொல்லவேண்டும். அறிந்தானாகிலறிவில்லை என்பதுகூடுமோ; அறியானாகிலெப்படி இவ்வார்த்தை சொல்லுகிறான். ஆகையாலப்போதும் ஜ்ஞாநமில்லையென்று சொல்லவமையாது. இனி, விஷயங்களுக்கும் ஜ்ஞாநத்திற்கும் வேறுபாடின்மையா

ன்விஷயங்களில்லாதபோது ஜ்ஞாநமுமில்லையெனில்; அபாவத்தை யறியப்படும்பொருளென்று சூன்யவாதிகொள்ளுதலால் அறியப்படும்பொருளாகிய இவ்வபாவத்திற்கும் ஜ்ஞாநத்திற்கும் பேதமில்லாமையால் அபாவம் நித்யமென்று சூந்யவாதியே சொல்லுகையால் அதனில் வேறாகாதஜ்ஞாநமும் நித்யமாகியெப்போதும் தோற்றுமென்று எங்கள் மதநிலைபெற்றது. ஜ்ஞாநமபாவமாகையால் அபாவமாய் அஸத்தாமல்லது ஸத்தாய் நித்யமாகாதென்பது கட்டுவார்த்தை. உண்மையில் ஜ்ஞாநம ஸத்தாய நித்யமாகாது. அநித்யமென்று மஸத்தென்றும் பேரிட்டதா லெங்களுக்கொருகுறையில்லை. இனி அபாவ மறியப்படும் பொருளானாலு மறிவல்லவெனில், அறியப்படும் பொருளு மறிவு மொன்றாகையா லறியப்படும் பொருளில்லாதபோ தறிவில்லையென்பதெங்கனம். இனிவிஷயங்கள் ஜ்ஞாநத்தில்வேறாயவையாகின்றன. ஜ்ஞாநம்விஷயங்களில் வேறாயதன்று. ஆகையால் கீழ்ச்சொல்லியதெல்லாம் பொருந்துமெனில் இதுவும்கட்டுவார்த்தை அக்நிநெருப்பில்வேறாயதன்று நெருப்பு அக்நியில் வேறுபட்டதென்பதுபோல நகைப்பிற்கிடம். கீழ்நாம் சொன்னபடி நம்மிஷ்டம் நிறைவேறுவதற்கிப்போது மொருகுறையில்லை. இனி இவ்விரண்டும் வேறேயெனில், அப்போது முன்சொல்லியபடி விஷயங்களில்லாமையாலே ஜ்ஞாநமில்லை என்பதற்கு வழியில்லை. இனிவிஷயங் காணப்படாதபோது ஜ்ஞாநமும் காணப்படாமையால் ஸுஷுப்தியில் ஜ்ஞாநமில்லை எனில், ஆலயஜ்ஞாநமென்பது ஸுஷுப்தியிலுமுண்டென்று சூந்யவாதியும் சொல்லுகிறானன்றே; ஆனதால் ஜ்ஞாநம் ஸுஷுப்தியிலில்லை என்பது பொருந்தாது. எங்கள்மதத்தில், ஜ்ஞாநம் தன்னைத்தானேயறிதலாலுண்டென்றாலும், உங்கள் மதத்தில் ஜ்ஞாநம் தன்னைத்தானறியாமையால் ஸுஷுப்தியிலுண்டென்பது ஸாக்ஷியற்றவார்த்தையென்று சூந்யவாதி சொல்லுவானாகில்; அறியப்படும் பொருளறிவாகாதென்று அபாவதிருஷ்டாந்தத்தாலே பெறப்படுதலால் அறிவுமறியப்படுமோயி னறிவின்றியே போமன்றே. மரித்தவனை ஜீவிக்கச்செய்வதுபோல அனேகசூந்யவாதிகளாலுமிந்த நீதியையழிக்கமுடியாது. இதுவுமன்றிஜ்ஞாநமறியப்பட்டதாகி லிந்தஜ்ஞாநத்தையறிகிற ஜ்ஞாநத்தைத் தேடவேண்டுகையால் அநவஸ்தைதோஷம் வரும் எங்கள்மதத்தில் ஜ்ஞாநத்தையறியப்படுவதாகச் சொல்லாமையால், தோஷமில்லை ஜ்ஞாநமறியப்படாதாகில் ப்ரம்மம் ஸர்வஜ்ஞமென்பது கூடுமோஎனில்; அறியப்படும் பொருளெல்லாவற்றையு மறிவதே ஸர்வஜ்ஞனமைக்கு வேண்டுவது. அறியப்படாதபொருளை யறிவதன்று. அப்படியன்றாகி லறியப்படாதமுயல் கொம்புமுதலியவற்றை யறியாமையால் எல்லாமதத்திலு பிரம்மம் ஸர்வஜ்ஞமாகாது. அதுவுமன்றி எங்கள் மதத்தில் ஸர்வஜ்ஞனுவது மாயையினாலாகையாலே பொருந்தாதாயினும் குற்றமன்று. ஜ்ஞாநமொன்றையே யுண்டென்கையாலே அநவஸ்தைஎன்கிற தோஷத்திற் கிடமில்லை. எக்காலத்திலு மெத்தேசத்திலும் எல்லாப்பொருளாயும் தோற்றுகிற ஜ்ஞாநமொன்றே நீரில்தோற்றுகிற சூர்யபிம்பமுதலியவை பலவாகத்தோற்றுவதுபோல பலவாக தோற்றுகின்றது. இப்படிஜ்ஞாநமென்பதொன்றாய் நித்யமாய் ஸத்யமானதாகலின் இதுபிரமாகிட்டாத மாகலாமென்று கலைகளின்றோபங்களுக்கதிட்டாநமாக ஆத்மஸ்வரூபமறியும்படி இங்கு சொல்லப்படுகிறது. இனி அளவுபட்டபொருளநித்யமாகலின் இந்தசரீரத்திலுள் அளவுபட்டகப்பட்டுக்கிடக்கிற ஜ்ஞாநம் நித்யமாவதுகூடாது; அப்படியாமாயின், அளவுபட்டகலசமுதலியவையும் நித்யமாகவேண்டுமேயெனில், இந்த ப்ராணமுதலிய கலைகளுக்குக்காரணமாக இந்தஜ்ஞாநம் சொல்லப்படுகையால், ஜ்ஞாநம் நித்யமேயாம். இந்த ஜ்ஞாநத்தின்காரியமாய் கலைகளினால் பிறந்தசரீரம், தன்னுடைய காரணத்துக்குங்காரணமாகிய ஜ்ஞாநத்தைதன்னுள்ளே யாச்குவதுகூடாதன்றே; இனிபீஜத்தால்பிறந்த விருக்ஷத்தாலுண்டான பலமானது தனக்குக்காரணமாய விருக்ஷத்திற்கும் காரண

மான·பீஜத்தை தன்னுள்ளேயாக்கிக்கொள்வதுபோல் இங்கும் ஜ்ஞாநத்தை இச்சரீரமுள்ளே சேர்த்துக்கொள்ளலாமெனில்; இதுவீண்வாதம். அங்கு பலத்திற்குக்காரணமாய் விருக்ஷத்தையுண்டாக்குகிற பீஜம் வேறு; அந்தபலத்தினுள்ளிருக்கும் பீஜம்வேறு; இங்கு ஜ்ஞாநமொன்றேயன்றோ. இதுவுமன்றி திருட்டாந்தம் ஸாவயவமாகின்றது. இதுநிரவயவமாகின்றது. இங்குபலயுக்திகளு மிவ்விஷயத்தைமறுக்கும். இனி, யுக்தியில்லையாயினும், சுருதியிலப்படி சரீரத்தாலளவுபட்டதாகச் சொல்லுகையால் ஜ்ஞாநமளவுபட்டதே எனில்; இந்த சுருதிவாக்கியம் பொருளின் தன்மையைமாற்றுதன்றோ. உள்ளபடியைக் காட்டுவதேயன்றோ. கீழ்ச்சொல்லிய பலயுக்திகளாலும் பொருந்தாத இவ்விஷயத்தை யொருமூடனும் சொல்லானுனதால் உண்மையறிவிக்கிற சுருதிசொல்லுமோ; ஆனதால் தோற்றப்படுகிறபடியிலே உபசாரமாகச்சொல்லப்பட்டது. யுக்திக்குச்சேராதவற்றை சுருதிசொல்லாது. இங்குமறுத்து * ச்சொல்லுவதுகிரமத்தையறிவித்தற்பொருட்டு பார்வையைச்சொல்வது சிருட்டிசேதனமூலமென வறிவித்தற்கு. பரத்வாஜர்ப்ரச்நம்பண்ணினவந்தபுருஷன் என்னுடையஉத்க்ராந்தி ப்ரதிஷ்டைகள் எக்காலத்தி லெக்காரணத்தாலென்று பார்த்தானென்று சுலோகத்திற்குப் பொருள். இங்குஸாங்கியர் சொல்லுமாறு.—பிரதாநமென்கிற பிரகிருதி கருத்தாவாகின்றது புருஷனென்கிற ஜ்ஞாநரூபியாகிய ஆத்மாவன்று. ஆனதால் புருஷன் ஸ்வதந்திரனுகிகருத்தாவாகிறனென்பது பொருந்தாது; ஆனதால் புருஷனுக்குப் பிரயோஜநத்தைத்தருவதற்கு, மகாந்முதலிய தத்துவங்களாக பிரதாநம்பிரவர்த்திக்கின்றது. இவ்வாறுஸத்வம், ரஜஸ்ஸு, தமஸ்ஸு, என்கிற மூன்றுகுணங்களின் ஸாம்யமாகிய மூலப்பிரகிருதி பிரமாணத்தால் சிருட்டிக்குக்காரணமென்றறுதிப்பட்டபோது புருஷப்பிரயோஜநத்தைத் தருவதற்குதப்பாமல் பிரவர்த்திக்கின்றமையால் சேதநம்போலிருக்கிறதென்றுபசாரத்தாலே சேதநதருமமாகிய ஈக்ஷணத்தைச்சொல்லுகின்றதெனக்கொள். அன்றேல்,ஆத்மாவுக்கு துணைக்காரணமில்லாமையாலும், இந்த சிருட்டியால் ஆத்மாவுக்குத்துன்பமே யாதலாலும், தனக்குத்தானே துன்பத்தைச்செய்து கொள்ளாமையாலும், ஆத்மா தன்னைத்தானே சிருட்டித்துக்கொள்வது கூடாமையின் சிருட்டிக்குக்காரண மின்னதென்றுசொல்லவழியில்லையாம்.பிரதாநத்தைக் காரணமென்றுசொல்லில் ஈக்ஷணமும், ஒரரசனுக்கு எல்லாத்தொழிலை நிறைவேற்றுகிற தொழிலாளியை அரசனே என்றுபசரித்துச்சொல்வதுபோல் உபசாரத்தாலே சொல்லப்படுதலாலமையும். ஆனதால் பிரதாநமென்கிறமூலப்பிரகிருதியே ஜகத்துக்காரணமென்பது.இவ்வாறே தார்க்கிகரும் யுக்திசொல்லிபரமாணுக்களே ஜகத்துக்குக் காரணமென்கின்றனர்கள். இவர்கள்சொல்வது பொருத்தமற்றது. ஆத்மாநிர்விகாரமானாலும் போக்தாவாவதுபோலகருத்தாவுமாகலாமன்றோ; இதனால் நிர்விகாரமான ஆத்மாவுக்கு கர்த்ருத்வம் கூடாதென்று ஸாங்கியர்சொல்வது தகாது. அவர்கள் போக்த்ருத்வமுண்டென்று சொல்லுகின்றனர்க ளாகையாலதுபோலிதுவும் கூடுமென்று சொல்லப்பட்டதாயிற்று. வேதாந்திகள் சுருதியில் சொல்லியபடிகொள்ளுமவர்களாகையால் அவர்களுக்கு யுக்திகள்பகையாக வழியில்லை. இனி ஆத்மாசிருட்டிகாரணமாகில் பரிணமம் சொல்லவேண்டுகையால் அழிவுஅசுத்திமுதலிய குற்றங்களின் ஸம்பந்தவிகார முதலியவை யவ்வாத்மாவிலேயே தங்கும். போக்தாவென்றாலும் இன்பம் துன்பம்புசிக்கையாகிற போகம் ஸ்வரூபமாகையால் விகாரமாகாதெனில்: அவித்யையின்தோஷத்தாலே ஒருவனும் நிர்விகாரனை ஆத்மாவும் காமரூபமுதலிய உபாதிகளையடைந்து கர்த்தாவாகிறனுகலால் இவ்வாறு பொய்யானகர்த்ருத்வமுதலியவை குற்றமாகாது. மெய்யானவிகாரமே தோஷமாமன்றி பொய்யானவிகாரம் தோஷமாகாதன்றோ; ஆனதால் சிருட்டிகருத்தாவாகை ஆத்மாவுக்குப்பொருந்தியதேயாமென்க. அவித்யையினல் ஸுகதுக்கங்களை யநுபவிக்கிற அபரி

---

* எவ்வாத்மாவி லிப்பதினறுகலைகளும் பிறக்குமென்று முன் சுலோகத்தில் ஸ்ருஷ்டி சொல்லியிருக்க, என்று 'மறுத்து' என்கிறபதத்திற்கு முன் கூட்டுக.

பூர்ணஞான ஜீவனுக்கு, சாஸ்திரவிதியாலே பந்தம் கழிந்துபோனபின் நிருபாதியானஸ்வரூபம் சுத்தமாய் அத்வைதமாய் தர்க்கங்களுக்கிடமன்றி நிர்விகாரமாய் சிவமாய் விளங்குமென்று வேதாந்திகளின்கொள்கை. இந்த அவஸ்தையில் கர்த்ருத்வம்போக்த்ருத்வம் முதலிய விகாரங்களொன்றுமில்லை. அக்காலத்தில் எல்லாபேதவிகாரங்களும்நீங்கி ப்ரம்மம் அத்வைதமாய் விளங்குகிறதன்றோ; ஸாங்கியர்களும் அவித்யையினாலேயே கருத்தாவாகையும் போக்தாவாகையுமென்று சொல்லத்துடங்கி இப்படி சொல்லுவதற்கு முக்கியாதாரமான வேதத்தை ப்ரத்யக்ஷாதி ப்ரமாணவிரோதம் வருமென்று பயந்துநம்பாமல் வேதபாஹ்யர்களாய் போசத்ருத்வத்தை பரமார்த்தமென்று சொல்லுகிறார்கள். ஆத்மாவைக்காட்டில் வேறான ப்ரக்ருதிதத்வத்தை மெய்யானதென்றும் கூறுகின்றார்கள். ஆனதால் வேறு சிலதார்க்கிகராலே தங்கள் மதயுக்திமறுக்கப்பட்டபோது பேச்சற்று நிற்கிறார்கள். தார்கிகரும் மற்றுள்ள வாதிகளால் மறுப்புண்கிறார்கள். ஆககேவலதர்க்கங்களைத் தங்கள் மதங்களுக்குக்காவலாகவெண்ணுகிற எல்லாவாதிகளு மொருவருக்கொருவர் மாம்ஸத்திற்கு விரோதப்படுகிற ஜந்துக்களைப்போல் விரோதப்பட்டு பரமார்த்த தத்வத்தையறியாதே இழந்துபோகிறார்கள். ஆனதால் இதைவிட்டு வேதாந்தங்களின் பரமார்த்த தத்வமான ஆத்மதத்வத்தி னொருமையையறிந்து இதில் சிரத்தையுடைய ராவதற்கு நாம் இந்த தர்க்கவாதி மதங்களில் குற்றங்களைக் கூறுகிறோம். நமக்கு தர்க்கம்வருமென்று காட்டுவதற்கன்று. முமுக்ஷுக்கள் நன்மையை எண்ணியேயாம். கருத்தாவாகான்போக்தாவாகிறானென்று சொல்வதற்கு கர்த்ருத்வம் போக்த்ருத்வம் இவைகளுக்குபேதமென்? பிரதாநம் கருத்தாவே என்றும், போக்தாவாகாதென்றும், பிரித்துச்சொல்வதற்கு யுக்தியாது? பிரதாநம்மகாந் முதலியதத்வங்களாக விகரித்துப் பரிணமிக்கின்றமையாலும் புருஷனுக்கு விகாரமில்லாமையாலு மிவ்வாறு சொல்லவேணுமென்று முன்னேசொன்னோமே எனில்; இதுபயனில்லாதவார்த்தை. போககாலத்திற்குமுன்னே இல்லாதவிகாரம் போககாலத்தில் வந்ததென்று கொள்ளப்படுதலால் புருஷனுக்கு விகாரமில்லை என்பது விடப்பட்டதன்றோ. இனிபோகத்திற்குப் பின்சுத்தனேயன்றோ புருஷனெனில்; பிரதானமும் பரிணமித்து பின்பரிணாமம் நீங்கி சுத்தமாகையால் நிர்விகாரமாவதற்குத்தடை என்? போககாலத்திலும் புருஷன் முன்போலவே இருக்கிறானென்றால் போகம் பொய்யென்றதாயிற்று. அப்போது விகாரம் மெய்யாமாயின், முன்சொன்னதோஷம் தப்பாது. போககாலத்தில் ஸுகாதிரூபமாக பிரதாநமும் விகரிக்கின்றமையால் அதற்கும் போகமுண்டென்று சொல்லக்கூடும். ஆத்மாவினுடைய விகாரமே போகமென்றால், பிரதாநத்தின் விகாரமேபோகமென்று பிரதிவாதிசொன்னால் மறுப்பதற்குக்காரணமொன்றுமில்லை. ஆகியிரண்டுக்கும் போகமுண்டென்றால் புருஷனுக்குபோகத்தைத்தருவதற்கு பிரதாநம்விகரிக்கிறதென்பதுகூடுமோ; இதற்குப்பலவிரோதங்களுண்டனன்றோ; இனிஸத்வஸம்பந்தமுடைய போகத்தையநுபவிக்கிற அந்தக்கரணத்தில் புருஷன் ப்ரதிபலிக்கின்றமையால்விகாரமில்லாமலே புருஷனுக்குபோகமெனில், சாஸ்திரவிதியால் புருஷனுக்கு நீக்கப்படவேண்டிய விகாரங்களொன்றுமில்லையன்றோ. அவித்யாஸம்பந்தம் முதலியதோஷங்கள் நீங்கப்பொருட்டு சாஸ்திரவிதி என்றால், சாஸ்திரத்திலில்லாத உங்கள்மதத்தை முமுக்ஷுக்கள் விரும்பார்கள். இனி அத்வைதிகளாகிய உங்களுக்கு சாஸ்திரத்தையறிகிற வதிகாரிகளில்லாமையால் சாஸ்திரம் வீணாகிறதென்றால், ப்ராந்திதசையில் சாஸ்த்ராதிகாரிகளுண்டானமையால் சாஸ்திரம் வீணாகாது. ப்ராந்திநீங்கினபோது சாஸ்திரமே இல்லையாதலால் சாஸ்திரத்திற்குப் பயன்தேடவேண்டியதில்லை. சாஸ்திரமும் ஆத்மா ஒன்றேயென்கிற ஜ்ஞாநம்பிறந்தபின் பேதப்ரபஞ்சம் அடியோடழிந்து போமாகையாலே பேதவியவாகாரத்திற் கிடமில்லை என்று சொல்லுகி

றது. பேதப்ரபஞ்ச முண்டானபோது சாஸ்திரப்ரயோஜநத்தையும் சாஸ்திரமே சொல்லுகிறது. வாஜஸநேயகத்தில் பரமார்த்தசையல்லாத அவித்யாஸமயத்தில்பேதமுண்டாகையாலே ஸகலபேதவ்யவகாரமு முண்டென்று சொல்லப்பட்டது. பரவித்யை அபரவித்யையென்று பிரித்து முதலிலேயே சொல்லப்படுகிறது. ஆனதால் வேதாந்த ப்ரமாண மகாராஜனுடைய பாகுவினால் காக்கப்படுகிற ஆத்மாவினைக்கியத்தில் விரோதம்செய்வதற்கு தார்க்கிகர்வாதமாகிய படனுக்குசக்தியில்லை. இதனால் அவித்யையினாலே ப்ரம்மத்திற்குபலபேதங்களும் சக்திகளுமுண்டாகையாலே ஸ்ருஷ்டிகாரணமாவதில் விரோதமில்லையென்று விளங்கும். ஆகையால் பரவாதிகள்சொல்லும் குற்றங்களுக்குள் ஒன்று மிங்குதங்காது. இனி அரசனுடைய எல்லாவ்யாபாரங்களையும் நிறைவேற்றுகிற ப்ருத்யனை அரசனேஎன்பதுபோலஉபசாரத்தாலேசேதநமாக பிரதாநத்தை வியவகரித்ததென்பது சுருதிக்கு அமுக்கியமானபொருளையுரைக்கவேண்டுதலால் தக்கதன்று. முக்கியப்பொருள் கூடாதபோதன்றோ அமுக்கியப் பொருள் கொள்ளவேணும். காட்டியவழியால் முக்கியப்பொருள் கூடுகையாலது கொள்ளப்படாது, இங்கு பிரதாநம் அசேதநமாகையால் சேதநனுக்குத் தக்கபடி நியமமாய் பிரவர்திப்பது பொருந்தாது. ஆனதால் கீழ்ச்சொல்லியபடி ஜகத்துக்குக்காரணம் ப்ரம்மமேயாம்.

ரா-ஹா.—இந்தஷோடச கலைகளை ஸ்ருஷ்டிப்பது ஜீவனுக்கும் பரமாத்மாவுக்குமொத்திருக்க, இந்த ஷோடசகலைகளை புஜிப்பது ஜீவனே பரமாத்மாவல்லவென்பதில் ஹேதுகாணப்படவில்லையே என்றால் ஜீவன் தன்னுடையபோகத்தை விரும்பி இவைகளை ஸ்ருஷ்டிக்கின்றமையால் ஜீவன் போக்தாவாகிறான். பரமாத்மா தன்னுடையபோகத்தை விரும்பாமல் ஜீவனுக்கென்றே ஸ்ருஷ்டிக்கின்றமையால் பரமாத்மாவுக்குபோகமில்லை. எனக்கு கர்மபலங்களில் விருப்பமில்லையென்று, "நமேகர்மபலேஸ்ப்ருஹா" என்கிறசுலோகத்தில் பகவானருளிச்செய்தான். ஆனதால் கர்மபலங்கள் பரமாத்மாவை யொட்டுகிறதில்லை. "நமாம்கர்மாணிலிம்பந்தி" என்று பகவானாலேசொல்லப்பட்டதன்றோ; இந்த சுலோகத்திற்கு கருத்து இவ்வாறேயெனபகவத்பாஷ்யகாரரால் "ஸோத்யக்ஷ" என்கிற ஸூத்திரத்தில் ஸூசிப்பிக்கப்பட்டது.

௪. 𑌸 𑌪𑍍𑌰𑌾𑌣𑌮𑌸𑍃𑌜𑌤 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌚𑍍𑌛𑍍𑌰𑌦𑍍𑌧𑌾𑌂 𑌖𑌂 𑌵𑌾𑌯𑍁𑌰𑍍𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌰𑌾𑌪𑌃
𑌪𑍃𑌥𑌿𑌵𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌮𑍍 । 𑌮𑌨𑍋𑌽𑌨𑍍𑌨𑌮𑌨𑍍𑌨𑌾𑌦𑍍𑌵𑍀𑌰𑍍𑌯𑌂 𑌤𑌪𑍋 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌾𑌃 𑌕𑌰𑍍𑌮 𑌲𑍋𑌕𑌾
𑌲𑍋𑌕𑍇𑌷𑍁 𑌚 𑌨𑌾𑌮 𑌚 ॥

౪. స ప్రాణమసృజత ప్రాణాచ్ఛ్రద్ధాం ఖంవాయుర్జ్యోతిరాపః పృథివీంద్రియమ్।
మనోఽన్నమన్నాద్వీర్యంతపోమంత్రాః కర్మలోకాలోకేషుచనామచ॥

(ப்-ம்.) 𑌸𑌃-அந்தபுருஷன், 𑌪𑍍𑌰𑌾𑌣𑌮𑍍-ப்ராணனையும், 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌚𑍍𑌛𑍍𑌰𑌦𑍍𑌧𑌾𑌮𑍍-ப்ராணனை ஸ்ருஷ்டித்தபின் சரத்தையையும், 𑌖𑌮𑍍.𑌵𑌾𑌯𑍁𑌃 - 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌃-𑌆𑌪𑌃-𑌪𑍃𑌥𑌿𑌵𑍀-பின்பு ஆகாயம், காற்று, தேஜஸ்ஸு, ஜலம்பூமிஇவைகளையும், 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌮𑍍-இந்திரியங்களையும், 𑌮𑌨𑌃-மநஸ்ஸையும், 𑌅𑌨𑍍𑌨𑌮𑍍 - அந்நத்தையும், 𑌅𑌨𑍍𑌨𑌾𑌤𑍍-𑌵𑍀𑌰𑍍𑌯𑌮𑍍-அந்நத்தாலே பலத்தையும், 𑌤𑌪𑌃- தபஸ்ஸையும், 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌾𑌃- மந்திரங்களையும், 𑌕𑌰𑍍𑌮 - கர்மத்தையும், 𑌲𑍋𑌕𑌾𑌃-லோகங்களையும், 𑌲𑍋𑌕𑍇𑌷𑍁-லோகங்களிலே, 𑌨𑌾𑌮 𑌚 - பெயரையும், 𑌅𑌸𑍃𑌜𑌤 - ஸ்ருஷ்டித்தான்.

ஸம்-ஹா. ரா-ஹா—ஸர்வத்துக்கும்அதிகாரியான ப்ராணனை முன்சொன்படி ஈச்வரன் ஈக்ஷணம்செய்து ஸ்ருஷ்டித்துபின்எல்லோருக்கும்நல்ல கர்மங்களில்சிரத்தை

யையும், பின்பு கர்மபலத்தை யநுபவிப்பதற்கு அதிஷ்டாநமாகிய பூதங்களையும், ஸ்ருஷ்டித்தான். இந்த பூதங்களில் ஆகாசத்தில் சப்த குணத்தையும், வாயுவில் சப்தஸ்பர்சங்களையும், தேஜஸ்ஸில் சப்தஸ்பர்சரூபங்களையும், ஜலத்தில் சப்தஸ்பர்சரூபரஸங்களையும் பூமியில் சப்தஸ்பர்சரூபரஸ கந்தங்களையும் ஸ்ருஷ்டித்தான். பின் கர்மேந்திரியங்களைந்தையும் ஜ்ஞாநேந்திரியங்களைந்தையும் இவையெல்லாவற்றிற்கு மரசனைப்போன்ற மனஸ்ஸையும் இப்படி எல்லாவற்றையும் ஸ்ருஷ்டித்து எல்லாப்ராணிகளுக்கும் ஜீவநாதாரமான அந்நத்தையும், அந்நத்தாலே சக்தியையும், இப்படி தங்கள்பலத்தாலே தோற்றியபடி எல்லாம்செய்தபாவங்களை நீக்குவதற்குக் காரணமாகிய தபஸ்ஸையும் தபஸ்ஸாலேசுத்தமான நெஞ்சையுடையவர்களுக்கு கர்மாநுஷ்டாநத்திற்கு வேண்டிய இருக்கு யஜுஸ்ஸு ஸாமம் அதர்வணம்முதலிய மந்திரங்களையும், ஜ்யோதிஷ்டோமாதி கிரியைகளையும் அந்தகர்மங்களின் பலமாகிய ஸ்வர்க்காதிலோகங்களையும் அந்தலோகங்களில் தேவாதிநாமங்களையும், ஸ்ருஷ்டித்தான்.

௫. 𑌸 𑌯𑌥𑍇𑌮𑌾 𑌨𑌦𑍍𑌯𑌃 𑌸𑍍𑌯𑌨𑍍𑌦𑌮𑌾𑌨𑌾𑌃 𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑌾𑌃 𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑌂 𑌗𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑌿 𑌭𑌿𑌦𑍍𑌯𑍇𑌤𑍇 𑌤𑌾𑌸𑌾𑌂 𑌨𑌾𑌮𑌰𑍂𑌪𑍇 𑌸𑌮𑍁𑌦𑍍𑌰 𑌇𑌤𑍍𑌯𑍇𑌵𑌂 𑌪𑍍𑌰𑍋𑌚𑍍𑌯𑌤𑍇𑌽𑌏𑌵𑌮𑍇𑌵𑌾𑌸𑍍𑌯 𑌪𑌰𑌿𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌰𑌿𑌮𑌾𑌃 𑌷𑍋𑌡𑌶𑌕𑌲𑌾𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌯𑌣𑌾𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑌂 𑌗𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑌿 𑌭𑌿𑌦𑍍𑌯𑍇𑌤𑍇 𑌤𑌾𑌸𑌾𑌂 𑌨𑌾𑌮𑌰𑍂𑌪𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷 𑌇𑌤𑍍𑌯𑍇𑌵𑌂 𑌪𑍍𑌰𑍋𑌚𑍍𑌯𑌤𑍇 𑌸 𑌏𑌷𑍋𑌽𑌕𑌲𑍋𑌽𑌮𑍃𑌤𑍋 𑌭𑌵𑌤𑌿 𑌤𑌦𑍇𑌷 𑌶𑍍𑌲𑍋𑌕𑌃 ||

౫. సయథేమానద్యస్స్యందమానాః సముద్రాయణాః సముద్రం ప్రాప్యాస్తం గచ్ఛంతి భిద్యేతేతాసాం నామరూపే సముద్రఇత్యేవం ప్రోచ్యతే ఏవమేవాస్య పరిద్రష్టురిమాష్షోడశక లాఃపురుషాయణాః పురుషంప్రాప్యాస్తంగచ్ఛంతి భిద్యేతేతాసాంనామరూపే పురుషఇత్యేవం ప్రోచ్యతే సఏషోఽకలోఽమృతోభవతితదేషశ్లోకః||

(ப-ம்.) 𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑌾𑌃 - ஸமுத்திரத்தை யடையாநின்றனவாய், 𑌸𑍍𑌯𑌨𑍍𑌦𑌮𑌾𑌨𑌾𑌃-பெருகுகின்ற, 𑌇𑌮𑌾𑌃, 𑌨𑌦𑍍𑌯𑌃-இந்த, ஆறுகள், 𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑌂-கடலை, 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯-அடைந்து, 𑌅𑌸𑍍𑌤𑌂𑌗𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑌿-அடங்கிப்போகின்றன. 𑌤𑌾𑌸𑌾𑌂 - அந்த ஆறுகளுடைய, 𑌨𑌾𑌮𑌰𑍂𑌪𑍇-ரூபநாமங்கள், 𑌭𑌿𑌦𑍍𑌯𑍇𑌤𑍇 - மாறுகின்றன. 𑌸𑌮𑍁𑌦𑍍𑌰 𑌇𑌤𑍍𑌯𑍇𑌵𑌂𑌪𑍍𑌰𑍋𑌚𑍍𑌯𑌤𑍇 - ஸமுத்திரமென்றே சொல்லப்படுகின்றன, 𑌯𑌥𑌾-அதெப்படியோ; 𑌏𑌵𑌮𑍇𑌵-இப்படியே, 𑌅𑌸𑍍𑌯 𑌪𑌰𑌿𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌃 - இந்ததிரஷ்டாவானவாத்மாவினுடைய, 𑌇𑌮𑌾𑌃𑌷𑍋𑌡𑌶𑌕𑌲𑌾𑌃-இப்பதினாறுகலைகளும், 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌯𑌣𑌾𑌃 - பரமபுருஷனை யாதரமாகவுடையனவாய், 𑌪𑍁𑌰𑍁𑌷𑌂- பரமாத்மாவை, 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 - அடைந்து, 𑌅𑌸𑍍𑌤𑌂𑌗𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑌿-லயிக்கின்றன, 𑌤𑌾𑌸𑌾𑌂 - அந்தகலைகளினுடைய, 𑌨𑌾𑌮𑌰𑍂𑌪𑍇-ரூபநாமங்கள், 𑌭𑌿𑌦𑍍𑌯𑍇𑌤𑍇-வேறுபடுகின்றன, 𑌪𑍁𑌰𑍁𑌷 𑌇𑌤𑍍𑌯𑍇𑌵𑌂𑌪𑍍𑌰𑍋𑌚𑍍𑌯𑌤𑍇-புருஷனென்றே சொல்லப்படும். 𑌸𑌃𑌏𑌷𑌃 - அப்படிப்பட்ட இந்தபுருஷன், 𑌅𑌕𑌲𑌃 - கலாஸம்பந்தமில்லாதவன். 𑌅𑌮𑍃𑌤𑍋𑌭𑌵𑌤𑌿- அம்ருதனாயிருக்கிறான், 𑌤𑌦𑍇𑌷𑌃𑌶𑍍𑌲𑍋𑌕𑌃-அந்தபுருஷஸ்வரூபத்தைப்பற்றி யிந்தசுலோகம் சொல்லப்படுகிறது.

ஸம்-ஹா.—கடலில்கலந்த ஆறுகள்போல, குருபதேசத்தாலே கலைகள் நீங்கும் படியுபாஸிக்கிறவனும் புருஷனைச்சேர்ந்து தனது நாமரூபங்கள்மாறி புருஷனென்றே சொல்லப்படுவான். இவ்வாறு கலைகளின் ஸம்பந்தம் நீங்கிப்போனமையால் முக்தனாகிறான்.

ரா-ஹா.—இப்படி ஜீவாத்மாவைப்பற்றுகிற கலைகள் பரமாத்மாவோடு ஸம்பந்தப்படாமையால், பரமாத்மாநிஷ்களனென்றும் ஆனதால்முமுக்ஷுக்களுபாஸித்து தங்கள் தங்களுக்குண்டான போக்த்ருத்வமாகிய கலாஸம்பந்தத்தை நீக்கிக்கொள்ளுகிறார்களென்றும் சொல்லுகிறது. கங்கையமுனைமுதலிய நதிகள் சமுத்திரத்தைச் சேர்ந்து தங்கள் நாமரூபங்களை யழித்துக்கொள்ளுகின்றனவேயன்றி ஸமுத்திரத்திற்கு நாமரூப விகாரங்களையுண்டு பண்ணுவதில்லையன்றோ; இவ்வாறேபோக்தாவாகிய ஜீவாத்மாவுக்கும் அவனையடைந்தபோது கலாஸம்பந்தம் நீங்கிப்போகின்றது. கல்லிலடிபட்டகத்திக்குக் கூர்மையழிவதுபோல் கலைகளுக்கு போகத்தைத்தருகிற சக்தியழிந்துபோகின்றது என்கை. இவைகளையிவ்வாறு செய்விப்பவன் பரமபுருஷனேயாகையால் அவனிடத்தில் இவைகளுக்கு ஸ்வதந்திரசக்தியில்லை அவனோடொன்று சேர்ந்து அவனேயென வழங்கப்படுகிறது. ஆக, பரமபுருஷனுக்கு இக்கலைகளினாலாகியபோகமில்லையானதால் பரமாத்மாநிஷ்கலனென்று சொல்லப்படுகிறான். ஆகையால் அம்ருதஸ்வரூபியாகிறான். இவ்விஷயத்தையோதும் சுலோகங்களிருக்கின்றன.

சு. அராஇவரதநாபௌகலாயஸ்மிந்ப்ரதிஷ்டிதா:।
தம்வேத்யம்புருஷம்வேதயதாமாவோம்ருத்யு:பரிவ்யதா:॥

౬. అరాఇవరథనాభౌకలాయస్మిన్ప్రతిష్ఠితాః।
తంవేద్యంపురుషంవేదమావోమృత్యుఃపరివ్యథాఇతి॥

(ப-ம்.) யஸ்மிந்-எந்தபரமாத்மாவினிடத்தில், ரதநாபௌ-தேர்ச்சக்கிரத்தில், அரா:இவ-அரங்கள்போல, கலா:-கலைகள், ப்ரதிஷ்டிதா: - நிலைபெற்றுநிற்கின்றனவோ; தம்-வேத்யம்புருஷம் - அந்தமுமுக்ஷுவேத்யனனபுருஷனை, வேத-அறிந்தால், வ:-அப்படியறிந்த உங்களுக்கு, பரிவ்யதா:-துன்பங்களை, ம்ருத்யு:-ஸம்ஸாரமானது, மா-செய்யாது.

ஸம்-ஹா.—பிறப்பு இருப்பு இறப்புமுதலிய எல்லாக்காலங்களிலும், இப்ப்ரபஞ்சத்திற்கு நிலையிடமாயபுருஷனை யறியாதபோது துன்பப்படவேணுமானதால் சிஷ்யர்களேயப்புருஷனையறிந்து கொள்ளுங்கோள்.

ரா-ஹா.—இவ்வாறு எல்லாவற்றிற்கும் காரணமாய பரமாத்மஸ்வரூபத்தையறிந்த துன்பமடையார்.

எ. தாந்ஹோவாசைதாவதேவாஹமேதத்பரம்ப்ரஹ்மவேத நாத:பரமஸ்தீதி॥

౭. తాన్హోవాచైతావదేవాహమేతత్పరం బ్రహ్మవేదనాతః పరమస్తీతి॥

(ப-ம்.) தாந்-அந்தசிஷ்யர்களை, உவாசஹ-பிப்பலாதர் சொன்னார், ஏதத்பரம்ப்ரஹ்ம ஏதாவதேவ அஹம்வேத-இந்தபிரம்மத்தை இவ்வளவே நானறிவேன், அத:பரம்-அஸ்தி - இதற்குமேலறிய வேண்டுவதொன்றுமில்லை. இதி - இப்படிபிப்பலாதர் சொன்னார்.

ஸம்-ஹா —ஸா-ஹா.—இவ்வாறு சிஷர்களுக்கு உபதேசித்து,இவர்கள் ஸந்தேகம்நீங்க இவ்வளவே ப்ரம்மஸ்வரூபத்திலறியவேண்டியது. இவ்வளவே நானுமறிவேன் என்று அவர்கள் மகுழும்படி பிப்பலாதர்சொன்னூர்.

அ. 𑌤𑍇 𑌤𑌮𑌰𑍍𑌚𑌯𑌨𑍍𑌤𑌸𑍍𑌤𑍍𑌵𑌂 𑌹𑌿 𑌨𑌃 𑌪𑌿𑌤𑌾 𑌯𑍋𑌽𑌸𑍍𑌮𑌾𑌕𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌯𑌾𑌃 𑌪𑌰𑌂
𑌪𑌾𑌰𑌂 𑌤𑌾𑌰𑌯𑌸𑍀𑌤𑌿 𑌨𑌮𑌃 𑌪𑌰𑌮𑌋𑌷𑌿𑌭𑍍𑌯𑍋 𑌨𑌮𑌃 𑌪𑌰𑌮𑌋𑌷𑌿𑌭𑍍𑌯𑌃 ॥

౮. తేతమర్చ్యయంత స్త్వంహినః పితాయోస్మాకమవిద్యాయాః పరంపారంతారయసీతి
నమఃపరమఋషిభ్యో నమఃపరమఋషిభ్యః॥

(ப்-ம்.) 𑌤𑍇-அந்தசிஷர்கள், 𑌤𑌂 - அந்தபிப்பலாதமகாருஷியை, 𑌅𑌰𑍍𑌚𑌯𑌨𑍍𑌤𑌃 - பூசித்தவர்களாய், 𑌤𑍍𑌵𑌂-நீரோ, 𑌨𑌃-நமக்கு, 𑌪𑌿𑌤𑌾-தந்தையாகிறீர், 𑌯𑌃-எந்தநீரோ, 𑌅𑌸𑍍𑌮𑌾𑌕𑌂-நம்மை, 𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌯𑌾𑌃𑌪𑌰𑌂𑌪𑌾𑌰𑌂 - அவித்தையினக்கரையை, 𑌤𑌾𑌰𑌯𑌸𑌿-தாண்டவைக்கின்றீர், 𑌨𑌮𑌃𑌪𑌰𑌮𑌋𑌷𑌿𑌭𑍍𑌯𑌃 பரமர்ஷிகளைநமஸ்கரிக்கிறோம், 𑌇𑌤𑌿-என்றுசொன்னூர்கள்.

ஸம்-ஹா—இவ்வாறு பிப்பலாதரால் உபதேசித்த பிரம்மஸ்வரூபத்தையறிந்து க்ருதார்த்தர்களாய் இப்படி மகார்த்தமான பிரம்மஸ்வரூபத்தையுபதேசித்த ஆசாரியனுக்குப்ரதிஸம்மாநமாய் செய்யவேண்டியதொன்றும் தோற்றுமல் அவரதுமலரடிகளில்வீழ்ந்து தலையால்வணங்கி புஷ்பாஞ்சலியிட்டுப் பூசித்து ப்ரம்மவித்தையாகியஜராமரணம்முதலிய தோஷமொன்றுமில்லாத சரீரத்தையுண்டுபண்ணித் தந்ததந்தையே நீர்நமக்குபயமற்ற ப்ரம்மஸ்தாநத்தையடையும்படி இந்தஸம்ஸாரத்தில்மயக்கமுற்று பிறப்பிறப்பு முதலியதுன்பங்களுக்கிடமாகிய அவித்யையாகிய பெருங்கடலினின்றும் வித்யையென்கிற ஓடத்தாலே அக்கரைசேர்த்த மகாநுபாவர் நீர். ஆனதால்மீட்சியற்ற மோக்ஷமாகியப்ரம்மத்தைத்தந்த உம்மில் சிறந்ததந்தையுண்டோ. உலகத்தில் துன்பத்திற்கிடமாகிய சரீரத்தையுண்டுபண்ணித்தந்த தந்தையையே மிகப்பூசித்துவணங்குவதாயின் இப்படியழிவற்ற ஸுகத்தையுண்டுபண்ணின உம்மைநாங்கள் என்சொல்லிப் புகழுவோம். உமக்குநமஸ்காரம் இச்சம்பிரதாயத்தை நடத்திவந்தமுன்னோரான பரமர்ஷிகளுக்கு நமஸ்காரமென்றுசொன்னூர்கள் இரட்டித்தது ஆதரதோதற்றுவதற்கு.

ஸா-ஹா.—இவ்வாறு சிஷர்களும் உம்மால்வந்த ஜ்ஞாநஜந்மமே சிறந்தஜந்மமானதால் நீரேநமக்கு முக்கியபிதாவாகின்றீர் நம்மை இச்சம்சாரமாகிய சமுத்திரத்தினின்றும் கரையேற்றுவிக்கின்றீர்; என்றிப்படி பலவாருகக்கொண்டாடி வணங்கிளுர்கள். பரமர்ஷிகளையும் வணங்கிஞர்கள். இரட்டித்துச்சொன்னது உபநிஷத்து முற்றுப்பெற்றதென்பது தோற்றுவித்தற்கு. இங்கு பிறர்சொல்லுமாறு; ஜீவனில்வேருயப்ரம்மமில்லையென்றுணர்வதற்கு இப்பதினூறுகலைகளையுடைய ஜீவனேப்ரம்மம் இவனில்வேறுபட்ட தொன்றுமில்லையென்று, “𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑍇𑌵” “𑌨𑌾𑌤𑌃𑌪𑌰𑌮𑌸𑍍𑌤𑌿” என்கிற வாக்கியத்தால் கூறப்பட்டதென்பதாம். இதரவ்யபதேசாதிகரணவிரோதம் வருமானதாலிதுசேராது; எப்படிஎன்ருல் அவ்வதிகரண ப்ரம்மத்துக்கும் ஜீவனுக்கும் பேதமில்லையாயின் ஜீவர்களுக்குவருகிறதுன்பங்களெல்லாம் ப்ரம்மத்தாலே யுண்டானவையாகையால் தனக்குத்தானே துன்பத்தைச்செய்துகொண்டது ப்ரம்மமென்கிறதோஷம்வருமாகையால் ஜீவனுக்கும் ப்ரமமத்திற்கும் பேதமுண்டு;

ஆனதால் தோஷமில்லையென்று நிச்சயிக்கப்பட்டது. "தத்த்வமஸி" "அயமாத்மா ப்ரஹ்ம" இவைமுதலியவாக்கியங்களாலே, ஜீவன் ப்ரம்மத்தில்வேறானவனல்லனென்றுசொல்லப்பட்டதென்றால்.அங்கு இவ்வாறுவிசாரம் தொடுக்கிறோம்.—இவ்வாக்கியங்களால் ஜீவனேப்ரம்மமென்று போதிக்கப்படுமாயின் எல்லாவற்றையுமறிந்த ப்ரம்மந்தனக்கு ஸுகமாகிய உலகத்தைஸ்ருஷ்டியாமே துன்பமானஉலகத்தையுண்டுபண்ணுகிறதென்கிற தோஷம்வரும்.ஆத்யாத்மிகம் ஆதிதைவிகம் ஆதிபௌதிகம்முதலியகணக்கற்றதோஷங்களுக்கு இவ்வுலகம் நிலமாயிருக்கின்றது. இவ்வாறுதுன்பவெள்ளமாகிய தன்னுடைய ஸங்கடத்திற்கு ஒருபுத்தியுடையவன் தானேஹேதுவாக மாட்டான். ஜீவன்வேறு; ப்ரம்மம்வேறு; என்றுபோதிக்கிற சுருதிகள் ஜகத்துக்கும் ப்ரம்மத்துக்கும்பேதமில்லையென்று கொள்ளுகிறஉன்னாலே கைவிடப்பட்டனவாம்பேதமுண்டென்னில்ஐக்யம்கூடாது. உபாதியினால்வந்தபேதத்தைபேதச்ருதிகள்சொல்லுகின்றன. ஸ்வாபாவிகமானவபேதத்தை யபேதச்ருதிகள் சொல்லுகின்றனவென்றுசொல்லில், அப்போது இவ்விருவுக்குவிடைதரவேண்டும்.ஸ்வபாவத்தால் தன்னில் வேறாகாதவன் ஜீவன்என்பதை உபாதிஸம்பந்தமில்லாத ஜகத்காரணமாகிய ப்ரம்மம்அறியுமோ; அல்லது அறியாதோ; அறியாதாயின் ஜகத்காரணமாகிய ப்ரம்மம்எல்லாவற்றையறியுமென்பதற்குவாயில்லை. அறியுமாயின், தன்னில்வேறாகாத ஜீவன்துன்பத்தைத்தன்துன்பமென்றறிந்தப்ரம்மம் தனக்குஸுகத்தைசெய்துகொள்ளாமேதுன்பத்தையுண்டாக்கிக் கொண்டதென்றும் குற்றம்தப்பாது. அஜ்ஞானத்தாலே பேதமென்றாலும்முன்சொன்னதோஷங்கள் நீங்கவழியில்லை மற்றுமனேகதோஷங்களும் வரும்என்று பூர்வபக்ஷம்செய்து;கீழ்ச்சொல்லியதுக்கங்களையநுபவிக்கின்றஜீவாத்மாவைக்காட்டில் ப்ரம்மம்வேறுபட்டதாகையாலே கீழ்ச்சொன்னதோஷங்கள் புகுறவழியில்லை.ப்ரம்மத்தில் ஜீவன்வேறென்று பலசுருதிகளும் சொல்லுகின்றன."ய ஆத்மநி திஷ்டந்நாத்மநோந்தரோ யமாத்மா ந வேத யஸ்யாத்மா ஶரீரம் ய ஆத்மாநமந்தரோ யமயதி ஸ த ஆத்மாந்தர்யாம்யம்ருதஃ" (எவனொருவன் ஜீவாத்மாவிலிருந்துகொண்டு ஜீவனுக்குள்ளேயாயிருக்கின்றானோ; யவனை இந்தஜீவனறியானோ; யவனுக்கு இந்தஜீவன்சரீரமோ; யவனிந்தஜீவனையுள்ளிருந்து நியமிக்கிறானோ; அப்படிப்பட்ட நிர்தோஷமாகிய ப்ரம்மமென்கிற பரமாத்மா உனக்கு அந்தர்யாமியாயிருக்கின்றான்) "ப்ருதகாத்மாநம் ப்ரேரிதாரம் ச மத்வா ஜுஷ்டஸ்ததஸ்தேநாம்ருதத்வமேதி" (ஜீவனையும் ஜீவனுக்குநியாமகனான பரமாத்மாவையும் வேறென்றறிந்தவன் அந்தபரமாத்மாவின் ப்ரீதிபெற்று, அவனாலருளப்பட்டமோக்ஷத்தையடைகிறான்.) "ஸ காரணம் கரணாதிபாதிபஃ" (ஜீவனில்வேறாய் ஜீவனைநியமிக்கிறபரமாத்மா காரணவஸ்துவாகிய பரப்ரம்மம்.) "தயோரந்யஃ பிப்பலம் ஸ்வாத்வத்த்யநஶ்நந்நந்யோ அபிசாகஶீதி" ஜீவாத்மாபரமாத்மா என்கிற இருவரில்ஒருவன்கர்மத்தாலே துன்பப்படுமவன் ஒருவன் கர்மஸம்பந்தமில்லாதவனாய் ஜீவனை நியமித்துக்கொண்டு விளங்குகிறான்.) "ஜ்ஞாஜ்ஞௌ த்வாவஜாவீஶநீஶௌ" (எல்லாவற்றையுமறிந்த பரமாத்மா ஒருவன். அஜ்ஞனாகிய ஜீவனொருவன். இவ்விருவரில் ஒருவன் பரதந்திரன்; ஒருவன் ஸ்வதந்திரன்.) "ப்ராஜ்ஞேநாத்மநா ஸம்பரிஷ்வக்தஃ" (ப்ராஜ்ஞனான பரமாத்மாவினால் அணைத்துக்கொள்ளப்பட்டவன் ஜீவாத்மா) "ப்ராஜ்ஞேநாத்மநாந்வாரூடஃ" (பரமாத்மாவினால் நியமிக்கப்பட்டவன் ஜீவாத்மா) "க்ஷராத்மாநாவீஶதே தேவ ஏகஸ்தத்த்வம்ஸ்வ

தஸ்மிம்ஶ்சாந்யோ மாயயா ஸந்நிருத்த:" (மாயையென்கிறபிரகிருதியை நியமிக்கிற பரமாத்மா பிரகிருதியைக்கொண்டு ஜகத்தைஸ்ருஷ்டிக்கின்றான் இந்தபிரகிருதியில் பரமாத்மாவில் வேறான ஜீவனகப்பட்டுக்கிடக்கிறான்) பிரகிருதி ஜீவன்இவ்விரண்டுக்கும்நியாமகனான பரமாத்மாகல்யாணகுணங்களால் நிறைந்தவன்.) "நித்யோ நித்யாநாம் சேதநஶ்சேதநாநாம் ஏகோ பஹூநாம் யோ விததாதி காமாந்" (நித்யராயனேகராயிருக்கிற சேதனர்களுக்கு நித்யனு யொருவனாயிருக்கிறபரமசேதனன் வேண்டியவற்றைத்தருகிறான்.) "யஸ்யாவ்யக்தம் ஶரீரம் யோऽவ்யக்தமந்தரே ஸஞ்சரந் யமவ்யக்தம் ந வேத யஸ்யாக்ஷரம் ஶரீரம் யோऽக்ஷரமந்தரே ஸஞ்சரந் யமக்ஷரம் ந வேத ஏஷ ஸர்வபூதாந்தராத்மா அபஹதபாப்மா திவ்யோ தேவ ஏகோ நாராயண:" (யவனவ்யக்தத்தினுள்ளிருக்கிறானோ யவனுக்கு அவ்யக்தம்சரீரமோ யவனையவ்யக்தமறியாதோ; யவனக்ஷரத்தினுள்ளிருக்கிறானோ யவனுக்கு அக்ஷரம்சரீரமோ; யவனையக்ஷரமறியாதோ; இப்படிப்பட்டவன் எல்லாபூதங்களுக்கு மந்தராத்மாவானவன் அவன்ஹேயப்ரத்யநீகனான நாராயணனே) இவைமுதலியசுருதிகளில் ஜீவன்வேறு; ப்ரம்மம்வேறு; இவைகளுக்கு அபேதமில்லையென்று நன்குவிளங்குமன்றோ; மண்ணுங்கட்டிமுதலிய விகாரங்களுக்கெப்போது மிடமாய்மிகவும் ஹீநமாயிருக்கிறவசித்துக்கும் நிர்விகாரமாயதிபரிசுத்தமாய் அகிலஹேயப்ரத்யநீகமாய் ஸமஸ்தகல்யாணகுணங்களுக்கு மாஸ்பதமாய்மற்றுள்ள எல்லாவற்றிலும் விலக்ஷணமாய் ஜ்ஞாநாநந்தஸ்வரூபமான பரப்ரம்மத்துக்கும்அபேதம் ஸம்பவியாதாப்போல, ஹேயாஸ்பதனாய் மின்மினிபோன்றஜீவனுக்கும் அபஹதபாப்மாவாய் அநவதிகாதிசயாஸங்க்யேய கல்யாணகுணகணாஸ்பதமான ப்ரம்மத்துக்கும் அபேதம் ஸம்பவியாது. "தத்த்வமஸி" முதலியவிடங்களில்சொல்லிய ஸாமாநாதிகரண்யம் சரீராத்மபாவத்தாலே யாகையால் இதற்கு அநுகூலமேயன்றி விரோதியன்று. இவ்வர்த்தம் "ஸர்வதா்மோபபத்தேஶ்ச" என்கிற ஸூத்திரத்தில் நன்றாகஉபபாதிக்கப்பட்டது. ஸூக்ஷ்மசிதசித்விசிஷ்டம்காரணம். ஸ்தூலசிதசித்விசிஷ்டம்கார்யம் ஆகையாலே எல்லாச்ருதிகளுக்கு அவிரோதம் ஸித்திக்கிறது. இப்படிசொல்லும்போது அபேதமும் ஸ்வரூபஸ்வபாவா ஸங்கரமும்ஸித்திக்குமன்றோ; "ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத்" (ஸ்ருஷ்டிக்குமுன்புஸத்தொன்றேயுண்டு) என்று ஒரேபொருளுண்டென்று சொல்லும்போதும் அசித்துகூடிய ஜீவனடங்கியிருந்தானென்றுஸம்மதிக்கவேணும் "வைஷம்யநைர்க்ருண்யே ந ஸாபேக்ஷத்வாத்" "ந கர்மாவிபாகாதிதி சேந்நாநாதித்வாத் உபபத்யதே சாப்யுபலப்யதே ச" (ஜீவனும் கர்மமுமநாதியாகையாலே விஷமமாக ஸ்ருஷ்டித்தானென்றும் குற்றமில்லை) என்கிற ஸூத்திரங்களில் ஸ்ருஷ்டிக்குமுன்பு ஜீவனிருந்தானென்று சொல்லப்பட்டதன்றோ; ஒன்றேயாயிருந்ததென்பது நாமரூபங்கள் நீங்கியிருந்தமையால்சேரும். ஆகையால் ப்ரம்மம்காரணமாமென்பதில் ஒருகுற்றமுமில்லை என்று அவ்வதிகரணத்தில் பகவத்பாஷ்யகாரரருளிச்செய்தார். இப்படியே, "ஏகோ ஹ வை நாராயண ஆஸீந்ந ப்ரஹ்மா நேஶாந:" "ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத்" "ஸ ஏஷ ஸ்ருஷ்டாதௌ க்ருத்ஸ்நம் ஸமாதத்தே" "உபயோரபி ஹி

தேதே நநூயியதே" இவைமுதலிய ஜீவனுக்கும் ப்ரமத்திற்கும் ஸ்வாபாவிகபேதமுண்டென்று சொல்லுகிற ஸூத்திரந்யாயங்களோடுவிரோதம்வரும். இப்படி சொல்லச்சொல்லப் பெருகுமானதாலிவ்வளவு தூஷித்ததுபோதுமென்று நிறுத்துகிறோம். ஆகையால்ஜீவனுக்கும் ப்ரம்மத்திற்கும் ஸ்வாபாவிகஸ்வரூபபேதமுண்டென்று இந்த உபநிஷத்தின்கருத்து.

இதி ப்ரச்நோபநிஷதி ஷஷ்ட: ப்ரச்ந:.

பிரச்நோபநிஷத்துமுற்றும்.

ஸ்ரீ பரப்ரம்மணே நம:.

ஹரி: ஓம்.

அத முண்டகோபநிஷதாரம்ப:.

க. ப்ரம்மா தேவானாம் ப்ரதம: ஸம்பபூவ விச்வஸ்ய கர்த்தா புவனஸ்ய கோப்தா । ஸ ப்ரம்மவித்யாம் ஸர்வவித்யாப்ரதிஷ்டா மதர்வாய ஜ்யேஷ்டபுத்ராய ப்ராஹ ॥

౧. బ్రహ్మాదేవానాం ప్రథమస్సంబభూవ విశ్వస్యకర్తాభువనస్యగోప్తా।
సబ్రహ్మవిద్యాం సర్వవిద్యాప్రతిష్ఠా మథర్వాయజ్యేష్ఠపుత్రాయప్రాహ॥

(ப-ம்.) விச்வஸ்ய கர்த்தா-எல்லாவற்றையும் ஸ்ருஷ்டிக்கின்ற, புவனஸ்ய கோப்தா - படைத்தஉலகத்தைக்காக்கின்ற, தேவானாம் ப்ரதம: - இந்திரன்முதலிய தேவர்களுக்கு முதல்வனாகிய, ப்ரம்மா-நான்முகன், ஸம்பபூவ - ப்ரம்மஜ்ஞானமுடையவனானன், ஸ:-அந்தப்ராம்மா - ஸர்வவித்யாப்ரதிஷ்டாம் - எல்லாவித்யைக்கும் ப்ரதிஷ்டையான, ப்ரம்மவித்யாம் ப்ரம்மவித்யையை, ஜ்யேஷ்டபுத்ராய அதர்வாய ப்ராஹ - ஜ்யேஷ்டகுமாரனாகிய அதர்வனென்பவனுக்குச் சொன்னான்.

ஸம-ஹா.—இவ்வுபநிஷத்து அதர்வண வேதத்துள்ளாயது. மேலேசொல்லுகிற ப்ரம்மவித்யைஸ்துதிப்பதற்கு ஸம்ப்ரதாயபரம்பரை சொல்லப்படுகிறது பெரியோரிடத்தில் வருத்தப்பட்டுக்கேட்டஇந்த புருஷார்த்தஸாதநமாகிய வித்யை என்றுகொண்டாடிப் புகழ்ந்தாலன்றோ கேட்பாருக்கு உருசிபிறந்துவேண்டுவார்கள் இந்தவித்யையின் ப்ரயோஜநத்தை இவ்வுபநிஷத்திலேமேலே வெளியிடப்படுகிறது, "பித்யதே" என்பது முதலிய சுலோகங்களால் இந்த வித்யைப்பெற்றவர் ஸம்ஸாரபந்தம் நீங்கி மோக்ஷத்தைபெறுவார்களென்று சொல்லப்படுகிறது. அபரவித்யை ஸாக்ஷாத்மோக்ஷஸாதனமாகாமையால் பரவித்யைமுக்யமென்றும் இதுமுக்யமானதற்குக்காரணத்தையும் நற்குருவருளாலிவ்வித்யை யடையப்பட வேண்டுமென்பதையும் "பரீக்ஷ்யலோகாந்"என்பதுமுதலாயவாக்கியங்களிலேயோதும். ஜ்ஞாநமாத்திரத்தில் எல்லாஆச்ரமத்தாருக்கு மதிகாரமுண்டானாலும் இப்படியுத்தமமாயப்ரம்மவித்யையில் ஸந்யாஸிக்கே முக்யாதிகாரம். கர்மாநுஷ்டாநத்தோடுசேர்ந்தக்ருஹஸ்தாச்ரமாதிகள் இவ்வித்யைக்குச்சேர்ந்தவையல்ல. கர்தாவாகாதப்ரம்மமென்று தன்னை

யுணருகையாகிற வித்யைக்கும் நான்கர்த்தாவாகிறேனென்று கர்மங்களையநுஷ்டிப்பதற்கும் சேர்க்கைகூடாதன்றே "பைக்ஷாசர்யஞ்சரந்த:" "ஸந்யாஸயோகாத்" என்பவைமுதலானவிடங்களிலே இதுவிளங்கச்சொல்லப்பட்டது. க்ருஹஸ்தாச்ரமத்திலிருந்தவர் இந்தப்ரம்மவித்யையை உபதேசிக்கின்றமையால் அவர்க்கும் ப்ரம்மவித்யையிலதிகாரம் கூடுமென்றுசிலர்சொல்லுவர் அதுபொருந்தாது கீழேசொல்லியபடி கர்மமும்வித்யையும் விரோதப்பட்டவையானதால் இக்தலிங்கம் ஸாதியாது இப்படிப்பட்ட வித்யையையோதுகிற இவ்வுபநிஷத்திற்கு சுருங்கவ்யாக்யாநம் பண்ணுகிறோம் இந்த உபநிஷத்தென்கிற பேராலேயே இவ்வித்யையின் பெருமைவிளங்கும் தருமம் ஜ்ஞாநம் வைராக்கியம் ஐசுவரியம்முதலியவற்றால் மற்றோரை மிக்காநின்றமையால் இந்திரனுள்ளிட்ட தேவக்குழாங்களில் சிறந்தவனாய பிரமன்பலவகைப்பட்ட ஸ்ருஷ்டிகளில் ஒருஸ்ருஷ்டியில் முதல்வனாய அதர்வனென்பவனுக்கு எல்லாவித்யைகளுக்கும் நிலையிடமாய ப்ரம்மவித்யையுபதேசித்தான். இங்குபிரமனையும்வித்யையும்கொண்டாடியது வித்யையைஸ்துதிசெய்வதற்கு.

ரா-ஹா.—ஸ்ருஷ்டிகர்த்வான ப்ரம்மா தன்முதல்குமாரனாகிய அதர்வனென்பவனுக்கு ப்ரம்மவித்யையையுபதேசித்தான். ப்ரம்மத்தையறிந்தபோது அறியவேண்டுமதொன்றுமில்லை யானதால் எல்லாவித்யைக்கும் ப்ரம்மவித்யையை ப்ரதிஷ்டையென்றது வித்யையில் ப்ரவ்ருத்திபிறப்பிப்பதற்கு கதைசொல்லப்படுகிறது.

உ. அதர்வணே யாம் ப்ரவதேத ப்ரஹ்மா அதர்வா தாம் புரோவாசாங்கிரே ப்ரஹ்மவித்யாம்| ஸ பாரத்வாஜாய ஸத்யவாஹாய ப்ராஹ பாரத்வாஜோऽங்கிரஸே பராவராம்||

௨. అథర్వణేయాంప్రవదేతబ్రహ్మా థర్వాతాంపురోవాచాంగిరేబ్రహ్మవిద్యామ్।
సభారద్వాజాయ సత్యవాహాయప్రాహ భారద్వాజోఽంగిరసేపరావరామ్॥

(ப-ம்.) ப்ரஹ்மா அதர்வணே யாம் ப்ரவதேத - பிரமனதர்வா என்பவனுக்கு எந்தவித்யையையுபதேசித்தானோ, தாம் ப்ரஹ்மவித்யாம் அதர்வா புரா உவாச அங்கிரே - அந்தப்ரம்மவித்யையை அதர்வாஎன்பவர் தன்னுடைய சிஷ்யராகிய ஆங்கீஎன்பவருக்குச்சொன்னார், ஸ: பாரத்வாஜாய ஸத்யவாஹாய ப்ராஹ- அந்த ஆங்கீஎன்பவர் பாரத்வாஜகோத்ரியாகிய ஸத்யவாஹரென்பவருக்குச்சொன்னார், பாரத்வாஜ:-அங்கிரஸே பராவராம்-அறியாதாமறிந்தோரிடத்தி லறியவேண்டுகையால் பராவரையென்கிற அந்தபரம்மவித்யை அங்கிராஎன்பவருக்குஅந்தபாரத்வாஜராகியஸத்யவாஹர் சொன்னார்.

பதார்த்தயார்த்தபேதங்கள்.

பதஉரையாலே விளங்கும் கருத்து சங்கரராமாநுஜ பாஷ்யங்களிரண்டுக்குமொக்கும் சிறிதும் பேதமில்லை.

௩. சௌநகோ ஹ வை மஹாசாலோऽங்கிரஸம் விதிவதுபஸந்ந: பப்ரச்ச| கஸ்மிந்நு பகவோ விஜ்ஞாதே ஸர்வமிதம் விஜ்ஞாதம் பவதீதி||

௩. శౌనకోహవైమహాశాలోఽంగిరసంవిధివదుపసన్నఃపప్రచ్ఛ । కస్మిన్నుభగవోవిజ్ఞా
తేసర్వమిదంవిజ్ఞాతంభవతీతి॥

(ப்-ம்.) மஹாஶால: ஶௌநக: - க்ருஹஸ்தாச்ரமிகளில் சிறந்தவராய சுநகரென்பவரின்குமாரர், அங்கிரஸம் விதிவதுபஸந்ந: பப்ரச்ச அங்கிராஎன்பவரை சாஸ்திரப்படியடைந்து வினவினர், பகவ: கஸ்மிந்நு விஜ்ஞாதே ஸர்வமிதம் விஜ்ஞாதம் பவதீதி - எல்லாமறிந்தமுனிவரே எப்பொருளையறிந்தாலிஃதெல்லா மறியப்பட்டதாமென்று வினவினர்.

ஸம்-ஹா.—இங்கு ஆசாரியரிடத்தில் விதிப்படி யடைந்தது சொல்லப்பட்டாலும் மேலோர்க்கும் நமக்குமிந்த விதி முக்யமேயாம். ஆனதால் நடுவில் கூறப்பட்டது.

ரா-ஹா.—சுநகரின் குமாரராகிய மகாகிருகஸ்தர், ஸமித்பாணி: என்கிற விடத்தில் சொல்லப்பட்ட விதிப்படியடைந்து ஆசாரியராகிய அங்கிரஸரை எப்பொருளையறிந்தா லிவ்வுலகமெல்லாமறியப்படும். முக்காலத்தையுமறிந்தமுனிவரே மண்ணையறிந்தபோது அதின்காரியமாகிய குடமுதலியவை யெல்லாமறியப்படுவதுபோலொரு காரணப்பொருளையறியவே எல்லாப்பொருளுமறியப்படுமெல்லவோ; அக்காரணப்பொருள்யாது என்று வினவினரென்று இந்த சுருதிக்குப்பொருள். இங்கு எல்லாமென்பதற்கு ஸ்தூலமானசித்து அசித்து இவைகளுடன் சேர்ந்த பரப்ரம்மமோ; அல்லது சித்து மசித்துமேயோ; பொருளென்று கொள்வது. இந்த சௌநகர் ப்ரம்மஸ்வரூபத்தை யறியாதே ப்ரச்நம்பண்ணுகிறராகையால் இவர் சொல்லிய வாக்கியத்தில் சேர்ந்த எல்லாமென்கிற பதத்திற்கு ப்ரம்மத்தையறிந்தவர் வாயில் பிறந்த சொல்லுக்குப்போல் பரப்ரம்மம் வரையில் பொருள்கொள்ளக்கூடாமையால் முந்திய கல்பம் தள்ளுண்டது. மேலும், அந்தபுருஷனால் இவ்வுலகெல்லாம் நிறைந்திருக்கின்றது எனமேல் விடையளிக்கும் வாக்கியத்தில் எல்லாமென்கிற பதத்திற்கு புருஷனைத்தனித்துச்சொல்லி விடுகையால் விசேஷணமாகிய ஸ்தூல சிதசித்துக்களேபொருளானதால் அங்குபோலிங்கும் விசேஷணமாகிய ஸ்தூல சிதசித்துக்களே பொருளாகலாமன்றி இவைகளோடு சேர்ந்த ப்ரம்மம் பொருளாகக்கூடாது. ஆகில் விசேஷணமாகிய ஸ்தூல சிதசித்துக்களே பொருளென்று இரண்டாவது கல்பத்தைக்கொள்ளுவோமென்றால் அந்த கல்பத்தில் மேலேசொல்லப்படும் அக்ஷரபரப்ரம்மம் ஸ்தூல சிதசித்துக்களில் வேறாயதானதால் அவைகளுக்கு இந்த அக்ஷரபரப்ரம்மம் உபாதாநகாரணமாவது சேராது. ஆகையால் இங்கும்பொருளமையும் வழியாதெனில், கூறுகின்றோம். விசேஷணமாகிய ஸ்தூல சிதசித்துக்களே இங்கு, எல்லாமென்கிற பதத்திற்குப்பொருள். மேலே சொல்லப்படுகிறபடி அக்ஷரபரப்ரம்மம், தன்னில் வேறாய ஸ்தூல சிதசித்துக்களுக்கு உபாதாநகாரணமாவதும் பொருந்தும். பிந்நமானாலும் உபாதாநகாரணமாகலாம். அபிந்நமே உபாதாநகாரணமென்கிற நிர்பந்தமில்லை. முன்னான ஸூக்ஷ்மாவஸ்தையோடு கூடிய பொருள் பின்னான ஸ்தூலாவஸ்தையோடு கூடிய பொருளுக் குபாதாநகாரணமாம். அவஸ்தையை யுடைத்தாயிருக்கை சித்து அசித்து ஈச்வரன் என்கிற விம்மூன்றுக்குமுண்டு. ஸாக்ஷாத்தாக சித்துக்கும் சரீரம் தர்மபூதஜ்ஞானம் இவைகளின் வழியே சித்துக்கும் இவ்விரண்டின் வழியாக ஈச்வரனுக்கும் அவஸ்தையுண்டாகும். என்றிவ்வளவே பேதம். ஆக மகத்தத்வாவஸ்தை அஹங்காரதத்வாவஸ்தை முதலியவருகிற ஸ்தூலாவஸ்தையையுடைத்தாயிருக்கை அசித்து சித்து பரமாத்மா இவை எல்லாவற்றிற்கும்பொதுவாயிருக்கையால் பரமாத்மாவுக்குப்போலே சேதநம் அசேதநம் இவற்றுக்கும் வருகிற அவஸ்தையுண்டாகையால் பரமாத்மா இவற்றுக்கு பாதாநகாரணமாகையில் தடையில்லை. ஆக இவை எல்லாமென்பதற்கு ஸ்தூல சிதசித்துக்களாகிய விசேஷ

ண்ம்பொருளானாலும் அதற்குமேல்சொல்லப்போகிற அக்ஷரபரப்ரம்மம் உபாதாநகாரணமாமென்று, எதையறிந்தாலெல்லாமறியலாமென்று விசேஷணத்துக்கு உபாதாநகாரணம்யாதென்று, வினவத்தகும். மகாஸித்தாந்தத்திலும் எல்லாஉலகமும் ப்ரம்மகார்யமாகையாலும் ஒன்றாகையால் அதற்குவிரோதியானபேதம் நிஷேதிக்கப்படுகிறது.என்கிறபாஷ்யவ்யாக்யாந ப்ரகரணத்தில் ச்ருதப்ரகாசிகையில் ஸ்ரீவ்யாஸாசாரியரால் விசிஷ்டங்களுக்கே உபாதாநகாரணகாரியபாவமுள்ளது; ஸ்தூலசிதசித்துக்களாகிய விசேஷணங்களுக்கு ப்ரம்மம் உபாதாநகாரணமாவதில்லை. உயிருமுடலுமாகையாகிற சரீராத்மபாவமானது அறிவால் பிரித்த விசேஷணங்களுக்கும் விசேஷ்யமாகிய ப்ரம்மத்திற்குமாம். சிதசித்விசிஷ்டப்ரம்மத்தை சிதசித்விசிஷ்ட ப்ரம்மம்நியமியதாகையால் சுத்தப்ரபஞ்சத்திற்கு சுத்த ப்ரம்மமேயந்தர்யாமியாமன்றோ; "ஸத்தைக்காரணமாகஉடையது ஸத்தையாத்மாவாக உடையது இவ்வுலகம்" என்கிற சாந்தோக்யவாக்கியத்தில், 'காரணமாகவுடையது' என்கிறவிடத்திற்கு 'ஸத்' என்கிற பதம் விசிஷ்டப்ரம்மத்தைச் சொல்லுகிறதென்றும், 'ஆத்மாவாக உடையது' என்கிறவிடத்திற்கு 'ஸத்' என்கிறபதம் சுத்தப்ரம்மத்தைச்சொல்லுகிறது.ப்ரம்மத்திற்குப்ரம்மம் அந்தர்யாமியாகாதாகையாலும், ப்ரபஞ்சமும் விசிஷ்ட ப்ரம்மத்தை உபாதாநமாகஉடைய தன்றாகையாலு மிப்படியே பொருள்கொள்ளவேண்டுமெனச் சொல்லி இந்த பக்ஷத்தில் 'ஸத்' என்கிற பதங்களுக்கு பொருள்வேறுபடுகையாலும் 'உலகம்' என்கிற ஒருபதத்திற்கே ப்ரம்மம் அந்தர்யாமி என்னும்போது கேவல உலகத்தையும் ப்ரம்மம் காரணமென்னும்போது விசிஷ்ட ப்ரம்மத்தையும் பொருளாகக்கூறவேண்டிவருகின்றமையாலும், இப்பக்ஷமழகல்லவென்றெண்ணி, 'உலகம்' என்கிறபதம் கேவல உலகத்தையே சொல்லும்; 'ஸத்' என்கிறபதமும் சுத்தப்ரம்மத்தையே சொல்லுமென்கிறபக்ஷத்தைப்பற்றி, இப்பக்ஷத்தில் கேவலப்ரபஞ்சத்துக்கு ப்ரம்மமுபாதாநகாரணமாவதெப்படி என்றால் இவ்வுலகத்தில்வருகிற அவஸ்தையுண்டாகையாலுமிதற்குமுன் அவஸ்தையுடைய ப்ரம்மம் விசிஷ்டத்துக்கு விசிஷ்டம்காரணமாவது போலவே கூடுமென்று தமக்குத்திருவுள்ளமான இந்தபக்ஷம் உபந்யஸிக்கப்பட்டது பகவத்பாஷ்யகாரராலும் 'ஆத்மேதிதூபகச்சந்தி, என்கிறவிடத்தில் சித்து அசித்து என்கிற எல்லாவஸ்துவும் தன்னிடத்திலிருந்து பிறக்கையாலும் தன்னிடத்திலேலயிக்கின்றமையாலும், தன்னால்காக்கப்படுகின்றமையாலும் தன்னால்நியமிக்கப்படுகையாலும், தனக்கு சரீரமாகையாலும் தானே எல்லாவற்றுக்கு மாத்மாவாகின்றது ப்ரம்மமேயாம். என்று சரீரமாகும்பொருளே, உபாதாநகாரணமாகிய ப்ரம்மத்தின் காரியமாகின்றதெனப்பல க்ரந்தங்களிலும் அருளிச்செய்யப்பட்டது. இதை வேறாக்குவது நம்மால்கூடாதன்றோ. "ப்ராஜ்ஞேநாத்மநாஸம்பரிஷ்வக்த:" என்கிறவிடத்தில் பரமாத்மாவில் வேறான ஜீவனுக்கு லயம் சொல்லப்பட்டதன்றோ. இங்குபரிஷ்வங்கம் சொல்லப்பட்டதேயன்றி லயமன்று ; பரிஷ்வங்கசப்தத்திற்கு லயம்பொருளல்லாமையால் என்று சொல்லவமையாது. "ஸ்வாப்யயாத்" என்கிற ஸூத்திரத்தையும் அவ்விடத்திற்குபாஷ்யத்தையும் பர்யாலோசிக்கும்போது பரிஷ்வங்கம்லயமேயென விளங்குமன்றோ; "ஸதா ஸோம்ய ததா ஸம்பந்நோ பவதி" என்கிற வாக்கியத்திற்கு ஜாகரதசையில் ராகத்வேஷமுதலியவற்றோடுகூடிய ஜீவனோடுசேர்ந்த பரமாத்மா ஸுஷுப்தியில் ராகமுதலியவை நீங்கிய ஜீவனோடு சேர்ந்திருக்கின்றான் என்றுபொருளாகையாலே அவ்வாறே ப்ராஜ்ஞேநாத்மநா" என்கிற வாக்கியத்திற்கும் பொருள்கொள்ளலாகாது; அப்படியாமாயின் இவ்வாக்யம் ஜீவாத்மா பரமாத்மா இவர்களுக்குபேதத்தைபோதியாமையால் "ஸுஷுப்த்யுத்க்ராந்த்யோர்பேதேந" என்கிற ஸூத்திரத்தில் ஜீவாத்மா பரமாத்மா இவர்களுக்கு பேதத்தை

யுணர்த்துமென்று கொள்ளப்பட்டிருக்கின்றமையாலத்தோடுவிரோதம்வரும். இனி வேறுனாலும் முந்திய அவஸ்தையை யுடைத்தானவை எல்லா முபாதாநகாரணம், பிந்திய அவஸ்தையையுடையவை எல்லாங்காரியம் என்றால்வருகிற மகாந் அஹங்காரம் முதலிய அவஸ்தையையுடைய பரமாத்மாவுக்கு முந்திய அவ்யக்தாவஸ்தையை யுடைத்தான அசேதந முபாதாநகாரணமாகவேண்டுகின்றமையால் வருகிற அவஸ்தையையுடைத்தானவைக்கு முந்திய அவஸ்தையையுடைய அபிந்நவஸ்துவே உபாதாநகாரணமென்று சொல்லவேண்டும். ஆகப்ரம்மத்தில் வேறான சேதநாசேதநங்களுக்கு ப்ரம்மமுபாதாநகாரணமாகாதெனில் இதற்குவிடையளிக்கின்றோம். வருகிற அவஸ்தையையுடைத்தான பொருளுக்கு முந்திய அவஸ்தையையுடைய காரணப் பொருள் உபாதாநகாரணமெனில் இவ்விணுவுக்கிடமில்லை. வருகிற அவஸ்தையையுடைய ப்ரம்மத்திற்கு அசேதநம்காரணமென்பதில் ப்ரமாணமில்லாமையால் அசேதநம் ப்ரம்மத்திற்குபாதாநகாரணமாகாதாயினும் ப்ரம்மம் எல்லாவற்றிற்கும் காரணமானதால் வருகிற அவஸ்தையையுடைய அசேதநத்திற்கு ப்ரம்மம் உபாதாநகாரணமாகலாம். இனி தந்மாத்திராவஸ்தை பூதாவஸ்தை முதலிய அவஸ்தைகளை யுடைத்தாந ப்ரக்ருதிக்கு அவ்யக்தாவஸ்தை மகத்வாவஸ்தை முதலிய அவஸ்தைகளையுடைய ப்ரம்மம் உபாதாநகாரணமென்று இதனால் சொல்லப்பட்டதாயிற்று; இவ்வாறு கூடுமென்றிசைந்தாலும் அவ்யக்தாவஸ்தை முதலிய அவஸ்தைகள் ப்ரக்ருதியின் கண்ணேயுளவானதால் ப்ரம்மம் இவ்வவஸ்தைகளையுடையதாகாது; ஆக ப்ரம்மம் ப்ரக்ருதிக்குபாதாநகாரணமாவது கூடாதெனில், இவ்விணுவுக்கு ப்ரக்ருத்யதிகரணத்தில் சுருதப்ரகாசிகையில் ஸ்ரீவ்யாஸாசார்யர் இவ்வாறு விடைதந்திருக்கிறார். அதாவது ப்ரம்மம் சித்து அசித்து இவைகளை சரீரமாகஉடையதானதால் ப்ரக்ருதி ப்ரம்மஸ்வரூபத்திலடங்கியதென்று ப்ரக்ருதியினவஸ்தைகளெல்லாம் ப்ரம்மத்தினவஸ்தைகளேயாம். விசிஷ்டவஸ்துவினதுஸ்வரூபம் விசேஷ்யமாத்திரமானதல்ல. விசிஷ்டவஸ்துவுக்கு விசிஷ்டமே ஸ்வரூபம். மண்குடத்திற்கு மண்மாத்திரம் ஸ்வரூபமல்லவன்றோ. குடவடிவு என்கிற கடத்வஜாதியுடன் சேர்ந்தமண்ணேயன்றோ ஸ்வரூபமாம். இங்கு விசேஷணமும் ஸ்வரூபத்தில் சேருமாகில் தடியுடைய ஒருமனிதனுக்கு விசேஷணமாகியதடியும் தடியின் ஸம்பந்தமும் ஸ்வரூபமாகவேணுமென்று வருகின்றமையால் விசேஷணம் ஸ்வரூபத்தில் சேராதெனச்சிலர்மறுப்பர்; அப்படி சொல்லப்போகாது. தடியும்தடி ஸம்பந்தமும் மனிதனைவிட்டுப்பிரியும் தன்மையனவாகையால் அவைஸ்வரூபத்தில் சேராவாயினும் தனித்துப்பிரியாது அப்பொருளுள்ளவரையி லப்பொருளோடு சேர்ந்திருக்குமவை ஸ்வரூபமாவதில் குற்றமில்லையன்றோ. மேலும் குடமுதலியவற்றுக்கு தண்ணீர் கொண்டுவருகை முதலிய அக்காரியங்களுக்குத் தக்கதாகையாகிற யோக்யதையே ஸ்வரூபமாம். மண்மாத்திரமல்ல. அப்படியாயின் பிண்டமாயிருக்கும்போதும் குடமென்று பெயர் வரவேண்டும். அந்த யோக்யதையாவது ஓட்டையில்லாத குடமாகையாகிற அச்சித்ரகடத்துவமேயாம். எந்தவஸ்துவுக்கு எந்தகாரியத்தைஸாதிக்கும்போது எந்த ஆகாரமின்றியமையாததாம்; அவ்வஸ்துவுக்கு அக்காரியத்தையுண்டுபண்ணும்போது அவ்வாகாரம் யோக்யதையாகின்றது. நெருப்பு உடம்பை எரிக்கும்போது உஷ்ணமின்றியமையாததாதலால் நெருப்புக்கு எரிப்பதில் உஷ்ணம் யோக்யதையாகின்றது. வாளுக்குக்கூர்மையும் யோக்யதையாகும். இப்படியே மண்ணுக்கும் குடமாம்போது யோக்யதையாவது மண்ணாயிருக்கை ம்ருதுவாயிருக்கை நீர் கலந்திருக்கை முதலியவையாம். இவ்வஸ்துக்களுக்கு இவை யோக்யதையாவதுபோல ப்ரம்மத்திற்கு ஜகத்ரூபத்தாலே பலவாகப்பரிணமிக்கும்போது, ப்ரக்ருதி ஜீவன்காலம், இவைகள் விட்டுப்பிரியாத விசேஷணங்களாகையால் யோக்யதையாகின்றன. இக்கார

ணத்தாலே சில ப்ரமாணங்களில் ப்ரக்ருதி முதலியவை பரப்ரம்மசக்தி என்று இவை சக்திசப்தத்தாலே சொல்லப்படுகின்றன. காரியத்திற்கு வேண்டிய விட்டுப்பிரியாத விசேஷணங்களேயன்றோ சக்தியெனப்படும். யோக்யதை யோக்ய ஸ்வரூபத்தில் சேர்ந்ததாகையால் ப்ரம்மத்திற்கு யோக்யதையாகிய ப்ரக்ருதி ப்ரம்மஸ்வரூபத்திலடங்கியதென்று அவ்யக்தாவஸ்தைமுதலிய அவஸ்தைகள் ப்ரம்மஸ்வரூபத்திலிருப்பனவாகின்றமையால் ப்ரம்மம் ப்ரக்ருதிக்குபாதாநகாரணமாகலாம், இவ்வாறு சித்துஅசித்து இவைகளுடன்சேர்ந்த விசிஷ்டமே ப்ரம்மஸ்வரூபமாகையால் ச்ருதியிலும் "தத்யதா ரதஸ்யாரேஷு நேமிரர்பிதா நாபாவரா அர்பிதா ஏவமேவைதா பூதமாத்ரா: ப்ரஜ்ஞாமாத்ராஸ்வர்பிதா: ப்ரஜ்ஞாமாத்ரா: ப்ராணேர்பிதா:" என்று சக்ராந்தமென்கிற சக்கிரத்தில் சுற்றும் கோர்க்கப்பட்டமரம் அரங்களென்கிற கொம்புகளில் கோர்க்கப்பட்டாப்போலே பஞ்சபூதமுதலியவை எல்லாம் ஜீவாத்மாக்களிடத்தில் கோர்க்கப்பட்டிருக்கின்றன; அரங்கள் குடமென்கிறநாபியில்கோர்க்கப்பட்டிருப்பதுபோல் ஜீவாத்மாக்கள் பரமாத்மாவினிடத்தில் கோர்க்கப்பட்டிருக்கின்றனரென்று அரநாபித்ருஷ்டாந்தம் சொல்லப்பட்டது. சக்கிரமாவது நாபி மாத்திரமல்ல; அரங்களும் சக்ராந்தமென்கிறநேமியும் சக்ரஸ்வரூபத்திலடங்கியவையன்றோ; இந்த த்ருஷ்டாந்தத்தால் அரநேமிகள் சக்ரஸ்வரூபத்தில் சேர்ந்தவையாறுப்போல ஜீவாத்மாப்ரக்ருதி இவைகளும் ப்ரம்மஸ்வரூபத்தில் சேந்தவை என்று நன்கு விளங்கும். இலை பட்டை இவைகளோடுசேர்ந்த வாழையை சித்து அசித்து இவைகளோடுசேர்ந்த ப்ரம்மத்திற்குத்ருஷ்டாந்தமாக ச்ருதிசொல்லுகிறது. இதனாலும்சேதநா சேதநங்கள் ப்ரம்மஸ்வரூபத்தில் சேர்ந்தவைஎன்று விளங்கும். இலைபட்டை இவைகளைவிட்டு தண்டுமாத்திரமே வாழையல்லவன்றோ. இலைப்பட்டைகளோடு சேர்ந்ததண்டேயன்றோவாழையாகும். இப்படி சிதசித்துக்கள்சேர்ந்து ப்ரம்மஸ்வரூபமாகின்றது. பலத்ருஷ்டாந்தங்களிப்படியே ச்ருதியில் காட்டப்படுகின்றன. த்ருஷ்டாந்த ஸ்தலங்களில் எல்லாமசேதநமாகையால் நியாம்ய நியாமகபாவமில்லாமையால் சரீராத்மபாவமில்லை. ஆகையால் விசேஷணவாசகசப்தங்கள் விசேஷ்யத்தைச்சொல்லா. இங்கு விசேஷ்யவிசேஷணங்கள் சேதநாசேதநரூபங்களாகையாலே நியாம்ய நியாமகபாவம் கூடுமாகையால் சரீராத்மபாவமுண்டு ஆகையாலே சேதநாசேதநவாசிசப்தங்கள் ப்ரம்மத்துக்கு வாசகங்களாகின்றன என்கிற இவ்வளவுபேதமொழிய மற்றவிஷயங்களில் பேதமில்லை. ஆகமகத்வமுதலிய அவஸ்தைகள் விசிஷ்டப்ரம்மஸ்வரூபத்தில் பிறந்தவையாகையாலே ஜகத்திற்குப்ரம்மமுபாதாநகாரணமாவது முக்யமேயாம். மேலும் ப்ரக்ருதிஜீவன் இவைகள் ஸ்வரூபத்தில்சேராதவையானாலும், ப்ரம்மம் ஜகத்துக்கு பாதாநகாரணமாவது முக்யமேயாம். சரீரத்தின்வழியாலே உபாதாநகாரணமானால் முக்யமென்பதற்குக்குறையில்லை. காரணமாவதற்குவேண்டியவற்றால் வ்யவஹிதமாகையாலே. ஜ்வாலையினால் வ்யவஹிதமானாலும் கட்டைசமையலுக்குக் காரணமாகின்றதன்றோ. இனி, மண்ணால் வ்யவதாநமுண்டானாலும் குலாலன் உபாதாநகாரணமாகலாம்; காரணமாவதற்குவேண்டியதேயன்றோ மண்ணுமெனில்மண்ணில்வேறாய்ப்பிரிந்த குலாலனுபாதாநமாகான். ப்ரக்ரு

தியைப்பிரியாதப்ரம்மம் உபாதாநமேயாம். இனி, இவ்வழியாலே ப்ரம்மமுபாதாநகாரணமாமாயினும் கார்யாவஸ்தை உபாதாநகாரணத்திலிருக்கவேணுமாகையால்கார்யாவஸ்தைப்ரக்ருதியிலிருக்கின்றமையால்ப்ரம்மத்திலவஸ்தையில்லையேயெனில் ; இதற்கும் விடைதருகிறோம். குடத்திலெடுத்த தண்ணீரைப் புருஷன் சுமக்கும்போது குடம்நடுப்பட்டிருந்தாலும் தண்ணீரைப்புருஷனே தாங்குவதுபோல மகத்வமுதலிய அவஸ்தைகளைப்பரமாத்மா தாங்குகின்றமையால் அவஸ்தைகளுக்குமுக்கியாச்ரயம் பரமாத்மாவேயாகையால் பரமாத்மா ஜகத்துக்கு பாதாநகாரணமென்பது முக்யமேயாம். புருஷன் தண்ணீரைத்தாங்குகிறகுடத்தைத் தாங்குகிறானன்றி தண்ணீரைத்தாங்குவதில்லை என்னப்போகாது; அப்படியாயின் தண்ணீரில்லாதபோதிலக்குடத்தைத்தாங்கியதால் வருகிற சிரமத்தைக்காட்டில் அதிகமான ச்ரமம் தண்ணீரோடுகூடியபோதும் பிறக்கக்கூடாதன்றோ. வஸ்திரம் தர்ப்பம் முதலியவைகளைக்கீழேசேர்த்து அவற்றின்மேலே குந்தினாலும் புருஷனுக்கு முக்யாதாரம் பூமியேயாம்; வஸ்திரம் தர்ப்பமுதலியவையல்ல. அவைகளுக்குப் புருஷனைத்தாங்குகிறசக்தியில்லையன்றோ; அவை புருஷன்நேராக பூமியில்படாமல் மறைக்கின்றன. ஆகையால் அவ்யவஹிதமே முக்யாதாரமென்கிற நியதியில்லை. ஆகதிருட்டாந்த விடங்களிலேபோல ப்ரம்மமே அவஸ்தைகளுக்குமுக்யாதாரமாகையால் ப்ரம்மமே ஜகத்துக்குமுக்யோபாதாநமாம். இனி, ஜகத்துக்குபாதாநகாரணமாகிய அவ்யக்தத்தை சரீரமாக உடையதானதால் ப்ரம்மம் ஜகத்துக்குபாதாநகாரணமாகில் தார்க்கிகர்மதத்திற்கு முங்கள்மதத்திற்கும்பேதமென்ன? நியமிக்கப்படுவது சரீரமென்கையாலும் சிதசித்துக்கள் ஈச்வரநியாம்யங்களென்றவர்களும் சொல்லுகையாலும் உபாதாநகாரணமீச்வரனென்று அவர்களுக்கு ஸித்திக்கின்றதேயெனில், இதுநல்ல பூர்வபக்ஷமாயிருக்கின்றது. தார்க்கிகரானால் அப்ராமாணிகமாயே சொல்லுவரென்றும், அவர்கள் சொன்னாலதை ஒப்பக்கூடாதென்றும் நாங்கள் ப்ரதிஜ்ஞைசெய்யவில்லை. நாம்சொன்னபடியவர்களும் சொன்னாலெங்களுக்கதனால் நஷ்டமில்லை. மேலும் ஸாம்யமும் சொல்லப்போகாது, ஆகாசம் காலம் திக்குமுதலியவற்றை ஈச்வரநியாம்யமென்றவர்களங்கீகரியாரன்றோ; என்றருளிச்செய்தார். ஆகப்ரம்மம்ஜகதுபாதாநமாம்போது ஒரநுபபத்தியுமில்லை. இனித்தானிப்படியுபாதாநமென்று ஸாதித்தாலும் ப்ரம்மத்தை யறிந்தபோது ப்ரபஞ்சமுமறியப்படுமென்பது பொருந்தாது. ப்ரபஞ்சம் ப்ரம்மத்தில் வேறாயதன்றோ; ஸூக்ஷ்மசிதசித்துடன்சேர்ந்தவிசிஷ்டப்ரம்மஸ்வரூப மறியப்பட்டால் எல்லாமதிலடங்கியதாகையாலே யறியப்படும்; வநமுழுது மறிந்தபோது வநத்திலடங்கிய மாமரம் பலாமரம்முதலியவையறியப்படுவதுபோல சிதசித்துக்களுமறியப்படுகின்றமையால் எல்லாமறியப்படுமென்பதுபொருந்துமெனில், "ஸத்யம்ஜ்ஞாநமநந்தம்ப்ரம்ம" என்கிற லக்ஷணமுடைய ப்ரம்மத்தில் அந்த லக்ஷணமில்லாத சேதநாசேதநங்கள் சேரவழியில்லாமையால், அது சேராது. இனி ஸத்ய ஜ்ஞாநாநந்தலக்ஷணம் விசேஷ்யமாத்திரத்திற்கு லக்ஷணமாம்; எதையறிந்தா லெல்லாவற்றையுமறியலாகு மப்படிப்பட்ட ப்ரம்மம் விசிஷ்ட ப்ரம்மமே; அதற்கு லக்ஷணம் ஜந்மாதி காரணத்வமே என்று ஸூத்ரகாரர்கருத்தென்று ஜந்மாதி ஸூத்திரச்ருத் ப்ரகாசிகையில் வ்யாஸாசார்யரருளிச்செய்தாரோ எனில்; காரணவாக்கியத்திற்கும் சோதகவாக்யத்திற்கும் பொருள் மாறுபாடு கூடாமையாலதுவும் சேராது. மேலும் 'ஆத்மாவிலிருந்து ஆகாயம்பிறந்தது' என்கிற தைத்திரீய

வாக்கியத்தால் ஆத்மாவே உபாதானமென்றோதப்படுகிறதன்றோ. இனி, உங்களிஷ்டப்படி விசிஷ்டமே ப்ரம்மமானாலும் "वाचारम्भणं विकारो नामधेयं मृत्तिकेत्येव सत्यम्" என்கிற ச்ருதியில் உபாதானகாரணத்திற்கும் காரியத்திற்கும் பேதமில்லையானதால் காரணத்தையறிந்தபோதே காரியமெல்லாமறியப்படுமென்று சொல்லுகின்றமையால் இவை எல்லாமென்று காட்டப்படுகிற விசேஷணமாகிய ப்ரபஞ்சத்திற்கும் விசிஷ்டப்ரம்மத்திற்கும் அபேதம் ஸம்பவியாமையால் விசிஷ்டப்ரம்மத்தை யறிந்தபோதிவை எல்லாமறியப்படுமென்று சொல்லப்போகாது சரீரத்திலுள்ளவிகாரங்களெல்லாம் சரீரியினிடத்திலிருக்குமென்பது, எல்லா லௌகிகசாஸ்திரதர்க்கங்களுக்கும்விருத்தமாம். "நதத்ருஷ்டாந்தபாவாத்" என்கிறஸூத்ரபாஷ்யங்களுக்கும் விருத்தம். முந்திய அவஸ்தையையுடைய பொருளை நியமிப்பது உபாதானகாரணமென்பது கட்டுவார்த்தை. மேலும் பிறக்கும்பொருளுக்கன்றோ உபாதானகாரணம் தேடவேண்டும்; உங்கள் மதத்தில் த்ரவ்யம் நித்யமாகையால் பிறவாததன்றோ; சப்தம் ஸ்பர்சம் முதலிய அத்ரவ்யரூபமாகிய விகாரமே பிறக்குமாகையாலிவைகளுக்கும் ப்ரம்மத்திற்கும் பேதமேயாகையால் ப்ரம்மத்தையறிந்தபோது இவை எப்படி யறியப்படும். இனி, கடமென்கிறபொருளுக்குத்பத்தியாவது கடத்வாஸ்தையேயாம். மேலே மேலே வருகிற அவஸ்தை முன்னிருந்த அவஸ்தையோடுகூடிய பொருளின் நாசமாகும். அவ்வவஸ்தையையுடைய பொருளுக்குத்பத்தியாம். அவஸ்தைநித்யமல்லாமையாலே அதற்குப்பிறப்புவேணுமென்பது உத்பத்தி நித்யமல்லாமையாலே உத்பத்திக்குத்பத்தி வேணுமென்பது போலதிவாதம். தனித்துப்பிரிந்திருக்கிறவற்றுக்கே தனிப்பிறப்பு முதலியவை வேண்டுமன்றி தனித்திராதவற்றுக்குத்தனியே பிறப்புமுதலியவை வேண்டா இக்காரணங்கொண்டே உத்பத்திக்கு உத்பத்தி வேண்டாமென்றதும், ஆகையால்பொருளைவிட்டுப் பிரியாத அவஸ்தைகள் பொருளுக்குத்பத்திமுதலியவையாகின்றன. ஆகையால் அவஸ்தையேபொருளுக்குத்பத்தியாம். அவஸ்தைக்குத்பத்திவேண்டுவதில்லை. என்று ஆரம்பணாதிகரணத்தில் பாஷ்யத்திலும் ச்ருதப்ரகாசிகையிலும் உபபாதிக்கப்பட்டதே என்றால்; அது நல்லதன்று கடத்துக்குத்பத்தியாவது கடத்வாவஸ்தையேயாகில் கடத்வாஸ்தையுள்ளவரையில் கடம்பிறக்கிறது என்று வ்யவஹாரம்வரவேணுமேயல்லது கடம்பிறந்தது என்று வரக்கூடாது. ம்ருத்பிண்டத்தின் அழிவானது கடத்வாவஸ்தையேயாகிலிப்படியே கடத்வாவஸ்தையுள்ளவரையில் ம்ருத்பிண்டமழிகிறதென்று வ்யவகாரம் வரவேணும் ம்ருத்பிண்டம் அழிந்தது என்று சொல்லக்கூடாது. கடத்வாவஸ்தையிலுண்டாகிற முதல்க்ஷணத்தின் ஸம்பந்தமே கடத்திற்குத்பத்தி என்றால் அது, அநித்தியமும் முதல் க்ஷணஸம்பந்தமுடையதும் முன்னில்லாமேவந்ததுமாம்; அதற்குப்பிறப்பில்லை. இவையொன்றுமில்லாத பொருளுக்குப்பிறப்பென்பது கட்டுவார்த்தையாம். மேலும் கடத்தில் ரூபம் ரஸம்முதலியவை ஸம்யோகம் இவை உண்டாம்போது கடம் பிறந்ததென்று வ்யவஹாரம் வரக்கண்டோமில்லையே. ரூபம் பிறந்தது இரஸம் பிறந்ததென்றும் சொல்லக்கூடாது. தனித்துப்பிரியாதவைக்குப் பிறப்பில்லையன்றோ; ஸம்யோகத்தில் வருகிற க்ரியையால் பிறந்தது ஸம்யோகத்தால் பிறந்ததென்கிற வ்யவகாரமெல்லாம் நிர்மூலமாகவேணும். "सन्मूलाः सोम्येमाः प्रजाः

ஸ்ருதபொவ தாநி" "ஹநாம் விஜஜ்ஞிரே தஸ்மாத்" என்கிற ச்ருதிகளிலோதப்படுகிற வேதம் முதலியவை பிறந்தனவென்பதெல்லாமப்ரமாணமாகவேணும். சப்தம் பிறந்ததென்று வ்யவஹாரம்கூடாது. சப்தம்பிறந்தபோதெல்லாம் ஆகாயம் பிறந்ததென்று வ்யவஹாரம்வரவேணும். தனித்திராதவைக்கு உத்பத்திவிநாசங்களில்லையன்றோ; சரீரம் ஆத்மாவைப்பிரிந்திராதானதால் சரீரத்திற்கு உத்பத்திநாசங்களில்லை. ஆத்மாவுக்கே உத்பத்திவிநாசங்களென்றுசொல்லவேணும். பலசொல்லுவானேன்? உலகத்திலுள்ள எல்லாம் ஈச்வரனைவிட்டுப்பிரியாதவை யாகையாலே இவைகளுக்குத் பத்திவிநாசங்களில்லை; ஈச்வரனுக்கே உத்பத்திவிநாசங்களென்று விபரீதமாய் விடும். விட்டுப்பிரியாத அத்ரவ்யங்களுக்கே உத்பத்திவிநாசங்களில்லை; விட்டுப்பிரியாதவையானாலும் த்ரவ்யங்களுக்குத் பத்திவிநாசங்களுண்டென்றாலது நில்லாது யுக்தியில்லாமையாலே. த்ரவ்யங்களுக்கே உத்பத்திவிநாசங்களில்லை. அத்ரவ்யங்களுக்கே யவையென்று மாற்றிச்சொன்னாலதையார்மறுப்பார்? மேலும், விகாரத்துக்கு முதலானது பாதாநகாரணமென்றும் விகாரம் காரியமென்றும் எல்லோருமொப்புக்கொண்டவிஷயம்; "வாசாரம்பணம்விகாரோநாமதேயம்" என்கிற விடத்தில் கடத்வாவஸ்தையையே விகாரசப்தத்தால்சொல்லப்படுகின்றமையால், "யதாஸோம்யைகேந ம்ருத்பிண்டேந ஸர்வம்ம்ருண்மயம்விஜ்ஞாதம்ஸ்யாத்" என்கிற முந்திய வாக்கியத்திலும் விகாரப்பொருளையுணர்த்தும்மயட்ப்ரத்யயத்தாலவ்விகாரமேயுணர்த்தப்படுதல் தக்கதாதலால் அவ்விகாரமே மண்ணையுபாதாநகாரணமாகவுடைய காரியமென்பது உலகநீதியாலே யறியப்பட்டதென்று நினைத்து த்ருட்டாந்தமாக்கி காரணத்தை யறிந்தபோதே விகாரமறியப்படுமென்று சொல்லுகையால் உங்கள் மதத்திலவஸ்தை என்கிறவிகார மறியப்படாமையா லந்த ச்ருதியில் சொல்லப்பட்ட காரணகாரிய விஞ்ஞாநமுங்களுக்குப்பொருந்தாது. அந்த ச்ருதியில் பூர்வவாக்கியத்தில் ம்ருண்மயமென்கிற பதமானது விகாரத்தையுடையபொருளைக்குறிக்கின்றது. "விகாரோநாமதேயம்" என்கிறவிடத்திலவஸ்தையாகிய விகாரமேவிகார சப்தத்தால் சொல்லப்படுமென்பது பொருத்தமற்ற வார்த்தையானதா லிவ்விரண்டிடங்களிலு மொருபொருளையே கொள்ளவேண்டும். ஆகவிகாரரூபமான அவஸ்தை யுங்கள் மதத்திலேயறியப்படாதாகையால் மண்ணையறிவதினாலதனில்வேறாகாத விகாரமெல்லாமறியப்படுமென்பது உங்கள் மதநிலைக்குச்சேராததேயாமென்பீரேலதற்கு விடைதருகிறோம்.—ப்ரக்ருதிக்கும் விக்ருதிக்கும் அதாவது உபாதாநகாரணத்திற்கும் காரியத்திற்கும் பேதமில்லாதபோது மண், குடமாவதற்காகச்செய்யும்வேலைஎல்லாம் வீணாமாகையால் பேதமுண்டாகிலும் தனித்திருத்தலும் தனித்தறியப்படுதலுமில்லாமையாலே தனித்துஸத்தையில்லையென்பது ஸித்தமாம். ஆகவேறாகாத ஸத்தையுடைய காரணமுபாதாநகாரணமாம். ப்ரக்ருதி என்று மாத்மாவென்றுமிதற்குப்பெயர். இக்காரணத்தை தார்க்கிகர் நன்குபிரிந்து தோன்றாமையால் அயுதஸித்தம் ஸமவாயிகாரணமென்கிறார்கள். காரியத்தில் வேறாயதும் வேறாகாததுமாயகாரணமுபாதாநகாரணமென பேதாபேதவாதிகள் சொல்லுகின்றார்கள். வேறென்றும் வேறல்லவென்றும்பேசத்தகாதகாரணமெனச்சிலர் காரியத்தில் வேறாயதாய் காரியஸத்தையில்வேறல்லாத ஸத்தையுடைய காரணமுபாதாநகாரணமெனமற்றோர். எமக்கு மீதே உபாதாநகாரணவிசாரத்தில் ஸம்மதமானவபிப்ராயம். கலசமுதலிய அவஸ்தையேவிகாரம் பலரூபத்தையும் பலநாமத்தையுமடைகிற அவஸ்தைகளெல்லாம் மண்ணினவஸ்தையேயாகையாலே மண்ணேயிப்படியாகின்றதென்று வேதார்த்த ஸங்க்ரகத்தில் அவஸ்தையே விகாரமென்றருளிச்செய்தார். அவ்விதவிகாரங்களுக்கும் மண்ணுக்கும், தடிக்கும் புருஷனுக்கும், போல பிரிந்திருக்குந்தன்மையில்லை

யானதால் பிரித்தறியப்படாதே குடமுதலிய விகாரங்களோடு மண்சேர்ந்திருக்கின்றமையால் கீழ்ச்சொல்லிய உபாதாநகாரணலக்ஷணம் மண்ணிலுண்டாகையால் குடமுதலியவற்றுக்கு மண்ணானது ப்ரக்ருதியு மாத்மாவுமாகின்றது. ஆகையாலிம் மண்ணையறிந்தபோது கடமுதலிய அம்மண்ணினவஸ்தையாகியவிகாரங்களெல்லாம் தனித்தநிலைக்கும் ஜ்ஞாநத்திற்கும் தகாதவையாகையாலே மண்ணின் ஸத்தையாலே ஸத்தையுண்டாகிருப்போலே மண்ணையறிந்ததின லறிந்தமையுண்டாகின்றமையால் இவை எல்லாமறியப்படுமென்று சொல்லலாகும். இப்படியே சேதநாசேதநப்ரபஞ்சமெல்லாவற்றிற்கும் ப்ரம்மம் தனித்துப்பிரியாத காரணமாகையாலே எல்லாவற்றிற்கும் ப்ரக்ருதியாய் ஆத்மாவாயிருக்கையால் ப்ரம்மத்தைவிட்டுப் பிரித்தறியத்தகாத எல்லாமறியப்பட்டதாமென்பது ஸித்திக்கும். ஆகையால் கீழ்ச்சொல்லியதோஷங்களிலொன்றுமிங்குதங்காதென்று ஸூக்ஷ்மபுத்தியாலே அறிந்துகொள்க. இனி, பாஷ்யத்தில் கேவலபேதவாதிமதத்தில் அத்யந்தம் பின்னங்களுக்கு ஒருவழியாலுமைக்யம் சொல்லப்போகாமையாலேப்ரம்மாத்மபாவம்கூடாமையால் எல்லாவேதாந்தங்களும் விடப்பட்டனவாமென்று கேவலபேதபக்ஷம் நிந்திக்கப்படுகின்றமையால், "ஏகத்வே ஸதி நாநாத்வம் நாநாத்வே ஸதி சைகதா । அசிந்த்யம் ப்ரஹ்மணோ ரூபம் கஸ்தத்வேதிதுமர்ஹதி" என்று, ப்ரம்மம் ஒன்றாயிருக்கவும் பலவாய்த் தோற்றுகிறது பலவாயிருக்கவுமொன்றாய்த்தோற்றுகிறது; இன்னதென்றறியப்படாத ப்ரம்மஸ்ரூபத்தை எவனறியத்தக்கவன்; என்று ஸ்ம்ருதிசொல்லுகையாலும் பேதாபேதபக்ஷமே பகவத்பாஷ்யகாரருக்குத் திருவுள்ளமென்று தோற்றுகையால் காரியத்தில் வேறாகாதகாரணமுபாதாநகாரணமென்று கொள்ளவேணும்; இப்படியானல் எல்லாப்ரபஞ்சமும் ப்ரம்மமேயாகையாலே ப்ரமத்தையறிந்தபோதெல்லாமறியப்படுமென்று சுருதியில் சொன்னது நன்றாய்ச்சேரும். "ஹரேர்நாந்யத் கிஞ்சிதஸ்தி" (ஹரியென்று ப்ரஸித்தமான ப்ரம்மத்தில் வேறாயதொன்றுமில்லை.) "ஸர்வம் ஸமஸ்தம் ஹரிரேவ" (இவ்வுலகத்திலுள்ள ஸமஸ்தமும் அந்த ஒரு ப்ரம்மமே) 'தஸ்மாந்நாஸ்தி பரம் ததோக்தம்' (அந்த ப்ரம்மத்தில் வேறில்லை அந்த ப்ரம்மமப்படிசொல்லப்படுகிறது.) "ஸதைகரூபரூபஸ்ய வாஸுதேவ பரமேச்வரேதி" (எக்காலத்திலும் மாறாத ஸ்வரூபத்தையுடைய ப்ரம்மமொன்றே பரவாஸுதேவனென்றும் பரமேச்வரரென்றும் சொல்லப்படுகிறது. அந்த ப்ரம்மத்தில் வேறுபட்டபொருளில்லை.) என்கிற சாஸ்திரங்கள் கேவலபேதத்தை நிஷேதிக்கின்றனவாகையாலும் பேதாபேதபக்ஷத்தை யங்கீகரிப்பது யுக்தமமாம். சரீராத்மபாவத்தைச் சொன்னாலும் சரீரமாகிய ஜகத்து ப்ரம்மத்தில் வேறானதேயாகையால் ப்ரம்ம பிந்நமானவஸ்துவை நிஷேதிப்பது சேராது. ஆகையால் பேதாபேத பக்ஷத்தையே கொள்ளவேணுமெனில் இது தக்கதன்று—பேதாபேதபக்ஷத்தில் ப்ரம்மத்திற்கே உபாதி ஸம்பந்தத்தால் உபாதியினல் வருகிற ஸகலதோஷங்களும் வருகையாலே தோஷஸம்பந்தமில்லாதே கல்யாணகுணங்களுக்கு நிலமான ப்ரம்மத்தையுபதேசிக்கிற வேதாந்தங்களெல்லாம் விரோதிக்கும்; என்று பேதாபேதபக்ஷத்தை பாஷ்யத்திலே தூஷிக்கையாலும் ப்ரம்மாஜ்ஞாநபக்ஷத்திலும் பேதாபேதபக்ஷம்கெட்டதென்

று வேதார்த்த ஸங்க்ரஹத்தில் மிகவும் நிந்திக்கையாலும் பேதாபேதவாதம் பகவத் பாஷ்யகாரருக்குத் திருவுள்ளமன்று. ஆனால் கீழ்காட்டிய பாஷ்யத்துக்குப் பொருளென் சரீராத்மபாவமாவது பேதமேயன்றோ. ப்ரகார ப்ரகாரிபாவம் பேதரூபமேயன்றோ. எப்போதும் ப்ரகாரப்ரகாரி பாவமாகிய சரீராத்மபாவமாவது எப்போதும் பேதரூபமாகையால் சரீராத்மபாவத்தைச் சொல்வதினால் கேவலபேதமே வலியுறுத்தப்படுகிறது. ஆனதினாலன்றோ "உஹயெவஷிஹிஹெ ஜெஷெ நநூயீய தெ' என்கிற ஸூத்திரத்தில் சரீராத்மபாவமே பேதமென்றுபந்யஸிக்கப்பட்டது. எனில் சொல்லுகிறோம் கீழ்காட்டிய பாஷ்யத்திற்குக் கருத்து இவ்வாறுகொள்ளவேணும்: ஒன்று என்கிற வ்யவஹாரத்தில், ஸ்வரூபைக்யம் அல்லது ப்ரகாரைக்யம் காரணமாகிறது. ஸாயங்காலத்தில் பசுக்களெல்லாமொன்றாய் விடுகின்றன, அரசர்களொன்றானார்கள், இவை எல்லாமொரோதாங்யம், என்கிற விடங்களில் தேசம் முதலிய ப்ரகாரமொன்றாகையால் ஒன்று என்கிற வ்யவஹாரமுண்டாயிருக்கிறது. இங்கு ஜகத்துக்கும் ப்ரம்மத்திற்கும் ஸவரூபம் பிந்நமாகையாலே ஒன்று என்கிற வ்யவஹாரத்திற்குக்காரணமொன்று சொல்லவேணும் அஃது யாதென்று விசாரித்துப் பலவிடங்களிலும் விட்டுப்பிரியாத விசேஷணமாயிருக்கை என்று நிர்ணயித்தருளிச்செய்தார். ஆகையாலப்ருதக் ஸித்தியே பகவத்பாஷ்யகாரருக்குத்திருவுள்ளம். ஸித்தியாவது - ஸ்திதியும், ஜ்ஞாநமும். ஸ்திதியாவது இருப்பு.ஜ்ஞாநமாவதுஅறிவு. இவ்விரண்டும் தனியேயில்லாத விசேஷணங்களுக்கு அப்ருதக்ஸித்த விசேஷணங்களென்று பெயர். இக்கருத்து அவ்விடத்திலேயே பாஷ்யத்தில் விளங்கும். அவையாவன:—ஜாதிகுணமுதலியன. இனி, கந்தமுதலிய அப்ருதக்ஸித்த விசேஷணங்கள் தனித்துமறியப்படுகையா லிவ்வி லக்கணம் பொருந்தாது. யாதொன்றுதானுள்ளவரையிலொன்றைப்பற்றியே நிற்கின்றது; அது அப்ருதக்ஸித்தமென்று தார்க்கிகர்சொல்லிய விலக்கணங்கூறில் இவ்விதமாகிய அப்ருதக்ஸித்திபேத வ்யவகாரத்திற்கேஹேதுவாமல்லது அபேதவ்யவகாரத்திற் கிடங்கொடாது, ஆனதால் ப்ரம்மமொன்றே யுள்ளதென்கிற வ்யவகாரமுங்கள் மதத்திற்குப் பொருந்ாதெனில்; பொருந்துமாறு கூறுகின்றோம்; தனித்திருக்கிறகாரியங்களுக்கே தனிப்பிறப்பு முதலியன வேணுமென்கின்ற சுருத ப்ரகாசிகையை யாலோசிக்கும்போது யாதொன்றின் பிறப்புநாசம் ஸத்தைமுதலியவைஎவ்வாதாரத்தைப்பற்றி யிருக்கின்றதோ அது அவ்வாதாரத்திற்கு அப்ருதக்ஸித்தவிசேஷணமென்று கொள்ளப்பட்டதாகிறது. கந்தமுதலிய குணங்களின் ஸத்தைபொருளின்ஸத்தையைப்பற்றியிருப்பதால் குணங்கள் பொருளுக்கு அப்ருதச்ஸித்தவிசேஷணங்களாகின்றன. இப்படியே விக்ருதி என்கிற காரியத்திற்கு ப்ரக்ருதியென்கிற உபாதாநகாரணத்தின் ஸத்தையில் வேறான ஸத்தையில்லையாதலால் தன்னுடைய ஸத்தையில்வேறாகாத ஸத்தையுடைய காரணமுபாதாநகாரணமென்பதில் விரோதமொன்றுமில்லை. இஃதேயத்மாவாயிருக்கை. ப்ரம்மத்தினின்றும் பிறக்கின்றமையாலும், ப்ரம்மத்திலே லயிக்கின்றமையாலும் ப்ரம்மத்தால் காக்கப்படுகின்றமையாலும், ப்ரம்மத்தால் நியமிக்கப்படுகின்றமையாலும் ப்ரம்மத்திற்கு சரீரமாகின்றமையாலும் எல்லாம் ப்ரம்மத்தை யாத்மாகவுடையனவென்றருளிச் செய்யாநின்ற பகவத்பாஷ்யகாரரால் இவ்வர்த்தம் வெளியிடப்பட்டதன்றோ. உள்ளேபுகு

ந்து நியமிக்கையாகிற ஆத்மத்வமிங்குசொல்லப்பட்டதில்லை. அது உபாதாநகாரண மாவதினால் வருமதன்றே. உபாதாநமாவதினாலும் நியந்தாவாவதினாலும் நியந்தா வான ஆத்மாவாகிறானென்பது பொருந்தாதன்றோ.நாம் சொல்லியபடி ஆத்மாவாகை யே இங்கு பொருத்தமுடையது. எப்படி என்றால் கூறுகிறோம், ப்ரம்மத்தினின் றும் பிறக்கையாலுமென்ற தாலசேதநங்களைப்பற்றி உபாதாநகாரணமாகையாகிற ஆத்மத்வமும், ப்ரம்மத்தால் நியமிக்கப்படுதலாலுமென்பதற்கு ஜீவரூபனாகி நியமிக் கிறானென்று கருத்தாகையாலே ஜீவனை விட்டுப்பிரியாதவனென்று பெறப்படுகின்ற மையாலும் சேதநாசேதநங்களெல்லாவாற்றிற்கு ம்ப்ருதக்ஸித்தகாரணமென்கிறகாரி யஸத்தையில் வேறல்லாதஸத்தையுடைய காரணமாகிய உபாதாநகாரணமென்று சொல்லப்பட்டதாயிற்று. ஆக, இவ்விதகாரணமாகையாகிற ப்ரக்ருதி த்வமென்கிற ஆத்மத்வம் சேதநாசேதநங்களெல்லாவற்றையும் பற்றி ப்ரம்மத்திற்குண்டாகையால் இவ்வித ஆத்மாவாகிய ப்ரம்ம மறியப்பட்டபோதே மற்றெல்லா மறியப்பட்டதே யாம். மற்றொன்று தனித்தறியவேண்டிய தொன்றுமில்லையன்றோ; ப்ரம்மத்தின் ஸத்தையால் ஸத்தைபெற்றவஸ்து ப்ரம்மமறியப்பட்டபோதறியப்படா தொழியுமோ. இனி, ப்ரபஞ்சத்திற்கு ப்ரம்மஸத்தையொழிந்த ஸத்தையில்லா தொழிந்தால் ப்ரபஞ் சம் பொய்யென்று சொல்லப்பட்ட தாகிறது. அப்போதுலகத்தைப் பொய்யென்கிற அத்வைதிகளுக்கு முங்களுக்கும் பேதமில்லையே என்றால் இச்சந்தேசம் வேண்டாம். குணங்களில் ஸத்தாஜாதியை யொப்பாதவர் மதத்தில் ரூபமுதலிய குணங்களுக்கு த்ரவ்யஸத்தையில் வேறான ஸத்தையில்லையானாலும் குணங்கள் பொய்யென்றார்க ளோ; ஸித்தாந்தத்திலும் தனித்து உத்பத்தி ஸ்திதி ஸத்தையில்லாத அவஸ்தைகளைப் பொய்யென்று சொன்னார்களோ; இப்படியே ப்ரம்மஸத்தையில் வேறான ஸத்தை யில்லையானாலும் ப்ரபஞ்சம் பொய்யாகாது. ஆகையாலன்றோ ‘‘நைகஸ்மிந்நஸம்ப வாத்’’ என்கிற ஸூத்திரத்தில் காலமென்பது தனியே தோறாதே எல்லாப்பொரு ளுக்கும்விசேஷணமாய் தோற்றுகையால் இதற்குத்தனியே ஸத்தையில்லை. ஆனாலுமி ல்லைஎன்று சொல்லப்போகாது.ஜாதிமுதலியவற்றிற்குத்தனியே ஸத்தையில்லையானா லும் மவைபொய்யாமோ:என்று பாஷ்யத்தில் தெளிவாகவருளிச்செய்தார்.ஆனதால் ப்ரம்மஸத்தையால்ஸத்தைபெற்றிருப்பதால்ப்ரபஞ்சம் பொய்யாகாது.இனி,உபாதா நமாயிருக்கையாவது அப்ருதக்ஸித்தகாரணமாகை ஆத்மத்வமென்பதுமீதேயாமென் றால்;பகவானுடைய திருமேனி விமாந கோபுரமண்டப ப்ராகாரமாகியிருக்கும் நித்ய விபூதியைநித்யமென்றால் லதைப்பற்றி பரமாத்மா ஆத்மாவாகமாட்டான்.நித்யவிபூதி நித்யமாகையால் அவ்விபூதிக்கு பரமாத்மா உபாதாநகாரண மாகானன்றோ; ஆகை யால்நித்யவிபூதியும் உத்பத்தியுடையதேயாம்.இவ்விபூதிக்குத்பத்தியில்லையானால்இவ் விபூதிப்ரம்மகார்யமாகாமையால் ப்ரம்மத்தை யறிந்தபோதறியப்படாது. அப்படியா கில் ப்ரமத்தையறிந்தபோதெல்லா மறியப்படுமென்கிற ப்ரதிஜ்ஞை சேராதாம். இந்த ப்ரதிஜ்ஞைக்கு விருத்தமாகவும் நித்யவிபூதியை நித்யமென்றால் வியததிகரண விரோதமும் வரும்.அவ்வதிகரணத்தில் ஆகாயம் நித்யமோ உத்பத்தியுடையதோவெ ன்று விசாரித்து நித்யமாகில் ப்ரம்மகார்யமாகாமையால் ப்ரம்மத்தை யறிந்தபோ தெல்லா மறியப்படுமென்கிற ப்ரதிஜ்ஞைக்கு விரோதம் வருகின்றமையால்உத்பத்தி

யுடையதேயாமென்று ஸித்தாந்தம் செய்யப்பட்டதன்றோ. இந்த நியாயத்தால் நித்ய விபூதிக்கு முத்பத்தியுண்டென்று சொல்லவேணும். நித்யவிபூதியை உத்பத்தியுடையதென்றால் நித்யமென்று சொல்லுகிற ப்ரமாணங்களோடு விரோதம் வருமாகையால் ப்ரம்மத்தையறிந்தபோதெல்லா மறியப்படுமென்கிறவிடத்தில் நித்யவிபூதி தவிரமற்றெல்லாமறியப்படுமென்று பொருள்கொள்ளவேணுமென்றால் இப்படியே ஆகாயத்தையும், "[illegible]" "[illegible]" இவை முதலிய ப்ரமாணங்கள் நித்யமென்று சொல்லுகையால் ஆகாயத்தையும் நீக்கவேணுமென்று வரும். ஆனதால் நித்யவிபூதிமாத்திரம் நித்யமாவது கூடாதென்றால் "[illegible]" இது முதலிய ப்ரமாணங்களில் மகதஹங்கார க்ரமத்திலே உத்பத்தி யுடையதென்று தெளிவாகச்சொல்லுகையாலும் நித்யவிபூதிக்கு உத்பத்தியை யொரு ப்ரமாணமும் சொல்லாமையாலும் நித்யவிபூதியை ஆகாயத்ருட்டாந்தத்தாலே உத்பத்தியுடையதென்று சொல்லத்தகாது. இனி, "[illegible]" (பகவானுடைய திருமேனியும் பகவதாத்மகம்) இது முதலான ப்ரமாணங்கள் திருமேனியும் நித்யவிபூதியும் பரமாத்ம ஸ்வரூபமேயென்று சொல்லுகையால் திருமேனிமுதலிய நித்யவிபூதியெல்லாம்பரமாத்ம ஸ்வரூபத்தில் வேறாயதன்றெனக்கொள்ளலாம் அந்தபக்ஷத்தில் எல்லாமறியப்படுமென்கிற ப்ரதிஜ்ஞைக்கும் விரோதமில்லை. நித்யவிபூதியில் விசித்திர உத்யானவனங்களும் விசித்திரதடாகங்களு முண்டென்று சொல்லுகையால் இவற்றையெல்லாம் ப்ரம்ம ஸ்வரூபமென்று கொள்ளுகை யுக்தமன்றோ வென்று ஸந்தேகம் வேண்டாம்; உத்யானமுதலியவை யுண்டென்று சொல்லுகிறவாக்யங்களுக்கு உத்யானவனமுதலியவற்றில் வருகிற ஆநந்தமெல்லாம் ப்ரம்மாநந்த்தின் அளியென்னலாம்படி எல்லா ஆநந்தங்களையும் ப்ரம்மாநுபவம் தருமென்று கருத்தாகையால் தஹராதிகரணத்தில் பாஷ்யம் சுருதப்ரகாசிகை இவ்விரண்டிலு மிவ்வாறே இங்குண்டான ஆநந்தங்களும் இல்லாத ஆநந்தங்களுமெல்லாம் ப்ரம்மாநந்தத்திலடங்கியதென்று அருளிச்செய்தார்கள். ஆனதால் ப்ரம்மஸ்வரூபமே நித்யவிபூதி என்றாலது சேராது. விரஜையென்கிற திவ்யநதியைத்தாண்டிச் சேரவேண்டிய திவ்யலோகத்திலடங்கிய ஐரம்மதீயமென்கிற தடாகமுதலியவை ப்ரம்மஸ்வரூபமே யென்ற சொல்லுவது பொருந்தாதன்றோ. ஆகையால் நித்யவஸ்துக்களுக்கு ஆத்மாவாகையாவது அப்ருதக்ஸித்திமற்றவைகளுக்கு ஆத்மாவாகையாவது உபாதாநகாரணமாகை ஆகையாலனுபபத்தியொன்றுமில்லை. ஆக உபாதாநகாரணமாகியப்ரம்மமறியப்பட்டபோது அப்ருதக்ஸித்த விசேஷணங்களான மற்றெல்லாமறியப்படுமாகையால் ப்ரம்மத்தையறிந்த போதெல்லா மறியப்படுமென்கிற ப்ரதிஜ்ஞை பொருத்தமுடையதாகின்றது. அல்லது, விசேஷணமாகிய ப்ரபஞ்சத்தையே யுத்தேசித்து ப்ரச்நம்பண்ணப்பட்டாலும், விஷ்ணுபுராணத்தில் ஆதிபரதசரித்தில் நீயாரென்றுகேட்ட ஸௌவீரராஜ ப்ரசந்த்திற்கு, ப்ரசநம் கேவல சரீரஸம்பந்தமுடைய ஆத்மாவைப்பற்றியதானாலும் உண்மையில் நீயென்கிறபதத்திற்கு சுத்தாத்மஸ்வரூபமே பொருளெனவறிவித்தற்கு ஆதிபரதர் "[illegible]" "[illegible]" இவைமுதலியசுலோகங்களில் சுத்தாத்மஸ்வரூபத்தைப்பற்றி விடையளித்தாப்

போலும்,அதர்வசிரஸ்ஸில் தேவர்கள் உருத்திரனை நீ யாரென்று கேட்டபோது தேவர்கள் கருத்துப்படி நீ யென்கிறபதத்திற்கு ருத்ரனே பொருளானாலும் எல்லாப் பதங்களும் பரமாத்மாவரையில் போதிக்கின்றனவென் றறிவித்தற்கு உருத்திரன் நீ யென்கிற பதத்திற்குப் பரமாத்மாவைப் பொருளாகக்கருதி "ஸொஹமெகஃவுூம ஐஜாவஸ்ழ" என்று துடங்கி பரமாத்மஸ்வரூபத்தைப்பற்றி விடைதந்தாப்போலவும் இங்கும் ப்ரச்நத்தில் எல்லாமென்கிற பதத்திற்கு விசேஷணமேபொருளானாலும் விசேஷணத்தையுணர்த்துகிற சபதம் விசேஷ்யமாகிய ப்ரம்மத்தைபோதிக்குமென்றறிவித்தற்கு ஸ்தூலஸூக்ஷ்மப்ரம்மஸ்வரூபத்தைப்பற்றி உத்தரம் சொல்லப்பட்டாலும் குற்றமில்லையானதால் ஒருவிதஸந்தேகத்திற்கு மிடமில்லை. இவ்விசாரத்தை ப்ருஹதாரண்ய உபநிஷத்திற்கு வ்யாக்யாநம் செய்யும்போது விளங்க விவரித்து உபந்யஸிக்கப்போகிறோம். இங்கு இவ்வளவே போதுமென்று நிறுத்துகிறோம்.

௪. தமெஸஸஹொவாவ । வெவிஜெ௫வெஷிதவெ௫ ஐதிஹஸ்ய உ ஹவிஜொவஊதிவுராவெவாவுராவ॥

౪. తస్మై సహోవాచ ॥ ద్వేవిద్యే వేదితవ్యే ఇతిహస్మ యద్బ్రహ్మవిదో వదంతి పరా చైవాపరా చ॥

(ப்-ம்.) வுராவணவ ஊவுராவணவ‌மெவிஜெ௫- பரவித்யைஅபரவித்யைஎன்கிற விரண்டுவித்யைகள்,யகூ-யாதொன்றை, (வுூஹ-அடைவதற்கு) வெஷிதவெ௫-அறியத்தக்கவையென்று,ஹவிஜஃ ஹஸவஊதி- ப்ரம்மஜ்ஞாநிகள் சொல்லுகிறார்களோ, (அதையறிந்தாலெல்லா மறியப்படும்.) ஐதி தமெஸஸஃஹஉவாவ - இப்படி சோளநகருக்கு அங்கிரஸ்ஸு சொன்னார்.

பதாந்வயார்த்தபேதங்கள்.

பரவித்யை பரமாத்மாவைப்பற்றியது. அபரவித்யைதருமம் அதருமம் இவைகளுக்குஸாதநம் இவைகளின்பலம் இவைகளைப்பற்றியது. ப்ரசநத்திற்குத்தரம் நேரில்லைஎன்றால், பூர்வபக்ஷம் சொல்லிஸித்தாந்தம் சொல்வதுபோலபரவித்யையுணர்த்தி இத்தால் ப்ரம்மத்தையறிந்தபோதெல்லாமறியப்படுமென்று சொல்வதற்கு அபரவித்யைபரவித்யையென்று பிரித்துச் சொல்லப்படுகையால் குற்றமில்லை என்று சங்கரபாஷ்யாபிப்ராயம். ப்ரம்மத்தையடைவதற்கு இரண்டுவித்யைகளறியத்தக்கவை என்கிறவிடத்தில் அடைவதற்கு என்கிறபதம் வருவிக்கப்பட்டது. இது, பகவத்பாஷ்யகாரர் ப்ரம்மத்தையடைய விரும்பினவனுலென்று இந்தசுருதி வ்யாக்யாநத்திலருளிச்செய்கையாலவரது திருவுள்ளமேயாம். அப்படிப்பட்டப்ரம்மமறியப்பட்டபோது எல்லாமறியப்படுமென்பதும் சேர்க்கப்பட்டது. சோநதபோது ப்ரசநம்வேறு உத்தரம்வேறென்று அஸங்கதமாம். ஆகையால் பதஉவாயால் விளங்கும் கருத்தே இந்தசுலோகத்தின் கருத்தென்று இராமாநுஜ பாஷ்யத்திலடங்கிய வபிப்ராயம்.

௫. 𑌤𑌤𑍍𑌰𑌾𑌪𑌰𑌾 𑌋𑌗𑍍𑌵𑍇𑌦𑍋 𑌯𑌜𑍁𑌰𑍍𑌵𑍇𑌦𑌃 𑌸𑌾𑌮𑌵𑍇𑌦𑍋𑌽𑌥𑌰𑍍𑌵𑌵𑍇𑌦𑌃 𑌶𑌿𑌕𑍍𑌷𑌾 𑌕𑌲𑍍𑌪𑍋 𑌵𑍍𑌯𑌾𑌕𑌰𑌣𑌂 𑌨𑌿𑌰𑍁𑌕𑍍𑌤𑌂 𑌛𑌨𑍍𑌦𑍋 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌷𑌮𑌿𑌤𑌿 𑌅𑌥 𑌪𑌰𑌾 𑌯𑌯𑌾 𑌤𑌦𑌕𑍍𑌷𑌰𑌮𑌧𑌿𑌗𑌮𑍍𑌯𑌤𑍇 ||

౫. తత్రాపరా ఋగ్వేదో యజుర్వేదస్సామవేదోఽథర్వవేదశ్శిక్షా కల్పో వ్యాకరణం నిరుక్తం ఛందో జ్యోతిషమితి అథపరా యయా తదక్షరమధిగమ్యతే॥

(ப-ம்.) 𑌤𑌤𑍍𑌰-இவ்வித்யைகளுக்குள், 𑌅𑌪𑌰𑌾- அபரவித்யையானது, 𑌋𑌗𑍍𑌵𑍇𑌦𑌃-𑌯𑌜𑍁𑌰𑍍𑌵𑍇𑌦𑌃 𑌸𑌾𑌮𑌵𑍇𑌦𑌃 𑌅𑌥𑌰𑍍𑌵𑌵𑍇𑌦𑌃 𑌶𑌿𑌕𑍍𑌷𑌾 𑌕𑌲𑍍𑌪𑌃 𑌵𑍍𑌯𑌾𑌕𑌰𑌣𑌂 𑌨𑌿𑌰𑍁𑌕𑍍𑌤𑌂 𑌛𑌨𑍍𑌦𑌃 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌷𑌂 𑌇𑌤𑌿-ருக்யஜுஸ்ஸாமாதர்வணங்களென்கிற நான்குவேதங்களும் சிக்ஷைமுதலிய ஆறங்கங்களுமாகிய இவையேயாம். 𑌯𑌯𑌾 𑌤𑌤𑍍 𑌅𑌕𑍍𑌷𑌰𑌂 𑌅𑌧𑌿𑌗𑌮𑍍𑌯𑌤𑍇 - யாதொன்றாலே யந்தவக்ஷரபரப்ரம்ம மறியப்படுமோ, 𑌪𑌰𑌾 𑌸𑌾 - அந்த பரவித்யைமேலே சொல்லப்படுகிறது.

ஶ்ரு-ப்ர.—அதிகம்யதே என்கிறபதத்திற்கு அடையப்படுமென்றுபொருள். அறியப்படுமென்று பொருளானாலும் அடையப்படுமென்றே பொருள்சொல்லப்பட்டதாம் எவ்வழியாலேஎனில்; அவித்யைநீங்குதலேயன்றோ ப்ரம்மப்ராப்தி யாகின்றது; வேறல்லவன்றோ; அவித்யைநீங்குவது ப்ரம்மத்தையறிந்தாலன்றோ. ஆனதால் ப்ரம்மத்தை யறிந்தபோதே அவித்யைநீங்குவதால் ப்ரம்மத்தையடைவதும் ப்ரம்மத்தையறிவது மொன்றேயாம். இனி, இங்குபரவித்யையைவேதங்களில் சேராததாகச்சொல்லுகின்றமையால், "𑌯𑌾 𑌵𑍇𑌦𑌬𑌾𑌹𑍍𑌯𑌾𑌃 𑌸𑍍𑌮𑍃𑌤𑌯𑌃" என்கிற வசநத்தின்படி வேதபாஹ்யங்களானவை அப்ரமாணங்களாய் மோக்ஷவிரோதிகளாயிருக்குமாகையால் வேதபாஹ்யமான பரவித்யைமோக்ஷஸாதநமாயாவது எங்ஙநமெனில்; உபநிஷத்துக்களை வேதபாஹ்யங்களென்றிங்குசொல்லவில்லை. ப்ரம்மஜ்ஞாநத்தை சப்தரூபமாகிய வேதத்தில் வேறென்றுசொல்லிற்று. அபரவித்யை சப்தரூபமாகிய வேத சாஸ்த்ரமாகையாலே பரவித்யையப்படி யானதல்ல வென்று சொல்லப்பட்டது. உபநிஷத்தினால் சொல்லப்படுகிற அக்ஷரபரப்ரம்மம் ஆசார்யனைக்கிட்டி வைராக்யமடைந்தவனு லறியப்படுமென்று ப்ரம்மவித்யையைப் பிரித்து பரவித்யையென்றுபேரிட்டது.

ரா-ஸூ.—பரவித்யை அபரவித்யையென்றெடுத்த க்ரமத்தைவிட்டு முன்னபரவித்யையைச்சொல்வதுஸூசீகடாகந்யாயத்தாலே. ஆறங்கங்களும் உபப்ரும்மணங்களான ஸ்ம்ருதீதிஹாஸபுராணங்களும் நான்குவேதங்களும் வேதாந்தங்களுமாகிய சாஸ்திரத்தால்பிறக்கிற ப்ரத்யக்ஷரூபமாகாத சாப்தஜ்ஞாநமபரவித்யையெனப்படுகிறது. பரவித்யையாவது —விவேகம் விமோகம் அப்யாஸம் க்ரியைகல்யாணம் அநவஸாதம் அநுத்தர்ஷம் என்கிற ஸாதநஸப்தகஸஹாயத்தாலே பிறக்குமதாய் ச்ரவணத்தால் பிறந்தபரோக்ஷ ஜ்ஞாநத்திற்குப் பின்னுண்டாவதாய் ப்ரத்யக்ஷ ஸமாநாகாரமாயிருக்கிற ஜ்ஞாநமேயாம். இத்தால், பகவத்பாஷ்யகாரரருளிச்செய்தபடி ச்ருதிதாத்பர்யமென்றுகாட்டப்பட்டது.

௬. 𑌯𑌤𑍍𑌤𑌦𑌦𑍍𑌰𑍇𑌶𑍍𑌯𑌮𑌗𑍍𑌰𑌾𑌹𑍍𑌯𑌮𑌗𑍋𑌤𑍍𑌰𑌮𑌵𑌰𑍍𑌣𑌮𑌚𑌕𑍍𑌷𑍁𑌃𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌂 𑌤𑌦𑌪𑌾𑌣𑌿𑌪𑌾𑌦𑌮𑍍 | 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌵𑌿𑌭𑍁𑌂 𑌸𑌰𑍍𑌵𑌗𑌤𑌂 𑌸𑍁𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌂 𑌤𑌦𑌵𑍍𑌯𑌯𑌂 𑌯𑌦𑍍𑌭𑍂𑌤𑌯𑍋𑌨𑌿𑌂 𑌪𑌰𑌿𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌧𑍀𑌰𑌾𑌃 ||

౬. యత్తదద్రేశ్యమగ్రాహ్యమగోత్రమవర్ణమచక్షుశ్శ్రోత్రం తదపాణిపాదమ్|నిత్యం విభుంసర్వగతంసుసూక్ష్మంతదవ్యయం యద్భూతయోనిం పరిపశ్యంతిధీరాః||

(ப்-ம்.) 𑌯𑌤𑍍𑌤𑌤𑍍-யாதொன்று, 𑌅𑌦𑍍𑌰𑍇𑌶𑍍𑌯𑌂-அறியப்படாததோ, 𑌅𑌗𑍍𑌰𑌾𑌹𑍍𑌯𑌂-கிரகிக்கபபடாததோ, 𑌅𑌗𑍋𑌤𑍍𑌰𑌂-குலமில்லாததோ, 𑌅𑌵𑌰𑍍𑌣𑌂-ப்ரம்மக்ஷத்ரியாதி ஜாதியில்லாததோ, 𑌅𑌚𑌕𑍍𑌷𑍁𑌃𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌂-கண்காதுமுதலியஜ்ஞானேந்திரியங்களில்லாததும், 𑌤𑌤𑍍-அப்படியேப்ரஸித்தமானதும், 𑌅𑌪𑌾𑌣𑌿𑌪𑌾𑌦𑌂-கைகால்முதலிய கர்மேந்திரியங்களில்லாததும், 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂-காலபரிச்சேதமில்லாததும், 𑌵𑌿𑌭𑍁𑌂-தேசபரிச்சேதமில்லாததும், 𑌸𑌰𑍍𑌵𑌗𑌤𑌂-வஸ்துபரிச்சேதமில்லாததும், 𑌸𑍁𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌂-மிகச்சூக்ஷ்மமானதும், 𑌯𑌤𑍍-யாதொன்றோ, 𑌤𑌤𑍍-அதானது, 𑌅𑌵𑍍𑌯𑌯𑌂-அக்ஷரபரப்ரம்மமாம், 𑌯𑌤𑍍 - யாதொருப்ரம்மத்தை, 𑌧𑍀𑌰𑌾𑌃-அறிவுடையோர், 𑌭𑍂𑌤𑌯𑍋𑌨𑌿𑌂 - ஸமஸ்தபூதங்களுக்குமுபாதாநகாரணமென்று, 𑌪𑌰𑌿𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿-அறிகிறார்கள்.

𑌶𑌂-𑌭𑌾.—யாகம் முதலியவற்றைவிதிக்கும்போது கர்தாகரணம்முதலியவனேகஸாமக்ரிகளைபோதிக்கிற வாக்கியார்த்தஜ்ஞானம் வந்தபின்னநுஷ்டிக்கவேண்டியக்ரியையுண்டாயிருக்கிறாப்போல பரவித்யைஸ்தலத்தில் பின்னனுஷ்டிக்கவேண்டியக்ரியையொன்றில்லை. வாக்யார்த்தத்தை யறிந்தபோதே பரவித்யைமுற்றுப்பெறுகிறது; வாக்கியங்களில் சொல்லியபடி அர்த்தங்களில் நிஷ்டையொழிய மற்றொன்றுமில்லாமையாலே. ஆனதால் பரவித்யையை நிச்சயிப்பதற்கு விசேஷணங்களுடனக்ஷரபரப்ரம்மத்தை யோதி விசேஷப்படுத்துகிறது. இனி சொல்லப்போகிற ப்ரம்மத்தைபுத்தியில் தேக்கிக்கொண்டிருக்கையால் யாதொன்றெனப் பேசப்படுகிறது ஜ்ஞானம்புறப்படும்வழியாகிய பஞ்சேந்திரியம்புத்தி முதலியவற்றுக்குத் தோற்றாததும் கர்மேந்திரியங்களுக்கு விஷயமல்லாததும் மூலகாரண ஸம்பந்தமில்லாததும் த்ரவ்ய தர்மங்களாகிய ஸ்தூலத்வமுதலிய தர்மங்க ளில்லாததும் நாமரூபங்களை க்ரஹியானிற்கிற கண் செவிமுதலியவையில்லாததும் கர்மேந்திரியமில்லாததும் இவ்வாறு க்ரகிக்கப்படுதலும் க்ரஹித்தலுமில்லாமையாலே நித்யமானதும் நாநாரூபத்தையடைவதும் ஆகாயம்போலே வ்யாபகமானதும் சப்தாதிஸ்தூலகாரணங்களில்லாமையால் மிகச்சூக்ஷ்மமானதும் இப்படிப்பட்டதானதாலழியாததுமான ப்ரம்மத்தை எல்லாவற்றிற்கு மாத்மாகவும் ஸர்வபூதங்களுக்கு முபாதாநகாரணமாகவும் விவேகிகளறிகிறார்கள். ப்ரம்மமெல்லாவற்றையுமறிந்ததென்று சொல்லுகையால் உலகத்திலறிபவர்க்கு இந்திரியஸஹாயம் வேண்டியிருப்பதாலவ்வாறு ப்ரம்மத்திற்குவேண்டுவதில்லையென்று சொல்வதுமுக்யமாம். இப்படியே கண்ணில்லாமலே பார்க்கிறான் காதில்லாமலே கேழ்கிறானென்று வேறுச்ருதிகளும் சொல்லுகின்றன. சப்தாதிஸ்தூலகாரணமில்லாமையாலென்றது சப்தாதிகுணங்களையுடைய ஆகாசம் வாயு அக்நிமுதலிய

வையொன்றிலுமொன்று ஸ்தூலமாயிருப்பதுபற்றி. அழிவில்லாததென்பதற்கு சரீர மில்லாமையும் வேறுபாடில்லாமையும் குணமில்லாமையும் காரணமாகிறது. இவையுண்டாகிலன்றோ இவைகளின்வழியாலே குறைவரக்கூடும் இவையில்லையான தாலெவ்வழியாலும்குறையில்லை ஆகஇப்படிப்பட்டப்ரம்மத்தையறியச்செய்வது பரவித்யையென்றுமுடிவானகருத்து.

பதாந்வயார்த்தபேதங்கள்.

பதவுரையின்படிவிளங்கும் கருத்தேஇராமாநுஜபாஷ்யத்தில் கொள்ளப்பட்டது. யோநிசப்தம் உபாதாநகாரணத்தைச் சொல்லுமென்பது மேல்வாக்யத்தால் விளங்குமென்று பகவத்பாஷ்யகாரரருளிச் செய்தாரென்று யோனிசப்தம் உபாதாநகாரணத்தை போதிப்பதற்குக்காரணமும் ப்ரமாணமாகப்ரக்ருத்யதிகரணபாஷ்யமும் காட்டப்பட்டது.

௭. யஸ்மாத்பரம் நாபரமஸ்தி கிஞ்சித்யஸ்மாந்நாணீயோ நஜ்யாயோஸ்தி கஶ்சித் । வ்ருக்ஷ இவ ஸ்தப்தோ திவி திஷ்டத்யேகஸ்தேநேதம் பூர்ணம் புருஷேண ஸர்வம் ॥

౭. యస్మాత్పరం నాపరమస్తి కించిద్యస్మాన్నాణీయో న జ్యాయోస్తి కశ్చిత్ । వృక్ష ఇవ స్తబ్ధో దివి తిష్ఠత్యేకస్తేనేదం పూర్ణం పురుషేణ సర్వమ్॥

(ப-ம்) யஸ்மாத்-யாதொருப்ரம்மத்தைக்காட்டில், பரம் அபரம் கிஞ்சித் ந அஸ்தி-வேறொருசிறந்தவஸ்து கிடையாதோ, யஸ்மாத் அணீய: ந- எந்தப்ரம்மத்தில் சிறியதில்லையோ, யஸ்மாத் ஜ்யாய: கஶ்சித் ந - எந்தப்ரம்மத்தில்பெரியதில்லையோ, அப்படிப்பட்டப்ரம்மமாகிய பரமபுருஷன், ஏக: வ்ருக்ஷ இவ ஸ்தப்த: திவி திஷ்டதி-ஒருவனாய் வ்ருக்ஷம்போலே யொருவருக்கும்வணங்காதவனாய் பரமபதத்திலிருக்கிறான், தேந புருஷேண இதம் ஸர்வம் பூர்ணம் - அந்தபரமபுருஷனாலிவையெல்லாம் வ்யாபிக்கப்பட்டிருக்கிறது.

ஶ-ஸ.—ப்ரம்மம் எல்லாவற்றிற்கு முபாதாநகாரணமென்பது சேரும்வழியாது? மண்முதலியவையே கடமுதலியவற்றிற்கு பாதாநகாரணமாகின்றனவன்றோ; எனில் சொல்லுகிறது. எல்லாவற்றிற்குமாத்மாவாயிருப்பதால் மண்முதலியவற்றைச் சரீரமாகஉடைய ப்ரம்மமேகாரணமாகின்றது; ஆனதால் விரோதமில்லை ஆக இப்படிஸர்வோபாதாநமாகையால் ப்ரம்மத்தில் சிறந்தவஸ்து மற்றொன்றில்லை அணுவுக்கணுமகத்துக்கு மகத்தாயிருக்கும் அந்தப்ரம்மமேபுருஷோத்தமன். இவனுக்கு ஸ்வாமிஒருவனுமில்லாமையாலே யாருக்குமிவன்வணங்கான், அவனுக்கிருப்பிடம் பரமபதம். இந்தமந்திரத்திற்குச் சிலர்வ்யாக்யாநம் செய்யவில்லையாயினும் ஸ்ரீவ்யாஸாசார்யர் வ்யாக்யாநம் செய்தார்.

பதாந்வயார்த்தபேதங்கள்.

இந்த மந்திரத்திற்கு சங்கரபாஷ்யமில்லை. இதுபற்றியே சிலரிம்மந்திரத்திற்கு வ்யாக்கியாநம் செய்யவில்லை என்று இராமாநுஜபாஷ்யத்தில் சொன்னது.

௮. யதோர்ணநாபி: ஸ்ருஜதே க்ருஹ்ணதே ச யதா ப்ருதிவ்யாமோஷதய: ஸம்பவந்தி | யதா ஸத: புருஷாத்கேசலோமாநி ததாக்ஷராத்ஸம்பவதீஹ விச்வம் ||

౮. యథోర్ణనాభిః సృజతే గృహ్ణతే చ యథా పృథివ్యామోషధయః సంభవంతి । యథా సతః పురుషాత్కేశలోమాని తథాక్షరాత్సంభవతీహ విశ్వమ్॥

(ப-ம்.) ஊர்ணநாபி:-சிலந்திப்பூச்சியானது, யதா - எப்படி, ஸ்ருஜதே-ஸ்ருஷ்டிக்கின்றதோ, க்ருஹ்ணதே-கிரஹிக்கின்றதோ, ப்ருதிவ்யாம் யதா ஓஷதய: ஸம்பவந்தி - பூமியிலெப்படி பலஔஷதிகளுண்டாகின்றனவோ, யதா ஸத: புருஷாத் கேசலோமாநி - ஜீவித்திருக்கிறமனிதனிடத்தில் எப்படி தலைமயிர் உடம்புமயிர் பிறக்கின்றனவோ, ததா அக்ஷராத் இஹ விச்வம் ஸம்பவதி - அப்படியே அக்ஷரபரப்ரம்மத்திலிருந்து ஸமஸ்தமுமுண்டாகிறது.

ஸம்-ஹா.—அனேகதிருஷ்டாந்தங்களால் அக்ஷரபரப்ரம்மம் உபாதாநகாரணமென்பதை வலியுறுத்துகிறது.

ரா-ஹா.—உபாதாநகாரணமும் அதின்காரியமும் ஏகஜாதியாயிருக்கவேண்டும்; அன்றியிலே உபாதாநகாரணத்தில் வேறான நிமித்தகாரணமொன்றுண்டாகையால துஉபாதாநஞ்ஞாநத்தாலறியப்படாமையாலு பாதாநகாரணமாகிய ப்ரம்மமொன்றையறிந்தபோதே எல்லாமறியப்படுமென்பதற்கு வழியில்லை. உபாதாநகாரணத்தியமுன்ரூபம்மாறியே காரியமாகையாலு பாதாநகாரணமாகிய ப்ரம்மத்திற்கு முன்ரூபம்மாறவேண்டும் ப்ரம்மத்திற்குரூபம்மாறாது ஆனதாலிதுசேரும்படியாதெனில் இந்த சங்கையை இந்தமந்திரம் தீர்க்கின்றது.எப்படி சிலந்திப்பூச்சிமுதலியவை சரீர த்வாரா வேறொருநிமித்தத்தை வேண்டாமல் தன்ஸ்வரூபமும் கெடாமலுபாதாநகாரணமாகின்றனவோ, இப்படியே ப்ரம்மமும் சேதநாசேதநமாகிய சரீரத்வார உபாதாநகாரணமாகையாலொரு தோஷமுமில்லை ஆகையால் ப்ரம்மம் எல்லாவற்றிற்கு முபாதாநகாரணமாகிறது,

௯. தபஸா சீயதே ப்ரஹ்ம ததோ(அ)ந்நமபிஜாயதே | அந்நாத்ப்ராணோ மந: ஸத்யம் லோகா: கர்மஸு சாம்ருதம் ||

౯. తపసా చీయతే బ్రహ్మ తతో ఽన్నమభిజాయతే । అన్నాత్ప్రాణో మనః సత్యం లోకాః కర్మసు చామృతమ్॥

(ப-ம்.) ப்ரஹ்ம-பரப்ரம்மமானது, தபஸா-ஸங்கல்பத்தால், சீயதே-ஸ்தூலாவஸ்தையையடைகிறது. தத:-அந்த ஸ்தூலாவஸ்தப்ரம்மத்திலிருந்து, அந்நம்-அபிஜாயதே-அவ்யாக்ருதமென்கிற ப்ரக்ருதியுண்டாகும், அந்நாத்-அந்தப்ரக்ருதியிலிருந்து, ப்ராண:-ப்ராணனும், மந:-மனஸ்ஸும், ஸத்யம்-ஜீவாத்மாக்களும், லோகா: - அவர்களுக்கு லோகங்களும், கர்மஸு சாம்ருதம் - மோக்ஷோபாயமும் பிறக்கும்.

ஸா0-ஸா.—பிரம்மத்தினிடத்தில் பிறக்கும்போது கிரமம் விளங்க இம்மந்திரம் போதிக்கிறது. ப்ரம்மத்திலிருந்து ப்ரக்ருதியும் ப்ரக்ருதியிலிருந்து ஹிரண்யகர்பனும்ஹிரண்யகர்பனிடத்திலிருந்து மனஸ்ஸும் மநஸ்ஸிலிருந்து பூதபஞ்சகமும் பூதபஞ்சகத்திலிருந்து எல்லாஉலகமும்பிறக்கும் அந்தலோகங்களில் வர்ணாச்ரமங்களுக்குத்தக்ககர்மங்களும் கர்மபலங்களுமுண்டாகின்றன.

ரா-ஸா.—ப்ரம்மத்திலிருந்து உலகம்பிறக்கும்வழி யோதுகிறது. ப்ரம்மம் ஸங்கல்பத்தாலே சரீரத்வாரா ஜகத்தாகப் பரிணமித்து தன்னம்சமாகிய ஜீவாத்மாக்களுக்கு மோக்ஷஸாதநமாகிய கர்மங்களை யுண்டுபண்ணித்தந்து மோக்ஷபலத்தைத் தருகிறது. இதின்விரிவுபாஷ்யத்திலும் சுருதப்ரகாசிகையிலும் கண்டுகொள்வது.

௧0. யஸ்ஸர்வஜ்ஞஸ்ஸர்வவித்யஸ்ய ஜ்ஞாநமயம் தப:।
தஸ்மாதேதத் ப்ரஹ்ம நாம ரூபமந்நஞ்ச ஜாயதே॥

౧౦. యస్సర్వజ్ఞః సర్వవిద్యస్య జ్ఞానమయం తపః। తస్మాదేతద్బ్రహ్మ నామ రూపమన్నం చ జాయతే॥

(ப-ம்.) ய:-எந்தஅக்ஷரபரப்ரம்மம், ஸர்வஜ்ஞ:-எல்லாவற்றையுமறிந்ததோ, ய:-எந்தப்ரம்மம், ஸர்வவித்-எல்லாவிசேஷங்களையுமறியுமோ, யஸ்ய-எந்தப்ரம்மத்திற்கு, தப:-ஸங்கல்பமானது, ஜ்ஞாநமயம்-ஜ்ஞாநமேயோ, தஸ்மாத்-அந்தப்ரம்மத்திலிருந்து, ஏதத் - ப்ரஹ்ம நாம ரூபமந்நம் ஜாயதே - முன்சொன்னபடி நாமரூபாத்மகமாகிய ப்ரபஞ்சமுண்டாகிறது.

ஸா0-ஸா.—கீழ்ச்சொல்லியபடியே பொருள்கொள்வதால் முன்சொல்லிய க்ரமத்திற்கு விரோதமில்லை.

ரா-ஸா.—இந்த மந்திரத்தில் ஸர்வஜ்ஞத்வம் விதிக்கப்படுகிறது என்று கொள்க. இப்படிகொள்வதே மீமாம்ஸாந்யாயத்திற்குச் சேரும் ப்ரம்மமே உபாதாநமும் நிமித்தமும் என்பது இம்மந்திரத்தால் விளங்கும். அந்த ப்ரம்மம் நாராயணன். வேறுதேவதையல்ல. விஸ்தாரம் வேறிடத்திலறியத்தக்கது.

முதல்முண்டகம்முதல்கண்டம்முற்றிற்று.

பரப்ரம்மணேநம:

𑌮𑍁𑌣𑍍𑌡𑌕𑍋𑌪𑌨𑌿𑌷𑌤𑍍

𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌮𑍁𑌣𑍍𑌡𑌕𑌪𑍍𑌰𑌥𑌮𑌖𑌣𑍍𑌡𑌃,

𑌹𑌰𑌿𑌃 𑌓𑌮𑍍.

---

௧. 𑌤𑌦𑍇𑌤𑌤𑍍𑌸𑌤𑍍𑌯𑌂 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍇𑌷𑍁 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌕𑌵𑌯𑍋 𑌯𑌾𑌨𑍍𑌯𑌪𑌶𑍍𑌯𑌂𑌸𑍍𑌤𑌾𑌨𑌿 𑌤𑍍𑌰𑍇𑌤𑌾𑌯𑌾𑌂 𑌬𑌹𑍁𑌧𑌾 𑌸𑌨𑍍𑌤𑌤𑌾𑌨𑌿 | 𑌤𑌾𑌨𑍍𑌯𑌾𑌚𑌰𑌥 𑌨𑌿𑌯𑌤𑌂 𑌸𑌤𑍍𑌯𑌕𑌾𑌮𑌾𑌃 𑌏𑌷 𑌵𑌃 𑌪𑌨𑍍𑌥𑌾𑌃 𑌸𑍁𑌕𑍃𑌤𑌸𑍍𑌯 𑌲𑍋𑌕𑍇 ||

౧. మంత్రేషుకర్మాణికవయోయాన్యపశ్యంస్తాని త్రేతాయాంబహుధాసంతతాని।
తాన్యాచరథనియతంసత్యకామాఏషవః పంథాస్సుకృతస్యలోకే॥

(ப-ம்.) 𑌤𑌦𑍇𑌤𑌤𑍍𑌸𑌤𑍍𑌯𑌮𑍍- அப்படிப்பட்ட விது ஸத்யம். 𑌕𑌵𑌯𑌃 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍇𑌷𑍁 𑌯𑌾𑌨𑌿 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌅𑌪𑌶𑍍𑌯𑌨𑍍 - மகர்ஷிகள்வேதமந்திரங்களில் எந்த கர்மங்களைக்கண்டார்களோ, 𑌤𑌾𑌨𑌿 𑌤𑍍𑌰𑍇𑌤𑌾𑌯𑌾𑌂 𑌬𑌹𑍁𑌧𑌾 𑌸𑌨𑍍𑌤𑌤𑌾𑌨𑌿- அந்த அக்நிஹோத்ராதி கர்மங்கள் த்ரேதாக்நியில் பலவாகவிதிக்கப்பட்டன, 𑌸𑌤𑍍𑌯𑌕𑌾𑌮𑌾𑌃-ஸத்யமான ப்ரம்மத்தைவிரும்புகின்ற வதிகாரிகளே, 𑌨𑌿𑌯𑌤𑌂 𑌤𑌾𑌨𑌿 𑌆𑌚𑌰𑌤 - தப்பாமல் அந்தகர்மங்களை யநுஷ்டியுங்கோள், 𑌸𑍁𑌕𑍃𑌤𑌸𑍍𑌯 𑌲𑍋𑌕𑍇 𑌏𑌷𑌃 𑌵𑌃 𑌪𑌨𑍍𑌥𑌾𑌃 - மோக்ஷத்திற்காகச்செய்கிற உபாஸநத்திற்கு இந்தகர்மாநுஷ்டாநமங்க மாகையாலே பலமாகியமோக்ஷத்திற்கு வழியாம்.

𑌶𑌂-𑌹𑌾.—"பரீக்ஷ்யலோகாந்கர்மசிதாந்" என்கிறபடி கர்மங்களைப் பரீக்ஷித்து அவைகளைவிட்டு ப்ரம்மவித்யையிலிழிவதற்கு கர்மாநுஷ்டாநவிதி சொல்லப்படுகிறது.

𑌰𑌾-𑌹𑌾.—மோக்ஷஸாதநமாகிய உபாஸநாங்கமாக கர்மாநுஷ்டாநம் விதிக்கப்படுகிறது.

பதாந்வயார்த்தபேதங்கள்.

மற்றக்கருத்து இரண்டுபாஷ்யங்களுக்கு மொன்றே.

௨. 𑌯𑌦𑌾 𑌲𑍇𑌲𑌾𑌯𑌤𑍇 𑌹𑍍𑌯𑌰𑍍𑌚𑌿𑌃 𑌸𑌮𑌿𑌦𑍍𑌧𑍇 𑌹𑌵𑍍𑌯𑌵𑌾𑌹𑌨𑍇 | 𑌤𑌦𑌾𑌜𑍍𑌯𑌭𑌾𑌗𑌾𑌵𑌨𑍍𑌤𑌰𑍇𑌣𑌾𑌹𑍁𑌤𑍀𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌯𑍇𑌚𑍍𑌛𑍍𑌰𑌦𑍍𑌧𑌯𑌾𑌹𑍁𑌤𑌮𑍍 ||

౨. యదాలేలాయతేహ్యర్చి స్సమిద్ధేహవ్యవాహనే ।
తదాజ్యభాగావంతరేణాహుతీః ప్రతిపాదయేచ్ఛ్రద్ధయాహుతమ్॥

(ப-ம்.) 𑌸𑌮𑌿𑌦𑍍𑌧𑍇 𑌹𑌵𑍍𑌯𑌵𑌾𑌹𑌨𑍇 𑌅𑌰𑍍𑌚𑌿𑌃 𑌲𑍇𑌲𑌾𑌯𑌤𑍇 𑌯𑌦𑌾 𑌤𑌦𑌾 - அக்நி ஜ்வலிக்கும்போது, 𑌆𑌜𑍍𑌯𑌭𑌾𑌗𑌯𑍋𑌰𑌨𑍍𑌤𑌰𑍇 𑌆𑌹𑍁𑌤𑍀𑌃

ப்ரதிபாதயேத் - ஜ்வாலையில், ஆஜ்யபாகமத்யத்தில் ஆகுதிஹோமம்பண்ணக்கடவன், ஹுதம் - அதுநல்லஹோமமாகிறது.

பதாந்வயார்த்தபேதங்கள்.

பதஉரையாலே விளங்குங்கருத்து இரண்டுபாஷ்யங்களுக்கு மொன்றே.

௩. யஸ்யாக்நிஹோத்ரமதர்சமபௌர்ணமாஸமசாதுர்மாஸ்யமநாக்ரயணமதிதிவர்ஜிதஞ்ச | அஹுதமவைச்வதேவமவிதிநாஹுதமாஸப்தமாம்ஸ்தஸ்ய லோகாந்ஹிநஸ்தி ||

3. యస్యాగ్నిహోత్రమదర్శమపౌర్ణమాసమచాతుర్మాస్యమనాగ్రాయణమతిథివర్జితంచ। అహుతమవైశ్వదేవమవిధినాహుతమాసప్తమాంస్తస్యలోకాన్హినస్తి॥

(ப-ம்.) யஸ்ய-யவனுடைய, அக்நிஹோத்ரம் - அக்நிஹோத்ரமானது, அதர்சம்-தர்சகர்மமில்லாததோ, அபௌர்ணமாஸம் - பௌர்ணமாஸ கர்மமில்லாததோ, அசாதுர்மாஸ்யம்-சாதுர்மாஸ்யகர்மமில்லாததோ, அநாக்ராயணம் - ஆக்ராயணகர்மமில்லாததோ, அதிதிவர்ஜிதம்-அதிதிபூஜையில்லாததோ, அவைச்வதேவம்-வைச்வதேவகர்மமில்லாததோ, அவிதிநாஹுதம்-விதிப்படி ஹோமம்பண்ணப்படாததோ, அப்படிப்பட்ட அக்நிஹோத்திரமானது, அஹுதம்-ஹோமம்பண்ணப்படாததாம். அதுவுமதவிற, தஸ்ய-அப்படிஹோமம்பண்ணவனுடைய, ஆஸப்தமாந்-லோகாந்-ஏழுபுருஷன்வரையிலும் பலங்களையும், ஹிநஸ்தி-அழிக்கின்றது.

ஸம்-ஹா.—ரா-ஹா.—எவனக்நிஹோத்ரகர்மத்தை விதிப்படி யநுஷ்டியாமலும் அக்நிஹோத்திராதி காரிக்கவச்யமான தர்சாதியாகங்களைச் செய்யாமலும் திரிகிறனோ அவன்செய்த அக்நிஹோத்ராதி கர்மங்கள் வீணாவதோடு இவனையும் இவனைச்சேர்ந்தாரையு மழித்துக்கெடுக்கும். ஆனதால் எல்லாக்ரமங்களையும் தவராமலநுஷ்டித்தாலது பயன்தருமல்லது தப்பினால்ஸங்கடங்களை யுண்டுபண்ணும் என்று பயத்துடன் தவராமல் அவைகளை யநுஷ்டிக்கக்கடவான்.

பதாந்வயார்த்தபேதங்கள்.

தர்சாதியாகங்கள் அக்நிஹோத்திரத்திற்கு அங்கமல்லவாயினும் நித்ய நைமித்திககர்மங்களைத் தவராம லநுஷ்டிக்கவேணுமென்று கருத்தினுலிப்படி கூறப்பட்டது. இக்கருத்து பகவத்பாஷ்யகாரராலும் வெளியிடப்பட்டது, என்று இராமாநுஜ பாஷ்யத்தில் விசேஷம்.

௪. காளீ கராளீ ச மநோஜவா ச ஸுலோஹிதா யா ச ஸுதூம்ரவர்ணா | ஸ்புலிங்கிநீ விச்வரூபீ ச தேவீ லேலாயமாநா இதி ஸப்த ஜிஹ்வா: ||

4. కాళీకరాళీచమనోజవాచ సులోహితాయాచసుధూమ్రవర్ణా। స్ఫులింగినీవిశ్వరూపీచ దేవీలేలాయమానాఇతిసప్తజిహ్వాః॥

(ப-ம்.) 𑌕𑌾𑌲𑍀-காளியென்றும், 𑌕𑌰𑌾𑌲𑍀 𑌚 - கராளியென்றும், 𑌮𑌨𑍋𑌜𑌵𑌾 𑌚 - மனோஜவை யென்றும், 𑌸𑍁𑌲𑍋𑌹𑌿𑌤𑌾 - சுலோகிதை யென்றும், 𑌯𑌾 - யாதொன்று, 𑌸𑍁𑌧𑍂𑌮𑍍𑌰𑌵𑌰𑍍𑌣𑌾-சுதூம்ரவர்ணை யெனப்பட்டதோ, (அதுவும்) 𑌸𑍍𑌫𑍁𑌲𑌿𑌙𑍍𑌗𑌿𑌨𑍀 - ஸ்புலிங்கிநியென்றும், 𑌦𑍇𑌵𑍀 - பூசிக்கத்தக்கதான, 𑌵𑌿𑌶𑍍𑌵𑌰𑍂𑌪𑍀 𑌚 - விச்வரூபியென்றும், 𑌲𑍇𑌲𑌾𑌯𑌮𑌾𑌨𑌾𑌃 - அசைந்துகொண்டிருக்கிற, 𑌸𑌪𑍍𑌤 - ஏழு, 𑌜𑌿𑌹𑍍𑌵𑌾𑌃 - நாக்குகள்.

𑌶𑌂-𑌶𑌾-𑌭𑌾-𑌸𑌾.—பதாந்வயார்த்த பேதங்களில்லை. இதி,என்பது-என்றும், என்கிறபொருளைத்தருகின்றது; அதுஒன்றேயாயினும் பலவிடங்களிலும் சேர்த்துக்கொள்க.

௫. 𑌏𑌤𑍇𑌷𑍁 𑌯𑌶𑍍𑌚𑌰𑌤𑍇 𑌭𑍍𑌰𑌾𑌜𑌮𑌾𑌨𑍇𑌷𑍁 𑌯𑌥𑌾𑌕𑌾𑌲𑌂 𑌚𑌾𑌹𑍁𑌤𑌯𑍋 𑌹𑍍𑌯𑌾𑌦𑌦𑌾𑌯𑌨𑍍। 𑌤𑌂 𑌨𑌯𑌨𑍍𑌤𑍍𑌯𑍇𑌤𑌾𑌃 𑌸𑍂𑌰𑍍𑌯𑌸𑍍𑌯 𑌰𑌶𑍍𑌮𑌯𑍋 𑌯𑌤𑍍𑌰 𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂 𑌪𑌤𑌿𑌰𑍇𑌕𑍋𑌽𑌧𑌿𑌵𑌾𑌸𑌃 ॥

౫. ఏతేషుయశ్చరతేభ్రాజమానేషుయథాకాలంచాహుతయోహ్యాదదాయన్।
తంనయన్త్యేతాస్సూర్యస్యరశ్మయోయత్రదేవానాంపతిరేకోఽధివాసః॥

(ப-ம்.) 𑌭𑍍𑌰𑌾𑌜𑌮𑌾𑌨𑍇𑌷𑍁 - விளங்குகிற, 𑌏𑌤𑍇𑌷𑍁 - இந்த நாக்குகளில், 𑌯𑌃 - யாதொருவன், 𑌯𑌥𑌾𑌕𑌾𑌲𑌂 - விதித்தகாலங்களில், 𑌚𑌰𑌤𑍇 - ஹோமம்செய்கிறானோ, 𑌤𑌂 - அவனை, 𑌆𑌹𑍁𑌤𑌯𑌃-ஹோமாஹுதிகள், 𑌆𑌦𑌦𑌾𑌯𑌨𑍍 - அழைத்துக்கொண்டு, 𑌏𑌤𑌾𑌃 - இந்த, 𑌸𑍂𑌰𑍍𑌯𑌸𑍍𑌯 - சூரியனுடைய, 𑌰𑌶𑍍𑌮𑌯𑌃 - கிரணங்களாக, (𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 - ஆகி,) 𑌯𑌤𑍍𑌰 - எந்தவிடத்தில், 𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂 - தேவர்களுக்கு, 𑌪𑌤𑌿𑌃 - தலைவனானபிரமன், 𑌏𑌕𑌃 - ஒப்பற்றவனாக, 𑌅𑌧𑌿𑌵𑌾𑌸𑌃 - இருக்கிறானோ, 𑌤𑌤𑍍𑌰 - அவ்விடத்தில், 𑌨𑌯𑌨𑍍𑌤𑌿-கொண்டுவிடுகிறதுகள்.

𑌶𑌂-𑌶𑌾-𑌭𑌾-𑌸𑌾.—மேற்கூறிய அக்கியின் நாக்குகளில் அவ்வோகாலங்களில் செய்யப்பட்ட வாகுதிகள் சூரியனுடைய கிரணங்களில் சேர்ந்துகொண்டு ஹோமஞ்செய்த புருஷனை எந்த விடத்தில் சகல தேவர்க்கு மதிபதியாகிய சதுர்முகன் வீற்றிருக்கிறானோ அவ்விடத்தில் கொண்டுசேர்க்கின்றன. இந்திரலோகத்தில் சேர்க்கின்றன என்பது சங்கரபாஷ்யத்தில் பேதம்.

௬. 𑌏𑌹𑍍𑌯𑍇𑌹𑍀𑌤𑌿 𑌤𑌮𑌾𑌹𑍁𑌤𑌯𑌃 𑌸𑍁𑌵𑌰𑍍𑌚𑌸𑌃 𑌸𑍂𑌰𑍍𑌯𑌸𑍍𑌯 𑌰𑌶𑍍𑌮𑌿𑌭𑌿𑌰𑍍𑌯𑌜𑌮𑌾𑌨𑌂 𑌵𑌹𑌨𑍍𑌤𑌿। 𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌂 𑌵𑌾𑌚𑌮𑌭𑌿𑌵𑌦𑌨𑍍𑌤𑍍𑌯𑍋𑌽𑌰𑍍𑌚𑌯𑌨𑍍𑌤𑍍𑌯 𑌏𑌷 𑌵𑌃 𑌪𑍁𑌣𑍍𑌯𑌃 𑌸𑍁𑌕𑍃𑌤𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌲𑍋𑌕𑌃 ॥

౬. ఏహ్యేహీతితమాహుతయస్సువర్చసస్సూర్యస్యరశ్మిభిర్యజమానంవహన్తి।
ప్రియాంవాచమభివదన్త్యోఽర్చయన్త్యఏషవఃపుణ్యస్సుకృతోబ్రహ్మలోకః॥

(ப-ம்.) 𑌤𑌂 - அந்த, 𑌯𑌜𑌮𑌾𑌨𑌂 - யஜமானனை, 𑌸𑍂𑌰𑍍𑌯𑌸𑍍𑌯-சூரியனுடைய, 𑌰𑌶𑍍𑌮𑌿𑌭𑌿𑌃-கிரணங்களோடு, 𑌸𑌂𑌪𑍃𑌕𑍍𑌤𑌾𑌃 - சேர்ந்த, 𑌸𑍁𑌵𑌰𑍍𑌚𑌸𑌃-நல்லொளியோடுகூடிய, 𑌆𑌹𑍁𑌤𑌯𑌃-ஆகுதிகள், 𑌏𑌹𑌿-𑌏𑌹𑌿-𑌇𑌤𑌿-வாரும், வாரும், என்றும், 𑌏𑌷𑌃-இந்த, 𑌪𑍁𑌣𑍍𑌯𑌃 - சுத்தமான, 𑌸𑍁𑌕𑍃𑌤𑌃-நல்ல

றத்தால் சாதிக்கப்பட்ட, ப்ரஹ்மலோகஃ - சதுர்முகனுலகமான்து, வஃ - உம்முடையது, (உதி - என்றும்) ப்ரியாம் - பிரியமான, வாசம் - வார்த்தையை, அபிவதந்த்யஃ-சொல்லிக்கொண்டும், அர்ச்சயந்த்யஃ-பூசித்துக்கொண்டும்; வஹந்தி - அழைத்துக்கொண்டுபோகின்றன.

ஸம்-ஹா-ரா-ஹா.—இந்த புருஷனை மேற்கூறிய வாகுதிகள் சூரியனுடைய கிரணங்களுடன் சேர்ந்துகொண்டு வாரும்வாரும் சுத்தமாயும் நல்லறங்களால் பெறப்பட்டதாயுமுள்ளசதுர்முகனுலகம் உம்முடையதே யென்று பிரியவார்த்தைகளைச் சொல்லி யழைத்துக்கொண்டு போகின்றன. சதுர்முகனுலக மென்னுமிடத்தில் இந்திரனுலகமென்பது சங்கரபாஷியத்தில் பேதம்.

எ. ப்லவா ஹ்யேதே அத்ருடா யஜ்ஞரூபா அஷ்டாதசோக்தமவரம் யேஷு கர்ம | ஏதச்ச்ரேயோ யேऽபிநந்தந்தி மூடா ஜராம்ருத்யும் தே புனரேவாபி யந்தி ||

౭. ప్లవా హ్యేతే అదృఢా యజ్ఞరూపా అష్టాదశోక్త మవరం యేషు కర్మ।
ఏతచ్ఛ్రేయో యేఽభినన్దన్తి మూఢా జరామృత్యుం తే పునరేవాపి యన్తి॥

(ப-ம்.) அஷ்டாதசோக்தம் - பதினெட்டு பெயர்களால் செய்யவேண்டியதாக சொல்லப்பட்ட, அவரம் - தாழ்ந்த, கர்ம - யஜ்ஞமானது, யேஷு - எந்தபுருஷர்களிடத்தில் (வர்த்ததே - இருக்கிறதோ,) ஏதே - இந்த, யஜ்ஞரூபாஃ - யஜ்ஞம்செய்பவர்கள், அத்ருடாஃ - உறுதியற்ற, ப்லவாஃ - தொணிகள், ஏதத் - இந்தகர்மத்தை, ச்ரேயஃ - நற்கதிக்குக்காரணமாக, யே - எந்த, மூடாஃ - அறிவிலிகள், அபிநந்தந்தி - கொண்டாடுகிறார்களோ, தே - அவர்கள், ஜராம்ருத்யும் - கிழத்தன்மரணங்களை, புனரேவ - மறுபடிதானே, அபியந்தி - அடைகிறார்கள்.

ஸம்-ஹா.—ஜ்ஞானமில்லாமல் செய்யப்பட்ட யஜ்ஞம் முதலிய கருமங்கள் அவித்யையால் செய்யப்பட்டதாதலால் துக்கத்தையே விளைக்கத்தக்கவைகள் என்று சொல்லப்படுகிறது. பதினாறு ருத்விக்குகளும் பத்நி-யஜமானன் ஆக பதினெட்டு பெயர்களால் செய்யவேண்டுவதாக சொல்லப்பட்ட கருமங்களை யெவர்கள் செய்கிறார்களோ; அவர்கள் உறுதியற்ற தொணிகள்போல் ஸம்ஸாரமாகிய சமுத்திரத்தை தாண்ட சக்தியற்றவர்கள். இவைகளை முக்திக்குக்காரணமாக எண்ணுகிறவர்கள் தங்கள் புண்ணியங்கள் கழிந்தபோதே மேலுலகமான சுவர்க்கத்தில் நின்றும் மீண்டும் ஸம்ஸாரத்தை யடைகிறார்கள்.

ரா-ஹா. பதினெட்டு பெயர்களால் செய்யவேண்டுவதாகச் சொல்லப்பட்ட கருமங்களை எவர்கள் தாழ்ந்தபயன்களை விரும்பிச் செய்கிறார்களோ அவர்கள் உறுதியற்ற தொப்பம்போல் ஸம்ஸாரமாகிற சமுத்திரத்தை தாண்ட சக்தியற்றவர்களாக விருக்கிறார்கள். அல்லது பதினெட்டு ஸ்மிருதிகளில் சொல்லப்பட்ட கருமங்கள் எந்த கருமங்களுக்கு அங்கங்களாகவிருக்கின்றனவோ. அந்த யஜ்ஞம் முதலிய கருமங்கள் உறுதியற்ற தொணிகள். அவைகளை நற்கதிக்குக்காரணமாக யெண்ணுகிறவர்கள் திரும்பவும் சம்சாரத்தை யடைகிறார்கள். என்று பலத்தைவிரும்பிச் செய்கிற கருமங்கள் நிந்திக்கப்படுகின்றன.

அ. அவித்யாயாமந்தரே வர்தமாநா: ஸ்வயம் தீரா: பண்டிதம் மந்யமாநா:।
ஜங்கந்யமாநா: பரியந்தி மூடா அந்தேநைவ நீயமாநா யதாந்தா:॥

౮. అవిద్యాయామన్తరే వర్తమానాః స్వయంధీరాః పండితంమన్యమానాః।
జంఘన్యమానాః పరియంతి మూఢా అంధేనైవ నీయమానా యథాంధాః॥

(ப-ம்.) மூடா: - அறிவில்லாதவர்கள், அவித்யாயா: அந்தரே - அவித்யையின் நடுவில், வர்தமாநா: - இராநின்றவர்களாய், ஸ்வயம் - தாமே, தீரா: - புத்திமான்கள், பண்டிதம்மந்யமாநா: - பண்டிதர்கள், என்று நினைவுடையவர்களாய், ஜங்கந்யமாநா: - கிழத்தனம்முதலிய ரோகங்களால் பீடிக்கப்பட்டவர்களாய், அந்தேநைவ - குருடனாலேயே, நீயமாநா: - வழிகாட்டப்படுகிற, அந்தா: யதா - குருடர்கள்போல, பரியந்தி - சுழலுகிறார்கள்.

௯. அவித்யாயாம் பஹுதா வர்தமாநா வயம் க்ருதார்தா இத்யபிமந்யந்தி பாலா:। யத்கர்மிணோ ந ப்ரவேதயந்தி ராகாத்தேநாதுரா: க்ஷீணலோகாச்ச்யவந்தே॥

౯. అవిద్యాయాంబహుధావర్తమానాః వయంకృతార్థా ఇత్యభిమన్యంతి బాలాః।
యత్కర్మిణో న ప్రవేదయంతి రాగాత్తేనాతురాః క్షీణలోకాశ్చ్యవన్తే॥

(ப-ம்.) அவித்யாயாம்-பஹுதா வர்தமாநா: - தேவர்மநுஷ்யர் முதலிய அநேகபேதங்களையடைந்து இப்ப்ராக்ருதிமண்டலத்தில் வஸிக்கிற, பாலா: - அறிவிலாதவர், வயம் - நாம், க்ருதார்தா: - எல்லாம்பெற்றவர்கள், இதி - என்று, அபிமந்யந்தி - எண்ணுகிறார்கள், யத் - எந்தகாரணத்தால், கர்மிண: - கர்மம்செய்பவர், ராகாத் - ஆசையினால், ந ப்ரவேதயந்தி - தத்வத்தையறியார்களோ, தேந - அந்தகாரணத்தால், ஆதுரா: - பீடிக்கப்பட்டவர்களாய், க்ஷீணலோகா: - புண்யங்கழிந்தவர்களாய், ச்யவந்தே - புண்யலோகங்களினின்றும் நழுவுகிறார்கள்.

பதாந்வயார்த்தபேதங்கள்.

அவித்யை என்பதற்கு சங்கரபாஷ்யத்தில் மாயை என்றும் இராமாநுஜ பாஷ்யத்தில் ப்ரக்ருதி என்றும் பொருள்கூறப்பட்டிருக்கிறது. மற்றவைபத உரையில்போலவே இரண்டு சுலோகங்களிலும் இரண்டு பாஷ்யங்களிலுமு ரைக்கப்பட்டிருக்கின்றன.

௰. இஷ்டாபூர்தம் மந்யமாநா வரிஷ்டம் நாந்யச்ச்ரேயோ வேதயந்தே ப்ரமூடா:। நாகஸ்ய ப்ருஷ்டே தே ஸுக்ருதேऽநுபூத்வேமம் லோகம் ஹீநதரம் வா விசந்தி॥

౧౦. ఇష్టాపూర్తంమన్యమానావరిష్ఠం నాన్యచ్ఛ్రేయోవేదయన్తే ప్రమూఢాః।
నాకస్యపృష్ఠే తే సుకృతేనుభూత్వేమం లోకంహీనతరంచావిశంతి॥

(ப்-ம்.) ப்ரமூடா: - அறியாதவர்கள், இஷ்டாபூர்த்தம் - யாகம்செய்தல் தடாகமுதலியவையுண்டாக்குதல் இவைகளை, வரிஷ்டம் - சிறந்ததாக, மந்யமானா: - நினைத்தவர்களாய், அந்யத்ச்ரேய: - வேறுபுருஷார்த்தத்தை, நவேதயந்தே - தெரிந்துக்கொள்ளுகிறதில்லை. தே - அவர்கள், ஸுக்ருதே - புண்யத்தாலாகிய, நாகஸ்யப்ருஷ்டே - ஸுவர்க்கலோகத்தில், அநுபூத்வா - கர்மபலத்தையநுபவித்து, இமம் லோகம் - இந்தமநுஷ்யலோகத்தையும், ஹீநதரம்வா - நரகாதிலோகத்தையும் விசந்தி - அடைகிறார்கள்.

௧௧. தப:ச்ரத்தேயேஹ்யுபவஸந்த்யரண்யே சாந்தாவித்வாம்ஸோ பைக்ஷசர்யாம்சரந்த:। ஸூர்யத்வாரேணதேவிரஜா:ப்ரயாந்தியத்ராம்ருத: ஸ புருஷோஹ்யவ்யயாத்மா॥

௧௧. తపశ్శ్రద్ధేయేహ్యుపవసన్త్యరణ్యేశాన్తావిద్వాంసోభైక్షచర్యాంచరన్తః।
సూర్యద్వారేణతేవిరజాఃప్రయాంతియత్రామృతస్సపురుషోహ్యవ్యయాత్మా॥

(ப்-ம்.) யேஹி - யவர்கள், அரண்யே-ஏகாந்தஸ்தலத்தில், சாந்தா:- சாந்தியுடையவர்களாய், பைக்ஷசர்யாம்சரந்த: - பிக்ஷைசெய்கிறவாகளாய், வித்வாம்ஸ: - உபாஸகர்களாய், தப:ச்ரத்தே - ப்ரம்மத்தைபக்தியோடு, உபவஸந்தி - உபாஸிக்கிறார்களோ, தே - அவர்கள், விரஜா: - தோஷமில்லாதவர்களாய், ஸூர்யத்வாரேண - ஸூரியமார்க்கத்தாலே, ப்ரயாந்தி - போகிறார்கள், யத்ர - யந்த பரமபதத்தில், அம்ருத: - அம்ருத ஸ்வரூபியாயும், அவ்யயாத்மா - அழிவில்லாதவராயுமிருக்கிற, ஸ:புருஷ: ஹி - அந்த பரமபுருஷன் வஸிக்கிறாரோ; அந்தபரமபதத்தை யடைகிறார்கள்.

பதாந்வயார்த்தபேதங்கள்.

சங்கரபாஷ்யத்தில் தபச்சப்தத்திற்கு வர்ணாச்சிரமங்களுக்குரிய கருமமென்றும் ச்ரத்தை, என்பதற்கு ஹிரண்யகர்ப்பவிஷயமான வித்யைஎன்றும் இந்த சுலோகத்தில் சொல்லிய அதிகாரியடைவது ஸத்யலோக மென்றும் இது மோக்ஷமல்லவென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இராமாநுஜபாஷ்யத்திலிதுவே மோக்ஷமென்று வ்யாக்யாநம் செய்யப்பட்டது. மற்றவைகளிரண்டு பாஷ்யங்களு மிவ்விரண்டு ச்லோகங்களிலும் பதஉரையயே யநுஸரிக்கின்றன.

௧௨. பரீக்ஷ்யலோகாந்கர்மசிதாந்ப்ராஹ்மணோநிர்வேதமாயாந்நாஸ்த்யக்ருத:க்ருதேந । தத்விஜ்ஞாநார்த்தம்ஸகுருமேவாபிகச்சேத்ஸமித்பாணி:ச்ரோத்ரியம்ப்ரஹ்மநிஷ்டம்॥

౧౨. పరీక్ష్యలోకాన్కర్మచితాన్బ్రాహ్మణోనిర్వేదమాయాన్నాస్త్యకృతఃకృతేన।
తద్విజ్ఞానార్థంసగురుమేవాభిగచ్ఛేత్సమిత్పాణిశ్శ్రోత్రియంబ్రహ్మనిష్ఠమ్॥

(ப்-ம்.) ப்ராஹ்மண: - வேதாத்யயநம் செய்த எந்த ப்ராம்மணன், கர்மசிதாந் - கர்மங்களாலாகிய, லோகாந்-லோகங்களை, பரீக்ஷ்ய- மீமா

ம்ஸைகளைக்கொண்டு நன்கறிந்து, अकृतः-நித்யனாகிய புருஷன், कृतेन-அநித்யமான கர்மத்தினால், नास्ति-அடையப்படமாட்டான் என்று, निर्वेदमायात् - சிந்தையடைவனோ, सः - அந்தப்ராம்மணன், तद्विज्ञानार्थं- அந்தபுருஷனை யறியும்பொருட்டு, श्रोत्रियं - வேதாந்தமறிந்தவனாயும் ब्रह्मनिष्ठं - ப்ரம்மநிஷ்டை யுடையவனாயுமிருக்கிற, गुरुमेव-ஆசாரியனையே, समित्पाणिः - ஸமித்தைக் கையிலேந்திக்கொண்டவனாய், अभिगच्छेत् - அடையக்கடவன்.

௧௩. तस्मै स विद्वानुपसन्नाय सम्यक्प्रशान्तचित्ताय शमान्विताय । येनाक्षरं पुरुषं वेद सत्यं प्रोवाच तां तत्त्वतो ब्रह्मविद्याम् ॥

౧౩. తస్మైసవిద్వానుపసన్నాయసమ్యక్ప్రశాన్తచిత్తాయశమాన్వితాయ।
యేనాక్షరంపురుషంవేదసత్యంప్రోవాచతాంతత్త్వతోబ్రహ్మవిద్యామ్॥

(ப்-ம்.) सः - அந்த, विद्वान् - ஆசாரியன், सम्यक् - சாஸ்திரப்படி, उपसन्नाय - தன்னை யடைந்திருக்கிறவனும், प्रशान्तचित्ताय - சாந்தமான நெஞ்சையுடையவனும், शमान्विताय - மற்ற இந்திரியங்களினுடைய வுமடக்கத்தையுடையவனுமான, तस्मै - அந்த சிஷ்யனையும்பொருட்டு, येन - எந்தவித்யையினால், अक्षरं - ஸ்வரூபவிகார மில்லாதவனும், सत्यं - குணவிகாரமில்லாதவனுமான, पुरुषं - புருஷனை, वेद - தானறிந்துகொண்டானோ; तां ब्रह्मविद्यां - அந்தப்ரம்மவித்யையை, तत्त्वतः - உள்ளபடி, प्रोवाच - சொல்லக்கடவன்.

ஶ௦-ஹா.—காரணகாரிய ரூபமாகிய இந்த ஸம்ஸாரத்தில் பூர்ணவிரக்தி பிறந்தவனுக்கு ப்ரம்மவித்தையை யிலதிகாரமென்று காட்டுவதற்கு இந்த சுலோகம் சொல்லப்படுகிறது. ஒருவன், அவித்யை ஆசை கருமம் முதலிய தோஷங்களையுடைய புருஷனால் அநுஷ்டிக்கத்தக்கதாகிய ருக்வேத முதலிய வற்றில் சொன்ன அபரவித்தைகளின் ஸ்வரூபத்தையும், அவைகளின் பலங்களாய் விதிக்கப்பட்ட தக்ஷிணாயந மார்க்கத்தாலு முத்தராயண மார்க்கத்தாலு மடையக்கூடிய லோகங்களையும், விதிப்படி செய்யாமையாலும் விதியினால் தடுக்கப்பட்டவைகளைச் செய்வதினாலு முண்டாகிற நரகம் முதலிய லோகங்களையும், ப்ரத்யக்ஷம் அநுமாநம் உபமாநம் வேதாகமம் இவைகளால் முற்றிலு முள்ளபடியறிந்து, இவைஸம்ஸாரத்தில் செல்லுவதற்குக்காரணங்களென்றும், வித்தும் முளையும்போல ஒன்றுக் கொன்று காரணமாய் அநேகாநர்த்தங்களுக் கிடமென்றும் அஸாரங்களென்றும் மாயை, கானல்தண்ணி கந்தர்வநகரம், ஸ்வப்நம் நீர்க்குமிழி முதலிய வற்றைப்போல க்ஷணந்தோறும் ஆவதுமழிவதுமாகிய தன்மையுடையன வென்றும் நிச்சயித்து, வ்யாக்ருதம் அவ்யாக்ருதம் என்கிற அவ்யக்தம் முதல் ஸ்தாவரம் வரையிலுள்ள ஸமஸ்தத்தையும் விட்டு, ப்ராஹ்மணன் வைராக்கிய மடையக் கடவன். அவித்யா காமதோஷாதிகளால் வருகிற கர்மங்களினா லுண்டாகும் தருமா தருமங்களைச் சேர்ந்தவைகளில் வைராக்யம் செய்து ப்ரம்ம வித்யையைப் பற்றுவதில் ப்ராம்மணனுக்கே முக்யாதிகார மாகையால் ப்ராம்மணனென் றெடுத்தது. வைராக்கிய மடை

யும் ப்ரகாரமாவது. இந்த ஸம்ஸாரத்தில் நித்யமான பதார்த்த மொன்றுமில்லை. எல்லாம் கருமத்தினுலுண்டானவை ஆகையா லநித்யங்களே, நித்யமாகிய தொன்றுமில்லை. எல்லா கர்மமும் அநித்யத்திற்கே ஸாதநமாகின்றது. கர்ம்மத்தின் பயன் நால்வகைத் தேயன்றே; அதாவது கர்மத்தினுல் பிறப்பிக்கப்படும் சில; கருமத்தினுலடையப்படும் சில; கர்ம்மத்தினுல் ஸம்ஸ்கரிக்கப்படும் சில; கர்மத்தினுல் வேறுபாட்டை யடைவிக்கப்படும் சில, நமக்கு நிச்யமாய் அம்ருதமாய் அபயமாய் கூடஸ்த்தமாய் அசலமாய் த்ருவமாயிருக்கிற பொருளில் விருப்பமிருக்கின்றது; இப்படி யாகாததில் நமக்காசையில்லை. ஆகையால் நித்யஸாதநமாயும் இப்படிப்பட்ட பொருளுக்கு ஸாதநமாகாதது மான கருமத்தினுல் நமக்கென்ன ப்ரயோஜநமுண்டு, அநித்யத்தைவிட கருமம் வேறொன்றையும் ஸாதியாது. ஆகையால் வீணாயநேகா நர்த்தங்களுக்குக் காரணமாய் ஆயாஸத்திற்கிடமாகிய கருமம் வீணேயாம்; அநித்யத்தினுல் நித்யம் வராதன்றே; என்பதாம். இப்படி வைராக்யமடைந்தவன் அபயமானதும் மங்களஸ்வரூபமானதும் அம்ருதம்போன்றதும் நித்யமுமான ஸ்தாநத்தை யடைவதற்கு, சமம், தமம், தயை, இவைகளோடு கூடிய ஆசாரியனையே ஆச்ரயிக்கக் கடவன், இவன் சாஸ்திரபண்டிதனுயினும் ஆசாரியனை யடைந்தே ப்ரம்மஜ்ஞாநத்தைப் பெறவேணு மென்பதற்கு ஆசாரியனையே என்றது. வேதாந்தத்தை யறிந்தவனுயும் ப்ரம்மநிஷ்டனாயு மிருக்கிற ஆசாரியனை அரிக்த பாணியாய் ஸமித்து பலம் முதலிய உபஹாரங்களை யெடுத்துக்கொண்டு, ஆச்ரயிக்கக் கடவன். கேவலப்ரம்ம நிஷ்டனே ஆசாரியனுகிறன். கர்மநிஷ்டன் ப்ரம்மநிஷ்டனுகான். கர்மத்திற்கும் ப்ரம்மஜ்ஞாநத்திற்கும் விரோதமாகையா லென்றறிக. ஆகையால் கேவலப்ரம்ம நிஷ்டனை ஆசாரியனுக வரிக்கக் கடவன். ஆசாரியனருள்பெற்று அவனைத்தான் ப்ரம்மஸ்வரூபத்தை ப்ரச்நம் பண்ணக் கடவன். அப்படிப்பட்ட சிஷ்யனுக்கு ஆசார்யன் தானறிந்த ப்ரம்மவித்யையை உபதேசிக்கக் கடவன். ஆந்தரபாஹ்யேந்திரியங்களை நிக்ரஹித்து பரமவிரக்தனுன சிஷ்யனுக்கு தானெந்த வித்யையினுல் அக்ஷரஸத்யபுருஷனை யறிந்தானே அந்தப்ரம்ம வித்யையை உள்ளபடி யுபதேசிக்கக் கடவன். ரிக்தபாணியென்றல் வெறுங்கையனென்று பொருள். அப்படியாகாதவன், அரிக்தபாணியாகிறன்.

௱-ஹா.—வைராக்ய முடையவனுய் பரப்ரம்மத்தை யடைவதற்கு வேண்டிய வித்யை என்கிற ஜ்ஞாநத்தைச் கோருகிறவனுக்கு ஆசாரியோபாஸநம் விதிக்கப்படுகிறது. இந்த வாக்யத்தில் ந்யாயத்தினு லேர்ப்படுகிற அர்த்தத்தை யனுவதித்துக்கொண்டு ஆசாரியனை யாச்ரயிக்கும் க்ரமம் சொல்லப்படுகிறது. ஆசாரியன் வேதாந்த பண்டிதனுயினும் ப்ரம்மநிஷ்டை யில்லாதவனை யடையக் கூடாது. அசித்து சித்து இவ்விரண்டு தத்வங்களிலும் பேதப்பட்ட ப்ரம்மத்தை யடைவதற்கு குருபாஸநம் அவச்யமானது என்று நியமவிதியா லுணர்த்தப்படுகிறது.

பதார்த்வ்யார்த்தபேதங்கள்.

இரண்டு சுலோகங்களு மொன்றோடொன்று ஸம்பந்தமுடையதா யிருப்பதால் இரண்டுக்கும்சேர்த்து பாஷ்யமெழுதப்பட்டது.

ஜதிவுாயஉஉ-ணுகெஹிதீயவெணஃ.

ஜதி வுாயஉஉ-ணகஃ||

ஸ்ரீ:

𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌮𑍁𑌣𑍍𑌡𑌕𑍇 𑌪𑍍𑌰𑌥𑌮𑌖𑌣𑍍𑌡𑌃.

௧. 𑌤𑌦𑍇𑌤𑌤𑍍𑌸𑌤𑍍𑌯𑌂𑌯𑌥𑌾𑌸𑍁𑌦𑍀𑌪𑍍𑌤𑌾𑌤𑍍𑌪𑌾𑌵𑌕𑌾𑌦𑍍𑌵𑌿𑌸𑍍𑌫𑍁𑌲𑌿𑌙𑍍𑌗𑌾𑌸𑍍𑌸𑌹𑌸𑍍𑌰𑌶𑌃 𑌪𑍍𑌰𑌭𑌵𑌨𑍍𑌤𑍇𑌸𑌰𑍂𑌪𑌾𑌃 । 𑌤𑌥𑌾𑌕𑍍𑌷𑌰𑌾𑌦𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑌾𑌃𑌸𑍋𑌮𑍍𑌯𑌭𑌾𑌵𑌾𑌃𑌪𑍍𑌰𑌜𑌾𑌯𑌨𑍍𑌤𑍇 𑌤𑌤𑍍𑌰𑌚𑍈𑌵𑌾𑌪𑌿𑌯𑌨𑍍𑌤𑌿 ॥

౧. తదేతత్సత్యంయథాసుదీప్తాత్పావకాద్విస్ఫులింగాస్సహస్రశఃప్రభవంతేసరూపాః।
తథాక్షరాద్వివిధాస్సోమ్యభావాఃప్రజాయంతేతత్రచైవాపియంతి॥

(ப-ம்.) 𑌸𑍋𑌮𑍍𑌯 - ஓஸோம்யனே, 𑌤𑌤𑍍- அப்படிப்பட்ட, 𑌏𑌤𑌤𑍍- இந்தப்ராம்மஸ்வரூபமானது, 𑌸𑌤𑍍𑌯𑌂 - ஸத்யமானது, 𑌯𑌥𑌾 - எப்படி, 𑌸𑍁𑌦𑍀𑌪𑍍𑌤𑌾𑌤𑍍 - ஜ்வலித்துக்கொண்டிருக்கிற, 𑌪𑌾𑌵𑌕𑌾𑌤𑍍 - அக்னியிலிருந்து, 𑌸𑌰𑍂𑌪𑌾𑌃 - ஸத்ருசங்களான, 𑌵𑌿𑌸𑍍𑌫𑍁𑌲𑌿𑌙𑍍𑌗𑌾𑌃 - பொறிகள், 𑌸𑌹𑌸𑍍𑌰𑌶𑌃 - அனேகமாக, 𑌪𑍍𑌰𑌭𑌵𑌨𑍍𑌤𑍇 - உண்டாகின்றனவோ; 𑌤𑌥𑌾 - அப்படியே, 𑌅𑌕𑍍𑌷𑌰𑌾𑌤𑍍 - அக்ஷரபரப்ரம்மத்திலிருந்து, 𑌵𑌿𑌵𑌿𑌧𑌾𑌃 - அநேகவிதங்களான; 𑌭𑌾𑌵𑌾𑌃 - பதார்த்தங்கள், 𑌪𑍍𑌰𑌜𑌾𑌯𑌨𑍍𑌤𑍇 - உண்டாகின்றன. 𑌤𑌤𑍍𑌰𑍈𑌵 - அவ்விடத்திலேயே, 𑌅𑌪𑌿𑌯𑌨𑍍𑌤𑌿 - லயம் பெறுகின்றன.

ஶம்-ஹா.—இதுவரையில் அபரவித்யையின் ப்ரகாரம் முற்றும் சொல்லப்பட்டது. இனி இந்த அபரவித்யையின் காரியமான ஸம்ஸாரம் எந்த அக்ஷரப்ரம்மத்தி னின்றும் பிறக்கிறதோ எந்த அக்ஷரபரப்ரம்மத்தி லழிந்து லயிக்கிறதோ யதையறிந்தா லெல்லா மறியப்படுமோ அப்படிப்பட்ட பரவித்யை என்கிற ப்ரம்மவித்யைக்கு விஷயமான ஸத்ய புருஷாக்ஷர ப்ரம்ம ஸ்வரூபத்தை நிரூபித்துச் சொல்லுவதற்கு மேல் துடங்கப்படுகிறது. அபரவித்யைக்கு விஷயமான கருமத்தால் வருகிற பலம் ஸத்யமென்று உபசரிக்கப்பட்டாலும் அவித்யைக்கு விஷயமாகையாலே வாஸ்தவத்தில் ஸத்யமல்ல. இந்த அக்ஷரப்ரம்மம் ஸத்தாகையால் வித்யாவிஷயமாய் வாஸ்தவஸத்யமாகிறது. இப்படிப்பட்ட அக்ஷரபரப்ரம்மம் மிகவும் பரோக்ஷமாகையால் கண் முதலிய இந்திரியங்களுக்குத் தெரியாதாகையால் ப்ரத்யக்ஷ வஸ்துவைப்போ லறிவது கஷ்டமென்று இந்த ப்ரம்மத்திற்கு திருஷ்டாந்தம் கூறப்படுகிறது. அக்னியிலிருந்து அக்னி கணங்கள் புறப்படுவதுபோல அக்ஷரபரப்ரம்மத்தி லிருந்து அந்த ப்ரம்ம கணங்களாகிய ஜீவர்கள் புறப்படுகிறார்கள். நெருப்பிலிருந்து கிளம்புகிற பொறிகளும் நெருப்பேயாவதுபோல ப்ரம்மத்திலிருந்து பிறக்கிற ஜீவர்களும் ப்ரம்மமே யாவர்கள். ப்ரம்மம் ஒன்றே யாயினும் ஒரே ஆகாயத்தில் குட முதலிய உபாதிகளினால் அனேக பேதங்களுண்டாகிறதுபோல தேவர் மநுஷ்யர் முதலான தேஹங்களாகிற உபாதிகளினால் அனேக ஜீவர்கள் ஏற்படுகிறார்கள். அந்த ப்ரம்மத்திலேயே குட முதலியவை யுடைந்தபோது மஹாகாசத்துடன் கலந்து லயிக்கிறதுபோல ஜீவர்கள் சரீரமாகிய உபாதி கழிந்தபோது லயிக்கிறார்கள்.

ரா-ஹா.—ஸூக்ஷ்மமாகிய சித்தையும் அசித்தையும் சரீரமாக உடைய ப்ரம்மத்திலிருந்து ஸ்தூலங்களான சித்துக்களும் அசித்துக்களும் உண்டாவதில் திருஷ்டாந்தமாக அக்னியை யெடுத்துக் காட்டுகிறது. மற்றவை முன்போலவே.

உ. 𑌦𑌿𑌵𑍍𑌯𑍋𑌹𑍍𑌯𑌮𑍂𑌰𑍍𑌤𑌃𑌪𑍁𑌰𑍁𑌷𑌸𑍍𑌸𑌬𑌾𑌹𑍍𑌯𑌾𑌭𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑍋𑌹𑍍𑌯𑌜𑌃।
𑌅𑌪𑍍𑌰𑌾𑌣𑍋𑌹𑍍𑌯𑌮𑌨𑌾𑌶𑍍𑌶𑍁𑌭𑍍𑌰𑍋𑌹𑍍𑌯𑌕𑍍𑌷𑌰𑌾𑌤𑍍𑌪𑌰𑌤𑌃𑌪𑌰𑌃॥

౨. దివ్యోహ్యమూర్తః పురుషస్సబాహ్యాభ్యన్తరోహ్యజః।
అప్రాణోహ్యమనాశ్శుభ్రోహ్యక్షరాత్పరతఃపరః॥

(ப-ம்.) 𑌦𑌿𑌵𑍍𑌯𑌃 - பரமபதவாஸியாயும், 𑌅𑌮𑍂𑌰𑍍𑌤𑌃 - கர்மஸம்பந்தத்தாலுண்டான அவயவங்களில்லாதவனும், 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 - புருஷசப்தவாச்யனும், 𑌬𑌾𑌹𑍍𑌯𑌾𑌭𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑌃 - உள்ளும்வெளியும் வ்யாபித்தவனும், 𑌅𑌜𑌃 - உத்பத்தியில்லாதவனும், 𑌅𑌪𑍍𑌰𑌾𑌣𑌃 - ப்ராணஸம்பந்தமில்லாதவனும், 𑌅𑌮𑌨𑌾𑌃 - மநஸ்ஸில்லாதவனும், 𑌶𑍁𑌭𑍍𑌰𑌃 - சுத்தனுமிருக்கிற, 𑌸𑌃 - அந்த பரமபுருஷன், 𑌅𑌕𑍍𑌷𑌰𑌾𑌤𑍍 - அவ்யாக்ருதத்தைக்காட்டிலும், 𑌪𑌰𑌤𑌃 - பரனான ஸமஷ்டிபுருஷனைக்காட்டிலும், 𑌪𑌰𑌃 - பரன்.

இந்தசுலோகத்தில் 'ஹி' மூன்றுக்கும் ப்ரஸித்தியே பொருள்.

ஶ௦-பா.—நாமரூபங்களுக்குக் காரணமாய் தன் விகாரங்களில் காட்டில் பரமாயிருக்கிற அவ்யாக்ருத மென்கிற அக்ஷரத்தைக் காட்டில் பரமாய், ஸமஸ்தமான உபாதி பேதங்களும் நீங்கியதாய் ஆகாசம்போலே அமூர்தமாயிருக்கிற அக்ஷரபரப்ரம்ம ஸ்வரூபத்தை பேதசூந்யமென்று சொல்லுவதற்கு தொடங்குகிறது. ப்ரகாச ஸ்வரூபமாய் ஸ்வயம் ஜ்யோதியாய் தனக்குத்தானே காரணமாய் லோகவிலக்ஷணமாய் அவயவசூந்யமாய் பூர்ணமாய் புரிசயனாய் தேஹத்திற்குள்ளும் வெளியும் கலந்திருப்பவனாய் பிறப்பு முதலிய பாவவிகாரங்களில்லாதவனாய், நீர்க்குமிழி முதலியவற்றிற்கு காற்றுப்போலவும், ஆகாய பேதத்திற்கு குட முதலியவைபோலவும் தனக்கு ஜந்ம காரணமில்லாதவனாய், ஜராமரணங்களில்லாதவனாய் க்ஷயமில்லாதவனாய் த்ருவனாய் அபயஸ்வரூபியாய் தேஹமுதலிய உபாதி பேதத்தால் கண்டவர்களுக்கு அவித்யையினால், ஆகாயம் அழுக்கு முதலிய வற்றோடுகூடித் தோற்றுவதுபோல, அனேக தேஹங்களில் ப்ராணன் மனஸ்ஸு இந்திரியம் விஷயம் இவைகளோடு கூடினவனைப்போல் தோற்றினாலும், பரமார்த்தங் கண்டவர்களுக்கு, க்ரியாசக்தி பேதத்தோடு கூடிச் சலிக்கிற ப்ராணவாயு ஸம்பந்தமில்லாதவனாய், ஜ்ஞாநசக்தி பேதத்தோடுகூடி ஸங்கல்பரூபமாயிருக்கும்மனஸ்ஸில்லாதவனாய், இப்படியே அபானம் முதலிய வாயு ஸம்பதமில்லாதவனாய் கர்மேந்த்ரியம் அதின் விஷயங்கள் புத்தி மநஸ்ஸு, ஜ்ஞாநேந்திரியம் அதின் விஷயங்கள் இவைகளில்லாதவனாய், இப்படியே வேறு சுருதியிலும் சொல்லப்பட்டவனாய், இப்படி உபாதி ஸம்பந்தமில்லாதவனாகையாலே சுத்தனாயிருக்கிற பரமபுருஷன், தன் விகாரங்களுக்குத் தான் காரணமாகையாலே அவைகளுக்குப் பரமாயிருக்கிற அக்ஷரத்தைக் காட்டிலும் பரனாயிருக்கிறான். இவனிடத்திலேயே, ஆகாசமென்கிற வ்யவஹார காரணமான அக்ஷரம் ஒட்டிக்கிடக்கிறது. புருஷன் ப்ரத்யக்ஷத்தில் ப்ராணன் முதலிய வற்றோடு கூடியிருக்க ப்ராணன் முதலியவையில்லாதவனென்று சொல்லுவதெங்ஙன மெனில் ப்ராணாதிகளுண்டாவதற்கு முன்னமே புருஷனிருக்கிறானாகையால் அப்போது ப்ராணாதி ஸம்பந்தமில்லையன்றோ; ஒருவனுக்கு, பிள்ளை பிறப்பதற்கு முன் அவனைப் பிள்ளையில்லாதவனென்று சொல்லுகிறார்களன்றோ.

ரா-பா.—சுத்தனாகிய பரமபுருஷன் ப்ரக்ருதியில் காட்டில் பரனான ஜீவனைக் காட்டில் பரனென்று பொருள். சங்கரபாஷ்யத்தில் செய்த வ்யாக்யாநம் யுக்தமன்று,

த்ருஷ்டாந்தத்திற்குச் சேராமையாலென்று விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. மற்றவை பத உரையில் சொல்லியபடியே கொள்ளப்பட்டு எல்லாவற்றுக்கும் சுருதி ப்ரமாணம் காட்டப்பட்டது.

௩. ஏதஸ்மாஜ்ஜாயதே ப்ராணோ மந: ஸர்வேந்த்ரியாணி ச।
கம் வாயுர்ஜ்யோதிராப: ப்ருதிவீ விஶ்வஸ்ய தாரிணீ॥

3. ఏతస్మాజ్జాయతే ప్రాణో మనస్సర్వేంద్రియాణిచ ।
ఖంవాయుర్జ్యోతిరాపః పృథివీవిశ్వస్యధారిణీ॥

(ப·ம்.) ஏதஸ்மாத் - இந்தபுருஷனிடத்திலிருந்து, ப்ராண: - ப்ராணனும், மந: - மநஸ்ஸும், ஸர்வேந்த்ரியாணி ச - எல்லா இந்திரியங்களும். கம் - ஆகாயமும், வாயு: - காற்றும், ஜ்யோதி: - தேஜஸ்ஸும், ஆப: - ஜலமும், விஶ்வஸ்ய - ஸமஸ்தத்தையும், தாரிணீ - தரிக்கிற, ப்ருதிவீ - பூமியும், ஜாயதே - உண்டாகிறது.

ஸம்-ஹா.—இவைகள் முன்னில்லை யென்பது விளங்க இந்த ப்ராணாதிகளுக்கு ஸ்ருஷ்டி சொல்லப்படுகிறது. அவித்யா விஷயங்களாகையாலே ப்ராணாதிகள் பொய்யாகும். ஸ்வப்நத்தில கண்ட பிள்ளையைக்கொண்டு ஒருவனைப் பிள்ளையுடையவனென்று சொல்வதுபோல இந்த பொய்யான ப்ராணனைக்கொண்டு புருஷனை ப்ராணமுடையவனென்பது சேராது. இப்படியே மற்றுள்ள வற்றிலும் காண்க. பிறப்புக்கு முன்னின்றியே பொய்யாவதுபோல ப்ரளயத்திற்கும் பின்னின்றியும் பொய்யாகின்றன. அவைகளாவன ப்ராணங்களும் பூதங்களு மிந்திரியங்களும்.

பதாந்வயார்த்தபேதங்கள்.

இராமாநுஜபாஷ்யத்தில் பதஉரைக்குமேல்பட விசேஷமில்லை.

௪. அக்நிர்மூர்தா சக்ஷுஷீ சந்த்ரஸூர்யௌ திஶ: ஶ்ரோத்ரே வாக்விவ்ருதாஶ்ச வேதா: । வாயு: ப்ராணோ ஹ்ருதயம் விஶ்வமஸ்ய பத்ப்யாம் ப்ருதிவீ ஹ்யேஷ ஸர்வபூதாந்தராத்மா॥

౪. అగ్నిర్మూర్ధా చక్షుషీ చంద్రసూర్యౌ దిశశ్శ్రోత్రే వాగ్వివృతాశ్చ వేదాః ।
వాయుః ప్రాణో హృదయం విశ్వమస్య పద్భ్యాం పృథివీ హ్యేష సర్వభూతాంతరాత్మా॥

(ப-ம்.) அஸ்ய - இந்தபுருஷனுக்கு, மூர்தா - சிரஸ்ஸானது, அக்நி: - ஸ்வர்க்கலோகம், சக்ஷுஷீ - கண்கள், சந்த்ரஸூர்யௌ - சந்திரசூரியர்கள், ஶ்ரோத்ரே - காதுகள், திஶ: - திசைகள், வேதா: - வேதங்கள், அஸ்ய வாக்விவ்ருதா: - இவனுடைய வாக்கினால் வெளியாக்கப்பட்டவை. அஸ்ய - இவனுடைய, ப்ராண: - ப்ராணன், வாயு: - காற்று, விஶ்வம் - ஸமஸ்தமும், அஸ்ய - இவனுடைய, ஹ்ருதயம் - ஹ்ருதயம், பத்ப்யாம் - கால்கள், ப்ருதிவீ - பூமியாம், ஏஷ: - இவன், ஸர்வபூதாந்தராத்மா - எல்லாபூதங்களுக்கு மந்தர்யாமியாயிருக்கிறான்.

ஸ௦-ஹா.—முன்சொன்ன அக்ஷரபுருஷனையே ஸவிசேஷமாக விஸ்தரித்துச்சொல்லுகிறது. ஸூத்திரபாஷ்யங்களைப்போல, இப்படி கூறுவதினால் ஸூகமாயறிப்பமென்றே.

பதாந்வயார்த்தபேதங்கள்.

இராமாநுஜபாஷ்யத்தில் விசேஷமில்லை. பதஉரையின் கருத்தேயுளது.

ரு. தஸ்மாதக்நிஸ் ஸமிதோ யஸ்ய ஸூர்யஸ் ஸோமாத்பர்ஜந்ய ஓஷதய: ப்ருதிவ்யாம்। புமாந்ரேத: ஸிஞ்சதி யோஷிதாயாம் பஹ்வீ: ப்ரஜா: புருஷாத்ஸம்ப்ரஸூதா:॥

౫. తస్మాదగ్నిస్సమిధో యస్య సూర్యస్సోమాత్పర్జన్య ఓషధయః పృథివ్యామ్।
పుమాన్రేతస్సిఞ్చతి యోషితాయాం బహ్వీః ప్రజాః పురుషాత్సమ్ప్రసూతాః॥

(ப-ம்.) தஸ்மாத் - அந்த அக்ஷரபுருஷனிடத்திலிருந்து, ஸமித: - ஸ்வர்க்கலோகமுண்டாகிறது. யஸ்ய - யந்த ஸ்வர்கலோகமாகிற அக்நிக்கு, ஸூர்ய: - ஸூர்யன், ஸமித: - ஸமித்துக்களோ; ஸோமாத் - அந்தஸ்வர்க்கலோகத்திலுண்டாகிய சந்திரனிடத்திலிருந்து, பர்ஜந்ய: - மேகமுண்டாகிறது, ப்ருதிவ்யாம் - பூமியில், ஓஷதய: - அந்த பர்ஜந்யத்திலிருந்து ஓஷதிகளுண்டாகின்றன, புமாந் - புருஷனானவன், யோஷிதாயாம் - ஸ்த்ரீயினிடத்தில், ரேத: - அந்த ஓஷதிகளாலுண்டாகிய ரேதஸ்ஸை, ஸிஞ்சதி - விடுகிறான், புருஷாத்-புருஷனிடத்தில், பஹ்வீ: - அனேகமான, ப்ரஜா: - ப்ரஜைகள், ஸம்ப்ரஸூதா: - அந்த ரேதஸ்ஸம்பந்தத்தாலுண்டாகின்றன.

ஸ௦-ஹா. ரா-ஹா. பஞ்சாக்நிவித்யையில் சொன்னப்ரகாரம் ஸமஸ்த ஜகத்தும் அந்த புருஷனிடத்திலிருந்து பிறக்கிறது.

சு. தஸ்மாத்ருச: ஸாம யஜூம்ஷி தீக்ஷா யஜ்ஞாஶ்ச ஸர்வே க்ரதவோ தக்ஷிணாஶ்ச। ஸம்வத்ஸரஶ்ச யஜமாநஶ்ச லோகா: ஸோமோ யத்ர பவதே யத்ர ஸூர்ய:॥

౬. తస్మాదృచస్సామయజూంషి దీక్షా యజ్ఞాశ్చ సర్వే క్రతవో దక్షిణాశ్చ।
సంవత్సరశ్చ యజమానశ్చ లోకాస్సోమో యత్ర పవతే యత్ర సూర్యః॥

(ப-ம்.) தஸ்மாத் - அந்த அக்ஷரபுருஷனிடத்திலிருந்து, ருச: - ருக்குக்களும், ஸாம - ஸாமங்களும், யஜூம்ஷி - யஜுஸ்ஸுக்களும், தீக்ஷா: - தீக்ஷைகளும், ஸர்வே யஜ்ஞா: - எல்லாயஜ்ஞங்களும், க்ரதவ:-யாகங்களும், தக்ஷிணா: ச - தக்ஷிணைகளும், ஸம்வத்ஸர: ச - ஸம்வத்ஸரரூப காலமும், யஜமாந: ச - கர்த்தாவும், யத்ர - எந்தலோகங்களில், ஸோம: - சந்திரன், பவதே - பரிசுத்தம் பண்ணுகிறானோ; யத்ர - எந்தலோகங்களில், ஸூர்ய: - ஸூரியன், பவதே - பரிசுத்தம் செய்கிறானோ; லோகா: - அந்த லோகங்களு முண்டாகின்றன.

எ. தஸ்மாச்ச தேவா பஹுதா ஸம்ப்ரஸூதா: ஸாத்யா மநுஷ்யா: பஶவோ வயாம்ஸி। ப்ராணாபாநௌ வ்ரீஹியவௌ தபஶ்ச ஶ்ரத்தா ஸத்யம் ப்ரஹ்மசர்யம் விதிஶ்ச॥

౭. తస్మాచ్చ దేవా బహుధా సంప్రసూతాః సాధ్యా మనుష్యాః పశవో వయాంసి।
ప్రాణాపానౌ వ్రీహియవౌ తపశ్చ శ్రద్ధా సత్యం బ్రహ్మచర్యం విధిశ్చ॥

(ப-ம்.) தஸ்மாத் - அந்த பரமபுருஷனிடத்திலிருந்து, பஹுதா - அனேகப்ரகாரமாக, தேவா: - தேவர்களும், ஸாத்யா: - ஸாத்தியர்களும், மநுஷ்யா: - மநுஷ்யர்களும், பசவ: - பசுக்களும், வயாம்ஸி - பக்ஷிகளும், ப்ராணாபாநௌ - ப்ராணன் அபானன்முதலியவாயுக்களும், வ்ரீஹியவௌ - தான்யவிசேஷங்களும், தப:ச - தபஸ்ஸும், ச்ரத்தா - ஆஸ்திக்யபுத்தியும், ஸத்யம் - பொய்சொல்லாமையும், ப்ரஹ்மசர்யம் - மைதுனம்செய்யாமையும், விதி:ச - விதியும், ஸம்ப்ரஸூதா: - உண்டாயின.

௮. ஸப்த ப்ராணா: ப்ரபவந்தி தஸ்மாத் ஸப்தார்சிஷ: ஸமித: ஸப்த ஹோமா: | ஸப்த இமே லோகா யேஷு சரந்தி ப்ராணா குஹாசயா நிஹிதா: ஸப்த ஸப்த ||

౮. సప్తప్రాణాః ప్రభవన్తి తస్మాత్సప్తార్చిషః సమిధస్సప్త హోమాః।
సప్త ఇమే లోకా యేషు చరన్తి ప్రాణా గుహాశయా నిహితాః సప్త సప్త॥

(ப-ம்.) தஸ்மாத் - அந்த அக்ஷரபுருஷனிடத்திலிருந்து, ஸப்த - ஏழுவிதமான, ப்ராணா: - இந்திரியங்களும், ஸப்தார்சிஷ: - ஏழுக்நிகளும், ஸமித: - ஸமித்துக்களும், ஸப்த ஹோமா: - ஏழுஹோமங்களும், இமே ஸப்த லோகா: - இந்தஏழுலோகங்களும், ப்ரபவந்தி - உண்டாகின்றன. யேஷு - எந்தலோகங்களில், குஹாசயா: - குஹைகளிலிருக்கிற, ப்ராணா: - ப்ராணங்கள், ஸப்தஸப்த - ஏழேழாய், நிஹிதா: - வைக்கப்பட்டவைகளாய், சரந்தி - ஸஞ்சரிக்கின்றனவோ;

பதாந்வயார்த்தபேதங்கள்.

ஏழுப்ராணங்களாவன - ஏழிந்திரியங்கள், ஏழிடங்களி லிருக்கின்றமையால் இந்திரியங்களை ஏழென்கிறது. கண்களிரண்டு காதுகளிரண்டு மூக்கிரண்டு வாய் இந்தஏழுஸ்தாநங்களிலும் இந்திரியம் ஸஞ்சரிக்கின்றது. இவைகளுக்கு சீர்ஷண்யங்களென்று பெயரிடப்பட்டிருக்கிறது. இந்திரியபரமாகவே எல்லாபதங்களையு மந்வயித்து வ்யாக்யாநம் செய்யப்பட்டது சங்கரபாஷ்யத்தில். இராமாநுஜபாஷ்யத்தில் நடுவிலிரண்டுவாக்யம் அக்நிபரமாக வ்யாக்யானம் செய்யப்பட்டது. மேலும் 'ஸப்தஹோமா:' என்கிறவிடத்தில் 'ஸப்தஜிஹ்வா:' என்று பாடம் காட்டப்பட்டது, மற்றவைகளில் விசேஷமில்லை.

௯. அதஸ்ஸமுத்ரா கிரயச்ச ஸர்வேऽஸ்மாத் ஸ்யந்தந்தே ஸிந்தவ: ஸர்வரூபா: | அதச்ச ஸர்வா ஓஷதயோ ரஸச்ச யேநைஷ பூதைஸ்திஷ்டதே ஹ்யந்தராத்மா ||

౯. అతస్సముద్రా గిరయశ్చ సర్వేఽస్మాత్స్యందంతే సింధవస్సర్వరూపాః।
అతశ్చ సర్వా ఓషధయో రసశ్చ యేనైష భూతైస్తిష్ఠతే హ్యంతరాత్మా॥

(ப்-ம்.) அத: - இந்தபுருஷனிடத்திலிருந்து, ஸர்வே - ஸமஸ்தவிதங்களான, ஸமுத்ரா: - கடல்களும், கிரயஶ்ச - மலைகளு முண்டாகின்றன. ஸர்வரூபா: - ஸமஸ்தரூபங்களான, ஸிந்தவ: - நதிகளும், அஸ்மாத் - இந்த புருஷனிடத்திலிருந்து, ஸ்யந்தந்தே - ப்ரவஹிக்கின்றன. ஸர்வா: - ஓஷதய: - எல்லாஓஷதிகளும், ரஸாஶ்ச - ரஸங்களும், அதஶ்ச - இந்த அக்ஷரபுருஷனிடத்திலிருந் துண்டாகின்றன, யேந - எந்த காரணத்தால், ஏஷ: - இந்த அக்ஷரபுருஷன், பூதை: - பூதங்களினுல் சூழப்பட்டவனாய், அந்தராத்மா - அந்தர்யாமியாய்க்கொண்டு, திஷ்டதே ஹி - இருக்கிறானோ.

ஸ-ஹா. யாதொருரஸத்தினுலே ஸ்தூலபூதங்களினுல் அந்தராத்மா, என்கிற லிங்கசரீரம் சூழப்பட்டிருக்கிறதோ அந்தரஸமும் மற்றுமெல்லாம் அந்தபுருஷனிடத்திலுண்டானவையேயாம்.

பதாந்வயார்த்தபேதங்கள்.

யேந, என்பதற்கும், அந்தராத்மா என்பதற்கும் வேறுபொருள் கொண்டபடியால் சங்கரபாஷ்யத்தில் கருத்து பேதப்பட்டது. இராமாநுஜபாஷ்யத்தில் பதஉரையின்படியே கருத்து கொள்ளப்பட்டது.

௧௦. புருஷ ஏவேதம் விஶ்வம் கர்ம தபோ ப்ரஹ்ம பராம்ருதம் | ஏதத்யோ வேத நிஹிதம் குஹாயாம் ஸோऽவித்யாக்ரந்திம் விகிரதீஹ ஸோம்ய ||

౧౦. పురుష ఏవేదం విశ్వం కర్మ తపో బ్రహ్మ పరామృతమ్ ।
ఏతద్యో వేద నిహితం గుహాయాం సోఽవిద్యాగ్రన్థిం వికిరతీహ సోమ్య ॥

(ப்-ம்.) இதம் விஶ்வம் - இந்தஸமஸ்தமமும், புருஷ: ஏவ - அக்ஷரபுருஷனே; கர்ம - இவனுடைய ஸ்ருஷ்டிவ்யாபாரமானது, தப: - ஸங்கல்பரூபமேயாகின்றது. ப்ரஹ்ம பராம்ருதம் - இந்தபுருஷன், ப்ரம்மமென்கிற முக்தபுருஷர்களுக்கு ச்லாக்யமான வம்ருதம்போல் போக்யபூதனுகிறுன், ய: - யவன், ஏதத் - இப்படிப்பட்ட அக்ஷரபுருஷனுகிய பரப்ரம்மத்தை, குஹாயாம் - ஹ்ருதயகுஹையில், நிஹிதம் - வாஸம்செய்வதாக, வேத - அறிகிறுனே; ஸ: - அவன், ஸோம்ய - ஸோம்யனே, அவித்யாக்ரந்திம்-முடிபோலிருக்கிற அவித்யையை, விகிரதி - போக்குகிறுன்.

ஸ-ஹா. இவ்வாறு புருஷனிடத்திலிருந்து எல்லாம் தோற்றினதாகையால் வ்யவாஹாரத்துக்குரியதேயன்றி ஸத்யமல்ல பொய்யேயாம் புருஷனே ஸ்த்யஸ்வரூபமுடையவன். ஆகையால் இவையெல்லாம் புருஷனே. இந்தபுருஷனுக்கு வேருய் உலகமென்ருென்றில்லை. இப்படி யறியவே எல்லாமறியப்பட்டதாகும். அக்நிஹோத்ர முதலிய கர்மமும்ஜ்ஞாநமும் வேறுபலத்தைத்தரும். எவன் ப்ரம்மமேநானென்றறிகிருனே அவன் அவித்யைநீங்கி மோக்ஷம்பெறுவான்.

ரா-ஹா.. இப்படி இவ்வுலகெல்லாம் புருஷனிடத்தி லுண்டாகிய தாகையாலே புருஷனே எனப்படுகிறது. காரணத்தையறிந்தபோது காரியமெல்லா மறியப்படுமாகை

யால் இந்தபுருஷனை யறியவே இந்தபுருஷனிடத்தி லுண்டான உலகமெல்லா மறியப் படுமென்று கருத்து.

பதாந்வயார்த்தபேதங்கள்.

இராமானுஜபாஷ்யத்தில் புருஷஏவேதம் விச்வம்,என்கிறவரையில் கருத்தெழுதப்பட்டது மற்றது பதஉரையில் கூறியபடி காண்க.

இதி த்விதீயமுண்டகே ப்ரதம꞉ கண்ட꞉.

அத த்விதீயமுண்டகே த்விதீய꞉ கண்ட꞉.

க. ஆவி꞉ ஸந்நிஹிதம் குஹாசரம் நாம மஹத்பதமத்ரைதத்ஸமர்பிதம்। ஏஜத்ப்ராணந்நிமிஷச்ச யதேதஜ்ஜாநத ஸதஸத்வரேண்யம் பரம்விஜ்ஞாநாத்யத் வரிஷ்டம்ப்ரஜாநாம்॥

౧. ఆవిస్సన్నిహితంగుహాచరంనామమహత్పదమత్రైతత్సమర్పితమ్।

ఏజత్ప్రాణన్నిమిషచ్చయదేతజ్జానథసదసద్వరేణ్యంపరంవిజ్ఞానాద్యద్వరిష్ఠంప్రజానామ్॥

(ப-ம்.) ஆவி꞉ - யோகிகளுக்கு ப்ரகாசமாய்விளங்குவதும், குஹாசரம் - ஹ்ருதயகுஹையி லிருக்கின்றதும், ஸந்நிஹிதம் - கிட்டிநிற்பதும், நாம - அறியப்படாதென்று ப்ரஸித்தமானதும், மஹத்பதம் - சிறந்தப்ராப்யமும் பலமுமானது அந்த அக்ஷரபரப்ரம்மமே. அத்ர - இந்த அக்ஷரபரப்ரம்மத்தினிடத்தில், ஏஜத் - உணர்த்தியுடையதும், நிமிஷத் - உறங்குவதுமான, ப்ராணத் - ப்ராணிஸமூஹமானது; யத்யத் - யாதொன்றுண்டு, ஏதத் - இதானது, ஸமர்பிதம் - வைக்கப்பட்டிருக்கிறது, ப்ரஜாநாம் - ஜநங்களுக்கு, வரிஷ்டம் - உபாயமாகையாலும் பலமாகையாலும் மிகவும் விரும்பத்தக்கதாயும், விஜ்ஞாநாத் - ஜீவனைக்காட்டிலும், பரம் - வேறுபட்டதாயும், ஸதஸத்வரேண்யம் - ஸ்தூலஸூக்ஷமங்களுக்கு ஆதாரமானதும், யத் - யாதொன்றோ; ஏதத் - இந்த அக்ஷரபரப்ரம்மத்தை, ஜாநத - அறிந்துகொள்ளுங்கோள்.

ஸம-ஹா. அரூபமாகிய அக்ஷரபரப்ரம்மம் எவ்வாறறியப்படுமென்கிற ஸந்தேஹம் தீரச்சொல்லுகிறது. ஸமஸ்தப்ராணிகளுக்கும் ச்ரவணம் மநநம் முதலிய உபாதிதருமங்களால் ஹ்ருதயத்தில் விளங்கும். ஆகையால் குஹையிலிருப்பதென்று சொல்லப்படுகிறது. எல்லாவற்றிலும் பெரிதானது. எல்லாவற்றாலு மடையப்படுகிறது. பசு பக்ஷி மநுஷ்யர்முதலியவை எல்லாம் இங்குதங்கி நிலைபெறுகிறது. ஸ்தூலசூக்ஷமஸ்வரூப மாகியது.நித்யாம்ருதஸ்வரூபமாகையா லனைவராலு மாதரிக்கத்தக்கது. லௌகிகஜ்ஞாநத்தாலறியப்படாதது. எல்லாவற்றிலும் சிறந்தது. இப்படிப்பட்ட ப்ரம்மத்தை சிஷ்யர்களே தெரிந்துகொள்ளுங்கோள்.

பதாந்வயார்த்தபேதங்கள்.

பதஉரையின்படியே இராமாநுஜபாஷ்யத்தின் கருத்து.

௨. 𑌯𑌦𑌰𑍍𑌚𑌿𑌮𑌦𑍍𑌯𑌦𑌣𑍁𑌭𑍍𑌯𑍋𑌽𑌣𑍁𑌚 𑌯𑌸𑍍𑌮𑌿𑌁𑌲𑍍𑌲𑍋𑌕𑌾 𑌨𑌿𑌹𑌿𑌤𑌾 𑌲𑍋𑌕𑌿𑌨𑌶𑍍𑌚 | 𑌤𑌦𑍇𑌤𑌦𑌕𑍍𑌷𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌸𑌪𑍍𑌰𑌾𑌣𑌸𑍍𑌤𑌦𑍁𑌵𑌾𑌙𑍍𑌮𑌨𑌃 | 𑌤𑌦𑍇𑌤𑌤𑍍𑌸𑌤𑍍𑌯𑌂 𑌤𑌦𑌮𑍃𑌤𑌂 𑌤𑌦𑍍𑌵𑍇𑌦𑍍𑌧𑌵𑍍𑌯𑌂 𑌸𑍋𑌮𑍍𑌯 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿||

౨. యదర్చిమద్యదణుభ్యోఽణుచ యస్మిఁల్లోకానిహితాలోకినశ్చ ।
తదేతదక్షరంబ్రహ్మసప్రాణస్తదువాఙ్మనః । తదేతత్సత్యంతదమృతంతద్వేద్ధవ్యంసోమ్యవిద్ధి॥

(ப-ம்.) 𑌸𑍋𑌮𑍍𑌯 - தெளிவுள்ளசிஷ்யனே, 𑌯𑌤𑍍 - எந்த அக்ஷரபரப்ரம்மமானது, 𑌅𑌰𑍍𑌚𑌿𑌮𑌤𑍍 - காந்தியுடையதோ, 𑌅𑌣𑍁𑌭𑍍𑌯𑌃 - அணுவஸ்துக்களிலும், 𑌅𑌣𑍁 - சிறியதோ; 𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 - யந்தப்ரம்மத்தில், 𑌲𑍋𑌕𑌾𑌃 - உலகங்களும், 𑌲𑍋𑌕𑌿𑌨𑌶𑍍𑌚 - உலகத்தோரும், 𑌨𑌿𑌹𑌿𑌤𑌾𑌃 - வைக்கப்பட்டிருக்கிறார்களோ, 𑌤𑌤𑍍 𑌏𑌤𑌤𑍍 𑌅𑌕𑍍𑌷𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 - அப்படிப்பட்ட இந்த அக்ஷரபரப்ரம்மமானது, 𑌸𑌃 𑌪𑍍𑌰𑌾𑌣𑌃 - அப்படிப்பட்ட ப்ராணன், 𑌤𑌤𑍍𑌉 𑌵𑌾𑌙𑍍𑌮𑌨𑌃 - அப்படிப்பட்ட வாகிந்திரியமும் மநஸ்ஸும், 𑌤𑌤𑍍 𑌏𑌤𑌤𑍍 𑌸𑌤𑍍𑌯𑌂 - அப்படிப்பட்ட விதுஸத்யம், 𑌤𑌤𑍍 𑌵𑍇𑌦𑍍𑌧𑌵𑍍𑌯𑌂 - அது ஆலோசித்தறியத்தக்கது. ஆகையால், அதை நீ, 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 - நன்கறிந்துகொள்.

𑌶𑌂-𑌭𑌾, சூரியசந்திராதிகளும் எந்த காந்தியால் விளங்குகிறார்களோ அப்படிப்பட்ட காந்தியுடையதுளதுவோ, எது எல்லாவற்றிலும் சிறியதோ எது எல்லாவற்றிலும் பெரிதோ; எந்தப்ரம்மத்தில் பூமிமுதலியலோகங்களும் அவ்வோலோகங்களிலுள்ள ஜநங்களும் இருக்கின்றனவோ பிராணன் மநஸ்ஸு வாக்கு முதலிய எல்லாவற்றுக்கு மதிஷ்டாநமாய் யாதொன்று விளங்காநின்றதோ; அதுவே ஸத்யமான அக்ஷரபரப்ரம்மம். ஆகையாலதை நன்குமநஸ்ஸினால் த்யாநித்துத் தெரிந்துகொள்ளவேணும்.

𑌰𑌾-𑌭𑌾. அப்ராக்ருதமாய் ஜ்யோதிர்மயமான திருமேனி யுடையதாகையாலே காந்தியுடையதென்கிறது. எல்லாவற்றிலு முள்புகுகிற சக்தியுடையதானதால் அணுவிலுமணுவென்று சொல்லப்பட்டது.

௩. 𑌧𑌨𑍁𑌰𑍍𑌗𑍃𑌹𑍀𑌤𑍍𑌵𑍌𑌪𑌨𑌿𑌷𑌦𑌂 𑌮𑌹𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌶𑌰𑌂 𑌹𑍍𑌯𑍁𑌪𑌾𑌸𑌾𑌨𑌿𑌶𑌿𑌤𑌂 𑌸𑌂𑌧𑌯𑍀𑌤 | 𑌆𑌯𑌮𑍍𑌯 𑌤𑌦𑍍𑌭𑌾𑌵𑌗𑌤𑍇𑌨 𑌚𑍇𑌤𑌸𑌾 𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌂 𑌤𑌦𑍇𑌵𑌾𑌕𑍍𑌷𑌰𑌂 𑌸𑍋𑌮𑍍𑌯 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿||

3. ధనుర్గృహీత్వౌపనిషదంమహాస్త్రంశరంహ్యుపాసానిశితంసంధయీత ।
ఆయమ్యతద్భావగతేనచేతసాలక్ష్యంతదేవాక్షరంసోమ్యవిద్ధి॥

(ப-ம்) 𑌸𑍋𑌮𑍍𑌯 - நற்குணமுடையவனே, 𑌔𑌪𑌨𑌿𑌷𑌦𑌂 - உபநிஷத்தில்சொல்லப்பட்ட, 𑌧𑌨𑍁𑌃 - வில்லை, 𑌗𑍃𑌹𑍀𑌤𑍍𑌵𑌾 - எடுத்துக்கொண்டு 𑌉𑌪𑌾𑌸𑌾𑌨𑌿𑌶𑌿𑌤𑌂 - உபாஸநத்தினால் கூர்மையடைந்திருக்கிற, 𑌮𑌹𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 - மஹாஸ்திரத்தோடுகூடிய, 𑌶𑌰𑌂 - பாணத்தை, 𑌸𑌂𑌧𑌯𑍀𑌤 - ஸந்தாநம்பண்ணக்கடவன். 𑌤𑌦𑍍𑌭𑌾𑌵𑌗𑌤𑍇𑌨 - அந்தப்ரம்மபாவனையோடுகூடிய, 𑌚𑍇𑌤𑌸𑌾 - மநஸ்ஸினால், 𑌆𑌯𑌮𑍍𑌯 - ஆகர்ஷித்து, 𑌤𑌦𑌕𑍍𑌷𑌰𑌂 𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌮𑍇𑌵 - அந்த அக்ஷரப்ரம்மமாகிற லக்ஷ்யத்தையே, 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 - அறிந்துகொள்.

ஸ0-ஹா. ரா-ஹா. ப்ரணவமேதநுஸ்ஸென்பது முதலாய விசேஷங்கள் மேல் மந்திரத்தில் விளங்கும். இதரவிஷயங்களில் நெஞ்சை செல்லவொட்டாமல் தடுத்து பரப்ரம்மத்தினிடத்தில் நிலைபெறச்செய்து ப்ரம்மத்தை யறிந்துகொள்ளென்றுகருத்து.

௪. 𑌪𑍍𑌰𑌣𑌵𑍋 𑌧𑌨𑍁𑌃 𑌶𑌰𑍋 𑌹𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌤𑌲𑍍𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 |
𑌅𑌪𑍍𑌰𑌮𑌤𑍍𑌤𑍇𑌨 𑌵𑍇𑌦𑍍𑌧𑌵𑍍𑌯𑌂 𑌶𑌰𑌵𑌤𑍍𑌤𑌨𑍍𑌮𑌯𑍋 𑌭𑌵𑍇𑌤𑍍 ||

౪. ప్రణవోధనుశ్శరోహ్యాత్మాబ్రహ్మతల్లక్ష్యముచ్యతే।
అప్రమత్తేనవేద్ధవ్యంశరవత్తన్మయోభవేత్॥

(ப-ம்.) 𑌪𑍍𑌰𑌣𑌵𑌃 - ப்ரணவமானது, 𑌧𑌨𑍁𑌃 - தநுஸ்ஸு, 𑌶𑌰𑌃 𑌹𑌿 - பாணமோவென்றால், 𑌆𑌤𑍍𑌮𑌾 - ஜீவாத்மா, 𑌤𑌤𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 - அந்தப்ரம்மமானது 𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌂 - லக்ஷ்யமாக, 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 - சொல்லப்படுகிறது. 𑌅𑌪𑍍𑌰𑌮𑌤𑍍𑌤𑍇𑌨 - அநவதாநமில்லாதவனாலே, 𑌵𑍇𑌦𑍍𑌧𑌵𑍍𑌯𑌂 - வேதிக்கத்தக்கது, 𑌶𑌰𑌵𑌤𑍍 - பாணம்போல, 𑌤𑌨𑍍𑌮𑌯𑌃 - அந்தலக்ஷ்யஸ்வரூபமாக, 𑌭𑌵𑍇𑌤𑍍 - ஆகக்கடவன்.

ஸ0-ஹா. ரா-ஹா. ஆத்மாவை ப்ரணவத்தினால் ப்ரம்மத்தில் சேர்க்கக்கடவன். ப்ரணவார்த்தத்தை யறியக்கடவன்.

பதாந்வயார்த்தபேதங்கள்.

ஜீவப்ரம்மங்களுக்கு பேதமில்லையென்பது சங்கரமதத்தில் ப்ரணவார்த்தம். ப்ரம்மத்திற்கு ஜீவன் சேஷபூதனென்பது ராமாநுஜமதத்தில் ப்ரணவார்த்தம்.

௫. 𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌦𑍍𑌯𑍌𑌃 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀 𑌚𑌾𑌨𑍍𑌤𑌰𑌿𑌕𑍍𑌷𑌮𑍋𑌤𑌂 𑌮𑌨𑌃 𑌸𑌹 𑌪𑍍𑌰𑌾𑌣𑍈𑌶𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑍈𑌃 | 𑌤𑌮𑍇𑌵𑍈𑌕𑌂 𑌜𑌾𑌨𑌥 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑌨𑍍𑌯𑌾 𑌵𑌾𑌚𑍋 𑌵𑌿𑌮𑍁𑌞𑍍𑌚𑌥𑌾𑌮𑍃𑌤𑌸𑍍𑌯𑍈𑌷 𑌸𑍇𑌤𑍁𑌃 ||

౫. యస్మిన్ద్యౌఃపృథివీచాంతరిక్షమోతంమనస్సహప్రాణైశ్చసర్వైః।
తమేవైకంజానథాత్మానమన్యావాచోవిముఞ్చథామృతస్యైషసేతుః॥

(ப-ம்.) 𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 - எந்த அக்ஷரபுருஷனிடத்தில், 𑌦𑍍𑌯𑍌𑌃 - ஸ்வர்க்கலோகமும், 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀 𑌚 - பூலோகமும், 𑌅𑌨𑍍𑌤𑌰𑌿𑌕𑍍𑌷𑌂 - அந்தரிக்ஷலோகமும், 𑌸𑌰𑍍𑌵𑍈𑌃 - ஸமஸ்தமான, 𑌪𑍍𑌰𑌾𑌣𑍈𑌃 𑌸𑌹 - ப்ராணங்களோடு, 𑌮𑌨𑌃 - மநஸ்ஸும், 𑌓𑌤𑌂 - கோர்க்கப்பட்டிருக்கிறதோ, 𑌤𑌂 𑌏𑌵 𑌏𑌕𑌂 𑌏𑌵 - அந்தபரமபுருஷனையே, 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 - அந்தராத்மாவாக, 𑌜𑌾𑌨𑌥 - அறியுங்கோள், 𑌅𑌨𑍍𑌯𑌾𑌃 - இதரங்களான, 𑌵𑌾𑌚𑌃 - வார்த்தைகளை, 𑌵𑌿𑌮𑍁𑌞𑍍𑌚𑌥 - விடுங்கோள், 𑌅𑌮𑍃𑌤𑌸𑍍𑌯 - மோக்ஷத்திற்கு, 𑌏𑌷𑌃 - இந்த பரமபுருஷன், 𑌸𑍇𑌤𑍁𑌃 - அணையாகிறான்.

ஸ0-ஹா. இந்த அக்ஷரபரப்ரம்ம ஸ்வரூபத்தை விசதமாக்குவதற்கு அடிக்கடி சொல்லுகிறது.

ரா-ஹா. மோக்ஷமானது ஸம்ஸாரஸாகரத்திற்கு அக்கரையாகையால் அதற்குக் காரணமாகிய பகவானை ஸேதுவென்கிறது. ஸேதுவானது இக்கரையோரை அக்கரை

சேர்ப்பதன்றே; ஆகையால் மோக்ஷப்ரதனான அவனையே உபாஸியுங்கோள் இதரவிஷயங்களை விடுங்கோள். அவனே ஸர்வாதாரபூதன்.

௬. 𑌅𑌰𑌾 𑌇𑌵 𑌰𑌥𑌨𑌾𑌭𑍌 𑌸𑌂𑌹𑌤𑌾 𑌯𑌤𑍍𑌰 𑌨𑌾𑌡𑍍𑌯𑌃 𑌸 𑌏𑌷𑍋𑌽𑌨𑍍𑌤𑌶𑍍𑌚𑌰𑌤𑍇 𑌬𑌹𑍁𑌧𑌾 𑌜𑌾𑌯𑌮𑌾𑌨𑌃। 𑌓𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌵𑌂 𑌧𑍍𑌯𑌾𑌯𑌥 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑌿 𑌵𑌃 𑌪𑌾𑌰𑌾𑌯 𑌤𑌮𑌸𑌃 𑌪𑌰𑌸𑍍𑌤𑌾𑌤𑍍॥

౬. అరాఇవరథనాభౌసంహతాయత్రనాడ్యస్సఏషో న్తశ్చరతేబహుధాజాయమానః।
ఓమిత్యేవంధ్యాయథాత్మానంస్వస్తివఃపారాయతమసఃపరస్తాత్॥

(ப-ம்.) 𑌯𑌤𑍍𑌰 - எந்தஹ்ருதயத்தில், 𑌰𑌥𑌨𑌾𑌭𑍌 - ரதநாபியில், 𑌅𑌰𑌾𑌃 𑌇𑌵 - அரங்கள்போல, 𑌨𑌾𑌡𑍍𑌯𑌃 - நாடிகள், 𑌸𑌂𑌹𑌤𑌾𑌃 - சேர்ந்திருக்கின்றனவோ; 𑌅𑌨𑍍𑌤𑌃 - அந்தஹ்ருதயத்தில், 𑌸𑌃 𑌏𑌷𑌃 - அந்த அக்ஷர புருஷன், 𑌬𑌹𑍁𑌧𑌾 - அனேகப்ரகாரமாக, 𑌜𑌾𑌯𑌮𑌾𑌨𑌃 - உண்டாகிறவனாய், 𑌚𑌰𑌤𑍇 - ஸஞ்சரிக்கிறான். 𑌤𑌮𑌸𑌃 - மூலப்ரக்ருதிக்கு, 𑌪𑌰𑌸𑍍𑌤𑌾𑌤𑍍 - அப்புறத்தானாகிய 𑌵𑌃 - உங்களுக்கு, 𑌪𑌾𑌰𑌾𑌯 - ப்ராப்யனாயிருக்கிற அவனை யடைவதற்கு, 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 - ஆத்மாவாகிய அவனை; 𑌓𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌵𑌂 - ப்ரணவார்த்தங்கொண்டு, 𑌧𑍍𑌯𑌾𑌯𑌥 - த்யாநம்பண்ணுங்கோள். 𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑌿 - அப்படித்யாநம் செய்கிற உங்களுக்கு மங்களமுண்டாகக்கடவது.

ஸ௦-ஸா. நாடீஸ்தாநமாகிய ஹ்ருதயத்தில் ஸாக்ஷிபூதனாய்க்கொண்டு ஸுகம் துக்கம் முதலிய வற்றோடுகூடி ஜ்ஞாதாவாய் அநேகப்ரகாரமாய் உண்டாகிறான். அந்த ஆத்மாவை ப்ரணவத்தைக்கொண்டு சொல்லியபடி த்யாநியுங்கோள். இப்படிதத்வஜ்ஞாநியான ஆசாரியன் சிஷ்யனுக்கு உபதேசிக்கவேண்டிய விஷயத்தை யுபதேசிக்க, சிஷ்யனும் விரக்தனாய் ப்ரம்மவித்யையில் விருப்பமுடையவனாய் மோக்ஷமார்க்கத்திலிழிய அப்படி இழிந்த சிஷ்யனுக்கு விக்நமின்றி ப்ரம்மப்ராப்தி யுண்டாம்படி அநுக்ரகம்செய்கிறார். அவித்யைக்கடந்து ப்ரம்மஸ்வரூபத்தைப் பெறுவதற்கு விக்நங்கள் சமிக்கவேணுமென்று ஆசாரியர் ஆசீர்வாதம் செய்கிறார்.

பதாந்வயார்த்தபேதங்கள்.

பதஉரையின்படி கருத்து இராமாநுஜபாஷ்யத்தில் கூறப்பட்டது.

௭. 𑌯𑌃 𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌃 𑌸𑌰𑍍𑌵𑌵𑌿𑌦𑍍𑌯𑌸𑍍𑌯𑍈𑌷 𑌮𑌹𑌿𑌮𑌾 𑌭𑍁𑌵𑌿 |
𑌦𑌿𑌵𑍍𑌯𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌪𑍁𑌰𑍇 𑌹𑍍𑌯𑍇𑌷 𑌵𑍍𑌯𑍋𑌮𑌨𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌾 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌃 ||

౭. యస్సర్వజ్ఞస్సర్వవిద్యస్యైషమహిమాభువి।
దివ్యేబ్రహ్మపురేహ్యేషవ్యోమన్యాత్మాప్రతిష్ఠితః॥

(ப-ம்.) 𑌯𑌃 - எந்த அக்ஷரபுருஷன், 𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌃 - எல்லாமறிந்தவனோ; 𑌸𑌰𑍍𑌵𑌵𑌿𑌤𑍍 - எல்லாமடைந்தவனோ; 𑌭𑍁𑌵𑌿 - இவ்வுலகத்தில், 𑌏𑌷 𑌮𑌹𑌿𑌮𑌾 - இந்தமாஹாத்ம்யமானது, 𑌯𑌸𑍍𑌯 - யவனுடையதோ, 𑌏𑌷𑌃 - இந்த ஆத்மாவான பரமபுருஷன், 𑌦𑌿𑌵𑍍𑌯𑍇 𑌵𑍍𑌯𑍋𑌮𑌨𑌿 - பரமாகாசத்தில், 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌪𑍁𑌰𑍇 - வைகுண்டநகரத்தில், 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌃 - 𑌹𑌿 - இருப்பவனன்றோ;

ஸ0-ஹா. அவித்யைக்குப் பரனாயிருக்கும் பரவித்யாவேத்யனான பரமபுருஷனிருக்குமிடங் கூறுகின்றது. இந்தபரமபுருஷன் ஸர்வஜ்ஞனென்றும் எல்லாமடைந்தவனென்றும் சொல்லப்பட்டது. இன்னமும் அவனுக்கு மஹிமைசொல்லுகிறது. ஸமஸ்தலோகங்களும் இவனுடைய ஆஜ்ஞையிலிருக்கின்றன. ஸூர்யசந்திரர்கள் இவனுக்கு பயந்து சுழலுகிறார்கள். இவனுடைய ஸங்கல்பத்தால் நதிகளும் ஸமுத்திரங்களும் தங்கள் நிலைமாறாமலிருக்கின்றன. ஸகலஸ்தாவரஜங்கமங்களு மவனிட்டவழக்காயிருக்கின்றன ருதுக்களு மயனங்களும் வருஷங்களும் அவன்கட்டளையைத் தாண்டுகிறதில்லை. அவனிட்ட கட்டளையா லவரவர் ஒவ்வொருவ்யாபாரத்தாலு மவ்வோவ்யாபாரங்களின் பலனைப்பெறுகிறார்கள். இப்படிப்பட்டமாஹாத்ம்யமுடைய பரமபுருஷன், விளங்கானின்ற ஹ்ருதயமத்யத்திலிருக்கிறவனைப்போல் காணப்படுகிறான்.

ரா-ஹா. மஹாமஹிமையுடைய பரமபுருஷன் பரமபதத்தில் வஸிக்கிறான். அவன் ஸர்வஜ்ஞன் அவாப்தஸமஸ்தகாமன்.

௮. 𑌮𑌨𑍋𑌮𑌯𑌃 𑌪𑍍𑌰𑌾𑌣𑌶𑌰𑍀𑌰𑌨𑍇𑌤𑌾 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑍋𑌽𑌨𑍍𑌨𑍇 𑌹𑍃𑌦𑌯𑌂 𑌸𑌂𑌨𑌿𑌧𑌾𑌯 । 𑌤𑌦𑍍𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨 𑌪𑌰𑌿𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌧𑍀𑌰𑌾 𑌆𑌨𑌨𑍍𑌦𑌰𑍂𑌪𑌮𑌮𑍃𑌤𑌂 𑌯𑌦𑍍𑌵𑌿𑌭𑌾𑌤𑌿 ॥

౮. మనోమయః ప్రాణశరీరనేతా ప్రతిష్ఠితోఽన్నే హృదయం సంనిధాయ ।
తద్విజ్ఞానేన పరిపశ్యన్తి ధీరా ఆనన్దరూపమమృతం యద్విభాతి॥

(ப-ம்.) 𑌮𑌨𑍋𑌮𑌯𑌃 - நெஞ்சினால் காணத்தக்கவனும், 𑌪𑍍𑌰𑌾𑌣𑌶𑌰𑍀𑌰𑌨𑍇𑌤𑌾 - ப்ராணனையும் சரீரத்தையும் அவைகளின் வ்யாபாரத்தில் நடத்துகிறவனுமான பரமாத்மா, 𑌅𑌨𑍍𑌨𑍇 - சரீரத்தில் 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌃 - இருக்கிறான். 𑌹𑍃𑌦𑌯𑌮𑍍 - நெஞ்சை, 𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌾𑌯 - அவரிடத்தில் சேர்த்து, 𑌯𑌤𑍍 - யந்தப்ரம்மஸ்வரூபமானது, 𑌆𑌨𑌨𑍍𑌦𑌰𑍂𑌪𑌮𑍍 - ஆநந்தரூபமாயும், 𑌅𑌮𑍃𑌤𑌮𑍍 - அம்ருதஸ்வரூபமாயும், 𑌵𑌿𑌭𑌾𑌤𑌿 - விளங்குகிறதோ, 𑌤𑌤𑍍 - அந்த ப்ரம்மஸ்வரூபத்தை, 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨 - உபாஸநத்தினால், 𑌧𑍀𑌰𑌾𑌃 - பண்டிதர்கள், 𑌪𑌰𑌿𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 - காண்கிறார்கள்.

ஸ0-ஹா.—மனஸ்ஸின் வ்ருத்திகளினா லறியத்தக்கவனாய் ப்ராண சரீரங்களுக்கு நேதாவா யிருக்கிறவன் உண்ணும் சோற்றின் பரிணாமமாகிய ஸ்தூல சரீரத்திலும் ஸூக்ஷ்மமாயிருக்கிற சரீரத்தில் வர்த்திக்கிறான். ஹ்ருதய புண்டரீகத்தில் புத்தியை செலுத்தி உபதேசஜ்ஞானத்தா லாத்மதத்வத்தை யறிந்து ஆநந்தாம்ருத ஸ்வரூபமான அந்த ப்ரம்மத்தை யுபாஸிக்கிறார்கள்.

ரா-ஹா.—பரிசுத்தமான நெஞ்சினால் பரமாத்மா காணத்தக்கவன். ஜீவனுக்கு ப்ராண சரீரங்களைக் கொடுப்பவன். ப்ராணனை சரீரமாக உடைய ப்ரபு. சரீரத்தில் எவனிருக்கிறானோ அவனிடத்தில் நெஞ்சை செலுத்தி ஆநந்தாம்ருத ஸ்வரூபமான ப்ரம்மத்தை யறிந்து உபாஸநம் செய்கிறார்கள்.

௯. 𑌭𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 𑌹𑍃𑌦𑌯𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑌿𑌶𑍍𑌛𑌿𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌸𑌂𑌶𑌯𑌾𑌃 ।
𑌕𑍍𑌷𑍀𑌯𑌨𑍍𑌤𑍇 𑌚𑌾𑌸𑍍𑌯 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌦𑍃𑌷𑍍𑌟𑍇 𑌪𑌰𑌾𑌵𑌰𑍇 ॥

౯. భిద్యతే హృదయగ్రన్థిశ్ఛిద్యన్తే సర్వసంశయాః।
క్షీయన్తే చాస్య కర్మాణి తస్మిన్దృష్టే పరావరే॥

(ப்-ம்.) 𑌪𑌰𑌾𑌵𑌰𑍇 - உலகத்திற்கு பெரியோராகிய இந்திரன் முதலா் றுரைத் தன்னில் தாழ்ந்தாரர்க வுடையனுயிருக்கிற, 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 - அந்த பரம புருஷன், 𑌦𑍃𑌷𑍍𑌟𑍇 - உபஸநத்தால் காணப்படுவானுயின், 𑌹𑍃𑌦𑌯𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑌿𑌃 - நெஞ்சிலிருக்கிற அவித்யாதிதோஷங்கள், 𑌭𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 - நசிக்கின்றன, 𑌸𑌰𑍍𑌵𑌸𑌂𑌶𑌯𑌾𑌃 - ஸகலஸந்தேஹங்களும், 𑌛𑌿𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 - கழிந்துபோகின்றன. 𑌅𑌸𑍍𑌯 - இவனுடைய, 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 - கருமங்கள், 𑌕𑍍𑌷𑍀𑌯𑌨𑍍𑌤𑍇 - க்ஷயிக்கின்றன.

𑌸𑌂-𑌸𑌾.—இதில் பரமாத்மஜ்ஞாநத்திற்கு பலம் சொல்லுகிறது. புத்தியி லழிந்திக் கிடக்கிற வாஸநாமயமான அவித்யை கழியுண்கிறது. அவித்யை ஸ்வபாவத்தாலாத்மாவை யடைந்ததன்று. கங்கையைப்போலே இடைவிடாமல் வந்துகொண்டிருந்த ஸகல ஸந்தேஹங்களும் நீங்குகின்றன இவ்வாறு ஸம்சயங்கள் நீங்கி யவித்யை கழிந்தவனுக்கு, ஜ்ஞாநம் பிறப்பதற்குமுன் செய்தவையாய் பலங்கொடாத கருமங்களும் அக்காலத்தில் செய்த கருமங்களும் க்ஷயிக்கின்றன. இந்த ஜந்மத்திற்குக் காரணமாகிய கருமமோவெனில் அது பயனைத் தருவதற்குத் தொடங்கியதால் அநுபவித்தே யழியவேணும். இவையெல்லாம் அந்த ப்ரம்மமே நானென்றறிந்தவனுக் குண்டாகிறபலம்.

𑌰𑌾-𑌸𑌾.—அந்த ஜ்ஞாநத்திற்கு பலம் சொல்லுகிறது. ஸர்வோத்க்ருஷ்டர்களான ப்ரம்மாதிகள் யவனுக்குத் தண்ணியரோ; யவன் சேதநாசேதநங்களை சரீரமாக உடையவனே; அந்த பரமபுருஷன் தர்சநஸமாநாகாரமான உபாஸநத்தில் விளங்கினுனுயின் அந்த உபாஸகனுக்கு அந்தக்கரணத்தில் ராகத்வேஷாதிகளாகிய முடிகள் அவிழ்ந்து போகின்றன. ஹ்ருதய பதத்திற்கு, அந்தக்கரணத்தையாயினும், ஜீவனையேயாயினும் பொருளாகச் சொல்லலாம். ஆகையால் ஜீவனுக்கு ஸமஸ்தராகத்துவேஷங்களும் நீங்குமென்றுமொருபொருள்சொல்லவமையும். பிரம்மத்தையறிந்தபோது ஸர்வஜ்ஞத்வமுண்டாகிற தானதால் ஸகல ஸம்சயங்களும் நீங்கிப்போகின்றன. ப்ராரப்தகர்மம் தவிர மற்றுள்ள அநேக ஜந்மார்ஜிதங்களான பூர்வகருமங்கள் நசிக்கின்றன. கர்மத்திற்கு நாசமாவது பலங்கொடுக்கிற சக்தி நாசமென்றறிக. பகவான் பாஷ்யகாரர் இவ்வாறுவ்யாக்யானம் செய்திருக்கிறார். இனி இப்படி உபாஸித்தவனுக்கு மரணகாலத்தில் ஸகல கருமங்களும் நசிக்குமென்று சில ச்ருதிகள் சொல்லுகின்றன. பகவான் பாஷ்யகாரரும் அவ்வாறே யருளிச்செய்திருக்கின்றனர். அப்படியிருக்க, இங்கு உபாஸநம் தொடங்கும் போதே ஸகல கருமங்களும் அழியுமென்பது கூடுமோவெனில்; கூடும்; இங்குச் சொன்ன அழிவு இவ்வுபாஸகனுடைய பாபத்திற்கு பலம்கொடுக்கக் கடவேனல்லேன். என்கிற பகவத்ஸங்கல்ப ரூபமாகின்றது. மரணகாலத்தில் இவன் பாபங்களைப் பொறுத்துவிட்டேன், என்கிற பகவத்ஸங்கல்பம். ஆகையால் விரோதமில்லை.

௧௦. 𑌹𑌿𑌰𑌣𑍍𑌮𑌯𑍇 𑌪𑌰𑍇 𑌕𑍋𑌶𑍇 𑌵𑌿𑌰𑌜𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌨𑌿𑌷𑍍𑌕𑌲𑌮𑍍 ।
𑌤𑌚𑍍𑌛𑍁𑌭𑍍𑌰𑌂 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌷𑌾𑌂 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌃 𑌤𑌦𑍍𑌯𑌦𑌾𑌤𑍍𑌮𑌵𑌿𑌦𑍋 𑌵𑌿𑌦𑍁𑌃 ॥

౧౦. హిరణ్మయే పరే కోశే విరజం బ్రహ్మ నిష్కలమ్ ।
తచ్ఛుభ్రం జ్యోతిషాం జ్యోతిః తద్యదాత్మవిదో విదుః ॥

(ப்-ம்.) 𑌹𑌿𑌰𑌣𑍍𑌮𑌯𑍇 - ஸ்வயம்ப்ரகாசமாகையாலே ஹிரண்மயமென்னப்படுவதாய், 𑌕𑍋𑌶𑍇 - பரமாத்மவாஸஸ்தானமாயிருக்கிற, 𑌪𑌰𑍇 - பரம பதத்தில், 𑌵𑌿𑌰𑌜𑌂 - ஸத்வ ரஜஸ்தமோரூபகுணங்களில்லாததாய், 𑌨𑌿𑌷𑍍𑌕𑌲𑌂 - அவயவமில்லாததாய், 𑌶𑍁𑌭𑍍𑌰𑌂 - சுத்தனுய், 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌷𑌾𑌂 - ஜயோதிஸ்

ஸுக்களுக்கும், ஜ்யோதி: - ஜ்யோதிஸ்ஸைக்கொடுக்கத்தக்கதாய், ஆத்மவித: யத் விது: - தத் - ஆத்மஸ்வரூபத்தை யறிந்தவராலே யறியப்பட்டதாய், தத் - சுருதிப்ரஸித்தமாயிருக்கிற, ப்ரஹ்ம - பரப்ரம்மமானது விளங்குகின்றது.

ஸம்-ஸா.—கீழ்ச்சொல்லிய மந்திரத்தின் பொருளையே விரித்துரைக்கின்ற திம் மந்திரமும் மேலிரண்டு மந்திரங்களும். ஆத்மவித்துக்களே ப்ரம்ம ஸ்வரூபத்தை இப்படிப்பட்டதென் றறிவார்கள். மற்றோரறியார்.

வி-ஸா.—நிர்தோஷமாய் திவ்யமங்கள விக்கிரஹத்தோடு பரமபதத்தில் பரப்ரம்மம் விளங்குகின்றது.

௧௧. ந தத்ர ஸூர்யோ பாதி ந சந்த்ரதாரகம் நேமா வித்யுதோ பாந்தி குதோயமக்நி: | தமேவ பாந்தமநுபாதி ஸர்வம் தஸ்ய பாஸா ஸர்வமிதம் விபாதி ||

౧౧. నతత్రసూర్యోభాతినచంద్రతారకంనేమావిద్యుతోభాంతికుతోయమగ్నిః।
తమేవభాంతమనుభాతిసర్వంతస్యభాసాసర్వమిదంవిభాతి॥

(ப-ம்.) தத்ர - அந்தப்ரம்மஸ்வரூபத்தில், ஸூர்ய: - ஸூரியனும், ந பாதி - ப்ரகாசிப்பதில்லை, சந்த்ரதாரகம் - சந்திரனும் நக்ஷத்திரங்களும் ந - ப்ரகாசிப்பதில்லை, இமா: வித்யுத: - இந்த மின்னல்களும், ந பாந்தி - மின்னுகின்றனவில்லை, அயம் அக்நி: - இந்த அக்நி, குத: - எப்படிப்ரகாசிக்கப்போகிறது, ஸர்வம் - எல்லாம், பாந்தம் - ப்ரகாசிக்கிற, தமேவ அநு - அந்தப்ரம்மத்தையநுஸரித்தே, பாதி - ப்ரகாசிக்கின்றன. தஸ்ய - அந்த ப்ரம்மத்தினுடைய, பாஸா - காந்தியினால், இதம் ஸர்வம் - இவையெல்லாம், விபாதி - ப்ரகாசிக்கின்றது.

ஸம்-ஸா.—ஸமஸ்த ஜ்யோதிஸ்ஸுக்களினுடைய மிதுவேஜ்யோதிஸ்ஸென்று முன்சொன்ன விஷயத்தை விரிக்கின்றது இம்மந்திரம். ஆத்மாவாகிய ப்ரம்மஸ்வரூப விஷயத்தில், எல்லாவற்றையும் ப்ரகாசிக்கச்செய்கிற சூரியனும் ப்காசிப்பதில்லை. அந்த ப்ரம்மத்தை ப்ரகாசிக்கச்செய்கிறதில்லை. அந்த சூரியனே, அந்தப்ரம்மத்தின் தேஜஸ்ஸினால் ஆத்மாவல்லாத ஸமஸ்தத்தையும் ப்ரகாசிக்கச்செய்கிறான். அவனுக்கு சுயமாய் ஒன்றை ப்ரகாசிக்கச்செய்ய சக்தியில்லை. அவ்வாறே சந்திரனும் நக்ஷத்திரங்களும் இந்த மின்னல்களும் ப்ரகாசிக்கச்செய்வதில்லை. ஸூரிய தேஜஸ்ஸுக்கு முன்னடங்கிப்போகின்ற தேஜஸ்ஸை யுடையவனாய் நம்மால் ப்ரத்யக்ஷத்தில் காணப்படுகிற இந்த அக்நிக்கு அந்த ப்ரம்மத்தை ப்ரகாசப்படுத்தும் சக்தியேது. பலவாறுசொல்லி யென்பயன். இந்த ஜகத்து விளங்குவது தனக்குத்தானே விளங்காநின்ற ப்ரம்மஸ்வரூபத்தை யநுஸரித்தேயன்றி வேறில்லை. தண்ணீர்முதலியவை யொன்றைச் சுடுவது நெருப்பின் ஸம்பந்தாலேயன்றி சுயமாகவன்றே, அவ்வாறேயென்க. இந்த ஸூரியசந்திரர் நக்ஷத்திரம் முதலியவற்றோடு கூடிய இந்த ஜகத்து அந்த ப்ரம்மத்தின் தேஜஸ்ஸாலே ப்ரகாசிக்கின்றது. ஏனென்றால் அந்த ப்ரம்மமேயன்றோ காரியமாய் அவைகளின் காந்தியால் விளங்குகின்றது. ஆகையா லந்த ப்ரம்மம் ஸ்வயம் ஜ்யோதிரூபமென்பது விளங்குகின்றது. தனக்கில்லாதே பிறருக்குத்தான்கொடுப்பது கூடாதன்றோ; மண்குட முதலியவை மற்றொன்றை விளங்கச்செய்யக் கண்டதில்லை. காந்தியுடைய ஸூரியன் முதலாகிய

வற்றால் மற்றவை விளங்கக்கண்டோம். ஆனதால், தான் ஸ்வயம் ஜ்யோதியாயிருந்தே மற்றவைகளை ஜ்யோதிரூப மாக்கவேணும்.

ரா-ஹா.—அந்த ப்ரம்ஸ்வரூபத்தை ஜ்யோதிஸ்ஸுக்களுக்கும் ஜ்யோதிஸ்ஸென்றது என்கொண்டென்பதை விரிக்கின்றது. இந்த ஸூரியன் முதலியவை எல்லாவற்றுக்கும் அந்த ப்ரம்மம் ப்ரகாசிக்கும்போது காந்தியில்லை என்று கருத்து. மிகவும் ப்ரகாசரூபமாய் ஸூரியாதிகளும் அவைகளால் ஜகத்து ப்ரகாசிக்கவும் ப்ரத்யக்ஷமாய்க் காணப்படுகையில் அந்த ப்ரம்மஸ்வரூபத்தில் ஸூரியன் ப்ரகாசிப்பதில்லை என்றெங்ஙனம் சொல்லலாமெனில் கூறுகின்றோம். இந்த ஜகத்தை விளங்கச்செய்கிற ஸூரியாதி தேஜஸ்ஸெல்லாம் சுயமாய் வந்ததன்றே. பரமாத்மாவினால் கொடுக்கப்பட்ட அவனுடைய தேஜஸ்ஸே யன்றோ. இவ்விஷயம் கீதையிலும் பகவானாலே சொல்லப்பட்டது. "யதாதித்யகதம் தேஜோஜகத் பாஸயதேகிலம் ! யச்சந்த்ரமஸியச்சாக் நௌ தத் தேஜோவித்திமாமகம்" என்கிற சுலோகத்தைக் காண்க. ஸூரிய சந்திராக்நி முதலியவற்றிலுள்ள தேஜஸ்ஸு என்னால் கொடுக்கப்பட்ட என்னுடைய தேஜஸ்ஸு, என்று இதின் பொருள். பகவான் பாஷ்யகாரரும் இவ்வாறே வ்யாக்யாநம் செய்தருளினார். ஸூரியாதிகள் என்னை யாராதித்து என்னிடத்திலிருந்து என்னுடைய தேஜஸ்ஸின் லேசத்தைப்பெற்று விளங்குகிறார்கள். என்று அர்ஜுநனுக்கு பகவானுபதேசிக்கிறாரென்று அவ்விடத்தில் பாஷ்யத்திற்குக் கருத்து. ஆகையா லிவர்களுக்கு சுயமான தேஜஸ் ஸில்லாமையினால் தேஜஸ்ஸில்லாதவர்களென்று சொல்லக் கூடும். ஆகையால் அந்த பரமபுருஷனுடைய காந்தியினாலே எல்லாம் விளங்குகிறது. ப்ரத்யக்ஷத்தில் ஸூரியாதி தேஜஸ்ஸால் ஜகத்து விளங்கினாலு மந்த தேஜஸ்ஸு அவர்களுடைய தன் ஞாகையால் பரமபுருஷனுடையதே யாதலால் அந்த பரமபுருஷனுடைய தேஜஸ்ஸாலே எல்லாம் விளங்குகிறது என்று சொல்லக் குறையில்லை. இங்கு சொல்லவேண்டிய விசேஷங்கள் கடவல்லியிலும் சொல்லியிருக்கிறோம். அங்கே கண்டுகொள்க.

௧௨. ப்ரஹ்மைவேதமம்ருதம் புரஸ்தாத் ப்ரஹ்ம பஶ்சாத் ப்ரஹ்ம தக்ஷிணதஶ்சோத்தரேண| அதஶ்சோர்த்வம் ச ப்ரஸ்ருதம் ப்ரஹ்மைவேதம் விஶ்வமிதம் வரிஷ்டம்||

౧౨. బ్రహ్మైవేదమమృతంపురస్తాద్బ్రహ్మపశ్చాద్బ్రహ్మదక్షిణతశ్చోత్తరేణ।
అధశ్చోర్ధ్వంచప్రసృతంబ్రహ్మైవేదంవిశ్వమిదంవరిష్ఠమ్॥

(ப்-ம்) இதம்-இப்படிப்பட்ட, ப்ரஹ்மைவ - பரப்ரம்மமே, அம்ருதம்- மோக்ஷம், புரஸ்தாத் - முன்னும்விளங்குகின்றது, ப்ரஹ்ம - பிரம்மமே, பஶ்சாத் - பின்னும்விளங்குகின்றது, தக்ஷிணத꞉- வலபுறத்திலும், உத்தரேணச - இடபுறத்திலும், அத꞉ச - கீழும், ஊர்த்வம்ச - மேலும், ப்ரஸ்ருதம் - வ்யாபித்திருக்கின்றது, இதம் விஶ்வம் - இந்தஸமஸ்தமும், ப்ரஹ்ம - ப்ரம்மமே, இதம் - இந்தப்ரம்மமே, வரிஷ்டம் - வரிக்கத்தக்கது.

ஶம-ஹா.—ப்ரம்மமே ஸத்யம், மற்றவை மித்யை, என்று முன்சொன்ன உபதேசத்தை திருடமாக்கி முடிக்கின்ற திம்மந்திரத்தில். உலகத்தின் தோற்றம் கயிற்றில் தோற்றுகிற பாம்புத் தோற்றம்போலது. ப்ரம்மமேஸத்யமென்று வேதாநுசாஸநமாம். ரா-ஹா.எல்லாவிடங்களிலும் வ்யாபித்திருக்கிறவஸ்து வரிக்கத்தக்கின ப்ரம்மமேயாம்.

இதி த்விதீயமுண்டகே த்விதீயகண்ட꞉ இதி த்விதீயமுண்டகம்.

ஸ்ரீ:.

𑌅𑌥 𑌤𑍃𑌤𑍀𑌯𑌮𑍁𑌣𑍍𑌡𑌕𑍇 𑌪𑍍𑌰𑌥𑌮𑌖𑌣𑍍𑌡𑌃.

௧. 𑌦𑍍𑌵𑌾𑌸𑍁𑌪𑌰𑍍𑌣𑌾𑌸𑌯𑍁𑌜𑌾𑌸𑌖𑌾𑌯𑌾𑌸𑌮𑌾𑌨𑌂𑌵𑍃𑌕𑍍𑌷𑌂𑌪𑌰𑌿𑌷𑌸𑍍𑌵𑌜𑌾𑌤𑍇।
𑌤𑌯𑍋𑌰𑌨𑍍𑌯𑌃𑌪𑌿𑌪𑍍𑌪𑌲𑌂𑌸𑍍𑌵𑌾𑌦𑍍𑌵𑌤𑍍𑌤𑍍𑌯𑌨𑌶𑍍𑌨𑌨𑍍𑌨𑌨𑍍𑌯𑍋𑌅𑌭𑌿𑌚𑌾𑌕𑌶𑍀𑌤𑌿॥

౧. ద్వాసుపర్ణాసయుజాసఖాయాసమానంవృక్షంపరిషస్వజాతే।
తయోరన్యఃపిప్పలంస్వాద్వత్త్యనశ్నన్నన్యోఅభిచాకశీతి॥

(ப-ம்) 𑌸𑌯𑍁𑌜𑌾 - ஸமாநமானகுணமுடையவர்களாய், 𑌸𑌖𑌾𑌯𑌾 - கூடியிருப்பவர்களாய், 𑌸𑍁𑌪𑌰𑍍𑌣𑌾 - பக்ஷிகள்போல்வராகிய ஜீவாத்ம பரமாத்மாக்கள், 𑌦𑍍𑌵𑌾 - இருவரும், 𑌸𑌮𑌾𑌨𑌂 𑌵𑍃𑌕𑍍𑌷𑌂 - வ்ருக்ஷம்போலிருக்கிற ஒருசரீரத்தை, 𑌪𑌰𑌿𑌷𑌸𑍍𑌵𑌜𑌾𑌤𑍇 - அடைந்திருக்கிறார்கள், 𑌤𑌯𑍋𑌃 - அவ்விருவருக்குள், 𑌅𑌨𑍍𑌯𑌃 - பரமாத்மாவைக்காட்டில் வேறுபட்டவனான ஜீவாத்மா, 𑌸𑍍𑌵𑌾𑌦𑍁 - விபாகதசையையடைந்திருக்கிற, 𑌪𑌿𑌪𑍍𑌪𑌲𑌂 - புண்யபாபரூபமாகிய கருமபலத்தை, 𑌅𑌤𑍍𑌤𑌿 - புஜிக்கிறான். 𑌅𑌨𑍍𑌯𑌃 - ஜீவாத்மாவைக் காட்டில் வேறுபட்ட பரமாத்மா, 𑌅𑌨𑌶𑍍𑌨𑌨𑍍 - கர்ம பல ஸம்பந்தமில்லாதவனாய், 𑌅𑌭𑌿𑌚𑌾𑌕𑌶𑍀𑌤𑌿 - ப்ரகாசிக்கிறான்.

ஸ0-ஸா.—இதுவரையில் பரவித்யை சொல்லப்பட்டது. யாதொன்று புருஷபதத்தால் சொல்லப்படுகிற ஸத்யஸ்வரூபமான அக்ஷர பரப்ரம்மத்தை யறிவதற்கு ஸாதநமாகின்றதோ; யதை யறிந்து அவித்யைமுதலிய ஸம்ஸார காரணங்கள் நீங்கி ராகத்வேஷமுதலிமுடிகள் கழியுமோ; அந்த ப்ரம்மத்தை யடைவதற்கு ப்ரணவத்தை வில்லாக்கி என்று துடங்கி யோகமுமுபாயமாகச் சொல்லப்பட்டது. இனி யதற்கு துணைக் காரணங்களாகிய ஸத்யமுதலியவை கூறுவதற்கு இந்த கண்டம் துடங்கப்பட்டது. அதுவுமன்றி தத்வ நிச்சயமும் முக்யமாய் சொல்லப்படுகிறது. கீழில் தத்வநிச்சயம் பண்ணப்பட்டதாயினு மது புலப்படுவது மிகவும் வருத்தமானதினால் இங்குமதைச் சொல்வது புநருக்தி தோஷத்திற் கிடமாகாது. பரமார்த்த வஸ்துவை யறிவித்தற்கு ஸூத்திரமாகிய மந்திரம் முதலில் "த்வாஸுபர்ணா" என்பது. இதற்குப் பொருள் சொல்லுகிறோம். பக்ஷிகளின் ஸாத்ருச்யமிருப்பதால் பக்ஷிகளென்றது. எப்போதும் கூடியிருப்பதால் ஸயுஜௌ என்றது. ஒன்றாய் தோற்றுகிற காரணத்தை யுடையவராகையால் ஸகாயௌ என்றது. இப்படியுள்ள ஜீவாத்ம பரமாத்மாக்கள் வருக்ஷம்போ லழிந்து போகிறபடியால் வ்ருக்ஷமெனப்படுகிற சரீரத்தை தங்களுக்கு ப்ரத்யக்ஷ ஸ்தாநமாக அடைந்திருக்கின்றார்கள். இரண்டு பக்ஷிகள் ஒரு வ்ருக்ஷத்தில் சேருவதுபோலவென்று கருத்து. இந்த வ்ருக்ஷமானது மேல்வேராய் கீழ் கிளைகளாய் க்ஷேத்திரமென்று பெயர் பெற்றதாயிருக்கிறது; ஸமஸ்த ப்ராணிகள் செய்த கருமபலத்திற்கு மிருப்பிடமாயிருக்கிறது இந்த சரீரமே. அந்த சரீரத்தை அவித்யை காமம் கருமம் வாஸனை இவைகளுக்கிடமாகிய லிங்கத்தை உபாதியாக உடைய ஜீவனும் ஈச்வரனும் பக்ஷிகளைப்போ லடைந்திருக்கின்றனர். அவ்வாறு சேர்ந்திருக்கிற இருவருள் ஒருவனாகிய ஜீவன், ஸுகதுக்கங்களை கருமத்திற்குத் தக்கபடி யநுபவிக்கிறான். அது, அவிவேகத்தினாலே வந்த விசித்திரவேதனை, ஸர்வஜ்ஜனாய் ஸத்வத்தை யுபாதியாக உடைய நித்யசுத்தபத்த முக்தஸ்வ

பாவனுகிய ஈச்வரன் கருமபலத்தை புசிப்பதில்லை. இந்த ஈச்வரன் ஸத்தாமாத்திரத்தால் ப்ரக்ருதி ஜீவர்களை நித்தியஸாக்ஷியாய்க்கொண்டு ப்ரேரணம் செய்கிறவனுகையால் தான் ஸாக்ஷியாகிருனேயன்றி கருமபலத்தை புசிப்பதில்லை. தான் பார்த்தமாத்திரத்தால் ப்ரேரித்துக்கொண்டு அரசனைப்போல் விளங்குகிருன்.

ஶா-ஹா.—கீழ்ச்சொல்லியதில் ப்ரம்மத்திற்கு சரீர ஸம்பந்தத்தால் ஸுகதுக்காநுபவம் வரும்போல் தோற்றுகையா லந்த ஸந்தேஹம் நீங்குவதற்கு இந்த மந்திரம் சொல்லப்படுகிறது. சுபாவத்தில் அபஹதபாப்மத்வம் முதலிய குணங்களால் சமாநராய், கூடியிருப்பவராய் பக்ஷிபோலிருக்கிற ஜீவாத்ம பரமாத்மாக்கள் ஒருசரீரத்தி லிருந்தாலும் பரவசனை ஜீவாத்மா துக்காநுபவம் பண்ணுகிருனேயன்றி பரமாத்மாத்வுக் கில்லை. ஜீவன் வேறு பரமாத்மா வேருகையால் ஜீவனுடைய துக்கம் ப்ரமாத்மாவுக்கில்லை. இத்தால் ஜீவனே பரமாத்மா என்று அத்வைதிகள் சொல்லுகிறபடி ஸரியல்லவென்று இந்தச் சுருதி காட்டுகிறது. அப்படியாகில் பரமாத்மாவுக்கு துக்காநுபவம் வருகையா லென்க,

௨. 𑌸𑌮𑌾𑌨𑍇 𑌵𑍃𑌕𑍍𑌷𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋 𑌨𑌿𑌮𑌗𑍍𑌨𑍋𑌽𑌨𑍀𑌶𑌯𑌾 𑌶𑍋𑌚𑌤𑌿 𑌮𑍁𑌹𑍍𑌯𑌮𑌾𑌨𑌃।
𑌜𑍁𑌷𑍍𑌟𑌂 𑌯𑌦𑌾 𑌪𑌶𑍍𑌯𑌤𑍍𑌯𑌨𑍍𑌯𑌮𑍀𑌶𑌮𑌸𑍍𑌯 𑌮𑌹𑌿𑌮𑌾𑌨𑌮𑌿𑌤𑌿 𑌵𑍀𑌤𑌶𑍋𑌕𑌃॥

౨. సమానేవృక్షేపురుషోనిమగ్నో నీశయా శోచతిముహ్యమానః।
జుష్టంయదాపశ్యత్యన్యమీశమస్యమహిమానమితివీతశోకః॥

(ப்-ம்.) 𑌅𑌨𑍀𑌶𑌯𑌾-போக்யபூதையாயிருக்கிற ப்ரக்ருதியினுலே, 𑌮𑍁𑌹𑍍𑌯𑌮𑌾𑌨𑌃 - மோஹத்தையடைந்தவனுய், 𑌸𑌮𑌾𑌨𑍇 - ஒன்ருயிருக்கிற, 𑌵𑍃𑌕𑍍𑌷𑍇-சரீரத்தில், 𑌨𑌿𑌮𑌗𑍍𑌨𑌃 - முழுகினவனுய், 𑌶𑍋𑌚𑌤𑌿 - சோகிக்கிருன். 𑌇𑌤𑌿 - இந்தப்படி, 𑌅𑌨𑍍𑌯𑌮𑍍 - வேருனவனுய், 𑌜𑍁𑌷𑍍𑌟𑌮𑍍 - தன்னிடத்தில் ப்ரீதியுடையவனுயிருக்கிற. 𑌈𑌶𑌮𑍍 - பரமாத்மாவையும், 𑌅𑌸𑍍𑌯 - இந்த பரமாத்மாவினுடைய, 𑌮𑌹𑌿𑌮𑌾𑌨𑌮𑍍 - மாஹாத்ம்யத்தையும், 𑌯𑌦𑌾 - எப்போது, 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 - பார்க்கிருனே, (𑌤𑌦𑌾-அப்போது) 𑌵𑍀𑌤𑌶𑍋𑌕𑌃-சோகமில்லாதவனுகிருன்.

ஶ0-ஹா —இவ்வாறு ஜீவனுக்கு கர்மபலாநுபவ மாகையால் முன்சொன்னபடி வ்ருக்ஷம்போன்ற ஒருசரீரத்தில் போக்தாவாய்க்கொண்டு அவித்யை, காமம் கருமபலம் ராகம், த்வேஷம்முதலிய பெருஞ்சுமையால் அமுக்கப்பட்டு ஸமுத்திரஜலத்தில் சுரைக்காய்போல முழுகினவனுய் தேஹத்தையே ஆத்மாவாக ப்ரமித்துக்கொண்டு இவனுக்கு நான் பிள்ளை இவனுக்கு நான் பேரன் நானிளைத்தவன் நான் பெருத்தவன் நான் குணமுடையவன் நான் குணமில்லாதவன் நான் ஸுகத்தை யநுபவிக்கிறேன், நான் துக்கத்தை யநுபவிக்கிறேன், என்றிப்படிப்பட்ட ஜ்ஞாநமுடையவனுய் பிறப்பதும் சாவதும் பந்துக்களோடு கூடுவதும் பிரிவதுமாய், எனக்கு சக்தியில்லையே என்பிள்ளை மரித்தானே என் பார்யை மரணமடைந்தாளே இனி நானேன் பிழைத்திருக்கவேணும், என்று தீநனுய் அனேகவித ஸங்கடங்களால் விவேகமின்றி சிந்தையடைகிறவனுய் தபிக்கிருன். இப்படி திர்யக்காயு மனுஷ்யனுயும் பிறந்துபிறந்து ப்ரேதனுகிற அந்த ஜீவன் இவ்வாறு கழிந்துபோன அநேக ஜந்மங்களில் செய்த ஸுக்ருதலேசத்தால் ஒருகருணையுடைய புருஷனுல் உபதேசிக்கப்பெற்ற யோகமார்க்கத்தை யுடையனுய் கொல்லாமை, மெய்யுரை, ஸ்த்ரீ ஸம்பந்தமில்லாமை, நிவ்ருத்தி, சமம்தமம் முதலியவற்ருேடு கூடி தெளிந்த நெஞ்சையுடையவனுய் யோகிகளில் பலராலும்கண்டு ஸேவிக்கப்படுகிற

உபாதிவிலக்ஷணனை ஈச்வரனை யெப்போது காண்கிறானோ பசிதாஹம் சோகம்மோஹம் ஜநநமரணம் இவைகளில்லாத அந்த ஈச்வரனுடைய மகிமையையும் எல்லா ஜகத்திற்கு இவனேயாத்மா அவனே நான்; ஸர்வ ஸமனாய் ஸர்வபூதங்களிலு மிருக்கிற ஈச்வரன் என்னைக்காட்டில் அவித்தையினாலுண்டாகிய உபாதியினால் பரிச்சேதிக்கப் பட்டவனாகையால் வேறுபட்டவனன்று. இந்த ஜகத்தின் மகிமையெல்லாம் பரமேச்வரனாகிய என்னுடைய மகிமை என்பதையும் எப்போது தெரிந்துக்கொள்ளுகிறானோ; அப்போது ஸமஸ்தசோக ஸாகரங்களில்னின்றும் விடுபட்டு க்ருதக்ருத்யனாகிறான்.

ரா-ஹா. ப்ரக்ருதி ஸம்பந்தத்தினால் பரமாத்மாவுக்குப் போல் தனக்குமுண்டான ஜ்ஞாநம் ஆநந்தம்முதலியவை மறைந்தவனாய் சரீரத்தில் நான் பெருத்தவன் நானிளைத்தவன் என்று ஆத்மப்ரமத்தைப் பண்ணிக்கொண்டு அந்த சரீரஸம்பந்தத்தால் வருகிற சுகதுக்கங்களை யநுபவிக்கிறான். எக்காலத்திலிந்தஜீவன் இவ்வாறு முழுகிக்கிடக்கிற தன்னைக்காட்டிலும் தனக்கு தாரகனாகையாலும் நியந்தாவாகையாலும் சேஷியாகையாலும் விலக்ஷணனாய் தான்செய்த ஸுக்ருதலவத்தால் தன்னிடத்தில் ப்ரீதிசெய்திருக்கிற பரமாத்மாவையும், ஸமஸ்தஜகத்தையும் நியமிக்கிற அவனுடைய மாகாத்ம்யத்தையும் காண்கிறானோ; அக்காலத்தில் சோகம்விட்டவனாகிறான். என்றுபொருள். சிலர், அநீஶயா - என்பதற்கு ஸாமர்த்யமில்லாமையினாலே, என்று வ்யாக்யாநஞ்செய்து, சேற்றிலழிந்தி யொன்றும்தோற்றாமல் துக்கித்துக்கொண்டிருந்த ஒருபுருஷன் தானேவெளிக்கிளம்ப சக்தியில்லாமையால் தன்னைப்போல் சேற்றில் விழாதவனாய் தன்னிடத்தில் ப்ரீதியோடுகூடிய புருஷனையு மவனுக்குத் தன்னை யெடுக்கத்தக்க சக்தியையும் பார்த்து, இனி நமக்குபயமில்லையென்று சோகத்தைவிடுகிறபடி இத்தால் அநுஸந்திக்கப்படுகிறது; என்றுரைத்தனர். இந்தபக்ஷத்திற்கும் பாஷ்யவிரோதமில்லை.

௩. 𑌯𑌦𑌾𑌪𑌶𑍍𑌯𑌃𑌪𑌶𑍍𑌯𑌤𑍇𑌰𑍁𑌕𑍍𑌮𑌵𑌰𑍍𑌣𑌂 𑌕𑌰𑍍𑌤𑌾𑌰𑌮𑍀𑌶𑌂𑌪𑍁𑌰𑍁𑌷𑌂
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌯𑍋𑌨𑌿𑌮𑍍 । 𑌤𑌦𑌾𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍𑌪𑍁𑌣𑍍𑌯𑌪𑌾𑌪𑍇𑌵𑌿𑌧𑍂𑌯𑌨𑌿𑌰𑌞𑍍𑌜𑌨𑌃𑌪𑌰𑌮𑌂
𑌸𑌾𑌮𑍍𑌯𑌮𑍁𑌪𑍈𑌤𑌿 ॥

3. యదాపశ్యః పశ్యతే రుక్మవర్ణం కర్తారమీశం పురుషం బ్రహ్మయోనిమ్।
తదావిద్వాన్ పుణ్యపాపే విధూయ నిరంజనః పరమం సామ్యముపైతి॥

(ப-ம்.) 𑌪𑌶𑍍𑌯𑌃 - ஜீவாத்மாவானவன், 𑌯𑌦𑌾 - எந்தகாலத்தில், 𑌰𑍁𑌕𑍍𑌮𑌵𑌰𑍍𑌣𑌮𑍍 - ஸுவர்ணஸ்வரூபமாய் ப்ரகாசிக்கிற அப்ராக்ருத திவ்யமங்கள விக்ரஹத்தையுடையவனாய், 𑌈𑌶𑌮𑍍 - ஜகத்துக்கு நியாமகனாய், 𑌕𑌰𑍍𑌤𑌾𑌰𑌮𑍍 - ஜகத்கர்தாவாய், 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌯𑍋𑌨𑌿𑌮𑍍- ப்ரக்ருதிக்குபாதாநமாயிருக்கிற, 𑌪𑍁𑌰𑍁𑌷𑌮𑍍 - பரம்புருஷனை, 𑌪𑌶𑍍𑌯𑌤𑍇 - ஸாக்ஷாத்கரிக்கிறானோ, 𑌤𑌦𑌾 - அந்த காலத்தில், 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍 - அந்தப்ரம்மதர்சி, 𑌨𑌿𑌰𑌞𑍍𑌜𑌨𑌃 - ப்ரக்ருதிஸம்பந்த மில்லாதவனாய், 𑌪𑍁𑌣𑍍𑌯𑌪𑌾𑌪𑍇 - புண்யத்தையும் பாபத்தையும், 𑌵𑌿𑌧𑍂𑌯 - நிரஸித்து, 𑌪𑌰𑌮𑌂𑌸𑌾𑌮𑍍𑌯𑌮𑍍 - அத்யந்தஸாம்யத்தை யடைகிறான்.

ஶம்-ஹா. இந்த மந்திரமும் முன்சொன்ன விஷயத்தையே விஸ்தரித்துச் சொல்லுகிறது. உபாஸகனானவன் எப்போது ஸ்வயம்ஜ்யோதிரூபனாய் ஜகதீசனாய் ஜகத்கர்தாவாயிருக்கிற காரணப்ரம்மமான புருஷனை யபேதமாகப் பார்க்கிறானோ; அவனப்போது ஸகல கருமங்களும் நீங்கி ப்ரம்மத்தோடு பேதமின்றி ஸாம்யத்தை யடைகிறான். அபேதத்தை யடைகிறானென்பதே அத்யந்தஸாம்யத்தை யடைகிறான், என்று சொல்லப்ப

டுகிறது. பேதமுண்டாகி லத்யந்த ஸாம்யம் கூடாதன்றே. ஆகையா லபேதத்தை யடைகிருனென்றேபொருள்.

ஈா-ஹா. தன்னைக்காட்டில் விலக்ஷணுக பரமாத்மாவை எப்போதறிகிருனே; அப்போது அபஹதபாப்மத்வம் முதலிய குணங்களால் பூர்ணஸாம்யத்தையடைகிருன் ஸாம்யத்தை யடைகிருனென்பதினு லபேதமில்லையென்று ஸ்பஷ்டமாகின்றது.

ச. ப்ராணோ ஹ்யேஷ ய꞉ ஸர்வபூதைர்விபாதி விஜாநந் வித்வாந் பவதே நாதிவாதீ । ஆத்மக்ரீட ஆத்மரதி꞉ க்ரியாவாநேஷ ப்ரஹ்மவிதாம் வரிஷ்ட꞉॥

౪. ప్రాణో హ్యేష యస్సర్వభూతైర్విభాతి విజానన్విద్వాన్ భవతే నాతివాదీ।
ఆత్మక్రీడ ఆత్మరతిః క్రియావానేష బ్రహ్మవిదాం వరిష్ఠః॥

(ப-ம்.) ய꞉ - யந்தபரமபுருஷன், ஸர்வபூதை꞉ - ஸமஸ்த பூதங்களாலு மாச்ரயிக்கப்பட்டவனுய், விபாதி - விளங்குகிருனே; ஏஷ꞉ஹி - இந்தபரமபுருஷனேவென்றல், ப்ராண꞉ - பரமாத்மா; விஜாநந் - அவனை யறிந்தவனுய், வித்வாந் - உபாஸகனுய்க்கொண்டு, தே ந-அந்தபுருஷனுலே, அதிவாதீ - அதிவாதம்பண்ணுகிறவனுக, பவ - ஆகக்கடவாய்.

ஶம்-ஹா. ப்ராணனுக்கும் ப்ராணனுய் பரமாத்மாவாய் பரமேச்வரனுய் ஸமஸ்தபூதங்களிலுமிருப்பவனுய் அனேக ப்ரகாரமாய் விளங்குகிற பரமபுருஷனை நானேயவனென்று எவனறிகிருனே, எவனிந்த புருஷஸ்வரூபத்தை யடைகிற ப்ரம்மத்தைவிட மற்றென்றை யறியாமையாலே அதிவாதம் பண்ணுனே; அதாவது இரண்டுவஸ்துவையறிந்தாலன்றே, அதைவிட இதுசிறந்தது என்று அதிவாதம் செய்யக்கூடும். இவனுக்கு ப்ரம்மந்தவிர மற்றென்று தோற்றுமையாலே இந்த பொருளைவிட ப்ரம்மம் சிறந்ததென்று அதிவாதம் பண்ணவழியில்லை; அதிவாதமாவது சிறந்தது என்று ஒருபொருளை ச்லாகிப்பது. புத்திரன் பார்யை முதலியவர்களிடத்தில் க்ரீடையைவிட்டு ப்ரம்மத்தி னிடத்திலே எவன் க்ரீடிக்கிருனே அப்படியே ப்ரம்மவிஷயத்திலேயே ப்ரீதியுடையவனுகிருனே; கிரீடையாவது ஆநந்தத்திற்குக் காரணமான காயிகவ்யாபாரம், ரதியாவது - மநஸ்ஸில்பிறக்கிறப்ரீதி. அப்படியே ஜ்ஞாநம் முதலிய மாநஸக்ரியைகளை யுடையவனுகிருனே; இங்குசிலர் க்ரியை என்பது அக்நிஹோத்திரம் முதலிய கர்மாநுஷ்டாநத்தை என்று வ்யாக்யாநம் செய்யவிரும்புகிருர்கள். அது விருத்தம். கருமாநுஷ்டாநம் செய்பவன் ப்ரம்மத்திலேயே நெஞ்சைச் சேர்ப்பவனுகான். இவ்விரண்டுமொருவனுக்குச்சேருமோ. இருளும் வெளிச்சமும் சேர்ந்தபோதன்றே ஜ்ஞாநகருமங்களொன்று சேருவது. ஆகையாலவர்சொல்லுவது வீண்ப்ரலாபமேயாம்.சுருதிகளினுலுமிதுவிளங்கும். ஆகையால் க்ரியை என்பது ஜ்ஞாநத்தையேயன்றி கருமத்தையல்ல. அப்படிப்பட்டவன் ப்ரம்மத்தை யறிந்தவரில் சிறந்தவனுகிருன்.

ஈா-ஹா. மற்றச்சுருதிகளில்போல இங்கும் ப்ராணசப்தம் பரமாத்மாவையே கூறுகின்றது. இந்தபரமாத்மா எல்லாபூதங்களாலு மாச்ரயிக்கப்படுகிருன், இப்படிப்பட்ட பரமபுருஷனை ச்ரவணம் மநநம் இவைகளால் நன்குணர்ந்து அவனை யுபாஸநம் செய்து அந்தபரமபுருஷனைப்பற்றி யதிவாதியாகக்கடவாய், என்று சீஷனுக்கு உபதேசிக்கிறது. தன்னுலுபாஸிக்கப்படுகிற தேவதைக்கு எல்லாதேவதைகளிலும் சிறப்புச்சொல்லுகிறவனை யதிவாதியென்கிறது. எல்லாதேவதைகளிலு முத்தமனுன பரமபுருஷனையறிந்துபாஸித்து அந்தபரமபுருஷனுக்குண்டான ஸர்வோத்தமத்வத்தை வாய்படைத்த ப்ரயோஜனம்பெறுவதற்குக் கூறுஎன்று கருத்து இப்படிப்பட்டவன் உத்யாநம்

முதலியவிடங்களில் விளையாடுகிறபடிகளைவிட்டு பரப்ரம்மத்தில் க்ரீடிப்பவனாய், கந்தம் புஷ்பம் முதலியவற்றி லாசையைவிட்டு பரமாத்மாவினிடத்தில் ப்ரேமத்தையுடையவனாய், பலோத்தேசமின்றி சகலகருமங்களையும் செய்யக்கடவன். பலோத்தேசமின்றிச் செய்கிற கருமங்களினால் நெஞ்சு சுத்தமாய் ப்ரம்மவித்யையென்கிற ப்ரம்மோபாஸநம் ஸித்திக்கின்றதாகையால் அவச்யம் கர்மாநுஷ்டாநம் செய்யக்கடவன். இவன் ப்ரம்மத்தை யறிந்தவரில் பெரியோனாகிறான்.

பதாந்வயார்த்தபேதங்கள்.

சங்கரபாஷ்யத்தில் பவதே, ந, அதிவாதீ, என்று பதம்பிரித்து ந, என்பதை, பவதே, என்கிற பதத்தோடுகூட்டி யுரையுரைக்கப்பட்டது. இராமாநுஜபாஷ்யத்தில், பவ, தேந, அதிவாதீ, என்று பதம்பிரித்து தேந, அதிவாதீ பவ, என்றந்வயித்துக் கருத்துகூறப்பட்டது. கர்மாநுஷ்டாநம் ப்ரம்மஜ்ஞாநிக்குக்கூடாதென்று 'க்ரியா' என்கிறபதத்திற்கு அக்நிஹோத்ராதிகருமம் முக்யப்பொருளாயினும், ஜ்ஞாநமேபொருளென்று சங்கரபாஷ்யத்தில் விவரணம் செய்யப்பட்டது. இந்த கருமாநுஷ்டாநம் ப்ரம்மோபாஸநமாகிற ஜ்ஞாநத்திற்கு அங்கமென்று கருதி 'க்ரியா' என்கிற அந்தபதத்திற்கு கருமாநுஷ்டாநமே பொருளென்று இராமாநுஜபாஷ்யத்தில் கொள்ளப்பட்டது.

ரு. 𑌸𑌤𑍍𑌯𑍇𑌨 𑌲𑌭𑍍𑌯𑌸𑍍𑌤𑌪𑌸𑌾 𑌹𑍍𑌯𑍇𑌷 𑌆𑌤𑍍𑌮𑌾 𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌰𑍍𑌯𑍇𑌣 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑍍 । 𑌅𑌨𑍍𑌤𑌃𑌶𑌰𑍀𑌰𑍇 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌰𑍍𑌮𑌯𑍋 𑌹𑌿 𑌶𑍁𑌭𑍍𑌰𑍋 𑌯𑌂 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌯𑌤𑌯𑌃 𑌕𑍍𑌷𑍀𑌣𑌦𑍋𑌷𑌾𑌃 ॥

౫. సత్యేనలభ్యస్తపసాహ్యేషఆత్మాసమ్యక్ జ్ఞానేనబ్రహ్మచర్యేణనిత్యమ్।
అంతశ్శరీరేజ్యోతిర్మయోహిశుభ్రోయంపశ్యంతియతయఃక్షీణదోషాః॥

(ப-ம்.) 𑌕𑍍𑌷𑍀𑌣𑌦𑍋𑌷𑌾𑌃 - ராகத்வேஷமுதலிய தோஷங்கள்கழிந்தவராகிய, 𑌯𑌤𑌯𑌃 - இந்திரியஜயமுடையயதிகள், 𑌅𑌨𑍍𑌤𑌃𑌶𑌰𑍀𑌰𑍇 - சரீரத்திற்குள், 𑌯𑌂 - எந்தபுருஷனை, 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 - காண்கிறார்களோ; 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌰𑍍𑌮𑌯𑌃 𑌹𑌿 - ஜ்யோதிஸ்வரூபனாய், 𑌶𑍁𑌭𑍍𑌰𑌃 - சுத்தனாய், 𑌆𑌤𑍍𑌮𑌾 - அந்தர்யாமியாயிருக்கிற, 𑌏𑌷𑌃 - இந்தபரமபுருஷன், 𑌸𑌤𑍍𑌯𑍇𑌨 - பூதங்களுக்குஹிதமான வார்த்தைகளினாலும், 𑌤𑌪𑌸𑌾 - உள்ளும்புறமுமொத்திருக்கையாகிற தவத்தினாலும், 𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨- சாஸ்திரத்தினால்பிறந்த நல்லறிவாலும், 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑍍 - எப்போதும், 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌰𑍍𑌯𑍇𑌣 - ஸ்திரீஸம்பந்தத்தை நீக்குகையினாலும், 𑌲𑌭𑍍𑌯𑌃 - அடையத்தக்கவன் அல்லது ஸாக்ஷாத்கரிக்கத்தக்கவன். அல்லது உபாஸிக்கத்தக்கவன்.

𑌶𑌂-𑌭𑌾. 𑌰𑌾-𑌭𑌾. இம்மந்திரத்தில் ஸந்யாஸிக்கு நல்லறிவுக்குத் துணைக்காரணங்களாய ஸத்யம்முதலிய ஸாதநங்கள் விதிக்கப்படுகின்றன. பொய்சொல்லாமையினாலும் ஆர்ஜவத்தாலும், ஆர்ஜவமாவது கபடத்தைவிடுகை. இதையே தபஸ்ஸென்றும் ப்ரமாணம்சொல்லுகிறது. இதுவே ஆத்மசாக்ஷாத்காரத்திற்கு மிகவு முபயோகப்படுகிறது. சாந்திராயணம் முதலியவை யப்படிப்பட்டவையல்லவன்றோ; உள்ளபடி யாத்ம

ஸ்வரூபத்தை யறிவதினுலும், மைதுநத்தைவிடுகையாலும் இவ்வாத்மா அடையப்படு வன். எந்தஆத்மா சுத்தனே எவன் சரீரமத்யத்தில் ஹ்ருதய புண்டரீகத்தில் ஜ்யோதிர் மயனுய் விளங்குகிருனே; யவன், காமக்ரோதம் முதலிய தோஷங்களில்லாதே பரப்ரம் மத்தை யடையவேணுமென்று யத்நம்செய்கிற ஸந்யாஸிகளால் காணப்படுகிருனே அந்த பரமாத்மா எப்போதும் கீழ்ச்சொல்லிய நியமத்தின்படி யிருக்கிறபுருஷனு லடை யப்படுவான். ஒருக்கால் மெய்சொல்வது மெய்யாகமாட்டாது. இப்படியேமற்றவையும்.

ஸூ. 𑌸𑌤𑍍𑌯𑌮𑍇𑌵 𑌜𑌯𑌤𑍇 𑌨𑌾𑌨𑍃𑌤𑌂 𑌸𑌤𑍍𑌯𑍇𑌨 𑌪𑌨𑍍𑌥𑌾 𑌵𑌿𑌤𑌤𑍋 𑌦𑍇𑌵𑌯𑌾𑌨𑌃।
𑌯𑍇𑌨𑌾𑌕𑍍𑌰𑌮𑌨𑍍𑌤𑍍𑌯𑍃𑌷𑌯𑍋 𑌹𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌕𑌾𑌮𑌾 𑌯𑌤𑍍𑌰 𑌤𑌤𑍍𑌸𑌤𑍍𑌯𑌸𑍍𑌯 𑌪𑌰𑌮𑌂 𑌨𑌿𑌧𑌾𑌨𑌮𑍍॥

௬. సత్యమేవజయతే నానృతంసత్యేనపన్థావితతో దేవయానః।
యేనాక్రమన్త్యృషయోహ్యాప్తకామాయత్రతత్సత్యస్యపరమంనిధానమ్॥

(ப-ம்.) 𑌸𑌤𑍍𑌯𑌮𑍇𑌵 - ஸத்யமே, 𑌜𑌯𑌤𑍇 - ஜயிக்கிறது, 𑌅𑌨𑍃𑌤𑌮𑍍 - பொய்யானது, 𑌨 - ஜயிக்கிறதில்லை, 𑌦𑍇𑌵𑌯𑌾𑌨𑌃-𑌪𑌨𑍍𑌥𑌾𑌃 - அர்ச்சிராதிமார்க மானது, 𑌸𑌤𑍍𑌯𑍇𑌨 - ஸத்யம்சொல்வதினுல், 𑌵𑌿𑌤𑌤𑌃 - உண்டாகிறது. 𑌯𑍇𑌨 - எந்தஅர்ச்சிராதிமார்க்கத்தினுல், 𑌆𑌪𑍍𑌤𑌕𑌾𑌮𑌾𑌃 - ஆசாபாசம் விட்டவ ராகிய; 𑌋𑌷𑌯𑌃 - தத்வஜ்ஞாநிகள், 𑌯𑌤𑍍𑌰 - எவ்விடத்தில், 𑌸𑌤𑍍𑌯𑌸𑍍𑌯 -ஸத்ய வசநத்திற்கு, 𑌪𑌰𑌮𑌂 - 𑌨𑌿𑌧𑌾𑌨𑌮𑍍 - முக்யபலமாகிய, 𑌤𑌤𑍍 - அந்தபரமாத்ம தத்வம் ப்ரகாசிக்கிறதோ அந்தஸ்தாநத்தை, 𑌆𑌕𑍍𑌰𑌮𑌨𑍍𑌤𑌿-அடைகிறுர்களோ;

ஸ0-ஹா. ஸத்யத்தை ஸ்துதிக்கிற அர்த்தவாத மிந்தசுலோகம்;மெய்சொல்பவனே ஜயிப்பான். பொய்சொல்லுமவன் ஜயியான். ஒருபுருஷனேப்பிடித்து மெய்யும்பொய்யும் வெற்றியையும் தோல்வியையுமடையுமேயன்றி தனித்தல்ல.உலகத்தில் பொய்யன்தோ ற்பதும் மெய்யன்ஜயிப்பதும் ப்ரத்யக்ஷமாயிருக்கின்றது. ஸத்யம் பலமுடையது. சாஸ் த்ரத்திலும் ஸத்யமேபலமுடையதென்று தெரிகிறது. ஸத்யத்தினுலன்றே தேவயாநமா ர்க்கம் கிடைக்கின்றது. எந்த மார்க்கமே புருஷார்த்தமாகிய ப்ரம்மத்தை ஸந்யாஸிகள டைவதற்கு ஹேதுவாயிருக்கின்றதோ;

ரா-ஹா. அர்ச்சிராதிமார்க்கத்தினுல் பரமபதத்தையடைவதற்கு ஸத்யமே முக்ய காரணமாயிருக்கிறதென்று ஸத்யத்தைக் கொண்டாடுகிறது. மற்றவை பதஉரையின் படியேகொள்க.

௭. 𑌬𑍃𑌹𑌚𑍍𑌚 𑌤𑌦𑍍𑌦𑌿𑌵𑍍𑌯𑌮𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌰𑍂𑌪𑌂 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌾𑌚𑍍𑌚 𑌤𑌤𑍍𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌤𑌰𑌂 𑌵𑌿𑌭𑌾𑌤𑌿।
𑌦𑍂𑌰𑌾𑌤𑍍𑌸𑍁𑌦𑍂𑌰𑍇 𑌤𑌦𑌿𑌹𑌾𑌨𑍍𑌤𑌿𑌕𑍇 𑌚 𑌪𑌶𑍍𑌯𑌤𑍍𑌸𑍍𑌵𑌿𑌹𑍈𑌵 𑌨𑌿𑌹𑌿𑌤𑌂 𑌗𑍁𑌹𑌾𑌯𑌾𑌮𑍍॥

௭. బృహచ్చతద్దివ్యమచిన్త్యరూపంసూక్ష్మాచ్చతత్సూక్ష్మతరంవిభాతి।
దూరాత్సుదూరేతదిహాన్తికేచపశ్యత్స్విహైవనిహితంగుహాయామ్॥

(ப-ம்.) 𑌤𑌤𑍍 - அந்தப்ரம்மமானது, 𑌬𑍃𑌹𑌤𑍍 - பெரியது, 𑌦𑌿𑌵𑍍𑌯𑌮𑍍- ப்ரகாசிப்பது, 𑌅𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌰𑍂𑌪𑌮𑍍 - சிந்திக்கமுடியாதரூபத்தையுடையது, 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌾𑌤𑍍𑌚 - ஸூக்ஷ்மவஸ்துவைக் காட்டிலும், 𑌤𑌤𑍍 - அந்தப்ரம்மமானது, 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌤𑌰𑌮𑍍 - மிகவும் ஸூக்ஷ்மமாய், 𑌵𑌿𑌭𑌾𑌤𑌿-விளங்குகின்றது. 𑌤𑌤𑍍 அந்தப்ரம்மமானது, 𑌦𑍂𑌰𑌾𑌤𑍍 - தூரத்திலும், 𑌸𑍁𑌦𑍂𑌰𑍇 - மிகவும்தூரத்தி

யிருக்கின்றது. தத் - அந்தப்ரம்மமானது, இஹாந்திகே ச - இங்குஸமீபத்திலுமிருக்கின்றது. பஶ்யத்ஸு - ஜ்ஞாநிகளுக்காயின், இஹைவ குஹாயாம் - இந்தஹ்ருதயகுஹையிலேயே, நிஹிதம் - வைக்கப்பட்டிருக்கிறது.

ஸம்-ஹா. எங்கும் வ்யாபித்திருப்பதால் பெரிதாய், ஸ்வயம் ப்ரகாசமாய் அது பற்றியே இந்திரியங்களுக்குப் புலப்படாததாய் ஆகையாலே இவ்வாறென்று சிந்திக்க முடியாததாய் ஸூக்ஷ்மமாகிய ஆகாயத்திலும் ஸர்வகாரணமாகையாலே நிரதிசய ஸூக்ஷ்மமாய், நாநாரூபமாய் ஸூரியசந்திரரூபமாய் விளங்குகின்றதாய், அஜ்ஞரானலடையப் படாமையா லவர்களுக்கு மிகவும் தூரத்திலிருப்பதாய், ஜ்ஞாநிகளுக்கு அடையக் கூடியதாகையா லவர்களுக்கு ஸமீபத்திலிருப்பதாய், இங்குஹ்ருதயத்தில் காண்கிறவர்களுக்கு அவ்விடத்திலே யிருப்பதாய் அவித்யையினு லனைவராலும் காணப்படாததா யிருக்கிறது பரப்ரம்மம்.

ரா-ஹா. அர்ச்சிராதிமார்க்கத்தா லடையக்கூடிய ப்ரம்மத்தின் விசேஷங்களைச் சொல்லுகிறது. அது ஸ்வரூபத்தாலும் குணத்தாலும் பெரியது. பரமாகாசத்திலிருப்பது. வாக்குக்கும் மநஸ்ஸுக்கு மெட்டாததாய் ப்ரகாசமாய் விளங்குகிற திருமேனியையுடையது. எல்லா அசேதநங்களுக்குள்ளும் புகுகிற ஸூக்ஷ்மமுடைய ஜீவாத்மாவிலும் அந்த ஜீவாத்மாவுக்குள்ளும் புகுகிறபடியால் மிகச் சூக்ஷ்மமானது. அது ப்ரக்ருதி மண்டலத்திற் கப்புறத்திலிருக்கிற பரமபதத்திருப்பதால் மிகவும் தூரத்திலிருப்பது. இந்த ப்ரக்ருதிக்குள் ஸூர்யமண்டலத்திற் குள்ளிருப்பதால் ஸமீபத்திலிருப்பது. அந்தக்கரணத்திலும் ப்ரகாசிப்பது யோகிகளுக்கு.

௮. ந சக்ஷுஷா க்ருஹ்யதே நாபி வாசா நாந்யைர்தேவைஸ்தபஸா கர்மணா வா | ஜ்ஞாநப்ரஸாதேந விஶுத்தஸத்த்வஸ்ததஸ்து தம் பஶ்யதே நிஷ்கலம் த்யாயமாந꞉ ||

౮. న చక్షుషా గృహ్యతే నాపి వాచా నాన్యైర్దేవైస్తపసా కర్మణా వా।
జ్ఞానప్రసాదేన విశుద్ధసత్త్వస్తతస్తు తం పశ్యతే నిష్కలం ధ్యాయమానః॥

(ப-ம்.) (இந்தபரமபுருஷன்,) சக்ஷுஷா - கண்களினால், ந க்ருஹ்யதே - காணப்படுகிறதில்லை. வாசா - வாக்கினால், ந அபி -சொல்லப்படுவதுமில்லை. அந்யைர்தேவை꞉ - மற்ற இந்திரியங்களினாலும், ந - கிரக்கப்படுவதில்லை. தபஸா - தபஸ்ஸினாலாவது, கர்மணா வா - கருமத்தினாலாவது (அடையப்படுமவனல்லன்) ஜ்ஞாநப்ரஸாதேந-பரமாத்மாநுக்கிரகத்தினால், விஶுத்தஸத்த்வ꞉ - அந்தக்கரணசுத்தி யுண்டாகிறது. தத꞉ - பின்பு, த்யாயமாந꞉ - த்யாநம்செய்யானின்றுகொண்டு, நிஷ்கலம் - அவயவங்களில்லாதவனாயிருக்கிற, தம் - அந்த பரமபுருஷனை, பஶ்யதே - காண்கிறான்.

ஸம்-ஹா. இன்னமுமந்த பரமாத்மாவை ஸாக்ஷாத்கரிக்குமிடம் சொல்லப்படுகிறது: ரூபமில்லாமையால் கண்ணால் பார்க்கப்படாது. சொல்லப்படாமையால் வாக்குக்கு விஷயமல்ல. மற்றவைகளுக்கும் ஸாக்ஷாத்கார சக்தியில்லை. தபஸ்ஸும் கருமாநுஷ்டாநமும் மற்ற பலங்களுக்கு ஸாதநமாகையால் சிறந்ததாய் மற்ற பலங்களைக் கொடுக்குமாயினும் ஆத்ம ஸாக்ஷாத்காரத்திற்குக் காரணங்களல்ல. ஜ்ஞாநமே யதற்கு

ஸாதநமானது. எல்லா ப்ராணிகளுக்கு மிந்த ஜ்ஞாநமுண்டாயினும் ராகம் த்வேஷம் முதலியவற்றால் பாஹ்யவிஷயங்களை க்ரஹித்துக்கொண்டு சலங்கி யசுத்தமாயிருப்பதால் ஆத்மஸ்வரூபம் அதிஸமீபத்தில் நித்யமாயிருந்தாலு மதைக்காட்ட சக்தியில்லாததாயிருக்கின்றது. கண்ணாடியானது அழுக்கடைந்திருக்குமாயின் அது ஸூக்ஷ்மவஸ்துக்களைக் காட்டாதன்றே; கலங்கிய தண்ணீரும் கலக்கம்தெளிந்த பின்னன்றே பொருளைக் காட்டுவது. அப்படிபோலவே இந்த ஜ்ஞாநமும் இந்திரயத்திற்கும். பொருள்விஷயத்திலுண்டான ராகம் த்வேஷமுதலிய அழுக்கினால் விடுபட்டு எப்போது, ஸ்வச்சமாய் விளங்குமோ; அப்போது தெளிந்திருப்பதால் ஆத்மஸாக்ஷாத்காரத்திற்குக் காரணமாகின்றது. ஆகையால் அவ்வாறு தெளிந்த ஜ்ஞாநமுடையவர் த்யாநம்செய்து நிரவயவனான பரமாத்மாவைப் பார்க்கிறார்கள் அப்படி தெளியாதவர் காண்பதில்லை.

பதாந்வயார்த்தபேதங்கள்.

ஜ்ஞாநசப்தம் பரமாத்மபரமாக இராமாநுஜபாஷ்யத்தில் வ்யாக்யாநம் செய்யப்பட்டது. ஆகவே பரமாத்மாநுக்கிரகத்தினால் தெளிந்த சிந்தையர் அவனைக் காண்கிறார்கள் என்று பொருளுரைக்கப்பட்டது.

௯. 𑌏𑌷𑍋𑌽𑌣𑍁𑌰𑌾𑌤𑍍𑌮𑌾 𑌚𑍇𑌤𑌸𑌾 𑌵𑍇𑌦𑌿𑌤𑌵𑍍𑌯𑍋 𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌪𑍍𑌰𑌾𑌣𑌃 𑌪𑌞𑍍𑌚𑌧𑌾 𑌸𑌂𑌵𑌿𑌵𑍇𑌶 । 𑌪𑍍𑌰𑌾𑌣𑍈𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌸𑌰𑍍𑌵𑌮𑍋𑌤𑌂 𑌪𑍍𑌰𑌜𑌾𑌨𑌾𑌂 𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑍇 𑌵𑌿𑌭𑌵𑌤𑍍𑌯𑍇𑌷 𑌆𑌤𑍍𑌮𑌾 ॥

౯. ఏషో௨ణురాత్మా చేతసా వేదితవ్యో యస్మిన్ ప్రాణః పంచధా సంవివేశ ।
ప్రాణైశ్చిత్తం సర్వమోతం ప్రజానాం యస్మిన్ విశుద్ధే విభవత్యేష ఆత్మా ॥

(ப-ம்.) 𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 - யாதொரு பரமாத்மாவினிடத்தில், 𑌪𑌞𑍍𑌚𑌧𑌾 - அஞ்சுப்ரகாரமாயிருக்கிற, 𑌪𑍍𑌰𑌾𑌣𑌃 - ப்ராணவாயுவானது, 𑌸𑌂𑌵𑌿𑌵𑍇𑌶 - நிலைபெற்றிருக்கின்றதோ; 𑌪𑍍𑌰𑌾𑌣𑍈𑌃 - இந்திரியங்களோடு, 𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 - மநஸ்ஸும், 𑌪𑍍𑌰𑌜𑌾𑌨𑌾𑌂 - ப்ரஜைகளினுடைய, 𑌸𑌰𑍍𑌵𑌂 - ஸமஸ்தமும், 𑌓𑌤𑌂 - வைக்கப்பட்டிருக்கிறதோ; 𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 - யாதொரு பரமாத்மாவானவன், 𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑍇 - அநுக்ரஹமுடையவனானால், 𑌏𑌷𑌃 𑌆𑌤𑍍𑌮𑌾 - இந்த ஜீவாத்மா, 𑌵𑌿𑌭𑌵𑌤𑌿 - முக்திபெறுகிறானோ; அப்படிப்பட்டவனாய், 𑌅𑌣𑍁𑌃 - அறியக்கூடாதவனாயிருக்கிற, 𑌏𑌷𑌃 - இந்த பரமபுருஷன், 𑌚𑍇𑌤𑌸𑌾 - பரிசுத்தமநஸ்ஸினாலே, 𑌵𑍇𑌦𑌿𑌤𑌵𑍍𑌯𑌃 - அறியத்தக்கவன்.

௯0-ஹா. பஞ்சப்ராணங்களுடைய சரீரத்தில் ஸகலேந்திரியங்களிலும் ப்ரஜைகளுக்கு முக்யமான சித்தம்முதலிய பேதங்களுடைய மநஸ்ஸினாலே பரமாத்மா அறியப்படுவன். எந்தமநஸ்ஸு சுத்தமானால் இந்த பரமாத்மாதானே விளங்குகிறானே.

௱-ஹா. எந்த பரமாத்மாநுக்ரஹத்தினா லிந்த ஜீவாத்மா முக்தனாகிறானே; அந்த பரமாத்மாநுக்ரஹத்தினால் அறியக்கூடாதவனா யிருந்தாலும் சுத்தமான மநஸ்ஸையுடையவனா யிருக்கிற இந்த ஜீவாத்மாவினாலே யறியப்படுகிறான்.

௧0. 𑌯𑌂 𑌯𑌂 𑌲𑍋𑌕𑌂 𑌮𑌨𑌸𑌾 𑌸𑌂𑌵𑌿𑌭𑌾𑌤𑌿 𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌃 𑌕𑌾𑌮𑌯𑌤𑍇 𑌯𑌾𑌂𑌶𑍍𑌚 𑌕𑌾𑌮𑌾𑌨𑍍 । 𑌤𑌂 𑌤𑌂 𑌲𑍋𑌕𑌂 𑌜𑌯𑌤𑍇 𑌤𑌾𑌂𑌶𑍍𑌚 𑌕𑌾𑌮𑌾𑌂𑌸𑍍𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑌾𑌤𑍍𑌮𑌜𑍍𑌞𑌂 𑌹𑍍𑌯𑌰𑍍𑌚𑌯𑍇𑌦𑍍𑌭𑍂𑌤𑌿𑌕𑌾𑌮𑌃 ॥

౧౦. యం యం లోకం మనసా సంవిభాతి విశుద్ధసత్త్వః కామయతే యాంశ్చ కామాన్।
తం తం లోకం జయతే తాంశ్చ కామాంస్తస్మాదాత్మజ్ఞం హ్యర్చయేద్భూతికామః॥

(ப-ம்.) விஶுத்தஸத்த்வ: - ஆத்ம ஸ்வரூபத்தையறிந்தவன், யம்யம்லோகம் - எந்தஎந்த லோகத்தை, மனஸா - மனஸ்ஸினால், ஸம்விபாதி - ஸங்கல்பிக்கிறானோ, யாம்ஶ்ச காமாந் - எந்த இஷ்டங்களை, காமயதே - விரும்புகிறானோ; தம்தம்லோகம் - அந்தந்த லோகங்களையும், தாம்ஶ்ச காமாந் - அந்த இஷ்டங்களையும், ஜயதே - ஜயிக்கிறான், தஸ்மாத் - ஆகையால், பூதிகாம: - ஸம்பத்தை விரும்பினவன், ஆத்மஜ்ஞம் ஹி - ஆத்மஸ்வரூபத்தை யறிந்தவனை, அர்ச்சயேத் - பூஜிக்கக்கடவன்.

ஶ0-ஸா. கீழ்ச்சொல்லியபடி ஸர்வாந்தராத்மாவாகிய பரமாத்மாவைதானேயென்றறிந்தவன், மனஸ்ஸினால் எந்தலோகங்களை ஸங்கல்பித்தாலும் எந்தலோகங்களை விரும்பினாலும் அதைஎல்லாம் பெறுகிறான். ஸர்வத்திற்கு மாத்மாவாகையால் ஸர்வத்தையு மடைந்தவனாகிறானன்றோ; ஆகையால் தனக்காயினும் பிறர்க்காயினும் எந்த இஷ்டத்தை விரும்பினாலு மந்த இஷ்டத்தைத் தானும்பெற்று பிறரும் பெறும்படி செய்யவல்லவன். ஆகையால் மங்களத்தை யாசைப்பட்டவன் அந்த ஜ்ஞாநியை சுச்ரூஷைகளினால் பூஜிக்கக்கடவன்.

ரா-ஸா. தனக்கும் தன் பக்தருக்கும் நினைத்த இஷ்டங்களை யநுபவிக்கவும் தரவும் வல்லவனாகிறானாகையால் ஜ்ஞாநி, ஸம்பத்தை விரும்பிய புருஷனால் இவன் நம்முடைய சுச்ரூஷை முதலியவற்றால் அநுக்ரகித்து நமக்குவேண்டிய வரங்களைத் தருவனென்று பக்தியுடன் பூஜிக்கத்தக்கவன்.

இதி த்ருதீயமுண்டகே ப்ரதமகண்ட:.

அத த்ருதீயமுண்டகே த்விதீயகண்ட:.

க. ஸ வேதைதத்பரமம் ப்ரஹ்ம தாம யத்ர விஶ்வம் நிஹிதம் பாதி ஶுப்ரம் । உபாஸதே புருஷம் யே ஹ்யகாமாஸ்தே ஶுக்ரமேதததிவர்த்தந்தி தீரா: ॥

౧. స వేదైతత్పరమం బ్రహ్మ ధామ యత్ర విశ్వం నిహితం భాతి శుభ్రమ్।
ఉపాసతే పురుషం యే హ్యకామాస్తే శుక్రమేతదతివర్తంతి ధీరాః॥

(ப-ம்.) யத்ர - எந்த ப்ரம்மத்தினிடத்தில், நிஹிதம் - வைக்கப்பட்டிருக்கிற, விஶ்வம் - ஸமஸ்தமும், ஶுப்ரம் - ப்ரகாசமாய், பாதி - விளங்குகின்றதோ; ஏதத்பரமம்ப்ரஹ்ம - இப்படிப்பட்ட பரப்ரம்மஸ்வரூபமாயிருக்கிற, தாம - உத்தம ப்ராப்யத்தை, ஸ: - அந்த பக்தன், வேத - அறிந்தவன், ஆகையால், புருஷம் - அந்தபக்தனானபுருஷனை, அகாமா: - வேறு பலத்தில் விருப்பமில்லாதவர்களாய், யே - எந்த முமுக்ஷுக்கள், உபாஸதே - உபாஸிக்கிறார்களோ, தே தீரா: - அந்தமுமுக்ஷுக்கள், ஏதத் ஶுக்ரம் - இந்த சரமதாதுவை, அதிவர்த்தந்தி - அதிக்ரமிக்கிறார்கள்.

ஸ௦-ஸா. ரா-ஸா. பக்தன் ப்ரம்மத்தை யறிந்தவனுகையால் அவனைப் பூசிப்பவர் அவனடைகிற பரமபதத்தை யடைகிருர்கள். ஆகையால் ப்ரம்மவித்தைப் பூசிப்பது மோக்ஷத்தை யடைவதற்குக் காரணம்.

௨. காமாந்ய꞉ காமயதே மந்யமாந꞉ ஸ காமபிர்ஜாயதே தத்ர தத்ர।
பர்யாப்தகாமஸ்ய க்ருதாத்மநஸ்து இஹைவ ஸர்வே ப்ரவிலீயந்தி காமா꞉॥

౨. కామాన్ యః కామయతే మన్యమానః స కామభిర్జాయతే తత్ర తత్ర।
పర్యాప్తకామస్య కృతాత్మనస్తు ఇహైవ సర్వే ప్రవిలీయంతి కామాః॥

(ப்-ம.) ய꞉ - எவன், காமாந் - காமங்களை, மந்யமாந꞉ - போக்யமா யெண்ணிக்கொண்டு, காமயதே - விரும்புகிருனே; ஸ꞉ - அவன், தத்ர தத்ர - அந்தந்த விடங்களில், காமபி꞉ - காமங்களினுல், ஜாயதே - பிறக்கிருன் பர்யாப்தகாமஸ்ய - ப்ரம்மத்தினிடத்தில்காமத்தையுடைய, க்ருதாத்மந꞉ து - ஆத்மவித்துக்கு, இஹைவ - இவ்விடத்திலேயே, ஸர்வே காமா꞉ - எல்லாக்காமங்களும், ப்ரவிலீயந்தி - ஒழிந்துபோகின்றன.

ஸ௦-ஸா. முமுக்ஷுவுக்கு காமம் நீங்குவது முக்யமென்று சொல்லுகிறது. எவன் இவ்வுலகத்திலும சுவர்க்காதி லோகாந்தரங்களிலும் இஷ்டங்களை விரும்புகிருனே; அவைகளில் குணத்தைக் கிரகித்துக்கொண்டு அவைகளிலே சிந்தை வைக்கிருனே; அவன், அந்தந்த தேசங்களை யடைவிக்கிற கருமங்களில் புருஷனுக்கு ப்ரவ்ருத்தியை யுண்டாக்குகிற காமங்களோடு அந்தந்த தேசங்களிலுண்டாகிருன். யவன் பரமார்த்த தத்வத்தை யறிந்ததினுல் ஆத்மஸ்வரூபத்தைவேண்டி யடையப்பட்டவைகளில் போல ஆசைநீங்கி அவித்யை கழிந்த பரஸ்வரூபத்தைப்பெறுகிருனே; அவனுக்கு இந்த சரீர மிருக்கும்போதே ஸகல காமங்களிலு மாசைகழிந்து போகையால் ஜந்மாந்தரமில்லை. அப்படிப்பட்ட ஆத்ம ஸ்வரூப ஜ்ஞாநத்தால் ஜந்மாந்தரகாரணங் கழிந்துபோகையால் ஜந்மாந்தர காரணங்களான ஆசைகளு முண்டாகிறதில்லை என்று கருத்து.

ரா-ஸா. தேவமநுஷ்யாதி சரீரங்களை போக்யமாக எண்ணி யாசைப்படுகிறவன் அந்த காரணத்தா லவ்வாறே தேவஜாதியாகவும் மநுஷ்யஜாதியாகவும் பிறக்கிருன். ஆத்ம ஸ்வரூபத்தையறிந்து ப்ரம்மத்தை விரும்புகிறவனுக்கு ஸகல காமங்களு மழிந்து போகையால் ஜந்மாந்தரமில்லை.

௩. நாயமாத்மா ப்ரவசநேந லப்யோ ந மேதயா ந பஹுநா ஶ்ருதேந। யமேவைஷ வ்ருணுதே தேந லப்யஸ்தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம்॥

3. నాయమాత్మా ప్రవచనేన లభ్యో న మేధయా న బహునా శ్రుతేన।
యమేవైష వృణుతే తేన లభ్యస్తస్యైష ఆత్మా వివృణుతే తనూం స్వామ్॥

(ப்-ம.) அயம் - இந்த, ஆத்மா - பரமாத்மாவானவன், ப்ரவசநேந - மநநத்தினுலும், மேதயா - நிதித்யாஸநத்தாலும், பஹுநா - அதிகமான, ஶ்ருதேந - ச்ரவணத்தினுலும், ந லப்ய꞉ - அடையக்கூடியவனன்று. ஏஷ꞉ - இந்தபரமாத்மா, யமேவ - எவனை, வ்ருணுதே - வரிக்கிருனே;

தேந - அந்தபுருஷனால், லப்ய: - அடையத்தக்கவன். தஸ்ய - அந்த புருஷனுக்கு, ஏஷ ஆத்மா - இந்த பரமாத்மா, ஸ்வாம் தநூம் - ஸ்வஸ்வரூபத்தை, விவ்ருணுதே - காட்டுகிறான்.

ஸo-ஹா. ஸகல லாபங்களிலு மாத்மலாபம் சிறந்ததாயினும் கீழ்சொல்லப்பட்ட அந்த ஆத்ம ஸ்வரூபலாபம் புருஷார்த்தமாயினு மந்த ஆத்ம ஸ்வரூபத்தை யடைவதற்கு ப்ரவசநம்முதலிய பல ஸாதநங்கள் வேண்டுமோ; என்கிற ஸந்தேஹம் நீங்கச் சொல்லுகிறது. இவ்வாத்மா வேதசாஸத்ரங்களை விசேஷமாயோதி ப்ரவசநம் செய்கையாலும், கிரந்தங்களி னர்த்தங்களை தரித்துக்கொண்டிருக்கிற மேதையினாலும், அதிகமான சிரவணத்தாலும் அடையக் கூடியவனன்று. எப்போது மடையப்பட்ட ஸ்வபாவத்தை யுடையவனாகையால், அவனை யாசைப்பட்டுப் பெற விரும்பினமாத்திரத்தாலேயே யடையப்படுவான். அவனுக்கு அவித்யை நீங்கியபடியால் வெளிச்சத்தில் வஸ்துக்கள் தந்தம் ஸ்வரூபத்தைக் காட்டுவதுபோல ஜ்ஞாந ஸ்வரூபத்தில் ப்ரம்மாபேத ஸ்வரூபத்தை இந்த ஆத்மா காட்டுகிறது.

ரா-ஹா. கேவலம் ச்ரவணம், மநநம், நிதித்யாஸநம், இவைகளா லர்த பரமாத்மா அடையப்படமாட்டான், இந்த பரமாத்மா எந்த புருஷனை விரும்புகிறானோ அவனாலே யடையப்படுவான், அப்படி தன்னால் வரிக்கப்படுகிற, புருஷனுக்கு தன்னுடைய கல்யாணகுணங்களோடுகூடிய ஸ்வரூபத்தை பரமாத்மாகாட்டுகிறான். பரமாத்மாவினிடத்தில் மிகவும் விருப்பமுடையவனாய் ச்ரவணம் முதலியவை செய்தால் பரமாத்மாநுக்ரக முண்டாமேயன்றி வெறும் ச்ரவணாதிகள் பயனற்றவையாமென்று கருத்து. பரமாத்மா இந்த புருஷனை விரும்பும்போது தன்னிடத்தி லிந்த புருஷனுக்குள்ள அன்பே காரணம். தன்னிடத்தி லன்புடையோனைத் தான் விரும்புவது ப்ரஸித்தமேயன்றோ. ஆனதினால் பரமாத்மா, தன்னிடத்தி லன்பிலாதானைத் தான் விரும்பான். ஆக, ப்ரீதியோடுகூடி பரமாத்மாவை யுபாஸிக்கிறவன் அந்த பரமாத்மாவின் ப்ரீதிக்கிலக்காய் பரமபதத்தை யடைந்து பரிபூர்ணபர ப்ரம்மாநுபவத்தைப் பெறுவனென்றவாறு.

பதாந்வயார்த்தபேதங்கள்.

சங்கரபாஷ்யத்தில், தேந, என்பதற்கு, பரமாத்மாவை வரிப்பதினாலென்று பொருளுரைக்கப்பட்டது. அப்போது 'யம், என்றதற்கு பரமாத்மாவை, என்று பொருள் கொண்டமையால், யச்சப்தத்திற்கும், தச்சப்தத்திற்கும் பொருள் பேதப்படுகிறது. அது 'யத்ததோர் நித்யஸம்பந்த:, என்கிற ந்யாயத்திற்கு விரோதமானதாகிலும், ஜீவாத்ம பரமாத்மாக்களுக்கு அபேதம் சொல்லும்போது அவ்வாறே பொருள் கொள்ளவேண்டி வருகையாலப்படி வ்யாக்யாநம் செய்யப்பட்டது. ச்ரவணம் மநநம் நிதித்யாஸநம் இவைகளின் ஸ்வரூபம், முன் சொல்லப்பட்டிருக்கிறது. மற்றவை பத உரைக் கிணங்க இராமாநுஜபாஷ்யத்தில் காண்க.

௪. நாயமாத்மா பலஹீநேந லப்யோ ந ச ப்ரமாதாத்தபஸோ வாப்யலிங்காத் । ஏதைருபாயைர்யததே யஸ்து வித்வாந் தஸ்யைஷ ஆத்மா விசதே ப்ரஹ்மதாம ॥

௪. నాయమాత్మా బలహీనేన లభ్యో న చ ప్రమాదాత్తపసో వాప్యలింగాత్ ।
ఏతైరుపాయైర్యతతే యస్తు విద్వాంస్తస్యైష ఆత్మా విశతే బ్రహ్మధామ ॥

(ப-ம்.) அயமாத்மா - இந்த பரமாத்மாவானவன், பலஹீநேந - பலமில்லாதவனால், ந லப்ய: - அடையக்கூடியவனன்று. ப்ரமாதாத் - அவதாநமில்லாமல், ந - அடையக்கூடியவனன்று. அலிங்காத் - லிங்கமில்லாத, தபஸ: - ஆச்ரமத்தினாலும், ந - பெறத்தக்கவனுகான். ய: து - வித்வாந் - எந்த உபாஸகன், ஏதை: உபாயை: - இந்த உபாயங்களோடு, யததே - யத்நம் செய்கிறானோ; தஸ்ய - அவனுக்கு, ஏஷ: ஆத்மா ப்ரஹ்மதாம - அந்தர்யாமியாய் ப்ராப்யமாயிருக்கிற இந்த ப்ரம்மஸ்வரூபம், விசதே - லபிக்கிறது.

ச-பா. ஆத்ம ஸ்வரூபத்தை விரும்புகிறதற்கு ஸஹாயங்க ளிவையென்று சொல்லுகிறது. பலமும், அவதாநமும், தபஸ்ஸும், லிங்கமும் அதற்கு ஸாதநங்கள். இவை இல்லாதவனு லாத்மஸ்வரூப மடையப்படாது. பலமாவது ஆத்மநிஷ்டையினால் வந்த ஸாமர்த்த்யம். அவதாநமாவது பசுபுத்திரன் முதலியவற்றி லாசையில்லாமை. தபஸ்ஸாவது - ஜ்ஞாநம். லிங்கமாவது ஸந்யாஸம்.

ரா-பா. பலமாவது - தைந்யமில்லாமை, தைந்யமாவது - காலதேசங்கள் அநுகூலப்படாமையால் வந்த மநக்கலக்கம். அவதாநமாவது செய்யவேண்டிய விஷயங்களில் ஏமாராமை. லிங்கமாவது அந்தந்த ஆச்ரமங்களுக்கு வேண்டிய அடையாளங்கள். தபஸ்ஸாவது - ஸந்யாஸாச்ரமம். ஆயினும், இவ்விடத்தில் எல்லா ஆச்ரமங்களையும் குறிக்கின்றது. எல்லா ஆச்ரமஸ்தரும் ப்ரம்மவித்யையி லதிகாரமுடையவரென்று சொல்லப்படுகையா லென்றறிக. இதில் ஸந்யாஸாச்ரமத்திற் கடையாளங்கள் சிகை, யஜ்ஞோபவீதம் கமண்டலு ஜலபவித்ரம் முதலியவை. இப்படி எல்லா ஆச்ரமங்களுக்கு மறிக. ஆக இதற்குத் திரண்டபொருளாவது பலம் அவதாநம், லிங்கத்தோடு கூடிய ஆச்ரமம் இவைகள் ப்ரம்ம ப்ராப்திக்கு ஸஹாயங்கள். இவை இன்றி ப்ரம்மத்தை யடையான். அவ்வோ ஆச்ரமங்களுக்கு விதித்த அடையாளங்களும், முக்யமானவை.

பதாந்வயார்த்தபேதங்கள்.

சங்கர ராமாநுஜ பாஷ்யங்களுக்குள்ள பதார்த்தபேதம் கருத்தில்பேதம் இவைகள் ஸ்புடமாயிருக்கின்றன.

ரு. ஸம்ப்ராப்யைநம்ருஷயோ ஜ்ஞாநத்ருப்தா: க்ருதாத்மாநோ வீதராகா: ப்ரசாந்தா:। தே ஸர்வகம் ஸர்வத: ப்ராப்ய தீரா யுக்தாத்மாந: ஸர்வமேவாவிசந்தி॥

౫. సంప్రాప్యైనమృషయో జ్ఞానతృప్తాః కృతాత్మానో వీతరాగాః ప్రశాంతాః।
తే సర్వగం సర్వతః ప్రాప్య ధీరా యుక్తాత్మానః సర్వమేవావిశంతి॥

(ப-ம்) ருஷய: - தத்வத்தை யறிந்தவர்கள், ஏநம் - இந்த பரமாத்மாவை, ஸம்ப்ராப்ய - அநுபவித்து, ஜ்ஞாநத்ருப்தா: - அநுபவத்தாலே த்ருப்தி யடைந்தவர்களாய், க்ருதாத்மாந: - ஸத்தைபெற்றவர்களாய், வீதராகா: - விஷயங்களிலாசை நீங்கியவர்களாய், ப்ரசாந்தா: - சாந்தகுண முடையவர்களாய், (யே - எவர்கள், ஸந்தி - இருக்கிறார்களோ;) தே - அவர்கள்,

𑌸𑌰𑍍𑌵𑌤𑌃 𑌸𑌰𑍍𑌵𑌗𑌂 - எல்லாவஸ்துக்களிலு மெங்கும் நிறைந்திருக்கிற பரமாத்மாவை, 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 - பரமபதத்தில் ஸேவிக்கப்பெற்று, 𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌃 - ஸ்வரூபாவிர்ப்பாவம்பெற்றவர்களாய், 𑌸𑌰𑍍𑌵𑌮𑍇𑌵 - எல்லாசுகங்களையும், 𑌆𑌵𑌿𑌶𑌨𑍍𑌤𑌿 - அடைகிறார்கள்.

ஶ0-ஸா. உபாதி நீங்கிய ப்ரம்ம ஸ்வரூபத்தை யறிந்தவர், இதர விஷயங்களில் நசையற்றவராய் குடமுடைந்தபின் குடத்தால் வரைந்து கொள்ளப்பட்டிருந்த ஆகாசம் உபாதிநீங்கி யாகாசமே யாவதுபோல தேஹோபாதி நீங்கி பரமாத்மாவே யாகின்றார் கள். இது ஜீவனுக்கும் ப்ரம்மத்துக்கும் அபேதத்தை யறிந்ததற்குப் பயனாகும். இவ்வாறே ப்ரம்மத்தை யறிந்தவர் ப்ரம்மஸ்தாநத்தை யடைகிறார்கள்,

ரா-ஸா. தத்வத்தை யறிந்தவர் ஜீவதசையிலேயே த்யாநமாஹாத்ம்யத்தால் பரமாத்மாவை யநுபவித்து அவ்வநுபவத்தால் மகிழ்ந்த நெஞ்சினையுடையராய், ஸத்தை பெற்று விஷயங்களி லாசைநீங்கி, இந்த்ரிய ஜயம்பெற்றவராகி உள்ளும் வெளியு மெல்லா வஸ்துக்களிலும் பூர்ணனான பரமாத்மாவை பரமபதத்தில் ஸேவிக்கப்பெற்று அபஹதபாப்மத்வம் முதலிய குணங்கள் வெளியாகி தருமபூதஜ்ஞாநத்தால் எல்லாவற்றையு மநுபவிக்கிறார்கள்.

சு. 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍁𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌾𑌰𑍍𑌥𑌾𑌃 𑌸𑌨𑍍𑌨𑍍𑌯𑌾𑌸𑌯𑍋𑌗𑌾𑌦𑍍𑌯𑌤𑌯𑌃 𑌶𑍁𑌦𑍍𑌧𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌃 । 𑌤𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌲𑍋𑌕𑍇𑌷𑍁 𑌪𑌰𑌾𑌨𑍍𑌤𑌕𑌾𑌲𑍇 𑌪𑌰𑌾𑌮𑍃𑌤𑌾𑌃 𑌪𑌰𑌿𑌮𑍁𑌚𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑍇 ॥

௬. వేదాంతవిజ్ఞానసునిశ్చితార్థాః సన్న్యాసయోగాద్యతయశ్శుద్ధసత్త్వాః।
తేబ్రహ్మలోకేషుపరాన్తకాలేపరామృతాఃపరిముచ్యంతిసర్వే॥

(ப-ம்.) 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍁𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌾𑌰𑍍𑌥𑌾𑌃 - வேதாந்தங்களை நன்குணர்ந்தமையால் தத்வார்த்தங்களை நிச்சயித்தவராய், 𑌸𑌨𑍍𑌨𑍍𑌯𑌾𑌸𑌯𑍋𑌗𑌾𑌤𑍍 - காம்யகருமங்களை விட்டபடியால், 𑌶𑍁𑌦𑍍𑌧𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌃 - தெளிந்தநெஞ்சையுடையராய், 𑌯𑌤𑌯𑌃 - இந்திரியங்களை ஜயித்தவராயிருக்கிற, 𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑍇 - அந்த எல்லாஉபாஸகர்களும், 𑌪𑌰𑌾𑌨𑍍𑌤𑌕𑌾𑌲𑍇 - கடைசியாய் சரீரம்போருங்காலத்தில், 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌲𑍋𑌕𑍇𑌷𑍁 - ப்ரம்மலோகங்களில், 𑌪𑌰𑌾𑌮𑍃𑌤𑌾𑌃 - ப்ரம்மத்தையடைகிறவர்களாய், 𑌪𑌰𑌿𑌮𑍁𑌚𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 - விடுபடுகிறார்கள்.

ஶ0-ஸா. வேதாந்தப்பொருளை நன்குணர்ந்தவராய், (வேதாந்தப்பொருளாவது - ப்ரம்ம மறியத்தக்கது, என்பதாம்.) இந்த நிச்சயம் பிறந்தவராய், கருமங்களெல்லாவற்றையும் விடுகையாகிற யோகத்தால் நெஞ்சு தெளிந்தவராய், கேவலப்ரம்ம நிஷ்டராய், யத்நம் செய்கிறவர்களாயிருக்கிற ஜ்ஞாநிகள், (ஸம்ஸாரிகள் மரணமடையுங் காலத்திற்கு அபராந்தமென்று பெயர். முமுக்ஷுக்கள் ஸம்ஸாரஸம் பந்தமற்று மரணத்தையடையுங் காலத்திற்கு பராந்தமென்று பெயர்.) பராந்த காலமென்கிற மரணகாலத்தில், ப்ரம்மமாகிற உலகங்களில், (ப்ரம்ம மொன்றேயாயினும் உபாஸகர் பலராகையால், அநேகம் போல் காணப்படுதலால் பன்மையாலுரைக்கப்பட்டது. ப்ரம்மஸ்வரூபத்தி லென்று பொருள்) அந்த ப்ரம்மத்திலே மரண தர்மமில்லாத ப்ரம்மாத்ம பாவத்தை யடைந்தவராய் கலந்து, ஜீவதசையிலேயே ப்ரம்மமாகியவர்களாய், தீபம் போலவும் கடாகாசம் போலவும் நிர்வாணமடைந்து மாயா ஸம்பந்த முதலியவற்றால் விடுபடுகிறார்கள். வேறொரு

தேசத்தை யடைகிறதில்லை. சுருதி ஸ்ம்ருதிகளில் தேசப்ராப்தி ஸம்ஸார பலமே யென்று சொல்லுகையால் முக்தியாகியது தேசப்ராப்தி யாகாது. ஸமஸ்தஸ்வரூபமான ப்ரம்மத்தில், தேசபரிச்சேதங் கிடையாது. ப்ரம்மம் தேசபரிச்சேத முளதாயின் மற்றவையைப்போ லநித்யமும் மற்றொன்றைப்பற்றியதுமாய் நித்ய ஸுகஸ்வரூபமாகாதன்றே. ஆனதால் ப்ரம்ம ப்ராப்தியாவது தேசத்தைச் சேருவதல்லவென்பது யுக்தம்.

ரா.ஸா.—இந்திரியஜயம் பெற்றவர்களாய் காம்ய கருமங்களைவிட்டவராய் அந்தக்கரணசுத்தி யுடையவராய், ப்ரம்மநிஷ்டர்களாயிருக்கிற எல்லா உபாஸகரும், சரீராவஸான காலத்தில் ப்ரம்மாநுக்ரஹத்தினால், ஸம்ஸாரம் நீங்கி முக்தராகிறார்கள்

பதாந்வயார்த்த பேதங்கள்.

இராமாநுஜ பாஷ்யத்தில் ப்ரம்மலோகேஷு, என்று ஒரு பாடமும், ப்ரம்மலோகேது, என்றொரு பாடமும் காட்டப்பட்டது. பகவானுக்கு அனேக லோகங்களுண்டாகையால், 'லோகேஷு' என்கிற பாடமும் ஸரியானதேயாம். 'லோகேது' என்கிறபாடததில் ப்ராப்யமான ப்ரம்மத்தில் என்று, பொருள் கொள்ளப்பட்டது. மற்றவை இதற்கிசைய யோஜிக்கப்பட்டது.

எ. க³தா꞉ கலா꞉ பஞ்சத³ஶ ப்ரதிஷ்டா²꞉ தே³வாஶ்ச ஸர்வே ப்ரதிதே³வதாஸு । கர்மாணி விஜ்ஞாநமயஶ்ச ஆத்மா பரே(அ)வ்யயே ஸர்வ ஏகீப⁴வந்தி ॥

౭. గతాః కలాః పంచదశ ప్రతిష్ఠా దేవాశ్చ సర్వే ప్రతిదేవతాసు |
కర్మాణి విజ్ఞానమయశ్చ ఆత్మా పరేఽవ్యయే సర్వ ఏకీభవంతి॥

(ப்-ம்.) பஞ்சத³ஶ - பதினைந்தாயிருக்கிற, கலா꞉ - ப்ராணாதிகலைகள், ப்ரதிஷ்டா²꞉ - காரணஸம்பந்தத்தை, க³தா꞉ - அடைகிறதுகள். ஸர்வே தே³வா꞉ ச - எல்லா இந்திரியங்களும், ப்ரதிதே³வதாஸு - அதிஷ்டாநதேவதைகளான ஸூர்யாதி தேவதைகளிடத்தில் ஸம்பந்தத்தை யடைகின்றன, கர்மாணி - கருமங்களும், விஜ்ஞாநமய꞉ - ஜ்ஞாநஸ்வரூபியான, ஆத்மா - ஆத்மாவும், ஸர்வே - எல்லாம், அவ்யயே - அழிவில்லாத, பரே - பரமாத்மாவில், ஏகீப⁴வந்தி - ஒன்றாய்விடுகிறதுகள்.

ஶம்-ஸா. அவித்யை முதலிய ஸம்ஸாரபந்தம் நீங்குவது மோக்ஷமென்று ப்ரம்மவாதிகள் சொல்லுகிறார்கள். காரியமா யிருப்பது மோக்ஷமாகாது. ஆகையால் இவன் மோக்ஷமடையும்போது, இவனுடைய சரீரத்தில் காரணமாய்க் கலந்திருந்த கலைகளென்கிற ப்ராணன் முதலியவை பதினைந்தும், தந்தம் காரணங்களை யடைகின்றன. இந்தகலைகளின் வகை ப்ரச்நோப நிஷத்து விளக்கிற்று. தேஹத்தில் கண்முதலிய விடங்களிலிருந்த இந்திரியங்கள் ஸூரியன் முதலிய தேவதைகளைச் சேருகின்றன. பலனைத் தருவதற்குத் தொடங்கிய கருமங்கள் அநுபவித்தே யொழிக்கத்தக்கவை யாகையாலவை நீங்க, மற்ற கருமங்களும், அவித்யையினால் செய்யப்பட்ட புத்தி முதலிய உபாதிகளை யாத்மாக வெண்ணிக் கொண்டு ஜலம் முதலியவற்றில் ஸூர்ய ப்ரதிபிம்பம் போலிந்த சரீரங்களில் ப்ரவேசித்திருக்கிற ஆத்மாவும், கருமங்களுக்கு இவ்வாத்மா முக்தி தசையில் ஸுகதுக்க ரூபமான பலனை யநுபவிக்கும்படி செய்ய வல்லமை யில்லாமையால், உபாதி நீங்கினபோது, பரமாய், அழிவில்லாததாய், விகாரமில்லாததாய், வ்யாபியாய், ஜந்ம ஜராமரண முதலாகிய துன்பமில்லாததாய், அபயமாய் அபூர்வமாய், சிறந்ததாய்

உள்வெளி பேதமில்லாததாய், சிவமாய் சாந்தமாயிருக்கிற ப்ரமமத்தில் ஒன்றாய்க் கலந்து போகின்றன. தண்ணீர் சோர்ந்தபோது ஸூரிய பிம்பம் போலவும், குடமுடைந்த போது கண்டாகாசம்போலவு மெல்லா மொன்றாய் விடுகின்றன.

ரா-ஸா. முக்தனாகிற ஜீவனுக்கு உபகாரமாக ப்ரச்நோபநிஷத்தில் சொல்லப் பட்ட ப்ராணன் முதல் நாமம் வரையிலுள்ள பதினாறு கலைகளில் கருமம் தவிர்ந்த பதி னைந்தும் தந்தம் காரணங்களில் ஒட்டிப் போகின்றன. வாக்கு முதலிய இந்திரியங்கள் அதிஷ்டாந தேவதைகளாகிய ஸூரியன் முதலியவற்றில், சேருகின்றன. இவ்வளவே யொழிய லயிப்பதில்லை. இந்திரியங்கள் கல்பாந்தம்வரையி லிருப்பவையன்றோ. இது வ்யாஸ ஸூத்திரத்தினால் செவ்வையாய் விளங்கும். இவனுக்கு பயனைக் கொடாதவை யாய், இவன் ப்ரத்யக்ஷம்போல பாவிக்கிற உபாசனையைத் தொடங்கும்போது, நான் பொறுப்பேன், என்று பகவான் சங்கல்பித்தவையான, கருமங்களும், இவ்வாத்மாவும் எல்லாவற்றிற்கும் பரமான பரப்ரம்மத்தில் ஒன்றாய் விடுக்கின்றன. இவற்றுள், கருமம் ப்ரம்மத்தி லொன்றாகையாவது இக்கருமம் பரமாத்மாவின் கோபமே யாகையால், இந்த கோபாவஸ்தை மாறி தருமபூதஜ்ஞாநத்தில் லயிப்பதேயாம். ஜீவன், ப்ரம்மத்தி லொ ன்றாகையாவது நாமரூபமுதலியவற்றால் வருகிற ஆகார பேதம் கழிவது. ஆக, இவ னுக்கு கருமங்கள் நசிக்கின்றமையால், முக்தாத்மாவுக்கு கலைகளென்கிற ப்ராணாதிகள் உபகரணங்களாவதில்லை யென்று கருத்து.

அ. யதா நத்ய: ஸ்யந்தமாநா: ஸமுத்ரே(அ)ஸ்தம் கச்சந்தி நாமரூபே விஹாய | ததா வித்வாந் நாமரூபாத் விமுக்த: பராத்பரம் புருஷமுபைதி திவ்யம் ||

౮. యథా నద్యస్స్యన్దమానాస్సముద్రేऽస్తం గచ్ఛన్తి నామరూపే విహాయ ।
తథా విద్వాన్నామరూపాద్విముక్తః పరాత్పరం పురుషముపైతి దివ్యమ్॥

(ப-ம்.) ஸ்யந்தமாநா: - ப்ரவஹியாநின்ற, நத்ய: - நதிகள், ஸமுத்ரே - ஸமுத்திரத்தில், யதா - எவ்வாறு, நாமரூபே - நாமரூபங்களை, விஹாய - விட்டு, அஸ்தம் கச்சந்தி - ஐக்யத்தை யடைகின்றனவோ; ததா - அவ்வாறே, வித்வாந் - உபாஸகன், நாமரூபாத் - நாமரூபங்களால், விமுக்த: - விடப்பட்டவனாய், பராத்பரம் திவ்யம் புருஷம் உபைதி - பராத்பரனாய் விளங்குகிற பரமபுருஷனை, யடைகிறான்.

ரங-ஸா. அவித்யை கழிந்து ப்ரம்மத்தோடு ஐக்யம் பெறுவதில் நதிகள் த்ருஷ்டா ந்தம்.

ரா-ஸா—முக்தஜீவன் பரப்ரம்மத்தோடு ஐக்யமடைகிறா னென்றதினால்வந்த ஸந் தேஹம் கழியுண்ணும்படி த்ருஷ்டாந்தத்துடன்; விஸ்தரிக்கிறது. எவ்வாறு கங்கை, யமுனை, ஸரஸ்வதி, முதலிய ஆறுகள், தாம் பிறக்கு மிடங்களினின்றும், ப்ரவஹி த்து, கங்கை கங்கை என்கிற பெயரையும் வெளுத்த ரூபத்தையும், யமுனை, யமுனை என்கிற பெயரையும், கறுப்பு ரூபத்தையும், ஸரஸ்வதி, ஸரஸ்வதி என்கிற பெயரையும், சிவந்த ரூபத்தையும் இவ்வாறு மற்றுள்ளவாறுகள் அவைகளுக்குள்ள பெயரையும் ரூபத் தையும்விட்டு, ஸமுத்திரத்தி லொன்றாய்க் கலந்து போகின்றனவோ; அவ்வாறே வித்வா னாகிய உபாஸகன், பேதத்தைக் காட்டித்தருகிற நாமத்தையும் ரூபத்தையும் மற்ற உபா திகளையும், விட்டு, பரமபுருஷனை யடைகிறான். இத்தால் ஆற்று நீருக்கும் கடல் நீருக் கும், வாஸ்தவத்தில் பேதமுண்டானாலும் கடலில் கலந்தபின் அவ்வேறுபாட்டைக்

காட்டுகிற ரூபம் (அதாவது நிறம்) அழிவதால் பேருமழிந்து, ஒன்றுபோல் தோற்றுவது போல, பரமாத்மாவுக்கு மிந்த ஜீவாத்மாவுக்கும் பேதத்தைக் காட்டுகிற ரூபநாமங்கள் முக்தி காலத்தி லழிகின்றமையால் ஒன்றுபோல் பேதமின்றித் தோன்றுவதொழிய பரமாத்மாவுக்கும் ஜீவாத்மாவுக்கும் வாஸ்தவத்தில் ஐக்கியமில்லை அபேதமில்லை. இப்படியே முன்னமே முக்தராயிருக்கிற ஆத்மாக்களோடும் அபேதமில்லை. பரமாத்மாவேயென லாம் படிஸமாநமா யிருக்கையே முக்தி என்று வெளியாக்கப்பட்டது. ஆனதால் கடவல்லி உபநிஷத்திலும்; மஹா ஜலத்தில் கலந்த நீர் அதுபோலவே யாவதுபோல், என்று சாம்யஞ் சொல்லப்பட்டதே யன்றி அபேத மோதப்படவில்லை. இங்கு மதாந்தரத்தில் அநேகாவயங்களுக்கும் ஐக்யமுண்டாவதுபோல ஜீவ பரமாத் மைக்யம் சொல்லலாமே யெனில் அது தகாது. நிர்க்குணவித்யையாக சங்கரமதத்தி லொப்புக்கொள்ளப்பட்ட ப்ரஜாபதிவித்யையில், ஜீவப்ரம்மங்களுக்கு பேதத்தையும் ஸத்யகாமத்வம், ஸத்யசங்கல்பத்வம், முதலிய குணங்களையும் சொல்லுகின்றமையாலும், "உத்தராச்சேதா விர்பூதஸ்ரூபஸ்து" என்கிற சூத்திரத்தில் முக்தியி லந்த குணங்களை யடைவது அந்த வித்யைக் குபலமென்னு சங்கர பாஷ்யத்தி லொப்புக்கொள்ளுகின்றமையாலும், முக்தியில் பேத சூந்யமான ப்ரம்மத்தோடு ஐக்யமென்று சொல்லுவது பொருத்தமற்றதேயாம். இதுகள் ஸ்வரூப மாத்திரம் என்று சொல்லுவது கூடாதென்பது பல யுக்திகளாலும், தகாதென்று ஸ்பஷ்டமாய் விளங்குகின்றது. ஆனதால் ஜீவனுக்கும் பரமாத்மாவுக்கு மபேதமுரைப்பது அசங்கதமாம்.

௯. 𑌸 𑌯𑍋 𑌹 𑌵𑍈 𑌤𑌤𑍍𑌪𑌰𑌮𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌵𑍇𑌦 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵 𑌭𑌵𑌤𑌿 𑌨𑌾𑌸𑍍𑌯𑌾-
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌤𑍍𑌕𑍁𑌲𑍇 𑌭𑌵𑌤𑌿 । 𑌤𑌰𑌤𑌿 𑌶𑍋𑌕𑌂 𑌤𑌰𑌤𑌿 𑌪𑌾𑌪𑍍𑌮𑌾𑌨𑌂 𑌗𑍁𑌹𑌾𑌗𑍍𑌰-
𑌨𑍍𑌥𑌿𑌭𑍍𑌯𑍋 𑌵𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑍋𑌽𑌮𑍃𑌤𑍋 𑌭𑌵𑌤𑌿 ॥

౯. సయోహవైతత్పరమంబ్రహ్మవేదబ్రహ్మైవభవతినాస్యాబ్రహ్మవిత్కులేభవతి।
తరతిశోకంతరతిపాప్మానంగుహాగ్రంథిభ్యోవిముక్తోఽమృతోభవతి॥

(ப-ம்.) 𑌯𑌃 𑌹 𑌵𑍈 - யவனொருவன், 𑌤𑌤𑍍 𑌪𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌵𑍇𑌦 - அந்த பரப்ரம்மத்தை யறிகிறானோ; 𑌸𑌃 - அவன், 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵 𑌭𑌵𑌤𑌿 - ப்ரம்மமே யாகிறான், 𑌅𑌸𑍍𑌯 𑌕𑍁𑌲𑍇 - இவன்வம்சத்தில், 𑌅𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌤𑍍 𑌨 𑌭𑌵𑌤𑌿 - ப்ரம்ம தத்வத்தை யறியாதவன் பிறப்பதில்லை. 𑌶𑍋𑌕𑌂 𑌤𑌰𑌤𑌿 - சோகமற்றவனாகிறான், 𑌪𑌾𑌪𑍍𑌮𑌾𑌨𑌂 𑌤𑌰𑌤𑌿-பாபமற்றவனாகிறான், 𑌗𑍁𑌹𑌾𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑌿𑌭𑍍𑌯𑌃 𑌵𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑌃, ராகத்வேஷங்கள் நீங்கியவனாய், 𑌅𑌮𑍃𑌤𑌃 - போக்யனாய், 𑌭𑌵𑌤𑌿 - ஆகிறான்.

பூ-ஹா. நல்ல காரியத்திற்கு அனேக விக்நங்கள் வருவது இயல்பாதலால் இந்த வித்வானு மொருக்கால் சில கெடுதிகளா லந்யகதியை யடைவானோ என்கிற சம்சயம் தீர்த்து இவனுக்கு அவித்யை யொழியவேறு விக்நமில்லாமையால் அது தத்வஜ்ஞானத் தால் கழிந்தபடியால் ஆத்மா, தானே யாகையால் இதற்கு தேவதைகளாலும் விக்நம் செய்ய முடியாது என்கிறது. விசேஷம் முன்னமே யுரைக்கப்பட்டது.

உ-ஹா. ப்ரம்மத்தை யறிந்து த்யானித்து நிச்சல ஸ்ம்ருதி பெற்று ப்ரத்யக்ஷம் போலான பக்தியைச் செய்தவன், தப்பாமல் ப்ரம்மம்போலவே யாகிறான். இவனுக்கு குறைஷ்டக முதிக்கிறது. மற்றவை ஸ்பஷ்டமானதால் விரிக்கப்படவில்லை.

௧௦. ததேதத்ருசாப்யுக்தம் க்ரியாவந்த: ஶ்ரோத்ரியா ப்ரஹ்மநிஷ்டா: ஸ்வயம் ஜுஹ்வத ஏகர்ஷிம் ஶ்ரத்தயந்த: | தேஷாமேவைதாம் ப்ரஹ்மவித்யாம் வதேத ஶிரோவ்ரதம் விதிவத்யைஸ்து சீர்ணம்॥

౧౦. తదేతదృచాభ్యుక్తం క్రియావంతః శ్రోత్రియా బ్రహ్మనిష్ఠాః స్వయం జుహ్వత ఏకర్షిం శ్రద్ధయంతః । తేషామేవైతాం బ్రహ్మవిద్యాం వదేత శిరోవ్రతం విధివద్యైస్తు చీర్ణమ్॥

(ப-ம்.) ததேதத் - இந்தப்ரம்மவித்யாஸம்பந்தவிதியானது, ருசா - இருக்கினால், அப்யுக்தம் - சொல்லப்பட்டது. க்ரியாவந்த: - கருமாநுஷ்டாநபரர்களாயும், ஶ்ரோத்ரியா: - வேதாத்யயனம் செய்தவர்களாயும், ப்ரஹ்மநிஷ்டா: - பரமாத்மநிஷ்டை யுடையவர்களாயும், ஶ்ரத்தயந்த: - சிரத்தையுடையவர்களாயும், ஏகர்ஷிம் ஸ்வயம்ஜுஹ்வத - அக்நிஹோத்ரிகளாயும், ஶிரோவ்ரதம் விதிவத்யைஸ்து சீர்ணம் - சாஸ்திரப்படி வேதவ்ரதத்தை யநுஷ்டித்தவர்களாயு மிருக்கிற, தேஷாமேவ - அவர்களுக்கே, ஏதாம் ப்ரஹ்மவித்யாம்வதேத - இந்தப்ரம்மவித்யையை யுபதேசிக்கக்கடவன்.

ஶம்-ஹா. இதற்கு பரம்பரை லக்ஷணம் கூறி முடிக்கிறது. ப்ரம்மஜ்ஞாநத்தில் விருப்பமுடையவர்களாயிருக்கிறவர்களுக்கு இது உபதேசிக்கத்தக்கது.

ரா-ா. பஞ்சமஹாயஜ்ஞம் முதலியவை செய்கிறவர்கள் வேதத்தை யோதினவர்களுமிதற்குத்தக்கவர்கள்.

பதாந்வயார்த்த பேதங்கள்.

பதஉரையைப்போலவே இரண்டு பாஷ்யங்களுக்கும்கருத்து. விசேஷங்களில்லை. மற்ற விசாரங்கள் ஸூத்திர பாஷ்யத்தில் காண்க.

௧௧. ததேதத்ஸத்யம்ருஷிரங்கிரா: புரோவாச நைததசீர்ணவ்ரதோऽதீதே நம: பரமருஷிப்யோ நம: பரமருஷிப்ய:॥

౧౧. తదేతత్సత్యమృషిరంగిరాః పురోవాచ నైతదచీర్ణ-
వ్రతోఽధీతే నమః పరమఋషిభ్యో నమః పరమఋషిభ్యః॥

(ப-ம்.) ததேதத்ஸத்யம் - அப்படிப்பட்ட இந்த அக்ஷரப்ரம்மஸத்யஸ்வரூபத்தை, அங்கிரா: ருஷி: - அங்கிரஸ்ஸென்கிற ருஷியானவர், புரா உவாச - முதலிலுபதேசித்தார். அசீர்ணவ்ரத: - சிரோவ்ரதம் செய்யாதவர், ஏதத் - இதை, ந அதீதே - அத்யயநம்பண்ணக்கூடாது. பரமருஷிப்ய: நம: பரமருஷிப்ய: நம: - ஆசார்யபரம்பரையில் சேர்ந்தமகர்ஷிக்கு நமஸ்காரங்கள்.

ஶம்-ஹா. இந்த அக்ஷர ஸ்வரூபத்தை அங்கிரஸ்ஸுவென்கிற ருஷியானவர் விதிப்படிவந்து கிட்டின சௌநகருக் குபதேசித்தார். ஆகையால் இப்படியே முமுக்ஷுவாய் விதிப்படி வந்துகிட்டின சிஷ்யனுக் குபதேசிக்கக்கடவன். இந்த உபநிஷத்தை சிரோவ்ரதமென்கிற விதியைச் செய்யாதார் அதயநம் செய்யக்கூடாது. அந்த ஸம்ஸ்காரம் பல

த்தைத்தருவதி லநுகூலமானது. இந்த ப்ரம்மவித்யைமுடிந்தது. இது எந்த ப்ரம்மா துடங்கி பரம்பரையாய் வந்ததோ அப்படியா சார்ய பரம்பரையில் சேர்ந்த அந்த ப்ரம்மா முதலுள்ள அனைவருக்கும் அநேக நமஸ்காரம். அவர்களேயன்றோ ப்ரம்மஸா க்ஷாத்காரம் பெற்றார்கள். ஆதரத்தா லிரட்டித்துச் செல்லுகிறது. அன்றியே முண்ட கோபநிஷத்து முடிந்ததென் றறிவித்தலு மொரு பயன்.

ரா-ஸா. அத்யாபநம் என்பது ஓதிவித்தல் அத்யயநம் ஓதல். முன் மந்திரத்தில் அத்யாபநம் சிரோவ்ரதம் செய்யாதவனுக்குத் தகாது அவனுக்குச் சொல்லக்கூடாது; என்று கூறப்பட்டது. இந்த மந்திரத்தில் சிரோவ்ரதம் செய்யாதவன், இதை அத்யயநம் செய்யக்கூடாதென்று சொல்லுகிறது என்று பேதமறிக.

பதாந்வயார்த்த பேதங்கள்.

புரோவாச என்று சங்கர பாஷ்யத்தில் பாடம். ப்ரோவாசஎன்று இரா மாநுஜ பாஷ்யத்தில் பாடம், மற்ற கருத்தில் பேதமில்லை.

ரா-ஸா. இம்முண்டகோபநிஷத்து முழுதும் நாராயணனையே கூறுகிறதென்று வ்யாச சூத்திரங்களில் ஒன்பது சூத்திரங்களால் வெளியிடப்பட்டிருக்கிறது ஆகையால் இது முழுதும் நாராயணனையே பேசுகிறது.

இதி த்ருதீயமுண்டகே த்விதீய:கண்ட:.

முண்டகோபநிஷத் முற்றும்.

𑌹𑌰𑌿𑌃 𑌓𑌮𑍍.

𑌮𑌾𑌣𑍍𑌡𑍂𑌕𑍍𑌯𑍋𑌪𑌨𑌿𑌷𑌤𑍍𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌾𑌰𑍍𑌥𑌃.

𑌮𑌾𑌣𑍍𑌡𑍂𑌕𑍍𑌯𑍋𑌪𑌨𑌿𑌷𑌦𑍍𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌨𑌮𑍍.

௧. 𑌓𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌤𑌦𑌕𑍍𑌷𑌰𑌮𑌿𑌦𑌂𑌸𑌰𑍍𑌵𑌂𑌤𑌸𑍍𑌯𑍋𑌪𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌨𑌂𑌭𑍂𑌤𑌂𑌭𑌵𑌦𑍍𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌦𑌿𑌤𑌿𑌸𑌰𑍍𑌵𑌮𑍋𑌙𑍍𑌕𑌾𑌰𑌏𑌵 । 𑌯𑌚𑍍𑌚𑌾𑌨𑍍𑌯𑌤𑍍𑌤𑍍𑌰𑌿𑌕𑌾𑌲𑌾𑌤𑍀𑌤𑌂𑌤𑌦𑌪𑍍𑌯𑍋𑌙𑍍𑌕𑌾𑌰𑌏𑌵॥ ௧॥

౧. ఓమిత్యేతదక్షరమిదం సర్వంతస్యోపవ్యాఖ్యానంభూతంభవద్ భవిష్యదితిసర్వమోం కారఏవయచ్చాన్యత్ త్రికాలాతీతంతదప్యోంకారఏవ॥ ౧॥

(ப்-ம்.) 𑌇𑌦𑌂 - இந்த, 𑌸𑌰𑍍𑌵𑌂 - யெல்லாவுலகமும், 𑌓𑌮𑌿𑌤𑌿 - ஓமென்று சொல்லப்படுகிற, 𑌏𑌤𑌤𑍍 - இந்த, 𑌅𑌕𑍍𑌷𑌰𑌂 - எழுத்து. 𑌤𑌸𑍍𑌯 - அந்தயெழுத்திற்கு, 𑌉𑌪𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌨𑌂 - விரிவானபொருள், (𑌕𑍍𑌰𑌿𑌯𑌤𑍇 - சொல்லப்படுகிறது.) 𑌭𑍂𑌤𑌂 - சென்றது, 𑌭𑌵𑌤𑍍 - நிகழ்கிறது, 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑍍 - வருவது 𑌇𑌤𑌿 - என்கிற, 𑌸𑌰𑍍𑌵𑌂 - எல்லாவுலகமும், 𑌓𑌙𑍍𑌕𑌾𑌰𑌏𑌵 - ஓமென்கிற எழுத்தாலே, 𑌤𑍍𑌰𑌿𑌕𑌾𑌲𑌾𑌤𑍀𑌤𑌂 - மேற்கூறிய மூன்று காலங்களிலு மடங்காத, 𑌅𑌨𑍍𑌯𑌤𑍍 - வேறாகிய, 𑌯𑌤𑍍 - யாதொருவஸ்துவிருக்கிறதோ, 𑌤𑌦𑌪𑌿 - அந்தவஸ்துவும், 𑌓𑌂𑌕𑌾𑌰𑌏𑌵 - ஓமென்னும் எழுத்துதான்.

𑌶𑌂-𑌭𑌾. இவ்வுபநிஷத்து ப்ரணவத்யாநவிதிகூறுகின்றது. ஸகலவஸ்துக்களையும் சொல்லும் வார்த்தைகளுக்கு ஓங்காரமே காரணமாகையாலும் யெல்லாப்பொருள்களுக்கும்ப்ரம்மமே இடமாகையாலும்பொருள்களும்பெயரும் ஒன்றாகையாலும் ஓங்காரத்தின் பொருளும் பிரம்மமாகையாலும் ஓங்காரமே யெல்லாப்பொருள்களும் என்று சொல்லப்படுகிறது. 'இவ்வாறே' எல்லாப்பொருளு மோங்காரமே, இவைமுதலிய வேதங்களைக் கண்டுகொள்வது.

𑌰𑌾-𑌭𑌾. இந்த மாண்டூக்யத்தி லோங்காரோபாஸநத்தை விதிக்கின்றது. நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்ட ப்ரணவத்தை நான்குபாதங்களோடு கூடின ப்ரம்மமாக தியானிக்கச்சொல்வதற்கு இந்தப் பிரகரணம் ஆரம்பிக்கப்படுகின்றது. ப்ரணவத்தில்நின்றும் உண்டான வ்யாஹ்ருதிகளில்நின்றும் உண்டாகிய வேதங்களைக்கொண்டு இப்புவனங்கள் படைக்கப்பட்டதாதலால் இவ்வுலகங்களை ஓங்காரமென்று சொல்லுகிறது. அப்ப்ரணவத்தை தியாநிக்கவேண்டியவிதிகள் விரிவாய்சொல்லப்படுகின்றன. இவ்வுலகங்கள் ஓம் என்றுசொல்லப்பட்ட அக்ஷரமே என்று, அதின்விரிவுகள்சொல்லப்படுகின்றன. மூன்று காலங்களிலும் வேறுபாடில்லாததும் மேற்கூறியகாலங்களில் அடங்காமலிருப்பதும் மேற்கூறிய ப்ரணவமே.

௨. 𑌸𑌰𑍍𑌵𑌂𑌹𑍍𑌯𑍇𑌤𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌸𑍋𑌽𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌚𑌤𑍁𑌷𑍍𑌪𑌾𑌤𑍍॥ ௨॥

౨. సర్వం హ్యేతద్ బ్రహ్మాయమాత్మా బ్రహ్మసోయమాత్మాచతుష్పాత్॥ ౨॥

த்தைத்தருவதி லநுகூலமானது. இந்த ப்ரம்மவித்யைமுடிந்தது. இது எந்த ப்ரம்மா
துடங்கி பரம்பரையாய் வந்ததோ அப்படியா சார்ய பரம்பரையில் சேர்ந்த அந்த
ப்ரம்மா முதலுள்ள அனைவருக்கும் அநேக நமஸ்காரம். அவர்களேயன்றோ ப்ரம்மஸா
க்ஷாத்காரம் பெற்றார்கள். ஆதரத்தா லிரட்டித்துச் செல்லுகிறது. அன்றியே முண்ட
கோபநிஷத்து முடிந்ததென் றறிவித்தலு மொரு பயன்.

ரா-ஸா. அத்யாபநம் என்பது ஓதிவித்தல் அத்யயநம் ஓதல். முன் மந்திரத்தில்
அத்யாபநம் சிரோவ்ரதம் செய்யாதவனுக்குத் தகாது அவனுக்குச் சொல்லக்கூடாது;
என்று கூறப்பட்டது. இந்த மந்திரத்தில் சிரோவ்ரதம் செய்யாதவன், இதை அத்யயநம்
செய்யக்கூடாதென்று சொல்லுகிறது என்று பேதமறிக.

பதாந்வயார்த்த பேதங்கள்.

புரோவாச என்று சங்கர பாஷ்யததில் பாடம். ப்ரோவாசஎன்று இரா
மாநுஜ பாஷ்யத்தில் பாடம், மற்ற கருத்தில் பேதமில்லை.

ரா-ஸா. இம்முண்டகோபநிஷத்து முழுதும் நாராயணனையே கூறுகிறதென்று
வ்யாச சூத்திரங்களில் ஒன்பது சூத்திரங்களால் வெளியிடப்பட்டிருக்கிறது ஆகையால்
இது முழுதும் நாராயணனையே பேசுகிறது.

இதி த்ருதீயமுண்டகே த்விதீய: க²ண்ட:.

முண்டகோபநிஷத் முற்றும்.

ஹரி: ஓம்.

மாண்டூக்யோபநிஷத்ப்ராரம்ப:

மாண்டூக்யோபநிஷதி ப்ரதமகண்ட:

க. ஓமித்யேதத³க்ஷரமித³ம் ஸர்வம் தஸ்யோபவ்யாக்²யாநம் பூ⁴தம் ப⁴வத்³ ப⁴விஷ்யதி³தி ஸர்வமோங்கார ஏவ | யச்சாந்யத் த்ரிகாலாதீதம் தத³ப்யோங்கார ஏவ || க ||

౧. ఓమిత్యేతదక్షరమిదం సర్వం తస్యోపవ్యాఖ్యానం భూతం భవద్ భవిష్యదితి సర్వమోంకార ఏవ యచ్చాన్యత్ త్రికాలాతీతం తదప్యోంకార ఏవ॥ ౧॥

(ப-ம்.) இத³ம் - இந்த, ஸர்வம் - யெல்லாவுலகமும், ஓமிதி - ஓமென்று சொல்லப்படுகிற, ஏதத் - இந்த, அக்ஷரம் - எழுத்து. தஸ்ய - அந்தயெழுத்திற்கு, உபவ்யாக்²யாநம் - விரிவானபொருள், (கத்²யதே - சொல்லப்படுகிறது.) பூ⁴தம் - சென்றது, ப⁴வத் - நிகழ்கிறது, ப⁴விஷ்யத் - வருவது இதி - என்கிற, ஸர்வம் - எல்லாவுலகமும், ஓங்காரஏவ - ஓமென்கிற எழுத்தாலே, த்ரிகாலாதீதம் - மேற்கூறிய மூன்று காலங்களிலு மடங்காத, அந்யத் - வேறாகிய, யத் - யாதொருவஸ்துவிருக்கிறதோ, தத³பி - அந்தவஸ்துவும், ஓங்காரஏவ - ஓமென்னும் எழுத்துதான்.

ரு-ஹா. இவ்வுபநிஷத்து ப்ரணவத்யாநவிதிகூறுகின்றது. ஸகலவஸ்துக்களையும் சொல்லும் வார்த்தைகளுக்கு ஓங்காரமே காரணமாகையாலும் யெல்லாப்பொருள்களுக்கும்ப்ரம்மமே இடமாகையாலும்பொருள்களும்பெயரும் ஒன்ருகையாலும் ஓங்காரத்தின் பொருளும் பிரம்மமாகையாலும் ஓங்காரமே யெல்லாப்பொருள்களும் என்று சொல்லப்படுகிறது. 'இவ்வாறே' எல்லாப்பொருளு மோங்காரமே, இவைமுதலிய வேதங்களைக் கண்டுகொள்வது.

ரா-ஹா. இந்த மாண்டூக்யத்தி லோங்காரோபாஸநத்தை விதிக்கின்றது. நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்ட ப்ரணவத்தை நான்குபாதங்களோடு கூடின ப்ரம்மமாக தியானிக்கச்சொல்வதற்கு இந்தப் பிரகரணம் ஆரம்பிக்கப்படுகின்றது. ப்ரணவத்தில்நின்றும் உண்டான வ்யாஹ்ருதிகளில்நின்றும் உண்டாகிய வேதங்களைக்கொண்டு இப்புவனங்கள் படைக்கப்பட்டதாதலால் இவ்வுலகங்களை ஓங்காரமென்று சொல்லுகிறது. அப்ப்ரணவத்தை தியாநிக்கவேண்டியவிதிகள் விரிவாய்சொல்லப்படுகின்றன. இவ்வுலகங்கள் ஓம் என்றுசொல்லப்பட்ட அக்ஷரமே என்று, அதின்விரிவுகள்சொல்லப்படுகின்றன. மூன்று காலங்களிலும் வேறுபாடில்லாததும் மேற்கூறியகாலங்களில் அடங்காமலிருப்பதும் மேற்கூறிய ப்ரணவமே.

உ. ஸர்வம் ஹ்யேதத் ப்³ரஹ்மாயமாத்மா ப்³ரஹ்ம ஸோऽயமாத்மா சதுஷ்பாத் || உ ||

౨. సర్వం హ్యేతద్ బ్రహ్మాయమాత్మా బ్రహ్మ సోऽయమాత్మా చతుష్పాత్॥ ౨॥

(ப்-ம்.) ஏதத் - இந்த, ஸர்வம் - எல்லாவஸ்துக்களும், ப்ரஹ்மஹி - பிரம்மம்தான், அயம் - இந்தப்ரணவம், ஆத்மா - ஆன்மாவான, ப்ரஹ்ம - பிரமம். ஸோயம் - முன்கூறியஇந்த ஆத்மா - ப்ரஹ்மமானது, சதுஷ்பாத் - நாலுபாதங்களையுடையது.

ஸம்-ஹா. மேல் ப்ரணவரூபமென்று சொல்லப்பட்ட யெல்லாவுலகங்களும் பிரமமே. இத்தால் மேற்கூறிய ப்ரணவமும்ப்ரம்மமும் ஒன்றென்று சொல்லிற்றாயிற்று. இஜ்ஜீவனும் அந்தப்ரம்மந்தான். முற்கூறிய ப்ரணவத்தால் சொல்லப்பட்ட ப்ரம்மம் நாலுபாதங்களையுடையது. இதில்கீழ்மூன்றுபாதங்களையறிந்து நாலாவதுபாதத்தை யறியவேண்டியது. கீழ் மூன்றுபாதங்களும் நாலாவதுபாதத்தை யறிவதற்குக்காரணம் நாலாவதுபாதம் யெல்லாராலும் அறியவேண்டியது.

ரா-ஹா. ஸர்வரூபமான ப்ரம்மம் ஓங்காரமேயாம். அதாவது ப்ரணவத்தில் ஸர்வரூபியான ப்ரம்மமென்கிற நினைவுவரவேணு மென்றவாறு. ப்ரணவமாக தியானிக்கச் சொன்ன பிரம்மம் நாலுபாதத்தோடுகூடியது. அதாவது ப்ரணவத்தை நாலுபாதங்களையுடையதாகச் சொல்லப்போகின்றமையால் நாலுபாதங்களையுடைய ப்ரணவத்தை நாலுபாதங்களுடைய ப்ரம்மமாக தியானிக்கவேண்டு மென்றபடி. ப்ரம்மத்தினுடைய நாலுபாதங்களிவை என்பது மேலேவிளங்கும். மேல்கூறிய யெல்லாவஸ்துக்களிலும் நிறைந்தது, பிரமன்முதலிய ஜீவர்களிலும் நிறைந்திருப்பது மேற்கூறியப்ரம்மமே. அந்த ப்ரம்மம் நான்குபிரிவுகளோடு கூடியது.

இதி மாண்டூக்யோபநிஷதி ப்ரதமகண்ட:.

அத மாண்டூக்யோபநிஷதி த்விதீயகண்ட:.

௧. ஓம் ஜாகரிதஸ்தாநோ பஹிஃப்ரஜ்ஞ: ஸப்தாங்க ஏகோநவிம்ஶதிமுக: ஸ்தூலபுக்வைஶ்வாநர: ப்ரதம: பாத:॥ ௩॥

౧. ఓంజాగరితస్థానోబహిఃప్రజ్ఞఃసప్తాంగ ఏకోనవింశతిముఖఃస్థూలభుక్ వైశ్వానరఃప్రథ
మఃపాదః॥ 3॥

(ப்-ம்) ஜாகரிதஸ்தாந: - விழிக்குமிடத்திலிருப்பவனும், பஹிஃப்ரஜ்ஞ: - உருவம்முதலியதில் அறிவையுடையவனும், ஸப்தாங்க: - ஏழுஅங்கங்களோடுகூடினவனும், ஏகோநவிம்ஶதிமுக: - பத்தொன்பதுமுகங்களோடுகூடியும், ஸ்தூலபுக் - உருவம்முதலியதை யநுபவிக்குமவனுமாகிய, வைஶ்வாநர: - யெல்லாஜனங்களையும் நியமிக்கின்றமையால் வைச்வாநரனென்றுபெயர்கொண்டவன், ப்ரதம: பாத: - முதல்பாதம்.

ஸம்-ஹா. விழித்துக்கொள்ளும் ஸ்வபாவத்தை யுடையவனாய் தன்னை யொழிந்த வஸ்துக்களை அறியுமவனாய் சுவர்க்கம் சூரியன் காற்று ஆகாயம் நீர் பூமி நெருப்பு இவைகளின் உருவமாகிய தலை கண் பிராணன் நடுவுடல் உபஸ்தம் கால் முகம் என்கிற ஏழு அங்கங்களோடு கூடினவனாய் அறியும் புலன்கள் ஐந்தும் அறியாப் புலன்கள் ஐந்தும் பிராணன்முதலிய ஐந்துவாயுக்களும் மனம் புத்தி அகங்காரம் சித்தம் என்கிற நான்கும் ஆகபத்தொன்பது முகங்களையுடையவனாய் சத்தம் முதலியவைகளை அறியும் தன்மையுள்ளவனாகிய ஜீவரூபியானவன் முதல்பாதம்.

ரா-ஹா. விழித்திருக்கும் ஜீவனுக்கதிகாரியாயும் உருவம்முதலியதை யறியும் தன்மையுள்ளவனும் சுவர்க்கம் சூரியன் காற்று ஆகாயம் நீர் பூமி இவைகளின் உருவமாகிய தலை கண் பிராணன் நடுவுடல் உபஸ்தம் கால் என்கிற ஆறும் ஜீவனுமாகிய எழு அங்கங்களையுடையவனும் மேற்கூறிய பத்தொன்பது முகங்களை யுடையவனும் உருவம்முதலியதை யநுபவிக்குமவனுமான அநிருத்தன் என்கிற பெயர்கொண்ட வைச்வாநரன்முதல்பாதம் என்றுபொருள். கண்ணிலிருக்குமவனும் புறம்பானவஸ்துக்களை யறியுமவனும் நாலுகைகள் இரண்டுகால் துதிக்கை ஒன்று ஆக எழுஅங்கங்களை யுடையவனும் பத்தொன்பது முகங்களை யுடையவனு மிருக்கிற வைச்வாநரன் முதல்பாதம். என்றும் சொல்லுவர்.

உ. ஸ்வப்நஸ்தாநோऽந்த:ப்ரஜ்ஞ: ஸப்தாங்க ஏகோநவிம்ஶதிமுக: ப்ரவிவிக்தபுக் தைஜஸோ த்விதீய: பாத:॥ ச॥

౨. స్వప్నస్థానోఽంతఃప్రజ్ఞస్సప్తాంగ ఏకోనవింశతిముఖః ప్రవివిక్తభుక్ తైజసో ద్వితీయః పాదః॥౪॥

(ப்-ம்,) ஸ்வப்நஸ்தாந: -ஸ்வப்நத்துக்கதிகாரியாயும். அந்த:ப்ரஜ்ஞ: - மனதாலறியும்தன்மை யுள்ளவனும், ஸப்தாங்க: - ஏழங்கங்களை யுடையவனும், ஏகோநவிம்ஶதிமுக: - பத்தொன்பது முகத்தையுடையவனும், ப்ரவிவிக்தபுக் - அயலாரறியாமல் தான்மட்டும் அனுபவிக்குமவனுமான, தைஜஸ:-தைஜஸன், த்விதீய: பாத:- இரண்டாவதுபாதம்.

ஶ0-ஹா. ஒருவஸ்துக்களையும் அறியாமல் ஒளிமாத்திரத்தால் அறியத்தக்க அறிவினால்அறியக்கூடிய தைஜஸன் இரண்டாவதுபாதம். முன்பாதத்தில்வெளியில்உள்ள உருவம்முதலிய வஸ்துக்களை யறிகிறதாகையால் ஸ்தூலபுக் என்று சொல்லப்பட்டது. இரண்டாவது பாதத்தில் த்ருதிமாத்திரமாயிருந்த அறிவை யறிகிறதாதலால் ப்ரவிவிக்தபுக் என்று சொல்லப்பட்டது.

ரா-ஹா. ஸ்வப்நாவஸ்தையை யடையும் ஜீவனுக் கதிகாரியாயும் ஸ்வப்நத்தில் வேறுமனிதர்களால் அறியப்படாத நுட்பமானபொருள்களை வெளிச்சம்போல்அறிவித்தலால் தைஜஸனென்று பெயர்கொண்ட ப்ரத்யும்நன் இரண்டாவது பாதம். என்றுபொருள். கழுத்திலிருக்குமவனும் ஆதலால் தைஜஸன் என்று பெயர்கொண்டவன் ஆன்மாவுக்கு இரண்டாவதுபாதம் என்றுரைப்பாருமுளர்.

ரு. யத்ர ஸுப்தோ ந கஞ்சந காமம் காமயதே ந கஞ்சந ஸ்வப்நம் பஶ்யதி தத் ஸுஷுப்தம் ஸுஷுப்தஸ்தாந ஏகீபூத: ப்ரஜ்ஞாநகந ஏவாநந்தமயோ ஹ்யாநந்தபுக் சேதோமுக: ப்ராஜ்ஞஸ்த்ருதீய: பாத: ॥ ரு॥

3. యత్ర సుప్తో న కంచన కామం కామయతే న కంచన స్వప్నం పశ్యతి తత్ సుషుప్తం సుషుప్తస్థాన ఏకీభూతః ప్రజ్ఞానఘన ఏవానందమయో హ్యానందభుక్ చేతోముఖః ప్రాజ్ఞస్తృతీయః పాదః॥౫॥

(ப்-ம்.) யத்ர - எந்தவிடத்தில். ஸுப்த: - உறங்கினவன், கஞ்சந காமம்- ஒருவஸ்துவையும், ந காமயதே - ஆசைப்படுகிறதில்லையோ, கஞ்சந ஸ்வப்நம்- ஒரு கனவையும், ந பஶ்யதி - பார்க்கிறதில்லையோ, தத் - அது, ஸுஷுப்தம் - ஸுஷுப்தம் என்று பெயர்கொண்டது. ஸுஷுப்தஸ்தாநே - மேற்கூறிய ஸுஷுப்தஸ்தாநத்தில், ஏகீபூத: - ஒன்றுயிருக்குமவனும்,

ப்ரஜ்ஞாநகந ஏவ - ஜ்ஞாநஸ்வரூபியாய், ஆநந்தமய: - ஆநந்தஸ்வரூபியாய், ஆநந்தபுக் - ஆநந்தத்தை யனுபவிப்பிக்குமவனாய், சேதோமுக: - மனதாலறியத்தக்கவனான, ப்ராஜ்ஞ:-ப்ராஜ்ஞனென்கிறபெயர்கொண்ட ஸங்கர்ஷணன், த்ருதீய: பாத: - மூன்றாவதுபாதம்.

ஸ௦-ஹா. மேற்கூறிய ஸுஷுப்த ஸ்தாநத்தையுடையவனாய். த்வைதத்தைவிட்டு பிரிவில்லாத ஜ்ஞாநஸ்வரூபியாய் விஷயங்களை யறிகிறதாலுண்டான ஆயாஸமில்லாதவனாய், அறிவை முகமாகவுடையவனான ப்ராஜ்ஞன் மூன்றாவதுபாதம்.

ரா-ஹா. ஜனங்களின் ஸுஷுப்திக்கே யிடமாயும் ஜ்ஞாநஸ்வரூபியாயும் ஸுஷுப்திகாலத்தில் உண்டான ஆநந்தத்தை விளக்குமவனாயும் நிர்மலமானமனதா லறியக்கூடியவனுமான ப்ராஜ்ஞன் என்கிற ஸங்கர்ஷணன் மூன்றாவதுபாதம். ஹ்ருதயகமலத்தி லிருப்பவனாயும் மேலிரண்டுபாதங்களில்சொல்லிய வைச்வாநர தைஜஸர்களோடு ஜ்ஞாநாநந்தங்களால் ஸமானனாயும் ஜ்ஞானஸ்வரூபியாயும் ஆநந்தஸ்வரூபியாயும் ஆநந்தத்தையனுபவிப்பிக்குமவனாயும் ஜ்ஞாநத்தையே யெல்லாவுருபாக உடையவனாயும் வெளியுருவங்களை தோற்றுவிக்காமையால் ப்ராஜ்ஞனென்கிற பெயர்கொண்டவன்மூன்றாவதுபாதம்.

௪. ஏஷ ஸர்வேச்வர ஏஷ ஸர்வஜ்ஞ ஏஷோऽந்தர்யாம்யேஷ யோநி:
ஸர்வஸ்ய ப்ரபவாப்யயௌ ஹி பூதாநாம் ॥௬॥

౪. ఏష సర్వేశ్వర ఏష సర్వజ్ఞ ఏషోఽన్తర్యామ్యేష యోనిస్సర్వస్య ప్రభవాప్యయౌ హి భూతానామ్॥

(ப்-ம்.) ஏஷ: - இந்தப்ராஜ்ஞனென்று பெயர்கொண்டவன், ஸர்வேச்வர: - சகலத்திற்கும் ஈசுவரன், ஏஷ: - இவன், ஸர்வஜ்ஞ: - சகலத்தையும், அறிந்தவன், ஏஷ: - இவன், அந்தர்யாமீ - உட்புகுந்து நடத்துகிறவன், ஏஷ: - இவன், ஸர்வஸ்ய - சகலத்திற்கும், யோநி: - காரணம், ஏஷ: - இவன், பூதாநாம் - பிராணிகளுக்கு, ப்ரபவாப்யயௌ ஹி - பிறப்பும் இறப்பும்.

ஸ௦-ஹா. பேதப்பட்டுப் புலப்படும் வஸ்துக்களுக்கெல்லாம் சுத்தஸ்வரூபனான இவனே ஈசன். இவனே மனிதர்முதலிய பேதங்களையுடையவனாய் யெல்லாவஸ்துக்களையும் அறிகிறவன். இவனே யெல்லாவஸ்துவையும் உட்புகுந்து நடத்துகிறவன். இவனே யெல்லாவற்றிற்கும் காரணம். ஆதலால் பிராணிகளுக்கு பிறப்பும் இறப்பும் இவனே.

ரா-ஹா. முன்சொன்ன குணங்கள் மூன்று பாதங்களுக்கும் பொதுவாயிருந்தாலும் ஒவ்வொரு பாதங்களிலும் கூறப்பட்டகுணங்களோடு தியானம் செய்வதற்காகவே மூன்றிலும் குணங்க ளோதப்படவில்லை. இப்பாதத்தில் நாலுபாதங்களுக்கும் பொதுவான குணங்களைச் சொல்லுகிறது.

பதாந்வயார்த்த பேதங்கள்.

மேற்கூறிய சப்தார்த்தம்போலவே கருத்து.

௫. நாந்த:ப்ரஜ்ஞம் ந பஹி:ப்ரஜ்ஞம் நோபயத:ப்ரஜ்ஞம் ந ப்ரஜ்ஞாநகநம் ந ப்ரஜ்ஞம் நாப்ரஜ்ஞம் । அத்ருஷ்டமவ்யவஹார்யமக்ராஹ்யமலக்ஷணமசிந்த்யமவ்யபதேச்யமேகாத்மப்ரத்யயஸாரம் ப்ரபஞ்சோபசமம் சாந்தம் சிவமத்வைதம் சதுர்த்தம் மந்யந்தே ஸ ஆத்மா ஸ விஜ்ஞேய: ॥ ௭ ॥

౭. నాంతఃప్రజ్ఞం న బహిఃప్రజ్ఞం నోభయతఃప్రజ్ఞం న ప్రజ్ఞానఘనం న ప్రజ్ఞం నాప్రజ్ఞమ్ । అదృష్టమవ్యవహార్యమగ్రాహ్యమలక్షణమచింత్యమవ్యపదేశ్యమైకాత్మ్యప్రత్యయసారమ్ । ప్రపంచోపశమం శాంతం శివమద్వైతం చతుర్థం మన్యంతే స ఆత్మా స విజ్ఞేయః ॥ ౭ ॥

(ப - ம்.) அந்த꞉ப்ரஜ்ஞம் ந - ஸ்வப்நஜ்ஞாந மில்லாததும், ந பஹி꞉ப்ரஜ்ஞம் - ஜாகரதசையில்லாததும், ந உபயத꞉ப்ரஜ்ஞம் - இவ்விரண்டு மில்லாததும், ந ப்ரஜ்ஞாநகநம் - அஜ்ஞாநப்ரஜ்ஞை யில்லாததும், ந ப்ரஜ்ஞம் - ப்ராஜ்ஞ ஸ்வரூபத்தில் வேறானதும், ந அப்ரஜ்ஞம் - ஸமஸ்தருக்கும் ஜ்ஞாநத்தைத்தருவதும், அத்ருஷ்டம் - கண் முதலிய இந்திரிய ஜ்ஞாநத்திற்கு கோசரமாகாததும், அவ்யவஹார்யம் - வாகிந்திரியத்தின் வ்யாபாரத்திற்கு எட்டாததும், அக்ராஹ்யம் - பாணீந்திரியத்திற்குப் பிடிபடாததும், அலக்ஷணம் - அநுமாநப்ரமாணத்திற்கும் தெரியாததும், அசிந்த்யம் - இஃதென்று சொல்லமுடியாததும், அவ்யபதேஶ்யம் - இப்படிப்பட்டதென்று நிச்சயிக்கப்படாததும், ஐகாத்ம்யப்ரத்யயஸாரம் - ஜ்ஞாநாநந்த ஸ்வரூபமுடையதும், ப்ரபஞ்சோபஶமம்-ஸங்கர்ஷணாதி அவதாரங்களுக்குலயஸ்தாநமாகியதும், ஶாந்தம்-பசிதாஹ முதலியவைநீங்கியதும், ஶிவம் - ஜந்மஜரை முதலியவையில்லாதமங்கள ரூபமாகியதும், அத்வைதம் - ஒப்பில்லாததுமான வாஸுதேவ ஸ்வரூபத்தை, சதுர்த்தம் - நான்காவது ரூபமாக, மந்யந்தே - எண்ணுகிறார்கள். ஸ꞉ - அந்தவாஸுதேவன், ஆத்மா - ஸர்வந்தர்யாமீ ஸ꞉- அந்த வாஸுதேவன், விஜ்ஞேய꞉ - அறியத்தக்கவன்.

ஶம்-ஹா. நான்காவது பாதம் நிரூபிக்கப்படுகிறது. மேல் இத்துரீய ப்ரம்மத்தில் சப்தங்களுக்கு வ்ருத்தி யில்லாமையால் ஒரு பதத்தாலும் சொல்லப்படாதென்று நிர்விசேஷமென்று ரூபித்துச் சொல்லப்போகிறது. நிர்விசேஷத்தில் சப்தங்களுக்கு வ்ருத்தியில்லையன்றோ. அப்படியாகிலது சூந்யமேயாமென்கிற ஸந்தேஹம் வாராது நீங்குவதற்கு, பொய்யான எல்லா ப்ரபஞ்ச மயக்கங்களுக்கு மதிஷ்டானமா யொன்றிருத்தல் வேண்டுமானதால் இந்த ப்ரம்மம் சூந்யமல்ல ; ஈய்யத்தை வெள்ளியென்றும் கயிற்றைப் பாம்பென்றும் தூணைப் புருஷனென்றும் கானலைத் தண்ணீரென்றும் மலைக்கும்போது வெள்ளி பாம்பு முதலியவை பொய்யானாலும், அவைமுதலிய ப்ரமங்களுக்கு, அதிஷ்டாநமாகிய ஈய்யம, கயிறு, தூண், கானல் இவை முதலானவஸ்துக்கள் சூந்யமின்றி யிருப்பதுபோல இந்த ப்ரபஞ்சாதிஷ்டாநமாகிய ப்ரம்மமும்சூந்யமாகாது. அப்படியாயின் ஸவிசேஷமே யாமென்றும் சொல்ல வழியில்லை. வாஸ்தவத்தில் குடமுதலியவை தண்ணீருக்கிடமாவதுபோல ப்ரம்மமும் வாஸ்தவத்தில்ப்ராணிப்ரபஞ்சத்திற்கு ஸ்தாநமாகிலன்றோ ஸவிசேஷமாகலாம் அவ்வாறு இல்லையன்றோ. சிப்பையில் வெள்ளிபோல ப்ரபஞ்சம் தோற்றுவதே யன்றி ஸத்யமல்ல வன்றோ. விசேஷங்கள் மெய்யாகிலன்றோ ப்ரம்மம் ஸவிசேஷமாகலாம். அபரமார்த்தமாகையாலேஅஸத்தான ப்ரபஞ்சத்திற்கும் பரமார்த்தமாகையாலே ஸத்தான ப்ரம்மத்திற்கும், ஸம்பந்தம் வாஸ்தவமாகுமோ ; ஆகையால் ஸவிசேஷமாகாது. ஆகையால் சப்தத்தால் சொல்லப்படாது. வஸ்து ஸம்பந்தமுடைய பொருளையே யன்றோ சப்தம் கூறுகின்றது. ப்ரபஞ்ச ஸம்பந்தம் வஸ்து வல்லவென்று ரூபித்திருக்கின்றது. வேறு ப்ரமாணங்

களுக்கு கோசரமாகாமையாலும் பசு முதலிய வற்றைப்போல் சப்தகோசரமன்று. சமையற்காரனைப்போல் கிரியையுடையது மல்லாமையாலும் சப்தத்தால் சொல்லப்படாது. வஸ்திரம் முதலியவைபோல வெளுப்பு முதலிய ரூபமில்லாமையாலும் சொல்லுக்கு விஷயமாகாது. இவ்வாறு பயனில்லாதிருப்பதால் முயற்கொம்புபோல் பொய்யென்று சொல்லவழியில்லை என்று முன் ரூபித்துச்சொன்னோம். அன்றியும், இந்த ப்ரம்மஸ்வரூபத்தை யறிவதினால் இந்த விஷயங்களில் வைராக்யம் பிறக்கும். ஈயந்தெரிந்தால் வெள்ளியாசை நீங்குவதுபோலவே யென்க. இந்த துரீய ப்ரம்மஸ்வரூப ஜ்ஞானம் வந்த பின் அவித்யை முதலிய தோஷங்களுக்கிடமில்லை யன்றோ. இந்த ஜ்ஞானம் வருவதற்குக் காரணமில்லை என்னும் குறையில்லை. உபநிஷத்துக்களெல்லா மிதற்கே யிருக்கின்றன வாகையாலென்க. அவையாவன தத்வமஸி முதலியவை. இப்படிப்பட்ட ஆத்மாவைச் சதுஷ்பாத் என்று சொல்லியிருக்கிறது. இவ்வாத்மாவின் அவித்யையினால் வந்த அபரமார்த்தமாகிய கயிற்றில் தோற்றிய ஸர்பம்போலனவாகிய மூன்று பாதங்களினுடைய ஸ்வரூபத்தை ப்ரபஞ்ச வ்ருக்ஷத்திற்கு முளைபோல்வதென்று சொல்லி இப்போது, பரமார்த்த ஸத்ய ஸ்வரூபத்தை கயிற்றைப்போல் அதிஷ்டானமென் றறியுமாறு, ப்ரமஸர்பம்போன்ற மூன்று பாதங்களையும் நீக்கிச்சொல்லுகிறது நாந்தஃப்ரஜ்ஞம் என்கிற இந்த சுலோகம். நான்கு பாதங்களின் ஸ்வரூபத்தைச் சொல்லவே, கீழ்ச்சொல்லிய மூன்று பாதங்களினு மின்னான்காவது பாதம் வேறாயதென்று விளங்குகின்றமையால் அவைகளிலிதை வேறென்று சொல்வதில் பயன் யாதெனில், பாம்பல்ல வென்பதினால் கயிறென்றறிவிப்பதுபோல இவ்வாறு கூறுவதினால் சுயரூபமறியப்படுகின்றமையாலும் நிர்விசேஷப் பொருளை விதிகொண்டு கூறமுடியாமையாலு மென்றறிக. அன்றியே இம்மூன்று பாதங்களோடு இந்தநான்காவது பாதந்திற்கு ஐக்யம் தோற்றுவது மிதற்குப்பயன். இம்மூன்றவஸ்தைகளை யுடையதில் துரீயம் வேறாயின், நிர்விசேஷமான அத்துரீயத்தை யறிவதற்குபாய மில்லாமையயால், சாஸ்த்ரோபதேசம் வீணாவதோடு சூந்யவாதம் செய்தாப்போலாகும். கயிற்றில் பாம்பு முதலிய ப்ரமம்போல் விகல்பிக்கப்படுகிற மூன்றவஸ்தைகளினு மாத்மா ஒருவனாயின் அவ்வவஸ்தைகளை நீக்குகின்ற ப்ரமாணத்தால் அப்போதே அநர்த்தகாரணமாகிய ப்ரமப்ரபஞ்சம் முடிந்துபோகையால் பயன்கை புகுந்ததென்று துரீயத்தை யறிவதற்கு மடைவதற்கும் வேறு ப்ரமாணத்தையாவது உபாயத்தையாவது தேடவேண்டியதில்லை. அஜ்ஞானம் நீங்கின பின்னு மறியவேண்டியவை யுண்டென்றும் அவைகளில் ப்ரமாணம் செல்லுகிற தென்றும் சொல்பவர், சேதிக்கவேண்டிய பொருள் வேறுபட்ட பின்னும் சேதிக்கவேண்டிய பொருளுண்டென் றுரைப்பாரோ டப்பர். பொருளையு மிருளையும் வேறாக்குவதற்கென்று ப்ரவர்தித்த பரமாணம் எப்போதுவிரோதியான இருளைக்கழிக்குமோஅப்போது பொருளறிவு மிடையிலிசைகின்றது. பொருளறிவு ப்ரமாணத்தின் பயனன்று. இதற்கு முன் கூறியதே திருஷ்டாந்தம். இவ்வாறே யிங்கு மாத்மாவி லேற்றப்பட்டிருக்கிற அவித்யையினால் காண்கிற அந்தஃப்ரஜ்ஞத்வம் முதலிய அவஸ்தைகளைவிட ஆத்மஸ்வரூபத்திற்குள்ள விவேகத்தைக் காட்டவந்த ப்ரமாணத்தாலதற்கு விரோதியான அவ்வவஸ்தைகள் நீங்குவதைவிட ஆத்மவிஷயத்தில் வேறு பயனில்லையன்றோ. "அறிந்தபோது பேதமில்லை, என்கிற சுருதியின்படி இவ்வவஸ்தையை நீக்கி யறிந்தபோதே ஸகலபேத ப்ரம ப்ரபஞ்சமுமொழிந்து விடுமன்றோ. தத்வஜ்ஞானமும் பேத நிவ்ருத்தி ஸமயத்திலேயே நாசத்தை யடையும். அன்றேல், தத்வஜ்ஞானமாகிய பேதம் தங்கி நிற்கையால் அதுநீங்கவழியில்லை. வேறு ஜ்ஞானமதைப் போக்கில், அதைப்போக்க மற்றொரு ஜ்ஞானம் வேணுமென்ற நவஸ்தை வருமென்க. அவ்வாறாயின் த்வைதம் நிவ்ருத்தியாது. ஆகையால் பேதநிஷேதம் செய்கிற ப்ரமாணஸம காலத்தில்தானே ஸமஸ

தாநர்த்தங்களும் கழியுண்ணுமென்பது ஸித்தமாயிற்று. ஆகவே, விச்வதேஜஸாதி ஸம ஸ்தபேதநிஷேதம் செய்யப்படுகிறது. தோற்றுகிறவஸ்துக்களை இல்லை என்பதெவ்வா றெனில் ஒருபோது தோற்றி மற்றொருபோது தோற்றாமையா லென்றறிக. ஆயின் ஜ்ஞாநமும் ஸுஷுப்தியில் தோற்றாமையால் சூந்யமென வேண்டுமெனில் அப்போ தும் ஜ்ஞாநம் தோற்றிக்கொண்டே நிற்கின்றது. “நவிஜ்ஞாதுர்விஜ்ஞாதேர்விபரிலோ போவித்யதே” ஜ்ஞாநம் எப்போதும் தோற்றுமென்று ச்ருதி சொல்லுகின்றமையா லிதுஸ்பஷ்டம், ஆகையா லத்வைதமாக ஆத்மதத்வத்தை யறியவேணும்.

ரா-ஸா. விச்வதைஜஸ பிந்நமாய், ஸுஷுப்தி ஸ்தாநத்திலிருக்கும் ப்ராஜ்ஞஸ்வ ரூபத்தில் வேறாய் ஸர்வஜ்ஞத்வம்முதலிய குணங்களோடு கூடியதாய் பாஹ்யேந்திரியங் களுக்கு கோசரியாததாய் கர்மேந்திரியம் ஜ்ஞாநேந்திரியம் இவைகளுக்கு மவிஷயமாய் அநுமாநப்ரமாணத்தாலு மறியப்படாததாய் இஃதித்தகையதெனச் சித்திக்க முடியாத தாய் ஆத்மஜ்ஞாந மாத்ரகோசரமாய் ஸங்கர்ஷணப்ரத்யும்ந அநிருத்தர்களுக்கும் லயஸ் தாநமாய் “ஏதந்நாநாவதாராணாம்நிதாநம்பீஜமவ்யயம்” என்று எல்லா அவதாரங்களுக் கும் மூலகாரணமாகையாலே சாந்தமாய் மங்களஸ்வரூபமாய், தன்னோடொத்த பொ ருளில்லாததாயிருக்கின்ற வாஸுதேவமூர்த்தியை நான்காவதாக நினைக்கிறார்கள். ஆகை யால் சுருதி சொன்னபடி யவனை யறியக்கடவன் என்று கருத்து. முக்தருக்கு ஜ்ஞாநா நந்தங்களைத் தந்தவனாய், ஜ்ஞாநாநந்த மயமாய் மித்யாஜ்ஞாந சூந்யமான ஜீவஸ்வரூப த்தை நியமிக்கிறவன் அறியத்தக்கவ னென்று முரைப்பர்.

𑌇𑌤𑌿 𑌮𑌾𑌣𑍍𑌡𑍂𑌕𑍍𑌯𑍋𑌪𑌨𑌿𑌷𑌦𑌿 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌖𑌣𑍍𑌡𑌃.

𑌅𑌥 𑌮𑌾𑌣𑍍𑌡𑍂𑌕𑍍𑌯𑍋𑌪𑌨𑌿𑌷𑌦𑌿 𑌤𑍃𑌤𑍀𑌯𑌖𑌣𑍍𑌡𑌃.

க. 𑌸𑍋𑌽𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌧𑍍𑌯𑌕𑍍𑌷𑌰𑌮𑍋𑌙𑍍𑌕𑌾𑌰𑍋𑌽𑌧𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌪𑌾𑌦𑌾 𑌮𑌾𑌤𑍍𑌰𑌾 𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌶𑍍𑌚 𑌪𑌾𑌦𑌾 𑌅𑌕𑌾𑌰 𑌉𑌕𑌾𑌰𑍋 𑌮𑌕𑌾𑌰 𑌇𑌤𑌿॥ அ॥

౧. సోఽయమాత్మాధ్యక్షరమోంకారోఽధిమాత్రం పాదామాత్రామాత్రాశ్చపాదా అకార ఉకారోమకార ఇతి॥ ౮॥

(ப - ம்.) 𑌅𑌧𑍍𑌯𑌕𑍍𑌷𑌰𑌂 𑌅𑌧𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 - அக்ஷரங்களிலும், மாத்திரைகளி லுமிருக்கிற, 𑌸𑌃 𑌓𑌙𑍍𑌕𑌾𑌰𑌃 - நாதஸ்வரூபமான அந்த ஓங்காரமானது, 𑌅𑌯𑌂 𑌆𑌤𑍍𑌮𑌾 - இந்த பரமாத்மாவாக த்யாநிக்கத் தக்கது, 𑌅𑌕𑌾𑌰𑌃 𑌉𑌕𑌾𑌰𑌃 𑌮𑌕𑌾𑌰𑌃 𑌇𑌤𑌿 - அகர உகர மகர நாதங்களாகிற, 𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌃. மத்ரைகள், 𑌪𑌾𑌦𑌾𑌃 - நாலம்சங்கள், 𑌪𑌾𑌦𑌾𑌃 - அம்சங்கள், 𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌃 - நாலுமாத்திரைகள்.

ஶம-ஸா. அவ்வாத்மா அக்ஷரரூபத்தா லோங்காரமாகிறது. மாத்திரைகளாகப் பிரிக்கப்பட்டு அகார உகார மகார ரூபமாய் பாதங்களாகிறது. பாதங்களே மாத்திரை கள் மாத்திரைகளே பாதங்கள்.

ரா-ஸா. அக்ஷரஸ்வரூபமாயும் மாத்ராஸ்வரூபமாயு மிருக்கிற ப்ரணவ மென்கிற ஓங்காரமானது, பரமாத்மாவாக த்யாநிக்கத்தக்கது. ஏனென்றால் பரமாத்மாவுக்கு பாத ங்களாகச் சொல்லப்பட்ட ஸங்கர்ஷண ப்ரத்யும்ந அநிருத்த வாஸுதேவர்கள், ப்ரண வத்தின் மாத்திரைகளாகிய அகாரம் உகாரம் மகாரம் நாதம் இவைகளுக்குப் பொருளா யிருக்கின்றார்கள். ஆகையால் அந்நால்வரும் நாலு மாத்திரைகளாக த்யாநிக்கத்தக்கவரா வர். நாலுமாத்திரைகளையு மந்நால்வராக த்யாநிக்கலாம். பரமாத்மாவினுடைய பாதங்க

ளாகச் சொல்லப்பட்ட அந்நால்வருக்கும் மாத்திரைகளென்கிற அகாரம் உகாரம் மகாரம் நாதங்களாகிற இந்நாலுக்கும் பேதமின்றி த்யாநிக்கப்படும். ஆகையால் ஸங்கர்ஷணர்முதலிய நாலு பாதங்களையுடைய பரமாத்மாவுக்கும் அகார முதலிய நாலுமாத்திரைகளையுடைய ப்ரணவத்திற்கு மபேதமாக த்யாநம் கூடும் ஆகையால் ப்ரணவத்தை பரமாத்மாவாக த்யாநிக்கலாமன்றோ. ஆக ப்ரணவத்தில் ப்ரம்மமென்று த்யாநத்தையும், ப்ரணவ மாத்திரைகளாகிய அகார முதலிய வர்ணங்களில் ஸங்கர்ஷணர் ப்ரத்யும்நர் அநிருத்தர் வாஸுதேவர் என்கிற த்யாநத்தையும் செய்யவேணுமென்று விதித்தவாறு.

உ. 𑌜𑌾𑌗𑌰𑌿𑌤𑌸𑍍𑌥𑌾𑌨𑍋 𑌵𑍈𑌶𑍍𑌵𑌾𑌨𑌰𑍋𑌽𑌕𑌾𑌰𑌃 𑌪𑍍𑌰𑌥𑌮𑌾 𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍇𑌰𑌾𑌦𑌿𑌮𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌦𑍍𑌵𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌹 𑌵𑍈 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍 𑌕𑌾𑌮𑌾𑌨𑌾𑌦𑌿𑌶𑍍𑌚 𑌭𑌵𑌤𑌿 𑌯 𑌏𑌵𑌂 𑌵𑍇𑌦 ||

౨. జాగరితస్థానో వైశ్వానరోఽకారః ప్రథమా మాత్రాఽఽప్తేరాదిమత్త్వాద్వాఽఽప్నోతి హ వై స
ర్వాన్ కామానాదిశ్చ భవతి య ఏవం వేద॥ ౯॥

(ப - ம்.) 𑌜𑌾𑌗𑌰𑌿𑌤𑌸𑍍𑌥𑌾𑌨𑌃 - ஜாகரணஸ்தாநத்தி லிருக்கிற, 𑌵𑍈𑌶𑍍𑌵𑌾𑌨𑌰𑌃 - வைச்வாநரனானவன், 𑌅𑌕𑌾𑌰𑌃 - அகாரமாகிய, 𑌪𑍍𑌰𑌥𑌮𑌾 𑌮𑌾𑌤𑍍𑌰𑌾 - ப்ரணவத்தில் முதல் மாத்திரை, 𑌆𑌪𑍍𑌤𑍇𑌃 - வியாபித்திருக்கின்றமையாலும், 𑌆𑌦𑌿𑌮𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 - ஆதியுடையதாகின்றமையாலு மிங்ஙனம் சொல்லப்படும், 𑌯𑌃 𑌏𑌵𑌂 𑌵𑍇𑌦 - எவனிவ்வாறு அறிவனோ, அவன், 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍 𑌕𑌾𑌮𑌾𑌨𑍍 - எல்லா இஷ்டங்களையும், 𑌆𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌹 𑌵𑍈 - அடைகிறானன்றோ, 𑌆𑌦𑌿𑌃 𑌚 𑌭𑌵𑌤𑌿 - முதல்வனுயுமாகிறான்.

ஸ०-ஹா. அங்கு விசேஷநியமம் கூறப்படுகிறது. ஜாகாரஸ்தாந முடைய வைச்வாநரன் அகாரமாகிய முதல் மாத்திரை. அகரத்தால் எல்லாச் சொற்களுமாக்ரமிக்கப்பட்டு நிற்கின்றமையாலும், ஆதியுடைத்தா யிருக்கின்றமையாலும், எல்லா வஸ்துக்களிலும் வ்யாபித்து முதல்வனுயிருக்கிற வைச்வாநரனை முதல் மாத்திரை யென்று சொல்லத்தகும். இந்த ஸாத்ருச்யத்தா லகாரம் வைச்வாநரனைச் சொல்லுமன்றோ. பேருக்கும் பொருளுக்கும் பேதமில்லை யென்று முன்னமே சொன்னோம். எல்லாச் சொர்க்களிலும் அகாரம் வ்யாபித்திருக்கிற தென்பதில், "அகாரோவைஸர்வாவாக்" (அகாரமே எல்லாச் சொற்களும்) என்கிற சுருதி ப்ரமாணமாகின்றது. வைச்வாநரன் வ்யாபித்திருப்பவனென்று, "தஸ்யஹவைதஸ்யாத்மநோ வைச்வாநரஸ்யமூர்த்தைவஸுதேஜா:" (இவ்வைச்வாநரனே யுலகமெல்லாம்) என்கிற சுருதி விளங்கச் செய்கிறது. இவ்வாறறிந்தவனுக்குப் பயன்கூறுகின்றது. எல்லா காமங்களையுமடைகிறான் எல்லோரிலும் முதல்வனாகிறான்.

ரா-ஹா. கீழ்ச்சொல்லிய விஷயத்தையே விரித்துச் சொல்லுகிறது. முதல் மாத்திரையாகிய அகாரத்தில் ஜாகரிதஸ்தாநமுடைய வைச்வாநரனென்கிற அநிருத்தனென்று த்யாநம் செய்யவேண்டியது. அகாரமாக வைச்வாநரமூர்த்தியை த்யாநம் செய்வதற்குக் காரணமென்ன வென்றால்; வ்யாப்தியும், ஆதியாயிருக்கும் தன்மையும். அதாவது அநிருத்தமூர்த்தி ஸமஸ்தஜகத்தையும் வ்யாபித்திருப்பதுபோல ஸமஸ்த சப்தத்திற்கு மகாரம் காரணமாகின்றமையால் எல்லா சப்தங்களிலும் வ்யாபித்திருக்கையும் எல்லாச் சொற்களுக்கும் முதலான அகாரத்தா லநிருத்தன் போதிக்கப்படுகையும். இந்த ஸாத்ருச்யத்தையறிந்து இவ்வாறு த்யாநம் செய்கிறவன் எல்லா இஷ்டங்களையுமடைகிறான். எல்லாரிலு முதல்வனாகிறான்.

௩. ஸ்வப்நஸ்தாநஸ்தைஜஸ உகாரோ த்விதீயா மாத்ரோத்கர்ஷாதுபயத்வாத்வோத்கர்ஷதி ஹ வை ஜ்ஞாநஸந்ததிம் ஸமாநஶ்ச பவதி நாஸ்யாப்ரஹ்மவித்குலே பவதி ய ஏவம் வேத॥ ௧௦॥

3. స్వప్నస్థానస్తైజస ఉకారో ద్వితీయా మాత్రోత్కర్షా దుభయత్వాద్వా ఉత్కర్షతి హ వై జ్ఞానసంతతిం సమానశ్చ భవతి నాస్యాబ్రహ్మవిత్కులే భవతి య ఏవం వేద॥ ౧౦॥

(ப - ம்.) ஸ்வப்நஸ்தாநஃ - ஸ்வப்நஸ்தாநத்தையுடையவனு யிருக்கிற, தைஜஸஃ - தைஜஸன், த்விதீயா மாத்ரா - இரண்டாவது மாத்திரையாகிய, உகாரஃ - உகாரம், உத்கர்ஷாத் - அதிசயத்தாலும், உபயத்வாத்வா - இரண்டு ரூபமாயிருக்கின்றமையாலு மிங்ஙனம் சொல்லப்படுகிறது, யஃ ஏவம் வேத - யவனிதை யறிகிருனே அவன், ஜ்ஞாநஸந்ததிம் - ஜ்ஞாநஸந்தாநத்தை, உத்கர்ஷதி ஹ வை - அதிசயமாயடைகிருன், ஸமாநஃ பவதி - ஸரியானவனுகிருன், அஸ்ய குலே அப்ரஹ்மவித் ந பவதி - இவன் வம்சத்தில் ப்ரம்மஜ்ஞாநமில்லாதவன் பிறப்பதில்லை.

௱௦-ஹா. தைஜஸன் விச்வமூர்த்தியிலும்சிறந்தவனுகின்றமையாலும் அகாரத்திலு முகாரம் சிறப்புடையதாகின்றமையாலும்,தைஜஸன் விச்வமூர்த்தி ப்ராஜ்ஞமூர்த்தி இவர்களுக்கு நடுவே தைஜஸமூர்த்தி யிருக்கின்றமையாலும், அகார மகாரங்களுக்கு நடுவில் உகார மிருப்பதாலும் ஸ்வப்நஸ்தாநத்திலிருக்கிற தைஜஸன், இரண்டாவது மாத்திரையாகிய, உகாரமாகிருன். இதை யறிந்தவனுக்கு பயன் கூறுகின்றது. ஜ்ஞாநஸந்ததி வளர்ந்து சிறந்தவனுவானிதை யறிந்த மகான். இவன்தன் தோழருக்குப்போலப் பகைவருக்கு மிஷ்டனுகிருன். ஆகையாலனைவருக்கு ஸமானனுகிருன். இவன் குலத்தில் ப்ரம்மஜ்ஞாநமில்லாதவன் பிறப்பதில்லை.

ரா-ஹா. ஸ்வப்நஸ்தாநத்தி லிருக்கின்றமையால் தைஜஸனென்று சொல்லப்படுகிற ப்ரத்யும்நன் உகாரமாகிய இரண்டாவது மாத்திரையாகிருன். அதாவது இரண்டாவது மாத்திரையாகிய உகாரத்தில் தைஜஸனென்கிற ப்ரத்யும்நனென்று த்யாநம்செய்ய வேண்டுமென்றவாறு. இதற்குக் காரணமென்ன வென்ருல் ; உத்கர்ஷமும், இரண்டாயிருக்கையும். அதாவது விச்வமூர்த்தி யென்கிற அநிருத்தமூர்த்தியைக் காட்டிலும் தைஜஸமூர்த்தி யென்கிற ப்ரத்யும்நமூர்த்தி சிறந்தவராவதுபோல அகாரத்திலு முகாரம் சிறந்திருப்பதும்; விச்வமூர்த்தி ப்ராஜ்ஞமூர்த்தி இவர்களுக்கு நடுவில் தைஜஸமூர்த்தி யிருப்பதுபோல அகார மகாரங்களுக்கு நடுவிலுகார மிருப்பதுமாம். விச்வமூர்த்தியை விட தைஜஸமூர்த்தி ஸூக்ஷ்மரூப முடையவராகையால் சிறந்தவராகிருர். ஆயினும், ஸகல குணங்களும் பூர்ணமாயிருப்பது கொண்டு ஸமாநர்களே யாகிருர்கள். அகாரத்திலு முகாரம் லயஸ்தாநமாகையால் சிறப்புடையதாகின்றது. அக்ஷரமாவதுகொண்டு ஸமாநமே யாமென்றறிக. இவ்வாறறிந்தவனுக்குப் பயன்சொல்லுகிறது. இங்ஙனமறிந்தவன் சிஷ்யர் சிஷ்யருக்கு சிஷ்யர் எல்லாரும் ஜ்ஞாநவான்களாகி ஜ்ஞாநஸந்ததியால் சிரேஷ்டனுகிருன். இதர ஸந்தாநங்களிலுமிவன் ஸந்தாநத்தில் ப்ரம்மவித்யை யதிசயப்படுமென்று கருத்து.உயர்ந்தவரோடு தானுமுயர்ந்தவனுகின்றமையால் ஸமாநனுகிருன் இவன் குலத்தில் ப்ரம்மஜ்ஞாநமில்லாதவன் ஜநிப்பதில்லை,

௪. ஸுஷுப்தஸ்தாநஃ ப்ராஜ்ஞோ மகாரஸ்த்ருதீயா மாத்ரா மிதேரபீதேர்வா மிநோதி ஹ வா இதꣳ ஸர்வமபீதிஶ்ச பவதி ய ஏவம் வேத॥ ௧௧॥

౪. సుషుప్తస్థానః ప్రాజ్ఞో మకారస్తృతీయా మాత్రా మితేరపీతేర్వా మినోతి హవా ఇదం సర్వమపీతిశ్చ భవతి య ఏవం వేద॥ ౧౧॥

(ப - ம்.) ஸுஷுப்தஸ்தாநஃ - ஸுஷுப்திஸ்தாநத்தையுடையனுன, ப்ராஜ்ஞஃ - ப்ராஜ்ஞன், த்ருதீயா மாத்ரா - மூன்றுவது மாத்திரையாகிய மகாரஃ - மகாரமாகிறுன், மிதேஃ - அளவிடப்படுகின்றமையாலும், அபீதேர்வா - லயத்தையடைகின்றமையாலு மிங்ஙனம் சொல்லப்படுகிறது யஃ ஏவம் வேத - யவனிவ்வாறு அறிகிறுனே அவன், இதம் ஸர்வம் மிநோதி ஹவை - இவையெல்லாவற்றையு மளக்கின்றுன், அபீதிஃ ச பவதி - லயமுண்டாகிறது.

ஸ0-ஹா. நெல்லு முதலியவைபடி மரக்கால் முதலிய வற்றுல் அளக்கப்படும்போது படிமுதலிய வற்றில் உள்ளே சேர்ந்து வெளியாகின்றன. அவைபோல விச்வதைஜஸமூர்த்திகள், ப்ராஜ்ஞமூர்த்தியில் லயகாலத்தில்லயித்து அதாவதுப்ராஜ்ஞமூர்த்திக்குள் சேர்ந்து உத்பத்திகாலத்தில் வெளியாகின்றமையால். ப்ராஜ்ஞமூர்த்தி விச்வ தைஜஸர்களை யளக்கிறுப்போல் காணப்படுகிறது. அவ்வாறே ப்ரணவத்தைச் சொல்லி முடித்து மறுபடியும் சொல்லும்போது அதாவது 'ஓமோம்' என்னும்போது முதலில் அகாரஉகாரங்கள் மகாரத்தில் புகுகிறுப்போலவும்பின்பு மகாரத்தினின்று வெளியாகிறுப்போலவும்தோற்றுகின்றமைகொண்டு மகாரம் அகார உகாரங்களை யளக்கிறதென்று சொல்லவழியிருக்கிறது. அளக்குங் காலத்திற்போல உள்ளே புகுந்து வெளிவருகின்ற ஸமாநதோற்றுகையாலென்றறிக. ஆக இவ்வாறு ப்ராஜ்ஞமூர்த்தி, விச்வ தைஜஸமூர்த்திகளை யளக்கின்றமையாலும், மகாரம் அகார உகாரங்களை யளக்கின்றமையாலும், ப்ராஜ்ஞமூர்த்தி மகாரமாகிறுன். அன்றியே ப்ரணவத்தைச் சொல்லி முடிக்கும்போது மகாரத்தில் அகார உகாரங்கள் சேர்ந்து போகின்றமையாலும், ஸுஷுப்தி காலத்தில் ப்ராஜ்ஞமூர்யதியில் விச்வ தைஜஸமூர்த்திகள் சேர்ந்து போகின்றமையாலும் ப்ராஜ்ஞன் மகாரமாகிறுன். இவ்வாறறிந்தவன் ஜகத்தையுள்ளபடி யறிகிறுன். ஜகத்காரண ப்ரம்மஸ்வரூபனுயாகிறுன், என்று வித்வானுக்கு பலம் கூறுகின்றது. முக்யமான ப்ரணவத்தையுபாஸிப்பது சிறந்ததென்று கூறுவதற்கு இவ்விடம் பயன் கூறப்பட்டதேயன்றி யிதற்குத் தனித்துப் பயனில்லை யென்று கொள்க.

ரா-ஹா. ஸுஷுப்தி ஸ்நாதத்திலிருக்கின்றமையால் ப்ராஜ்ஞனென்கிற ஸங்கர்ஷணமூர்த்தி மூன்றுவது மாத்திரையாகிய மகாரமாகிறுன். மூன்றுவது மாத்திரையாகிய மகாரத்தில் ஸங்கர்ஷணனென்று த்யாநம்செய்ய வேண்டுமென்றவாறு. இதற்குக் காரணம் யாதெனில் அளவும் லயமும். அதாவது ப்ராஜ்ஞன், அளவுகோலளவிடப்படும் பொருள்களைச் சேருவதுபோலவ்வோ வஸ்துக்களி லாத்மாவாகச் சேருகின்றமையால் ஸமஸ்தத்தையும அளவிடுவதுபோல, மகாரமும் எல்லைக்கல்போல அகார உகாரங்களுடைய எல்லையில் அதாவது கோடியில் நின்று இதுவரையில் அகார உகாரங்கள் இனி மேலில்லை யென்று எல்லைக்கல்லளந்து காட்டுவதுபோலவே யளந்து காட்டுவதும், ப்ராஜ்ஞனிடத்தில் ஸகல ஜகத்தும் லயிப்பதுபோல" மகாரத்தில் அகார உகாரங்கள் லயிப்பதுமாம். மகாரத்தில் அகார உகாரங்கள் முடிவுபெறுகின்றமையால், மகாரத்தி லகார உகாரங்கள் லயிக்கின்றன வென்று கூறப்பட்டதென்றறிக. இவ்வாறறிந்தவனுக்கு பயன்வருமாறுகிரமத்தில் கூறுகின்றது. யவனிவ்விஷயத்தை யறிகிறுனே அவன், இவ்வுலகத்தை யெல்லா மளவிட்டறிகிறுன். பரமாத்மஸ்வரூபத்தில் லயம்பெறுகிறுன்.

பதாந்வயார்த்தபேதங்கள்.

கீழ் மூன்று சுலோகங்களிலும் சொல்லப்பட்ட ஸாத்ருச்யத்தால் விச்வமூர்த்தி முதலிய மூன்று மூர்த்திகளையும் அகார முதலிய மூன்று மாத்திரைகளும் போதிக்கின்றமையால் போதகமாகிய சப்தத்திற்கும் போதிக்கப்படும் பொருளுக்கு மபேதமாகையால் மூன்று மாத்திரைகளும் மூன்று மூர்த்திகளென்று சங்கரபாஷ்யத்தில் வ்யாக்யாநம். த்யாநவிதியாக இராமாநுஜ பாஷ்யத்தில் வ்யாக்யாநம் செய்யப்பட்டது. இதர விஷயங்களில் பேதாபேத ஸூக்ஷ்மங்கள் இம்மூன்று சுலோகங்களுக்கு மிரண்டு மதபாஷ்யங்களையும் கமநத்துடன் படித்தால் நன்றாய் விளங்கும்.

𑌇𑌤𑌿 𑌮𑌾𑌣𑍍𑌡𑍂𑌕𑍍𑌯𑍋𑌪𑌨𑌿𑌷𑌦𑌿 𑌤𑍃𑌤𑍀𑌯𑌖𑌣𑍍𑌡𑌃.

𑌅𑌥 𑌮𑌾𑌣𑍍𑌡𑍂𑌕𑍍𑌯𑍋𑌪𑌨𑌿𑌷𑌦𑌿 𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑌖𑌣𑍍𑌡𑌃.

க 𑌅𑌮𑌾𑌤𑍍𑌰𑌶𑍍𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑍋𑌽𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑍍𑌯𑌃 𑌪𑍍𑌰𑌪𑌞𑍍𑌚𑍋𑌪𑌶𑌮𑌃 𑌶𑌿𑌵𑍋𑌽𑌦𑍍𑌵𑍈𑌤 𑌏𑌵𑌮𑍋𑌂𑌕𑌾𑌰 𑌆𑌤𑍍𑌮𑍈𑌵 𑌸𑌂𑌵𑌿𑌶𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌯 𑌏𑌵𑌂 𑌵𑍇𑌦 𑌯 𑌏𑌵𑌂 𑌵𑍇𑌦॥

౧. అమాత్రశ్చతుర్థోఽవ్యవహార్యః ప్రపంచోపశమశ్శివోఽద్వైతఏవ మోంకారఆత్మైవ సంవిశత్యాత్మనాత్మానంయఏవంవేదయఏవంవేద॥

(ப-ம்.) 𑌅𑌮𑌾𑌤𑍍𑌰𑌃 - அளவில்லாதவனாய்; 𑌅𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑍍𑌯𑌃 - வாகிந்திரியத்திற்கு கோசரியாதவனாய், 𑌪𑍍𑌰𑌪𑌞𑍍𑌚𑍋𑌪𑌶𑌮𑌃 - ஸகலப்ரபஞ்சலயஸ்தாநமாய், 𑌶𑌿𑌵𑌃 - மங்களரூபனாய், 𑌅𑌦𑍍𑌵𑍈𑌤𑌃 - த்வைதமில்லாதவனாய், 𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑌃 - நாலாவதுமூர்த்தியாயிருக்கிற, 𑌆𑌤𑍍𑌮𑌾 - அந்தராத்மாவாகிய வ்யூஹ வாசுதேவமூர்த்தி, 𑌏𑌵𑌮𑍍 - இப்படிப்பட்ட, 𑌓𑌂𑌕𑌾𑌰𑌃𑌏𑌵 - ப்ரணவமே யாகிறான், 𑌯𑌃𑌏𑌵𑌮𑍍𑌵𑍇𑌦 - எவனிப்படி யறிகிறானோ அவன், 𑌆𑌤𑍍𑌮𑌨𑌾 - பரமாத்மாநுக்ரஹத்தினால், 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑍍 - பரமாத்மாவை - 𑌸𑌂𑌵𑌿𑌶𑌤𑌿 - அடைகிறான்.

ஸ0-ஹா. வாக்கு மநம் இவற்றுக்கு கோசரமாகாமையால் இப்படிப்பட்டதென்று சொல்லவும் நினைக்கவுங் கூடாதஸ்வரூபமுடைய துரீயமூர்த்தியாகிய ஆத்மா, மாத்திரையில்லாதவனாகிறான். ப்ரபஞ்ச நிவ்ருத்திக்குக் காரணமாகிறான். மங்களரூபியாகிறான். த்வைதமில்லாதவனாகிறான், அதாவது பேதமில்லாதவனாகிறான். ஓங்கார்ஸ்வரூபியாகிறான். இவ்வாறு ஓங்காரத்யாநம் செய்கிறவனால் ப்ரயோகிக்கப்பட்ட மூன்றுமாத்திரைகளுடைய ப்ரணவமானது மூன்று பாதங்களுடைய ஆத்மாவேயாம். இவ்வாறறிந்தவன் தன்னாலே தன்னைச் சேருகிறான். பரமாத்மைக்யத்தைப் பெறுகிறானென்றவாறு. பரமாத்மாவுக்கு மிவனுக்கும் பேதமில்லாமையால் தன்னைச் சேருகின்றானென்றது. பரமார்த்தத்தை யறிந்தவர், ஸம்ஸாரபீஜமாகிய மூன்றாவது ரூபத்தைநீக்கி ஆத்மாவில் ப்ரவேசித்தமையால் மறுபடியுண்டாகிறதில்லை. துரீயமூர்த்தி ஸம்ஸாரபீஜமாகாமையாலெ

ன்க. கயிற்றையும் பாம்பையும் விவேகித் தறிந்தவனுக்கு கயிற்றில் லயித்த பாம்பு மறுபடியும் பிறக்குமோ; புத்தியில் ஸம்ஸ்கார மழிந்தபின்பு முன்போல மறுபடியும் ஸர்ப்பப்ரமம் தோற்றுதன்றோ. உத்தமாதிகாரிக ளல்லாதவர்களுக்காயின் இந்த ப்ரணவம் உபாஸநம் செய்கிற மகிமையால், நல்லறிவுகூடி நல்நடத்தையி லிழிந்து ஸந்யாஸிகளாய் மாத்திரைகளுக்கும் பாதங்களுக்கும் ஸாமார்ய்யத்தை யறியும்படியாக, ப்ரம்மஜ்ஞாநத்திற்கு ஸாதநமாய் ஆலம்பநமாகின்றது. இவ்விஷயங்களின் ஸூக்ஷ்மம் கௌடபாதகாரிகையில் வெளியாகும்.

ரா-ஹா. அளவற்ற மகிமை பொருந்தியவனாகையால் கீழ்ச்சொல்லியபடி கருமேந்திரியம் ஜ்ஞாநேந்திரியம் முதலிய வற்றிற்கு விஷயமாகாதவனாயிருக்கிற ஆத்மாவாகிய வ்யூஹவாஸுதேவமூர்த்தி நாலாவதாகிய நாதத்திற்குப் பொருளாகிறான். ஓங்காரத்திலேகதேசமாகிய நாதரூபியாகிறானென்றவாறு. அகார உகார மகாரங்களுக்குமேல் நாதமாகையால் நாதம் நாலாவதாகிறது. ஸமஸ்தப்ரணவத்தின் பொருளாகிய பரவாஸுதேவமூர்த்திக்கும் வ்யூஹவாஸுதேவமூர்த்திக்கு மதிகபேதமில்லை யென்று காட்டுவதற்கு, நாதத்தின் பொருளாகிய வ்யூஹவாஸுதேவமூர்த்தியை ப்ரணவமே யென்றது. இவ்வாறு அநிருத்தன் ப்ரத்யும்நன் ஸங்கர்ஷணன் வ்யூஹவாஸுதேவன் பரவாஸுதேவன், இவர்களாக அகார உகார மகாரநாத ஸமஸ்தப்ரணவங்களை யுபாஸிக்கிறவர்கள் பரமாத்மாநுக்ரஹத்தினால் அந்த உபாயத்தினாலே கிரமத்தில் அந்த பரமாத்மாவையே சேருகிறார்கள்.

பதாந்வயார்த்தபேதங்கள்.

இவ்வுபநிஷத்தில் ப்ரணவமென்கிற ஓங்காரத்தைக்கொண்டு பரமாத்மத்யாநம் செய்யும்படி சொல்லுகிறது. இந்த ப்ரணவமானது அகாரம், உகாரம், மகாரம், என்று மூன்று வர்ணங்களையுடையது. இம்மூன்றெழுத்தும் சேர்ந்து ‘ஓம்’ என்று ஒரெழுத்தாயிருக்கிறது. இதிலடங்கிய மூன்றெழுத்தையும் தனித்தனியே த்யாநித்து ஒன்றுசேர்த்தும் த்யாநிக்கவேணும். தனியே த்யாநிக்கும்போது அகாரத்தை, விச்வமூர்த்தி, என்றும், உகாரத்தை, தைஜஸமூர்தி, என்றும், மகாரத்தை ப்ராஜ்ஞமூர்தி யென்றும் த்யாநிக்கவேண்டும். அகண்டரூபியாகிய பரமாத்மா ஒருவரேயாயினும் அவர் எங்கும் நிறைந்திருக்கின்றமையால் மாயா ஸம்பந்தத்தாலுண்டாகிய இந்த சரீரத்திலு மிருக்கின்றார். இந்த சரீரத்தில் ஜாகரஸ்தாநமென்றும் ஸ்வப்நஸ்தாநமென்றும் ஸுஷுப்திஸ்தாநமென்றும் ஸ்தாநங்களுண்டு. அந்தந்த ஸ்தாநங்களில் ஸம்பந்தத்தைக்கொண்டு அந்தந்த நாமங்கள் அந்த ஒரு பரமாத்மாவுக்கே கிடைத்திருக்கின்றது, ஆகையால் விச்வரென்றும் தைஜஸரென்றும் ப்ராஜ்ஞரென்றும் பரமாத்மாவுக்கு நாமங்களுண்டா யிருக்கின்றன. ஜாகரஸ்தாநத்தி லிருக்கின்றமையால் விச்வமூர்தியென்றும், ஸ்வப்நஸ்தாநத்திலிருக்கின்றமையால் தைஜஸமூர்த்தியென்றும் ஸுஷுப்திஸ்தாநத்திலிருக்கின்றமையால் ப்ராஜ்ஞமூர்த்தியென்றும் பெயராயிற்று. இப்படி த்யாநிப்பது பரமாத்மாவே எல்லாமென்கிற தத்வஜ்ஞாநத்திற்குக் காரணமான ஸமஸ்த ப்ரணவத்யாநத்திற்கு அங்கமாகிறது. ஸமஸ்த ப்ரணவத்யாநமாவது அகார உகார மகாரங்களை யொன்றுசேர்த்துச் சொல்லுவதினாலுண்டா

கிற ப்ரணவமென்கிற ஓங்காரத்தில் அகண்டரூபியாகிய பரமாத்மா என்கிற த்யாநம். அதாவது ப்ரணவமே பரமாத்மா என்கிற த்யாநம். அகண்ட பரமாத்ம ஸ்வரூபத்தையே துரீயமென்கிறது. இந்த த்யாநத்தால் அவித்யை முதலிய தோஷங்கள் நீங்கி ப்ரபஞ்ச ப்ரமம்கழிந்து பரமாத்ஸ்வரூபத்தில் லயம்பெற்று பரப்ரம்மமென்கிற அந்த ஸ்வரூபத்தோடு அபேதமாய் விடுகிறான். பின்பிவனுக்கு ப்ரபஞ்சப்ரமமும் ஸம்ஸாரதுக்கங்களுமில்லை நித்யாநந்த சித்ஸ்வரூபத்தைப் பெறுகிறானென்று சங்கரபாஷ்யாபிப்ராயம். ப்ரணவமென்கிற அக்ஷரத்தை த்யாநிக்கும்படி இவ்வுபநிஷத்து விதிக்கின்றது. அதாவது பரமாத்மாவென்றும் பரப்ரம்மமென்றும் சொல்லப்படுகிறநாராயணநாமமுடைய பகவான். பரவ்யூஹரூபத்தா லைந்துரூபியாயிருக்கிறான். பரத்தில் பரவாஸுதேவமூர்த்தியென்று ஒரு ரூபத்தையும் வ்யூஹத்தில் வாஸுதேவமூர்தி ஸங்கர்ஷணமூர்த்தி ப்ரத்யும்நமூர்த்தி அநிருத்தமூர்த்தி என்று, நான்குரூபத்தையு மடைந்திருக்கிறாரென்றவாறு. இந்த மூர்த்திபேதங்கள், திருமேனி பேதத்தாலும் கல்யாணகுணங்களின் ப்ரகாசம் அப்ரகாசம் இவைகளாலு முண்டாயின. ஸங்கர்ஷணாதி மூர்த்திகளுக்கு வ்யூஹமென்றும் பரவாஸுதேவனுக்கு பரமென்றும் திருநாமம். இந்த பரவாஸுதேவ மூர்த்தியில், ஸகல கல்யாணகுணங்களும் பூர்ணமாய் ப்ரகாசிக்கின்றமையால் இந்த மூர்த்தி ப்ரதாநமூர்த்தி. மற்ற நாலுமூர்த்திகளும் இந்த மூர்த்தியிலிருந்து வெளியாகி சிலசில குணங்கள் ப்ரகாசிக்கும்படி விளங்குகின்றார்கள். ஆகையாலிந்நால்வருமந்த பரவாஸுதேவனுடைய அம்சங்களாகிறார்கள். ஆகவே இந்நால்வரையு மந்த பரவாஸுதேவனுடைய நான்குபாதங்களாகச் சொல்லுகிறார்கள். ஆக இந்நால்வராகிய நாலுபாதங்களை யுடையவனந்த பரவாஸுதேவனாகிய பரமாத்மா. இந்த பரவாஸுதேவ மூர்த்திக்கு எப்போதும் அந்தர்த்தாநம் கிடையாது. மற்ற நாலு மூர்த்திகளுக்கும் பரவாஸுதேவனிடத்தி லந்தர்த்தாநமுண்டு. இந்த அந்தர்த்தாநத்தையே லயமென்றும் சொல்லுகிறது. இவ்வாறு பரவாஸுதேவ மூர்த்தியினிடத்தி லிருந்து ஆவிர்பவித்து அந்தர்தாநத்தை யடைகிற இந்நால்வரில் வ்யூஹவாஸுதேவனைத் துரீயனென்றும் ஸங்கர்ஷண மூர்த்தியை ப்ராஜ்ஞனென்றும் ப்ரத்யும்ந மூர்த்தியை தைஜஸனென்றும் அநிருத்தமூர்த்தியை, விச்வன் அல்லது வைச்வாநரனென்றும் இவ்வுபநிஷத்து பேசுகின்றது. அநிருத்தமூர்த்தி ஜாகரதசையோடு கூடிய ஜீவாத்மாவை நியமிக்கிறான் ஆகையாலே விச்வமூர்த்தி என்று சொல்லப்படுகிறான். ப்ரத்யும்நமூர்த்தி ஸ்வப்நதசையோடு கூடிய ஜீவனை நியமிக்கிறான். ஆகையாலே தைஜஸனென்று சொல்லப்படுகிறான். ஸங்கர்ஷணமூர்த்தி ஸுஷுப்தி தசையோடுகூடிய ஜீவனை நியமிக்கிறான். ஆகையாலே ப்ராஜ்ஞனென்று சொல்லப்படுகிறான். வ்யூஹவாஸுதேவமூர்த்தி இம்மூவரிலும் விலக்ஷணனாகையாலே துரீயனென்று சொல்லப்படுகிறான்; என்று பரமாத்மஸ்வரூபத்தை யறிந்து, ப்ரணவம், அகாரம் உகாரம்

மகாரம் நாதம் இவற்றையுடையதா யிருக்கிறது. நாதமாவது-ஒலி. இந்நா லையும் நாலுமாத்திரைகளாக அறிந்துகொள்க. ஆக ப்ரணவம் நாலுமாத் திரை யுடையதாயிற்று. ஆக இந்நாலுசேர்ந்து ஓமென்று ப்ரணவமாகிறது. இவ்வாறு நாலாகப் பிரிந்திருக்கிற ப்ரணவ மாத்திரைகளுக்கு வ்யஸ்த ப்ர ணவமென்றும், ஒன்றுசேர்ந்த ஓமென்கிற எழுத்துக்கு ஸமஸ்த ப்ரணவ மென்றும் பெயரென்றுப்ரணவ ஸ்வரூபத்தை யறிந்து, அங்கங்கு சொல் லப்பட்ட ஸாத்ருச்யங்களைத் தெரிந்துகொண்டு முதல் மாத்திரையை அதாவது அகாரத்தை அநிருத்த மூர்த்தியாகவும், இரண்டாவது மா த்திரையை அதாவது உகாரத்தை ப்ரத்யும்ந மூர்த்தியாகவும், மூன்று வது மாத்திரையை அதாவது மகாரத்தை ஸங்கர்ஷண மூர்த்தியாகவும், நாலாவது மாத்திரையை அதாவது நாதத்தை வாஸுதேவமூர்த்தியாகவும் ஸமஸ்த ப்ரணவத்தை அதாவது ஒன்றுசேர்ந்த ப்ரணவத்தை பரவாஸு தேவ மூர்த்தியாகவும் த்யாநித்து ஹ்ருதயத்தில் நித்தியபாவனை செய்யக்கட வன். இவ்வாறு த்யாநம் செய்தவன் அந்த பரமாத்மாநுக்ரஹத்தினால் க்ரம த்தில் அதாவது முதலில் அநிருத்த ஸாயுஜ்யத்தைப் பெற்று பின்புப்ரத்யும் நஸாயுஜ்யத்தைப் பெற்று, அதின்பின், ஸங்கர்ஷண ஸாயுஜ்யத்தைப்பெற்று பின்பு வ்யூஹ வாஸுதேவ ஸாயுஜ்யம் பெற்று அந்தத்தில் பரமபதத்தில் பரவாஸுதேவ ஸாயுஜ்யத்தைப் பெற்று புநராவ்ருத்தியின்றி பரப்ரம்மா நந்தத்தை யநுபவிக்கிறான் என்று இராமாநுஜ பாஷ்யத்தின் கருத்து. மற்ற பேத ஸூக்ஷ்மங்களை யிங்கு சொன்ன படிகளுக்கு விரோதமின்றி ஸூக்ஷ்மபுத்தியா லந்தந்த சுலோக வ்யாக்யாநங்களில் கண்டுகொள்க. யஏவம் வேத, 'யஏவம் வேத, என்று இரட்டித்துச் சொன்னது இவ்வுபநிஷத்து முடி ந்ததென்று விளக்குவதற்காம். இதுநிற்க; இவ்வுபநிஷத்தின் கருத்தை அத் வைதமதத்தில் சங்கராசாரியருக்கு முற்பட்டவராகிய கௌடபாதாசாரிய ரென்கிற ஒரு பண்டிதர், அத்வைதமதத்திற் கநுகூலமாக அனேக சுலோக ங்களால் வெளியிட்டிருக்கிறார். அந்த சுலோகங்களுக்கு கௌடபாதகாரிகை என்று பெயரிட்டிருக்கிறார்கள். கௌடபாதகாரிகை என்று அந்த சுலோக ங்களுக்குக் காரணப்பெயராகின்றது. காரிகை என்றால் சுலோகமென்று பொருள். அந்த சுலோகங்களை நான்கு ப்ரகரணமாகப் பிரித்திருக்கின்றார். முதலாவது ஆகம ப்ரகரணம், இரண்டாவது வைதத்ய ப்ரகரணம் மூன்று வது அத்வைத ப்ரகரணம் நான்காவது அலாதசாந்திப் ப்ரகரணம். இந்த ப்ரகரணங்களில் ஆகம ப்ரகரணமானது மாண்டூக்கியோபநிஷத்தில் சொல் லப்படுகிற விஷயங்களை யதிகமாகக் கலந்து செய்யப்பட்டிருக்கிறது. இப் படிப்பட்ட கௌடபாதகாரிகைகளுக்கு நாலு ப்ரகரணங்களுக்கும் சங்கராசா ரியர் வ்யாக்யாநம் செய்திருக்கிறார். மாண்டூக்யோபநிஷத்திற்கு தனியேசங்க ராசாரியர் வ்யாக்யாநம் செய்யவில்லை. கௌடபாத காரிகைகளில் முதல்ப்ரகர ணத்திற்கு பாஷ்யம்செய்யும்போது மாண்டூக்யோபநிஷத்தை எடுத்து வ்யாக்

யாநம் செய்துவிட்டார். இவ்வாறு மாண்டூக்யோபநிஷத்திற்கும் கௌடபாத காரிகையில் முதல் ப்ரகரணத்திற்கும் கலந்து கலந்து வ்யாக்யாநம் செய்யப் பட்டிருக்கின்றமையால் பலர் கௌடபாத காரிகையில் முதல் ப்ரகரணத்தையும் மாண்டூக்யோபநிஷத்தே என்று ப்ரமிக்கிறார்கள். சுமார் இருநூறு வருஷத்திற்கு முன்னிருந்த கூரநாராயணமுனி, என்று பெயருடைய விசிஷ்டாத்வைதமத பண்டிதரொருவர் கொடபாதகாரிகையில் முதல் ப்ரகரணத்தையும் மாண்டூக்யோபநிஷத்தாக எடுத்துக்கொண்டு வ்யாக்யாநம் செய்திருக்கிறார். ஆயினும் நாம் அந்த சுலோகங்களை மாண்டூக்யோபநிஷத் தல்லவென்றே நினைக்கவேண்டி யிருக்கிறது. அத்வைதமதாசாரியராகிய சங்கராசாரியரும், அத்வைதமதத்தில் சிறந்த பண்டிதராகிய ஆநந்தகிரி ஆசாரியரும் அந்த சுலோகங்களை மாண்டூக்யோபநிஷத் தல்லவென்றும் கௌடபாத காரிகையில் ஆகம ப்ரகரணமென்றும் சொல்லியிருக்கின்றமையாலும் விசிஷ்டாத்வைத மத பண்டிதராகிய இரங்க ராமாநுஜமுனி மாண்டூக்யோபநிஷத்திற்கு வ்யாக்யாநம் செய்தவர் இந்த சுலோகங்களுக்கு வ்யாக்யாநம் செய்யாமையாலும் மற்றும் சில காரணங்களாலு மென்றறிக. ஆயினும் சில விடங்களில் முன்னோர் செய்த க்ரந்தங்களில் அந்த காரிகைகளை ப்ரமாணமாக எடுத்திருப்பதால் ஸந்தேகத்திற் கிடமுண்டு. புத்திமான்கள் உண்மையை யாராய்ந்துகொள்வர். ஆகவே இவ்வளவே மாண்டூக்யோபநிஷத்தென்று இவ்வளவுக்கும் கௌடபாதகாரிகை பாஷ்யத்தில் கலந்திருக்கிற மாண்டூக்யோபநிஷத்தின் சங்கரபாஷ்யத்தையும், இராமாநுஜபாஷ்யத்தையும், அந்தந்த சுருதிகளின்கீழ் எழுதினேனென்றறிக.

இதி மாண்டூக்யோபநிஷதி சதுர்த்த: கண்ட:.

மாண்டூக்யோபநிஷத் ஸமாப்தா.

ஹரி: ஓம்.

கௌடபாதகாரிகா வ்யாக்யா:.

கௌடபாதகாரிகாயாம் [illegible]ப்ரகரணம்.

பதாந்வயார்த்தபேதங்கள்.

இந்த கௌடபாத காரிகையின் கதைகளை மாண்டூக்யோபநிஷத்தின் முடிவில் சொல்லியிருக்கிறோம். அங்கு, சொன்ன காரணங்களால் கௌடபாதகாரிகை முதல் ப்ரகரணத்தில் உபநிஷத்தென்கிற ஸந்தேக மனேகருக்குண்டா யிருக்கின்றமையாலும் மற்ற மூன்று ப்ரகரணங்களிலு மத்வைத மதத்தை நன்கு சொல்லியிருப்பதாலு மிதுவும் புத்திமான்களுக்கு அவச்யமென்று இந்தகௌடபாதகாரிகை நாலுப்ரகரணங்களையும் சங்ரபாஷ்யத்தோடும் சிலவிடங்களில் விசேஷாபிப்பிராயங்களோடும் விசேஷ விஸ்தரமின்றி எழுதுகிறோம்.

கௌடபாதகாரிகைக்கு சங்கரபாஷ்யத்திலுள்ள அவதாரிகை.

சங்கராசாரியர்செய்த மங்களச்சுலோகம்.

ப்ரஜ்ஞாநாம்சுப்ரதாநைஸ்த்திரசரநிகரவ்யாபிபிர்வ்யாப்யலோகாந், புங்க்த்வாபோகாந்தஸ்தவிஷ்டாந்புநரபிவிஷயோத்பாஸிதாந்காமஜந்யாந், பீத்வா ஸர்வாந்விசேஷாந் ஸ்வபிதிமதுரபுங்மாயயாபோஜயந்நோ மாயாஸங்க்யாதுரீயம்பரமம்ருதமஜம்ப்ரம்மயத்தந்நதோஸ்மி.

இந்தசுலோகத்தின் கருத்து.

ஜ்ஞாநரூபியாகிய ப்ரம்மம், மாயாஸம்பந்தத்தால் பசு பக்ஷி மநுஷ்யாதி ரூபத்தையடைந்த ஜீவர்களைப்போல் தோற்றுகிற தன்னுடைய அம்சங்களா லிவ்வுலகமெல்லாம் வ்யாபித்து ஜாகரதசையில் ஸ்தூல போகங்களையும் ஸ்வப்நத்தில் காமஸங்கல்பத்தாலு மவித்தையினாலும் கர்மத்தினாலும் தோற்றுகிற ஸூக்ஷ்ம போகங்களையும் அநுபவித்து ஸுஷுப்தியில் ஒருவித போகமுமின்றி காரணாநந்த ஸ்வரூபமாய் நின்று ஸர்வாதீதமாய்க்கொண்டு நாம் ஸுகதுக்கங்களை யநுபவிக்கும்படி செய்கிற நித்யசுத்த பரப்ரம்மத்தை வணங்கினேனென்பதாம். இதனால் ஜீவனுக்கும் ப்ரம்மத்திற்கு மபேதம் ஸூசிக்கப்படுகிறதென்று அத்வைதமத ஸம்ப்ரதாயம்.

மற்றொரு மங்களசுலோகம்.

யோவிச்வாத்மாவிதிஜவிஷயாந்ப்ராச்யபோகாந்ஸ்த்தவிஷ்டாந் பச்சாச்சாந்யாந்ஸ்வமதிவிபவாந் ஜ்யோதிஷாஸ்வேநஸூக்ஷ்மாந், ஸர்வாநேதாந்புநரபிசநைஸ்ஸ்வாத்மநிஸ்தாபயித்வாஹித்வாஸர்வாந்விசேஷாந் விகதகுணகண: பாத்வஸௌநஸ்துரீய:. *

இதின்கருத்து,

தருமம் அதர்மம் இவைகளாலுண்டாகிய விஷயங்களை யநுபவித்து ஸூக்ஷ்மஜ்யோதிஸ்ஸாலே ஸ்வப்நத்தை யநுபவித்து எல்லாவற்றையும் தன்னி லடக்கிகொண்டு ஸமஸ்த விசேஷங்களும் நீங்கி நிர்க்குணமாயிருக்கிற துரீய சுத்த ப்ரம்மம் விக்நங்களைப் போக்கி நம்மையளித்து ரக்ஷிக்கவேணுமென்பதாம்.

---

* நாலாமடி மற்றமூன்றடிகளுக்குச் சமாநமாயிராமையால், குற்றமில்லை.

அபிப்பிராய விசேஷங்கள்.

இவ்விரண்டும் சங்கராசாரியர் செய்த சுலோகங்களேயென்று அநேக பண்டிதர்களி னபிப்ராயம். சிலர் முதல் சுலோகம் கௌடபாதகாரிகையில் சேர்ந்ததென்றும் இரண்டாவது சுலோகம் சங்கராசாரியர் செய்ததென்றும் சொல்லுகிறார்கள். இது ஸரியல்ல; ஏனென்றால் முதல் சுலோகம் கௌடபாதகாரிகையாயின் அதற்கு சங்கராசாரியர் மற்ற சுலோகங்களுக்குப்போல வ்யாக்யானம் செய்திருப்பார்; அவ்வாறு வ்யாக்யானம் செய்யாமையால் முதல் சுலோகமும் சங்கராசாரியர் செய்ததேயாமென்று ஆநந்தகிரியாசாரியர் சொல்லியிருக்கிறார்.

அவதாரிகை.

𑌶𑌂-𑌭𑌾. வேதாந்தங்களின் பொருள்களை சுருக்கமாகவிளக்கத்தக்க நாலுப்ரகரணங்க ளடங்கிய மாண்டூக்யோபநிஷத் வ்யாக்யாநமான கௌடபாதகாரிகை நம்மால் விவரிக்கப்படுகிறது. இந்த கௌடபாதகாரிகையில் ரோகத்தினால் வருத்தமடைந்தவனுக்கு ரோகம்நீங்குவதுபோல இவ்வாத்மாவுக்கு பிரபஞ்சம் நீங்கினால் அத்வைதமுண்டாகின்றதாகையால் அவித்யையால் செய்யப்பட்ட இந்தபிரபஞ்சம் வித்யையினால் நிவ்ருத்திக்குமென்றெண்ணி ப்ரம்மவித்யை சொல்லுவதற்கு ஆரம்பிக்கப்படுகிறது அதில் ஆத்மாவின் அறிவுக்குக் காரணமான ஓங்காரத்தை நிரூபிக்கிறதற்கு முதல் பிரகரணம் ஆரம்பிக்கப்படுகிறது. இரண்டாவது பிரகரணத்தில் பிரபஞ்சங்கள் பொய்யென்றும் மூன்றாவதுபிரகரணத்தில் அத்வைதத்தின் மெய்யானதன்மையும் நான்காவது பிரகரணத்தில் அத்வைதத்தின் மெய்யானதன்மைக்கு விரோதியான ஆக்ஷேபங்களுக்கு ஸமாதானமும் சொல்லப்படுகிறது.

க. 𑌬𑌹𑌿𑌃𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑍋𑌵𑌿𑌭𑍁𑌰𑍍𑌵𑌿𑌶𑍍𑌵𑍋𑌹𑍍𑌯𑌨𑍍𑌤𑌃𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌸𑍍𑌤𑍁𑌤𑍈𑌜𑌸𑌃 |
𑌘𑌨𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌸𑍍𑌤𑌥𑌾𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑌏𑌕𑌏𑌵 𑌤𑍍𑌰𑌿𑌧𑌾𑌸𑍍𑌮𑍃𑌤𑌃 ||

உ. 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌕𑍍𑌷𑌿𑌮𑍁𑌖𑍇𑌵𑌿𑌶𑍍𑌵𑍋𑌮𑌨𑌸𑍍𑌯𑌨𑍍𑌤𑌸𑍍𑌤𑍁𑌤𑍈𑌜𑌸𑌃 |
𑌆𑌕𑌾𑌶𑍇𑌚𑌹𑍃𑌦𑌿𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌧𑌾𑌦𑍇𑌹𑍇𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 ||

౧. బహిఃప్రజ్ఞో విభుర్విశ్వో హ్యంతఃప్రజ్ఞస్తు తైజసః।
ఘనప్రజ్ఞస్తథా ప్రాజ్ఞ ఏక ఏవ త్రిధా స్మృతః ॥

౨. దక్షిణాక్షిముఖే విశ్వో మనస్యంతశ్చ తైజసః ।
ఆకాశే చ హృది ప్రాజ్ఞస్త్రిధా దేహే వ్యవస్థితః॥

(ப் - ம்.) 𑌬𑌹𑌿𑌃𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌃 - வெளியறிவுடையவனும், 𑌵𑌿𑌭𑍁𑌃 - யெங்கும் நிறைந்தவனுமான, 𑌵𑌿𑌶𑍍𑌵𑌃 - வைச்வாநரனும், 𑌅𑌨𑍍𑌤𑌃𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌃 - உள்ளறிவையுடையவனான, 𑌤𑍈𑌜𑌸𑌃 - தைஜஸனும், 𑌤𑌥𑌾 - அப்படியே, 𑌘𑌨𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌃 - நிறைந்த அறிவையுடைய, 𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑌃 - ப்ராஜ்ஞனும், 𑌏𑌕 𑌏𑌵 - ஒருவன் தானே, 𑌤𑍍𑌰𑌿𑌧𑌾 - மூன்று ஸ்தானத்தில் இருக்கிறவனாக, 𑌸𑍍𑌮𑍃𑌤𑌃 - யெண்ணப்பட்டான்.

(ப் - ம்.) 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌕𑍍𑌷𑌿𑌮𑍁𑌖𑍇 - வலது கண்ணாகிற முகத்தில், 𑌵𑌿𑌶𑍍𑌵𑌃 - வைச்வாநரனும், 𑌅𑌨𑍍𑌤𑌃 - உள்ளே, 𑌮𑌨𑌸𑌿 - மனதில், 𑌤𑍈𑌜

ஸ: - தைஜஸனும், ஹ்ருதி - ஹ்ருதயமென்கிற, ஆகாசே ச - ஆகாயத்தில் ப்ராஜ்ஞ: - ப்ராஜ்ஞனும், தேஹே - தேகத்தில், த்ரிதா - மூன்று விதமாக, வ்யவஸ்தித: - இருக்கிறான்.

ஸம்-ஹா. கிரமமாக மூன்றுஸ்தானத்தை யுடைத்தாயிருக்கையாலும் அநேனயென்கிற நினைவினாலும் மூன்றுஸ்தானத்திலும் வேறுபட்டவனாயும் ஒருவனாகவும் சுத்தனாகவும் ஒன்றுடன்சேராதவனாகவும் ஈச்வரனிருக்கிறான்.

வி-ஹா. சகலாவயவங்களுக்குள் வலதுகண்ணே முக்கியமாகையால் கண்ணால் அறியுமவனை வைச்வாநரனும் அறிந்ததை மனதால் நினைக்கிறதாகையால் மனதாலறியும் தைஜஸனும் இந்திரியங்களின் ஸம்பந்தமில்லாமல் ஹ்ருதயாகாசத்தில் இருக்கிறவறிவு ரூபமான ப்ராஜ்ஞனும் ஒன்றுஎன்று சொல்லப்பட்டது. ஈச்வரன் ஒருவனே இந்தேகத்தில் மூன்றுஇடங்களில ஜாகரிதஸ்தானனாகவும் ஸ்வப்நஸ்தானனாகவும் ஸுஷுப்தஸ்தானனாகவும் வலதுகண்ணிலும் மனதிலும் ஹ்ருதயாகாசத்திலும் மூன்றிடத்திலு மிருக்கிறான்.

௩. விச்வோ ஹி ஸ்தூலபுங் நித்யம் தைஜஸ: ப்ரவிவிக்தபுக் ।
ஆநந்தபுக் ததா ப்ராஜ்ஞஸ் த்ரிதா போகம் நிபோதத ॥

௪. ஸ்தூலம் தர்பயதே விச்வம் ப்ரவிவிக்தம் து தைஜஸம் ।
ஆநந்தச்ச ததா ப்ராஜ்ஞம் த்ரிதா த்ருப்திம் நிபோதத ॥

3. విశ్వోహిస్థూలభుఙ్నిత్యం తైజసఃప్రవివిక్తభుక్ ।
ఆనందభుక్తథాప్రాజ్ఞస్త్రిధాభోగంనిబోధత ॥

௪. స్థూలంతర్పయతేవిశ్వంప్రవివిక్తంతుతైజసమ్ ।
ఆనందశ్చతథాప్రాజ్ఞంత్రిధాతృప్తింనిబోధత॥

(ப - ம்.) விச்வ:-வைச்வாநரனானவன், நித்யம்- ஸர்வகாலமும், ஸ்தூலபுக் - உருவம் முதலியதை யனுபவிக்குமவன், தைஜஸோ ஹி - தைஜஸனோ வென்றால், ப்ரவிவிக்தபுக் - பிறரறியாதபோகங்களை யடையுமவன், ததா - அப்படியே, ப்ராஜ்ஞ: - ப்ராஜ்ஞன் என்பவன், ஆநந்தபுக் - ஆநந்தத்தை யனுபவிக்குமவன் (இதி) - (என்று) த்ரிதா - மூன்று விதமாக, போகம் - போகத்தை, நிபோதத - அறிவீர்கள்.

(ப-ம்.) விச்வம் - விச்வமூர்த்தியை, ஸ்தூலம் - ஸ்தூலரூப மானது, தர்பயதே - த்ருப்திப்படுகின்றது. தைஜஸம்து - தைஜஸமூர்தியை, ப்ரவிவிக்தம் - ஏகாந்தம் த்ருப்திப்படுத்துகிறது. ததா - அப்படி, ப்ராஜ்ஞம்- ப்ராஜ்ஞமூர்த்தியை, ஆநந்தச்ச-அநந்தம்த்ருப்தியடைவிக்கிறது. த்ருப்திம் - த்ருப்தியை, த்ரிதா நிபோதத - மூன்றுவிதமாயறியுங்கோள்.

ஸம்-ஹா. விச்வன் முதலியவர்களுக்கு மூன்றுவிதமாக தேகத்தில் இருப்பைச் சொல்லி அவர்களுக்கே மூன்றுவிதமான போகத்தையும் இவ்விரண்டு சுலோகத்தால் சொல்லுகிறது.

வி-ஸா. அறிவீர்கள் யென்று இம்மந்திரத்தை யறிந்த ஈசுவரன் தான் உபதேசிக்குமவர்களைப்பார்த்துச் சொல்லுகிறது.

௫. 𑌤𑍍𑌰𑌿𑌷𑍁𑌧𑌾𑌮𑌸𑍁𑌯𑌦𑍍 𑌭𑍋𑌜𑍍𑌯𑌂 𑌭𑍋𑌕𑍍𑌤𑌾𑌯𑌶𑍍𑌚𑌪𑍍𑌰𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌃 ।
𑌵𑍇𑌦𑍈𑌤𑌦𑍁𑌭𑌯𑌂𑌯𑌸𑍍𑌤𑍁𑌸𑌭𑍁𑌞𑍍𑌜𑌾𑌨𑍋 𑌨𑌲𑌿𑌪𑍍𑌯𑌤𑍇॥

౫. త్రిషుధామసుయద్భోజ్యంభోక్తాయశ్చప్రకీర్తితః ।
వేదైతదుభయంయస్తుసభుంజానోనలిప్యతే॥

(ப - ம்.) 𑌤𑍍𑌰𑌿𑌷𑍁 - மூன்று விதமான, 𑌧𑌾𑌮𑌸𑍁 - ஸ்தானங்களில், 𑌯𑌤𑍍 - யாதொன்று, 𑌭𑍋𑌜𑍍𑌯𑌂 - அனுபவிக்கக் கூடியதோ, 𑌯𑌶𑍍𑌚 - யாதொருவனும், 𑌭𑍋𑌕𑍍𑌤𑌾 - அனுபவிக்கிறவனாக, 𑌪𑍍𑌰𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌃 - கூறப்பட்டானோ, 𑌏𑌤𑌤𑍍 - இந்த, 𑌉𑌭𑌯𑌂 - இரண்டையும், 𑌯𑌃 - யாதொருவன், 𑌵𑍇𑌦 - அறிகிறானோ, 𑌸 𑌤𑍁 - அவன் தானே, 𑌭𑍁𑌞𑍍𑌜𑌾𑌨𑌃 - ஸகல வஸ்துக்களையு புஜித்தபோதிலும், 𑌨𑌲𑌿𑌪𑍍𑌯𑌤𑍇 - அதுகளில் உண்டான விரோதங்களால் பூசப்பட்டவனாகிறதில்லை.

ஸம்-ஸா. ஜாகர ஸ்வப்ந ஸுஷுப்தி யென்றுகூறப்பட்டமூன்றிடத்தில் ஸ்தூல ப்ரவிவிக்த ஆநந்த யென்று சொல்லப்பட்ட ஒன்றேயாகிய மூன்று போகங்களையும் விச்வ தைஜஸ ப்ராஜ்ஞ என்று சொல்லப்பட்ட ஒருவனேயாகி யனுபவிக்கிறவனையும் யாரொருவன் போஜ்யமிதென்றும் போக்தாவிவனென்று மறிகிறானோ அவன் அப்போகத்தாலுண்டான தோஷங்களை யடையமாட்டான்.

வி-ஸா. விச்வன்முதலிய ரூபங்களையும் அவர்களின் இடத்தையும் அவர்களின் போகங்களையும் உள்ளபடி யறிந்தவர்களுக்கு பலத்தைச்சொல்லுகிறது.

௬. 𑌪𑍍𑌰𑌭𑌵𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌭𑌾𑌵𑌾𑌨𑌾𑌂𑌸𑌤𑌾𑌮𑌿𑌤𑌿𑌵𑌿𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑌃 ।
𑌸𑌰𑍍𑌵𑌂𑌜𑌨𑌯𑌤𑌿𑌪𑍍𑌰𑌾𑌣𑌶𑍍𑌚𑍇𑌤𑍋𑌂𑌶𑍂𑌨𑍍𑌪𑍁𑌰𑍁𑌷𑌃𑌪𑍃𑌥𑌕𑍍॥

౬. ప్రభవస్సర్వభావానాంసతామితివినిశ్చయః।
సర్వంజనయతిప్రాణశ్చేతోంశూన్పురుషఃపృథక్॥

(ப - ம்.) 𑌸𑌰𑍍𑌵𑌭𑌾𑌵𑌾𑌨𑌾𑌂 - எல்லாப் பொருள்களுக்கும், 𑌪𑍍𑌰𑌭𑌵𑌃 - பிறப்பிடம் - (𑌆𑌤𑍍𑌮𑌾 - மேற்கூறிய ஆன்மாவே), 𑌇𑌤𑌿 - என்று, 𑌸𑌤𑌾𑌂 - நல்லோர்களுடைய, 𑌵𑌿𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑌃 - உறுதி, 𑌪𑍍𑌰𑌾𑌣𑌃 - பிராணன் எனகிற 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 - புருஷன் எனவும் பெயர்கொண்ட மேற்கூறிய ஆன்மாவே 𑌸𑌰𑍍𑌵𑌂 - யெல்லாப் பொருளையும், 𑌚𑍇𑌤𑍋𑌂𑌶𑍂𑌨𑍍 - அறிவென்னும்வெளிச்சத்தோடு கூடின ஜீவர்களையும், 𑌪𑍃𑌥𑌕𑍍 - தனியாக, 𑌜𑌨𑌯𑌤𑌿 - உண்டு பண்ணுகிறது.

ஸம்-ஸா. ஆதிகாலத்தில் காரணரூபமா யிருக்கிற வஸ்துக்களுக்கே பிறப்பு. இதுவே திண்ணம். இத்தால் இல்லாத வஸதுக்களுக்கு பிறப்பில்லை யென்று விளங்குகிறது. இது ஆதியில் விதையாயிருந்த வைகளையே செடிகளாகக் காண்கையால் தெரியலாம். புருஷனென்றும் ப்ராணன் என்றும் சொல்லப்பட்ட ஆன்மாவே அறிவின் தோற்றங்களான இவர்களையும் மற்ற யெல்லாப் பொருளையும் விளக்கின்றது.

வி-ஹா. ஏஷயோநிஸ்ஸர்வஸ்ய, என்று மேற்கூறிய ப்ராம்மணத்தின் அர்த்தத்தை இம்மந்திரம் சொல்லுகிறது.

௭. விபூதிம் ப்ரஸவம் த்வன்யே மன்யந்தே ஸ்ருஷ்டிசிந்தகா: ।
ஸ்வப்னமாயாஸரூபேதி ஸ்ருஷ்டிரன்யைர்விகல்பிதா ॥

౭. విభూతిం ప్రసవంత్వన్యే మన్యంతే సృష్టిచింతకాః ।
స్వప్న మాయాస్వరూపేతి సృష్టిరన్యైర్వికల్పితా ॥

(ப - ம்.) த்வன்யே - வேறு, ஸ்ருஷ்டிசிந்தகா: - படைப்பை விசாரிக்குமவர்கள், ப்ரஸவம் - படைப்பை, விபூதிம் - பிரம்மத்தின் பலவிதமான பிறப்பாக, மன்யந்தே - யெண்ணுகிறார்கள், அன்யை: - வேறு சிலர்களால், ஸ்ருஷ்டி: - படைப்பானது, ஸ்வப்னமாயாஸரூபா - கனவிலுண்டான பொய்யான பொருள்களின் உருவுடையதென்று, விகல்பிதா - அனேக விதமாக சொல்லப்பட்டது.

ஸா-ஹா. ஈசனது படைப்பைச் சிந்தைசெய்யுமவர்கள் பிரமத்தின் விரிவுகளே இப்புவனங்களென்று சொல்லுவார்கள். வேறுசிலர்கள் ஈசன் படைப்பு ஸ்வப்நம்போலவும் இந்திரசாலம்போலவும் என்று சொல்லுவார்கள். ஆனால் முமுக்ஷுக்கள் விச்வ தைஜஸ ப்ராஜ்ஞ என்கிற மூன்றுஉருவத்திலும் வேறுபட்ட மெய்யான உருவத்தையே விரும்புவர்கள்.

வி-ஹா. முன் மந்திரத்தில் ஸதாமிதிவிநிச்சய: என்கிற நல்லோர் கொள்கைக்கு எதிரான தீயோர்கொள்கையை விவரிக்கிறது.

௮. இச்சாமாத்ரம் ப்ரபோ: ஸ்ருஷ்டிரிதி ஸ்ருஷ்டௌ விநிச்சிதா: ।
காலாத்ப்ரஸூதிம் பூதாநாம் மன்யந்தே காலசிந்தகா: ॥

౮. ఇచ్ఛామాత్రం ప్రభోస్సృష్టిరితి సృష్టౌవినిశ్చితాః ।
కాలాత్ప్రసూతిం భూతానాం మన్యంతే కాలచింతకాః ॥

(ப - ம்.) ஸ்ருஷ்டௌ - படைப்பில், விநிச்சிதா: - முடிவான கொள்கையை யுடையவர்கள், ப்ரபோ: - ஈசனுடைய, ஸ்ருஷ்டி: - படைப்பு, இச்சாமாத்ரம் - யெண்ணமே, இதி - என்றும், காலசிந்தகா: - காலத்தையே தெய்வமாக யெண்ணுமவர்கள், பூதாநாம் - பொருள்களுக்கு, காலாத் - காலத்தின் நின்றும், ப்ரஸூதிம் - பிறப்பையும், மன்யந்தே - யெண்ணுகிறார்கள்.

ஸா-ஹா. ஈச்வரவாதிகளான சிலர் ஈசனுடைய யெண்ணமொழிய படைப்புவேறில்லை யென்றும் காலவாதிகளான சிலர் யெல்லாப் பொருள்களும் காலத்தில் நின்றுமுண்டாகின்றன வென்றும் சொல்லுகிறார்கள்.

வி-ஹா. எல்லாப் பொருள்களையும் எக்காலத்திலும் அறியும் தன்மையும் எவ்வித வல்லமையும் உள்ள ஈசனானே மற்றொரு உதவிகளன்றிக்கே தனதிச்சையினாலேயே உலகங்களை யமைக்கிறான் என்பது வேதாந்தமறிந்தவர்களின் முடிவான கொள்கை காலவாதிகள் காலமே காரணமென்று சொல்லுவர்கள்.

௯. போகார்த்தம் ஸ்ருஷ்டிரித்யந்யே க்ரீடார்த்தமிதி சாபரே |
தேவஸ்யைஷ ஸ்வபாவோऽயமாப்தகாமஸ்ய கா ஸ்ப்ருஹா ||

౯. భోగార్థం సృష్టిరిత్యన్యే క్రీడార్థమితి చాపరే ।
దేవస్యైష స్వభావోఽయమాప్తకామస్య కా స్పృహా॥

(ப-ம்.) அந்யே - வேறு சிலர், ஸ்ருஷ்டி꞉ - படைப்பானது, ப்ரபோ꞉ - ஈசனுக்கு, போகார்த்தம் - சுகத்தின் பொருட்டென்றும். அபரே - வேறு சிலர், க்ரீடார்த்தமிதி - விளையாட்டின் பொருட்டென்றும், மந்யந்தே - வெண்ணுகிறார்கள், தேவஸ்ய - ஈசனுக்கு, அயம் - இந்த விளையாட்டாயிருக்கிற, ஏஷ꞉ - இந்தபடைப்பானது, ஸ்வபாவ꞉ - தனக்கானதன்மை, ஆப்தகாமஸ்ய - வெல்லாப் பயனையும் அடைந்தவனுக்கு, ஸ்ப்ருஹா - ஆசை, கா - ஏது.

பா0-ஹா. ஈசன் படைப்பு சுகத்திற்கென்று சிலரும் விளையாட்டுக்கென்று சிலரும் சொல்லுவர்கள். கயிறு முதலியவை பாம்பு முதலானதாக தோற்றுவது அஜ்ஞானத்தின் தன்மையாவதுபோல் ஈசன் சுபாவத்தால் படைக்கிறான்.

வி-ஹா. சுகம் என்றும் விளையாடல் என்றும் ஈசன் படைப்புக்குப் பயனகளை சிற்சிலர் சொல்லுவர்கள் பயன்களை அடைந்தவனுக்கு வேறு பயனை யெண்ணவேண்டியதில்லை யாதலால் ஈசனுக்கு விளையாட்டான படைப்பானது இயல்பு.

௧௦. நிவ்ருத்தே꞉ ஸர்வது꞉கானாமீஶான꞉ ப்ரபுரவ்யய꞉ |
அத்வைத꞉ ஸர்வபாவானாம் தேவஸ்துர்யோ விபு꞉ ஸ்ம்ருத꞉ ||

౧౦. నివృత్తేస్సర్వదుఃఖానామీశానః ప్రభురవ్యయః।
అద్వైతస్సర్వభావానాం దేవస్తుర్యో విభుస్స్మృతః॥

(ப-ம்.) ஸர்வது꞉கானாம் - எல்லாதுக்கங்களுடையவும், நிவ்ருத்தே꞉ - நாசத்திற்கு, ஈஶான꞉ - நியந்தாவாயும், ப்ரபு꞉ - ஸ்வாமியாயும், அவ்யய꞉ - அழிவில்லாதவனாயும், விபு꞉ - வ்யாபியாயுமிருக்கிற, துர்ய꞉ தேவ꞉ - துரியதேவன், ஸர்வபாவானாம் - எல்லாபதார்த்தங்களுக்கும், அத்வைத꞉ - பேதமில்லாதவன்.

பா0-ஹா. இந்த துரீய ப்ரம்மஸ்வரூபத்தை யறிந்தபோது ஸமஸ்த துக்கங்களும் நீங்குகின்றன. ஏனென்றால் ஸமஸ்த பேதங்களும் நீங்கிப்போகின்றமையா லென்க. பேதமுண்டாகிலன்றோ துக்கங்களுக்குக் காரணமுண்டு.

வி-ஹா. எல்லா துக்கங்களும் நிவ்ருத்திப்பதற்குக் காரணமாய் ப்ரம்மருத்திராதிகளை நியமிக்கிறவனாய் மித்யாஜ்ஞானம் நீங்குவதற்கு ஹேதுவாயிருப்பவன் துரியரூபி.

௧௧. கார்யகாரணபத்தௌ தாவிஷ்யேதே விஶ்வதைஜஸௌ |
ப்ராஜ்ஞ꞉ காரணபத்தஸ்து த்வௌ தௌ துர்யே ந ஸித்யத꞉ ||

౧౧. కార్యకారణబద్ధౌ తావిష్యేతే విశ్వతైజసౌ ।
ప్రాజ్ఞః కారణబద్ధస్తు ద్వౌ తౌ తుర్యే న సిద్ధ్యతః॥

(ப-ம்.) 𑌤𑍌𑌵𑌿𑌶𑍍𑌵𑌤𑍈𑌜𑌸𑍌 - அந்தவிச்வமூர்த்தியும் தைஜஸமூர்த்தியும், 𑌕𑌾𑌰𑍍𑌯𑌕𑌾𑌰𑌣𑌬𑌦𑍍𑌧𑍌 - கார்யம் காரணம் இவைகளின் பந்தமுடையவர்களாக, 𑌇𑌷𑍍𑌯𑍇𑌤𑍇 - கொள்ளப்படுகிறார்கள், 𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑌃 - ப்ராஜ்ஞமூர்த்தியும், 𑌕𑌾𑌰𑌣𑌬𑌦𑍍𑌧𑌃 - காரணபந்தமுடையவராகக் கொள்ளப்படுகிறார், 𑌤𑍁𑌰𑍍𑌯𑍇 - துரீயமூர்த்தியில், 𑌤𑍌𑌦𑍍𑌵𑍌 - அந்த இரண்டுவிதபந்தங்களும், 𑌨𑌸𑌿𑌧𑍍𑌯𑌤𑌃 - சேராமலிருக்கின்றன.

ஸ௦-ஸா. துரீயஸ்வரூபத்தை விசதம் செய்வதற்கு விச்வ தைஜஸ ப்ராஜ்ஞர்களின் தோஷங்களைச் சொல்லுகிறது. பலம், பீஜம், இவ்விரண்டாலும் விச்வ தைஜஸர்களும் பீஜத்தால் ப்ராஜ்ஞனும் கட்டுபெட்டிருக்கிறார்கள். துரீயனுக்கு எவ்வித பந்தமுமில்லை.

வி-ஸா. இந்த பந்தாபந்தங்கள் ஜீவாத்மாவின் வழியாலே இந்த மூர்த்திகளுக்குண்டாகிறது சுயமாகவல்ல. சுயமாகா எல்லா மூர்த்திகளும் நிர்தோஷ கல்யாணகுணமுடையவர்களேயாம்.

௧௨. 𑌨𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂𑌨𑌪𑌰𑌾𑌂𑌶𑍍𑌚𑍈𑌵𑌨𑌸𑌤𑍍𑌯𑌂𑌨𑌾𑌪𑌿𑌚𑌾𑌨𑍃𑌤𑌮𑍍 |
𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑌃𑌕𑌿𑌂𑌚𑌨𑌸𑌂𑌵𑍇𑌤𑍍𑌤𑌿𑌤𑍁𑌰𑍍𑌯𑌂𑌤𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌦𑍃𑌕𑍍𑌸𑌦𑌾 ||

౧౨. నాత్మానంనాపరాంశ్చైవనసత్యంనాపిచానృతమ్ ।
ప్రాజ్ఞఃకించనసంవేత్తితుర్యంతత్సర్వదృక్సదా॥

(ப-ம்.) 𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑌃 - ப்ராஜ்ஞமூர்த்தி, 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑍍 - ஆத்மஸ்வரூபத்தையும், 𑌪𑌰𑌾𑌂𑌶𑍍𑌚 - இதரஸ்வரூபங்களையும், 𑌸𑌤𑍍𑌯𑌮𑍍 - ஸத்யஸ்வரூபத்தையும், 𑌅𑌨𑍃𑌤𑌮𑍍 - மித்யாரூபத்தையும், 𑌅𑌪𑌿𑌕𑌿𑌂𑌚𑌨 - மற்றுள்ள எந்த விஷயத்தையும், 𑌨𑌸𑌂𑌵𑍇𑌤𑍍𑌤𑌿 - அறிகிறதில்லை. 𑌤𑍁𑌰𑍍𑌯𑌮𑍍𑌤𑌤𑍍 - அந்ததுரீயரூபமானது, 𑌸𑌦𑌾 - எப்போதும், 𑌸𑌰𑍍𑌵𑌦𑍃𑌕𑍍 - எல்லாவற்றையு மறியாநிற்கும்.

ஸ௦-ஸா. ப்ராஜ்ஞன் பீஜநித்திரையுடையனகையாலே ஸ்வஸ்வரூபாதிகளை யறிவதில்லை. துரீயனுக்கு எப்போதும் ஸர்வதர்சகமுமுண்டு. அஜ்ஞாநாந்ய தாஜ்ஞாநங்களில்லாதவன் துரீயன். அஜ்ஞாநஸம்பந்தமுடையவன் ப்ராஜ்ஞன். ஸூர்யப்ரகாசத்தில் அப்ரகாசமுமந்யதாப்ரகாசமும் கிடையாதன்றோ.

வி-ஸா. ப்ராஜ்ஞன் ஜீவனுடைய ஸ்வரூபஸுகத்தைவிடமற்றொன்றை யதிஷ்டிக்கிறதில்லை. துரீயன் முக்தாத்மாக்களுக்கு எல்லாவற்றையும் ப்ரகாசிக்கச் செய்கிறான்.

௧௩. 𑌦𑍍𑌵𑍈𑌤𑌸𑍍𑌯𑌾𑌗𑍍𑌰𑌹𑌣𑌂𑌤𑍁𑌲𑍍𑌯𑌮𑍁𑌭𑌯𑍋𑌃𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑌤𑍁𑌰𑍍𑌯𑌯𑍋𑌃 |
𑌬𑍀𑌜𑌨𑌿𑌦𑍍𑌰𑌾𑌯𑍁𑌤𑌃𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑌸𑌾𑌵𑌤𑍁𑌰𑍍𑌯𑍇𑌨𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 ||

౧౩. ద్వైతస్యాగ్రహణంతుల్యముభయోఃప్రాజ్ఞతుర్యయోః।
బీజనిద్రాయుతఃప్రాజ్ఞస్సాచతుర్యేనవిద్యతే॥

(ப-ம்.) 𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑌤𑍁𑌰𑍍𑌯𑌯𑍋𑌃𑌉𑌭𑌯𑍋𑌃 - ப்ராஜ்ஞ துரீயர்களிருவர்க்கும், 𑌦𑍍𑌵𑍈𑌤𑌸𑍍𑌯𑌾𑌗𑍍𑌰𑌹𑌣𑌮𑍍 - பேதஜ்ஞாந மில்லாதிருப்பது, 𑌤𑍁𑌲𑍍𑌯𑌮𑍍 - ஸமாநமானது, 𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑌃 - ப்ராஜ்ஞமூர்த்தி, 𑌬𑍀𑌜𑌨𑌿𑌦𑍍𑌰𑌾𑌯𑍁𑌤𑌃 - பீஜநித்திரையோடுகூடினவன், 𑌤𑍁𑌰𑍍𑌯𑍇 - துரீயமூர்த்தியில், 𑌸𑌾𑌨𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 - அந்தநித்ரையில்லை.

ஸ0-ஹா. பேதப்ரபஞ்சஜ்ஞாந மிருவருக்கு மில்லாமையால் ப்ராஜ்ஞ துரீயர்களு க்கு பேதமென்ன வென்கிற சங்கையை நீக்குவதற்கு இந்தசுலோகம். அந்யதாஜ்ஞாநத் திற்குக் காரணமான அஜ்ஞாநஸம்பந்தம் ப்ராஜ்ஞமூர்த்தியி லிருக்கின்றது துரீயத்தி லந்த ஸம்பந்தமில்லை. ஆகையாலிதுவே பேதமென்று கருத்து.

வி-ஹா. அஹங்கார மமகாரங்களை யுண்டுபண்ணி வையாமலிருக்கிற ஸ்வபாவ மிருவருக்கு முண்டாயினும் அஹங்கார மமகாரங்களுக்குக் காரணமான ஸம்ஸாரஸம்ப ந்தத்தைக் கல்பித்துவைத்திருக்கிறுன் ஜீவாத்மாவுக்கு ப்ராஜ்ஞமூர்த்தி. மோக்ஷத்தை யே ஸங்கல்பிக்கிறுன் துரீயமூர்த்தி என்றுபொருள்.

கச. 𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑌨𑌿𑌦𑍍𑌰𑌾𑌯𑍁𑌤𑌾𑌵𑌾𑌦𑍍𑌯𑍌𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑌸𑍍𑌤𑍍𑌵𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑌨𑌿𑌦𑍍𑌰𑌯𑌾 |
𑌨𑌨𑌿𑌦𑍍𑌰𑌾𑌂𑌨𑍈𑌵𑌚𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑌂𑌤𑍁𑌰𑍍𑌯𑍇𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌾𑌃॥

౧౪. స్వప్ననిద్రాయుతావాద్యౌప్రాజ్ఞస్త్వస్వప్ననిద్రయా ।
ననిద్రాంనైవచస్వప్నంతుర్యేపశ్యన్తినిశ్చితాః॥

(ப-ம்.) 𑌆𑌦𑍍𑌯𑍌 - முதலில் சொல்லப்பட்ட விச்வதைஜஸர்கள், 𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑌨𑌿𑌦𑍍𑌰𑌾𑌯𑍁𑌤𑍌 - ஸ்வப்நம்நித்திரை இவைகளுடன் கூடியவர்கள், 𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑌃- ப்ராஜ்ஞமூர்த்தி, 𑌅𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑌨𑌿𑌦𑍍𑌰𑌯𑌾 - ஸ்வப்நமின்றி நித்திரையோடுகூடியவன், 𑌤𑍁𑌰𑍍𑌯𑍇 - துரீயமூர்த்தியில், 𑌨𑌿𑌦𑍍𑌰𑌾𑌂 - நித்திரையையும், 𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑌂 - ஸ்வப்நத்தையும், 𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌾𑌃 - தத்வஜ்ஞாநிகள், 𑌨𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 - காண்கிறதில்லை.

ஸ0-ஹா. ஸ்வப்நமென்பது அந்யதாஜ்ஞாநம், நித்திரை யென்பது அஜ்ஞாநம் ஜா கரதசையிலு மந்யதாஜ்ஞாநமுண்டு அஜ்ஞாநமுமுண்டு. துரீயனுக்கிவையில்லை.

பதாந்வயார்த்த பேதங்கள்.

கூரநாராயண முனி பாஷ்யத்தில் ஜீவத்வாரத்தாலிந்த ஸ்வப்நநித்ரைக ளாயு மவையில்லாமையையும் கொள்ளவேணும் என்று வ்யாக்யானம் செய் யப்பட்டது.

கரு. 𑌅𑌨𑍍𑌯𑌥𑌾𑌗𑍃𑌹𑍍𑌣𑌤𑌃𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑍋𑌨𑌿𑌦𑍍𑌰𑌾𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑌜𑌾𑌨𑌤𑌃|
𑌵𑌿𑌪𑌰𑍍𑌯𑌾𑌸𑍇𑌤𑌯𑍋𑌃𑌕𑍍𑌷𑍀𑌣𑍇𑌤𑍁𑌰𑍀𑌯𑌂𑌪𑌦𑌮𑌶𑍍𑌨𑍁𑌤𑍇॥

౧౫. అన్యథాగృహ్ణతస్స్వప్నోనిద్రాతత్త్వమజానతః।
విపర్యాసేతయోఃక్షీణేతురీయంపదమశ్నుతే॥

(ப-ம்.) 𑌅𑌨𑍍𑌯𑌥𑌾𑌗𑍃𑌹𑍍𑌣𑌤𑌃 - அந்யதாஜ்ஞாநமுடையவனுக்கு, 𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑌃- ஸ்வப்நமுண்டாகிறது. 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 - வாஸ்தவத்தை, 𑌅𑌜𑌾𑌨𑌤𑌃 - அறியாதவனு க்கு, 𑌨𑌿𑌦𑍍𑌰𑌾 - நித்திரையுண்டாகிறது. 𑌤𑌯𑍋𑌃 𑌵𑌿𑌪𑌰𑍍𑌯𑌾𑌸𑍇𑌕𑍍𑌷𑍀𑌣𑍇 - அந்த ஸ்வப்நநித்திரைகள் மாறிவருவதொழிந்தால், 𑌤𑍁𑌰𑍀𑌯𑌂𑌪𑌦𑌂 𑌅𑌶𑍍𑌨𑍁𑌤𑍇 - துரீயஸ்தாநத்தை யடைகிறுன்.

ஸ0-ஹா. கயிற்றைப் பாம்பென்று ப்ரமிப்பதுபோல ஜகத்தை ப்ரமிப்பது, தத்வத் தையறியாம லிருப்பது, இவைகழிந்து தத்வநிலைபெற்ருல் துரீயஸ்தாநத்தை யடைகி றுன். அப்போது இந்த ஸ்வப்நமும் நித்ரையும் விட்டுப்போகின்றது.

வி-ஹா. தேஹாத்ம ப்ரமத்தையுடையவனுக்கு ப்ரமபரம்பரை யுண்டாகும். பகவானுடைய தத்வத்தை யறியாதவனுக்கு அஜ்ஞானமுண்டாகும் இந்த தேஹாத்மப்ரமம் நீங்கி தத்வஜ்ஞானம் பிறந்தால் பரமாத்ம ஸாக்ஷாத்காரம் பெற்று முக்தனாகிறான்.

௧௬. அநாதிமாயயா ஸுப்தோ யதா ஜீவ: ப்ரபுத்யதே |
அஜமநித்ரமஸ்வப்நமத்வைதம் புத்யதே ததா ||

౧౬. అనాదిమాయయా సుప్తో యదా జీవః ప్రబుధ్యతే ।
అజమనిద్రమస్వప్నమద్వైతం బుధ్యతే తదా ॥

(ப-ம்.) அநாதிமாயயா - ஆதியில்லாத அவித்யையினால், ஸுப்த: - உறங்கிக்கிடக்கிற, ஜீவ: - ஸம்ஸாரத்தையடைந்திருக்கிற ஆத்மா, யதா - எந்தகாலத்தில், ப்ரபுத்யதே - விழித்துக்கொள்ளுகிறானோ, ததா - அப்போது, அஜம் - ஜந்மவிகாரமில்லாததும், அநித்ரம் - நித்திரையில்லாததும், அஸ்வப்நம் - ஸ்வப்நமில்லாததுமான, அத்வைதம் - ப்ரம்மாபேதஸ்வரூபத்தை, புத்யதே - அறிகிறான்.

ஸா-ஹா. ஸம்ஸாரிஜீவன் மூலாவித்யையினாலும் தூலாவித்யையினாலும், என் வீடு, என் மனைவி என் பிள்ளை, என்றிவ்வாறு ப்ரமித்துக்கொண்டு கிடக்கும்போது தத்வஜ்ஞானியாகிய குருவினாலானால் எப்போது நீ ஸம்ஸாரியாகாய் அந்த ப்ரம்மமே யாகிறாய், என்று தத்வோபதேசம் பெறுகிறானோ அப்போது ஜந்மஜராமரணாதி விகார சூந்யமான துரீயாத்வைத ஸ்வரூபத்தையடைகிறான்.

வி-ஹா. அநாதிகர்ம ப்ரவாஹத்தினால்ஸம்ஸாரத்தி லழுந்திக்கிடக்கிற ஜீவன் நிர்ஹேதுக பகவத்கடாக்ஷத்தினால் எப்போது தத்வத்தை யறிகிறானோ அப்போது ஸர்வதுக்க நிவர்த்தகனான பரமாத்மாவை யடைந்துபரமாநந்தத்தை யடைகிறான்.

௧௭. ப்ரபஞ்சோ யதி வித்யேத நிவர்த்தேத ந ஸம்சய: |
மாயாமாத்ரமிதம் த்வைதமத்வைதம் பரமார்த்தத: ||

౧౭. ప్రపంచో యది విద్యేత నివర్తేత న సంశయః ।
మాయామాత్రమిదం ద్వైతమద్వైతం పరమార్థతః ॥

(ப-ம்) ப்ரபஞ்ச: ஜகத்தானது, வித்யேதயதி - உளதாயின், நிவர்த்தேத - ஒழியும், நஸம்சய: - ஸந்தேஹமில்லை. இதம்த்வைதம் - இந்த பேதப்ரபஞ்சமானது, மாயாமாத்ரம் - மாயையினால் தோற்றுகின்றது. பரமார்த்தத: - வாஸ்தவத்தில், அத்வைதம்-அத்வைதமே ஸத்யமாயிருக்கிறது.

ஸா-ஹா. வாஸ்தவத்தில் ப்ரபஞ்சமுண்டாயின் அத்வைதம் ஸத்யமாகாதுதான். ப்ரபஞ்சம் மாயையினால்தோற்றுகிற பொய்யாகையால் அத்வைத விரோதமில்லை. கல்பிக்கப்பட்ட ப்ரபஞ்சமும் கயிற்றில் பாம்புபோலவும் இந்திரஜால வஸ்துக்கள்போலவு முண்மை யறிந்தார்க்கில்லை.ஆகையால் பேதம் பொய். அபேதமே ஸத்யம்.

வி-ஹா. அஹங்கார மமகாரங்கள் இவனுக்கு ஸ்வபாவமாயிருப்பதாயி னப்போது இவனுக்கு முக்தியோக்யதையில்லையாம். கர்மோபாதியினால் வந்ததாகையால் பரமாத்மாநுக்ரஹத்தினாலவை நீங்குமானதால் பரமஸாம்யமாகிய முக்தியுண்டாகும்.

க௮. 𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑍋 𑌵𑌿𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑍇𑌤 𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑍋 𑌯𑌦𑌿 𑌕𑍇𑌨𑌚𑌿𑌤𑍍 ।
𑌉𑌪𑌦𑍇𑌶𑌾𑌦𑌯𑌂 𑌵𑌾𑌦𑍋 𑌜𑍍𑌞𑌾𑌤𑍇 𑌦𑍍𑌵𑍈𑌤𑌂 𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 ॥

౧౮. వికల్పో వినివర్తేత కల్పితో యది కేనచిత్ ।
ఉపదేశాదయం వాదో జ్ఞాతే ద్వైతం న విద్యతే ॥

(ப-ம்) 𑌕𑍇𑌨𑌚𑌿𑌤𑍍 - ஒருகாரணத்தால், 𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌃 - கல்பிக்கப்பட்டிருக்கிற, 𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌃 - பேதமானது, 𑌵𑌿𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑍇𑌤 - நிவ்ருத்தியாகும், 𑌅𑌯𑌂 𑌵𑌾𑌦𑌃 - இந்தபேதவாதம், 𑌉𑌪𑌦𑍇𑌶𑌾𑌤𑍍 - உபதேசத்தால்வந்தது. 𑌜𑍍𑌞𑌾𑌤𑍇 - அறிந்தபின், 𑌦𑍍𑌵𑍈𑌤𑌂 - பேதம் 𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 - கிடையாது.

ம0-ஹா. ஆசாரியன் சிஷ்யன் சாஸ்திரம் என்று பல பேதங்கள் தத்வஞ்ஞாநிகளுக்கே உண்டாயிருக்கின்றமையால் அத்வைதம் சொல்லமுடியாதென்கிற ஆக்ஷேபத்திற்கு சமாதாநமாக இந்தச்லோகம் சொல்லப்படுகிறது. அதாவது உபதேசத்திற்காக ஏற்படுத்தப்பட்ட பேதமேயன்றி இந்த பேதமும் வாஸ்தவமன்றாகையால் தத்வஞ்ஞாநம் பிறந்தபின் இவையு மழிந்துபோகின்றமையா லத்வைதத்திற்கு விரோத மில்லை.

வி-ஹா. மாகான்களுடைய உபதேசத்தா லஹங்கார மமகாரங் கழிந்துபோமாகையால், பகவானுடைய பேரருளால் இவன் முக்தி பெறுவதற்கு விரோத மில்லை. இப்படி மகான்கள் கூறுகின்றார்கள்.

பதார்த்வயார்த்த பேதங்கள்.

“நிவ்ருத்தே ஸர்வதுக்காநாம்” என்கிற சுலோகமுதல் இந்தசுலோகம் வரையிலுள்ள சுலோகங்கள் “நாந்த:ப்ரஜ்ஞம்” என்கிற மந்திரத்தின்கருத்தை வெளியிடுகின்றனவென்று அந்த மந்திரவ்யாக்யாநம் செய்தபின் சங்கரபாஷ்யத்தில் வ்யாக்யானம் செய்யப்பட்டன. “அத்ரைதே ச்லோகா பவந்தி” என்று இந்தசுலோகங்களுக்கு அவதாரிகை எழுதப்பட்டது. அந்த வாக்யத்திற்கு “நாந்த:ப்ரஜ்ஞம்” என்கிற இம்மந்திரத்தின் வ்யாக்யாநமாக இந்தசுலோகங்களிருக்கின்றனவென்று பொருள். கூரநாராயணமுநி இந்த சுலோகங்களை மாண்டூக்யோபநிஷத்தே என நினைத்து சுருதியேசுலோகங்களையும் படிக்கிறதென்று வ்யாக்யாநம் செய்தார். இவர், விசிஷ்டாத்வைதமத பண்டிதரென்று முன் சொல்லியிருக்கிறோம்.

க௯. 𑌵𑌿𑌶𑍍𑌵𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌵𑌵𑌿𑌵𑌕𑍍𑌷𑌾𑌯𑌾𑌮𑌾𑌦𑌿𑌸𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑌮𑍁𑌤𑍍𑌕𑌟𑌮𑍍 ।
𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌸𑌂𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌤𑍍𑌤𑍌 𑌸𑍍𑌯𑌾𑌦𑌾𑌪𑍍𑌤𑌿𑌸𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑌮𑍇𑌵 𑌚 ॥

౧౯. విశ్వస్యాత్వవివక్షాయామాదిసామాన్యముత్కటమ్ ।
మాత్రాసంప్రతిపత్తౌ స్యాదాప్తిసామాన్యమేవ చ ॥

(ப-ம்) 𑌵𑌿𑌶𑍍𑌵𑌸𑍍𑌯 - விச்வமூர்த்திக்கு, 𑌅𑌤𑍍𑌵𑌵𑌿𑌵𑌕𑍍𑌷𑌾𑌯𑌾𑌂 - அகாரரூபத்தைச் சொல்லும்போது, 𑌆𑌦𑌿𑌸𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑌂 - முதலாவதாயிருக்கின்றமையாகிற ஸாத்ருச்யம், 𑌉𑌤𑍍𑌕𑌟𑌂 - ஸ்பஷ்டமாயிருக்கின்றது, 𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌸𑌂𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌤𑍍𑌤𑍌 - அகாரஸ்வரூபத்தை விசாரிக்கும்போது, 𑌆𑌪𑍍𑌤𑌿𑌸𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑌂 - வ்யாபித்திருக்கின்றமையாகிற ஸாத்ருச்யமும் 𑌏𑌵 𑌚 - விளங்குகின்றது.

ஸ0-ஹா. அகாரத்தை விச்வமூர்த்தி என்று சொன்னது இரண்டு ஸாத்ருச்யங்களாலே. முதலாவது முதலாயிருக்கை. இரண்டாவது-வ்யாபித்திருக்கை. அகாரம் சப்தங்களுக்கு முதல். விச்வமூர்த்தி அர்த்தங்களுக்கு முதல். அகாரம் சப்தங்களை வ்யாபித்திருக்கின்றது. விச்வமூர்த்தி அர்த்தங்களை வ்யாபித்திருகின்றான்.

வி-ஹா. விச்வமூர்த்தியை எல்லா அக்ஷரங்களுக்கும் முதலாவதான அகாரத்திற்கு வாச்யனாகத்யானம் செய்கிற உபாஸகனுக்கு பலம் எல்லாரிலும் முதல்வனாகை. வ்யாபககுணத்தாலே விச்வமூர்த்தியை த்யானிப்பவன் விச்வமூர்த்தியினுடையசாம்யத்தைப் பெறுகிறான்,

௨௦. 𑌤𑍈𑌜𑌸𑌸𑍍𑌯𑍋𑌤𑍍𑌵𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑍇 𑌉𑌤𑍍𑌕𑌰𑍍𑌷𑍋 𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇 𑌸𑍍𑌫𑍁𑌟𑌮𑍍।
𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌸𑌮𑍍𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌤𑍍𑌤𑍌 𑌸𑍍𑌯𑌾𑌦𑍁𑌭𑌯𑌤𑍍𑌵𑌂 𑌤𑌥𑌾𑌵𑌿𑌧𑌮𑍍॥

౨౦. తైజసస్యోత్వవిజ్ఞానే ఉత్కర్షో దృశ్యతే స్ఫుటమ్ ।
మాత్రాసమ్ప్రతిపత్తౌ స్యాదుభయత్వం తథావిధమ్॥

(ப-ம்.) 𑌤𑍈𑌜𑌸𑌸𑍍𑌯 - தைஜஸமூர்த்தியை, 𑌉𑌤𑍍𑌵𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑍇 - உகாரரூபமாகத்யானிக்கும்போது, 𑌉𑌤𑍍𑌕𑌰𑍍𑌷𑌃 - உத்கர்ஷமானது, 𑌸𑍍𑌫𑍁𑌟𑌮𑍍 - நன்றாய், 𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇 - காணப்படுகிறது, 𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌸𑌮𑍍𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌤𑍍𑌤𑍌 - உகாரரூபத்தை சிந்திக்கும்போது, 𑌉𑌭𑌯𑌤𑍍𑌵𑌮𑍍 - இரண்டாயிருக்கை, 𑌤𑌥𑌾𑌵𑌿𑌧𑌮𑍍 - அப்படிப்பட்டது.

ஸ0-ஹா. முன்போலவே எல்லாம்.

வி-ஹா. முன் சொன்னபடி தைஜஸனை, உத்கர்ஷத்தால், ப்ரணவத்தி லிரண்டாவது மாத்திரையாகிய உகாரத்திற்குப் பொருளென்று த்யானிப்பவனுக்கு, ஸர்வோத்கர்ஷங்களு முண்டு. முன்சொன்ன வழியே இரண்டுக்கும் காரணமாகின்றமையால் உகாரத்திற்குப் பொருளென்று த்யானிப்பவனுக்கு, ஸர்வஜ்ஞத்வம் ஸமானத்வ மிரண்டு முண்டாகிறது.

௨௧. 𑌮𑌕𑌾𑌰𑌭𑌾𑌵𑍇 𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑌸𑍍𑌯 𑌮𑌾𑌨𑌸𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑌮𑍁𑌤𑍍𑌕𑌟𑌮𑍍 ।
𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌸𑌮𑍍𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌤𑍍𑌤𑍌 𑌤𑍁 𑌲𑌯𑌸𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑌮𑍇𑌵 𑌚॥

౨౧. మకారభావే ప్రాజ్ఞస్య మానసామాన్యముత్కటమ్ ।
మాత్రాసమ్ప్రతిపత్తౌ తు లయసామాన్యమేవ చ॥

(ப-ம்.) 𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑌸𑍍𑌯 - ப்ராஜ்ஞமூர்த்தியை, 𑌮𑌕𑌾𑌰𑌭𑌾𑌵𑍇 - மகாரமாகத்யானிக்கும்போது, 𑌮𑌾𑌨𑌸𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑌮𑍍 𑌉𑌤𑍍𑌕𑌟𑌮𑍍 - அளவிடுதல்ஸமானமாயிருக்கிறது, 𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌸𑌮𑍍𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌤𑍍𑌤𑍌 - மகாஸ்வரூபத்தை சிந்திக்கும்போது, 𑌲𑌯𑌸𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑌮𑍇𑌵 𑌉𑌤𑍍𑌕𑌟𑌮𑍍 - லயமாகிற ஸாத்ருச்யமுத்கடமாய் விளங்குகின்றது.

ஸ0-ஹா. அளவும் லயமும் ப்ராஜ்ஞனுக்கும் மகாரத்திற்கும் ஸாத்ருச்யமாயிருக்கிறதென்று பொருள்.

வி-ஹா. முதல்ஸாம்யத்தா லுபாஸிப்பதற்கு முதற்பலம். இரண்டாவது ஸாம்யத்தாலுபாஸிப்பதற்கு இரண்டாவதுபலம் என்றுபொருள்.

உஉ, 𑌤𑍍𑌰𑌿𑌷𑍁 𑌧𑌾𑌮𑌸𑍁 𑌯𑌸𑍍𑌤𑍁𑌲𑍍𑌯𑌂 𑌸𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑌂 𑌵𑍇𑌤𑍍𑌤𑌿 𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌃 |
𑌸 𑌪𑍂𑌜𑍍𑌯𑌃 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌵𑌨𑍍𑌦𑍍𑌯𑌶𑍍𑌚𑍈𑌵 𑌮𑌹𑌾𑌮𑍁𑌨𑌿𑌃 ||

౨౨. త్రిషుధామసు యస్తుల్యం సామాన్యం వేత్తి నిశ్చితః ।
సపూజ్యస్సర్వభూతానాం వంద్యశ్చైవ మహామునిః॥

(ப - ம்.) 𑌤𑍍𑌰𑌿𑌷𑍁𑌧𑌾𑌮𑌸𑍁 - மூன்றிடங்களிலும், 𑌤𑍁𑌲𑍍𑌯𑌂𑌸𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑌂 - ஸமானமாயிருக்கிற ஸாத்ருச்யத்தை, 𑌯𑌃 𑌵𑍇𑌤𑍍𑌤𑌿 - எவனறிகிறானோ, 𑌸𑌃 𑌏𑌷𑌃 - அப்படிப்பட்ட இவன், 𑌮𑌹𑌾𑌮𑍁𑌨𑌿𑌃 - ப்ரம்மஸ்வரூபத்தை யறிந்தவரில் சிறந்தவன், 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 - எல்லாப்ராணிகளுக்கும், 𑌪𑍂𑌜𑍍𑌯𑌃 - பூசிக்கத்தக்கவன், 𑌵𑌨𑍍𑌦𑍍𑌯𑌶𑍍𑌚 - நமஸ்கரிக்கத்தக்கவன்.

𑌭𑌾-𑌸𑌾. இவ்வாறு அகார உகார மகாரங்களுக்கும் விச்வதைஜஸப்ராஜ்ஞர்களுக்கு முண்டான ஸாம்யத்தை எவனறிகிறானோ அவன் எல்லாறிலும் சிறந்தவன்.

வி-ஸா. கீழ்ச்சொல்லியபடி உபாஸிப்பவனுக்கு, கீழ்ச்சொல்லிய பயன்களுண்டாகிறதென்றறிந்தவனுக்கும், ஸர்வச்லாக்ய முண்டாகுமென்று முன்சொன்ன விஷயத்தை யுறுதிப்படுத்திப் பேசுகிறது.

உங. 𑌅𑌕𑌾𑌰𑍋 𑌨𑌯𑌤𑍇 𑌵𑌿𑌶𑍍𑌵𑌮𑍁𑌕𑌾𑌰𑌶𑍍𑌚𑌾𑌪𑌿 𑌤𑍈𑌜𑌸𑌮𑍍 |
𑌮𑌕𑌾𑌰𑌶𑍍𑌚 𑌪𑍁𑌨𑌃 𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑌂 𑌨𑌾𑌮𑌾𑌤𑍍𑌰𑍇 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 𑌗𑌤𑌿𑌃 ||

౨౩. అకారో నయతే విశ్వముకారశ్చాపి తైజసమ్ ।
మకారశ్చ పునః ప్రాజ్ఞం నామాత్రే విద్యతే గతిః॥

(ப-ம்.) 𑌅𑌕𑌾𑌰𑌃 - அகாரமானது, 𑌵𑌿𑌶𑍍𑌵𑌂 - விச்வமூர்த்தியை, 𑌨𑌯𑌤𑍇 - அடைவிக்கின்றது. 𑌉𑌕𑌾𑌰𑌃 - உகாரமானது, 𑌤𑍈𑌜𑌸𑌂 - தைஜஸமூர்த்தியை, 𑌨𑌯𑌤𑍇 - அடைவிக்கின்றது, 𑌮𑌕𑌾𑌰𑌃𑌪𑍁𑌨𑌃 - மகாரமும், 𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑌂 - ப்ராஜ்ஞமூர்த்தியை, 𑌨𑌯𑌤𑍇 - அடைவிக்கின்றது. 𑌅𑌮𑌾𑌤𑍍𑌰𑍇 - துரீயமூர்தியினிடத்தில், 𑌗𑌤𑌿𑌃 - கதியானது, 𑌨𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 - இல்லை.

𑌭𑌾-𑌸𑌾. மூன்று மாத்திரைகளுக்கும் கதியை அடைகின்ற தன்மை யிருக்கின்றது. பின்பு பீஜம் க்ஷயித்துப்போகையால் துரீயத்தில் கதியில்லை.

வி-ஸா. விச்வாதிமூர்திகளை யுபாஸநம் செய்வதினால் ஸர்வச்லாக்ய பலமுண்டாவதும் தவிர விச்வாதிமூர்தி ப்ராப்தியு முண்டாகிறதென்று சொல்லுகிறது. துரீயமூர்தியை யுபாஸித்தவனுக்கு கதியில்லை என்பதில்லை. கதியுண்டென்று சொல்லவமைந்திருக்க, கதியில்லை என்பதில்லை என்றது, சிலர் கதியில்லை என்று சொல்லுகின்றமையால் வருகிற ஸந்தேஹம் நீக்குவதற்கு.

பதார்த்வயார்த்தபேதங்கள்.

இந்த சுலோகத்தில் விசிஷ்டாத்வைதமத பண்டிதர்களின் பாஷ்யத்தில் வித்யதேகதி: என்கிற விடத்தில் வித்யதே அகதி: என்று பதம். சங்கர பாஷ்யத்தில், வித்யதே, கதி:, என்று பதம்.

விசேஷ விஷயங்கள்.

'விச்வஸ்யாத்வவிவக்ஷாயாம்' என்பதுமுதல் ஐந்துசுலோகங்கள், 'ஸோயமாத்மா' என்கிற சுருதி தொடங்கி நாலுசுருதிகளுக்கு வ்யாக்யாநமாக கௌடபாதாசாரியர்

செய்தவை. சங்கரபாஷ்யத்தில் அந்த நாலு சுருதிகளுக்கும் வ்யாக்யானம் செய்து அதின் பின் இந்த சுலோகங்களை யெடுத்து வ்யாக்யானம் செய்யப்பட்டிருக்கின்றது. விசிஷ்டாத்வைதமத பண்டிதர்களாகிய கூர நாராயணமுனி முதலிய சிலர் இந்தசுலோகங்களையும் மாண்டூக்யோபநிஷத்தாக நினைத்து வ்யாக்யானம் செய்திருக்கிறார்கள். அந்த பாஷ்யங்களை இங்கு எழுதலாயிற்று. இந்த சுலோகங்களுக்கு முன்னும், "அத்ரைதேச்லோகாபவந்தி" என்று அவதாரிகை சங்கரபாஷ்யத்திலுண்டு. அதற்கு முன் சொன்னபடியே பொருள்.

௨௪. 𑌓𑌙𑍍𑌕𑌾𑌰𑌂𑌪𑌾𑌦𑌶𑍋𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌤𑍍𑌪𑌾𑌦𑌾𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌨𑌸𑌂𑌶𑌯𑌃 ।
𑌓𑌙𑍍𑌕𑌾𑌰𑌂𑌪𑌾𑌦𑌶𑍋𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾𑌨𑌕𑌿𑌂𑌚𑌿𑌦𑌪𑌿𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑍇𑌤𑍍 ॥

౨౪. ఓంకారంపాదశోవిద్యాత్పాదామాత్రానసంశయః ।
ఓంకారంపాదశోజ్ఞాత్వానకించిదపిచింతయేత్ ॥

(ப-ம்.) 𑌓𑌙𑍍𑌕𑌾𑌰𑌮𑍍- ப்ரணவத்தை, 𑌪𑌾𑌦𑌶𑌃-பாதம்பாதமாக, 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌤𑍍- அறிந்துகொள்ளக்கடவன், 𑌪𑌾𑌦𑌾𑌃 - பாதங்கள், 𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌃 - மாத்திரைகள், 𑌨𑌸𑌂𑌶𑌯𑌃 - ஸந்தேகமில்லை, 𑌓𑌙𑍍𑌕𑌾𑌰𑌮𑍍 - ப்ரணவத்தை, 𑌪𑌾𑌦𑌶𑌃 - பாதம் பாதமாக, 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 - அறிந்துகொண்டு, 𑌕𑌿𑌂𑌚𑌿𑌦𑌪𑌿 - ஒன்றையும், 𑌨𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑍇𑌤𑍍 - சிந்திக்கக்கூடாது.

ஸ0-ஹா. முன்சொல்லிய ஸாத்ருச்யங்களாலே ஓங்காரத்தின் மாத்திரைகளே ஆத்மாவினுடைய பாதங்கள், பாதங்களே ஓங்காரத்தினுடைய மாத்திரைகள் இவ்வாறு ப்ரணவத்தை யறிந்தவன் வேறு ப்ரயோஜனத்தை எதையும் சிந்திக்கக்கடவனல்லன். எல்லா மிவனாலே யடையப்பட்டமையாலென்க.

வி-ஹா. அகண்ட ப்ரணவப் பொருளான பரமாத்வை அகண்ட ப்ரணவப் பொருளாகிய விச்வமூர்த்தி முதலிய நான்கு பாதங்களை யுடையவராக சிந்திக்கவேண்டியது. இவ்வாறறிந்தவனெல்லா பலங்களையும் பெற்றவனாகிறா னதால் வேறுசிந்தை செய்ய வேண்டியதில்லை என்று கருத்து.

௨௫. 𑌯𑍁𑌂𑌜𑍀𑌤𑌪𑍍𑌰𑌣𑌵𑍇𑌚𑍇𑌤𑌃𑌪𑍍𑌰𑌣𑌵𑍋𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌨𑌿𑌰𑍍𑌭𑌯𑌮𑍍 ।
𑌪𑍍𑌰𑌣𑌵𑍇𑌨𑌿𑌤𑍍𑌯𑌯𑍁𑌕𑍍𑌤𑌸𑍍𑌯𑌨𑌭𑌯𑌂𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇𑌕𑍍𑌵𑌚𑌿𑌤𑍍 ॥

౨౫. యుంజీతప్రణవేచేతఃప్రణవోబ్రహ్మనిర్భయమ్ ।
ప్రణవేనిత్యయుక్తస్యనభయంవిద్యతేక్వచిత్ ॥

(ப-ம்.) 𑌚𑍇𑌤𑌃 - நெஞ்சை, 𑌪𑍍𑌰𑌣𑌵𑍇 - ப்ரணவத்தில், 𑌯𑍁𑌂𑌜𑍀𑌤 - சேர்க்கக்கடவன், 𑌪𑍍𑌰𑌣𑌵𑌃 - ப்ரணவமானது, 𑌨𑌿𑌰𑍍𑌭𑌯𑌮𑍍 - அபயஸ்வரூபமாகிய, 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 - ப்ரம்மம், 𑌪𑍍𑌰𑌣𑌵𑍇 - ப்ரணவத்தில், 𑌨𑌿𑌤𑍍𑌯𑌯𑍁𑌕𑍍𑌤𑌸𑍍𑌯 - எப்போதும்சிந்தையுடையவனுக்கு, 𑌕𑍍𑌵𑌚𑌿𑌤𑍍𑌭𑌯𑌂𑌨𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇- எங்கும்பயமில்லை.

ஸ-0ஹா. தத்வஜ்ஞானமில்லாதவனுக்கும் ப்ரணவத்தைத் யாநிப்பதினால் தத்வஜ்ஞானம் பிறக்குமாகையால ப்ரவணத்தில் நெஞ்சைச் செலுத்தி ப்ரணவத்யானம் செய்ய வேண்டியது. ப்ரணவமே ப்ரம்மரூபமானது, இந்தப்ரணவத்தில் நித்யம் சிந்தையுள்ளவனுக்கு எங்கும் பயமில்லை என்று சொல்லுகின்றது.

வி-ஹா. ஸ்ரீமந்நாராயணனை நித்யத்யாநம் செய்து அகண்ட ப்ரணவப் பொருளாக சிந்திக்கவேண்டியது. அவன் கல்யாண குணங்கள் நிறைந்தவன் இவனை தியா நித்தவனுக்கும் பயமென்பதுண்டோ. எங்கும் பயமில்லை சுகத்தையடைகிறான். ஆகையால் ஸம்ஸாரத்தைக் கழித்துக்கொள்ளவதில் எண்ணமுடையவன் அவச்யம் ப்ரணவார்த்தமான அவனை த்யாநம் செய்யவேணுமென்று இந்த சுலோகத்தின் கருத்து.

௨௬. 𑌪𑍍𑌰𑌣𑌵𑍋 𑌹𑍍𑌯𑌪𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌪𑍍𑌰𑌣𑌵𑌶𑍍𑌚 𑌪𑌰𑌃 𑌸𑍍𑌮𑍃𑌤𑌃।
𑌅𑌪𑍂𑌰𑍍𑌵𑍋𑌽𑌨𑌨𑍍𑌤𑌰𑍋𑌽𑌬𑌾𑌹𑍍𑌯𑍋𑌽𑌨𑌪𑌰𑌃 𑌪𑍍𑌰𑌣𑌵𑍋𑌽𑌵𑍍𑌯𑌯𑌃॥

౨౬. ప్రణవో హ్యపరం బ్రహ్మ ప్రణవశ్చ పరస్స్మృతః।
అపూర్వోఽనంతరోఽబాహ్యోఽనపరః ప్రణవోఽవ్యయః॥

(ப-ம்.) 𑌪𑍍𑌰𑌣𑌵𑌃 - ப்ரணவம், 𑌅𑌪𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌹𑌿 - அபரமான ப்ரம்மமாகின்றது. 𑌪𑍍𑌰𑌣𑌵𑌃 - ப்ரணவம், 𑌪𑌰𑌶𑍍𑌚 - பரமானப்ரம்மமாக, 𑌸𑍍𑌮𑍃𑌤𑌃 - ஸ்மரிக்கப்படுகிறது, 𑌪𑍍𑌰𑌣𑌵𑌃 - ப்ரணவம், 𑌅𑌪𑍂𑌰𑍍𑌵𑌃 - அபூர்வமானது, 𑌅𑌨𑌨𑍍𑌤𑌰𑌃 - பேதமில்லாதது. 𑌅𑌬𑌾𑌹𑍍𑌯𑌃 - வெளிப்படாதது. 𑌅𑌨𑌪𑌰𑌃 - கார்யரூபமில்லாதது, 𑌅𑌵𑍍𑌯𑌯𑌃 - அழிவில்லாதது.

ஸ௦-ஹா. பராபரப்ரம்மம் ப்ரணவமே. நிர்விசேஷ ப்ரம்மஸ்வரூபமும் ப்ரணவமே. அந்தந்த அதிகாரிகளுக்குத் தக்கபடி யிருக்கின்றது.

வி-ஹா. ப்ரணவப் பொருளான நித்ய ஸ்வரூபமும் அவதாரங்களில் ஸ்வரூபமும் எல்லாம் கல்யாண குணங்களெல்லாவற்றாலும் பூர்ணங்களேயாம். இது சுருதிகளிலெங்கும் ப்ரஸித்தமாயிருக்கின்றது. ஆகையா லப்படிப்பட்ட பரமாத்மாவினுடைய ஸமஸ்தஸ்வரூபங்களையும் சொல்லுகிற இந்த ப்ரணவமும் ஸர்வ பூர்ணமே யாகின்றது.

௨௭. 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌣𑌵𑍋 𑌹𑍍𑌯𑌾𑌦𑌿𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑌮𑌨𑍍𑌤𑌸𑍍𑌤𑌥𑍈𑌵 𑌚।
𑌏𑌵𑌂 𑌹𑌿 𑌪𑍍𑌰𑌣𑌵𑌂 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌵𑍍𑌯𑌶𑍍𑌨𑍁𑌤𑍇 𑌤𑌦𑌨𑌨𑍍𑌤𑌰𑌮𑍍॥

౨౭. సర్వస్య ప్రణవో హ్యాదిర్మధ్యమంతస్తథైవ చ।
ఏవం హి ప్రణవం జ్ఞాత్వా వ్యశ్నుతే తదనంతరమ్॥

(ப-ம்.) 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 - எல்லாவற்றிற்கும், 𑌪𑍍𑌰𑌣𑌵𑌃 - ப்ரணவமானது, 𑌆𑌦𑌿𑌃 𑌹𑌿 - முதலானது, 𑌮𑌧𑍍𑌯𑌂 - நடுவுள்ளது, 𑌤𑌥𑍈𑌵 - அப்படியே, 𑌅𑌨𑍍𑌤𑌃 𑌚 - முடிவிலிருப்பது, 𑌏𑌵𑌂 - இவ்வாறு, 𑌪𑍍𑌰𑌣𑌵𑌂 - ப்ரணவத்தை, 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 - அறிந்துகொண்டு, 𑌤𑌦𑌨𑌨𑍍𑌤𑌰𑌂 - அதற்குப்பின், 𑌵𑍍𑌯𑌶𑍍𑌨𑍁𑌤𑍇 - ப்ரம்மத்தையடைகிறான்.

ஸ௦-ஹா. மாயாஸ்ருஷ்டிகளுக்கு மாயாவி, காரண மாகிறாப்போல இம்மாயா ப்ரபஞ்சத்திற்கு காரணமும் இருப்பும லயமும் இந்த ப்ரணவமே யென்றறிந்தவன் பரமாத்மஸ்வரூபத்தை யடைகிறான்.

வி-ஹா. ஸமஸ்த ஜகத்தினுடைய பிறப்புக்கு மிருப்புக்கு மிறப்புக்கும் காரணமாகிய, பரப்ரம்மம், பரவாசுதேவன், பரமாத்மா, என்று சொல்லப்படுகிற ஸ்ரீமந் நாராயணனை யறிந்தவன் பரமபதத்தை யடைகிறான்.

௨௮. 𑌪𑍍𑌰𑌣𑌵𑌂𑌹𑍀𑌶𑍍𑌵𑌰𑌂𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯𑌹𑍃𑌦𑌿𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑌮𑍍 ।
𑌸𑌰𑍍𑌵𑌵𑍍𑌯𑌾𑌪𑌿𑌨𑌮𑍋𑌂𑌕𑌾𑌰𑌂𑌮𑌤𑍍𑌵𑌾𑌧𑍀𑌰𑍋𑌨𑌶𑍋𑌚𑌤𑌿॥

౨౮. ప్రణవంహీశ్వరంవిద్యాత్సర్వస్యహృదిసంస్థితమ్ ।
సర్వవ్యాపినమోంకారంమత్వాధీరోనశోచతి॥

(ப-ம.) 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 - ஸமஸ்தப்ராணிகளுடையவும், 𑌹𑍃𑌦𑌿 - ஹ்ருதயத்தில், 𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑌮𑍍 - இராநின்ற; 𑌈𑌶𑍍𑌵𑌰𑌮𑍍 - பரமாத்மாவை; 𑌪𑍍𑌰𑌣𑌵𑌮𑍍 - ப்ரணவமாக; 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌤𑍍 - அறியக்கடவன். இப்படி, 𑌓𑌂𑌕𑌾𑌰𑌮𑍍-ப்ரணவத்தை, 𑌸𑌰𑍍𑌵𑌵𑍍𑌯𑌾𑌪𑌿𑌨𑌮𑍍 - எல்லாவற்றிலும் வ்யாபித்திருப்பதாக, 𑌮𑌤𑍍𑌵𑌾 - தியாநித்தவனான, 𑌧𑍀𑌰𑌃 - தீரனான உபாஸகன், 𑌨𑌶𑍋𑌚𑌤𑌿- துக்கத்தையடையான்.

பா-ஸா. ஹ்ருதய ப்ரதேசத்தில் ப்ரணவத்தை த்யாநிக்கக்கடவன். ஸர்வவ்யாபி என்று ப்ரணவத்தை தியானித்த புத்திமான் சோகிப்பதில்லை. இங்கு பல சுருதிகளும் சாக்ஷியாகின்றன.

வி-ஸா. "ஈச்வரஸ் ஸர்வபூதாநாம் ஹ்ருத்தேசேர் ஜுநதிஷ்டதி, தமேவசரணங் கச்ச" என்று ஸமஸ்த ப்ராணிகளின் ஹ்ருதயத்திலும் ஈச்வரன்வஸிக்கின்றான் அவனைச் சரணம் புகவேணு மென்று ஸ்ம்ருதி சொன்னபடி ப்ரணவப் பொருளான ஹரியை ஹ்ருதயத்தில் தியானம் செய்யவேண்டியது. இப்படி தியாநித்த புத்திமான் சோகமடைவதில்லை. அபஹதபாப்மத்வம் முதலிய குணங்கள் ஆவிர்பவித்து முக்தனாகிறான்.

௨௯. 𑌅𑌮𑌾𑌤𑍍𑌰𑍋𑌽𑌨𑌨𑍍𑌤𑌮𑌾𑌤𑍍𑌰𑌶𑍍𑌚𑌦𑍍𑌵𑍈𑌤𑌸𑍍𑌯𑍋𑌪𑌶𑌮𑌃𑌶𑌿𑌵𑌃 ।
𑌓𑌂𑌕𑌾𑌰𑍋𑌵𑌿𑌦𑌿𑌤𑍋𑌯𑍇𑌨𑌸𑌮𑍁𑌨𑌿𑌰𑍍𑌨𑍇𑌤𑌰𑍋𑌜𑌨𑌃॥

౨౯. అమాత్రోఽనంతమాత్రశ్చద్వైతస్యోపశమశ్శివః ।
ఓంకారోవిదితోయేనసమునిర్నేతరోజనః॥

(ப-ம.) 𑌅𑌮𑌾𑌤𑍍𑌰𑌃 - மாத்திரையில்லாததும், 𑌅𑌨𑌨𑍍𑌤𑌮𑌾𑌤𑍍𑌰𑌶𑍍𑌚 - அளவில்லாததும், 𑌦𑍍𑌵𑍈𑌤𑌸𑍍𑌯 - பேதப்ரபஞ்சத்திற்கு, 𑌉𑌪𑌶𑌮𑌃 - லயஸ்தாநமாயும். 𑌶𑌿𑌵𑌃 - சிவமாயுமிருக்கிற. 𑌓𑌂𑌕𑌾𑌰𑌃 - ப்ரணவமானது. 𑌯𑍇𑌨 - எவனால். 𑌵𑌿𑌦𑌿𑌤𑌃 - அறியப்பட்டதோ; 𑌸𑌃 - அவன். 𑌮𑍁𑌨𑌿𑌃 - முநியாகிறான். 𑌨𑌇𑌤𑌰𑌃𑌜𑌨𑌃 - மற்றவன் முநியாகான்.

பா-ஸா. ஸர்வபேதங்களும் நீங்கிப்போகின்றமையால் சிவமாய் அதாவது மங்களரூபமாய் அளவிடப்படாத மகிமை பொருந்திய துரீயமூர்த்தியாகிய ஓங்காரத்தை யறிந்தவனே முனியாகிறான் மற்ற ஸகல சாஸ்திரங்களையும் கற்றுணர்ந்தவனாயினு மந்யன் முநியாகமாட்டான்.

வி-ஸா. ஸமஸ்தவ்யஸ்த ப்ரணவங்களின் உபாஸநத்தை முடித்து அவ்வாறு உபாஸிப்பவனைக் கொண்டாடுகிறது. நித்யமூல ஸ்வரூபியாயும் தன்னிச்சையா லநேகம் திருமேனியைக் கொண்டருளுகிற நாராயணனை யவன் த்யாநிக்கின்றானோ அவனே முனியாகிறான். இதர ஜனங்கள் ஸம்ஸார துக்கத்தை யடைகிறார்கள்.

விசேஷவிஷயங்கள்.

"ஓங்காரம் பாதசோவித்யாத், என்கிற சுலோகம் முதலாறு சுலோகங்கள் அமாத்ரச்சதுர்த்தோவ்யவஹார்ய:, என்கிற சுருதிக்கு வ்யாக்யாநமாக கௌடபாதாசாரியரால்

செய்யப்பட்டவை அந்த சுருதிக்கு பாஷ்யம்செய்து அந்த சுருதியின் கீழே இந்த சுலோகங்களுக்கு வ்யாக்யாநம் செய்திருக்கிறார். இந்த சுலோகங்களை மாண்டூக்யோபநிஷத்தாக நினைத்து கூரநாராயணமுநி முதலிய விசிஷ்டாத்வைத பண்டிதர்களிதற்கு வ்யாக்யாநம் செய்திருக்கிறார்கள். அந்த பாஷ்யங்களை இந்த சுலோகங்களின் கீழ் எழுதினோமென்றறிக.

இதி கௌடபாதகாரிகாயாம் ஆகமப்ரகரணம்.

ஸ்ரீபரப்ரம்மணேநமః.

அபிப்ராயவிசேஷங்கள்.

மாண்டூக்யோபநிஷத்தில் கண்டங்கள் நான்கு. முதல் கண்டத்தில் இரண்டு சுருதிகள். இரண்டாவது கண்டத்தில், ஐந்து சுருதிகள். மூன்றாவது கண்டத்தில், நாலு சுருதிகள். நான்காவது கண்டத்தில் ஒரு சுருதி. ஆக பன்னிரண்டு சுருதிகள் இந்த மாண்டூக்யோபநிஷத்திலடங்கி யிருக்கின்றன. கௌடபாதகாரிகையில் ஆகமப்ரகரணமென்கிற முதல் ப்ரகரணம், இருபத்தொன்பது சுலோகங்களோடு கூடியிருக்கின்றது. இம்முதல் ப்ரகரணத்திலிருக்கிற இருபத்தொன்பது சுலோகங்களில் பஹிஃப்ரஜ்ஞః, என்கிற சுலோகம் முதல் ஒன்பது சுலோகங்கள், மாண்டூக்யோபநிஷத்தில் இரண்டாவது கண்டம் நான்காவது சுருதி வரையிலுள்ள ஆறு சுருதிகளுக்கு வ்யாக்யாநமாக கௌடபாதாசாரியரால் செய்யப்பட்டவை; சங்கராசாரியர் செய்த கௌடபாதகாரிகையின் பாஷ்யத்தில், ஆகமப்ரகரணம், வைதத்யப்ரகரணம், அத்வைதப்ரகரணம், அலாதசாந்திப்ரகரணம், என்கிற நான்கு ப்ரகரணங்களடங்கிய அந்த கௌடபாதகாரிகைக்கு ப்ரயோஜநம் முதலிய வற்றோடு அவதாரிகை கூறியபின், மாண்டூக்யோபநிஷத்து இரண்டாவது கண்டம் நான்காவது சுருதி வரையிலுள்ள ஆறு சுருதிகளையு மெடுத்து வரிசையாய் வ்யாக்யாநம் செய்து, "அத்ரைதேசுலோகாபவந்தி" என்று இந்த சுருதிகளுக்கு இவை வியாக்யாந சுலோகங்களென்று, கௌடபாதாசாரியர் சொல்லிய வாக்யத்தை விவரித்து இந்த ஒன்பது சுலோகங்களுக்கும் க்ரமமாய் வ்யாக்யாநம் செய்திருக்கின்றார். இந்த ஒன்பது சுலோகங்களுக்குமேல் "நிவ்ருத்தேஸர்வதுக்காநாம்" என்கிற பத்தாவது சுலோகம் முதல் ஒன்பது சுலோகங்கள், மாண்டூக்யோபநிஷத்து இரண்டாவது கண்டம் ஐந்தாவது சுருதிக்கு வ்யாநமாக கௌடபாதாசாரியரால் செய்யப்பட்டவை. இந்த ஒன்பது சுலோகங்களுக்கும் சங்கராசாரியர் செய்த கௌடபாதகாரிகையின் பாஷ்யத்தில் மாண்டூக்யோபநிஷத்து இரண்டாவது கண்டத்தி லைந்தாவது சுருதியை எடுத்து வ்யாக்யாநம் செய்து "அத்ரைதேச்லோகாபவாதி" இந்த சுருதிக்கு வ்யாக்யாந மிந்த சுலோகங்களென்று கௌடபாதாசாரியர் சொல்லிய வாக்யத்தை விவரித்து பின் வரிசையாய் வ்யாக்யாந மெழுதப்பட்டிருக்கிறது. ஆகவே, மாண்டூக்யோபநிஷத்து இரண்டாவது கண்டம் வரையிலுள்ள எழு சுருதிகளுக்கு பதினெட்டு சுலோகங்களால் அத்வைதமதத்திற்கிணங்க கௌடபாதாசாரியரால் வ்யாக்யாநம்செய்யப்பட்டதென்று ஸ்பஷ்டமாயிற்று. இந்த பதினெட்டு சுலோகங்களுக்குமேல் "விச்வஸ்யாத்வவிவக்ஷாயாம்" என்கிற சுலோகம் முதல் ஐந்து சுலோகங்கள் மாண்டூக்யோபநிஷத் மூன்றாவது கண்டத்திலுள்ள நாலு சுருதிகளுக்கு வ்யாக்யாநமாக கௌடபாதாசாரியரால் செய்யப்பட்டவை. இந்த ஐந்து சுலோகங்களுக்கும் முன், சொன்னபடி மாண்டூக்யோபநிஷத்தில் மூன்றாவது கண்டத்தி லைந்து சுருதிகளையு மெடுத்து வ்யாக்யாநம் செய்தபின், "அத்ரைதேச்லோகாபவந்தி" இந்த நாலு சுருதிகளுக்கு வ்யாக்யாநமாக இந்த ஐந்து சுலோகங்களிருக்கின்றன வென்று கௌடபாதாசாரியர் சொல்லிய வாக்யத்தை

விவரித்தபின் வ்யாக்யாநம் செய்திருக்கின்றார். இந்த இருபத்திமூன்று சுலோகங்களு
க்குமேல் "ஓங்காரம் பாதசோவித்யாத்" என்கிற சுலோகம் முதலுள்ள ஆறு சுலோகங்
கள், மாண்டூக்யோபநிஷத்து நான்காவது கண்டத்திலுள்ள ஒரு சுருதிக்கு வ்யாக்யநமாக
கௌடபாதாசாரியரால் செய்யப்பட்டவை. இந்த ஆறு சுலோகங்களுக்கும் முன் சொ
ன்னபடி அந்த ஒரு சுருதியையு மெடுத்து வ்யாக்யாநம் செய்து "அத்ரைதேச்லோகாப
வந்தி" என்று இந்த ஒரு சுருதிக்கு வ்யாக்யாநமாக இந்த ஆறு சுருதிகளிருக்கின்றன
என்று கௌடபாதாசாரியர் சொல்லிய வாக்யத்தை விவரித்தபின் வ்யாக்யாநம் செய்தி
ருக்கிறார். ஆக இருபத்தொன்பது சுலோகங்களடங்கிய ஆகமப்ரகரணமென்கிற முதல்
ப்ரகரணம் நாலு கண்டங்களடங்கிய மாண்டூக்யோபநிஷத்திலுள்ள பன்னிரண்டு சுருதி
களுக்கு வ்யாக்யாநமாக கௌடபாதாசாரியரால் செய்யப்பட்ட தென்பது விளங்கிற்று.
சங்கராசாரியர் செய்த இந்த கௌடபாதகாரிகையின் ஆகமப்ரகரண பாஷ்யத்தில் நடு
வில் மாண்டூக்யோபநிஷத்தை எடுத்து வ்யாக்யாநம் செய்ததற்குக் காரணம் கௌடபா
தாசாரியர் மாண்டூக்யோபநிஷத்தை இடையிலே சேர்த்துச் சேர்த்துப் படித்து இங்கு
இந்த சுலோகங்களை வ்யாக்யாநமாகக் காண்கவென்று, சுலோகங்களைச் சேர்த்திருப்ப
தேயாம். ஆக, இவ்வாறு ஆகமப்ரகரணத்திற்கு வ்யாக்யாநம் செய்யும்போது மாண்டூக்
யோபநிஷத்திற்கும் சங்கராசாரியர் பாஷ்யம் செய்தவராயினார். கூரநாராயணமுநி முத
லிய சில விசிஷ்டாத்வைத பண்டிதர்கள் "அத்ரைதேச்லோகாபவந்தி" என்கிற வாக்யத்
தையும், உபநிஷத்தில் சேர்ந்ததேஎன்று நினைத்தார்கள். இங்கு சங்கராசாரியர் ஆநந்தகிரி
ஆசாரியர் முதலிய அத்வைதபண்டிதர்களனேகர் இந்த ஆகமப்ரகரண சுலோகங்களை
உபநிஷத்தல்லவென்று ஒப்புக்கொண்டிருக்கவும், உபநிஷத்திற்குப்போலவே இதற்கும
வர்கள் வ்யாக்யநம் செய்தது, இந்த ஆகமப்ரகரணத்தையும் மாண்டூக்யோபநிஷத்தாக
ப்ரமித்தமையாலென்று சிலர் சொல்லுகிறார்கள். சில விசிஷ்டாத்வைத பண்டிதர்கள்,
ப்ரத்யக்ஷமாக சங்கரபாஷ்யத்தில் இந்த ஆகமப்ரகரணம் மாண்டூக்யோபநிஷத் தல்ல
வென்று சொல்லும்போது இதைப்பாராமல் ப்ரமித்தார்களென்று சொல்வது பொருந்
தாமையால், சிலரிதை மாண்டூக்யோபநிஷத்தென்று சொல்வது கொண்டு, தங்கள் பா
ண்டித்யமகிமையைக காட்டுவதற்கு, கௌடபாதாசாரியர் அத்வைதமதத்திற்கே அநு
கூலமாக எண்ணிச்செய்த சுலோகங்களையும் விசிஷ்டாத்வைத மதத்திற்கிணங்க வ்யாக்
யாநம் செய்தார்கள் இதனை லத்வைதிகளுக்கு மத்வைதமதத்தை இதரமதங்கலவாமல்
சொல்லக்கூடாமையால், அத்வைதமதம் சுத்தமல்ல வென்பது நன்றாய் விளங்குமென்
பது அவர்களின் கருத்தென்று சொல்லுகிறார்கள். வேறே சிலர், மாண்டூக்யோபநிஷத்
தையே கௌடபாதகாரிகை என்று சங்கராசாரியர் கூறினாரென்று ஸந்தேகப்படுகிறார்
கள். அது யுக்தமல்ல. ப்ராமாணிக சிகாமணியாகிய சங்கராசாரியரிடத்தி லிவ்வித ஸந்
தேகங்கொள்வதில் அவரிடத்திலஸூயை தவிர வேறு காரணமில்லாமையா லென்க.
அன்றியே அத்வைதமதத்தையே தெளிவாய்ப் பேசுகிற அந்த சுலோகங்களை சுருதி என்
று சொல்வது அவர் மதத்திற்கு பலமாகுமே யல்லது கௌடபாதகாரிகை என்பதில்
பயனில்லை. அவர் சுருதியை கௌடபாதகாரிகை என்று ப்ரமித்தாரெனபதும் வீண்
வாதமேயாம். மாண்டூக்யோபநிஷத்தில் நாலாவது கண்டத்திலிருக்கிற சுருதியில் 'யஏவ
ம்வேத, யஏவம்வேத' என்று இரட்டிப்பு, காணப்படுகின்றமையால் அவ்வளவோடு அந்த
உபநிஷத்து முடிந்ததென்று விளங்குகின்றமையாலென்க. இதுநிற்க, மாண்டூக்யோப
நிஷத்தி லடங்கி யிருக்கிற பன்னிரண்டு சுலோகங்களுக்கும் வேறு விதமாக கண்டங்
கள் பிரித்து மூன்று, அல்லது ஐந்து கண்டங்களென்று சிலர் சொல்வது ஸம்ப்ரதாயத்
திற்கு விரோதமானதால் நம்பத்தக்கதன்று. இதிலுள்ள விசேஷங்களை புத்திமான்களு

கித்துக் கொள்ளவேண்டியது. கௌடபாதகாரிகையில் மற்ற மூன்று ப்ரகரணங்களுக்கும் விசிஷ்டாத்வைத பண்டிதர் யாரும் வ்யாக்யாநம் செய்யவில்லை. ஆனதால் சங்கர பாஷ்யமொன்றே எழுதப்படுகிறது. சில விடங்களில் ஆநந்தகிரி ஆசாரியர் முதலிய பண்டிதர்களின் அபிப்ராயமும் காட்டப்படும் என்றறிக.

இனி மூன்றுப்ரகரணங்களிலும் சுருதியென்கிற ஸந்தேகமு மில்லாமையாலும் கருத்தைக்கொண்டு பதவுரை ஊகித்துக்கொள்ளும்படி ஸுலபமா யிருக்கின்றமையாலும் பதவுரை எழுதப்படாது.

ஸ்ரீகுருபரம்பராயைநம:.

அத கௌடபாதகாரிகாயாம் வைதத்யப்ரகரணம்.

௧. வைதத்யம் ஸர்வபாவாநாம் ஸ்வப்ந ஆஹுர்மநீஷிண:।
அந்தஸ்தாநாத்து பாவாநாம் ஸம்வ்ருதத்வேந ஹேதுநா॥

౧. వైతథ్యం సర్వభావానాం స్వప్న ఆహుర్మనీషిణః।
అంతఃస్థానాత్తు భావానాం సంవృతత్వేన హేతునా॥

பா0-ஹா. "ஒன்றே இரண்டாவதில்லை" என்று சுருதியின்படி, "அறிந்தபோது பேதமில்லை" என்று முன்கூறினார். இஃதுபதேச மாத்திரத்தால் நம்பத்தக்கதோ; அல்லது யுக்தியாலும் பேதமில்லை என்று நிரூபிக்கக் கூடுமோ வென்று சங்கை நீங்குவதற்கு பேதமதத்தில் யுக்தி தூஷணங்கள் சொல்லக்கருதி இவ்விரண்டாவது ப்ரகரணம் துடங்குகின்றார். உள்ளும் வெளியுமுள்ள வஸ்துக்கள் அதாவது சரீரத்திற்குள்ளும் வெளியில் கண் முதலிய இந்திரியங்களுக்குப் புலப்படு மவையுமான வஸ்துக்களெல்லாம் ஸ்வப்நத்தில் பொய்யாய் விடுகின்றனவென்பது பண்டிதர்களனைவரும் சம்மதித்த விஷயமே. இதற்குக் காரணம் இவ்வாத்மா சரீரத்திற்குள்ளிருக்கும்போது சரீரத்திற்குள் மலை, யானை, முதலிய மிகவும் பெரிய வஸ்துக்களை ஸ்வப்நத்தில் காண்கிறான். அவைகள் தங்குவதற்கு இடமில்லாத சூக்ஷ்மமான நாடிகளில் அவைகளிருப்பதாகப் பிறக்கிற ஸ்வப்நஜ்ஞாநம் பொய்யாவதில் ஸந்தேகமில்லை யன்றோ. ஆக, ஸ்தாநம் முதலியவை கூடாமையே ஸ்வப்நம் பொய்யாவதற்குக் காரணம். த்வைத மதத்தை அதாவது பேதவாதி மதத்தைப் பொய்யென்று யுக்தியால் ரூபிக்க வந்தவர் ஸ்வப்நம் பொய்யென்பது எல்லோரும் சம்மதித்த விஷயமே என்று சொல்லுகிற விதற்குக் காரணம், என்னவென்றால் இரண்டு வஸ்துக்களேர்ப்பட்டபோது பேதமேர்ப்படு மாகையால் ப்ரம்மத்தை யொழிந்த எல்லாப் பொருளையும் பொய்யென்றா லொழிய பேதம் பொய்யென்பது கூடாமையால் ஜகத்திலுள்ள ஸகல வஸ்துக்களும் பொய்யே என்று சொல்லவேண்டி வருகின்றமையால் அப்படி எல்லாவற்றையும் பொய்யென்னும்போது ஒரு திருட்டாந்தம் காட்டவேண்டுகின்றமையால் ஸ்வப்நம் பொய்யாவதுபோல எல்லாம் பொய்யென்று திருட்டாந்தம் கூறவேண்டி, ஸ்வப்நத்தை சிலவாதிகள் மெய்யென்று கொள்ளுகின்றமையால் ஸ்வப்நம் எவ்வாறு பொய்யாமென்று ஆக்ஷேபம் வாராமைக்காக ஸ்வப்நம் பொய்யென்பதில் காரணங்களைக் கூறுகின்றார். ப்ரமாணத்தை யநுசரித்த யுக்தியைக் கொள்ளலாமே யன்றி ப்ரமாண விருக்தமான யுக்தி ஒப்புக்கொள்ளத்தக்க தன்றாகையால் முதல் ப்ரகரணத்தில் ப்ரமாணத்தைக் கூறி இந்த ப்ர

கரணத்தில் த்வைத மதம் பொய்யென்பதில் யுக்தி சொல்லுகிருர். ஆனதாலந்த ப்ரகரணத்திற்குப்பின் இந்த ப்ரகரணம் வைக்கப்பட்டதென்றறிக.

௨. 𑌅𑌦𑍀𑌰𑍍𑌘𑌤𑍍𑌵𑌾𑌚𑍍𑌚𑌕𑌾𑌲𑌸𑍍𑌯𑌗𑌤𑍍𑌵𑌾𑌦𑍇𑌶𑌾𑌨𑍍𑌨𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 ।
𑌪𑍍𑌰𑌤𑌿𑌬𑍁𑌦𑍍𑌧𑌶𑍍𑌚𑌵𑍈𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌦𑍇𑌶𑍇𑌨𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇॥

౨. అదీర్ఘత్వాచ్చకాలస్యగత్వాదేశాన్నపశ్యతి।
ప్రతిబుద్ధశ్చవైసర్వస్తస్మిన్దేశేనవిద్యతే॥

𑌸𑌂-𑌹𑌾. முன்சுலோகத்தில் சரீரத்திற்குள்ளடங்காத பெருத்த வஸ்துக்களையெல்லாம் ஸ்வப்நத்தில் காண்கின்றமையால் அந்தந்த வஸ்துக்களுக்குத்தக்க விடமில்லாமையால் ஸ்வப்நம் பொய்யென்று சொன்னுர். இந்தசுலோகத்தில், சரீரத்திற்குள்ளே அந்த வஸ்துக்களைக் கண்டாலன்ருே அவ்வாறு பொய்யென்பதற்கு, இவ்வாத்மா அந்தந்த வஸ்துக்களிருக்குமிடம் சென்று அவ்வோ வஸ்துக்களைக் காண்கிருனென்று கூறில் அந்த தோஷ மில்லையே; ஆனதினுல் அவ்வாறேகொண்டு ஸ்வப்நத்தை மெய்யென்பது தக்கதேயாமென்கிற சங்கைக்குப் பரிஹாரம் கூறுகின்ருர். இவ்வாத்மா சரீரத்தை விட்டு தேசாந்தரம் சேர்ந்து அந்த தேசங்களிலிருக்கிற வஸ்துக்களை ஸ்வப்நத்தில் காண்கிருனென்று சொல்ல வழியில்லை. அனேக மாசகாலம் பிரயாணம் செய்தடைய வேண்டிய தேசத்திலிருக்கிற வஸ்துக்களை ஒரு க்ஷணத்தில் ஸ்வப்நத்தில் காண்கிருன். அவ்வளவு அல்பகாலத்தில் அவ்வளவு தூரம் போகமுடியாமையாலிது பொய்யே யாமென்க. அன்றியே, எந்த தேசத்தில் இவன் ஸ்வப்நம் கண்டானே இவன் விழித்துக்கொண்டபோது அந்த தேசத்திலிருப்பதில்லை, நாமிப்போது காசியிலிருக்கிறேமென்று ஸ்வப்நத்தில் நினைத்துக்கொண் டிருக்கும்போதே விழித்துக்கொண்டு பார்த்தாலிவன், முன் படுத்துக்கொண்டிருந்த விடத்திலே கிடக்கிருனன்ருே. ஸ்வப்நத்தில் தேசாந்தரம் போவது மெய்யாயின் ஸ்வப்நம் காண்பவனில் ஒருவனுவது தான் ஸ்வப்நங் கண்ட தேசத்தில் விழித்துக்கொள்ளலா மன்ருே. அப்படியோ காணப்படவில்லை. மேலும், இரவில் கண்ணுறங்கினவன் ஸ்வப்நத்தில் பகலாகக் காண்கிருன். தனியேபடுத்தவன், அனேகமாயிரம்பேரோடு கூடிக்கலந்துபேசி விளையாடினதாக ஸ்வப்நங் காண்கிருன். இவன் வாஸ்தவமாய் அவ்வாறு பலரோடு கூடியிருப்பானுயின் அவர்களிலொருவராவது நானிவனை இன்னசமயத்திலின்னவிடத்தில் கண்டேனென்று இவன் எந்ததேசத்தில் எந்தகாலத்தி லவர்களோடு கூடி தனதாகஸ்வப்நம் கண்டானே அந்த தேசத்தையு மந்த காலத்தையும் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும். அப்படி சொல்லுவதில்லையன்ருே. ஆகையாலந்தந்த தேசங்களுக்குப் போய் ஸ்வப்நங் காண்கிருனென்று சொல்லுவதற்கிடமில்லை. இதனுல் அந்த ஆக்ஷேபத்திற்கிடமில்லை.

௩. 𑌅𑌭𑌾𑌵𑌶𑍍𑌚𑌰𑌥𑌾𑌦𑍀𑌨𑌾𑌂𑌶𑍍𑌰𑍂𑌯𑌤𑍇𑌨𑍍𑌯𑌾𑌯𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌮𑍍 ।
𑌵𑍈𑌤𑌥𑍍𑌯𑌂𑌤𑍇𑌨𑌵𑍈𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌂𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑌆𑌹𑍁𑌃𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌿𑌤𑌮𑍍॥

౩. అభావశ్చరథాదీనాదృశ్యతేన్యాయపూర్వకమ్ ।
వైతథ్యంతేనవైప్రాప్తంస్వప్నఆహుఃప్రకాశితమ్॥

𑌸𑌂-𑌹𑌾. இவ்வாறு யுக்தியினுல் ஸ்வப்நம் பொய்யென்று ஏற்படுவதோடுவேதத்திலும் ஸ்வப்நம் பொய்யென்று சொல்லுகின்றது. அந்த சுருதியிலும் இந்ததேசகாலவிரோதமே யுக்தியாகக் காட்டப்பட்டது. ஸ்வப்நத்தில் தேரில்லை தேரோடும் வீதியில்லை. திருநாளில்லை. ஆயினும் தேரும் வீதியும் திருநாளும் ஸ்வப்நத்தில் காணப்படுகிற

தன்றே என்று சுருதி கூறுகின்றது. ஆக சுருதியினாலும் யுக்தியாலும் ஸ்வப்நம் பொய்யென்பது ஸித்தமாயிற்று. ஆக, உலகம் பொய்யென்பதற்கு இது திருஷ்டாந்தமாக்கப்படு மென்க.

௪. 𑌅𑌨𑍍𑌤𑌃𑌸𑍍𑌥𑌾𑌨𑌾𑌤𑍍𑌤𑍁 𑌭𑍇𑌦𑌾𑌨𑌾𑌂 𑌤𑌸𑍍𑌮𑌾𑌜𑍍𑌜𑌾𑌗𑌰𑌿𑌤𑍇 𑌸𑍍𑌮𑍃𑌤𑌮𑍍 ।
𑌯𑌥𑌾 𑌤𑌤𑍍𑌰 𑌤𑌥𑌾 𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑍇 𑌸𑌂𑌵𑍃𑌤𑌤𑍍𑌵𑍇𑌨 𑌭𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 ॥

౪. అన్తస్థానాత్తు భేదానాం తస్మాజ్జాగరితే స్మృతమ్ ।
యథా తత్ర తథా స్వప్నే సంవృతత్వేన భిద్యతే ॥

ஸ௦-ஸா. இவ்வாறு ஸ்வப்நத்தில் காணப்படுகிற பொருள்கள், காணப்படுகின்றமையால் பொய்யானது போல, உலகமும் காணப்படுகின்றமையால் பொய்யே யென்றறியத்தக்கது. உலகமெல்லாம் பொய்யாகின்றது. ஏனென்றால், கண்ணுக்குப் புலப்படுகிற தன்றே. கண்ணுக்குப் புலப்பட்டமாத்திரத்தால் பொய்யென்று சொல்வது கூடுமோவெனில், கூடும். கண்ணுக்குப் புலப்படுகின்றமையால் ஸ்வப்நம் பொய்யாகிற தன்றே. ஸ்வப்நத்தில் பொருளுள்ளே காணப்படுகிறது; உலகம் வெளியே காணப்படுகின்றது. இவ்வளவு பேதமொழிய பொய்யாவதிலும் காணப்படுவதிலும் பேதமில்லை.

௫. 𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑌜𑌾𑌗𑌰𑌿𑌤𑌸𑍍𑌥𑌾𑌨𑍇 𑌹𑍍𑌯𑍇𑌕𑌮𑌾𑌹𑍁𑌰𑍍𑌮𑌨𑍀𑌷𑌿𑌣𑌃 ।
𑌭𑍇𑌦𑌾𑌨𑌾𑌂 𑌹𑌿 𑌸𑌮𑌤𑍍𑌵𑍇𑌨 𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑍇𑌨𑍈𑌵 𑌹𑍇𑌤𑍁𑌨𑌾 ॥

౫. స్వప్నజాగరితస్థానే హ్యేకమాహుర్మనీషిణః ।
భేదానాం హి సమత్వేన ప్రసిద్ధేనైవ హేతునా ॥

ஸ௦-ஸா. இவ்வாறு உலகம் பொய்யென்று தீர்ந்தமையால் இவ்வுலகத்தையும் ஸ்வப்நமேயென்று விவேகிகள் சொல்லுகின்றார்கள். முன்சொன்ன ஹேதுக்களால் ஸ்வப்நம் பொய்யென்று ஸித்தித்தமையாலும் அதுபோல உலகமெல்லாம் பொய்யேயாகின்றமையாலு மென்க.

௬. 𑌆𑌦𑌾𑌵𑌨𑍍𑌤𑍇 𑌚 𑌯𑌨𑍍𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑍇𑌽𑌪𑌿 𑌤𑌤𑍍𑌤𑌥𑌾 ।
𑌵𑌿𑌤𑌥𑍈𑌃 𑌸𑌦𑍃𑌶𑌾𑌃 𑌸𑌨𑍍𑌤𑍋𑌽𑌵𑌿𑌤𑌥𑌾 𑌇𑌵 𑌲𑌕𑍍𑌷𑌿𑌤𑌾𑌃 ॥

౬. ఆదావన్తే చ యన్నాస్తి వర్తమానేఽపి తత్తథా ।
వితథైః సదృశాః సన్తోఽవితథా ఇవ లక్షితాః ॥

ஸ௦-ஸா. இன்னமும் பல காரணங்களாலும் உலகம் பொய்யென்று விளங்குகின்றது, முன்னும் பின்னுமில்லாத பொருள் நடுவிலு மில்லாததேயாம். கானல்தண்ணீர் முதலியவை முன்னுமில்லாமல் பின்னுமில்லாமல் நடுவில் தோற்றி யழிகின்றமையால் பொய்யாகின்றதன்றே அதுபோலவே, உலகத்தில் காணப்படுகிற பொருளும் முதலிலு மில்லாமல் அந்தத்திலு மில்லாமல் நடுவில் காணப்படுகின்றமையால் பொய்யேயாகின்றது. ஆக இவ்வாறுலகம் பொய்யாயினு மறிவிலாதாருக்கு மெய்போல் காண்கிறது. வாஸ்தவத்தில் பொய்யென்பது பொய்யான ஸ்வப்நத்திற்கு ஸமானமாகின்றமையா லென்க.

௭. 𑌸𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌨𑌤𑌾 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑍇 𑌵𑌿𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 ।
𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑌾𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑌵𑌤𑍍𑌤𑍍𑌵𑍇𑌨 𑌮𑌿𑌥𑍍𑌯𑍈𑌵 𑌖𑌲𑍁 𑌤𑍇 𑌸𑍍𑌮𑍃𑌤𑌾𑌃 ॥

౭. సప్రయోజనతా తేషాం స్వప్నే విప్రతిపద్యతే ।
తస్మాదాద్యన్తవత్త్వేన మిథ్యైవ ఖలు తే స్మృతాః ॥

ஸம்-ஹா. விழித்துக்கொண்டிருக்கும்போது காணப்படுகிற வஸ்துக்கள்பயனுடைடிருக்கின்றன. கூறைசோறு நீர் குதிரைமுதலிய பொருள்கள், உடுக்கவும், பசியடக்கவும் தாகந்தீர்க்கவும் பயணம் செய்யவு முபயோகப்படுகின்றன. ஸ்வப்நத்தில் காணப்பட்டவஸ்துக்கள் அவ்வாறு பயன்பட்டவையல்ல. ஆதலால் ஸ்வப்நம் போலவே விழித்துக்கொண்டிருக்கும்போது காணப்படுகிற உலகம் பொய்யென்பது ஸரியல்லவென்கிற ஸந்தேஹத்தை இந்த சுலோகம் நீக்குகின்றது.விழித்துக்கொண்டிருக்கையில்காணப்படுகிற உலகமெல்லாம் பொய்யேயாம், ஏனென்றால் ஸ்வப்நத்தில் காணப்படுகிற பொருள்களும் அப்போது பயனுடையவைபோலவே தோற்றுகின்றதன்றோ. ஸ்வப்நத்தில் பசியெடுத்தபோது ஸ்வப்நத்தில் சோறுண்டானுகில் அப்போது தீருகின்றதன்றோ. இவ்வாறே மற்றவைகளுக்கும் காண்க. ஸ்வப்னத்தில் வயிறுநிரம்ப புசித்தவன் விழித்துக்கொண்டஉடனே பசியால் வருந்துகின்றமையால் ஸ்வப்நத்தில் சோறுஇவன் பசியை நீக்கவில்லையே யெனில் இது விழித்துக்கொண்டிருக்கும் போதும் துல்யமே. விழித்துக்கொண்டிருந்தபோது வயிறுநிரம்பபுசித்தவன், ஸ்வப்நத்திலுடனே பெரும்பசியால் வருந்துகின்றான். அப்போது விழித்திக்கொண்டிருக்ம்போது இவன் புசித்ததும் வீணாயிற்றன்றோ. ஆகையால் ஸ்வப்நம் போலவே இதுவும் ப்ரயோஜநமில்லாததாகையால் பொய்யென்பதில் யாதொருதடையுமில்லை.

௮. 𑌅𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌸𑍍𑌥𑌾𑌨𑌿𑌧𑌰𑍍𑌮𑍋 𑌹𑌿 𑌯𑌥𑌾 𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌨𑌿𑌵𑌾𑌸𑌿𑌨𑌾𑌮𑍍 ।
𑌤𑌾𑌨𑌯𑌂 𑌪𑍍𑌰𑍇𑌕𑍍𑌷𑌤𑍇 𑌗𑌤𑍍𑌵𑌾 𑌯𑌥𑍈𑌵𑍇𑌹 𑌸𑍁𑌶𑌿𑌕𑍍𑌷𑌿𑌤𑌃 ॥

౮. అపూర్వం స్థానిధర్మో హి యథా స్వర్గనివాసినామ్।
తానయం ప్రేక్షతే గత్వా యథైవేహ సుశిక్షితః॥

ஸம்-ஹா. உறங்கும்போதும் விழித்துக்கொண் டிருக்கும்போதும் காணப்படுகிற பொருள்களுக்கு பேதமில்லாமையால் ஸ்வப்நத்தில் கண்ட வஸ்துக்களைப்போல் விழித்துக்கொண்டிருக்கும்போது காணப்படுகிற பொருள்களும் பொய்யே என்று சொல்லுவது யுக்தமல்ல, ஏனென்றால் திருஷ்டாந்தமாகிய ஸ்வப்நத்தில் கண்ட பொருளுக்கும் விழித்துக்கொண்டிருக்கும்போது காணப்படுகிற பொருளுக்கும், ஒத்துமையில்லை. விழித்துக்கொண்டிருக்கும்போது காணப்படுகிற பொருள்களையே ஸ்வப்நத்தில் காண்கிறானென்கிற நிச்சயமில்லை. எப்போதுங் காணாதவைகளையுங் காண்கிறான். நான்கு தந்தங்களையுடைய யானையின்பேரில் எட்டுகைகளுடன் தானேறி வீதிவலம்வர்தாகக் காண்கிறான். இவ்வாறு விழித்திருக்கும்போதில் காணப்படாத விசித்திரங்களை யெல்லாம் ஸ்வப்நத்தில் காண்கிறான். அதுபோன்ற ஒருபொருளைப் பொய்யென்று சொல்லுவதற்கு திருட்டாந்தங் கிடையாமையால் அவ்வாறுகண்ட ஸ்வப்நம் மெய்யேயாகின்றது. ஆகையால் ஸ்வப்நமெல்லா பொய்யென்பது கூடாதாயிற்று. ஆகவே, ஸ்வப்நம்போல உணர்வுகாலத்தில் வஸ்துக்கள் பொய்யென்று சொல்லுவதும் மிகவும் கூடாததாயிற்று. என்று ஆக்ஷேபிப்பது ஸரியல்ல. ஸ்வப்நத்தில் அபூர்வமாய்க் காணப்படுகிற வஸ்துக்களஸத்யங்களென்று சொல்வதறகுக் கூடாது. அவையெல்லாம் ஸ்வப்நகாலத்திலிந்த ஆதமாவுக்குத் தோற்றுகிற தருமங்கள். சுவர்க்கமுதலிய லோகங்களில் ஆயிரங்கண்கள் முதலியவை இந்த ஆத்மாவுக்குத் தோற்றுவதுபோல ஸ்வப்நத்திலும் அநேக விசித்திரங்கள் அந்த ஸ்வப்நஸ்தாநத்தில் தோற்றுகின்றன. ஸ்வயமாயுண்டானவையல்ல. ஸுவர்க்கத்திலிருக்கின்ற தேவேந்திரன் முதலியவர்களுக்கு ஆயிரங் கண்கள் முதலிய விசேஷங்க ளுண்டாயிருக்கின்றன வன்றோ. ஆனதால் தன் சித்த விகாரத்தால் கற்பிக்கப்பட்டவையாகிய விசித்திரப் பொருள்களை இவ்வாத்மா ஸ்வப்நஸ்

தானம் சேர்ந்து காண்கிறான். ஒரு தேசத்திலிருந்து மற்றொரு தேசம் போவதற்கு நன்றாய் வழி தெரிந்தவன் அந்ததேசத்திலுள்ள விசித்திரங்களை அந்த தேசத்திற்குப் போய் காண்பதுபோல ஆத்மாவும் ஸ்வப்நஸ்தானத்திற்குச் சென்று அவ்விடத்தில் தோற்றிய விசித்திரங்களைக் காண்கிறான். ஆத்மாவினுடைய ஸ்வப்நஸ்தாநத்தில் தோற்றுகிற தருமங்களாகிய வஸ்துக்கள், கயிறு முதலிய ஸ்தாநங்களில் தோற்றுகிற பாம்பு முதலிய ஸ்தாந தருமங்கள்போல பொய்யே யாகின்றன. ஆகையால் கானல் ஜலம்போல ஸ்வப்நம் பொய்யென்பது ஸித்தமாகின்றமையால் அதுபோல உலகமும் பொய்யேயாகின்றது.

௯ ஸ்வப்நவ்ருத்தாவபி த்வந்தஸ்சேதஸா கல்பிதம் த்வஸத் |
பஹிஸ்சேதோக்ருஹீதம் ஸத்த்ருஷ்டம் வைதத்யமேதயோ꞉ ||
౯. స్వప్నవృత్తావపిత్వన్తశ్చేతసాకల్పితంత్వసత్ ।
బహిశ్చేతోగృహీతంసద్దృష్టంవైతథ్యమేతయోః ॥

ஸ0-ஹா. ஸ்வப்நம்போல விழித்துக்கொண்டிருந்தபோது கண்ட பொருளும் பொய்யே யென்பதை வலியுறுத்துகின்றார். ஸ்வப்நத்தில் காணப்படுகின்ற பொருள் அடுத்த க்ஷணத்தில் காணப்படாமையால் பொய்யாகின்றது என்பது உறுதியாயிருக்கவும் அந்த ஸ்வப்நத்திலேயே சில பொருள்களைப் பொய்யென்றும் சில பொருள்களை மெய்யென்றும் நினைக்கின்றான். ஆனாலும் எல்லாம் பொய்யேயாகின்றது அவ்வாறே விழித்துக்கொண்டிருக்கும்போதும் காணப்படுகிற சில பொருள்களைப் பொய்யென்றும் சில பொருள்களை மெய்யென்றும் நினைக்கின்றான். ஆகையால் ஸ்வப்நத்தில் பொய் யென்றும் மெய்யென்றும் நினைக்கப்பட்ட எல்லாம் பொய்யேயாவதுபோல விழித்துக் கொண்டிருக்கும்போதும் போய்யென்றும் மெய்யென்றும் நினைக்கப்படுகிற எல்லாம் பொய்யேயாகின்றது. விழித்துக்கொண்டிருக்கும்போது காணப்படுகிற சில பொருள் களில் ஸத்தென்கிற நினைவும் சொலவும் அவை பொய்யென்பதற்கு விரோதமான தல்ல. ஆகையால் உலகம் பொய்யேயாகின்றது.

௧௦. ஜாக்ரத்வ்ருத்தாவபி த்வந்தஸ்சேதஸா கல்பிதம் த்வஸத் |
பஹிஸ்சேதோக்ருஹீதம் ஸத்யுக்தம் வைதத்யமேதயோ꞉ ||
౧౦. జాగ్రద్వృత్తావపిత్వంతశ్చేతసాకల్పితంత్వసత్ ।
బహిశ్చేతోగృహీతంసద్యుక్తంవైతథ్యమేతయోః ॥

ஸ0-ஹா. மனோரதமாத்திரத்தால் நினைக்கப்படுகிறவை எப்போதும் பொய்யாயும் வெளியில்காணப்படுகிறவை ஸத்தாயும் தோற்றுவதுவிழித்துக்கொண்டிருக்கும்போதும் ஸ்வப்நகாலத்திலும் ஸமானமாகையால் ஸ்வப்நத்தில்போல விழித்துக்கொண்டிருக்கும் போதும் ஸத்தென்று மஸத்தென்றும் தோற்றுகிற எல்லாம் பொய்யே யாகின்றது ஆகையால் உலகம் பொய்யென்று முன் சுலோகத்தில் சொல்லியபடி இதற்கும் வ்யாக் யானம் செய்துகொள்க.

௧௧. உபயோரபி வைதத்யம் பேதாநாம் ஸ்தாநயோர்யதி |
க ஏதாந்புத்யதே பேதாந் கோ வை தேஷாம் விகல்பக꞉ ||
௧௨. கல்பயத்யாத்மநாத்மாநமாத்மா தேவ꞉ ஸ்வமாயயா |
ஸ ஏவ புத்யதே பேதாநிதி வேதாந்தநிஸ்சய꞉ ||

౧౧. ఉభయోరపివైతథ్యంభేదానాంస్థానయోర్యది ।
కఏతాన్బుధ్యతేభేదాన్కోవైతేషాంవికల్పకః॥

౧౨. కల్పయత్యాత్మనాత్మానమాత్మాదేవస్స్వమాయయా ।
సఏవబుధ్యతేభేదానితివేదాంతనిశ్చయః॥

ஸ௦-ஹா. இவ்வாறு எல்லாம் பொய்யாயின் ப்ரமிப்பவனார் கல்பிக்கின்றவன் யார் கல்பிக்கப்படு மவையவை; ஆகையால் எல்லாம் பொய்யென்பது கூடுமோ என்று ஒருவன் ஆக்ஷேபிக்க அதற்கு சமாதானம் சொல்லுகிறார். மாத்யமிக மதத்திற்போல யாம் ஸர்வசூந்யவாதம் செய்வதில்லை. நித்யமான ஆத்மாவை ஒப்புக்கொள்ளுகிறோம். ஆகையாலந்த ஆத்மாதன்னிடத்தில் தன்னை யேகல்பித்துத்தானே ப்ரமிக்கின்றது. ஆகையால் ப்ரமமும் ப்ரமிக்கின்றவனும் ப்ரமிக்கப்படும் பொருளும் எல்லா மந்த ஆத்மாவே அஃதொழிந்தமற்றவை பொய்யென்று சொல்லுகிறோம். ஆனதால்எங்கள் பேரிலந்த ஆக்ஷேபம்செய்யத்தக்கதன்று; என்று ஸமாதானம் சொல்லுகிறார். இதற்கெல்லா மாநாதியான அந்த ஆத்மாவினுடைய மாயையே காரணமாகின்றது. என்று வேதாந்திகளின் கொள்கை. ஆகையால் கயிற்றில் கல்பிக்கப்பட்ட பாம்புபோல இவ்வுலகம் பொய்யேயாகின்றது. இதில் முதல் சுலோகம் ஆக்ஷேபம். இரண்டாவது சுலோகம் ஸமாதானம்.

௧௩. விகரோத்யபராந்பாவாநந்தச்சித்தே வ்யவஸ்திதாந் |
நியதாம்ச்ச பஹிச்சித்த ஏவம் கல்பயதே ப்ரபு: ||

౧౩. వికరోత్యపరాన్భావానన్తశ్చిత్తేవ్యవస్థితాన్ ।
నియతాంశ్చబహిశ్చిత్తఏవంకల్పయతేప్రభుః॥

ஸ௦-ஹா. உலகத்தில் குயவன் சேணியன் முதலியவர்கள், குடம் வஸ்திரம் முதலிய காரியங்களைச் செய்ய நினைத்தவர் முதலில் செய்யவேண்டிய விதத்தை நெஞ்சிலேர்ப்பாடுசெய்துகொண்டு பின் அதே ரூபத்தில் வெளியில் ரூபநாமங்களை உண்டு பண்ணுகிறார்களோ அவ்வாறே இந்த ஆதிகர்த்தாவான ஆத்மாவும் மாயையாகிற தன்னெஞ்சில் அவ்யக்தமாய் நாமரூபங்களை யேர்ப்படுத்தி ஸ்ருஷ்டி செய்யவேண்டியபடி நிர்மித்துக்கொண்டு பின்பு எல்லோரும் நாமரூபங்களால் வ்யக்தமாய் வ்யவஹரிக்கும்படி செய்கிறான் என்று பொருள். இது கல்பிக்கும் வழியாகும்.

௧௪. சித்தகாலா ஹி யேऽந்தஸ்து த்வயகாலாஸ்ச யே பஹி: |
கல்பிதா ஏவ தே ஸர்வே விசேஷோ நாந்யஹேதுக: ||

౧౪. చిత్తకాలాహియేన్తస్తుద్వయకాలాశ్చయేబహిః ।
కల్పితాఏవతేసర్వేవిశేషోనాన్యహేతుకః॥

ஸ௦-ஹா. பொய்யாயிருக்கின்ற கற்பிக்கப்பட்ட பொருள்கள் கற்பிக்கப்படுகிற காலத்திலேயே காணப்படுகின்றன. இவ்வுலகமோ நிலைபெயற்றதாய் எல்லாக் காலத்திலும் முன்கண்ட பொருளிதென்று ப்ரத்யபிஜ்ஞையுடன் வேறு காலத்திலும் காணப்படுகின்றது. ஆகையாலிவ்வுலகத்தை கல்பிக்கப்பட்டதென்று சொல்லுவ தெவ்வாறெனில் அதற்கு இந்த சுலோகம் ஸமாதானமாயிருக்கின்றது. உள்ளே தோற்றுகிற சித்த காலங்களென்கிற கல்பிக்கப்பட்ட வஸ்துக்களும் இரண்டு காலங்களையுடைய வெளியில் கல்பிக்கப்பட்ட வஸ்துக்களும் எல்லாம் பொய்யே. ப்ரத்யபிஜ்ஞையினல் விசேஷமில்லை. அதுவே இதென்று தோற்றுகிற ப்ரத்யபிஜ்ஞை ஸ்வப்நத்திலு முண்

டாகையால் ப்ரத்யபிஜ்ஞையினால் பொய்யல்லவென்பது கூடாது. ப்ரத்யபிஜ்ஞையில் தோற்றுகிற பொருள்கள் இரண்டு காலங்களையுடையனவென்று சொல்லப்படும். அக்காலத்தில் கண்டதே இக்காலத்திலு மிருக்கிறதென்கிற ப்ரத்யபிஜ்ஞையில் இரண்டு காலங்களிலும் ஸம்பந்தம் தோற்றுகின்றமையாலென்க.

கரு. 𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌾 𑌏𑌵 𑌯𑍇𑌽𑌨𑍍𑌤𑌸𑍍𑌤𑍁 𑌸𑍍𑌫𑍁𑌟𑌾 𑌏𑌵 𑌚 𑌯𑍇 𑌬𑌹𑌿𑌃 |
𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌾 𑌏𑌵 𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌵𑌿𑌶𑍇𑌷𑌸𑍍𑌤𑍍𑌵𑌿𑌂𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌂𑌤𑌰𑍇 ||

౧౫. అవ్యక్తా ఏవ యే౽న్తస్తు స్ఫుటా ఏవ చ యే బహిః ।
కల్పితా ఏవ తే సర్వే విశేషస్త్వింద్రియాంతరే ॥

ஸ0-ஹா. லோகாநுபவம் ஸ்புடமாயிருக்கின்றது. ஸ்வப்நாநுபவம் ஸ்புடமாகாமலிருக்கின்றது. ஆனதால் ஸ்வப்நம்போல உலகம் பொய்யல்லவென்பது கூடாது. உள்ளே ஸ்புடமன்றியில் தோற்றுகின்ற வஸ்துக்களும் வெளியில் ஸ்புடமாய் தோற்றுகின்ற வஸ்துக்களும் எல்லாம் மநஸ்ஸின் தோற்றமேயாகையால் பொய்யேயாகின்றன. இவ்வாறு ஒன்று ஸ்புடமாயும் ஒன்று ஸ்புடமாகாமலு மிருப்பதற்குக் காரணம் இந்திரியம் வேறுபட்டமையாலென்றறிக. வெளியிந்திரியரியங்களால் காணப்படுகின்றமையால் வெளிப்பொருள்கள் ஸ்புடமாயும் அந்தக் காரணத்தினால் மாத்திரமே தோற்றுகின்றமையால்ஸ்வப்நம் அஸ்புடமாயும் தோற்றுகின்றது. ஆனதால் ஸ்வப்நம்போல உலகமும் பொய்யே யென்பதில் விரோதமில்லை.

கசா. 𑌜𑍀𑌵𑌂 𑌕𑌲𑍍𑌪𑌯𑌤𑍇 𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌤𑌤𑍋 𑌭𑌾𑌵𑌾𑌨𑍍𑌪𑍃𑌥𑌗𑍍𑌵𑌿𑌧𑌾𑌨𑍍 |
𑌬𑌾𑌹𑍍𑌯𑌾𑌨𑌾𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌿𑌕𑌾𑌂𑌶𑍍𑌚𑍈𑌵 𑌯𑌥𑌾𑌵𑌿𑌦𑍍𑌯𑌸𑍍𑌤𑌥𑌾𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌃 ||

౧౬. జీవం కల్పయతే పూర్వం తతో భావాన్పృథగ్విధాన్ ।
బాహ్యానాధ్యాత్మికాంశ్చైవ యథావిద్యస్తథాస్మృతిః ॥

ஸ0-ஹா. உள்ளும் வெளியும் தோற்றுகிற வஸ்துக்களுககு ஒன்றோடொன்று ஸம்பந்தமுண்டாம்படி கல்பித்ததற்குக் காரணம் என்னவென்றால் நான்செய்கிறேன் எனக்கு ஸுகமுண்டாகிறது எனக்கு துக்கமுண்டாகிறது என்று, இவ்வாறின்றி சுத்தமாயிருக்கிற ஆத்ம ஸ்வரூபத்தில் கயிற்றில் பாம்புபோல கலிபித்து பின் அந்த ஜீவனுக்கு, சுகதுக்கங்கள் விளையும்படியாக மற்ற வஸ்துக்களைக் கல்பித்து, க்ரியைகாரகம் பலம் முதலியவைகளை கல்பிக்கின்றான், இதற்குக் காரணம் இவன் அறிந்தபடி ஸ்ம்ருதி வருவதேயாம். இது முன் கல்பத்திலிருந்த பேதத்தை யநுசரித்து வந்தது.

கஎ. 𑌅𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌾 𑌯𑌥𑌾 𑌰𑌜𑍍𑌜𑍁𑌰𑌨𑍍𑌧𑌕𑌾𑌰𑍇 𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌾 |
𑌸𑌰𑍍𑌪𑌧𑌾𑌰𑌾𑌦𑌿𑌭𑌿𑌰𑍍𑌭𑌾𑌵𑍈𑌸𑍍𑌤𑌦𑍍𑌵𑌦𑌾𑌤𑍍𑌮𑌾 𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌃 ||

౧౭. అనిశ్చితా యథా రజ్జురన్ధకారే వికల్పితా ।
సర్పధారాదిభిర్భావైస్తద్వదాత్మా వికల్పితః ॥

ஸ0-ஹா. முன் சுலோகத்தில் சொல்லியபடி முதலில் எல்லா கல்பநத்திற்கும் மூலமான ஜீவ கல்பனைக்கு மூலஞ்சொல்லுகின்றது. உலகத்தில், தன்னுடைய ஸ்வரூபந் தெரியாதபோது கயிறு முதலியவை, பாம்பென்றும் தாரையென்றும் ப்ரமிக்கப்படுவதுபோல ஆத்மா நானிது என்று ப்ரமிக்கப்படுகிறது. அங்கு கயிற்றின் நிச்சயம் தெரியாமையால் ப்ரமம்பிறந்தது. இங்கு சுத்தசித்ஸ்வரூபம் என்று ஆத்மதத்வநிச்சயம்

பிறவாமையால், நானென்றும் இதென்றும் ப்ரமமுண்டாகிறது. நிச்சயமிருந்தால் பிரம்மம் பிறவாது. தன் விரலைதான் மற்றொன்றாக ப்ரமிக்கிறதில்லையன்றோ. ஆகையால் அவித்யையினால் உலகப்ரமமுண்டாகின்றது. என்று எல்லா உபநிஷத்துக்களினுடையவும் ஸித்தாந்தம்.

௧௮. 𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌾𑌯𑌾𑌂𑌯𑌥𑌾𑌰𑌜𑍍𑌜𑍍𑌵𑌾𑌂𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑍋𑌵𑌿𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 ।
𑌰𑌜𑍍𑌜𑍁𑌰𑍇𑌵𑍇𑌤𑌿𑌚𑌾𑌦𑍍𑌵𑍈𑌤𑌂𑌤𑌦𑍍𑌵𑌦𑌾𑌤𑍍𑌮𑌵𑌿𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑌃 ॥

౧౮. నిశ్చితాయాంయథారజ్జ్వాంవికల్పోవినివర్తతే।
రజ్జురేవేతిచాద్వైతంతద్వదాత్మవినిశ్చయః॥

ப௦ ஸா. ப்ரமித்தபின் இஃது கயிறேயன்றி வேறல்லவென்றுறுதிபிறந்தபின் மற்றொன்று மின்றிய த்வைதமாவதுபோல ஆத்மநிச்சயம் பிறந்தபின் அத்வைதமேயாகின்றது. இந்த தத்வஜ்ஞானம் சாஸ்திரமாகிற சூரியனால் அஜ்ஞானமாகிற இருள்நீங்கிய பின் பிறக்கும்.

௧௯. 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌦𑌿𑌭𑌿𑌰𑌨𑌨𑍍𑌤𑍈𑌶𑍍𑌚𑌭𑌾𑌵𑍈𑌰𑍇𑌤𑍈𑌰𑍍𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌃 ।
𑌮𑌾𑌯𑍈𑌷𑌾𑌤𑌸𑍍𑌯𑌦𑍇𑌵𑌸𑍍𑌯𑌯𑌯𑌾𑌸𑌂𑌮𑍋𑌹𑌿𑌤𑌸𑍍𑌸𑍍𑌵𑌯𑌮𑍍 ॥

౧౯. ప్రాణాదిభిరనన్తైశ్చభావైరేతైర్వికల్పితః।
మాయైషాతస్యదేవస్యయయాసమ్మోహితస్స్వయమ్॥

ப௦-ஹா. ஆத்மா ஒருவனாயி னளவில்லாத ப்ராணன்முதலிய விகல்பங்கள், ஏன் உண்டாகின்றனவென்று அறியாமையால் ப்ரச்நம் செய்கிறவனுக்கு விடைதருகின்றது இத்தசுலோகம். ஆத்மாவாகிய அவனையும் மோகிக்கும்படிசெய்கிற அவனுடைய மாயையினால் இப்படிப்பட்ட கணக்கில்லாத பேதமுண்டாகிறது.

௨௦. 𑌪𑍍𑌰𑌾𑌣𑌇𑌤𑌿𑌪𑍍𑌰𑌾𑌣𑌵𑌿𑌦𑍋𑌭𑍂𑌤𑌾𑌨𑍀𑌤𑌿𑌚𑌤𑌦𑍍𑌵𑌿𑌦𑌃 ।
𑌗𑍁𑌣𑌾𑌇𑌤𑌿𑌗𑍁𑌣𑌵𑌿𑌦𑌸𑍍𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌨𑍀𑌤𑌿𑌚𑌤𑌦𑍍𑌵𑌿𑌦𑌃 ॥

௨௧. 𑌪𑌾𑌦𑌾𑌇𑌤𑌿𑌪𑌾𑌦𑌵𑌿𑌦𑍋𑌵𑌿𑌷𑌯𑌾𑌇𑌤𑌿𑌤𑌦𑍍𑌵𑌿𑌦𑌃 ।
𑌲𑍋𑌕𑌾𑌇𑌤𑌿𑌲𑍋𑌕𑌵𑌿𑌦𑌃𑌦𑍇𑌵𑌾𑌇𑌤𑌿𑌚𑌤𑌦𑍍𑌵𑌿𑌦𑌃 ॥

௨௨. 𑌵𑍇𑌦𑌾𑌇𑌤𑌿𑌵𑍇𑌦𑌵𑌿𑌦𑌃𑌯𑌜𑍍𑌞𑌾𑌇𑌤𑌿𑌚𑌤𑌦𑍍𑌵𑌿𑌦𑌃 ।
𑌭𑍋𑌕𑍍𑌤𑍇𑌤𑌿𑌚𑌭𑍋𑌕𑍍𑌤𑍃𑌵𑌿𑌦𑍋𑌭𑍋𑌜𑍍𑌯𑌮𑌿𑌤𑌿𑌚𑌤𑌦𑍍𑌵𑌿𑌦𑌃 ॥

௨௩. 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌇𑌤𑌿𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌵𑌿𑌦𑌃𑌸𑍍𑌥𑍂𑌲𑌇𑌤𑌿𑌚𑌤𑌦𑍍𑌵𑌿𑌦𑌃 ।
𑌮𑍂𑌰𑍍𑌤𑌇𑌤𑌿𑌮𑍂𑌰𑍍𑌤𑌵𑌿𑌦𑍋𑌽𑌮𑍂𑌰𑍍𑌤𑌇𑌤𑌿𑌚𑌤𑌦𑍍𑌵𑌿𑌦𑌃 ॥

௨௪. 𑌕𑌾𑌲𑌇𑌤𑌿𑌕𑌾𑌲𑌵𑌿𑌦𑍋𑌦𑌿𑌶𑌇𑌤𑌿𑌚𑌤𑌦𑍍𑌵𑌿𑌦𑌃 ।
𑌵𑌾𑌦𑌾𑌇𑌤𑌿𑌵𑌾𑌦𑌵𑌿𑌦𑍋𑌭𑍁𑌵𑌨𑌾𑌨𑍀𑌤𑌿𑌤𑌦𑍍𑌵𑌿𑌦𑌃 ॥

௨௫. 𑌮𑌨𑌇𑌤𑌿𑌮𑌨𑍋𑌵𑌿𑌦𑍋𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑌿𑌤𑌿𑌚𑌤𑌦𑍍𑌵𑌿𑌦𑌃 ।
𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑌿𑌤𑌿𑌚𑌿𑌤𑍍𑌤𑌵𑌿𑌦𑍋𑌧𑌰𑍍𑌮𑌾𑌧𑌰𑍍𑌮𑍌𑌚𑌤𑌦𑍍𑌵𑌿𑌦𑌃 ॥

௨௬. 𑌪𑌞𑍍𑌚𑌵𑌿𑌂𑌶𑌕𑌇𑌤𑍍𑌯𑍇𑌕𑍇𑌷𑌡𑍍𑌵𑌿𑌂𑌶𑌇𑌤𑌿𑌚𑌾𑌪𑌰𑍇 ।
𑌏𑌕𑌤𑍍𑌰𑌿𑌂𑌶𑌕𑌇𑌤𑍍𑌯𑌾𑌹𑍁𑌰𑌨𑌨𑍍𑌤𑌇𑌤𑌿𑌚𑌾𑌪𑌰𑍇 ॥

௨௭. லோகாந்லோகவித³: ப்ராஹுராஶ்ரமா இதி தத்³வித³: |
ஸ்த்ரீபும்நபும்ஸகம் லைங்கா³: பராபரமதா²பரே ||

௨௮. ஸ்ருஷ்டிரிதி ஸ்ருஷ்டிவிதோ³ லய இதி ச தத்³வித³: |
ஸ்தி²திரிதி ஸ்தி²திவித³: ஸர்வே சேஹ து ஸர்வதா³ ||

౨౦. ప్రాణఇతిప్రాణవిదోభూతానీతిచతద్విదః।
గుణాఇతిగుణవిదస్తత్వానీతిచతద్విదః॥

౨౧. పాదాఇతిపాదవిదోవిషయాఇతితద్విదః।
లోకాఇతిలోకవిదఃదేవాఇతిచతద్విదః॥

౨౨. వేదాఇతిచవేదవిదఃయజ్ఞాఇతిచతద్విదః।
భోక్తేతిచభోక్తృవిదోభోజ్యమితిచతద్విదః॥

౨౩. సూక్ష్మఇతిసూక్ష్మవిదఃస్థూలఇతిచతద్విదః।
మూర్తఇతిమూర్తవిదోఽమూర్తఇతిచతద్విదః॥

౨౪. కాలఇతికాలవిదోదిశఇతిచతద్విదః।
వాదాఇతివాదవిదోభువనానీతితద్విదః॥

౨౫. మనఇతిమనోవిదోబుద్ధిరితిచతద్విదః।
చిత్తమితిచిత్తవిదోధర్మాధర్మౌచతద్విదః॥

౨౬. పంచవింశకఇత్యేకేషడ్వింశఇతిచాపరే।
ఏకత్రింశకఇత్యాహురనన్తఇతిచాపరే॥

౨౭. లోకాఁల్లోకవిదఃప్రాహురాశ్రమాఇతితద్విదః।
స్త్రీపున్నపుంసకంలైఙ్గాఃపరాపరమథాపరే॥

౨౮. సృష్టిరితిసృష్టివిదోలయఇతిచతద్విదః।
స్థితిరితిస్థితివిదఃసర్వేచేహతుసర్వదా॥

௨௦-ஸா. ஆத்மஸ்வரூபத்தின் தத்வத்தை யறியாமையால் கயிற்றில் பாம்புபோல அவித்யையினால் ஸமஸ்தப்ராணி பேதங்களும் கல்பிக்கப்பட்டிருக்கின்றன. என்று விசேஷ விசிஷ்டார்தம். இதின் விஸ்தரவ்யாக்யாநம் விசேஷ ப்ரயோஜந மில்லாமையால் செய்யப்படவில்லை. ப்ராணம் முதல் ஸ்திதிவரையிலுள்ள ஸமஸ்தமும் பீஜாத்மாவாகிய இந்த ப்ராணனுடைய காரிய பரம்பரையில் சேர்ந்தவையாகின்றன.

பதாந்வயார்த்தபேதங்கள்.

(20) ப்ராணஸ்வரூபத்தை யறிந்தவர்களாகிய ஹிரண்யகர்ப மதஸ்தரும் வைசேஷிகர் முதலானோரும் ஹிரண்யகர்ப்பனையும் ஈச்வரனையும் ஜகத் காரணம் என்று சொல்லுகிறார்கள். இது கல்பனையேயாகின்றது. ஹிரண்ய கர்பனுக்காவது கேவலேச்வரனுக்காவது ஸ்வதந்திரமாய் ஜகத்தை ஸ்ருஷ்டி செய்யத்தக்க சக்தியில்லை. இவர்களுக்கு அப்படிப்பட்ட சக்தி யுண்டென்று வேதப்ரமாணங் கூறுமையாலெனக. ஹிரண்ய கர்பாகமத்தில் ஹிரண்யகர்பனுக்கு அவ்வித சக்தி யுண்டென்று சொல்லியிருந்தபோதிலும் அபௌரு

ஷேயமான வேதத்திற்கு விரோதமாக புருஷர்களால் செய்யப்பட்ட ஆகமங்களிற் சொல்லுகிற விஷயங்கள் நம்பத்தக்கவை யன்றாகையால் அது ஸரியல்ல. தடஸ்தனாக வைசேஷிகர்கள் சொல்லுகிற ஈச்வர விஷயத்திலும் ப்ரமாணமில்லை. யுக்தியுமில்லை. ஆகையாலதுவும் ஒப்புக்கொள்ளத்தக்கதல்ல. ஆகையால் ப்ராணவித்துக்களென்கிற இவர்கள் சொல்லுவதும் கல்பனையேயாம். லோகாயதிகர் என்கிற சாரவாகமதஸ்தர்கள், ப்ருதிவி அப்பு, தேயம், வாயு என்கிற நான்கு பூதங்களும் ஜகத்திற்குக் காரணம். வேறு காணப்படாத பொருள்கள் காரணங்களாகமாட்டா. அவைகளுண்டென்பது நம்பத்தக்கதல்ல வென்கிறார்கள். இதுவும் கல்பனையேயாம்; ஜடங்களான பூதங்களைக் காரணமென்பது யுக்திக்குச்சேராது. இவை ஜடங்களாகையாலே ஸ்வதஸ்ஸித்தங்களல்ல. அதாவது தங்களுடைய ஸத்தையில் தாங்கள் ப்ரமாணமாகா வென்கை. தம்முடைய குணங்களால் ப்ரகாசிக்கின்றனவென்றும் சொல்லப்போகாது. தங்குணங்கள் தம்மை விஷயீகரிக்கமாட்டாமையாலென்க. நெருப்பினுடைய உஷ்ணகுணமானது நெருப்பைச் சுடுகிறதில்லையன்றோ. ஆகயால் பூதவித்துக்களென்கிற இந்த லோகாயதிகர் சொல்லுவதும் கல்பனையேயாகின்றது. ஸாங்கியர்கள்,ஸத்வரஜஸ்தமஸ்ஸுக்களாகிற குணங்கள் ஸமங்களாய்க்கொண்டு மகான் அஹங்காரம் தன்மாத்திரை பூதங்கள் ரூபமான ஜகத்திற்குக் காரணமென்கிறார்கள். இதுவும் கல்பனையேயாகின்றது. ஸாம்யத்தை யடைந்திருக்கிற குணங்கள் காரணமென்றால் ப்ரளயம் வருவதற்குக் காரணமில்லை. ஸாம்யம் தப்பினபோதுப் ப்ரளயமென்றால் ஸாம்யம் தப்புவதற்குக் காரணமென்ன. காரணமின்றி ஸாம்யம் தப்புமாயின் எப்போதும் ஸாம்யம் தபபக்கூடுமாகையால் எப்போதும் ப்ரளயம்வரவேணும்.ஒரு காரணமுண்டாயின் அந்தகாரணம்நித்யமானால்எப்போதும் ஸாம்யம் தப்பவேணும், அநித்யமாயின் அதற்குக் காரணம் சொல்லவேணுமென்ற நவஸ்தை வரும். ஆகையால் குணவித்துக்களென்கிற இவர்கள் சொல்லுவதும் கல்பனையேயாம். சைவர்கள், ஆத்மா, அவித்யை, சிவன் என்று மூன்று தத்வங்களை ஜகத்காரணமென்று சுருக்கமாய்ச் சொல்லுகிறார்கள். இதுவும் கல்பனையேயாம். சிவன் பேதப்பட்டவனாயின் ஜடரூபியாகிறான். பேதப்படானாயின், மூன்று தத்வங்களென்பது பொருந்தாது. ஆகையால் தத்வ வித்துக்களென்று சொல்லப்படுகிற சைவர்கள் சொல்லுவதும் கல்பனையேயாமென்று "ப்ராண இதி ப்ரணவிதஃ" என்கிற இருபதாவது சுலோகத்திற்குக் கருத்து.

(21) ஆத்மா ஒருவனே விச்வ தைஜஸ ப்ராஜ்ஞ துரீயமூர்த்திகளாகிற அம்ச ரூபங்களை யடைந்து ஜகத் காரணமாகிறானென்பதும் கல்பனையேயாகின்றது. நிரம்சமாகிய ஆத்மாவுக்கு அம்சமில்லாமையாலென்க. ஆக பாத வித்துக்கள் சொல்லுகிறபடியும் கல்பனையேயாம். சப்தஸ்பர்ச ரூபரஸகந்தங்களே அநுபவிக்கப் படுகின்றமையால் தத்வமென்று வாத்ஸ்யாயநர்

முதலியவர்கள் சொல்லுகின்றார்கள், சப்தாதி விஷயங்களை விஷத்திலும் கொடியவை என்று சொல்லுகின்றமையால் அவைகளை பரமார்த்த தத்வமென்பது தகாது. ஆகையால் விஷயவித்துக்களென்கிற வாத்ஸ்யாயனர் முதலியவர் சொல்லுவதும் கல்பனையேயாம். பூலோகம் புவர்லோகம் ஸ்வர்க்க லோகம் என்று மூன்று லோகங்கள் பரமார்த்தமாயிருக்கின்றனவென்று பௌராணிகர்கள் சொல்லுகிறார்கள் இதுவும் கல்பனையேயாகின்றது. அநந்த ஸ்தாநங்களை மூன்று ஸ்தாநங்களென்று கணக்கிட்டுச் சொல்லுவது தகாமையாலென்க. ஆகையால லோகவித்துக்களென்கிற பௌராணிகர்கள் சொல்லுவதும் கல்பனையேயாகின்றது. அக்நி, இந்திரன் முதலிய தேவதைகளே அந்தந்த பலன்களைத் தருகின்றார்களென்று தேவதா காண்டத்தையறிந்த வேதவித்துக்களென்கிற இவர்கள் சொல்லுகிறார்கள். இதுவும் கல்பனையாகின்றது. ஈச்வரன் பலன்களைத் தருவதில்லை என்று இவர்க ளபிப்ராயப்படுகிறார்கள். இது யுக்தமல்ல. தேவர்கள், நம்முடைய யத்நத்தை யநுசரித்துபலன்களைத்தருகின்றார்களாயின்வேலைக்காரரோடு ஸமாநர்களாகிறார்கள். ஸ்வதந்திரமாய் பலனைத் தருவாராயின் அவர்களைப்பூசிப்பது வீணாகின்றது. அந்த தேவதைகளிடத்தில் பக்தியுடையவரும் இந்த தேவதை பலனைத் தருமோ; தாராதோவென்று ஸந்தேகப்படுகிறார்கள். இந்த தேவதைகளினுடைய அநுக்கிரகம் ஸ்வதந்திரமாய் காரியம் செய்ய சக்தியில்லாதது. ஆகையால் இதுவும் கல்பனை என்று, "பாதாஇதிபாதவிதஃ" என்கிற இருபத்தோராவது சுலோகத்திற்குக் கருத்து.

(22) இருக்குயஜுஸ்ஸாமம் அதர்வணம் என்கிற நான்கு வேதங்களே தத்வங்களென்று வேதபாடகர் சொல்லுகிறார்கள். இதுவும் கல்பனையேயாகின்றது. வேதமாவது உலகத்தில் வழங்குகிற எழுத்துக்களைவிட வேறானதாய்க் காணப்படவில்லை. க்ரமமாக உச்சரிக்கப்பட்ட எழுத்துக்களே வேதமென்று ஒப்புக்கொள்ளப்படுகின்றது அந்த க்ரமமும், உச்சரிக்கும்போது தோற்றி மற்றப்போதில் காணப்படாமையால் கல்பிக்கப்பட்டதேயாம். ஆகையால் வேதம் கல்பிக்கப்பட்டதே யாகின்றமையால் தத்வமாகமாட்டாது. ஆகையால் வேதவித்துக்கள் சொல்லுகிற விதுவும் கல்பனையாகின்றது. ஜ்யோதிஷ்டோமம் முதலிய யஜ்ஞங்கள் தத்வங்களென்று போதாயநர் முதலிய யஜ்ஞநிஷ்டர் சொல்லுகின்றார்கள். இதுவும் கல்பனையாகின்றது. யஜ்ஞமாவது திரவ்யம், தேவதை, த்யாகம் என்று மூன்றையும் சேர்த்து யஜ்ஞமென்று பேரிட்டிருக்கின்றமையால் தனித்தனியே ஒன்றும் யஜ்ஞமல்லவென்றால் இந்த ஸமுதாயம் வஸ்து வாகாமையால் ஸமுதாயமும் யஜ்ஞமாகாது. ஆகையால் யஜ்ஞ வித்துக்கள் சொல்லுகிற விதுவும் கல்பனையேயாம். ஆத்மாவை; போக்தாவென்று, ஸாங்க்யர்கள் சொல்லுகிறார்கள். இந்த ஆத்மாவுக்கு போகம், விகாரமாயின் விகாரமுடைய ஆத்மாவை நித்யமானவனென்று சொல்லக்கூடாது. ஸ்வபாவமாயின் எப்போதும் போக்தாவாகவேண்டும். அப்படியின்றி விஷயங்கள் கிடைத்தபோ

தே போகிக்கிறானன்றோ. ஆனதால் போக்த்ரு வித்துக்கள் சொல்லுகிற விதுவும் கல்பனையேயாம். சமையற்காரர்கள் போஜநம் செய்யப்படுகிற ரஸ வஸ்துக்களே தத்வங்களென்று சொல்லுகிறார்கள். இதுவும் கல்பனையேயாகின்றது. வ்யஞ்சநம் முதலிய ரஸங்கள் அப்போதே ஒருவனுக்கு மதுரமாயும் ஒருவனுக்குக் கயந்ததாயும் தோற்றுகின்றமையால் ஒருவிதமா யிருக்கவில்லையன்றோ. ஆனதால் போஜ்ய வித்துக்களென்று சொல்லப்படுகிற விவர்கள் சொல்லுவதும் கல்பனையேயாம். என்று "வேதாஇதிசவேதவிதஃ" என்கிற இருபத்திரண்டாவது சுலோகத்தின் கருத்து.

(23) சிலர் ஜீவாத்மாவை அணுவென்று சொல்லுகிறார்கள் இது யுக்தமல்ல, ஒரு சமயத்தில் ஸமஸ்த சரீரத்திலும் பிறக்கிற சுக துக்கங்களை அநுபவிக்கக் கூடாமையாலென்க. ஆகையால் ஸூக்ஷ்ம வித்துக்கள் சொல்லுகிற விது கல்பனையேயாம், லோகாயதிகர் இந்த ஸ்தூல சரீரத்தையே ஆத்மா வென்கிறார்கள். நான் ஸ்தூலனாகிறேனென்று ஸ்தூல சரீரத்தையே நானென்று சொல்லுகிறானன்றோ என்று அவர்களுடைய அபிப்ராயம். இது தக்கதல்ல; இவன் மரணமடைந்தபோது முறங்கும் போதும் ஜ்ஞாநமில்லாம லிருக்கின்றது, ஸ்தூல சரீரமோ அப்போது மிருக்கின்றது. சரீரமே ஆத்மாவாயின் அக்காலத்திலும் அறிவுண்டாகவேணும். ஆத்மாவுக்கு, அறிவேயன்றோ ஸ்வரூபம். இதுவுமின்றி பூதங்களின் கூட்டத்தால் சரீரமுண்டாயிருக்கின்றது, இந்த பூதங்களில் ஒன்றாவது அறிவுடையதன்று. இந்த கூட்டமோ பூதங்களைவிட வேறொரு வஸ்துவல்ல, இதற்கு அறிவு ரூபங் கூடாது. ஆனதால் ஸ்தூல வித்துக்களாகிய லோகாயதிகர் சொல்லுகிற தேஹாத்மவாதமும் கல்பிதமேயாகின்றது. சூலம் முதலிய ஆயுதங்களை தரித்திருக்கிற சிவன் முதலானோரை பரமார்த்த தத்வமென்று ஆகமவாதிகள் சொல்லுகிறார்கள். அது ப்ரமம், நம்முடைய சரீரம்போல் சூலம் முதலிய ஆயுதங்களை யேந்துகிற கை முதலிய அவயவங்களோடு கூடிய சிவன் முதலானோருடைய சரீரமும், பூதங்களாலுண்டானதாகையால் அநித்யமாய்விடும். லீலையினால் சரீரத்தைக் கொண்டிருக்கிறானென்பதும் லீலை யில்லாதபோது சரீரமில்லாமையா லயுக்தமாகிறது. சரீரமில்லாதபோது லீலை யில்லாமையாலு மயுக்தமாகிறது. ஆகையால், மூர்த்த வித்துக்கள் சொல்லுகிற விதுவும் கற்பனையேயாம். ஒருவித ஆகாரமுமின்றி ஸ்வபாவ சூந்யமே பரமார்த்த தத்வமென்று சூந்யவாதிகள் சொல்லுகின்றார்கள். இதுவும் தக்கதல்ல. ஸ்வபாவ சூந்யம் பரமார்த்தமென்பது கூடாமையாலென்க. ஆகையாலிவ்வாறு அமூர்த்தவித்துக்களென்கிற சூந்யவாதிகள் சொல்லுவதும் கல்பனையேயாம். என்று "ஸூக்ஷ்மா இதி ஸூக்ஷ்மவிதஃ" என்கிற இருபத்துமூன்றாவது சுலோகத்தின் கருத்து.

(24.) ஜ்யோதிஷ பண்டிதர் காலமே பரமார்த்தமென்று சொல்லுகிறார்கள். இதுவும் ப்ரமமேயாம். ஏனென்றால், காலம் ஒன்றாயின், கலைமுஹூர்

தம் என்கிற பேதங் கூடாது. பலவாயினப்போது மதற்கு ஸ்வாதந்திரிய மில்லை. உதயகாலம் உச்சிகாலமென்று க்ரியையின் தருமமாகவன்றோ தோற்றுகின்றது. க்ரியாதருமமன்றாயின், காலத்திலு மவ்வித வ்யவஹாரங் கூடாது. அப்படியன்றாயின் காலபரிச்சேதமின்றி க்ரியைநித்யமாக வேண்டி வரும். ஆகையால், காலவித்துக்களென்கிற ஜ்யோதிஷ பண்டிதர்கள் கூறுகின்ற விதுவும் கல்பனையேயாம். ஸ்வரோதயந் தெரிந்தவர், திக்குக்களைப் பரமார்த்தமென்று சொல்லுகின்றனர். இதுவும் ப்ராந்தியேயாம். அதையறிந்தவரும் அபஜயத்தை யடைகின்றமையாலென்க. ஆகையால் திக் வித்துக்களென்கிற இவர்கள் கூறுவது கல்பிதமேயாகின்றது. தாதுவாதம், மந்த்ரவாதம, இவைகளை ஸத்யமென்று சிலர் நினைக்கின்றார்கள். இது ப்ரமம் தாம்ரம்முதலிய வஸ்துஸ்வபாவ மிருக்கும்போதாவது அழிந்தபோதாவது வேறுரூபஞ்சேராது. மந்திரவாதத்திலும் பாம்பினால் கடிக்கப்பட்டவன் மந்திரத்தால் மந்திரிக்கப்பட்டாலும் விதியுள்ளவனே ஜீவிக்கிறானேயன்றி விதிமாண்டவன் பிழைப்பதில்லையன்றோ. ஆகையால் வாதவித்துக்களென்று சொல்லுகிற இவர்கள் சொல்லுவதும் கல்பனையேயாகின்றது, புவநகோசத்தை யறிந்தவர்கள் இப்பதினான்கு லோகங்களும் ஸத்யமென்பர், இது ப்ரமம். அப்பதினாலுலோகங்களும் காணப்படாமையாலும் கண்டோமென்பவரும் ஒருவர்சொன்னபடி ஒருவர்சொல்லாமையாலுமென்க. ஆகையால் புவநவித்துக்களென்கிற இவர்கள் சொல்லுகிறவிதுவும் கல்பனையேயாம். என்று "காலா இதி காலவிதஃ" என்கிற இருபத்திநாலாவது சுலோகத்தின்கருத்து.

(25.) லோகாயதிகரில் சிலர் மனஸ்ஸையே ஆத்மா வென்கிறார்கள். இது உசிதமல்ல. மநஸ்ஸு ஸ்வதந்திரமாயின் துன்பப்படவேண்டியதில்லை. ஸ்வதந்திரமில்லையாயின் குடமுதலியவற்றைப்போ லாத்மாவாகமாட்டாது. இது கரணமாகையால் தீபம்போல ஆத்மாவாகக்கூடாது கரணமாகியதீபம் ஆத்மாவாகக்கண்டதில்லையன்றோ. ஆகையால்மநோவித்துக்களென்கிற இவர் சொல்வதும் கல்பனையேயாம். புத்தியே ஆத்மாவென்று பௌத்தர் சொல்லுகின்றனர். ஸுஷுப்தியில் புத்திதோற்றாமையாலும் அறியப்படுவதாயின் கடம்போல் மற்றொன்றா லறியப்படவேண்டுகையாலும் புத்திவித்துக்களென்கிற இவர்கள்சொல்வதும் கல்பனையேயாம். வெளிப்பட்ட ஆகாரங்களின்றி விஜ்ஞாநமயமாயிருக்கிற சித்தமே ஆத்மாவென்று பிறர்கூறுகின்றார். அப்போது புத்தியை ஆத்மாவாகச்சொல்லும்போ துண்டான தோஷங்களுண்டாகையால் சித்தவித்துக்களென்கிற விவர்கள் சொல்வதும் கல்பனையேயாகின்றது. விதித்தவைகளைச் செய்கையினாலுண்டாகிற தருமத்தையும் விலக்கியவற்றைச் செய்கையினாலுண்டாகிற அதருமத்தையும் பரமார்த்ததத்வமென்று மீமாம்ஸகர் சொல்லுகின்றனர். காலதேசபேதத்தால் தருமாதருமங்களில் வேறுபாடுகொள்ளப்படுகின்றமையால், தருமாதருமவித்துக்களென்கிற இவர்கள் சொல்வதும் கல்பனையேயாம். என்று "மந இதி மநோவிதஃ" என்கிற இருபத்தஞ்சாவது சுலோகத்திற்குக் கருத்து.

26. காரணமாத்திரமாகிய ப்ரதாநமென்கிற மூலப்ரக்ருதி ஒன்று, மகான் அஹங்காரம் சப்ததந்மாத்திரம், ஸ்பர்சதந்மாத்திரம், ரூபதந்மாத்திரம், ரஸதந்மாத்திரம், கந்ததந்மாத்திரம், என்கிற காரணகாரியரூபமாகிய ப்ரக்ருதிவிக்ருதிகளென்கிற தத்வங்கள் ஏழு, செவி, வாய், கண், மூக்கு, த்வக்கு, என்கிற ஐந்து ஜ்ஞாநேந்திரயங்கள், வாக்கு, பாணி, பாதம், பாயு, உபஸ்தம், என்கிற கருமேந்திரியமைந்து சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம், கந்தம், என்கிற விஷயங்களைந்து, ஆக விகாரங்கள்பதினாறு, ப்ரக்ருதியுமாகாமல் விக்ருதியுமாகாமல் த்ருசிஸ்வபாவனாய் விளங்குகிற புருஷனென்கிற ஆத்மா ஒருவன், ஆக இருபத்தைந்துதத்வங்கள் வாஸ்தவங்களென்று ஸாங்கியர் கூறுகின்றனர். இங்ஙனமிவர்கள் இருபத்தைந்து தத்வங்களென்று சொல்லும்போது கணக்கைக்கூட்டுவது விணாகின்றது. அது வேறுதத்வமில்லை என்பதைக்குறிப்பதற்காயின், வேறுபொருளுண்டானபோது அதை இல்லைஎன்பதுகூடாது. இல்லையாயின் அக்குறிப்புசேராது. ஆகையாலவரிங்ஙனமிருபத்தைந்து தத்வங்களைச் சொல்லுவது கல்பனையேயாம். பதஞ்சலி மகாமுநி மதத்தோர் இவ்விருபத்தைந்தோடு ஈச்வரனையும்சேர்த்து இருபத்தாறு தத்வங்களென்று கூறுகின்றார் இதுவும் தக்கதல்லவென்பது கீழ்ச்சொல்லியபடி ஸ்பஷ்டமாகின்றது. அன்றியே, ஈச்வரனைப் புருஷனிற்சேராது பிரிக்கக்காரணமில்லை. புருஷதத்வத்தி லந்தர்பாவமில்லையாயின் கடம்போலீஸ்வரன்ஜடரூபியாய் ஈச்வரனாகான். ஆகையால்அவர்கள்மதமும் கல்பனையேயாகின்றது. பாசுபதாகமவாதிகள், ராகம் அவித்யை நியதிகாலகலை மாயை, என்கிற இவைகளையும் சேர்த்துக்கொண்டு, முப்பத்தொருதத்வமென்கிறார்கள். இவ்வாறு பிரிவுகளைப்பிரிக்கில் அநந்தமாய் பிரிக்கக்கூடுமாகையாலும் கீழ்ச்சொன்ன தோஷங்களாலு மிதுவும் கல்பனையேயாகின்றது, சிலர் கணக்கில்லாத தத்வங்களிருக்கின்றனவென்று கூறுகின்றார்கள். இது கல்பனையே அஜ்ஞாநத்தால் விவாதப்படுகிறார்களன்றோ. என்று "பஞ்சவிம்சக இத்யேகே" என்கிற இருபத்தாறுவது சுலோகத்திற்குக்கருத்து.

(27) லோகத்திற்கு த்ருப்திசெய்விப்பது தத்வமென்பது லோகவித்துக்களென்கிற லௌகிகர்களினபிப்ராயம். இதுப்ரமம். தனித்தனியே ருசிபேதமுடைய ப்ரபஞ்சத்தை த்ருப்திசெய்விப்பது ஈச்வரனாலும் கூடாமையாலென்க. தக்ஷர்முதலிய மகர்ஷிகள் ஆச்ரமங்கள் பரமார்த்தங்களென்று ஸாதிக்கிறார்கள். இதுகல்பனை; ஆச்ரமமென்பது வேஷமாயின் சூத்திரரும் ப்ராம்மணரைப்போல் வேஷம்போட்டுக்கொள்ளில் அவர்களுக்கும் ஆச்ரமமுண்டாகவேணும் அப்படி இல்லையன்றோ. ஜாதியோடுகூடியே ஆச்ரமத்தை நிச்சயிப்பது அஸாத்யம். ஜாதியை நிச்சயிக்கப்போகாமையா லெவ்வாறு ஜாதியைக்கூட்டி ஆச்ரமங்களைக்காண்பது. ஆனதா லாச்ரமவித்துக்களென்கிற இவர்கள் சொல்வதும் கல்பனையேயாகின்றது. ஆச்ரமஸம்ஸ்காரங்களை ஆச்ரமமென்றாலும் அவை தேஹத்தைச்சேர்ந்தவையானால் பரலோக ஸம்

பந்தமுடையனவாகா. ஆத்மாவிபுவாகையால் அவனிடத்தில் ஸம்ஸ்காரங்கள் சேராதன்றோ. வையாகரணர்கள், ஸ்திரீலிங்கம்புல்லிங்கம் நபும்சகலிங்கம் இவைகளையுடைய சப்தமேதத்வமென்கிறார்கள். இங்ஙனமாயின், இந்த லிங்கங்கள் சப்தங்களுக்கு ஸ்வபாவமாயின் ஒன்றுக்கு பலஸ்வபாவங்கள் கூடாமையாலே சில சப்தங்கள் மூன்றுலிங்கங்களாயிருப்பது சேராது, உபாதியினாலென்றால் வாஸ்தவமென்பதுபோயிற்று.ஆனதால் லிங்கர்களென்கிற வையாகரணர்கள் சொல்வதும் கல்பனையேயாகின்றது. இரண்டுப்ரம்மங்களறியத்தக்கவை, பரமென்று மபரமென்றுமெனச்சிலர். இதுபொருந்தாது. அளவுபட்டது ப்ரம்மமாகாமையினாலு மளவில்லாததே ப்ரம்மமாகையாலுமென்க. அகையாலிங்ஙனம் சிலர் சொல்வதும் கல்பனையேயாம். என்று, "லோகாந்லோகவித:ப்ராஹு:" என்கிற இருபத்தேழாவது சுலோகத்தின் கருத்து.

(28.) ஸ்ருஷ்டியும் ஸ்திதியும் லயமும் தத்வமென்று பௌராணிகர் சொல்லுகின்றார்கள் ஸத்துக்கு மஸத்துக்கும் ஜந்மம்முதலியவை கூடாதென்று நிரூபிக்கப்போகின்றமையா லிவர்கள் சொல்லுவது கல்பனையேயாம். ஆனதால் உலகத்தி லவரவர்கள் அவ்லோகங்களில் எத்தனை வகையாகப் பிரமிக்கிறார்களோ அத்தனை வகைகளுமிந்த நிர்விசேஷாத்ம ஸ்வரூபத்தில் கல்பிக்கப்பட்டவையேயாமென்பது திண்ணமென்பது 'ஸ்ருஷ்டிரிதிஸ்ருஷ்டிவித:' என்கிற இருபத்தெட்டாவது சுலோகத்தின் கருத்து.

இந்த ஒன்பது சுலோகங்களுக்கும் விசேஷ கடினமன்று என்கிற அபிப்பிராயத்தால், சங்கராசாரியர் பாஷ்யம் செய்யவில்லை ஆநந்தகிரியாசாரியர் வ்யாக்யாநம் செய்தார். அதை யநுஸரித்து விசேஷவிஷயங்களையும் சேர்த்து இந்த சுலோகங்களுக்குக் கருத்தெழுதினோமென்றறிக.

உகூ. யம் பாவம் தர்சயேத்யஸ்ய தம் பாவம் ஸ து பச்யதி |
தம் சாவதி ஸ பூத்வாஸௌ தத்க்ரஹஸ்ஸமுபைதி தம் ||

౨౯. యం భావం దర్శయేద్యస్య తం భావం స తు పశ్యతి ।
తం చావతి స భూత్వాఽసౌ తద్గ్రహస్సముపైతి తమ్॥

உகூ-ஸா. எவ்வாறாயினும் இந்த உபாயங்களுக்கு ஐக்யத்தையடைந்து அந்தந்த பாவங்களைக் காட்டக் கண்டவன் அந்தந்த பாவங்களை அந்த ஆத்மாவாகவே காண்கிறான். அந்த பாவமும் அந்த ஆத்மாவோடு ஐக்யத்தை யடைந்திருக்கின்றமையால் அவனை இரக்ஷிக்கின்றது. அவனு மதையே அறிந்து அதையே அடைகிறான்.

௩௦. ஏதைரேஷோऽப்ருதக்பாவை: ப்ருதகேவேதி லக்ஷித: |
ஏவம் யோ வேத தத்த்வேந கல்பயேத்ஸோऽவிசங்கித: ||

30. ఏతైరేషోఽపృథగ్భావైః పృథగేవేతి లక్షితః ।
ఏవం యో వేద తత్త్వేన కల్పయేత్సోఽవిశంకితః॥

ஸா-ஹா. இந்த ரீதியில் ஆத்மாவில் வேறின்றித் தோற்றுகிற ப்ராணாதி பாவங்கள் வேறென்று மூடர்கள் நினைக்கிறார்கள். விவேகிகள் கயிற்றில் வேறாய் பாம்புமுதலி யவை யில்லையாவதுபோல இந்த ஆத்மாவில் வேறாய் ப்ராணாதி கல்பனையில்லை. என் றும் ப்ராணன்முதலிய ஸமஸ்தமும் இந்த ஆத்மாவில் ப்ரமத்தால் கல்பிக்கப்பட்டவை என்றும் அறிகிறார்கள். ஆகையால் அவர்களே வேதாந்தத்துக்குப் பொருள்சொல்ல வல்லவராவர்.

௩௧. 𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑌮𑌾𑌯𑍇 𑌯𑌥𑌾 𑌦𑍃𑌷𑍍𑌟𑍇 𑌗𑌨𑍍𑌧𑌰𑍍𑌵𑌨𑌗𑌰𑌂 𑌯𑌥𑌾 ।
𑌤𑌥𑌾 𑌵𑌿𑌶𑍍𑌵𑌮𑌿𑌦𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑌂 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑍇𑌷𑍁 𑌵𑌿𑌚𑌕𑍍𑌷𑌣𑍈𑌃 ॥

౩౧. స్వప్నమాయే యథా దృష్టే గంధర్వనగరం యథా ।
తథా విశ్వమిదం దృష్టం వేదాంతేషు విచక్షణైః ॥

ஸா-ஹா. ஸ்வப்நமும் மாயையும் கந்தர்வ நகரமும்போல வேதார்த்தங்களில் புத்தி மான்களால் இந்த உலகம் காணப்பட்டது. ஸ்வப்நமாவது, எல்லோருக்கும் பொய் யென்பது தெரிந்த விஷயம். மாயையாவது இந்திரஜாலம் முதலியவை. இதுவும் பொய்யேயன்றோ. கந்தர்வ நகரமாவது - ஆகாயத்தில் ஒருகாலத்தில் விசித்திரமான மெத்தை மேடைமுதலிய விசித்திரங்களையுடைய ஒரு பட்டணம்போல் தோன்றி உடனே மறைகின்றதென்று ப்ரஸித்தம். இதுவும் பொய்யேயன்றோ. ஆனதால் இவை போல உலகமும் பொய்யென்று "நேஹநாநாஸ்திகிஞ்சந" என்பது முதலிய சுருதி களால் நன்குவிளங்குகின்றது.

௩௨. 𑌨 𑌨𑌿𑌰𑍋𑌧𑍋 𑌨 𑌚𑍋𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌰𑍍𑌨 𑌬𑌦𑍍𑌧𑍋 𑌨 𑌚 𑌸𑌾𑌧𑌕𑌃 ।
𑌨 𑌮𑍁𑌮𑍁𑌕𑍍𑌷𑍁𑌰𑍍𑌨 𑌵𑍈 𑌮𑍁𑌕𑍍𑌤 𑌇𑌤𑍍𑌯𑍇𑌷𑌾 𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌤𑌾 ॥

౩౨. న నిరోధో న చోత్పత్తిర్న బద్ధో న చ సాధకః ।
న ముముక్షుర్న వై ముక్త ఇత్యేషా పరమార్థతా ॥

ஸா-ஹா. எடுத்த ப்ரகரணத்தை முடிப்பதற்கு இந்த சுலோகஞ் சொல்லப்படு கிறது. த்வைதம் பொய்யென்றும் ஆத்மா ஒன்றே மெய்யென்றும் நிரூபித்தமையா லிது ஸித்தமாயிற்று. அதாவது வேதம் லோகம் இவற்றிலுள்ள ஸமஸ்த வ்யவஹாரமும், அவித்யையின் ஸம்பந்தத்தால் வந்ததென்பதாம். ஆகையால், உத்பத்தி ப்ரளயம் இவ் விரண்டும் பொய். பத்தன், முக்தன், முமுக்ஷு, என்கிற விபாகமும் பொய். வாஸ் தவத்தில் பிறப்பு, இருப்பு, இறப்பு, இவையெல்லாம் பொய்யாகையால் ஸம்ஸாரியென் றும் மோக்ஷம் பெற்றவனென்றும் இவ்வாறு பேதப்பட்ட ஆத்மாக்களெவ்வாறு மெய் யாகப்போகிறார்கள். இவ்வாறு உத்பத்தி ப்ரளயம் இதனைப் பொய்யென்றுசொல்லுவ தெங்ஙனமெனில் கூறுகின்றோம். பேதம் பொய்யேயன்றோ. "யத்ரஹித்வைதமிவ பவதி" யதிஹநாநேவபச்யதி "ஆத்மைவேதம் ஸர்வம்" "ப்ரம்மைவேதம் ஸர்வம்" "ஏகமே வாத்விதீயம்" "இதம் ஸர்வம் யதயமாத்மா" "இவனுக்கு பேதம்போல் காணப் படுகிறது" "பேதம்போல் காண்கிறான்" "இவை எல்லாமாத்மாவே" "இவை எல் லாம் ப்ரம்மமே" "ஒன்றே இரண்டாவதில்லை." "ஆத்மரூபமே இவை எல்லாமாகக் காணப்படுகிறது" இவைமுதலிய சுருதிகள் பேதங்களையெல்லாம் பொய்யென்று நன் றாய்ப் பேசுகின்றன. ஆக கீழ்ச்சொல்லிய யுக்திகளாலும் இந்த சுருதிகளாலும் உலக மெல்லாம் பொய்யென்பது பெறப்பட்டது. ஆகவே, பிறப்பு, இருப்பு, இறப்பு, எல்லாம் பொய்யாகின்றது. பொய்யாவது அசத்தன்றோ. மெய்யான ஸத்துக்கேயன்று பிறப்பு முதலியவை யுண்டாகும். பொய்யான அஸத்திற்கு பிறப்புமுதலியவை இல்லையன்றோ

முயல்கொம்புக்குப் பிறப்புண்டோ; அழிவுண்டோ; ஆகையா லதுபோலவே அஸத்துக்கு பிறப்புமுதலியவை என்று விளங்கிற்று. ஆக உலகமெல்லாம் பொய்யே யாகையால் அஸத்தான இவ்வுலகத்தில் ஒன்றுக்கும் பிறப்புமுதலியவை யில்லை. பிறப்புமுதலியவை இல்லாதபோது ஒராத்மாபத்தனென்றும் ஒருவன் முக்தனென்றும் சொல்லுகிற பேதம் பொய்யே என்பது ஸித்தமன்றோ. இனி, அத்வைதத்திற்கும் பிறப்புமுதலியவை கூடாதன்றோ. அத்வைதம் பிறப்புடையது என்று சொல்லுவது மிகவும் விரோதமுடையது. இனி வ்யவஹாரா தசையிலிருக்கிற சடம் படம் முதலியவற்றிற்கு உத்பத்திநாசங்கள் சொல்லுவோமென்றோ லவை கயிற்றில் பாம்புபோல கலபிக்கப்பட்டவையென்று சொன்னோம். கயிற்றில்தோற்றுகிற பாம்புக்கு பிறப்பு அழிவிருந்தாலன்றோ இவ்வுலகத்திற்கும் சொல்லலாம். தோற்றமேயன்றி வாஸ்தவத்தில் பிறக்கவு மிறக்கவு மில்லையன்றோ. கயிற்றில்தோற்றுகிற பாம்பானது கயிற்றில்பிறக்குமோ மனதில் பிறக்குமோ; கயிற்றில் பிறக்குமாயின் கயிற்றைக்காணு மவர்களெல்லாம் பாம்பைக் காணவேணும். மனதில் பிறக்குமென்றால் வெளியில் தோற்றுவது கூடாது. ஆதலாலந்த பாம்புக்குப் பிறப்பு சொல்லமுடியாது. ஆதலால் மனதில் தோற்றுகிறதென்றே ஒப்புக்கொள்ளவேணும். அவ்வாறு பிறப்பு முதலியவையின்றி வெறும் தோற்றமாகையால் கயிற்றில்பாம்புபொய்யானதுபோல இவ்வுலகமும்மனதின் தோற்றமேயாகையால்பொய்யேயாம். இவ்வுலகம் மநத்தோற்றமின்றி வாஸ்தவமாயின்இவனுக்கு மநமடங்கிய போதாகிய ஸுஷுப்தி என்கிற பேருறக்கத்திலு முலகம் காணப்பட வேண்டுமென்றோ. அப்படி காணப்படுவதில்லை. ஆகையால் மநதில்தோற்றுகிற தோற்றமே இவ்வுலகெல்லாம் என்று ஸ்புடமாகின்றது. ஆனதால், இவ்வுலகத்தின் பேதம் பொய்யாகையால் இவ்வுலகத்திற்கு உத்பத்தி முதலியவை இல்லை என்று கௌடபாதாசாரியர் இந்த சுலோகத்தில் கூறுவது மிகவும் தக்கதேயாகின்றது. ஆக, இவ்வாறு பேதம் பொய்யாகிற விது ஸகல ப்ரமாணங்களாலும் சுருதி சாஸ்திரங்களாலும் காட்டப்படுகிறது. ஆனா லிங்கொரு ஸந்தேஹமுண்டாகின்றது. அதாவது இவ்வாறு ஸகலசாஸ்திரங்களுக்கும் பேதமில்லை யென்பதில் கருத்தாயின் அபேதமான அத்வைத ப்ரம்மஸ்வரூபத்தில் சாஸ்த்ரமில்லாமையால் அத்வைதமும் ப்ரமாண சூந்யமாய் ஸர்வசூந்யவாதமாய் விடுமே என்பதுதான். இதற்கு ஸமாதாநம் பேத ப்ரபஞ்சமுண்டாகையால் சூந்யமில்லை என்பதாயி னப்போது பேதமில்லை என்று முன்சொன்ன ஸித்தாந்தத்திற்கு விரோதம் வருமேயென்றால், இதற்கு முன் ஸமாதாநம் சொல்லி யிருக்கிறோம். அதாவது, இவ்வாறு ப்ரமமானது ஒரதிஷ்டாநமின்றி பிறவாதாகையால் பேத ப்ரபஞ்சப்ரமத்திற்கு அதிஷ்டாநமாய் ஒன்றிருக்க வேண்டும். அதுவே சுத்த ப்ரம்மமென்பதுதான். ஆனதால் மறுபடியும் அதை எடுத்து தோஷங்காட்டுவது பயனில்லாததேயாம். இனி, பாம்புக்கு அதிஷ்டாநமாய் தோற்றின கயிறும் வாஸ்தவத்தில் அஸத்யமானதுபோல ப்ரபஞ்ச ப்ரமத்திற்கு அதிஷ்டாநமான ப்ரம்மமும் அஸத்தியமாவதில் விரோதமில்லை. ஆகையால் ஸர்வசூந்யவாதமே த்ருடப்படுகிறதென்றால் அங்ஙனமல்ல, ப்ரமம் நீங்கியபின்னும் அதற்கு முன்னும் அதிஷ்டாநமாகிய கயிறு காணப்படுகின்றமையால் கயிற்றில் தோற்றின ஸர்பம்போல கயிறு பொய்யாகாது. அவ்வாறே ப்ரபஞ்ச ப்ரமத்திற் கதிஷ்டாநமான ப்ரம்மமும் பொய்யாகாது. ஆனால் கயிறானது ஸர்பகாலத்திற்குமுன்னும் பின்னும் தோற்றுகின்றமையால் ஸர்பம்போல பொய்யாகாவிடினும் காலாந்தரத்தில் பாதிக்கப்படுகின்றமையால் பொய்யேயாகின்றது. ப்ரம்மம் எப்போதும் பாதிக்கப்படாமையால் ஸத்யமேயாகின்றது. ப்ரம்மமும் ப்ரமத்தி லதிஷ்டாநமாய் கோசரிக்கின்றமையால் ப்ரமத்தில் கோசரிக்கிற கயிற்றுப் பாம்புபோல் பொய்யாகக்கூடுமே என்றால் இந்த ப்ரம்மம், ப்ரமத்தில் முக்யமாய் கோசரியாமையால் ரஜ்ஜுஸர்ப்ப ப்ரமத்தில்

முக்யமாய் கோசரியாமல் அதிஷ்டாநமாய் கோசரிக்கின்ற ரஜ்ஜு, ஸர்பம்போல் பொய்யாகாமல் ஸத்யமேயாவதுபோல் ஸத்யமேயாகின்றது. கல்பநாதிஷ்டாநம் கல்பனைக்கு முன்னிருக்கவேண்டு மாகையால் ஸர்வகல்பநாதிஷ்டாநமான ப்ரம்மம் ஸத்தேயாமன்றி பொய்யாகாது. இனி ஜ்ஞாநகோசரமாகாத ப்ரம்மத்தை எவ்வாறு சாஸ்திரம் தெரியப்படுத்துமென்றால்; அவித்யையினால் கல்பிக்கப்பட்ட தோஷபேதங்களை நீக்கவே, தானே ப்ரம்மஸ்வரூபம் விளங்குமன்றோ. ஸ்வரூபாம்சத்தில் சாஸ்திரத்தால் காரியமில்லை. அஸித்தமான விஷயத்தையே சாஸ்திரம் போதிக்கின்றமையாலெனக. இது வாஸ்தவ ஜ்ஞாநகோசர மாகாவிடினும் அநுவ்ருத்தியினாலேயே கீழ்ச்சொல்லியவையெல்லாங் கூடும். ஆனதால் ப்ரம்மம் நிர்விசேஷமென்பது வேத வித்துக்களின கொள்கை.

௩௩. ப்ராந்தைரஸத்பிரேவாயமத்வயேந ச கல்பித꞉ |
பாவா அப்யத்வயேநைவ தஸ்மாதத்வயதா ஶிவா ||

33. భ్రాన్తైరసద్భిరేవాయమద్వయేనచకల్పితః ।
భావాఅప్యద్వయేనైవతస్మాదద్వయతాశివా॥

பா0-ஸா. முன்சுலோகத்தில் சொல்லிய விஷயத்தையே ஹேதுக்களால் வலி யுறுத்துகின்றது. கயிற்றிலில்லாத ஸர்பம் தாரைமுதலியவற்றை இது பாம்பு இது தாரை என்று, ப்ரமிப்பதுபோல ப்ரம்மத்திலில்லாத ப்ராணாதிவஸ்துக்களை ப்ரம்மத்தி லிருக்கின்றனவாக ப்ரமிக்கின்றோம். ப்ரமத்திற்குக் காரணம் மனதேயாகின்றது. மனது செல்லாதபோது ஒரு வஸ்துவும் காணப்படுவதில்லையன்றோ. ஆத்மாவுக்காயின் சலநமில்லை. மனத்திற்காயின் சலநமே குணமாகின்றது. ஆகையால் சலநமுடைய மனஸ்ஸின் தருமங்களை பரமார்த்தங்களென்று யார் சொல்லுவர். ஆகையா லஸத்துக்களான வஸ்துக்களால் அத்வயரூபியான ஆத்மா ப்ரமிக்கப்படுகிறான். இந்த ப்ரமத்திற்கு ஆத்மாவே அதிஷ்டாநமாகிறது. ஆகையால் ப்ரமத்தால் வந்தது கயிற்றில் தோற்றிய பாம்புபோல பயத்தைத் தரும். பரமார்த்தமான அத்வைதமே சிவகரமானது. அதாவது மங்களஸ்வரூபமானது.

௩௪. நாத்மபாவேந நாநேதம் ந ஸ்வேநாபி கதஞ்சந |
ந ப்ருதங்நாப்ருதக்கிஞ்சிதிதி தத்த்வவிதோ விது꞉ ||

34. నాత్మభావేననానేదంనస్వేనాపికథంచన।
నపృథఙ్నాపృథక్కించిదితితత్త్వవిదోవిదుః॥

பா0-ஸா. இந்த பேத ப்ரபஞ்சவஸ்துவானது ஆத்மதாதாத்ம்யத்தாலும் ஸ்வதாதாத்ம்யத்தாலும் ஸித்திப்பதில்லை. ஆத்மா அஜடமாகின்றமையாலும் ப்ரபஞ்சம் ஜடமாகின்றமையாலும் முதலாவது கூடாது. இது ஸ்வதாதாத்ம்யமாய் ஸ்வதந்திரமாயி னாத்மாவேயாகவேண்டி யிருக்கின்றமையா லிரண்டாவதுங் கூடாது. பேதமே தருமமாயாவது ஸ்வரூபமாயாவது ஸித்தியாதாகையாலும் ப்ரபஞ்சபேதம் ஸித்தியாது. ஆகையால் அத்வைதமே தத்வமென்று தத்வவித்துகளினபிப்ராயம்.

பதாந்வயார்த்தபேதங்கள்.

பேதம் ஸ்வரூபமாயும் தருமமாயும் ஸித்தியாதுஎன்கிற விஷயம் நன்கு நிரூபிக்கப்படவேண்டியதாயினும் இவ்விடத்தில் நிரூபிக்கப்படவில்லை. இது பேததூஷண ப்ரகரணத்தில் கண்டாராயத்தக்கது.

௩௫. வீதராகபயக்ரோதைர்முநிபிர்வேதபாரகை:|
நிர்விகல்போஹ்யயம் த்ருஷ்ட: ப்ரபஞ்சோபஶமோऽத்வய:||

౩౫. వీతరాగభయక్రోధైర్మునిభిర్వేదపారగైః ।
నిర్వికల్పోహ్యయం దృష్టః ప్రపంచోపశమోఽద్వయః ॥

ஸ0-ஹா. ஸமஸ்த ராகத்வேஷமுதலிய துர்க்குணங்கள் நீங்கிய மகாமுனிகளால் இவ்வாறே வேதாந்தப்பொருள் விசாரிக்கப்பட்டு, ப்ரபஞ்சம் பொய்யென்றும் அத்வைதமே ஸத்யமென்றும் மங்களமென்றும் நிச்சயிக்கப்பட்டது.

௩௬. தஸ்மாதேவம் விதித்வைநமத்வைதே யோஜயேத் ஸ்ம்ருதிம்|
அத்வைதம் ஸமநுப்ராப்ய ஜடவல்லோகமாசரேத்||

౩౬. తస్మాదేవం విదిత్వైనమద్వైతే యోజయేత్స్మృతిమ్ ।
అద్వైతం సమనుప్రాప్య జడవల్లోకమాచరేత్ ॥

ஸ0-ஹா. ஆகையா லிவ்வாறறிந்து நெஞ்சை அத்வைதத்தில் செலுத்தவேணும் தன்னை உலகமெல்லாம் இப்படிப்பட்டவனென் றறிந்துகொள்ள முடியாமலிருக்கும்படி அத்வைதத்தை யடையவேணும்.

௩௭. நிஸ்ஸ்துதிர்நிர்நமஸ்காரோ நிஸ்ஸ்வதாகார ஏவ ச|
சலாசலநிகேதஶ்ச யதிர்யாத்ருச்சிகோ பவேத்||

౩౭. నిస్స్తుతిర్నిర్నమస్కారో నిస్స్వధాకార ఏవ చ ।
చలాచలనికేతశ్చ యతిర్యాదృచ్ఛికో భవేత్ ॥

ஸ0-ஹா. தன்னைப்பிறர் துதி செய்யவேண்டுமென்கிற நினைவும் தன்னைப்பிறர் வணங்கவேண்டுமென்கிற நினைவும்நீங்கியவனாய் தாரேஷணை புத்ரேஷணை முதலியவை இல்லாதவனாய் பரமஹம்ஸபரிவ்ராஜக ஸந்யாசத்தை யடைந்தவனாய் தேஹதாரணம் முதலிய காலந்தவிர மற்ற காலங்களில் தன் சரீரத்தை மறந்தவனாய் தானாய்கிடைத்த ஆஹாரங்களைக்கொண்டு த்ருப்தியடைகிறவனாயிருந்து அத்வைதத்தை யடையவேணும்.

௩௮. தத்த்வமாத்யாத்மிகம் த்ருஷ்ட்வா தத்த்வம் த்ருஷ்ட்வா து பாஹ்யத:|
தத்த்வீபூதஸ்ததாராமஸ்தத்த்வாதப்ரச்யுதோ பவேத்||

౩౮. తత్త్వమాధ్యాత్మికం దృష్ట్వా తత్త్వం దృష్ట్వా తు బాహ్యతః ।
తత్త్వీభూతస్తదారామస్తత్త్వాదప్రచ్యుతో భవేత్ ॥

ஸ0-ஹா. இவ்வாறு அத்வைதத்தை அறிந்து எப்போதும் நானே ப்ரம்மம், என்கிற த்யாநம் செய்யவேணும். இதரவிஷயங்களில் நெஞ்சைச் செலுத்தாமல் தத்வ ஸ்வரூபத்தை யடைந்து தத்வத்தை விடாதவனாகவேணும். இப்படியே எல்லா ஆத்மாக்கள் விஷயத்திலும் தத்வநிச்சயமுடையவனாகவேணும்.

இதி கௌடபாதீயகாரிகாயாம் வைதத்யப்ரகரணம்.

ஸ்ரீபரப்ரம்மணே நம:

ஸ்ரீபரப்ரம்மணேநம:

𑌅𑌥 𑌮𑌾𑌣𑍍𑌡𑍂𑌕𑍍𑌯𑌕𑌾𑌰𑌿𑌕𑌾𑌯𑌾𑌮𑍍 𑌅𑌦𑍍𑌵𑍈𑌤𑌪𑍍𑌰𑌕𑌰𑌣𑌮𑍍.

க. 𑌉𑌪𑌾𑌸𑌨𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑍋 𑌧𑌰𑍍𑌮𑍋 𑌜𑌾𑌤𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌿 𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 ।
𑌪𑍍𑌰𑌾𑌗𑍁𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑍇𑌰𑌜𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌤𑍇𑌨𑌾𑌸𑍌 𑌕𑍃𑌪𑌣𑌃 𑌸𑍍𑌮𑍃𑌤𑌃 ॥

౧. ఉపాసనాశ్రితో ధర్మో జాతే బ్రహ్మణి వర్తతే ।
ప్రాగుత్పత్తేరజం సర్వం తేనాసౌ కృపణః స్మృతః॥

ஸ0-ஹா. ஆத்மஸ்வரூபத்தை யொழிந்தவையெல்லாம் பொய்யே அத்வைதமே ஸத்யமென்று செய்த ப்ரதிஜ்ஞையின்படி த்வைதம் பொய்யென்பதை வைதத்ய ப்ரகரணத்தில் நிரூபித்தார். இந்த ப்ரகரணத்தில் அத்வைதமே ஸத்யமென்பதை யுக்திகளாலும் காட்டுகின்றார். எவன் நானுபாஸநம் செய்து ப்ரம்மத்தை யடையப்போகிறேனென்றும் அபேதத்தை யடையப்போகிறேனென்றும் நினைக்கிறானோ அவன் ப்ரம்மாபேதஸ்வரூபத்தை நன்குணராமையால் ப்ரம்ம வித்துக்களால் தாழ்ந்தவனாக நினைக்கப் படுவான்.

உ. 𑌅𑌤𑍋 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑍍𑌯𑌕𑌾𑌰𑍍𑌪𑌣𑍍𑌯𑌮𑌜𑌾𑌤𑌿 𑌸𑌮𑌤𑌾𑌂 𑌗𑌤𑌮𑍍 ।
𑌯𑌥𑌾 𑌨 𑌜𑌾𑌯𑌤𑍇 𑌕𑌿𑌂𑌚𑌿𑌜𑍍𑌜𑌾𑌯𑌮𑌾𑌨𑌂 𑌸𑌮𑌨𑍍𑌤𑌤𑌃 ॥

౨. అతో వక్ష్యామ్యకార్పణ్యమజాతి సమతాం గతమ్ ।
యథా న జాయతే కించిజ్జాయమానం సమంతతః॥

ஸ0-ஹா. ஆகையால் ப்ரம்ம ஸ்வரூபாத்வைதத்தை பலத்ருஷ்டாந்தங்களாலும் நான் சொல்லுகின்றேன். ஆனதாலிதை யறிந்து உத்தம ப்ரம்மவித்தாகும் வழியை அடையவேணும். ஆகையால், பிறவாததாகி ஸாம்யத்தையடைந்த, அத்வைதஸ்ரூபத்தை யறியவேணும்.

ங. 𑌆𑌤𑍍𑌮𑌾 𑌹𑍍𑌯𑌾𑌕𑌾𑌶𑌵𑌜𑍍𑌜𑍀𑌵𑍈𑌰𑍍𑌘𑌟𑌾𑌕𑌾𑌶𑍈𑌰𑌿𑌵𑍋𑌦𑌿𑌤𑌃 ।
𑌘𑌟𑌾𑌦𑌿𑌵𑌚𑍍𑌚 𑌸𑌙𑍍𑌘𑌾𑌤𑍈𑌰𑍍𑌜𑌾𑌤𑌾𑌵𑍇𑌤𑌨𑍍𑌨𑌿𑌦𑌰𑍍𑌶𑌨𑌮𑍍 ॥

౩. ఆత్మా హ్యాకాశవజ్జీవైర్ఘటాకాశైరివోదితః ।
ఘటాదివచ్చ సంఘాతైర్జాతావేతన్నిదర్శనమ్॥

ஸ0-ஹா. ஆகாயம்போல் ஸூக்ஷ்மமாய் நிரவயவமாய் எங்கும் நிறைந்ததாயிருக்கின்றபரமாத்மஸ்ரூபத்தில்நின்றும்கடாகாசம்முதலியவையாகாசத்தினின்றுமுண்டாவது போல் ஜீவர்கள் உண்டானார்கள். கடாகாசம் முதலியவற்றால் ஆகாசம் பிறப்புடையதானதுபோல ஜீவர்களால் ஆத்மா பிறப்புடையவனாகின்றான். ஆகையால் வேதாந்தங்களில் ஜீவர்கள் பரமாத்மாவினிடத்தில் பிறந்ததாய்ச் சொல்லுகிற வாக்யங்களுக்கு மகாசத்தில் கடாகாசம்போலப்பிறந்தனரென்று கருத்து.வாஸ்தவத்தில் பிறந்தார்களன்று. அவ்வாகாசத்தில் கடம் முதலியவைபோலவே பரமாத்மாவினிடத்தில் ப்ருதிவீ முதலியஸமஸ்த பூதங்களும் உண்டாகின்றன.ஆகையால் மந்த புத்திகளுக்கு ஜாதியை ஒப்புக்கொள்ளும்போது இது திருட்டாந்தம்.

ச. 𑌘𑌟𑌾𑌦𑌿𑌷𑍁 𑌪𑍍𑌰𑌲𑍀𑌨𑍇𑌷𑍁 𑌘𑌟𑌾𑌕𑌾𑌶𑌾𑌦𑌯𑍋 𑌯𑌥𑌾 ।
𑌆𑌕𑌾𑌶𑍇 𑌸𑌮𑍍𑌪𑍍𑌰𑌲𑍀𑌯𑌨𑍍𑌤𑍇 𑌤𑌦𑍍𑌵𑌜𑍍𑌜𑍀𑌵𑌾 𑌇𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑌿 ॥

౪. ఘటాదిషు ప్రలీనేషు ఘటాకాశాదయో యథా ।
ఆకాశే సంప్రలీయంతే తద్వజ్జీవ ఇహాత్మని॥

ஸ௦-ஹா. எவ்வாறு கடம் பிறந்தால் கடகாசம் பிறக்கின்றதோ, கடமழிந்தால் கடகாசமழிகின்றதோ, அவ்வாறே, தேஹம்பிறந்தால் ஆத்மாபிறக்கிறான் தேஹமழிந்தால் ஆத்மா அழிகிறான். அதாவது லயிக்கிறான். இதனால்எப்படி கடாகாசத்திற்கு கடமாகிய உபாதியினாலே பிறப்பும் நாசமுமே யன்றி வாஸ்தவத்தி லில்லையோ அப்படியே ஆத்மாவுக்கும் சரீரமாகிய உபாதியினால் பிறப்புவினாசம் இவை யுண்டாகின்றனவே யன்றி வாஸ்வத்திலல்ல இப்படியே அனேகோபாதிகளையும் உதாஹரணமாகக் கொள்க.

௫. யதைகஸ்மிந்கடாகாஶே ரஜோதூமாதிபிர்யுதே |
நஸர்வே ஸம்ப்ரயுஜ்யந்தே தத்வஜ்ஜீவாஸ்ஸுகாதிபி:||

౫. యథైకస్మిన్ఘటాకాశే రజోధూమాదిభిర్యుతే।
న సర్వే సంప్రయుజ్యంతే తద్వజ్జీవాస్సుఖాదిభిః॥

ஸ௦-ஹ-ா. எல்லாதேஹங்களிலு மாத்மா ஒருவனாயின், ஒருவன்ஜந்மம் ஜரைமரணம் முதலிய தர்மங்களால் வருத்த மடையும்போது எல்லோருககும், அந்ததுக்கம் வருமென்றும் ஒருவன் செய்த பாபபுண்ணிய பலத்தை மற்றொருவன் அனுபவிக்கின்றமையால் ஸங்கரமும் வருமென்று சொல்லுகிற த்வைதிகளை மறுக்கின்ற திந்தசுலோகம். ஒரு கடாகாசமானது, புகைமுதலிய அழுக்கினா லாக்ரமிக்கப்பட்டிருந்தாலும், மற்ற கடகாசங்களுக்கு அந்த அழுக்கினால் கெடுதி யில்லையன்றோ. இவ்வாறே ஒருஜீவாத்மாவுக்கு ஸுகதுக்க முதலிர சுபா சுபங்கள் உண்டானாலும் மற்ற ஜீவாத்மாக்களுக்கு அவையுண்டாகா. ஆத்மாஒருவனே யன்றோ வென்றால் நாம் திருட்டாந்தம் சொன்ன ஆகாசம் இரண்டன்றே: எல்லா கடங்களிலு மிருக்கிற ஆகாசம் ஒன்றே யன்றோ. ஆயினும் அந்தந்த கடம் முதலியவை வேறுபடுதலால் அந்த ஆகாசமும் வேறுபட்டு ஒன்றில் படிந்த அழுக்கு ஒன்றுக்கின்றி யிருக்கின்றதன்றோ. இவ்வாறே ஜீவாத்மாக் களுக்கும் பேதாபேதங்கள் க்காண்க. இனி, இவ்வாறு ஆத்மா ஒருவனாயினும் தலைநோய் முதலிய துன்பங்களை அச்சரீரத்திலிருக்கின்ற ஆத்மா ஒருவனே யன்றோ அநுபவிக்கின்றான். தலைமட்டிலுள்ள ஆத்மாவே அநுபவிக்கிறானென்பதில்லையன்றோ. ஆனதால் உபாதி வேறாயினும் ஆத்மா ஒருவனேயாகையால், ஒரு சரீரத்தில் ஓரவயவத்தில் வந்த துன்பத்தைஅச்சரீரத்தில் எல்லா அவயவங்களிமுள்ள ஆத்மா அனுபவிப்பதுபோல் எல்லாசரீரங்களிலுமுள்ள ஆத்மாவும் ஒரு சரீரத்திலுண்டான ஸுக துக்கங்களையு மநுபவிக்கவேணும் என்றால், இந்த ஆக்ஷேபம் ஸாங்க்ய மதஸ்தன் செய்யக்கூடாது. ஸாங்கியன் ஸுக துக்கங்களை ஆத்மாவில் இருப்பனவாக ஒப்புக்கொள்ளவில்லை யன்றோ. புத்திக்கேயன்றோ ஸுகதுக்கங்களைச் சொல்லுகிறான். ஆதலால் கேவலஜ்ஞாந ஸ்வரூபனை ஜீவாத்மாவுக்கு சரீரந்தோறும் பேதத்தைக் கொள்ளுவதில் அவர்களுக்கு ஒரு யுக்தியுமில்லை. ஜீவாத்ம பேதமில்லையாயின் ப்ரக்ருதிஜீவாத்மாவின் பொருட்டென்பது கூடாமையால்ஜீவாத்மபேதத்தை ஒப்புக்கொள்ளவேணுமென்று சொல்லவேண்டியதில்லை. இந்தப்ரக்ருதி தருமங்கள் ஆத்மாவில் சேருகின்றன வில்லையன்றோ. பிரகிருதியினாலேர்ப்படுகிற பந்தமாவது மோக்ஷமாவது பேதப்பட்ட ஜீவாத்மாக்களைச் சேருமாயின் பந்தமோக்ஷநியமத்திற்காக ஜீவாத்மாக்களை பேதப்பட்டவர்களாக ஒப்புக்கொள்வது தக்கதாகும். ஸாங்கியர்கள் பந்தமோக்ஷங்களை ஜீவாத்மாக்களுக்குக் கொள்ளவில்லையன்றோ. நிர்விசேஷ ப்ரகாச ரூபமான ஜீவாத்மாக்களை நித்யமுக்தராகவன்றோ ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆகையால்ஒரு ஜீவனை ஒப்புக்கொண்டபோதிலும் ப்ரக்ருதி ஜீவாத்மாவின் பொருட்டென்பதும்கூடுகின்றது. ஆகையால் ஜீவாத்மாக்களை பேதப்பட்டவர்களாக ஒப்புக்கொள்வது வீணேயாம். ஜீவனிருப்பதையே காரணமாக்கிக்கொண்டு ப்ரக்ருதிதானே பந்தத்தை

யும் மோக்ஷத்தையு மடைகின்றதென்றும் அந்த ஜீவனும், ஜ்ஞானஸ்வரூபஸத்தாமாத்திரத்தால்ப்ரக்ருதியின் ப்ரவ்ருத்தியில் காரணமாகிறனென்றும் ஜீவாத்மாவுக்கு ஒரு விசேஷ தருமமும் வேண்டியதில்லையென்றும் சொல்லுகிற ஸாங்கியர் கேவல மூடத்தனத்தால்ஒருபயனுமின்றி வேதார்த்த விருத்தமாக ஜீவாத்மபேதத்தை ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆனதால் ஸாங்கியர் ஸுகதுக்கங்களின் ஸம்பந்தம் ஒருவனுடையது, மற்றொருவனுக்கு வரவேண்டுமாகையால் ஜீவபேதம் கொள்ளவேணுமென்று ஆக்ஷேபிக்கக் கூடாது. இனிதார்க்கிகர் ஆக்ஷேபிப்பார்களாயின், அவர்களுக்கு சமாதானம் சொல்லுகிறோம், தார்க்கிகர்கள் ஜீவாத்மாவுக்கே ஸுகதுக்கங்களை யொப்புக்கொள்ளுகிறார்கள்.அது பிழை. ப்ரதேசமில்லாதஆத்மஸ்வரூபத்தில் ஸுகதுக்க ஸமவாயங்களையொப்புக்கொள்ளத்தகுமோ; இதுவுமின்றி ஆத்மாமநஸ்ஸோடுசேர்ந்தபோது அந்தந்த ஜ்ஞானமுண்டாகிறதென்று சொல்லுகின்றமையால் எப்போதும் ஜ்ஞானஸ்ம்ருதிகளுண்டாக வேணும். ஏககாலத்தில் எல்லாஸ்ம்ருதி ஜ்ஞானங்களு முண்டாகவேணும். வேறு வேறு ஜாதியான ஆத்மாவுக்கும் மநஸ்ஸுக்கும் ஸம்பந்தமும் கூடாது. த்ரவ்யத்திற்கும் குணம் முதலியவற்றிற்கும் ஸம்பந்தமுண்டானதுபோல் ஆத்மாவுக்கும் மநஸ்ஸுக்கும் ஸம்பந்தங் கூடுமென்பது தகாது. த்ரவ்யத்தைவிட வேறாய் ரூபமுதலிய குணங்களும் கருமம் ஸாமாந்யம் விசேஷம் ஸமவாயம் இவைகளு மில்லையன்றோ. எங்கள் மதத்தில் த்ரவ்யத்தைவிட குணம் முதலியவை வேறு, ஸுகம் துக்கம் இச்சை முதலியவை ஆத்மாவைவிட வேறு, என்றால் இவ்வாறு பேதப்பட்டவை யொன்று சேருவது கூடுமோ. அயுதஸித்தங்களாகையால் கூடுமென்றால் அநித்யங்களான ஸுக துக்கம் இச்சை முதலியவற்றோடு நித்யமான ஆத்மஸ்வரூபத்திற்கு அயுதஸித்திகூடாது. (அயுதஸித்தியாவது பிறிவின்றியிருக்கை என்று தார்க்கிகர்மதம்) இவற்றோடு மயுதஸித்தியுண்டென்றால் ஆத்மபரிமாணம்போல இவற்றையும் நித்யங்களேயெனக் கொள்ள வேணும். அது விருத்தம் இஷ்டமுமல்ல. ஸுகம் துக்கம் இச்சைமுதலியவை நீங்குவதே மோக்ஷமென்று ஸித்தாந்தமாகையாலென்க. ஸமவாயம் த்ரவ்யத்தைவிட வேறாயின் குணத்திற்குப்போல அதற்கும் த்ரவ்யத்தோடு ஒரு ஸம்பந்தம் சொல்லவேணும். ஸமவாயம் நித்ய ஸம்பந்தமாகையாலது வேண்டப்படாதென்றாலும் அந்த ஸம்பந்தமுடைய குணமுதலியவை எல்லாம் நித்யமாகவேண்டும். மிகவும் வேறுபட்டதாயின் 'அதினுடையதிது' என்று வ்யவஹாரங் கூடாது. ஆவது மழிவதுமான குணங்களை ஆத்மாவுக்கு ஒப்புக்கொண்டால் ஆத்மாவு மநித்யமாகவேண்டிவரும். தேஹத்திற்குப் போலவே விகாராதி தோஷங்களும் தப்பாது ஆகாசத்திற்கு உபாதியினால் அழுக்குவருவதுபோல் ஆத்மாவுக்கு அவித்யையினால் ஸுகதுக்கங்கள் வருமென்கிற பக்ஷத்தில் வ்யவஹாரதசையில் பந்தமோக்ஷங்களுக்கு ஒரு விரோதமுமில்லை. எல்லாமதஸ்த்தரும் அவித்யாஸம்பந்தத்தை ஒப்புக்கொள்ளுகிறார்கள். பரமார்த்தத்தில் துக்கம் முதலியவற்றின்ஸம்பந்தமே கிடையாது. ஆகையால் அந்த தார்க்கிகர்களும் வீணாகவே ஜீவாத்மபேதத்தைக் கூறுகின்றார்கள்.

ரூ. ரூபகார்யஸமாக்யாஶ்ச பித்யந்தே தத்ர தத்ர வை ।
ஆகாஶஸ்ய ந பேதோऽஸ்தி தத்வஜ்ஜீவேஷு நிர்ணய:॥

தெ. రూపకార్యసమాఖ్యాశ్చ భిద్యన్తే తత్ర తత్ర వై।
ఆకాశస్య న భేదోఽస్తి తద్వజ్జీవేషు నిర్ణయః॥

பா-௦ ஸா. ஒருஆத்மாவில் ஆத்மபேதத்தைப்பற்றிய வ்யவஹாரம்அவித்யையால்விரோதமின்றிக்கூடுவதெப்படிஎன்றால் சொல்லுகின்றோம். எவ்வாறு,ஒரு ஆகாயத்தில்தானே

கடாகாசம் மடாகாசம்என்கிற ஸ்வரூபபேதமும் அதினுல் கடாகாசம் சிறியது, மடாகாசம் பெரியது, என்று தரும பேதமும், கடகாசத்தில் தண்ணீரெடுப்பது மடாகாசத்தில் உறங்கப்படுப்பது, என்ற காரிய பேதமும், கடம் மடம், என்று பெயரும் பேதப்படுகிறதோ; அவ்வாறே ஸமஸ்த பேதவ்யவஹாராதிளும் உபாதியினுல் ஒரு ஆத்மாவுக்கே உண்டாகின்றன. வாஸதவத்தில் பேதவ்ய வஹாரங்களொன்றும் பரமார்த்தங்களலல.

எ. நாகாஶஸ்ய கடாகாஶோ விகாராவயவௌ யதா |
நைவாத்மநஸ்ஸதா ஜீவோ விகாராவயவௌ ததா ||

౭. నాకాశస్యఘటాకాశో వికారావయవౌ యథా ।
నైవాత్మనస్సదాజీవో వికారావయవౌ తథా॥

ஸ-௦ஹா. சிழ்ச்லொல்லிய வ்யவஹாரங்கள் பரமார்த்தங்களே யாவதில் விரோதமில்லேயே யென்ருல் அங்ஙனமல்ல; கடாகாசம் மகாசத்தின் விகாரமல்லவன்ரே. குண்டலம் முதலிய பூஷணங்கள் பொன்னின் விகாரமேயாவதுபோல் கடாகாசமும் வாஸ்தவத்தில் மகா காசத்தின் விகாரமாயின் இதற்கு பர மார்த்தத்தில் தோஷ சம்பந்தம் சொல்லக்கூடும். அங்ஙன மன்ருகையால் மகாசம் போலவே வாஸ்தவத்தில் நிர்தோஷமாகையால் இதற்கு பரமார்த்த தோஷங்கள் சொல்லக் கூடாது. தண்ணீருக்கு நுரை முதலிய விகாரமுண்டாவது போல் ஆகாசத்திற்கில்லே யன்ரே. ஒரு மரத்திற்கிளேகள் போல மகாசத்திற்கு கடாகாசம் அவயவ மல்ல; இவ்வாறே ஜீவர்களும், ஆத்மாவினுடைய விகாரமுமல்ல அவயவங்களுமல்ல. ஆனதால் கடாகாசத்திற்குப் போலவே இந்த ஜீவனுக்கு பரமார்த்த தோஷங்கள் தட்டாது, என்பது வேதாந்த நிச்சயம்.

அ. யதா பவதி பாலாநாம் ககநம் மலிநம் மலை: |
ததா பவத்யபுத்தாநாமாத்மாபி மலிநோ மலை: ||

౮. యథాభవతిబాలానాంగగనంమలినమ్మలైః ।
తథాభవత్యబుద్ధానామాత్మాపిమలినోమలైః॥

ஸ௦-ஹா. எவ்வாறு ஆகாயம் ஸ்வயம்சுத்தமாயிருக்கவும் தூசி புகை மேகம்முதலிய அழுக்குடையதுபோல் அவிவேகிகள்எண்ணுகிருர்களோ; விவேகிகளுக்காயின் சுத்தமென்றேஅபிப்ராயமோ, அவ்வாறேஇவ்வாத்மாவுக்கும், ஸுகதுக்கங்கள்உண்டாகிறது வாஸ்தவமென்று அவிவேகிகளுக்குத் தோற்றுகின்றது. விவேகிகளுக்காயின் நித்யசுத்தமாய் தோற்றுகின்றது. எவ்வாறுதாஹத்தால் வருந்துகிறவன் தன்னஜ்ஞானத்தினுல் ஒருகெட்டநிலத்தை தண்ணீரலேநுரைமுதலியவற்ரேடு கூடியதென்றுஎர்ப்படுத்தினுலும் அங்கு தண்ணீர் முதலியவை வாராவோ; விவேகிகளும் நினேயார்களோ; அவ்வாறே என்க. ஆகையால் கடாகாசம் முதலியவற்றிற்கு உபாதியினுல் தோஷங்களேயன்றி வாஸ்தவத்திலில்லேயாவதுபோல ஆத்மாவுக்கும் துன்பம் முதலியவை பரமார்த்தத்திலில்லே என்க. இவ்வாறு திருட்டாந்தங்களாலிதை ரூபித்துக்காட்டுவதற்கு இந்த சுலோகம் சொல்லப்பட்டது.

கூ. மரணே ஸம்பவே சைவ கத்யாகமநயோரபி |
ஸ்திதௌ ஸர்வஶரீரேஷு ஆகாஶேநாவிலக்ஷண: ||

౯. మరణేసమ్భవేచైవగత్యాగమనయోరపి ।
స్థితౌసర్వశరీరేషుఆకాశేనవిలక్షణః॥

ஸ0-ஹா. இனி ஜீவாத்மா மரணத்தை யடைந்தபின் தருமம் செய்திருந்தால் ஸ்வர்க்கம்போகின்றான். அதர்மம் செய்திருந்தால் நரகம் போகிறானென்றும், அவ்வாறு சென்று தருமாதருமபலன்களை யனுபவித்தபின் இப்புவியில் சேர்ந்து கருமத்திற்குத்தக்கபடி யோநியில் புகுந்து மனிதனும் பசுவாயும் பிறக்கிறானென்றும் வேதங்கள் முறையிடுகின்றன. கடாசம்போலகண்டாத்மஸ்வரூபத்தி லுபாதியினால் ஜீவனென்றால், கடாசம் கடத்தையுடைத்தபின் அத்தேசத்தைவிட்டு தேசாந்தரத்திற்குப்போவ தில்லை யன்றோ; அவ்வாறே சரீரம்போன பிறகும் ஜீவாத்மா அந்தவிடத்தைவிட்டு லோகாந்தரம்போவது கூடாமையால் இந்த அத்வைதவாதம் ஸரியில்லை என்று ஆக்ஷேபம்வரும். இதற்கு ஸமாதாநம்; ஆத்மாவினிடத்தில் எல்லா வ்யவஹாரங்களும் அவித்யையினால் வந்ததாகையால் வாஸ்தவமல்ல; ஆகையால் இவ்வாத்மா வாஸ்தவத்தில் தேசாந்தரம் போவதில்லை. போவதாய்ச் சொல்லுவது பொய்யேயாம். அவ்வாறு கூறுவது மவித்யையினாலேயாம்.

க0. ஸங்காதாஸ்ஸ்வப்நவத்ஸர்வே ஆத்மமாயாவிஸர்ஜிதா: |
ஆதிக்யே ஸர்வஸாம்யே வா நோபபத்திர்ஹி வித்யதே ||

౧౦. సంఘాతాస్స్వప్నవత్సర్వే ఆత్మమాయావిసర్జితాః।
ఆధిక్యే సర్వసామ్యే వా నోపపత్తిర్హి విద్యతే॥

ஸ0-ஹா. கடம் முதலியவற்றோடு ஸமாநமான இந்த தேவதை மநுஷ்யர் பசு பக்ஷி முதலிய தேஹங்கள் ஸ்வப்நம்போல இவ்வாத்மாவி னவித்யையினால் கல்பிக்கப்பட்டவை. இந்த சரீரத்தின் தாரதம்யத்தினால் பேதமில்லை. எல்லாம் அவித்யையினால் கல்பிக்கப்பட்டவையாகையால் எல்லாம் பொய்யே யாகின்றன.

கக. ரஸாதயோ ஹி யே கோஶா வ்யாக்யாதாஸ்தைத்திரீயகே |
தேஷாமாத்மா பரோ ஜீவ: கம் யதா ஸம்ப்ரகாஶித: ||

౧౧. రసాదయో హి యే కోశా వ్యాఖ్యాతాస్తైత్తిరీయకే।
తేషామాత్మా పరో జీవః ఖం యథా సంప్రకాశితః॥

ஸ0-ஹா. தைத்திரீயோபநிஷத்தில் "அந்நரஸமய:" என்கிற சுருதிமுதல் அனேக கோசங்கள் சொல்லப்பட்டன; அவை எல்லாவற்றிற்கும் பரமாத்மாவே ஆத்மாவாகின்றான். அவன் ஆகாயம்போல் சுத்தனென்று நாமிங்கு நிரூபித்துக் காட்டியபடியிருப்பவனேயன்றி தார்க்கிகமதத்தில் சொல்லப்படுகிற ஆத்மாவைப்போல் புத்திகோசரனன்று. ஆகையால் தைத்திரீயோபநிஷத்திற்கும் பரமாத்மைக்யத்திலே தாத்பர்யமென்று விளங்கிற்று.

க௨. த்வயோர்த்வயோர்மதுஜ்ஞாநே பரம் ப்ரஹ்ம ப்ரகாஶிதம் |
ப்ருதிவ்யாமுதரே சைவ யதாகாஶ: ப்ரகாஶித: ||

౧౨. ద్వయోర్ద్వయోర్మధుజ్ఞానే పరం బ్రహ్మ ప్రకాశితమ్।
పృథివ్యాముదరే చైవ యథాకాశః ప్రకాశితః॥

ஸ0-ஹா. ப்ருஹதாரண்யகோபநிஷத்திலும் பரமாத்மைக்யமே சொல்லப்படுகிறதென்று கூறுகின்றார். அதிதைவதம் அத்யாத்மம், முதலியவற்றில் முழுதிலும்பரமாத்மாவே என்று ப்ரகாசிப்பிக்கப்பட்டது. வயிற்றிலும் புவியிலுமாகாசம் ஒன்றேயாவதுபோல எங்கும் பரமாத்மா ஒருவனே யாவான். அது அநுமாநப்ரமாணத்தால் ஸாதிக்கப்படுகிறது.

௧௩. 𑌜𑍀𑌵𑌾𑌤𑍍𑌮𑌨𑍋𑌰𑌨𑌨𑍍𑌯𑌤𑍍𑌵𑌮𑌭𑍇𑌦𑍇𑌨 𑌪𑍍𑌰𑌶𑌸𑍍𑌯𑌤𑍇 ।
𑌨𑌾𑌨𑌾𑌤𑍍𑌵𑌂 𑌨𑌿𑌨𑍍𑌦𑍍𑌯𑌤𑍇 𑌯𑌚𑍍𑌚 𑌤𑌦𑍇𑌵𑌂 𑌹𑌿 𑌸𑌮𑌞𑍍𑌜𑌸𑌮𑍍 ॥

౧౩. జీవాత్మనోరనన్యత్వమభేదేనప్రశస్యతే ।
నానాత్వంనింద్యతేయచ్చతదేవంహిసమఞ్జసమ్॥

ஸ0-ஹா. சுருதியிலும் வ்யாஸர் முதலிய மகர்ஷிவசநங்களிலும் பேதம் நிந்திக்கப்பட்டு அபேதம் ஸ்துதிக்கப்படுகிறது. இது ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும், அபேதத்தைச் சொன்னுலொழிய சேராது. ஆனதால் ஜீவாத்மாவி னபேதமங்கீகரிக்கத் தக்கது.

௧௪. 𑌜𑍀𑌵𑌾𑌤𑍍𑌮𑌨𑍋𑌃 𑌪𑍃𑌥𑌕𑍍𑌤𑍍𑌵𑌂 𑌯𑌤𑍍 𑌪𑍍𑌰𑌾𑌗𑍁𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑍇𑌃 𑌪𑍍𑌰𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌮𑍍 ।
𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌦𑍍𑌵𑍃𑌤𑍍𑌤𑍍𑌯𑌾 𑌗𑍌𑌣𑌂 𑌤𑌨𑍍𑌮𑍁𑌖𑍍𑌯𑌤𑍍𑌵𑌂 𑌹𑌿 𑌨 𑌯𑍁𑌜𑍍𑌯𑌤𑍇 ॥

౧౪. జీవాత్మనోఃపృథక్త్వంయత్ప్రాగుత్పత్తేఃప్రకీర్తితమ్ ।
భవిష్యద్వృత్త్యాగౌణన్తన్ముఖ్యత్వంహినయుజ్యతే॥

ஸ0-ஹா. வேதவாக்யங்களால் ஜீவாத்மாக்களுக்கு பேதம் சொல்லப்பட்டிருக்க பேதம் யுக்தமல்லவென்னக் கூடுமோ வென்ருல், அது ஔபாதிக பேதத்தை யநுவதித்துச் சொல்லுகிற அமுக்யப்ரயோகமேயன்றி வேதாந்தங்களில் அபூர்வமாய்ச் சொல்லுகிற அபேதம்போல் முக்யமன்று.

௧௫. 𑌮𑍃𑌲𑍍𑌲𑍋𑌹𑌵𑌿𑌸𑍍𑌫𑍁𑌲𑌿𑌙𑍍𑌗𑌾𑌦𑍍𑌯𑍈𑌃 𑌸𑍃𑌷𑍍𑌟𑌿𑌰𑍍𑌯𑌾 𑌚𑍋𑌦𑌿𑌤𑌾𑌨𑍍𑌯𑌥𑌾 ।
𑌉𑌪𑌾𑌯𑌃 𑌸𑍋𑌽𑌵𑌤𑌾𑌰𑌾𑌯 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌭𑍇𑌦𑌃 𑌕𑌥𑌞𑍍𑌚𑌨 ॥

౧౫. మృల్లోహవిస్ఫులింగాద్యైస్సృష్టిర్యాచోదితాన్యథా।
ఉపాయస్సోవతారాయనాస్తిభేదఃకథఞ్చన॥

ஸ0-ஹா. ஸ்ருஷ்டியை விதிக்கிற வாக்யங்களில் ஸ்வபாவமாய் பேதமே சொல்லப்படுகின்றமையால் அத்வைதத்தையே அங்கீகரிப்பது கூடாதென்ருல் அங்ஙனமல்ல; ஜீவாத்ம பரமாத்மைக்யத்தைச் சொல்லி யத்வைதத்தை போதிப்பதற்காகவே இந்த ஸ்ருஷ்ட்யாதிகள் சொல்லப்படுகின்றனவென்று கொள்ளவேணும். பேதம் தோற்றினும் பேதத்தில் தாத்பர்யம் கொள்ளப்போகாது. ஆகையால் ஸ்ருஷ்டி ப்ரகரணங்களில் சொல்லுகிற வாக்யங்களுக்கு பரஸ்பரவிரோத மிருப்பதால் ப்ராணஸம்வாத வாக்யம்போல அந்த அர்த்தத்தில் அவை ப்ரமாணங்களல்ல. அங்கு காட்டப்பட்ட திருஷ்டாந்தங்களாலும் பேதம் ஸித்தியாது. அவையாவன மண்முதலியவை. ஆனதாலத்வைதத்தில் விரோதமில்லை.

௧௬. 𑌆𑌶𑍍𑌰𑌮𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌾 𑌹𑍀𑌨𑌮𑌧𑍍𑌯𑌮𑍋𑌤𑍍𑌕𑍃𑌷𑍍𑌟𑌦𑍃𑌷𑍍𑌟𑌯𑌃 ।
𑌉𑌪𑌾𑌸𑌨𑍋𑌪𑌦𑌿𑌷𑍍𑌟𑍇𑌯𑌂 𑌤𑌦𑌰𑍍𑌥𑌮𑌨𑍁𑌕𑌮𑍍𑌪𑌯𑌾 ॥

౧౬. ఆశ్రమాస్త్రివిధాహీనామధ్యమోత్కృష్టదృష్టయః ।
ఉపాసనోపదిష్టేయంతదర్థమనుకమ్పయా॥

ஸ0-ஹா. இவை எல்லாவற்றையு மப்ரமாணமென்ருலும் மோக்ஷத்தைப் பெறுவதற்கென்று உபாஸநத்தை விதிக்கிற வேதவாக்யங்களால் அநேகஉபாஸநங்களும் அந்தந்த உபாஸநங்களுக்கு அதிகாரி பேதங்களும் அவர்களால், உபாஸிக்கப்படுகிற ஒரு ஆத்மாவும் சொல்லப்படுகின்றன. உபாஸிப்பவனும் உபாஸிக்கப்படுகிறவனு மொன்ருகக் கூடாது. ஆக இவ்வாக்யங்களால் ஆத்மபேத முண்டென்று காட்டப்படுகின்றமை

யால், இவற்றை அப்ரமாண மென்னப்போகாமையால் பேதம் மெய்யேயாம். அத்வைதம் யுக்தமல்லவென்று வருகிற ஸந்தேஹத்தை இந்த சுலோகம் போக்குகின்றது. இவ்வுலகின்கண் மூன்றுவகைப்பட்ட அதிகாரிகளிருக்கின்றார்கள். அவர்களாகிறார் உத்தமதிருஷ்டிகள், மத்யமதிருஷ்டிகள் அதமத்ருஷ்டிகள் எனப்படுவோர்; அதமத்ருஷ்டிகளுக்கு கருமத்தையும், மத்யமத்ருஷ்டிகளுக்கு, உபாஸநத்தையும் விதித்திருக்கின்றது. நிர்விசேஷப்ரம்மஜ்ஞாநிகள் உத்தமத்ருஷ்டிகள். அவர்களுக்கு உபாஸநம் வேண்டியதில்லை. ஆகையால் மற்றாதிகாரிகளுக்காக தயையினால் பேதத்தை கல்பித்து உபதேசித்திருக்கின்றது. இவ்வித உபாஸநம் முதலியவை செய்பவர் முடிவில் நிர்விசேஷ ப்ரம்மஜ்ஞாநத்தை யடைந்து முக்தராகிறார்கள்.

௧௭. 𑌸𑍍𑌵𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌨𑍍𑌤𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌾𑌸𑍁 𑌦𑍍𑌵𑍈𑌤𑌿𑌨𑍋 𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌾 𑌦𑍃𑌢𑌮𑍍।
𑌪𑌰𑌸𑍍𑌪𑌰𑌂 𑌵𑌿𑌰𑍁𑌧𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌤𑍈𑌰𑌯𑌂 𑌨 𑌵𑌿𑌰𑍁𑌧𑍍𑌯𑌤𑍇॥

౧౭. స్వసిద్ధాన్తవ్యవస్థాసు ద్వైతినో నిశ్చితా దృఢమ్।
పరస్పరంవిరుధ్యన్తే తైరయంనవిరుధ్యతే॥

ஸ0-ஹா. சாஸ்திரங்களாலும் யுக்திகளாலும் நிச்சயிக்கப்பட்டபடியால் அத்வைதம் மெய்யான மதமாகின்றது. மற்ற மதங்கள் இதற்கு விருத்தங்களாகையாற் பொய்யே யாகின்றன, வேறு மதங்களில் பேதங்களைச் சொல்லுகையால் ராகத்வேஷங்கள் தப்பாது. அத்வைதத்திற்கு அந்த தோஷமில்லை. பேதவாதிகள் பலரும் தங்கள் தங்கள் மதத்தையே மெய்யென்று நினைத்துக்கொண்டு பிறருடன் சண்டை செய்கிறார்கள். ஆனதால் ராகத்வேஷங்களை யடைகிறார்கள். அத்வைதிகளோ வென்றால் பிறரறியாமையால் சில தோஷங்களைச் சொல்லி கலஹத்திற்கு வந்தாலும், இவர்களுக்கு அபேத ஜ்ஞாநமுண்டாகையால் தன்னுடைய கையினால் தன் கண்ணுக்கு ஒரு துன்பம் நேரிட்டாலும், கையை வெட்டிவிட வேண்டுமென்கிற த்வேஷமுண்டாகாததுபோல ப்ரதிவாதிகளிடத்தில் இவர்களுக்கு த்வேஷங்கிடையாது. ஆகையால் ராகத்வேஷங்களுக்குக் காரணமான இதரமதங்களைவிட அதற்கு விரோதியான, அத்வைதமதமே சிறந்தது.

௧௮. 𑌅𑌦𑍍𑌵𑍈𑌤𑌂 𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑍋 𑌹𑌿 𑌦𑍍𑌵𑍈𑌤𑌂 𑌤𑌦𑍍𑌭𑍇𑌦 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇।
𑌤𑍇𑌷𑌾𑌮𑍁𑌭𑌯𑌥𑌾 𑌦𑍍𑌵𑍈𑌤𑌂 𑌤𑍇𑌨𑌾𑌯𑌂 𑌨 𑌵𑌿𑌰𑍁𑌧𑍍𑌯𑌤𑍇॥

౧౮. అద్వైతంపరమార్థోహి ద్వైతంతద్భేదఉచ్యతే।
తేషాముభయథాద్వైతంతేనాయంనవిరుధ్యతే॥

ஸ0-ஹா. அத்வைதத்திற்கு மிக நன்மையுண்டு; த்வைதத்தோடு விரோதமில்லாமையாலும், த்வைதமத்வைத காரியமாகையாலும், த்வைதம் ப்ராந்தமாகின்றமையாலுமென்க. பரமார்த்தத்திற்கு அபரமார்த்தத்தோடு விரோதமில்லை யன்றோ. த்வைதிகளுக்காயின் எல்லா த்வைதங்களும் பரமார்த்தங்களாகையால் பரஸ்பரவிரோதமுண்டு. காரண காரியங்களுக்குள் காரணமே ஸத்யமாகுமன்றோ; ஆக, எவ்வாறு, ஒருவன், ஆனைமேலேறிவருகையில், ஒரு பித்தம் பிடித்தவன் பூமியில் நடந்து வருகையில், நானுமானைமேல் வருகிறேனாகையால் என்பேரில் அந்த ஆனையை சண்டைக்கு விடு, என்று சொல்லப்பட்டாலும் தத்வம் தெரிந்த அவன் இவனோடு சண்டைக்கு வரமாட்டானோ; அவ்வாறே அறியாத்தனத்தால் த்வைதிகள் சொல்லுகிற வாதத்தின்பேரில் அத்வைதிகள், ஆக்ஷேபிக்கப் போகார்கள்,

௧௯. 𑌮𑌾𑌯𑌯𑌾 𑌭𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 𑌹𑍍𑌯𑍇𑌤𑌨𑍍𑌨𑌾𑌨𑍍𑌯𑌥𑌾𑌜𑌂 𑌕𑌥𑌂𑌚𑌨।
𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌤𑍋 𑌭𑌿𑌦𑍍𑌯𑌮𑌾𑌨𑍇 𑌹𑌿 𑌮𑌰𑍍𑌤𑍍𑌯𑌤𑌾𑌮𑌮𑍃𑌤𑌂 𑌵𑍍𑌰𑌜𑍇𑌤𑍍॥

౧౯. మాయయా భిద్యతే హ్యేతన్నాన్యథాజం కథంచన।
తత్త్వతో భిద్యమానే హి మర్త్యతామమృతం వ్రజేత్॥

ஸ0-ஹா. நிர்விகாரமாய் அஜமாயிருக்கிற சுத்த ஸதத்வைதப்ரம்மமானது மாயையினால் பேதப்படுமேயன்றி வாஸ்தவத்தில் பேதப்படாது. ஆகையால் அவயவபேதமில்லாத ஆத்மதத்வத்திற்கு பேதம் பொய்யே யாகின்றது. அவயவமுண்டானாலன்றோ மண்முதலியவை குட முதலியவையாய் விகரிப்பதுபோல பேதமாய் விகரிக்கக்கூடும். ஆனதால் பேதம் பொய்யே யாகின்றது.

௨0. 𑌅𑌜𑌾𑌤𑌸𑍍𑌯𑍈𑌵 𑌭𑌾𑌵𑌸𑍍𑌯 𑌜𑌾𑌤𑌿𑌮𑌿𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑌿 𑌵𑌾𑌦𑌿𑌨𑌃 |
𑌅𑌜𑌾𑌤𑍋 𑌹𑍍𑌯𑌮𑍃𑌤𑍋 𑌭𑌾𑌵𑌃 𑌮𑌰𑍍𑌤𑍍𑌯𑌤𑌾𑌂 𑌕𑌥𑌮𑍇𑌷𑍍𑌯𑌤𑌿 ||

౨౦. అజాతస్యైవభావస్యజాతిమిచ్ఛంతి వాదినః।
అజాతో హ్యమృతో భావః మర్త్యతాం కథమేష్యతి॥

ஸ0-ஹா. சிலர் வாஸ்தவத்தில் அவிகாரமாயிருக்கிற சுத்த ப்ரம்மத்திற்கே உத்பத்தியை ஒப்புக்கொள்ளுகிறார்கள். அது கூடாது, பிறந்தாலழியும், அழியாதது பிறவாததாம். ஆகையால் அதற்குப் பிறப்பில்லை.

௨௧. 𑌨 𑌭𑌵𑌤𑍍𑌯𑌮𑍃𑌤𑌂 𑌮𑌰𑍍𑌤𑍍𑌯𑌂 𑌨 𑌮𑌰𑍍𑌤𑍍𑌯𑌮𑌮𑍃𑌤𑌂 𑌤𑌥𑌾 |
𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑍇𑌰𑌨𑍍𑌯𑌥𑌾𑌭𑌾𑌵𑍋 𑌨 𑌕𑌥𑌂𑌚𑌿𑌦𑍍𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 ||

౨౧. నభవత్యమృతంమర్త్యంనమర్త్యమమృతంతథా।
ప్రకృతేరన్యథాభావోనకథంచిద్భవిష్యతి॥

ஸ0-ஹா. பிறப்பது பிறவாமலிராது அழியாமலுமிராது பிறவாதது பிறப்பது மழிவதும் செய்யாது. அந்தந்த வஸ்து ஸ்வபாவம் மாறுமோ; நெருப்புக்கு ஸ்வபாவமான உஷ்ணம் எப்போதாவது மாறுமோ; ஆனதால் ப்ரம்மம் விகாரத்தை யடையாது.

௨௨. 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑍇𑌨𑌾𑌮𑍃𑌤𑍋 𑌯𑌸𑍍𑌯 𑌭𑌾𑌵𑍋 𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 𑌮𑌰𑍍𑌤𑍍𑌯𑌤𑌾𑌮𑍍 |
𑌕𑍃𑌤𑌕𑍇𑌨𑌾𑌮𑍃𑌤𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌕𑌥𑌂 𑌸𑍍𑌥𑌾𑌸𑍍𑌯𑌤𑌿 𑌨𑌿𑌶𑍍𑌚𑌲𑌃 ||

౨౨. స్వభావేనామృతోయస్యభావోగచ్ఛతిమర్త్యతామ్।
కృతకేనామృతస్తస్యకథంస్థాస్యతినిశ్చలః॥

ஸ0-ஹா. எவன் அவிகார ஸ்வரூபமாகிய வஸ்துவுக்கு விகாரத்தை ஒப்புக்கொள்ளுகிறானோ, அவன் இது விகரியாததற்கு முன்னிது அவிகாரமாயிருந்த தென்று எங்ஙனம் சொல்லக்கூடும். விகரிக்கும் வஸ்து எப்போதும் விகாரத்தை யடைகின்றது. ஆனதாலப்படி வாதிப்பது பொய்யேயாம். ஆனதால் விகரித்தபின் மோக்ஷதசையில் அவிகாரரூபத்தை யடையுமென்பதும் பொய்யே யாமென்றுணர்க. ஆனதால் அந்தவாதம் நம்பத்தக்கதல்ல. விகரித்தலாவது விகாரத்தை யடைவதுதான்.

௨௩. 𑌭𑍂𑌤𑌤𑍋𑌽𑌭𑍂𑌤𑌤𑍋 𑌵𑌾𑌪𑌿 𑌸𑍃𑌜𑍍𑌯𑌮𑌾𑌨𑍇 𑌸𑌮𑌾 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌃 |
𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌂 𑌯𑍁𑌕𑍍𑌤𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌚 𑌯𑌤𑍍𑌤𑌦𑍍𑌭𑌵𑌤𑌿 𑌨𑍇𑌤𑌰𑌤𑍍 ||

౨౩. భూతతోఽభూతతోవాపిసృజ్యమానేసమాశ్రుతిః।
నిశ్చితంయుక్తియుక్తంచయత్తద్భవతినేతరత్॥

ஸ0-ஹா. வேதத்தில் அநேக வாக்யங்களால் ஸ்ருஷ்டி சொல்லப்படுகின்றது. ஸ்ருஷ்டியாவது ஸத்துக்கே என்பது ஒப்புக்கொள்ளப்பட்டது. ஸத்துக்கு ஸ்ருஷ்டி என்கிற உத்பத்தியாவது ரூபவிகாரத்தை யடைவதேயாம். ஆனதால் ஸ்ருஷ்டியை போதிக்கின்ற சுருதிவாக்யங்கள் ப்ரமாணமாக வேண்டுவதற்கு விகாரத்தை யொப்புக் கொள்வது தக்கதே யாமென்பது கூடாது. மாயையினல் தோற்றுகிற இந்த தோற்றத்தையே உத்பத்தி என்று கருதி ஸ்ருஷ்டி வாதங்கள் சுருதியில் காணப்படுகின்றனவென்று சொன்னோம். இங்ஙனம் சொல்வது அமுக்யமென்றாலும், யுக்தி யுக்தமாயும் முன்பு பல சுருதிகளால் நிச்சயிக்கப்பட்ட அவிகார ரூபத்துக்கு விரோதமாகாததுமான பொருளே ஒப்புக்கொள்ளத் தக்கதாம். ஆகையால் ஸ்ருஷ்டியைச் சொல்லுகிற வாக்யங்களுக்கு நம்முடைய பக்ஷம் விரோதமானதல்ல.

௨௪. 𑌨𑍇𑌹 𑌨𑌾𑌨𑍇𑌤𑌿 𑌚𑌾𑌮𑍍𑌨𑌾𑌯𑌾𑌦𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑍋 𑌮𑌾𑌯𑌾𑌭𑌿𑌰𑌿𑌤𑍍𑌯𑌪𑌿 ।
𑌅𑌜𑌾𑌯𑌮𑌾𑌨𑍋 𑌬𑌹𑍁𑌧𑌾 𑌮𑌾𑌯𑌯𑌾 𑌜𑌾𑌯𑌤𑍇 𑌤𑍁 𑌸𑌃 ॥

౨౪. నేహనానేతిచామ్నాయాదింద్రో మాయాభిరిత్యపి ।
అజాయమానో బహుధా మాయయా జాయతే తు సః॥

ஸ0-ஹா. சுருதிதாத்பர்ய நிச்சயங் கூறுகின்றார். ஸ்ருஷ்டியும், ஸ்ருஷ்டிக்கப் பட்ட பொருள்களும் வாஸ்தவமாயின், அப்போது அஸத்யமென்று வேதவாக்யம் சொல்லக்கூடாது. "நேஹநாநாஸ்தி கிஞ்சந" (பேதப்பட்ட பொருளொன்றுமில்லை) என்கிற சுருதிமுதலிய வாக்யங்களால் ஜகத்து பொய்யென்று சொல்லப்படுகிறது. ஆகையாலத்வைத நிச்சயத்தின்பொருட்டு ஸ்ருஷ்டி கல்பித்துச் சொல்லப்பட்டதென்பது நன்றாய் விளங்குகின்றது, ப்ராணாதி ஸம்வாத வாக்கியங்களில் கற்பித்துச் சொல்லிய கதைபோல ஸ்ருஷ்டியும் கல்பித்துச் சொல்லப்பட்டது. ப்ராணஸம்வாதம் கல்பிக்கப்பட்டதென்பது சிலருக்கு ஸம்மதமன்றாயினும் அது கல்பிதமே என்பதை முன் விளக்கியிருக்கின்றமையால் அது கல்பிதமேயாம். அதுபோல ஸ்ருஷ்டி கதையும் கல்பிதமேயாம். இதுவுமன்றி, "இந்த்ரோமாயாபிஃ புருரூபஈயதே" (மாயையினல் நானா ரூபங்களுமுண்டாகின்றது.) என்கிற வாக்கியத்தினல், ஸ்ருஷ்டி மாயை என்பது கூறப்பட்டது. இனி மாயாசப்தத்திற்கு இந்திரியங்களினல் பிறக்கிற ஜ்ஞாநமே பொருளாகையினல் ஸ்ருஷ்டி மாயை என்று கூறப்படவில்லை என்றாலும் அந்த இந்திரிய ஜ்ஞாநங்களே அவித்யை என்கிற மாயையாகவே ஒப்புக்கொள்ளுகின்றமையால் இந்த வாக்யம் ஸ்ருஷ்டியை மாயை என்று சொல்லுகிறதென்பது யுக்தமேயாம். இதுவுமன்றி, அஜாயமாநோபஹுதாவிஜாயதே" பிறவாத வஸ்து பலபடியாகப் பிறக்கிறது) என்கிற சுருதியினலும் ஸ்ருஷ்டியில் ப்ரம்மத்திற்கு வாஸ்தவத்தில் பிறப்பில்லை. மாயையினலே பிறப்புண்டாகிறதென்பது விளங்கிற்றன்றோ. 'அஜாயமாநஃ' என்கிற வாக்கியத்தினல் வாஸ்தவத்தில் பிறப்பில்லை என்கிறது. 'பஹுதாவிஜயதே' என்பதினல் மாயாஸ்ருஷ்டியில் பிறப்பு, என்றுங் கூறப்படுகிறது. இந்த சுருதி வாக்கியத்திற்கு இங்ஙனமே பொருள். அன்றேல், ஒரு ப்ரம்மத்திற்கே பிறப்பும் பிறப்பில்லாமையும் வாஸ்தவத்தில் கூடுமோ; ஆனதால் பிறப்பு மாயை. பிறவாமை பரமார்த்தம். நெருப்பில் உஷ்ணமும் சீதமும் வாஸ்தவத்தில் ஒன்று சேருமோ. ஆனதால் கீழ்ச்சொல்லியபடி ஆத்மா ஒருவனே பரமார்த்தமென்கிற விந்த அத்வைதமே வேதாந்தத்திற்கு உண்மையான பொருள். "தத்ரகோமோஹஃ கச்சோக ஏகத்வமநுபச்யதஃ" என்று, ஒன்றே என்று, அத்வைதத்தை யறிந்தவனுக்கு சோகம் மோகம் முதலிய துக்கங்கள் வருவதில்லை, என்று சுருதி சொல்லுகின்றது. "ம்ருத்யோஸ்ஸ ம்ருத்

யுமாப் நோதிய இஹநாநேவபச்யதி" என்று; எவன்ஸ்ருஷ்ட்யாதி பேதங்களைக் காண்கிருனே அதாவது பரமார்த்தமென்று நினைக்கிருனே, அவன் மகாஸம்ஸாரியாய் பெருந்துன்பத்தை யடைவானென்று சுருதி சொல்லுகின்றது. இவற்றை யெல்லாம் யோசிக்கும்போது அத்வைதமே பரமார்த்தமென்று சொல்வது தக்கதாகின்றது.

௨௫. 𑌸𑌮𑍍𑌭𑍂𑌤𑍇𑌰𑌪𑌵𑌾𑌦𑌾𑌚𑍍𑌚𑌸𑌮𑍍𑌭𑌵𑌃𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑌿𑌧𑍍𑌯𑌤𑍇 ।
𑌕𑍋𑌨𑍍𑌵𑍇𑌨𑌂𑌜𑌨𑌯𑍇𑌦𑌿𑌤𑌿𑌕𑌾𑌰𑌣𑌂𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑌿𑌧𑍍𑌯𑌤𑍇 ॥

౨౫. సమ్భూతేరపవాదాచ్చసమ్భవః ప్రతిషిధ్యతే ।
కోన్వేనంజనయేదితికారణమ్ప్రతిషిధ్యతే ॥

பா௦-ஸா. பேதப்பட்ட ஜகத்து பொய்யென்றும் அத்வைதம் மெய்யென்றும் ரூபிப்பதற்கு மற்றொரு காரணங் கூறப்படுகின்றது. ஈசாவாஸ் யோப நிஷத்தில் "அந்தந்தம: ப்ரவிசந்தி யேஸம்பூதி முபாஸதே" என்கிற வாக்யத்தினுல் பேதப்பட்ட காரியங்களையு பாஸிப்பது அஜ்ஞானத்தா லென்று அந்த உபாஸநத்தை தூஷிக்கின்றமையால் பேதகாரியங்கள் பொய்யென்று வெளியாகின்றது. ஆகையால் பேதகாரியங் கூடாதன்றே. இனி, அங்குகரும ஸமுச்சயத்திற்காக நிந்தித்தமையாலும் வைராக்யம் பிறந்து வேதாந்தச்ரவணத்திலிழிந்தவனுக்கு பின் வருகிற ப்ரம்ம வித்யையோடு ஒரு புருஷனிடத்தில் ஸாமா நாதிகரண்ய மென்கிற சேர்க்கையை நினைத்து ஸமுச்சயஞ் சொல்லப்படடதாகையால் அவித்யை என்கிற கருமத்திற்கு தத்வஜ்ஞான காலத்தில் ஸ்திதியில்லை என்பது விளங்கினமையாலந்த அவித்யையோடு ஸமுச்சயத்திற்காக விதிக்கப்படுகையாவது அவித்யையினுலாகிய அவை பொய்யாவதுபோல இந்த காரியபேதமும் பொய்யே என்பதை அறிவித்தற்கேயாகையால் இதுபொய்யென்பதற்கு சாக்ஷியாவதில் விரோதமில்லை என்க. தத்வஜ்ஞானம் பிறந்தபின் இவ்வாத்மாவுக்கு பேதத்தைப்பற்றிய ஜந்மத்தை யுண்டு பண்ணுவது எவனுக்கு ஸாத்யமென்கிற வாக்யத்தினுலும் ஜந்மபேதம்பொய்யே என்பது விளங்கிற்று. ஆனதாலத்வைதமே யுண்மையானது. ஜந்மகாரணமில்லை என்கிற சுருதி "நாயங்குதச்சிந்நபபூவகச்சித்" என்கிற வாக்கியமேயாம். இது ரஜ்ஜுஸர்பத் ருஷ்டாந்தத்தை யொத்திருக்கின்றது.

௨௬. 𑌸𑌏𑌷𑌨𑍇𑌤𑌿𑌨𑍇𑌤𑍀𑌤𑌿𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑌂𑌨𑌿𑌹𑍍𑌨𑍁𑌤𑍇𑌯𑌤𑌃 ।
𑌸𑌰𑍍𑌵𑌮𑌗𑍍𑌰𑌾𑌹𑍍𑌯𑌭𑌾𑌵𑍇𑌨𑌹𑍇𑌤𑍁𑌨𑌾𑌜𑌂𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌤𑍇 ॥

౨౬. సఏషనేతినేతీతివ్యాఖ్యాతంనిహ్నుతేయతః ।
సర్వమగ్రాహ్యభావేనహేతునాజంప్రకాశతే ॥

பா௦-ஸா. வேதவாக்யங்களில் அநேக வாக்யங்களால் காரியகாரண பேத பரம்பரை சொல்லப்பட்ட பின் இவையென்றுமில்லை என்று ஸமஸ்தவித பேதங்களையும் நிஷேதிக்கின்றது. ஆனதால் நிர்விசேஷாத்ம ஸ்வரூபத்தைச் சொல்வதற்கே இங்ஙனம் கூறப்பட்டதென்று விளங்குகின்றது. ஆனதால் ஆத்மாவுக்கு ஜந்மபேதங்களில்லை. இதையறிந்தவனுக்கு ஸ்வயமாக ஸதாத்மஸ்வரூபம் ப்ரகாசிக்கின்றது.

௨௭. 𑌸𑌤𑍋𑌹𑌿𑌮𑌾𑌯𑌯𑌾𑌜𑌨𑍍𑌮𑌯𑍁𑌜𑍍𑌯𑌤𑍇𑌨𑌤𑍁𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌤𑌃 ।
𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌤𑍋𑌜𑌾𑌯𑌤𑍇𑌯𑌸𑍍𑌯𑌜𑌾𑌤𑌂𑌤𑌸𑍍𑌯𑌹𑌿𑌜𑌾𑌯𑌤𑍇 ॥

౨౭. సతోహిమాయయాజన్మయుజ్యతేనతుతత్త్వతః ।
తత్త్వతోజాయతేయస్యజాతంతస్యహిజాయతే ॥

பா0-ஷா. இவ்வாறு ஆத்மஸ்வரூபம் நிர்விசேஷமாய் க்ரஹிக்கப்படாதாயின் சாஸ்திரத்தாலு மறியப்படாது. அப்போது அந்த ஆத்மஸ்வரூபத்தில் ப்ரமாணமில்லை என்கிற ஐயந்தீரச் சொல்லுகின்றது. ஓர் அதிஷ்டாநதத்தி லிருந்தே மாயாகாரியங்கள் உண்டாக வேண்டுமாகையால் மாயாகாரியமான இந்த ஜகத்திற்கு அதிஷ்டாநமாக ஸத்தான ஆத்மஸ்வரூப முண்டென்றறியப்படும். இதற்கு ஸத்ஸ்வரூபத்தைக் கொள்ளாவிடில் அநவஸ்தை தோஷம் வரும்.

பதாந்வயார்த்தபேதங்கள்,

இந்தசுலோகத்தில் ஸதஃ என்கிற பதத்தை ஆறும்வேற்றுமையாகக் கொண்டு ஒரு வ்யாக்யாநமும் ஐந்தாம் வேற்றுமையாக வைத்துக்கொண்டு ஒரு வ்யாக்யாநமும் செய்யப்பட்டது. இவ்விரண்டு வ்யாக்யாநங்களிலும் கருத்துக்கு பேதமில்லை.

௨௮. அஸதோ மாயயா ஜந்ம தத்த்வதோ நைவ யுஜ்யதே|
வந்த்யாபுத்ரோ ந தத்த்வேந மாயயா வாபி ஜாயதே||

౨౮. అసతో మాయయా జన్మ తత్త్వతో నైవయుజ్యతే।
వన్ధ్యాపుత్రో న తత్త్వేన మాయయా వాపి జాయతే॥

பா0-ஷா. அஸத்கார்ய வாதிகளும் சூந்யவாதிகளும் தூஷிக்கப் படுகிறார்கள். ஏனென்றால், அஸத்தான வஸ்துவிலிருந்து வாஸ்தவகாரியமாவது அவாஸ்தவ காரியமாவது பிறவாது. மலடி மகனுக்கு மெய்யான மகனாவது பொய்யான மகனாவதுபிறப்பனோ; ஆனதால் ஸதாத்மஸ்வ ரூபத்திலிருந்து இவை எல்லாந்தோற்றுகின்றன. காணாத கல்பனை யொப்பத்தக்கதல்ல.

௨௯. யதா ஸ்வப்நே த்வயாபாஸம் ஸ்பந்ததே மாயயா மநஃ|
ததா ஜாக்ரத் த்வயாபாஸம் ஸ்பந்ததே மாயயா மநஃ||

౨౯. యథా స్వప్నే ద్వయాభాసం స్పన్దతే మాయయా మనః।
తథా జాగ్రద్ద్వయాభాసం స్పన్దతే మాయయా మనః॥

பா0-ஷா. மாயையினால் ஸத்துக்கு ஜந்மமென்பது உதாகரணத்தால் காட்டப்படுகின்றது. ஒருமனதானது எவ்வாறு கயிற்றில் பாம்பாய் தோற்றத்திற்குக் காரணமாய் அதை யறிகின்றதோ இவ்வாறே ஸ்வப்நத்தில், விஷய ரூபமாயும், அதையறிகிறதாயும் தோற்றுகின்றது அவ்வாறே விழித்துக்கொண்டிருக்கும்போதும் நானாவித விஷயபேதமாய் தோற்றி யவற்றை யறிவதாக நிற்கின்றது. ஆனதாலிவை யுண்மையல்ல. பரமார்த்த ஸத்தின் காரியமாகின்றது. இவ்வாறு பேதப்பட்ட வஸ்துக்களாய் தோற்றுவது மாயையினாலென்பது பலமுறை கூறப்பட்டது.

௩0. அத்வயஞ்ச த்வயாபாஸம் மநஸ்ஸ்வப்நே ந ஸம்சயஃ |
அத்வயஞ்ச த்வயாபாஸம் ததா ஜாக்ரந்ந ஸம்சயஃ||

30. అద్వయఞ్చ ద్వయాభాసమ్మనస్స్వప్నే న సంశయః ।
అద్వయఞ్చ ద్వయాభాసన్తథా జాగ్రన్న సంశయః॥

பா0-ஷா. ஸ்வப்நத்தில் வஸ்துக்களைக் காட்டித்தருகின்ற கண் முதலிய இந்திரியங்களுமில்லை. காணக்கூடிய விஷயங்களென்கிற வஸ்துக்களுமில்லை. ஆயினும் பல

வஸ்துக்களும் காணப்படுகின்றன. ஆதலால் அவை பொய்யென்பதில் ஸந்தேகமில்லை. இவ்வாறே இந்த ஜாக்ரத்தசையிலும் வாஸ்தவத்தில் ஒருவித பேதமுமில்லாதிருக்கவும் மாயையினால் பலபேதங்கள் கயிற்றில் பாம்புபோல காணப்படுகின்றன. ஆனதால் இவை பொய்யென்பதிலு மையமில்லை. ஆனதாலறியப்படுவ்து அறிவது என்கிற பேதமுமில்லை. அறிவே அங்ஙனம் தோற்றுமென்க.

௩௧. 𑌮𑌨𑍋𑌦𑍃𑌶𑍍𑌯𑌮𑌿𑌦𑌂𑌦𑍍𑌵𑍈𑌤𑌂𑌯𑌤𑍍𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌤𑍍𑌸𑌚𑌰𑌾𑌚𑌰𑌮𑍍 ।
𑌮𑌨𑌸𑍋𑌹𑍍𑌯𑌮𑌨𑍀𑌭𑌾𑌵𑍇𑌦𑍍𑌵𑍈𑌤𑌂𑌨𑍈𑌵𑍋𑌪𑌲𑌭𑍍𑌯𑌤𑍇 ॥

౩౧. మనోదృశ్యమిదంద్వైతంయత్కించిత్సచరాచరమ్ ।
మనసోహ్యమనీభావేద్వైతంనైవోపలభ్యతే॥

ஸ0-ஹா. கயிற்றில் பாம்புபோல் இவ்வுலகினில் விழித்திருக்கும்போதும் தோற்றுகிற எல்லாம் மனதே என்கிறார் கீழ். இதற்கு ப்ரமாணங் கூறுகின்றாரிதில். அதாவது இவ்வுலகமெல்லாம் மனதின் காரியமேயாகின்றது; மனம் தோற்றினபோது தோற்றி மனமடங்கினபோது தோற்றாமையாலென்க. பேருரக்கத்திலும் மூர்ச்சையிலும் யோகத்தால் மனதை யடக்கும்போதும் இவ்வுலகத்திலுள்ள பேதங்களிலொன்றும் தோற்றுவதில்லையன்றோ, இத்தால் மனதினால் இவ்விகல்பங்கள் காணப்படுகின்றனவே யன்றி இவை வாஸ்தவங்களல்லவென்பது திண்ணம்.

௩௨. 𑌆𑌤𑍍𑌮𑌸𑌤𑍍𑌯𑌾𑌨𑍁𑌬𑍋𑌧𑍇𑌨𑌨𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑌯𑌤𑍇𑌯𑌦𑌾 ।
𑌅𑌮𑌨𑌸𑍍𑌤𑌾𑌂𑌤𑌦𑌾𑌯𑌾𑌤𑍍𑌯𑌗𑍍𑌰𑌾𑌹𑍍𑌯𑌾𑌭𑌾𑌵𑍇𑌤𑌦𑌗𑍍𑌰𑌹𑌮𑍍 ॥

౩౨. ఆత్మసత్యానుబోధేననసఙ్కల్పయతేయదా ।
అమనస్తాంతదాయాత్యగ్రాహ్యాభావేతదగ్రహమ్॥

ஸ0-ஹா. இவனுக்கு நிச்சேஷமாய் மனோவிகல்ப மொழியுங் காலங் கூறப்படுகின்றது. ஆத்மஸ்வரூபமே ஸத்யம்; காரணமாகின்றமையால்; குடமுதலியவற்றிற்குக் காரணமாகிய மண்போல். "வாசாரம்பணம்விகாரோநாமதேயம்ம்ருத்திகேத்யேவ ஸத்யம்" என்று சுருதி வாக்கியத்தினாலு மிதையறியலாம். இதை சாஸ்திரப்படி ஆசாரியன் உபதேசிக்க அறிவதுதான், ஆத்மஸ்வரூபைக்யஜ்ஞானமாகின்றது, இந்தஜ்ஞானம் பிறந்தபின் ஸங்கல்பங்கள் நீங்குகின்றன. இவனுக்கப்போது ஸங்கல்பிக்க வேண்டியபொருளில்லை யன்றோ. ஆக ஸங்கல்பிக்கவேண்டிய பொருளில்லாமையால், கொளுத்தக்கூடியவை யில்லாதபோது நெருப்புக்குக் கொளுத்துகிற தன்மை நீங்கிநிற்பதுபோல மனதிற்கும் ஸங்கல்பம் நீங்கிப்போகின்றது. அப்போது மநமில்லாதவனேயாகிறான். அக்காலத்தில் இவ்விதபேதஜ்ஞா னங்கள் பிறப்பதில்லை.

௩௩. 𑌅𑌕𑌲𑍍𑌪𑌕𑌮𑌜𑌂𑌜𑍍𑌞𑌾𑌨𑌂𑌜𑍍𑌞𑍇𑌯𑌾𑌭𑌿𑌨𑍍𑌨𑌂𑌪𑍍𑌰𑌚𑌕𑍍𑌷𑌤𑍇 ।
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌜𑍍𑌞𑍇𑌯𑌮𑌜𑌂𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑌜𑍇𑌨𑌾𑌜𑌂𑌵𑌿𑌬𑍁𑌧𑍍𑌯𑌤𑍇 ॥

33. అకల్పకమజంజ్ఞానంజ్ఞేయాభిన్నంప్రచక్షతే।
బ్రహ్మజ్ఞేయమజంనిత్యమజేనాజంవిబుధ్యతే॥

ஸ-0-ஹா. "மநஸை வாநுத்ரஷ்டவ்யம்" என்று மனதினாலே ப்ரம்மமறியத்தக்கதென்று சுருதி சொல்லுகின்றமையால் மனமழிந்தபின், ப்ரம்மஜ்ஞானம் பிறப்பது எங்ஙனமெனில் கூறுகின்றார். அத்வைத ஸத்தே பரமார்த்தமாகி த்வைதப்ரபஞ்சமெல்லாம் பொய்யாயழியினு மந்த ப்ரம்மஸ்வரூபஜ்ஞானம் சுயமாகவே உண்டாகும். ஸர்வ கல்ப

னையும் நீங்கியதும் பிறப்பில்லாததுமான ஜ்ஞாநஸ்ரூபமன்றோ ப்ரம்மம். ஆனதாலதுவே ஜ்ஞேயமாகின்றது. அதாவது ஸ்வயம் ப்ரகாசமாகையினால் சுயமாகவே விளங்குகின்றது. ஆனதாலறிவு மறியப்படுவதுமொன்றே என்கிறார்கள். அதாவது மற்றொன்றாலறியப்படாது தன்னாலேயே யறியப்படுமென்றவாறு. இந்த ஜ்ஞாநஸ்வரூபத்தை யறிகிறவனு மந்த ஜ்ஞாநஸ்ரூபமான ப்ரம்மமே. ஆகையினாலறிபவனும் நித்யனே. விகாரமில்லாதவனே. ஆக நிர்விகாரத்தால் நிர்விகாரம் நிர்விகாரனா லறியப்படுமென்றதாயிறறு. இதனால் அறிவேயுள்ளது. அதுவே அறிபவனாகவும் அறியப்படும் பொருளாகவும் காணப்படுகிறது. ஸ்வயம் ப்ரகாசமாய் தனக்குத்தானே விளங்குகின்றது. இதையொழிய வேறில்லை என்பது ஸித்தமாயிற்று. இது ப்ரம்மவித்துக்கள் சொல்லும் வார்த்தை. இவ்விடத்தில் த்ருஷ்டாந்தமாக உஷ்ணரூபமாகிய அக்நியையும் ப்ரகாசரூபமாகிய சூரியனையும் எடுத்துக்கொள்ள வேண்டியது. ப்ரமாணங்களாக 'விஜ்ஞாநமாநந்தம் ப்ரம்ம' "ஸத்யம் ஜ்ஞாநமாநந்தம் ப்ரம்ம" இவைமுதலிய சுருதிகளைக் கொள்க. இவற்றிற்குப்பொருள் ப்ரம்மம் ஸ்வயம்ப்ரகாசஜ் ஞாநஸ்வரூபமானது என்பதாம்.

௩௪. நிக்³ருஹீதஸ்ய மனஸோ நிர்விகல்பஸ்ய தீ⁴மத꞉ |
ப்ரசாரஸ்ஸ து விஜ்ஞேய꞉ ஸுஷுப்தே(அ)ந்யோ ந தத்ஸம꞉ ||

34. నిగృహీతస్యమనసో నిర్వికల్పస్యధీమతః।
ప్రచారస్సతువిజ్ఞేయస్సుషుప్తేన్యోనతత్సమః॥

ஸ௦-ஹா. கீழ்சுலோகங்களில் மநஸ்ஸினால் இந்த பேதப்ரபஞ்சம் தோற்றுகிறதென்றும் இந்த மனம் ஒழிந்தபோது இவை கழியுமென்றும், அதற்கு ஸத்யஸத்ப்ரகாச ரூபசுத்த ப்ரம்மைக்யஜ்ஞாநம் காரணமென்றும் சொல்லப்பட்டது. இவ்வாறு மனமொழிந்தபின் இந்த ஆத்மஸ்வரூபம் இருக்கும் க்ரமம் முமுக்ஷுக்களுக்கு அறியத்தக்கது. அப்போது ஜ்ஞானரூபியாய் நிர்விகல்பனாய் விளங்குகிறானன்றோ. நித்யமும் சுஷுப்திதசையில் நிர்விகல்பசுக ஜ்ஞாநஸ்வரூபமாயிருப்பது ஸ்வப்பிரகாசனாகிய ஆத்மாவுக்கு ப்ரதயக்ஷமாயிருக்கையில் இதை விட மநம் அழிந்தபின் இந்த ஆத்ம ஸ்வரூபமிருக்கிற விதம் வேறில்லாமையால் அறியவேண்டியதில்லை என்பது தக்கதல்ல. ஸுஷுப்திக்கும், மனம் முதலியவை யொழிந்த நிர்விசேஷ தசைக்கும் மிகவும் பேதமுண்டு. ஸுஷுப்தியில் க்லேசகர் மாவித்யைகள் முதலிய துக்கபீஜங்களோடு கூடியிருக்கிறான். ப்ரம்ம ஜ்ஞாநம் வந்த தசையில் அவையெல்லாம் நீங்கி சுத்தமாய் சாந்தமாய் க்லேசம் கழிந்து ஸ்வதந்திரமாயிருக்கிற ஸ்வரூபத்தோடு விளங்குகின்றான். ஆனதால் இதற்குமதற்கும் பேதமுண்டாகையா லந்த தசையில் ஸ்வரூப மறியத்தக்கதாம்.

௩௫. லீயதே ஹி ஸுஷுப்தே தந்நிக்³ருஹீதம் ந லீயதே |
ததே³வ நிர்ப⁴யம் ப்³ரஹ்ம ஜ்ஞாநாலோகம் ஸமந்தத꞉ ||

35. లీయతేహిసుషుప్తేతన్నిగృహీతంనలీయతే।
తదేవనిర్భయంబ్రహ్మజ్ఞానాలోకంసమన్తతః॥

ஸ௦-ஹா. ஸுஷுப்தியிலும் மோக்ஷத்திலும் ஸ்வரூபத்திற்கு பேதமுண்டென்று சொல்லியதை ரூபிக்கின்றது. ஸுஷுப்தியில் வாஸனை பீஜம் முதலிய வற்றோடு கூடின ஸமஸ்தாவித்யைகளோடு கூடியே லயிக்கிறானே யன்றி இவைகள் சுத்தமாய் நீங்குவதில்லை. ஆகையால் இந்த ஸுஷுப்தியைவிட மோக்ஷத்திற்கு மிகவும் பேதமுண்டு. க்ராஹ்யம் க்ராககம், என்கிற பேதங்களெல்லாம் நீங்கிசுத்தமானு லொழிய

சுத்தமாய் பயமில்லாததாய் சாந்தமாய் கேவலஜ்ஞாநஸ்வரூபமாய் விளங்குகிற ப்ரம்மஸ்வரூபத்தோடு ஜீவஸ்வரூபம் அபேதத்தை யடையமாட்டாது. ஆனதால் இந்த பேதங்கள்நீங்குவது மோக்ஷத்திலேயாமன்றி மற்ற ஸுஷுப்தி முதலிய போதுகளிலுண்டாகாது. ஆனதாலந்த விலக்ஷணஸ்வரூப மறியத்தக்கது. அது ஆகாயம்போல் வ்யாபகமானது.

௩௬. அஜமநித்³ரமஸ்வப்நமநாமகமரூபகம் ।
ஸக்ருத்³விபா⁴தம் ஸர்வஜ்ஞம் நோபசார꞉ கத²ஞ்சந ॥

3౬. అజమనిద్రమస్వప్నమనామకమరూపకమ్ ।
సకృద్విభాతంసర్వజ్ఞంనోపచారఃకథఞ్చన॥

ஸா0-ஹா. இந்த ஸ்வரூபமானது ஜன்மகாரணமில்லாமையால் ஜன்மமில்லாதது. கயிற்றில் பாம்புபோல அவித்யையினாலே ஜன்மமென்று சொன்னோம். இந்த அவித்யை ஆத்மஸ்வரூப தத்வஜ்ஞாநத்தால் நிவ்ருத்தியடைந்தது. ஆனதால் பிறப்புக்கு ஹேதுவில்லையன்றோ. ஆனதால் நித்திரையில்லாதது. அவித்யை என்கிற மயையினாலன்றோ நித்திரையாவது. அந்த அவித்யை நீங்கியபடியால் நித்திரைக்கு ஹேதுவில்லையன்றோ. ஆனதால் இந்த ஜகத்தை ப்ரம்மிக்கிற ஸ்வப்நமுமில்லை. அஜ்ஞானத்தாலன்றோ நாமருபங்களை ப்ரமிக்கின்றான். அது நீங்கினபின், அதற்குக்காரணமில்லையன்றோ. ஆனதால் ரூபநாமங்களில்லாதது. ஸ்வயம் ப்ரகாசமாய் எப்போதும் விளங்குவது. எல்லாவற்றையு மறிந்தது. இந்த ஸ்வரூபா விர்ப்பாவத்தை யடைந்தபின் யோகாப்யாச முதலியவை யொன்றும் செய்யவேண்டுவதில்லை.

௩௭. ஸர்வாபி⁴லாபவிக³த꞉ ஸர்வசிந்தாஸமுத்தி²த꞉ ।
ஸுப்ரஶாந்த꞉ ஸக்ருஜ்ஜ்யோதி꞉ ஸமாதி⁴ரசலோ(அ)ப⁴ய꞉ ॥

3౭. సర్వాభిలాపవిగతస్సర్వచిన్తాసముత్థితః ।
సుప్రశాన్తస్సకృజ్జ్యోతిస్సమాధిరచలోఽభయః॥

ஸா0-ஹா. வாகிந்திரயம் முதலிய ஸமஸ்த இந்திரியங்களும் நீங்கியது. அந்தக்கரண ஸம்பந்தமில்லாதது. ஸர்வ சாந்திஸ்வரூபமானது. ப்ரகாசரூபமானது. ஸமாதிஸ்வரூபமானது. சலநமில்லாதது. பயமில்லாதது, விகாரமுண்டானாலன்றோ பயமுண்டாவது, விகாரமில்லாமையால் பயமுமில்லை. இப்படிப்பட்டது சுத்தாத்மஸ்வரூபம். இதையறிய வேணும். இதையறிந்த வித்வானே ப்ரம்மம். ஆனதால் ஜீவா பேதத்தைச் சொல்லுகிறது யுக்தமேயாம்.

௩௮. க்³ரஹோ ந தத்ர நோத்ஸர்க³ஶ்சிந்தா யத்ர ந வித்³யதே ।
ஆத்மஸம்ஸ்தா² ததா³ ஜ்ஞாநமஜாதி ஸமதாம் க³தம் ॥

3౮. గ్రహోనతత్రనోత్సర్గశ్చిన్తాయత్రనవిద్యతే।
ఆత్మసంస్థన్తదాజ్ఞానమజాతిసమతాఙ్గతమ్॥

ஸா0-ஹா. இந்த விகார சூந்யமான ப்ரம்மத்தை விதிநிஷேதங்களால் கொள்ளவும் விலக்கவுங்கூடாது என்று ரூபித்துககாட்டுகின்றார். கீழ்ச்சொல்லியபடி ஜாதியில்லாதது ஸாம்யமுடையது என்பது கீழ்ச்சொல்லிய ஹேதுக்களால் விளங்குகின்றதன்றோ. நிர்விகாரமாயும் நிரவயவ மாயுமிருக்கிற வஸ்துவுக்கு இங்கு சொல்லப்பட்டவிஷயங்கள் கூடினவையாமாகையால் அப்படிப்பட்ட ப்ரம்மத்திற்கு இவை நன்றாய்ச் சேரு

மென்க. சிந்தைஎல்லா மொழிந்தமையால் மனோகோசரமுமாகாத அந்த சுத்தப்ரம்மஸ்வரூபத்திற்கு ஒரு தோஷமுமில்லை.

௩௯. 𑌅𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌯𑍋𑌗𑍋 𑌵𑍈 𑌨𑌾𑌮 𑌦𑍁𑌰𑍍𑌦𑌰𑍍𑌶𑌃 𑌸𑌰𑍍𑌵𑌯𑍋𑌗𑌿𑌭𑌿𑌃 ।
𑌯𑍋𑌗𑌿𑌨𑍋 𑌬𑌿𑌭𑍍𑌯𑌤𑌿 𑌹𑍍𑌯𑌸𑍍𑌮𑌾𑌦𑌭𑌯𑍇 𑌭𑌯𑌦𑌰𑍍𑌶𑌿𑌨𑌃 ॥

౩౯. అస్పర్శయోగో వై నామ దుర్దర్శః సర్వయోగిభిః।
యోగినో బిభ్యతి హ్యస్మాదభయే భయదర్శినః॥

ஶா0-ஹா. இங்ஙனம் பரமார்த்த சுத்த ப்ரம்மஸ்ரூபத்தை யடைவது அத்வைதஜ்ஞானத்திற்கு பலமாயின், அனைவருமிதைவிரும்பாம விருப்பதற்குக் காரணமென்ன வென்றால், கூறுகின்றோம். ஸர்வஸம்பந்தங்களும் நீங்கி சுத்தமாயிருக்கின்றமையால் அஸ்பர்சயோகம், என்று பெயரையுடைய இந்த ஸ்வரூபமானது எல்லாயோகிகளுக்கும் சுலபமாய் காணக்கூடியதன்று, மிகவும் வருத்தத்தாலறியத்தக்கது. இப்படிப்பட்ட இந்தஸ்வரூபம் அபயமாயிருந்தாலும் இதை பயஸ்வரூபமாக ப்ரமித்து பயப்படுகிறார்கள். ஆனதாலிதைப்பலரும் விரும்புவதில்லை. இதற்கு அவிவேகமே காரணமானது.

௪௦. 𑌮𑌨𑌸𑍋 𑌨𑌿𑌗𑍍𑌰𑌹𑌾𑌯𑌤𑍍𑌤𑌮𑌭𑌯𑌂 𑌸𑌰𑍍𑌵𑌯𑍋𑌗𑌿𑌨𑌾𑌮𑍍 ।
𑌦𑍁𑌃𑌖𑌕𑍍𑌷𑌯𑌃 𑌪𑍍𑌰𑌬𑍋𑌧𑌶𑍍𑌚𑌾𑌪𑍍𑌯𑌕𑍍𑌷𑌯𑌾 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌰𑍇𑌵 𑌚 ॥

౪౦. మనసో నిగ్రహాయత్తమభయం సర్వయోగినామ్।
దుఃఖక్షయః ప్రబోధశ్చాప్యక్షయా శాంతిరేవ చ॥

ஶா0-ஹா. எந்த அதிக புத்திமான்களுக்கு ப்ரம்மஸ்வரூபமே பரமார்த்தம், இதையொழிந்த மற்றவை எல்லாம் அபரமதார்த்தமென்று புத்தியுண்டாகின்றதோ; கயிற்றில் பாம்புபோல இந்தமநம் முதலியவை கல்பிக்கப்பட்டவை யென்று தோற்றுகின்றதோ; அவர்களுக்கு, ப்ரம்மஸ்ரூபம் ப்ரகாசித்தமையால் அவர்கள் ப்ரம்மஸ்வரூபமேயாகிறார்கள். அப்படி ப்ரம்மஸ்ரூபமேயானவர்களுக்கு மோக்ஷமும், பயமில்லாத தாய் அக்ஷயமாயிருக்கிற சாந்தியும், ஸ்வயமாகவே யுண்டாகிறது. வேறுகாரணம் வேண்டுவதில்லை. இவர்களைவிட வேறான மந்தாதிகாரமுடையவர்கள் ஆத்மாவைவிட வேறுபட்டமநஸ்ஸு முதலியவஸ்துக்களைக் காண்கிறார்கள். இந்த அதிகாரிகளுக்கு யோகம் முதலியவற்றால்ஆத்மஸத்யஸ்வரூபஜ் ஞானமுண்டாகி மனோநிக்ரகம் பிறந்தபின் மோக்ஷமுண்டாகிறது. அதை யனுஸரித்ததுக்க நிவ்ருத்தி முதலிய ஸமஸ்த சுபவிஷயங்களும் அவர்களுக்கு மனஸ்ஸை நிக்ரகிப்பதினாலுண்டாகும்;

௪௧. 𑌉𑌤𑍍𑌸𑍇𑌕 𑌉𑌦𑌧𑍇𑌰𑍍𑌯𑌦𑍍𑌵𑌤𑍍𑌕𑍁𑌶𑌾𑌗𑍍𑌰𑍇𑌣𑍈𑌕𑌬𑌿𑌨𑍍𑌦𑍁𑌨𑌾 ।
𑌮𑌨𑌸𑍋 𑌨𑌿𑌗𑍍𑌰𑌹𑌸𑍍𑌤𑌦𑍍𑌵𑌦𑍍𑌭𑌵𑍇𑌦𑌪𑌰𑌿𑌖𑍇𑌦𑌤𑌃 ॥

౪౧. ఉత్సేక ఉదధేర్యద్వత్కుశాగ్రేణైకబిందునా।
మనసో నిగ్రహస్తద్వద్భవేదపరిఖేదతః॥

ஶா0-ஹா. மனோநிக்ரகம் எப்படிஎன்றால், அது இவன்ப்ரயாஸத்தினால் ஸாத்தியமல்ல. கடல்நீரை குசாக்ரத்தினால் ஒருபிந்து எடுத்து சோஷிப்பிக்க நினைப்பதுபோலாகும். ஆனதால் எவ்வாறாயினும் ப்ரம்மஸ்வரூபத்தை ஸாக்ஷாத்கரிக்கவேணு மென்கிற நிலையுடையனால் அவனுக்கு எளிதில் உண்டாகும்.

௪௨. 𑌉𑌪𑌾𑌯𑍇𑌨 𑌨𑌿𑌗𑍃𑌹𑍍𑌣𑍀𑌯𑌾𑌦𑍍𑌵𑌿𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌤𑌂 𑌕𑌾𑌮𑌭𑍋𑌗𑌯𑍋𑌃 ।
𑌸𑍁𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑌂 𑌲𑌯𑍇 𑌚𑍈𑌵 𑌯𑌥𑌾 𑌕𑌾𑌮𑍋 𑌲𑌯𑌸𑍍𑌤𑌥𑌾 ॥

42. ఉపాయేననిగృహ్ణీయాద్విక్షిప్తంకామభోగయోః ।
సుప్రసన్నంలయేచైవయథాకామోలయస్తథా॥

பா0-ஹா. அந்த உறுதியோடு மேற்கூறப்படுமுபாயங்களால் நெஞ்சை வசப்படுத்த வேண்டும். ஸுஷுப்தியிலும் காமபோகங்களிலும், சென்ற நெஞ்சை அவைகளில் புகவொட்டாமல் தடுத்து ஜயிக்கவேணும். ஸுஷுப்தியில் நெஞ்சு தெளிந்திருந்தாலும் மோகம் போலவே அதுவும் விரோதியாகும். இது குற்றமுடைய தென்பது முன்கூறப்பட்டது. ஆனதாலிவற்றிலொன்றிலும் நெஞ்சு செல்லாமல் ஜயிக்கவேண்டும்.

௪௩. 𑌦𑍁𑌃𑌖𑌂𑌸𑌰𑍍𑌵𑌮𑌨𑍁𑌸𑍍𑌮𑍃𑌤𑍍𑌯𑌕𑌾𑌮𑌭𑍋𑌗𑌾𑌨𑍍𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌯𑍇𑌤𑍍।
𑌅𑌜𑌂𑌸𑌰𑍍𑌵𑌮𑌨𑍁𑌸𑍍𑌮𑍃𑌤𑍍𑌯𑌜𑌾𑌤𑌂𑌨𑍈𑌵𑌤𑍁𑌪𑌶𑍍𑌯𑌤𑌿॥

43. దుఃఖంసర్వమనుస్మృత్యకామభోగాన్నివర్తయేత్ ।
అజంసర్వమనుస్మృత్యజాతంనైవతుపశ్యతి॥

பா0-ஹா. இந்த உலகமெல்லாங் கல்பிக்கப்பட்டமையால் துன்பத்திற்கிடமென்று தன்னுடைய அநுபவத்தைக்கொண்டு சிந்தித்து காமபோகங்களால் வருவது துன்பமே இன்பமல்லவென் றுணர்ந்து சிந்திக்கின்றமையால் காமங்களில் வைராக்கியத்தை யடையவேண்டும். இந்த ஜகத்தெல்லாம் பிறப்பில்லாத ப்ரம்மமே என்று ஆசாரியோபதேசத்தாலறிந்த சுருதி வாக்கியங்களினால் உணர்ந்து த்வைத மென்கிற பேதத்தைக் காணுமல் விடக்கடவன். வாஸ்தவத்தில், த்வைத மில்லையன்றோ. இது காமபோகங்களிலிருந்துமனத்தைத் திருப்பும் வழியாம்.

௪௪. 𑌲𑌯𑍇𑌸𑌂𑌬𑍋𑌧𑌯𑍇𑌚𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌂𑌵𑌿𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌤𑌂𑌶𑌮𑌯𑍇𑌤𑍍𑌪𑍁𑌨𑌃।
𑌸𑌕𑌷𑌾𑌯𑌂𑌵𑌿𑌜𑌾𑌨𑍀𑌯𑌾𑌤𑍍𑌸𑌮𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌂𑌨𑌚𑌾𑌲𑌯𑍇𑌤𑍍॥

44. లయేసమ్బోధయేచ్చిత్తంవిక్షిప్తంశమయేత్పునః ।
సకషాయంవిజానీయాత్సమప్రాప్తంనచాలయేత్॥

பா0-ஹா. இவ்வாறு ஜ்ஞானம் வைராக்யம், இவ்விரண்டுமுடையவனாகி அவ்வுபாயத்தால், ஸுஷுப்தியில் சேருகிற மனஸ்ஸை எழுப்பவேணும் அதாவது ஆத்மவிவேகத்தை யறியும்படி செய்யவேண்டுமென்கை. அப்போது விஷயங்களைப் பற்றுமாயின் முன்சொன்ன உபாயத்தால் அவற்றில் செல்லவொட்டாமல் அடக்கவேண்டும். இப்படி அப்யாஸத்தினால் விஷயங்களில் செல்லாமலும் ஸுஷுப்தியை யடையாமலும் நடுநிலையிலிருக்கின்ற மனதை ராகபீஜத்தோடுகூடியதென்று நினைக்கவேணும். அதில் நின்று ப்ரயத்நத்தால் ஸாம்யத்தை யடையும்படி செய்யவேணும். எப்போது ஸமத்திற்கு வருமோ அப்போது சலியாமல் நின்று விஷயங்களை நீக்கவேணும்.

௪௫. 𑌨𑌾𑌸𑍍𑌵𑌾𑌦𑌯𑍇𑌤𑍍𑌸𑍁𑌖𑌂𑌤𑌤𑍍𑌰𑌨𑌿𑌃𑌸𑌙𑍍𑌗𑌃𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌯𑌾𑌭𑌵𑍇𑌤𑍍।
𑌨𑌿𑌶𑍍𑌚𑌲𑌂𑌨𑌿𑌶𑍍𑌚𑌰𑌚𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑍇𑌕𑍀𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌯𑌤𑍍𑌨𑌤𑌃॥

45. నాస్వాదయేత్సుఖంతత్రనిస్సఙ్గఃప్రజ్ఞయాభవేత్ ।
నిశ్చలంనిశ్చరచ్చిత్తమేకీకుర్యాత్ప్రయత్నతః॥

பா0-ஹா. அந்த அப்யாசத்தால் யோகம் வந்தபோது ஆத்மாவுக்கு ஒருவித சுகமுண்டாகிறதன்றோ. அந்த சுகத்தையு மநுபவிக்கக்கூடாது. கேவலஜ்ஞானத்தால் நிச்சலமாய் நின்று, சிதாத்ம ஸ்வரூபத்தில் ஒன்றுசேர்க்கவேணும் அந்த யோககாலத்தி லுண்டாகிற சுகமும் கல்பிதமாகையால் பொய்யென்றே நினைக்கவேணும்.

௪௬. யதா ந லீயதே சித்தம் ந ச விக்ஷிப்யதே புந: ।
அநிங்கநமநாபாஸம் நிஷ்பந்நம் ப்ரஹ்ம தத்ததா ॥

౪౬. యదా న లీయతే చిత్తం న చ విక్షిప్యతే పునః ।
అనింగనమనాభాసం నిష్పన్నం బ్రహ్మ తత్తదా॥

பo-ஹா. இந்த உபாயத்தினால் நிக்ரஹிக்கப்பட்ட மனஸ்ஸானது, எப்போது, ஸுஷுப்தியில் லயத்தை யடையாதோ; விஷயங்களிலும் செல்லாதோ; காற்றில்லாத விடத்தில் வைத்த தீபம்போ லசையாமலிருக்கின்றதோ; அந்த தசையில் ப்ரம்மஸ்வரூப ஸாக்ஷாத்காரம் பிறக்கின்றது.

௪௭. ஸ்வஸ்தம் ஶாந்தம் ஸநிர்வாணமகத்யம் ஸுகமுத்தமம் ।
அஜமஜேந ஜ்ஞேயேந ஸர்வஜ்ஞம் பரிசக்ஷதே ॥

౪౭. స్వస్థం శాంతం సనిర్వాణమకథ్యం సుఖముత్తమమ్ ।
అజమజేన జ్ఞేయేన సర్వజ్ఞం పరిచక్షతే॥

பo-ஹா. அந்த ப்ரம்மஸ்வரூப ஸத்ய சுகமானது, நிலையானது; ஸகல ஸங்கடங் களும் நீங்கியது; கைவல்யஸ்வரூபத்தை யுடையது. இப்படிப்பட்டதென்று பிறருக் குச்சொல்லிமுடியாதது. அளவில்லாத பெரின்பமானது; யோகிகளுக்கு ப்ரத்யக்ஷ மானது, ஸர்வஸ்வரூபமானது நித்யமானது. அது எல்லா மறிந்த ப்ரம்மமே.

௪௮. ந கஶ்சிஜ்ஜாயதே ஜீவ: ஸம்பவோ(அ)ஸ்ய ந வித்யதே ।
ஏதத்ததுத்தமம் ஸத்யம் யத்ர கிஞ்சிந்ந ஜாயதே ॥

౪౮. న కశ్చిజ్జాయతే జీవస్సమ్భవోఽస్య న విద్యతే ।
ఏతత్తదుత్తమం సత్యం యత్ర కించిన్న జాయతే॥

பo-ஹா. இந்தப்படி மனோநிக்ரஹம் ஸ்ருஷ்டி உபாஸனை எல்லாம் பொய். இந்த பரமார்த்தஸ்வரூபத்தை யறிவிப்பதற்காகச் சொல்லப்பட்டவை. பரமார்த்த ஸத்ய மன்று. பரமார்த்த ஸத்யமாவது ஜீவன் கர்தாபோக்தா என்கிற பேதங்களோடு பிறப்ப தில்லை ஸ்வபாவ ஸத்யமான இந்த ப்ரம்மஸ்வரூபத்தில் ஒன்றும் பிறப்பதில்லை இந்த ப்ரம்மமே ஸர்வோத்தம ஸத்யமானது என்பதுதான். ஆகையாலத்வைதம்ஸர்வோத்தம மானது.

இதி மாண்டூக்யகாரிகாயாம் அத்வைதப்ரகரணம் ॥

அத மாண்டூக்யகாரிகாயாம் அலாதஶாந்திப்ரகரணம் ॥

௧. ஜ்ஞாநேநாகாஶகல்பேந தர்மாந் யோ ககநோபமாந் ।
ஜ்ஞேயாபிந்நேந ஸம்புத்தஸ்தம் வந்தே த்விபதாம் வரம் ॥

౧. జ్ఞానేనాకాశకల్పేన ధర్మాన్ యో గగనోపమాన్।
జ్ఞేయాభిన్నేన సంబుద్ధస్తం వందే ద్విపదాం వరమ్॥

சங்கரபாஷ்யத்தில் அவதாரிகை.

சகல வேதசாரமாயிரானின்ற ப்ரணவத்தை நிச்சயிக்கிற கிரமத்தில், ஸகலவேதங்களுக்கு மத்வைதமே கருத்தென்று முதல் ப்ரகரணமாகிய

ஆகமப்ரகரணத்தில் ப்ரதிஜ்ஞைசெய்து, வைதத்யப்ரகரணத்தில் த்வைதம் பொய்யென்று ரூபிக்கிற வழியாலே அத்வைதத்தை வலியுறுத்தி, மூன்ருவதாகிய அத்வைத ப்ரகரணத்தில் யுக்திகளாலும் சாஸ்திரங்களாலும் நேராக அத்வைதத்தை மூதலித்து, நிர்விசேஷ ஸத்யசுத்தஸத் ஸ்வரூப ப்ரகாசமாகிய ப்ரம்மமே ஸத்யம், மற்றவையெல்லாம் பொய்யென்று சொல்லி முடித்தார். இனி இந்த நான்காவது ப்ரகரணத்தில் இந்த அத்வைதத்திற்கு விரோதிகளான த்வைதமதஸ்தரும் சூந்யவாதிகளும் சொல்லுகிறஅபிப்ராயங்கள் ஸரியானவையல்லவென்று மூன்ரும் ப்ரகரணத்தில் கூறியதூஷணங்களை விரித்துரைப்பதற்கு இந்த அலாத சாந்திப்ரகரணந் துடங்குகின்ருர். கிழ்ச்சொல்லிய தூஷண ஸங்க்ரஹமானது அத்வைத்தைப் புகழ்வதற்கென்று விளங்குகின்றது. க்லேசமாகியது த்வைதமென்ருல் க்லேசமில்லாதது அத்வைதமென்று ஸித்திக்கின்றமையாலெனக. அந்வயவ்யதிரேகங்களிரண்டாலுமொருபொருள் ரூபிக்கப்படவேண்டுமாகையால் இந்த ப்ரகரணத்தில் வ்யதிரேகத்தால் த்வைதவாதிகள் மதமும் சூந்யவாதி மதமும் தப்பானதென்று ரூபித்து அத்வைதமே அழகான மதமென்று காட்டுகின்ருர்.

ஸ0-ஹா. முதலிலும் நடுவிலும் முடிவிலும் மங்களமுடைய க்ரந்தம் இடையூறின்றி நிறைவேறி அனைவருமாதரிக்கும் படியாமென்று, முதலிலும் முடிவிலும்போல நடுவிலும் மங்களம்வேண்டி முதல் சுலோகத்தால் அத்வைத ரூபியாகிய ஆசாரியனை வணங்குகின்ருர் அத்வைத மதஸம்ப்ரதாய குருவந்தனம் அத்வைத மதவ்ருத்தியின் பொருட்டாகும். ஆசாரிய பூஜைவேண்டியபலனைத் தருவது சாஸ்ராதியில் செய்யத்தக்கது ஆகையால் பரமாத்மாவாகிய நாராயணனைவணங்குகிறேனென்கிருர். அந்த நாராயணன் புருஷோத்தமன். ஆகாசரூபமாகிய தருமங்களை விஷயங்களில் பேதமான ஆகாசம்போன்றஜ் ஞானத்தாலேயறிந்தவன். ஆதலாலந்த நாராயணனைவணங்குகிறேனென்று கருத்து. இதனால் இந்தப்ரகரணார்த்தம் ஸூசிப்பிக்கப்பட்டது.

௨. 𑌅𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌯𑍋𑌗𑍋 𑌵𑍈 𑌨𑌾𑌮 𑌸𑌰𑍍𑌵𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌸𑍁𑌖𑍋 𑌹𑌿𑌤𑌃 ।
𑌅𑌵𑌿𑌵𑌾𑌦𑍋𑌽𑌵𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌶𑍍𑌚 𑌦𑍇𑌶𑌿𑌤𑌸𑍍𑌤𑌂 𑌨𑌮𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ॥

౨. అస్పర్శయోగో వై నామ సర్వసత్త్వసుఖో హితః।
అవివాదోఽవిరుద్ధశ్చ దేశితస్తం నమామ్యహమ్॥

ஸ0-ஹா. அத்வைதத்தை ஸ்துதிப்பதற்கு அத்வைத மதத்தை வணங்குகிறது. இந்த அத்வைதமானது, ஒன்ருேடொருபோதும் ஸம்பந்தமில்லாததானதால் அஸ்பர்சயோகமென்று ப்ரஸித்தமாய் யோகிகளின் திரளில் கூறப்பட்டது. ஸமஸ்தப்ராணிகளுக்கும் ஸுகமாயும் ஹிதமாயுமுள்ளது. லௌகிகஸுகம்போலன்று. அவிவாதமானது. விரோதமில்லாதது. சாஸ்திரங்களால்காட்டப்பட்டது. ஆனதால் இந்த அத்வைததர்சனத்தை வணங்குகிறேன். இதுவேயன்ருே ஒரேவிதமாய் நித்யமாயிருக்கின்றது.

௩. 𑌭𑍂𑌤𑌸𑍍𑌯 𑌜𑌾𑌤𑌿𑌮𑌿𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑌿 𑌵𑌾𑌦𑌿𑌨𑌃 𑌕𑍇𑌚𑌿𑌦𑍇𑌵 𑌹𑌿 ।
𑌅𑌭𑍂𑌤𑌸𑍍𑌯𑌾𑌪𑌰𑍇 𑌧𑍀𑌰𑌾 𑌵𑌿𑌵𑌦𑌨𑍍𑌤𑌃 𑌪𑌰𑌸𑍍𑌪𑌰𑌮𑍍 ॥

3. భూతస్య జాతిమిచ్ఛంతి వాదినః కేచిదేవ హి ।
అభూతస్యాపరే ధీరా వివదన్తః పరస్పరమ్॥

𑌶𑌾𑌂-ஹா. கீழ்ச்சொல்லியபடி அத்வைதத்திற்கு தோஷமில்லை என்றுகாட்டுவதற்கு த்வைதவாதிகளில் ஒருவருக்கொருவர் விவாதப்பட்டுமுரண்படுமாறு கூறுகின்றார். வைசேஷிகர் நெய்யாயிகர்என்கிறதார்க்கிகர்கள், ஸாங்க்யர்கள் முதலியபலபேர் த்வைதவாதிகளிருக்கின்றார்கள். இவர்களில் சிலர் ஸத்கார்யவாதிகள்; சிலர் அஸத்கார்யவாதிகள். ஸாங்கியர் முதலானோர்ஸத்கார்யவாதிகள். தாக்கிகர் முதலானோர் அஸத்கார்யவாதிகள். ஸத்கார்யவாதமாவது இருக்கும்பொருளே பிறக்குமில்லாதபொருள் பிறவாதென்கிறவாதம். அஸத்கார்யவாதமாவது இல்லாதவஸ்துபிறக்குமேயல்லது இருக்கும்வஸ்து பிறக்க வேண்டியதில்லை என்கிறவாதம். ஸத்கார்யவாதத்திற்கு யுக்தி முயல் கொம்பு முதலிய இல்லாத பொருள் பிறவாமை. இல்லாதது பிறக்குமானால் முயல் கொம்பு பிறக்கவேண்டும். என்று சொல்லுகிறார்கள். அஸத்காரிய வாதத்திற்கு யுக்தி பிள்ளையில்லாதவனுக்கு பிள்ளை பிறந்ததென்கிற வ்யவஹாரம். பிள்ளை முன்னிருக்குமேயானால் பிள்ளை இல்லை என்று சொல்லக்கூடாதன்றோ என்கிறார்கள். இப்படி யொருவருக்கொருவர் விருத்தமாகச் சொல்லி யொருவரை யொருவர் ஜயிக்க விரும்புகின்றார்கள். நாமே பண்டிதர் என்று ஒவ்வொருவரும் நினைக்கிறார்கள்.

௪. 𑌭𑍂𑌤𑌂𑌨𑌜𑌾𑌯𑌤𑍇𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌦𑌭𑍂𑌤𑌂𑌨𑍈𑌵𑌜𑌾𑌯𑌤𑍇|
𑌵𑌿𑌵𑌦𑌨𑍍𑌤𑍋𑌦𑍍𑌵𑌯𑌾𑌹𑍍𑌯𑍇𑌵𑌮𑌜𑌾𑌤𑌿𑌂𑌖𑍍𑌯𑌾𑌪𑌯𑌨𑍍𑌤𑌿𑌤𑍇||

౪. భూతంనజాయతేకిఞ్చిదభూతంనైవజాయతే ।
వివదన్తోద్వయాహ్యేవమజాతింఖ్యాపయన్తితే॥

𑌶𑌾𑌂-ஹா. முன்னில்லாதது பிறப்பதில்லை. முயற்கொம்புபோல வென்று ஸாங்க்யனும்உள்ளது பிறவாது ஆத்மஸ்வரூபம் போலவென்று தார்க்கிகரும் சொல்வதால் வாஸ்தவத்தில் பிறப்புகூடாதென்பதை வெளியிட்டவர்களானார்கள். இதனாலத்வைதித்திற்கே ஸஹாயமாயிற்று. ஸத்தும், அஸத்தும், ஆகிய இவ்விரண்டுவகையை விடவேறில்லாமையினாலும் இரண்டுக்கும் இரண்டு வாதிகளால் உத்பத்தி கூடாதென்று ஸித்தித்தமையாலுமென்க.

௫. 𑌖𑍍𑌯𑌾𑌪𑍍𑌯𑌮𑌾𑌨𑌾𑌮𑌜𑌾𑌤𑌿𑌂𑌤𑍈𑌰𑌨𑍁𑌮𑍋𑌦𑌾𑌮𑌹𑍇𑌵𑌯𑌂|
𑌵𑌿𑌵𑌦𑌾𑌮𑍋𑌨𑌤𑍈𑌸𑍍𑌸𑌾𑌰𑍍𑌧𑌮𑌵𑌿𑌵𑌾𑌦𑌂𑌨𑌿𑌬𑍋𑌧𑌤||

౫. ఖ్యాప్యమానమజాతింతైరనుమోదామహేవయమ్ ।
వివదామోనతైస్సార్ధమవివాదంనిబోధత॥

𑌶𑌾𑌂-ஹா. இங்ஙன மிருவராலும் வெளியிடப்பட்டிருக்கிற உத்பத்தி மித்யாத்வத்தை, அதாவது உத்பத்தி பொய்யென்பதை நாமொப்புக்கொள்ளுகிறோம். அவர்களுடன் நாம் விவாதப்படுவதில்லை. அவர்களில் ஒருவர்க்கொருவர் விவாதப்படுவது போல் நாம் விவாதப்படுவதில்லை யன்றோ. ஆகையா லத்வைதம் அவிவாதமென்று சிஷ்யர்களே அறியுங்கோள்.

௬. 𑌅𑌜𑌾𑌤𑌸𑍍𑌯𑍈𑌵𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯𑌜𑌾𑌤𑌿𑌮𑌿𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑌿𑌵𑌾𑌦𑌿𑌨𑌃|
𑌅𑌜𑌾𑌤𑍋𑌹𑍍𑌯𑌮𑍃𑌤𑍋𑌧𑌰𑍍𑌮𑍋𑌮𑌰𑍍𑌤𑍍𑌯𑌤𑌾𑌂𑌕𑌥𑌮𑍇𑌷𑍍𑌯𑌤𑌿||

௭. 𑌨𑌭𑌵𑌤𑍍𑌯𑌮𑍃𑌤𑌂𑌮𑌰𑍍𑌤𑍍𑌯𑌂𑌨𑌮𑌰𑍍𑌤𑍍𑌯𑌮𑌮𑍃𑌤𑌂𑌤𑌥𑌾||
𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑍇𑌰𑌨𑍍𑌯𑌥𑌾𑌭𑌾𑌵𑍋𑌨𑌕𑌥𑌞𑍍𑌚𑌿𑌦𑍍𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿||

௮. ஸ்வபாவேநாம்ருதோ யஸ்ய தர்மோ கச்சதி மர்த்யதாம்|
க்ருதகேநாம்ருதஸ்தஸ்ய கதம் ஸ்தாஸ்யதி நிச்சல:||

௬. అజాతస్యైవధర్మస్యజాతిమిచ్ఛన్తివాదినః ।
అజాతోహ్యమృతోధర్మోమర్త్యతాంకథమేష్యతి॥

௭. నభవత్యమృతంమర్త్యంనమర్త్యమమృతంతథా।
ప్రకృతేరన్యథాభావోనకథఞ్చిద్భవిష్యతి॥

௮. స్వభావేనామృతోయస్యధర్మోగచ్ఛతిమర్త్యతామ్।
కృతకేనామృతస్తస్యకథంస్థాస్యతినిశ్చలః॥

பா௦-ஷா. கீழ் இந்த சுலோகங்களுக்கு பாஷ்யம் சொல்லியிருக்கிறோம். கீழ்சொன்ன சுலோகங்களை மறுபடியும் எழுதுவதற்குக்காரணம், த்வைதிகளின் பரஸ்பரவிரோதத்தைக் காட்டுகிற ப்ரகரணத்தில் சொல்லி யநுமோதிப்பதற்காகவாம்.

பதாந்வயார்த்தபேதங்கள்.

இந்த மூன்று சுலோகங்களும் அத்வைத ப்ரகரணத்தில் 20 21 22, வது சுலோகங்கள். அங்கு வ்யாக்யாநம் செய்யப்பட்ட கருத்தையே இங்கும் கொள்க.

௯. ஸாம்ஸித்திகீ ஸ்வாபாவிகீ ஸஹஜா அக்ருதா ச யா|
ப்ரக்ருதி: ஸேதி விஜ்ஞேயா ஸ்வபாவம் ந ஜஹாதி யா||

౯. సాంసిద్ధికీస్వాభావికీసహజాఅకృతాచయా।
ప్రకృతిస్సేతివిజ్ఞేయాస్వభావంనజహాతియా॥

பா௦-ஷா. ப்ரக்ருதிக்கு வ்யத்யாஸம் ஒருபோதும் வராதென்று சொன்னார் கீழ். ப்ரக்ருதியாவது யாதென்கிற ஐயந்தீர ப்ரக்ருதி சப்தத்திற்குப் பொருள் கூறுகின்றாரிதில். லோகத்தில் ப்ரக்ருதிமாறாது என்று அனைவரும் சொல்லுகின்றார். யோகிகளுக்கு, ப்ரக்ருதியாவது-அணிமைமுதலிய ஐச்வர்யத்தை யடைவது. அந்த ஸித்திரூபமாகிய ப்ரக்ருதியானது,பூதபவிஷ்யத் வர்தமானகாலங்களில் எப்போதும் மாறுவதில்லை. நெருப்பு முதலியவற்றிற்கு ப்ரக்ருதியாவது - சுடுகைமுதலியது. இதுவு மெக்காலத்திலும்மாறுகிறதில்லை. பக்ஷி முதலியவற்றிற்கு ப்ரக்ருதி - ஆகாயத்தில் ஸஞ்சரிக்கை. இதுவுமொருகாலத்திலும் மாறுகிறதில்லை. தண்ணீர் முதலியவற்றிற்கு ப்ரக்ருதி-பள்ளமாகிய விடத்தில் தங்குகை. இப்படியே ஒவ்வொன்றுக்கும் ப்ரக்ருதியையறிக. இதில் முதலாவது ப்ரக்ருதிக்கு ஸாம்ஸித்திகி என்றும், இரண்டாவது ப்ரக்ருதிக்கு ஸ்வாபாவிகி என்றும், மூன்றாவது ப்ரக்ருதிக்கு ஸஹஜை, என்றும், நாலாவது ப்ரக்ருதிக்கு அக்ருதை என்றும் பெயர். இவை எல்லாங் காரணப் பெயரேயாகின்றன. இந்த ப்ரக்ருதிகள் ஒரு காலத்திலும் ஒரு தேசத்திலும் மாறுவதில்லையன்றோ. எப்போதும் மாறாதது ப்ரக்ருதி என்று பெயருடைய தென்றதாயிற்று. ஆக இவ்வாறு பொய்யாய் மாயையினால் கல்பிக்கப்பட்ட வஸ்துக்களுக்கு ப்ரக்ருதி மாறாமலிருக்க நித்யபரமார்த்த ப்ரம்ம ப்ரக்ருதிமாறுமென்று யார் சொல்லுவர். ஆகையால் ப்ரம்மம் விகாரத்தை யடையுமென்பது மிகவும் பொருத்த மற்ற வார்த்தை என்றபிப்ராயம்.

௧௦. जरामरणनिर्मुक्ताः सर्वे धर्माः स्वभावतः ।
जरामरणमिच्छन्तश्च्यवन्ते तन्मनीषया ॥

౧౦. జరామరణనిర్ముక్తాస్సర్వేధర్మాస్స్వభావతః ।
జరామరణమిచ్ఛంతశ్చ్యవంతేతన్మనీషయా॥

ஸ௦-ஹா. ஜீவாத்மாக்க ளெல்லோரும், ஜரைமரணம் முதலியவற்றால் விடப் பட்டவர்கள். அவர்களுடைய ப்ரக்ருதிவிகார சூந்யமன்றோ. இப்படிப்பட்ட ஆத்ம விஷயத்தில் அவிவேகிகள் கயிற்றில் பாம்பைப்போல் ஜரைமரணம் முதலிய தோஷங் களைக் கல்பிக்கின்றார்கள். இந்த கல்பனையால்ஸ்வஸ்வரூபத்திலிருந்து நழுவுகின்றார்கள். இவ்வாறு ஆத்மாவின் ப்ரக்ருதியை அந்யதாவாகக் கல்பித்து அநர்த்தப் படுகிறார்களா கையால் உள்ளதுள்ளபடி யறியவேணும்.

௧௧. कारणं यस्य वै कार्यं कारणं तस्य जायते ।
जायमानं कथमजं भिन्नं नित्यं कथं च तत् ॥

౧౧ కారణంయస్యవైకార్యంకారణంతస్యజాయతే।
జాయమానంకథమజంభిన్నంనిత్యంకథంచతత్॥

ஸ௦-ஹா. இனி த்வைதிகள் மதங்களில் ஒருவர்க்கொருவர் சொல்லுகிற தூஷண ங்களை வெளியிடுகின்றார். தார்க்கிகர் ஸாங்க்யரை தூஷிக்குமாறு. ஸத்கார்யவாதிக ளாகிய ஸாங்க்யர்கள் சொல்லுவது மிகவும் சேராததாயிருக்கின்றது. எவனொருவன் காரணத்தையே கார்யமென்று கூறுகின்றானோ; அதாவது குடமுதலியவற்றிற்கு மண் போலு பாதான காரணமாகிய வஸ்துவே காரியமாகப் பரிணமிக்கிறதென்று கூறுகின் றானோ; அவனுக்கு நித்யமாகிய ப்ரக்ருதியன்றோ மகான் முதலிய காரியமாகப் பிறக்கி றது. இப்படியாயின், காரிமமாகிப் பிறக்கிற ப்ரக்ருதியை நித்யமென் றுரைப்பது எவ் வாறாம். பிறப்பில்லாதது காரியமாய் பிறக்கிறது என்று சொல்லுவது விருத்தமன்றோ. இப்படியே அவயவத்தோடு கூடிய ப்ரக்ருதியை நித்யமென்பது கூடுமோ; அவயவமில்லை யாயின், மகதாதிரூபமாகப் பரிணமவிகாரத்தை யடைவது சேருமோ; ஆனதால் நித்ய நிர்விகாரம் பிறப்பதில்லை. பிறக்கிறது பரிணமவிகாரத்தை யடைகின்றது, என்று அவர்கள் சொல்வது விருத்தமேயாம். விகாரத்தையுடைய கடம்முதலியவை நித்ய ங்களாகுமோ.

௧௨. कारणाद्यद्यनन्यत्वमतः कार्यमजं यदि ।
जायमानाद्धि वै कार्यात्कारणं ते कथं ध्रुवम् ॥

౧౨. కారణాద్యద్యనన్యత్వమతఃకార్యమజంయది ।
జాయమానాద్ధివైకార్యాత్కారణంతేకథంధ్రువమ్॥

ஸ௦-ஹா. கீழ்ச்சொல்லிய தோஷத்தையே ஸ்பஷ்டமாகக் கூறுகின்றார். கார ணத்தைவிட காரியம் வேறன்றாயின், காரியத்தை அநித்யமென்று சொல்லக் கூடா மையால் காரியமும் நித்யமாகவேணும். இது விருத்தமாயிருக்கின்றது. காரியத்தை விட காரணம் வேறன்றாயின், காரணத்தை நித்யமென்று சொல்லவழியில்லை.

௧௩. अजाद्वै जायते यस्य दृष्टान्तस्तस्य नास्ति वै ।
जाताच्च जायमानस्य न व्यवस्था प्रसज्यते ॥

౧౩. అజాద్వైజాయతే యస్య దృష్టాన్తస్తస్య నాస్తి వై।
జాతాచ్చ జాయమానస్య నవ్యవస్థా ప్రసజ్యతే॥

ஸ௦-ஹா. நித்யமாகிய வஸ்துவிலிருந்து காரியமுண்டாகிறதென்கிற ஸாங்க்யன் ஒருத்ருஷ்டாந்தங் காட்டவேண்டும். திருஷ்டாந்தமில்லாதபோது, ஒன்றும் ஸித்தியாதன்றோ. நித்யமான வஸ்துவிலிருந்து அதில் வேறுபடாத காரியம் பிறக்கிறதென்பது எங்கும் காணப்படவில்லையன்றோ. காணப்பட்டாலன்றோ திருஷ்டாந்தங் காட்டலாம். ஆகையால் நித்யமாகிய ப்ரதானமென்கிற ப்ரக்ருதியிலிருந்து மகான்முதலிய காரியமுண்டாகிறதென்றும் அந்த காரியம் ப்ரக்ருதியைவிட வேறல்லவென்றும் சொல்வதற்கு ஒரு ஆதாரமுமில்லை. இந்த தோஷத்திற்கு பயந்து ப்ரதானத்தை அநித்யமென்றும் பிறப்புடையதென்று மொப்புக்கொண்டாலும் அந்த ப்ரதானகாரணத்திலும் இந்த தோஷங்கள் வருமாகையால் அதற்குக் காரணம் வேறு சொல்லவேண்டி இவ்வாறே காரண பரம்பரைக்குக் கணக்கில்லாமல் அநவஸ்தைவரும்.

௧௪. 𑌹𑍇𑌤𑍋𑌰𑌾𑌦𑌿𑌃 𑌫𑌲𑌂 𑌯𑍇𑌷𑌾𑌮𑌾𑌦𑌿𑌰𑍍𑌹𑍇𑌤𑍁𑌃 𑌫𑌲𑌸𑍍𑌯 𑌚 ।
𑌹𑍇𑌤𑍋𑌃 𑌫𑌲𑌸𑍍𑌯 𑌚𑌾𑌨𑌾𑌦𑌿𑌃 𑌕𑌥𑌂 𑌤𑍈𑌰𑍁𑌪𑌵𑌰𑍍𑌣𑍍𑌯𑌤𑍇 ॥

౧౪. హేతోరాదిః ఫలం యేషామాదిర్హేతుః ఫలస్య చ।
హేతోః ఫలస్య చానాదిః కథం తైరుపవర్ణ్యతే॥

ஸ௦-ஹா. கார்யகாரணமே ரூபமாகிய ஸம்ஸாரமநாதி என்கிற ஸாங்க்யர் ஆத்ம கார்யமாகிய தேஹம் முதலியவற்றை ஆத்மாவுக்குக் காரணமென்றும், இந்த தேஹாதி ஸங்காதத்திற்கு ஆத்மா காரணமென்றும், ஹேது பலம், என்கிற ஆத்மா தேஹம் எல்லாம் அநாதியென்றும் சொல்லுகின்றார்கள். இது மிகவும் விருத்தமாயிருக்கின்றதன்றோ.

௧௫. 𑌹𑍇𑌤𑍋𑌰𑌾𑌦𑌿𑌃 𑌫𑌲𑌂 𑌯𑍇𑌷𑌾𑌮𑌾𑌦𑌿𑌰𑍍𑌹𑍇𑌤𑍁𑌃 𑌫𑌲𑌸𑍍𑌯 𑌚 ।
𑌤𑌥𑌾 𑌜𑌨𑍍𑌮 𑌭𑌵𑍇𑌤𑍍𑌤𑍇𑌷𑌾𑌂 𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌜𑍍𑌜𑌨𑍍𑌮 𑌪𑌿𑌤𑍁𑌰𑍍𑌯𑌥𑌾 ॥

౧౫. హేతోరాదిః ఫలం యేషామాదిర్హేతుః ఫలస్య చ।
తథా జన్మ భవేత్తేషాం పుత్రాజ్జన్మ పితుర్యథా॥

ஸ௦-ஹா. ஹேதுவினால் பிறக்கிற பலத்திலிருந்து ஹேதுவே பிறக்கிறதென்று சொல்லுகிற விது பிள்ளைக்குத் தகப்பன் பிறந்தானென்று சொல்வதுபோ லிருக்கின்றது.

௧௬. 𑌸𑌂𑌭𑌵𑍇 𑌹𑍇𑌤𑍁𑌫𑌲𑌯𑍋𑌰𑍇𑌷𑌿𑌤𑌵𑍍𑌯𑌃 𑌕𑍍𑌰𑌮𑌸𑍍𑌤𑍍𑌵𑌯𑌾 ।
𑌯𑍁𑌗𑌪𑌤𑍍𑌸𑌂𑌭𑌵𑍇 𑌯𑌸𑍍𑌮𑌾𑌦𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑍋 𑌵𑌿𑌷𑌾𑌣𑌵𑌤𑍍 ॥

౧౬. సమ్భవే హేతుఫలయోరేషితవ్యః క్రమస్త్వయా।
యుగపత్సమ్భవే యస్మాదసమ్బన్ధో విషాణవత్॥

ஸ௦-ஹா. இந்த தோஷங்களை நீக்கிக் கொள்ளவேணுமானால் காரணம் முன்னேயாம். காரியம் பின்னேயாம். காரணத்தால் காரியம் பிறக்கிறது; காரியத்தால் காரணம் பிறவாது; என்கிற நியமத்தை யொப்புக்கொள்ளவேணும். இங்ஙனமின்றி காரண காரியங்களுக்கு ஸமான காலத்தில் உத்பத்தியை யொப்புக்கொள்ளப்பார்த்தால் ஏககாலத்தில் பிறக்கிற, பசுவின் இடதுகொம்பு வலதுகொம்பு இவைகளுக்குப்போல காரிய காரணபாவங்கூடாது.

கஎ. 𑌫𑌲𑌾𑌦𑍁𑌤𑍍𑌪𑌦𑍍𑌯𑌮𑌾𑌨𑌸𑍍𑌸𑌨𑍍𑌨𑌤𑍇𑌹𑍇𑌤𑍁𑌃𑌪𑍍𑌰𑌸𑌿𑌧𑍍𑌯𑌤𑌿 ।
𑌅𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑌃𑌕𑌥𑌂𑌹𑍇𑌤𑍁𑌃𑌫𑌲𑌮𑍁𑌤𑍍𑌪𑌾𑌦𑌯𑌿𑌷𑍍𑌯𑌤𑌿॥

౧౭. ఫలాదుత్పద్యమానస్సన్న తే హేతుః ప్రసిద్ధ్యతి ।
అప్రసిద్ధః కథం హేతుః ఫలముత్పాదయిష్యతి॥

ஸா0-ஹா. காரியத்திலிருகது காரணம் பிறந்தபின் இந்த காரணம் காரியத்தை யுண்டுபண்ணுகிறது, என்றால் காரணம் பிறப்பதற்கு முன் (காரியத்திற்குமுன்) காரணமில்லாமையால் கார்யத்தை இந்த காரணம் எப்படி பிறப்பிக்கும். ஆக, காரணம் பிறவாதபோது காரியம் பிறவாது; காரியம் பிறவாதபோது காரணம்பிறவாது; என்றாய் இரண்டுக்கு மிரண்டுங் கூடாதென்று முடிகின்றது. இதை அந்யோந்யாச்ரய தோஷமென்று கூறுவர்.

கஅ. 𑌯𑌦𑌿𑌹𑍇𑌤𑍋𑌃𑌫𑌲𑌾𑌤𑍍𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌃𑌫𑌲𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌶𑍍𑌚𑌹𑍇𑌤𑍁𑌤𑌃।
𑌕𑌤𑌰𑌤𑍍𑌪𑍂𑌰𑍍𑌵𑌨𑌿𑌷𑍍𑌪𑌨𑍍𑌨𑌂𑌯𑌸𑍍𑌯𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌰𑌪𑍇𑌕𑍍𑌷𑌯𑌾॥

౧౮. యదిహేతోః ఫలాత్సిద్ధిః ఫలసిద్ధిశ్చ హేతుతః।
కతరత్పూర్వనిష్పన్నంయస్యసిద్ధిరపేక్షయా॥

ஸா0-ஹா. கீழ்ச்சொல்லிய தோஷங்களால் ஹேது பலங்களுக்குக் கார்ய காரண பாவங் கூடாமலிருக்கவும் அதை யொப்புக்கொண்டால், இந்த ஹேது பலங்களில் எது முன்னுண்டாயிற்று. அதைச்சொல்லவேண்டும். முன்னுண்டானதாலன்றோ பின்னுண்டானது பிறக்கும்.

ககூ. 𑌅𑌶𑌕𑍍𑌤𑌿𑌰𑌪𑌰𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌂𑌕𑍍𑌰𑌮𑌕𑍋𑌪𑍋𑌽𑌥𑌵𑌾𑌪𑍁𑌨𑌃।
𑌏𑌵𑌂𑌹𑌿𑌸𑌰𑍍𑌵𑌥𑌾𑌬𑍁𑌦𑍍𑌧𑍈𑌰𑌜𑌾𑌤𑌿𑌃𑌪𑌰𑌿𑌦𑍀𑌪𑌿𑌤𑌾॥

౧౯. అశక్తిరపరిజ్ఞానం క్రమకోపోఽథవా పునః ।
ఏవంహిసర్వథాబుద్ధైరజాతిః పరిదీపితా।

ஸா0-ஹா. இந்த தோஷங்களுக்கு ஸமாதாநம் சொல்ல முடியாதெனறு கூறில் அசக்தியும், அஜ்ஞாநமும், முன் சொன்ன க்ரமவ்யத்யாஸமும், ஒப்புக் கொள்ளப்படுகிறது. இவ்வாறு சொல்லிப் பார்த்ததில் ஒரு வழியாலும் உத்பத்தி கூடாமையால் ஜந்மம் வாஸ்தவமல்லவெண்பது ஸாதிக்கப்பட்டது. அப்போது பாண்டியத்யகர்வமழிகின்றது.

உ0. 𑌬𑍀𑌜𑌾𑌙𑍍𑌕𑍁𑌰𑌾𑌖𑍍𑌯𑍋𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌨𑍍𑌤𑌸𑍍𑌸𑌦𑌾𑌸𑌾𑌧𑍍𑌯𑌸𑌮𑍋𑌹𑌿𑌸𑌃।
𑌨𑌹𑌿𑌸𑌾𑌧𑍍𑌯𑌸𑌮𑍋𑌹𑍇𑌤𑍁𑌸𑍍𑌸𑌿𑌦𑍍𑌧𑍌𑌸𑌾𑌧𑍍𑌯𑌸𑍍𑌯𑌯𑍁𑌜𑍍𑌯𑌤𑍇॥

౨౦. బీజాఙ్కురాఖ్యోదృష్టాన్తస్సదాసాధ్యసమోహిసః ।
నహిసాధ్యసమోహేతుస్సిద్ధౌసాధ్యస్యయుజ్యతే॥

ஸா0-ஹா. காரண காரியங்களுக்கு பரம்பரையாய் ஒன்றுக் கொன்று காரணமாகின்றது, என்று சொன்னதற்குக் கருத்தறியாமல் எங்கள் பேரிலிங்ஙனம் தோஷம் சொல்லத்தகுமோ; நாங்கள் அஸித்தமாகிய காரணத்தினால் காரியமுண்டாகிறதென்றாவது அஸித்தமாகிய காரியத்தினால் காரணமுண்டாகிற தென்றாவது, சொல்லவில்லை. பீஜாங்குர ந்யாயத்தாலே காரிய காரணபாவங் கூறுகின்றோம். அதாவது, விதையினால் செடியுண்டாகின்றது, செடியினால் விதையுண்டாகின்றது; என்

பது ப்ரத்யக்ஷமாயிருக்கிறதென்றே. இதை மகனிடத்திலிருந்து தகப்பன் பிறப்பனே வென்கிற யுக்தியைக்கொண்டு மறுக்க முடியுமோ; இவ்வாறே காரிய காரணங்களில் ஒரு காரியம் மற்றொரு காரணத்திற்குக் காரியமாகின்றது, அந்த காரணம் மற்றொரு காரியத்திற்குக் காரணமாகின்றது, என்று சொல்லுகின்றோம்; இதை தூஷிப்பது எங்ஙனம்? பீஜாங்குரந்யாயம் ப்ரத்யக்ஷஸித்த மன்றோ வென்று ஸாங்கியர் கீழ்ச்சொல்லிய தூஷணங்களுக்கு ஸமாதானம் சொல்லுகின்றார். ஆதலால் இந்த சமாதானத்தை இந்த சுலோகத்தால் தூஷிக்கின்றார். இந்த பீஜாங்குரந்யாயத்தை உதாகரணமாகக் காட்டுவதும் ஸங்கதமல்ல ; திருட்டாந்தமாவது விவாதப்படுகிற வாதிகளிருவராலும் ஒப்புக்கொள்ளப் பட்டதாயிருக்கவேண்டும். இந்த பீஜாங்குரந்யாயத்தை நாமொப்புக்கொள்ளவில்லை. நம்முடையமதத்தில் வாஸ்தவத்தில் ஒன்றுக்கும் பிறப்பில்லையன்றோ. ஆனதால் பீஜாங்குரங்களும் ஒன்றையொன்று என்கிற நியாயத்திலே பிறக்கவில்லை என்றுதான் எங்களபிப்பிராயம். ஆனதால் வாஸ்தவமாய் காரண காரியங்களுடைய பரம்பரையில் ஒன்றுக்கொன்று காரணமென்பதில் இந்த பீஜாங்குரங்களை திருட்டாந்தமாகக்காட்டுவது தக்கதல்லவன்றோ. இனி ப்ரத்யக்ஷத்திலிருப்பதை நீ ஒப்புக்கொள்ளாமல் போவதாலே ங்களுக்குக் குறையில்லை. மத்யஸ்தர்களால் ஒப்புக்கொள்ளப்படுகின்ற தன்றோ வென்றால்; இதுவும் தக்கதல்ல; ஏனென்றால் அனுதி யென்பதற்கு ப்ரத்யக்ஷத்தில் விதையும் முளையும் பிறக்கவுமழியவும் காண்கையால் விரோதமுண்டாகின்றதன்றோ. பீஜாங்குர பரம்பரை யனுதியென்றாலும், பரம்பரை யென்பது பீஜாங்குரங்களைவிட வேறல்லவன்றோ. ஆகையாலனுதி என்பதற்கு ஒருவித திருட்டாந்தமுமில்லாமையால் காரியகாரணங்க ளனுதியாய் ஒன்றையொன்று பிறப்பித்துக்கொண்டிருக்கிறன வென்பது பொய்யேயாம்.

௨௧. பூர்வாபராபரிஜ்ஞாநமஜாதே꞉பரிதீபகம் ।
ஜாயமாநாத்தி வை தர்மாத் கதம் பூர்வம் ந க்ருஹ்யதே ॥

౨౧. పూర్వాపరాపరిజ్ఞానమజాతేః పరిదీపకమ్ ।
జాయమానాద్ధి వై ధర్మాత్కథమ్పూర్వన్నగృహ్యతే॥

ஸ௦-ஹா. ஆக காரிய காரணங்களுக்கு முன்பின் னென்கிற நியமங் கூடாமையால், பிறப்பில்லை என்பது விளக்கப்பட்டது. காரியம் பிறப்பது கண்கண்டதாயிருக்கப் பிறப்பில்லை என்னக் கூடுமோவென்றால் ; இது காரியமாயி னிது பிறப்பது வாஸ்தவமாகும். பிறப்பது வாஸ்தவமாகில் காரணங் காணப்பட வேண்டுமென்றோ. அப்படி காணப்படாமையால் உத்பத்தி பொய்யேயாம். ஆகையா லத்வைதபக்ஷமே பிறராலும் விளக்கப்பட்டது.

௨௨. ஸ்வதோ வா பரதோ வாபி ந கிஞ்சித்வஸ்து ஜாயதே ।
ஸதஸத்ஸதஸத்வாபி ந கிஞ்சித்வஸ்து ஜாயதே ॥

౨౨. స్వతోవాపరతోవాపినకిఞ్చిద్వస్తుజాయతే ।
స దస త్సదస ద్వాపినకిఞ్చిద్వస్తుజాయతే॥

ஸ௦-ஹா. இந்த காரணத்தாலும் வாஸ்தவத்தில் பிறப்பில்லை என்பது விளங்கும். வாஸ்தவத்தில் பிறப்புண்மையானது என்று சொல்லுகிற வாதியை நாம் சில கேள்விகள் கேழ்க்கின்றோம். அவையாவன—பிறக்கும் பொருள் தானே பிறக்கின்றதா? மற்றொன்றால் பிறக்கின்றதா ? தன்னாலும் மற்றொன்றாலுமாகக் கலந்து பிறக்கின்றதா ? பிறப்பது ஸத்தான பொருளோ ? அஸத்தான பொருளோ? ஸத்துமஸத்து மாகாத பொருளோ? என்பவையாம். இவற்றுள், ஒன்றுங்கூடாது. தன்னால்தான் பிறப்பது

கூடுமோ; தான் பிறப்பதற்குமுன் தானில்லாமையால் தனக்குத் தான் காரணமாகக் கூடாது. ஒரு கடமானது அந்த கடமாகிய தன்னாலே பிறக்குமோ; மற்றொன்றாலும் பிறவாது. படமென்கிற வஸ்திரத்திலிருந்து கடமென்கிற குடமுண்டாகுமோ? மற்றொன்று லுண்டாகுமாயி னவ்வாறுண்டாகாம லிருப்பதற்குக் காரணம் யாது? ஒரு ஜாதியா யிருக்கவேண்டுமென்றாலும் குடத்திலிருந்து குடமும் வஸ்திரத்திலிருந்து வஸ்திரமு முண்டாகின்றதோ இல்லையன்றே. ஆகையால் மற்றொன்றாலும் பிறவாது இவ்விரண்டுங் கூடாதபோது இரண்டினாலும் பிறக்கிறதென்பது கூடப்போகின்றதோ. ஆகையால் மிகவும் விரோதமாகையால் தன்னாலும் மற்றொன்றாலும் கூடி யுண்டாகிறதென்பதும் சேராது. குடம் வஸ்திரம் இவை இரண்டாலும் குடமாவது வஸ்திரமாவது உண்டாகின்றதோ; இனி, மண்ணிலிருந்து கடமென்கிற குடம் பிறக்கின்றது. தகப்பனிடத்திலிருந்து மகன் பிறக்கின்றான். இவற்றை இல்லையென்று சொல்லப்போமோ; ஆனதால் இதற்கு வழிசொல்ல வேண்டுமென்றால் அவ்வாறு உலகத்தில் சொல்லுவதொழிய வாஸ்தவத்தில் பிறப்பதில்லை. இவ்வாறு சொல்லுவது மூடத்தனத்தாலே என்பது விவேகிகள், பரீக்ஷித்துப் பார்ப்பதால் வெளியாகின்றது. உலகத்தில் பிறந்தது என்கிற சொல்லால் சொல்லப்படுவது மெய்யோ; பொய்யோ; என்று ஆராயப்படுகின்றது. ஆராய்ந்தறிந்தபோது இந்த பிறப்பு சொல்லினால் மாத்திரமேயன்றி உண்மையல்லவென்று விளங்குகின்றது. ஆகையால் குடம் மகன் எனப்படுகிறவற்றில் ஒன்றும் பிறப்பதில்லை. ஸத்தாயிருந்தால் பிறக்கவேண்டுவதில்லை. முன்னமே ஸத்தாயிருக்கின்றதன்றே; தைத்தான மண்முதலியவை பிறக்கின்றதோ; அஸத்தாயின் பிறப்பதுகூடுமோ இல்லாதது உண்டாகுமோ; இல்லாத முயற்கொம்புண்டாகுமோ. ஸதஸத்தென்றால் விரோதமாகையாலே பிறவாது. ஆக ஒன்றும் பிறப்பதில்லை என்பது ஸித்தம். இனி க்ஷணிகவாதிகளுக்கு ஒன்றுமே கூடாததாயிற்று. இதற்கு சுருதி "வாசாரம் பணம்" என்பதாம். இதற்குப் பொருள் வ்யவஹாரமேயன்றி பிறப்பது மெய்யல்லவென்று.

௨௩. 𑌹𑍇𑌤𑍁𑌰𑍍𑌨 𑌜𑌾𑌯𑌤𑍇𑌨𑌾𑌦𑍇𑌃 𑌫𑌲𑌞𑍍𑌚𑌾𑌪𑌿 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌤𑌃।
𑌆𑌦𑌿𑌰𑍍𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 𑌯𑌸𑍍𑌯 𑌤𑌸𑍍𑌯 𑌹𑍍𑌯𑌾𑌦𑌿𑌰𑍍𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇॥

౨౩. హేతుర్న జాయతేనాదేః ఫలఞ్చాపి స్వభావతః ।
ఆదిర్న విద్యతే యస్య తస్య హ్యాదిర్న విద్యతే॥

ஸ0-ஹா. காரியங் காரணம் இவற்றை அநாதியென்று ஒப்புக்கொள்ளுகிறவனுக்கு காரணத்திற்காவது காரியத்திற்காவது, காரியத்திலிருந்தாவது காரணத்திலிருந்தாவது பிறப்பில்லை. ஸ்வபாவத்தாலு மிவ்விரண்டும் பிறப்பதில்லை. ஆதியில்லாத பொருளுக்குப் பிறப்புண்டோ; ஆகையா லிவற்றிற்குப் பிறப்பில்லை என்பதே உன்னா லொப்புக்கொள்ளப்பட்டதாயிற்று.

௨௪. 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌪𑍍𑌤𑍇𑌃 𑌸𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌤𑍍𑌵𑌮𑌨𑍍𑌯𑌥𑌾 𑌦𑍍𑌵𑌯𑌨𑌾𑌶𑌤𑌃।
𑌸𑌂𑌕𑍍𑌲𑍇𑌶𑌸𑍍𑌯𑍋𑌪𑌲𑌬𑍍𑌧𑍇𑌶𑍍𑌚 𑌪𑌰𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌾𑌸𑍍𑌤𑌿𑌤𑌾 𑌮𑌤𑌾॥

౨౪. ప్రజ్ఞప్తేస్సనిమిత్తత్వమన్యథాద్వయనాశతః ।
సంక్లేశస్యోపలబ్ధేశ్చపరతంత్రాస్తితామతా॥

ஸ0-ஹா. வஸ்துக்களுக்கு வாஸ்தவத்தில் உத்பத்தி கூடாமையால், நித்யமாகிய ஜ்ஞானமே தத்வமென்று முன் சொல்லப்பட்டது; இற்கு வஸ்துக்களை பரமார்த்தமென்றுகொள்ளுகிற மதஸ்தர் இந்தசுலோகத்தில் தூஷணஞ்சொல்லுகின்றார்கள். இந்தஜ்ஞானமானது வஸ்துவைப் பற்றியதாகின்றது அறியப்படும் வஸ்துவில்லாதபோது அறிவுக்கு ஸத்தைகூடுமோ; நிர்விஷயமாக ஜ்ஞானத்தைக் கண்டதில்லையன்றே. இனிஜ்ஞானமேவ

ஸ்துவாகத்தோற்றுகின்றதென்றாலும் நாநாரூபமாகத் தோற்றுவதுகூடுமோ; ஒருஜ்ஞாந
த்திற்கு அனேக ஆகாரங் கூடாதன்றோ. இனி உபாதியினால் பலவித ஆகாரந் தோற்று
கின்றதென்றாலும், ஜ்ஞாநத்தைவிட வேறான உபாதிகளை ஒப்புக்கொள்ள வேண்டுகின்
றமையால் ஜ்ஞாநமே தத்வம், மற்றவை பொய்யென்று சொல்லப்போகாது. இந்த
விசித்திர ஜ்ஞாநம் ப்ரத்யக்ஷ ஸித்தமாகையா லிதை இல்லை என்பது ஸாத்யமன்று.
ஆகையால் நாங்கள் சொல்லுகிறபடி வஸ்துக்களும் பரமார்த்தங்களேயாம். இதுவு
மன்றி, நெருப்புமுதலிய வஸ்துக்கள் உஷ்ணம் முதலியவற்றால் துன்பத்தை விளக்
கின்றன. சந்தநம்முதலியவை கந்தம் முதலியவற்றால் இன்பத்தை விளக்கின்றன.
இதுவும் ப்ரத்யக்ஷமா யிருக்கின்றது. ஆகையால் அநேக வஸ்துக்கள் பரமார்த்தங்க
ளென்று கொள்ளவேண்டும். ஒரு ஜ்ஞாநமேயாயின் ஸுகமாயே தோற்றவேணும். அல்
லது துன்பமாயே தோற்றவேணும் இரண்டுவிதமாயு மொருவஸ்து தோற்றாது. ஆகை
யால் த்வைதவாதம் யுக்தமேயாகின்றது.

௨௫. 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌪𑍍𑌤𑍇𑌃 𑌸𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌤𑍍𑌵𑌮𑌿𑌷𑍍𑌯𑌤𑍇 𑌯𑍁𑌕𑍍𑌤𑌿𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌤𑍍 ।
𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌸𑍍𑌯𑌾𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌤𑍍𑌵𑌮𑌿𑌷𑍍𑌯𑌤𑍇 𑌭𑍂𑌤𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌤𑍍 ॥

౨౫. ప్రజ్ఞప్తేస్సనిమిత్తత్వమిష్యతేయుక్తిదర్శనాత్ ।
నిమిత్తస్యానిమిత్తత్వమిష్యతేభూతదర్శనాత్ ॥

ஸம்-ஸா. நீசெய்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகின்றோம். யுக்தியினா
லன்றோ நாநா வஸ்துக்களையு மொப்புக் கொள்ள வேணுமென்றாய். நீ சொல்லிய படி
யுக்தியினால் ஜ்ஞாநமே தத்வமென்று ஸித்திக்கு மாயின், அதையு மொப்புக் கொள்ள
வேணுமன்றோ. பரமார்த்தத்தில் நிரூபித்துப் பார்க்கும்போது இந்த த்வைத வஸ்துக்
களெல்லாம் பொய் என்றே விளங்குகின்றது. காரணமாகிய மண்ணை விடவேறாய் காரி
யமாகிய கடமொன் றுண்டோ. காரணமாகிய நூலைவிட காரியமாகிய வஸ்திர மொன்
றுண்டோ, இப்படியே அந்தநூலும் தனக்குக் காரணமான பஞ்சை விட வேறானதோ;
ஆனதால் காரணத்தைவிட காரியம் வேறில்லை என்பது விளங்கினமையால் ஸர்வ
காரணமான ஜ்ஞாநத்தைவிட மற்றொன்றும் வாஸ்தவமில்லை. ஆகையால் யுக்தியுடைய
மத மொப்புக்கொள்ளத்தக்க தென்கிற நிலையில் நிற்பாயானா லத்வைத மதத்தை நீயே
யொப்புக்கொள்வாய். நீசொன்ன ப்ரத்யக்ஷங்களெல்லாம் பாமர ஜனங்களுக்குண்டாவ
தேயன்றி தத்வஜ்ஞாநிக்கல்ல. ஆகையால், ஜ்ஞாநமே பரமார்த்தம். மற்றவை பொய்
யென்பது எந்த யுக்திக்கும் விருத்தமல்ல. பாமரஜனங்களுக்கு கயிற்றில் பாம்புபோல்
த்வைதம் தோற்றுகிறதென்று பலமுறை சொன்னோம்.

பதாந்வயார்த்தபேதங்கள்.

பூததர்சநாத், என்கிற விடத்தில் அபூததர்சநாத் என்றும் பூததர்சநா
த் என்றும் இரண்டு ப்ரகாரமாக பதம்பரிக்கப் பட்டிருக்கின்றது. இவ்விர
ண்டு விதமான பதங்களுக்கும் சேர்த்து. பாஷ்யத்தில் கருத்தெழுதப்பட்ட
து. இரண்டு மிரண்டு பொருளைக் கூறுகின்றமையால் இரஜ்ஜுஸர்ப்ப த்ரு
ஷ்டாந்தமும் நூல் வஸ்திரங்களின் த்ருஷ்டாந்தமும் பெறப்பட்டது.

௨௬. 𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌨 𑌸𑌂𑌸𑍍𑌪𑍃𑌶𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌂 𑌨𑌾𑌰𑍍𑌥𑌾𑌭𑌾𑌸𑌂 𑌤𑌥𑍈𑌵 𑌚 ।
𑌅𑌭𑍂𑌤𑍋 𑌹𑌿 𑌯𑌤𑌶𑍍𑌚𑌾𑌰𑍍𑌥𑍋 𑌨𑌾𑌰𑍍𑌥𑌾𑌭𑌾𑌸𑌸𑍍𑌤𑌤𑌃 𑌪𑍃𑌥𑌕𑍍 ॥

౨౬. చిత్తన్నసంస్పృశత్యర్థంనార్థాభాసన్తథైవచ ।
అభూతోహియతశ్చార్థోనార్థాభాసస్తతఃపృథక్ ॥

ஸ௦-ஹா. இங்ஙனம் வஸ்துக்களெல்லாம் பொய்யென்பது ஸித்தமாகையால் சித்தமென்கிற அந்தக்கரணமானது வாஸ்தவத்தில் விஷயங்களென்கிற வஸ்துககளோடு ஸம்பந்தப்பட்டதல்ல. ஸவப்நத்தில் தோற்றுகிற வஸ்துக்களைப்போலவே ஜாக்ரத் தசையில் தோற்றுகிற விஷயங்களையும் நெஞ்சு தொடுகிறதில்லை. ஸ்வப்நத்தில் போலவே ஜாகரத சையிலும் வஸ்துக்களெல்லாம் பொய்யேயன்றோ. இதுவுமன்றி இந்தவிஷயா பாஸங்களெல்லாம் சித்தமென்கிற நெஞ்சைவிட வேறானதல்ல. இந்தசித்தமே வஸ்துக்களாய் காணப்படுகின்றது.

௨௭. 𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌂𑌨𑌸𑌦𑌾𑌚𑌿𑌤𑍍𑌤𑌂𑌸𑌂𑌸𑍍𑌪𑍃𑌶𑌤𑍍𑌯𑌧𑍍𑌵𑌸𑍁𑌤𑍍𑌰𑌿𑌷𑍁।
𑌅𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑍋𑌵𑌿𑌪𑌰𑍍𑌯𑌾𑌸𑌃𑌕𑌥𑌂𑌤𑌸𑍍𑌯𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿॥

౨౭. నిమిత్తన్న సదాచిత్తం సంస్పృశత్యధ్వసుత్రిషు ।
అనిమిత్తో విపర్యాసః కథన్తస్య భవిష్యతి॥

ஸ௦-ஹா. கீழ்சுலோகத்தில் சொல்லிய ப்ரகாரம் இந்தகடாதி ஜ்ஞானங்களை ப்ராந்தி என்றால், ப்ராந்தி யதார்த்த ஜ்ஞானத்தாலே பிறக்கவேணு மாகையால் இந்த ஜ்ஞானத்தைப்போல் யதார்த்த ஜ்ஞாநமு முண்டென்பதுநிச்சயம். ஆக, அந்தயதார்த்த ஜ்ஞாநத்தில் விஷயமாகியகடாதிகள் மெய்யேயாமாகையால் ஜ்ஞாநத்தை யொழிந்தமற்றவை பொய்யென்று சொல்வது கூடாதென்று வருகிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதாநம் சொல்லுகின்றார். ஒருகாலத்திலும் நெஞ்சானது விஷயங்களைப் பற்றுகிறதில்லை. ஆகையால் பூதபவிஷ்யத்வர்தமாந காலங்கள் மூன்றிலும் ஜ்ஞாநகோசர வஸ்துக்கள் பொய்யேயாம். வஸ்துஸம்பந்த மில்லாமையால் எப்போதும் யதார்த்த ஜ்ஞாநமுண்டாகாது. இதற்குக்கருத்து ப்ராந்திபிறந்தால் யதார்த்த ஜ்ஞாநமிருக்கவேண்டிய நியமமில்லை. அவித்யையினால் ப்ரமம் வருகிறதென்று ஒப்புக்கொள்ளுகின்றோம். ஆனதால் நீ சொல்வது யுக்தமல்லவென்பதாம்.

௨௮. 𑌤𑌸𑍍𑌮𑌾𑌨𑍍𑌨𑌜𑌾𑌯𑌤𑍇𑌚𑌿𑌤𑍍𑌤𑌂𑌚𑌿𑌤𑍍𑌤𑌦𑍃𑌶𑍍𑌯𑌂𑌨𑌜𑌾𑌯𑌤𑍇।
𑌤𑌸𑍍𑌯𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿𑌯𑍇𑌜𑌾𑌤𑌿𑌂𑌖𑍇𑌵𑍈𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿𑌤𑍇𑌪𑌦𑌮𑍍॥

౨౮. తస్మాన్న జాయతే చిత్తం చిత్తదృశ్యన్న జాయతే।
తస్య పశ్యంతి యే జాతిం ఖే వై పశ్యంతి తే పదమ్॥

ஸ௦-ஹா. கடம் படம்முதலிய வஸ்துக்களை இல்லை என்பது அத்வைதிகளுக்கு ஸம்மதமாகையால் சித்தவிகாரமே இவை எல்லாமென்கிற பௌத்தபக்ஷத்தைக்கொண்டுபாஹ்யவஸ்து வாதிகளான த்வைதிகளை நிரஸித்தார். இனிசித்தமும் பிறப்பதில்லை என்றுபௌத்தனை தூஷிக்கின்றார். சித்தமும் ஜந்மத்தையடைவதில்லை. சித்தத்தால் காணப்படுகிற வஸ்துக்களும் ஜந்மத்தை யடைவதில்லை. இப்படியிருக்க, சித்தத்தை ஜந்மமுடையதென்றுகூறுவது ஆகாயாத்தில் பறவையின் காலடியைக்கண்டேனென்று சொல்லுகிற வார்த்தையைப்போல் பொய்யானது. சூந்யவாதி சொல்லும்வார்த்தை ஆகாயத்தைக்கையால் பிடித்துவிட்டே னென்பதுபோல் மிகவும் பொய்யானது.

௨௯. 𑌅𑌜𑌾𑌤𑌂𑌜𑌾𑌯𑌤𑍇𑌯𑌸𑍍𑌮𑌾𑌦𑌜𑌾𑌤𑌿𑌃𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌸𑍍𑌤𑌤𑌃।
𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑍇𑌰𑌨𑍍𑌯𑌥𑌾𑌭𑌾𑌵𑍋𑌨𑌕𑌥𑌂𑌚𑌿𑌦𑍍𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿॥

౨౯. అజాతం జాయతే యస్మాదజాతిః ప్రకృతిస్తతః ।
ప్రకృతేరన్యథాభావో న కథంచిద్భవిష్యతి॥

ஸ௦-ஹா. ஆக, ப்ரம்மம் அஜமென்று ஸித்தித்தமையால் உத்பத்திமுதலியவிகாரமில்லாமையால் அதற்கு ஜந்மமில்லை. மற்றவைபொய்யாகையா லதற்கு ஜந்மமில்லை

ப்ரக்ருதிமாறுதென்பது ஸித்தமன்றே. ஆனதால் கடம்முதலிய வஸ்துக்களெல்லாம் பொய். ப்ரம்மமேபரமார்த்தமென்று நிச்சயிக்கப்பட்டது.

௩௦. 𑌅𑌨𑌾𑌦𑍇𑌰𑌨𑍍𑌤𑌵𑌤𑍍𑌤𑍍𑌵𑌂𑌚𑌸𑌂𑌸𑌾𑌰𑌸𑍍𑌯𑌨𑌸𑍇𑌤𑍍𑌸𑍍𑌯𑌤𑌿।
𑌅𑌨𑌨𑍍𑌤𑌤𑌾𑌚𑌾𑌦𑌿𑌮𑌤𑍋𑌮𑍋𑌕𑍍𑌷𑌸𑍍𑌯𑌨𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿॥

౩౦. అనాదేరంతవత్త్వంచసంసారస్యనసేత్స్యతి।
అనంతతాచాదిమతో మోక్షస్యనభవిష్యతి॥

ஸா௦ஹா. இனி ஸம்ஸாரம் மோக்ஷம் இவற்றைமெய்யென்று ஒப்புக்கொண்டு, ஸம் ஸாரத்தை யனாதியென்றும் மோக்ஷத்தை அழிவில்லாததென்றும் சொல்லுகிறவாதிகள் தூஷிக்கப்படுகிறார்கள். அனாதியாகியவஸ்து அழியாதென்கிற நியமமுண்டாகையால், ஸம்ஸாரமழியாதாம். ஆதியுடையவஸ்து அழிவுடையதாகையால் மோக்ஷமேன்பது ஆதியுடையதாகையால் அழிவுடையதாம். ஆகையால் பந்தமோக்ஷங்கள் பொய்யென் கிற அத்வைதபக்ஷமே யுக்தம். ஜ்ஞானம் பிறந்தபோது மோக்ஷமுண்டாகிறதென்று மோக்ஷத்தை ஆதியுடையதாக ஒப்புக்கொள்ளுகிறார்களன்றே. இனி சிலயுக்திகளைக் கொண்டு ஸாதிக்கப்பார்த்தாலும் அவைமுன்னே கண்டிக்கப்பட்டவை என்றறிக. அவை யாவன, பீஜாங்குரந்யாய முதலியவையாம்.

௩௧. 𑌆𑌦𑌾𑌵𑌨𑍍𑌤𑍇𑌚𑌯𑌨𑍍𑌨𑌾𑌸𑍍𑌤𑌿𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑍇𑌽𑌪𑌿𑌤𑌤𑍍𑌤𑌥𑌾।
𑌵𑌿𑌤𑌥𑍈𑌸𑍍𑌸𑌦𑍃𑌶𑌾𑌸𑍍𑌸𑌨𑍍𑌤𑍋𑌵𑌿𑌤𑌥𑌾𑌇𑌵𑌲𑌕𑍍𑌷𑌿𑌤𑌾𑌃॥

௩௨. 𑌸𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌨𑌤𑌾𑌤𑍇𑌷𑌾𑌂𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑍇𑌵𑌿𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌦𑍍𑌯𑌤𑍇।
𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑌾𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑌵𑌤𑍍𑌤𑍍𑌵𑍇𑌨𑌮𑌿𑌥𑍍𑌯𑍈𑌵𑌖𑌲𑍁𑌤𑍇𑌸𑍍𑌮𑍃𑌤𑌾𑌃॥

౩౧. ఆదావంతేచయన్నాస్తి వర్తమానేపితత్తథా।
వితథైస్సదృశాస్సంతో వితథాఇవలక్షితాః॥

౩౨. సప్రయోజనతా తేషాంస్వప్నే విప్రతిపద్యతే।
తస్మాదాద్యంతవత్త్వేన మిథ్యైవఖలు తేస్మృతాః॥

ஸா-ஹா. இவ்விரண்டு சுலோகங்களும் வைதத்ய ப்ரகரணத்தில் வ்யாக்யானம் பண்ணப்பட்டவையாயினும் ஸம்ஸாரமும் பொய்மோக்ஷமும் பொய்யென்கிற இந்த ப்ரகரணத்தில் ப்ரஸங்கத்தால் படிக்கப்பட்டன.

பதாந்வயார்த்தபேதங்கள்.

ஸ்ரீ வேதார்த்த ஸங்கிரஹம் என்கிற பகவத்ராமாநுஜா சார்யர்செய்தரு ளியக்ரந்தத்தில் இந்த விஷயங்களெல்லாம் பூர்வபக்ஷமாய் விரிவாய்பேசப்பட் டிருக்கின்றன. இந்த இரண்டுசுலோகங்களும் வைததய ப்ர்கரணத்தில் ஆறு வது சுலோகமாகவும் ஏழாவது சுலோகமாகவுங் கூறப்பட்டிருக்கிறது.

௩௩. 𑌸𑌰𑍍𑌵𑍇𑌧𑌰𑍍𑌮𑌾𑌮𑍃𑌷𑌾𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑍇𑌕𑌾𑌯𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌰𑍍𑌨𑌿𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌤𑍍॥
𑌸𑌂𑌵𑍃𑌤𑍇𑌽𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌪𑍍𑌰𑌦𑍇𑌶𑍇𑌵𑍈𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂𑌦𑌰𑍍𑌶𑌨𑌂𑌕𑍁𑌤𑌃॥

౩౩. సర్వేధర్మామృషాస్వప్నే కాయస్యాంతర్నిదర్శనాత్।
సంవృతేస్మిన్ ప్రదేశేవై భూతానాందర్శనంకుతః॥

ஸா௦-ஹா. இந்த சுலோகங்களால் ‘‘நிமித்தஸ்யா நிமித்தத்வமிஷ்யதே பூததர்ச நாத்’’ என்கிறசுலோகத்தின் பொருள்விஸ்தரிக்கப்படுகிறது.

பதாந்வயார்த்தபேதங்கள்.

ஸ்வப்நத்தில் சரீரத்திற்குள் காரணப்படுகின்றமையாலந்த வஸ்துக்கள் பொய்யாவதுபோல ஜாக்ரத்தசையிலும் விராட்புருஷனுடையசரீரத்திற்குள் ஸகலவஸ்துக்களுங் காணப்படுகின்றமையாலவை எல்லாம் பொய்யாவதிலை யமில்லை. தக்கவிடமில்லாமையினுல் ஸ்வப்நம் பொய்யாகின்றதாயின், ப்ரம்மமும் நிரவயமாகையா லிடமுடையதன்று. ஆகையாலந்த ப்ரம்மத்தில்தோற்றுகிற ஸகலவஸ்துக்களும் பொய்யேயாம். ஆக எந்தஹேதுக்களால் ஸ்வப்நத்தைப் பொய்யென்கிருேமோ, அந்த ஹேதுக்கள் ஜாகரிதத்திலும் ஸமாநங்களாகையால் ஜகத்துபொய்யேயாகின்றது. ஜந்மம்முதலியதோஷங்களில்லாதஜ்ஞாநமாத்திரமாகிய ப்ரம்மமே ப்ரமார்த்தமென்பது ஸித்தமாயிற்று

௩௪. 𑌨 𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌦𑌰𑍍𑌶𑌨𑌂 𑌗𑌤𑍍𑌵𑌾 𑌕𑌾𑌲𑌸𑍍𑌯𑌾𑌨𑌿𑌯𑌮𑌾𑌦𑍍𑌗𑌤𑍌 ।
𑌪𑍍𑌰𑌤𑌿𑌬𑍁𑌦𑍍𑌧𑌶𑍍𑌚 𑌵𑍈 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌦𑍇𑌶𑍇 𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 ॥

౩౪. నయుక్తందర్శనంగత్వాకాలస్యానియమాద్గతౌ ।
ప్రతిబుద్ధశ్చవై సర్వస్తస్మిందేశేనవిద్యతే॥

𑌸𑌂-𑌹𑌾. ஸ்வப்நத்தில் தேசாந்தரம்போய்வஸ்துக்களைக் காண்பதில்லை. தேசகால நியமமில்லாமையாலென்க. இராமேச்வரத்திலிருப்பவன் அந்தக்ஷணத்தில் காசியிலிருப்பதாக ஸ்வப்நங்காண்கிருன். விழித்துக்கொண்டு பார்த்தால், தான் இந்தஸ்வப்நத்திற்குமுன் எவ்விடத்தி லிருந்தானே அவவிடத்திலிருக்கிருனே யன்றி, காசியிலிருப்பதில்லை. ஆகையால் ஸ்வப்நம் பொய்யாகிறது. இவ்வாறே ஸம்ஸாரமாகிற நித்திரை நீங்கிவிழுத்துக்கொண்டு பார்த்தால் ஸ்வபநமாகிய ஜசத்திலிருப்பதில்லை. ப்ரம்மஸ்வரூபத்திலிருக்கிருனன்ருே. ஆகையால் ஜகத்துபொய்யென்பதற்கு ஸந்தேஹமில்லை.

௩௫. 𑌮𑌿𑌤𑍍𑌰𑌾𑌦𑍍𑌯𑍈𑌃 𑌸𑌹 𑌸𑌂𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍍𑌯 𑌸𑌂𑌬𑍁𑌦𑍍𑌧𑍋 𑌨 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 ।
𑌗𑍃𑌹𑍀𑌤𑌂 𑌚𑌾𑌪𑌿 𑌯𑌤𑍍𑌕𑌿𑌂𑌚𑌿𑌤𑍍𑌪𑍍𑌰𑌤𑌿𑌬𑍁𑌦𑍍𑌧𑍋 𑌨 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 ॥

౩౫. మిత్రాద్యైస్సహసమ్మంత్ర్య సమ్బుద్ధోనప్రపద్యతే ।
గృహీతంచాపియత్కించిత్ప్రతిబుద్ధోనపశ్యతి॥

𑌸𑌂𑌹𑌾. ஸ்வப்நத்தில்தான் பலஸ்நேஹிதர்களோடு பேசிக்கொண்டிருக்கக்கண்டவன், விழித்துக்கொண்டால் அவர்களைக் காண்பதில்லை. ஸ்வப்நத்தில் கிடைத்த தநதாந்யங்களை விழித்துக்கொண்டபின் காண்பதில்லை. ஆதலால் ஸ்வப்நம்பொய்யாவதுபோல இந்த ப்ரபஞ்சத்திலுமிந்த குணமுண்டாகையாலிதுவும் பொய்யேயாம்.

௩௬. 𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑍇 𑌚𑌾𑌵𑌸𑍍𑌤𑍁𑌕𑌃 𑌕𑌾𑌯𑌃 𑌪𑍃𑌥𑌗𑌨𑍍𑌯𑌸𑍍𑌯 𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌤𑍍 ।
𑌯𑌥𑌾 𑌕𑌾𑌯𑌸𑍍𑌤𑌥𑌾 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌚𑌿𑌤𑍍𑌤𑌦𑍃𑌶𑍍𑌯𑌮𑌵𑌸𑍍𑌤𑍁𑌕𑌮𑍍 ॥

౩౬. స్వప్నే చావస్తుకః కాయః పృథగన్యస్యదర్శనాత్ ।
యథాకాయస్తథాసర్వంచిత్తదృశ్యమవస్తుకమ్॥

𑌸𑌂𑌹𑌾. ஸ்வப்நத்தி லொருசரீரத்தோடு தேசாந்தர ஸஞ்சரம செய்வேதாய் காண்கிருன். அப்போது அவனுடையசரீரம் அவனுடைய படுக்கையில் கிடக்கிறதன்ருே. ஆகையால் அந்த சரீரமஸத்தாகின்றது. அவ்வாறே சித்தமும் சித்தத்தால்காணப்படுகிற பொருள்களும். ஆகையாலதுபோல ஜாகரதசையிலும் சரீரம் முதலியவை யஸத்துக்களேயாம்.

௩௭. க்ரஹணாஜ்ஜாகரிதவத்தத்தேது: ஸ்வப்ந இஷ்யதே |
தத்தேதுத்வாத்து தஸ்யைவ ஸஜ்ஜாகரிதமிஷ்யதே ||

౩౭. గ్రహణాజ్జాగరితవత్తద్ధేతుః స్వప్న ఇష్యతే।
తద్ధేతుత్వాత్తు తస్యైవ సజ్జాగరితమిష్యతే॥

ஸ0-ஹா. ஜாகரிதத்தில் போலக் ரகிக்கப்படுகையால் ஸ்வப்நத்திற்கு ஜாகரிதம் ஹேதுவாகின்றது. ஸ்வப்நம், காண்பவனுக்கே ஸத்யமாய் தோற்றுவதுபோல ஜாகரிதமும் அவனுக்கே ஸத்தாகித் தோற்றுகின்றது.

௩௮. உத்பாதஸ்யாப்ரஸித்தத்வாதஜம் ஸர்வமுதாஹ்ருதம் |
ந ச பூதாதபூதஸ்ய ஸம்பவோஸ்தி கதஞ்சன ||

౩౮. ఉత్పాదస్యాప్రసిద్ధత్వాదజం సర్వముదాహృతమ్।
న చ భూతాదభూతస్య సమ్భవోఽస్తి కథంచన॥

ஸ0-ஹா. ஸ்வப்ந காரணமாகிய ஜாகரிதம் ஸ்வப்நம்போல பொய்யாகாது. ஜாகரிதம் ஸ்திரமாகக் காணப்படுகிறது ஸ்வப்நமோ க்ஷணிகமாகக் காணப்படுகிறது. இந்த பேதத்தால் ஜாகரிதம் ஸ்வப்நம்போல பொய்யல்லவென்றால்; இது அவிவேகிகள் சொல்லும் வார்த்தை. விவேகிகளுக்காயின் ஸ்வப்ந ஜாகரிதங்களில் ஒரு விசேஷமுமில்லை. ஆகையால் ஜாகரிதத்தில் வாஸ்தமாய் ஒன்றுக்கும் பிறப்புமுதலியவை யொன்றுமில்லை. ஜாகரிதத்திலிருந்து ஸ்வப்ந முண்டாகிறதென்று சொல்வதும் தக்கதல்ல. அஸத்திற்குப் பிறப்புண்டோ முயற்கொம்புண்டாகுமோ.

௩௯. அஸஜ்ஜாகரிதே த்ருஷ்ட்வா ஸ்வப்நே பஶ்யதி தந்மய: |
அஸத் ஸ்வப்நேபி த்ருஷ்ட்வா ச ப்ரதிபுத்தோ ந பஶ்யதி ||

౩౯. అసజ్జాగరితే దృష్ట్వా స్వప్నే పశ్యతి తన్మయః।
అసత్స్వప్నేఽపి దృష్ట్వా చ ప్రతిబుద్ధో న పశ్యతి॥

ஸ0-ஹா. ஸ்வப்நத்தில் ஜாகரதசையில் கயிற்றில் கற்பிக்கப்பட்ட பாம்புபோல் பொய்யாயிருக்கிற அனேக வஸ்துக்களைக் கண்டு அந்த பாவனையால் பாவிக்கப்பட்ட நெஞ்சையுடையவனாய், அந்த ரூபத்தை யடைந்து ஸ்வப்நத்தில் ஜாகரிதத்தில்போல அனேக வஸ்துக்களைக் காண்கிறான். ஸ்வப்நத்தில் கண்டவற்றை விழித்துக்கொண்டபோது பார்ப்பதில்லை. ஜாகரிதத்தில் கண்ட வஸ்துக்களிலும் சில வஸ்துக்களைக் காண்பதில்லை. ஆக இவ்வாறு ஸ்வப்ந ஜாகரிதங்களுக்கு காரிய காரணபாவத்தைக் கொள்ளவேணும். பரமார்த்தமாகிய ஜாகரிதத்தால் அபரமார்த்தமாகிய ஸ்வப்ந முண்டாகிறதென்று சொல்லப்போகாது.

௪௦. நாஸ்த்யஸத்தேதுகமஸத் ஸதஸத்தேதுகம் ததா |
ஸச்ச ஸத்தேதுகம் நாஸ்தி ஸத்தேதுகமஸத்குத: ||

౪౦. నాస్త్యసద్ధేతుకమసత్సదసద్ధేతుకం తథా।
సచ్చ సద్ధేతుకం నాస్తి సద్ధేతుకమసత్కుతః॥

ஸ0-ஹா. வாஸ்தவத்தில் கார்யகாரண பாவமென்ப தொன்றுக்குங் கூடாது. ஏனென்றால், அஸத்தாகிய முயற்கொம்பு முதலிய பொருள் அஸத்தாகிய ஆகாயத் தாமரை முதலியவற்றா லுத்பத்தி யடையாமையால் அஸத்திற்கு அஸத்து காரணமாகா

தென்பது விளங்கிற்று. ஸத்தாக த்வைதிகளால் ஒப்புக்கொள்ளப்படுகிற கடபடாதி வஸ்துக்கள் அஸத்தாகிய ஆகாயத்தாமரை முயற்கொம்பு முதலியவற்றால் உண்டாகா தென்று த்வைதிகளே ஒப்புக்கொள்ளுகின்றமையால் அஸத்து ஸத்துக்குக் காரணமாகா தென்பது விளங்கிற்று. ஸத்தாக த்வைதிக ளொப்புக்கொள்ளுகிற ஒரு கடத்தால் ஸத்தாக அவர்களால் ஒப்புக்கொள்ளப்படுகிற மற்றொரு கடமுண்டாகாமையினால் ஸத்து ஸத்திற்குக் காரணமாகாதென்பது விளங்கிற்று. ஆகையால் அஸத்துக்கு ஸத்து காரண மாமென்பதில்லை என்பது ஸித்தமன்றோ. ஆனதால், அஸத்தான ப்ரபஞ்சத்திற்கு ஸத்தான ப்ரம்மம் காரணமாமென்று சிலர் சொல்லுவது மிகவும் விருத்தமானது. முதற் பாதத்தால் சூந்யவாதி மதமும் இரண்டாம் பாதத்தால் தார்க்கிகர் மதமும் மூன்றாம் பாதத்தால் ஸாங்கியர்மதமும் தூஷிக்கப்பட்டது. இம்மூன்று மதங்களைப்போலவே மித்யையாகிய ப்ரபஞ்சத்திற்கு ஸத்யமான ப்ரமங் காரணமென்று சொல்லுகிற மதமும் தக்கதல்லவென்று கருத்து. ஆகையால் ஒருவிதத்தாலும் வாஸ்தவத்தில் காரியகாரண பாவங் கிடையாது என்பது ஒருவராலு மழிக்கமுடியாதது. வாஸ்தவத்தில் காரியகாரண பாவத்தை யொருவன் கண்டதுமில்லை. அதற்கு யுக்தியுமில்லை.

௪௧. 𑌵𑌿𑌪𑌰𑍍𑌯𑌾𑌸𑌾𑌦𑍍𑌯𑌥𑌾𑌜𑌾𑌗𑍍𑌰𑌦𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌾𑌨𑍍𑌭𑍂𑌤𑌵𑌤𑍍𑌸𑍍𑌪𑍃𑌶𑍇𑌤𑍍 ।
𑌤𑌥𑌾𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑍇𑌵𑌿𑌪𑌰𑍍𑌯𑌾𑌸𑌾𑌦𑍍𑌧𑌰𑍍𑌮𑌾𑌂𑌸𑍍𑌤𑌤𑍍𑌰𑍈𑌵𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 ॥

౪౧. విపర్యాసాద్యథాజాగ్రదచిన్త్యాన్భూతవత్స్పృశేత్ ।
తథాస్వప్నేవిపర్యాసాద్ధర్మాంస్తత్రైవపశ్యతి॥

ஸம்-ஹா. ஸ்வப்நம் ஜாகரம் இவற்றிற்குக் காரிய காரண பாவமில்லை என்பதை மீளவும் விளக்கிக்கொண்டு ஜகத்து பொய்யென்பதை ஸ்தாபிக்கின்றார். எவ்வாறு ஜாக்ரத்தசையிலும், ‘இப்படியுண்டாயிற்று’ ‘இக்காலத்திலுண்டாயிற்று’ என்று சிந்திக்கப் போகாத பொய்யான ரஜ்ஜு-ஸர்பமென்கிற கயிற்றுப் பாம்புமுதலிய வஸ்துக்களை விவேகமில்லாமையினால் வாஸ்தவமாகவே ப்ரமிக்கிறானோ அவ்வாறே ஸ்வப்நத்திலும் அவிவேகத்தினால் அநேக வஸ்துக்களை வாஸ்தவமாக ப்ரமிக்கிறான். இவ்வளவொழிய ஒன்றுக்கொன்று காரணமன்றென்று கருத்து.

௪௨. 𑌉𑌪𑌲𑌮𑍍𑌭𑌾𑌤𑍍𑌸𑌮𑌾𑌚𑌾𑌰𑌾𑌦𑌸𑍍𑌤𑌿𑌵𑌸𑍍𑌤𑍁𑌤𑍍𑌵𑌵𑌾𑌦𑌿𑌨𑌾𑌮𑍍 ।
𑌜𑌾𑌤𑌿𑌸𑍍𑌤𑍁𑌦𑍇𑌶𑌿𑌤𑌾𑌬𑍁𑌦𑍍𑌧𑍈𑌰𑌜𑌾𑌤𑍇𑌸𑍍𑌤𑍍𑌰𑌸𑌤𑌾𑌂𑌸𑌦𑌾 ॥

౪౨. ఉపలమ్భాత్సమాచారాదస్తివస్తుత్వవాదినామ్ ।
జాతిస్తుదేశితాబుద్ధైరజాతేస్త్రసతాంసదా॥

ஸம்-ஹா. ப்ரத்யக்ஷத்தாலு மாசாரத்தாலுமுண்மையென்று வஸ்துக்களை யொப்புக் கொண்டு அத்வைதஸ்வரூபத்தி லாத்மநாசம் வருமென்று பயந்தவருக்கு அவர்கள் மதிக்குச் சமாநமாய் பண்டிதர்களால் ஜந்மமுதலியவை கூறப்பட்டன. க்ரமத்தி லத்வைதத் திலிழிவார்களென்று என்று கீழ்சொலலப்பட்ட தன்றோ.

௪௩. 𑌅𑌜𑌾𑌤𑍇𑌸𑍍𑌤𑍍𑌰𑌸𑌤𑌾𑌂𑌤𑍇𑌷𑌾𑌮𑍁𑌪𑌲𑌮𑍍𑌭𑌾𑌦𑍍𑌵𑌿𑌯𑌨𑍍𑌤𑌿𑌯𑍇 ।
𑌜𑌾𑌤𑌿𑌦𑍋𑌷𑌾𑌨𑌸𑍇𑌤𑍍𑌸𑍍𑌯𑌨𑍍𑌤𑌿𑌦𑍋𑌷𑍋𑌽𑌪𑍍𑌯𑌲𑍍𑌪𑍋𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 ॥

౪౩. అజాతేస్త్రసతాంతేషాముపలమ్భాద్వియంతియే ।
జాతిదోషానసేత్స్యంతిదోషోఽప్యల్పోభవిష్యతి॥

ஸ௦-ஹா. எவர்கள் அத்வைதாத்ம ஸ்வரூபத்தை சாஸ்திரங்களா லறிந்து, ப்ரத்யக்ஷத்தால் த்வைதத்தைக் காண்கிறபடியாலும் ஆத்மநாசம் வருமென்கிற பயத்தாலும் த்வைதத்தை யடைகிறார்களோ அவர்களும் க்ரமத்தில் நற்கதியை யடைகின்றார்கள். அவர்களுக்கு அத்வைதத்தில் ச்ரத்தை யுண்டாகையால் அவர்களுக்கு ஜாதி தோஷங்கள் வாராவாம். வரினு மிகவும் ஸ்வல்பமாய் வரும். வந்தாலும் க்ரமத்தில் கழியும்.

௪௪. 𑌉𑌪𑌲𑌮𑍍𑌭𑌾𑌤𑍍𑌸𑌮𑌾𑌚𑌾𑌰𑌾𑌨𑍍𑌮𑌾𑌯𑌾𑌹𑌸𑍍𑌤𑍀𑌯𑌥𑍋𑌚𑍍𑌯𑌤𑍇 ।
𑌉𑌪𑌲𑌮𑍍𑌭𑌾𑌤𑍍𑌸𑌮𑌾𑌚𑌾𑌰𑌾𑌦𑌸𑍍𑌤𑌿𑌵𑌸𑍍𑌤𑍁𑌤𑌥𑍋𑌚𑍍𑌯𑌤𑍇 ॥

౪౪. ఉపలమ్భాత్సమాచారాన్మాయాహస్తీయథోచ్యతే ।
ఉపలమ్భాత్సమాచారాదస్తివస్తుతథోచ్యతే ॥

ஸ௦-ஹா. பேதப்பட்ட அனேக வஸ்துக்கள் ப்ரத்யக்ஷமாய் காணப்படுகின்றமையாலும் அந்தந்த வஸ்துக்களால் அந்தந்த காரியங்கள் பிறக்கின்றமையாலும் மெய்யேயாமென்று ஸாதிக்கமுடியாது. மாயையினாலுண்டாகிய பொய்யான வஸ்துக்களிலும் அவை யுண்டாகின்றமையாலென்க. மாயையினாலொரு யானையை ப்ரத்யக்ஷமாய்க் காண்கிறோம். அதின்மேலேறுகின்றோம் ஆயினும் அந்த யானை மெய்யாகுமோ. அப்படியே த்வைதமும் மெய்யாகாதென்றுணர்க.

௪௫. 𑌜𑌾𑌤𑍍𑌯𑌾𑌭𑌾𑌸𑌂𑌚𑌲𑌾𑌭𑌾𑌸𑌂𑌵𑌸𑍍𑌤𑍍𑌵𑌾𑌭𑌾𑌸𑌂𑌤𑌥𑍈𑌵𑌚 ।
𑌅𑌜𑌾𑌚𑌲𑌮𑌵𑌸𑍍𑌤𑍁𑌤𑍍𑌵𑌂𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌂𑌶𑌾𑌨𑍍𑌤𑌮𑌦𑍍𑌵𑌯𑌮𑍍 ॥

౪౫. జాత్యాభాసంచలాభాసంవస్త్వాభాసంతథైవచ ।
అజాచలమవస్తుత్వంవిజ్ఞానంశాన్తమద్వయమ్ ॥

ஸ௦-ஹா. பிறப்புடையதாயுங் க்ரியை யுடையதாயும் நாம ரூபங்களையுடையதாயும் தோற்றுகின்ற, பிறப்பு க்ரியை நாமரூபங்கள் இவை இல்லாதிருக்கின்ற ஜ்ஞாநஸ்வரூப சுத்தாத்வைத ப்ரம்மமே பரமார்த்தமாய் சாந்தமாய் ஸுகரூபமாயிருப்பது. மற்றவை பொய்யாய் விகாரியாய் துக்கமாயிருப்பனவென்றுணர்க.

௪௬. 𑌏𑌵𑌂𑌨𑌜𑌾𑌯𑌤𑍇𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑍇𑌵𑌂𑌧𑌰𑍍𑌮𑌾𑌅𑌜𑌾𑌃𑌸𑍍𑌮𑍃𑌤𑌾𑌃 ।
𑌏𑌵𑌮𑍇𑌵𑌵𑌿𑌜𑌾𑌨𑌨𑍍𑌤𑍋𑌨𑌪𑌤𑌨𑍍𑌤𑌿𑌵𑌿𑌪𑌰𑍍𑌯𑌯𑍇 ॥

౪౬. ఏవన్నజాయతేచిత్తమేవన్ధర్మాఅజాస్స్మృతాః ।
ఏవమేవవిజానన్తోనపతన్తివిపర్యయే ॥

ஸ௦-ஹா. கீழ்ச்சொல்லிய யுக்திகளால் சித்தமு முண்டாவதில்லை. ஆத்மாக்களுமுண்டாவதில்லை. ஆத்மாக்கள் நித்யர்களாகவே ப்ரம்மவித்துக்களா லெண்ணப்படுகிறார்கள். இப்படி யறிந்தவர் அவித்யையாகிய இருளடைந்த ஸமுத்திரத்தில் விழுந்தபியார். "தத்ரகோமோஹஃ கச்சோக ஏகத்வமநுபச்யதஃ" என்கிற மந்திரத்தில் அத்வைத ஜ்ஞாநமுடையவனுக்கு துன்பமில்லை யென்று சொல்லுகின்றதன்றோ.

௪௭. 𑌋𑌜𑍁𑌵𑌕𑍍𑌰𑌾𑌦𑌿𑌕𑌾𑌭𑌾𑌸𑌮𑌲𑌾𑌤𑌸𑍍𑌪𑌨𑍍𑌦𑌿𑌤𑌂𑌯𑌥𑌾 ।
𑌗𑍍𑌰𑌹𑌣𑌗𑍍𑌰𑌾𑌹𑌕𑌾𑌭𑌾𑌸𑌂𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌪𑌨𑍍𑌦𑌿𑌤𑌂𑌤𑌥𑌾 ॥

౪౭. ఋజువక్రాదికాభాసమలాతస్పన్దితంయథా ।
గ్రహణగ్రాహకాభాసంవిజ్ఞానస్పన్దితంతథా ॥

ஸ௦-ஹா. எவ்வாறு உல்க்கை என்கிற கொள்ளியானது தான் சலிப்பதினால் கோணலாயும் நேராயுந் தோற்றுகின்றதோ; அவ்வாறே ஜ்ஞாநஸ்ரூபமே வ்யத்யாஸத்தினால் அறிபவனாயும் அறியப்படும் பொருளாயுந் தோற்றுகின்றது.

௪௮. 𑌅𑌸𑍍𑌪𑌨𑍍𑌦𑌮𑌾𑌨𑌮𑌲𑌾𑌤𑌮𑌨𑌾𑌭𑌾𑌸𑌮𑌜𑌂𑌯𑌥𑌾 ।
𑌅𑌸𑍍𑌪𑌨𑍍𑌦𑌮𑌾𑌨𑌂𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌨𑌾𑌭𑌾𑌸𑌮𑌜𑌂𑌤𑌥𑌾॥

౪౮. అస్పన్దమానమలాతమనాభాసమజం యథా।
అస్పన్దమానం విజ్ఞానమనాభాసమజం తథా॥

ஸ௦-ஹா. அந்தகொள்ளியானது சலியாதபோது வளைதல் குவிதல் நீளுதல் முதலிய விகாரமடையாமலிருப்பதுபோல ஜ்ஞாநமும் அவித்யை நீங்கிசலியாதிருக்கும்போது நிர்விகாரமாய் கீழ்ச்சொன்ன பேதங்களின்றி விளங்குகின்றது.

௪௯. 𑌅𑌲𑌾𑌤𑍇𑌸𑍍𑌪𑌨𑍍𑌦𑌮𑌾𑌨𑍇𑌵𑍈𑌨𑌾𑌭𑌾𑌸𑌾𑌅𑌨𑍍𑌯𑌤𑍋𑌭𑍁𑌵𑌃।
𑌨𑌤𑌤𑍋𑌽𑌨𑍍𑌯𑌤𑍍𑌰𑌨𑌿𑌸𑍍𑌪𑌨𑍍𑌦𑌾𑌨𑍍𑌨𑌾𑌲𑌾𑌤𑌂𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑌨𑍍𑌤𑌿𑌤𑍇॥

౪౯. అలాతే స్పన్దమానే వై నాభాసా అన్యతో భువః।
న తతోఽన్యత్ర నిస్స్పన్దాన్నాలాతం ప్రవిశన్తి తే॥

ஸ௦-ஹா. இந்த கொள்ளிசலிக்கும்போது தோற்றிய வளைவுமுதலிய ஆபாஸங்கள் இது அசையும்போது மற்றொன்றிலிருந்து இந்த கொள்ளியிற் சேர்ந்தவையல்ல. இது சலியாதபோது இவை இதிலடங்கிப் போயினவென்று சொல்வதற்கில்லை. ஆனதால் தோற்றமேயாகின்றமையால் அந்த விகாராபாஸங்கள் பொய்யேயாகின்றன. அவ்வாறே இந்த ஜ்ஞாநத்தில் தோற்றுகிற ஜீவாபாஸம் முதலியவை எல்லாம் பொய்யேயாம்.

௫௦. 𑌨𑌨𑌿𑌰𑍍𑌗𑌤𑌾𑌅𑌲𑌾𑌤𑌾𑌤𑍍𑌤𑍇𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌭𑌾𑌵𑌯𑍋𑌗𑌤𑌃।
𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌽𑌪𑌿𑌤𑌥𑍈𑌵𑌸𑍍𑌯𑍁𑌰𑌾𑌭𑌾𑌸𑌸𑍍𑌯𑌾𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑌃॥

౫౦. న నిర్గతా అలాతాత్తే ద్రవ్యత్వాభావయోగతః।
విజ్ఞానేఽపి తథైవ స్యురాభాసస్యావిశేషతః॥

ஸ௦-ஹா. இந்த கொள்ளியிலுண்டாகிற விகாராபாஸங்கள் ஓரிடத்திலிருந்து வந்தன, ஓரிடத்திற்குப் போயின, என்று சொல்வதற்கில்லை. த்ரவ்யமாயின் ஒரு மனிதன் ஒரு வீட்டிலிருந்து புறப்பட்டு மற்றொரு வீடு சேர்ந்து அவ்விடத்திலிருந்து புறப்பட்டு மற்றோரிடஞ் சேருவதுபோல், வரவும் போகவுங் கூடும். இந்த வளைவு முதலிய வாகாராபாஸங்கள் த்ரவ்யமல்லவன்றோ. ஆனதாலென்க. இவ்வாறே விஜ்ஞாந ஸ்வரூபத்தில் தோற்றுகிற ஸகல பேதவிகாரங்களும் ஓரிடத்திலிருந்து வந்தவையுமல்ல மற்றோரிடத்திற்குப் போமவையுமல்லவென்றுணர்க. ஆகவே பொய்யென்பது விளங்குகின்றது.

௫௧. 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌸𑍍𑌪𑌨𑍍𑌦𑌮𑌾𑌨𑍇𑌵𑍈𑌨𑌾𑌭𑌾𑌸𑌾𑌅𑌨𑍍𑌯𑌤𑍋𑌭𑍁𑌵𑌃।
𑌨𑌤𑌤𑍋𑌽𑌨𑍍𑌯𑌤𑍍𑌰𑌨𑌿𑌸𑍍𑌪𑌨𑍍𑌦𑌾𑌨𑍍𑌨𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌂𑌵𑌿𑌶𑌨𑍍𑌤𑌿𑌤𑍇॥

௫௨. 𑌨𑌨𑌿𑌰𑍍𑌗𑌤𑌾𑌸𑍍𑌤𑍇𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌦𑍍𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌭𑌾𑌵𑌯𑍋𑌗𑌤𑌃 ।
𑌕𑌾𑌰𑍍𑌯𑌕𑌾𑌰𑌣𑌤𑌾𑌭𑌾𑌵𑌾𑌦𑍍𑌯𑌤𑍋𑌽𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌾𑌃𑌸𑌦𑍈𑌵𑌤𑍇॥

౫౧. విజ్ఞానే స్పన్దమానే వై నాభాసా అన్యతో భువః।
న తతోఽన్యత్ర నిస్స్పన్దాన్న విజ్ఞానం విశన్తి తే॥

౫౨. న నిర్గతా విజ్ఞానాత్తే ద్రవ్యత్వాభావయోగతః ।
కార్యకారణతాభావాద్యతోఽచింత్యాస్సదైవ తే ॥

ஸம்-ஹா. கொள்ளியோடு விஜ்ஞானம் ஸமானமேயாம். ஆயினும் விஜ்ஞானமெப்போதும், சலியாது. காரிய காரணபாவத்தில் சிந்திக்க முடியாமையால் ஸகல விகாரங்களும் பொய்யே யாகின்றன. எவ்வாறு வளைவுமுதலிய விகாரா பாசங்களில்லாத கொள்ளியில் வளைவு முதலிய விகாரங்கள் காணப்பட்டனவோ; அவ்வாறே பேதப்பட்ட விகாரங்கள் விஜ்ஞானத்திலில்லா விடினும் அவித்யையினு லிருப்பவைபோலக் காணப்பட்டன. ஆக, ஜகத்து பொய்யென்பது ஸாதிக்கப்பட்டது.

பதாந்வயார்த்தபேதங்கள்.

"அலாதேஸ் பந்தமானேவை" என்கிற (49 வது) சுலோகத்திலும், "நநிக்கதா அலாதாத்தே" என்கிற (50 வது) சுலோகத்திலும், கொள்ளியில் தோற்றுகிற விகாரங்கள் பொய்யென்பதிற் சொன்ன காரணங்களே, விஜ்ஞானத்தில் தோற்றுகிற பேதப்பட்ட தருமங்கள் பொய்யென்பதிலுமுண்டாயிருக்கின்றன வென்று அந்த சுலோகங்களிற் கூறிய தோஷங்களை இவ்விரண்டு சுலோகங்களிலுங் காட்டினுரென் றுணர்க.

௫௩. த்ரவ்யம் த்ரவ்யஸ்ய ஹேதுஸ்ஸ்யாதந்யதந்யஸ்ய சைவ ஹி ।
த்ரவ்யத்வமந்யபாவோ வா தர்மாணாம் நோபபத்யதே ॥

౫౩. ద్రవ్యం ద్రవ్యస్య హేతుస్స్యాదన్యదన్యస్య చైవ హి ।
ద్రవ్యత్వమన్యభావో వా ధర్మాణాం నోపపద్యతే ॥

ஸம்-ஹா. திரவ்யம் த்ரவ்யத்திற்குக் காரணமாம். குணம் குணத்திற்குக் காரணமாம். இந்த ஜீவாத்மாக்கள். த்ரவயமுமல்ல. குணங்களுமல்ல, ஆகையால் ஆத்மா ஒன்றுக்குங் காரணமல்ல. நித்யமாய் ஒன்றுயிருக்கின்றது. அவயவம் அவயவி என்கிற பேதங்களொன்று மில்லாத ஆத்மாவுக்கு ஒருவித விகாரமு மில்லை யென்ற தாயிற்று.

௫௪. ஏவம் ந சித்தஜா தர்மாஶ்சித்தம் வாபி ந தர்மஜம் ।
ஏவம் ஹேதுபலாஜாதிம் ப்ரவிஶந்தி மநீஷிண: ॥

౫౪. ఏవం న చిత్తజా ధర్మాశ్చిత్తం వాపి న ధర్మజమ్ ।
ఏవం హేతుఫలాజాతిమ్ప్రవిశంతి మనీషిణః ॥

ஸம்-ஹா. கீழ்ச்சொல்லிய காரணங்களால் சித்தமானது ஆத்மவிஜ்ஞானஸ்வரூபமே யாகையால் பேதப்பட்ட தருமங்கள் சித்தத்தாலுண்டானவையல்ல. சித்தமும் பேத தருமங்களா லுண்டாகியதன்று. எல்லாம் விஜ்ஞானத்தின் ஆபாஸங்களேயன்றே. இப்படியே, காரிய காரணங்களிலும் காரியத்தால் காரணமாவது காரணத்தால் காரியமாவது பிறப்பதில்லை என்று ஹேதுபலங்களென்கிற காரண காரியங்களுக்கு அஜாதியை (அதாவது - பிறப்பில்லாமை) புத்திமாங்களான ப்ரம்மவித்துகள் நிச்சயிக்கின்றார்கள். ஆக ஆத்ம ஸ்வரூபத்திற்குக் காரியகாரண பாவங் கூடாததேயாம்.

௫௫. யாவத்தேதுபலாவேஶஸ்தாவத்தேதுபலோத்பவ: ।
க்ஷீணே ஹேதுபலாவேஶே நாஸ்தி ஹேதுபலோத்பவ: ॥

౫౫. యావద్ధేతుఫలావేశస్తావద్ధేతుఫలోద్భవః ।
క్షీణే హేతుఫలావేశే నాస్తి హేతుఫలోద్భవః ॥

ஸo-ஹா. கீழ்ச்சொல்லியபடி தத்வஜ்ஞாநத்தில் நிலையுண்டாகி காரிய காரண பாவத்தைப் பொய்யென்றறிந்தவருக்கு இந்த ஸம்ஸார பரம்பரை நீங்குகின்றது. எவர் இதை மெய்யென்று ப்ரமிக்கிறார்களோ அவர்களுக்கு அந்த ப்ரமமுள்ளவரையில் ஸம்ஸார பந்தம் நீங்காது.

௫௬. 𑌯𑌾𑌵𑌦𑍍𑌧𑍇𑌤𑍁𑌫𑌲𑌾𑌵𑍇𑌶𑌸𑍍𑌸𑌂𑌸𑌾𑌰𑌸𑍍𑌤𑌾𑌵𑌦𑌾𑌯𑌤𑌃 |
𑌕𑍍𑌷𑍀𑌣𑍇 𑌹𑍇𑌤𑍁𑌫𑌲𑌾𑌵𑍇𑌶𑍇 𑌸𑌂𑌸𑌾𑌰𑌂 𑌨 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 ||

౫౬. యావద్ధేతుఫలావేశస్సంసారస్తావదాయతః ।
క్షీణే హేతుఫలావేశే సంసారం న ప్రపద్యతే ॥

ஸo-ஹா. நான் இப்போது உபாயாநுஷ்டானம்செய்கிறேன் இது காலாந்தரத்தில் பலிக்கப்போகிறது அப்போது நான் ஜீவித்திருந்து இந்த பலத்தை யநுபவிக்கப்போகிறேன். என்கிற ப்ரமம் நீங்குகிறவரையில் இந்த அவித்யாபந்தங் கழியாது.

௫௭. 𑌸𑌂𑌵𑍃𑌤𑍍𑌯𑌾 𑌜𑌾𑌯𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑌂 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌤𑍇𑌨 𑌵𑍈 |
𑌸𑌦𑍍𑌭𑌾𑌵𑍇𑌨 𑌹𑍍𑌯𑌜𑌂 𑌸𑌰𑍍𑌵𑌮𑍁𑌚𑍍𑌛𑍇𑌦𑌸𑍍𑌤𑍇𑌨 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌵𑍈 ||

౫౭. సంవృత్యా జాయతే సర్వం శాశ్వతం నాస్తి తేన వై ।
సద్భావేన హ్యజం సర్వముచ్ఛేదస్తేన నాస్తి వై ॥

ஸo-ஹா. இந்த ஸம்ஸாரமெல்லா மவித்யையினாலுண்டாகின்றதாகையால் மாறி மாறி யழிவது மாவதுமாய் பரம்பரையாய் வருகின்றது; ஆகையால்இது நித்யமல்ல. வாஸ்தவத்தில் பரமார்த்த ஸத்தாகியது ப்ரம்மமேயாம். ஆகையால், அஜ்ஞானிக்குஸம்ஸாரமுண்டாகுமென்று சொல்லியது தக்கதேயாமென்று கருத்து.

௫௮. 𑌧𑌰𑍍𑌮𑌾 𑌯 𑌇𑌤𑌿 𑌜𑌾𑌯𑌨𑍍𑌤𑍇 𑌜𑌾𑌯𑌨𑍍𑌤𑍇 𑌤𑍇 𑌨 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌤𑌃 |
𑌜𑌨𑍍𑌮 𑌮𑌾𑌯𑍋𑌪𑌮𑌂 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌸𑌾 𑌚 𑌮𑌾𑌯𑌾 𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 ||

౫౮. ధర్మా య ఇతి జాయంతే జాయంతే తే న తత్త్వతః ।
జన్మ మాయోపమం తేషాం సా చ మాయా న విద్యతే ॥

ஸo-ஹா. ப்ராந்தி யுடையவராகி அவித்யை யிலகப்பட்டுக்கொண்டு கிடக்கிறவர்களுக்கு ஆத்மாக்களென்றும் விஷயங்களென்று மெவையுண்டாகின்றனவோ; அவையெல்லாம் வாஸ்தவத்தி லுண்டானவையல்ல. மாயையினாலே யுண்டானவையாம். அந்த மாயையும் ஒரு வஸ்துவல்ல. அதுவும் பொய். மாயையென்றாலில்லை என்று பொருள் என்று கருத்து.

௫௯. 𑌯𑌥𑌾 𑌮𑌾𑌯𑌾𑌮𑌯𑌾𑌦𑍍𑌬𑍀𑌜𑌾𑌜𑍍𑌜𑌾𑌯𑌤𑍇 𑌤𑌨𑍍𑌮𑌯𑍋𑌽𑌙𑍍𑌕𑍁𑌰𑌃 |
𑌨𑌾𑌸𑍌 𑌨𑌿𑌤𑍍𑌯𑍋 𑌨 𑌚𑍋𑌚𑍍𑌛𑍇𑌦𑍀 𑌤𑌦𑍍𑌵𑌦𑍍𑌧𑌰𑍍𑌮𑍇𑌷𑍁 𑌯𑍋𑌜𑌨𑌾 ||

౫౯. యథా మాయామయాద్బీజాజ్జాయతే తన్మయోఽంకురః ।
నాసౌ నిత్యో న చోచ్ఛేదీ తద్వద్ధర్మేషు యోజనా ॥

ஸo-ஹா. கீழ்ச்சொல்லிய விஷயங்களுக்கு மாயையினால் ஜந்மமென்பதற்கு த்ருஷ்டாந்தங் கூறுகின்றார். உலகத்தில் மாயாவியானவன் ஒரு க்ஷணத்தில் மாஞ்செடியை யுண்டாக்கி அதில் பூக்களை பலங்களை யுண்டாக்குகிறான் உடனே அது அழிந்துவிடுகின்றது. ஆகையா லவ்விடத்தில் வாஸ்தவமாய் ஒன்றும் பிறக்கவுமில்லை. அழியவுமில்லை மாயையினா லப்படி தோற்றியது. அதுபோலவே இந்த பேதப்பட்ட வஸ்துக்

களென்கிற விஷயங்களுக்கும், வாஸ்தவத்தில் ஜந்மம் முதலியவை யொன்றுமில்லை. ஆகையினாலெல்லாம் மாயையினாலென்றுணர்க.

௬௦. 𑌨𑌾𑌜𑍇𑌷𑍁𑌸𑌰𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑍇𑌷𑍁𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑌾𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑌾𑌭𑌿𑌧𑌾 |
𑌯𑌤𑍍𑌰𑌵𑌰𑍍𑌣𑌾𑌨𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇𑌵𑌿𑌵𑍇𑌕𑌸𑍍𑌤𑌤𑍍𑌰𑌨𑍋𑌚𑍍𑌯𑌤𑍇 ||

౬౦. నాజేషుసర్వధర్మేషుశాశ్వతాశాశ్వతాభిధా।
యత్రవర్ణానవర్తంతేవివేకస్తత్రనోచ్యతే॥

ஸ௦-ஹா. பரமார்த்த பூதர்களாய் நிர்விகாரிகளாய் நித்யர்களாயிருக்கிற ஆத்மஜ்ஞப்தி என்கிற ரஸமாத்திரஸ்வரூபர்களா யிருக்கிற ஜீவாத்மாக்களிடத்தில் நித்யாநித்ய விபாகமில்லை. பதங்களால் சொல்லப்படமாட்டார்கள். இது இப்படிப்பட்டதென்கிற வ்யவஹாரங் கிடையாது. "யதோவா சோநிவர்தந்தே" என்று வாக்கினால் சொல்லப் படமாட்டாதென்று சுருதியினால் வெளியிடப்பட்டதன்றோ.

௬௧. 𑌯𑌥𑌾𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑍇𑌦𑍍𑌵𑌯𑌾𑌭𑌾𑌸𑌂𑌚𑌿𑌤𑍍𑌤𑌂𑌚𑌲𑌤𑌿𑌮𑌾𑌯𑌯𑌾 |
𑌤𑌥𑌾𑌜𑌾𑌗𑍍𑌰𑌦𑍍𑌦𑍍𑌵𑌯𑌾𑌭𑌾𑌸𑌂𑌚𑌿𑌤𑍍𑌤𑌂𑌚𑌲𑌤𑌿𑌮𑌾𑌯𑌯𑌾 ||

௬௨. 𑌅𑌦𑍍𑌵𑌯𑌂𑌚𑌦𑍍𑌵𑌯𑌾𑌭𑌾𑌸𑌂𑌚𑌿𑌤𑍍𑌤𑌂𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑍇𑌨𑌸𑌂𑌶𑌯𑌃 |
𑌅𑌦𑍍𑌵𑌯𑌂𑌚𑌦𑍍𑌵𑌯𑌾𑌭𑌾𑌸𑌂𑌤𑌥𑌾𑌜𑌾𑌗𑍍𑌰𑌨𑍍𑌨𑌸𑌂𑌶𑌯𑌃 ||

౬౧. యథాస్వప్నేద్వయాభాసంచిత్తంచలతిమాయయా।
తథాజాగ్రద్ద్వయాభాసంచిత్తంచలతిమాయయా॥

౬౨. అద్వయంచద్వయాభాసంచిత్తంస్వప్నేనసంశయః।
అద్వయంచద్వయాభాసన్తథాజాగ్రన్నసంశయః॥

ஸ௦-ஹா. விஞ்ஞானமாத்திரரூபமாகிய இந்த ஆத்மஸ்வரூபத்தில் பரமார்த்தத்தில் வாகிந்திரியப்ரவ்ருத்தியில்லை. அதுப்ரமம் இதை யுணர்த்துவதற்கு இந்த சுலோகங்களிவ்விடத்திலும் படிக்கப்பட்டன.

௬௩. 𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑌦𑍃𑌕𑍍𑌪𑍍𑌰𑌚𑌰𑌨𑍍𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑍇𑌦𑌿𑌕𑍍𑌷𑍁𑌵𑍈𑌦𑌶𑌸𑍁𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌨𑍍 |
𑌅𑌣𑍍𑌡𑌜𑌾𑌨𑍍𑌸𑍍𑌵𑍇𑌦𑌜𑌾𑌨𑍍𑌵𑌾𑌪𑌿𑌜𑍀𑌵𑌾𑌨𑍍𑌪𑌶𑍍𑌯𑌤𑌿𑌯𑌾𑌨𑍍𑌸𑌦𑌾 ||

௬௪. 𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑌦𑍃𑌕𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌦𑍃𑌶𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑍇𑌨𑌵𑌿𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇𑌤𑌤𑌃𑌪𑍃𑌥𑌕𑍍 |
𑌤𑌥𑌾𑌤𑌦𑍍𑌦𑍃𑌶𑍍𑌯𑌮𑍇𑌵𑍇𑌦𑌂𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑌦𑍃𑌕𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑌿𑌷𑍍𑌯𑌤𑍇 ||

౬3. స్వప్నదృక్ప్రచరన్స్వప్నేదిక్షువైదశసుస్థితాన్।
అండజాన్స్వేదజాన్వాపిజీవాన్పశ్యతియాన్సదా॥

౬౪. స్వప్నదృక్చిత్తదృశ్యాస్తేనవిద్యంతేతతఃపృథక్।
తథాతద్దృశ్యమేవేదంస్వప్నదృక్చిత్తమిష్యతే॥

ஸ௦-ஹா. இந்த ஜீவனானவன் ஸ்வப்நத்தில் அண்டஜம்ஸ்வேதஜம் என்று சொல்லப்படுகிற நானாவிதங்களான எந்த ஜந்துக்களை எல்லாதிக்குக்களிலும் பார்க்கிறானோ, அவை அவனுடைய சித்தத்திற்குத் தோற்றுமவையே யன்றி வேறாயிருப்பவை யல்ல. இப்படியே ஸ்வப்நங்காண்கிறவனைவிட வேறு சித்தமென்பது மொன்றில்லை.

௬௫. 𑌚𑌰𑌞𑍍𑌜𑌾𑌗𑌰𑌿𑌤𑍇𑌜𑌾𑌗𑍍𑌰𑌦𑍍𑌦𑌿𑌕𑍍𑌷𑍁𑌵𑍈𑌦𑌶𑌸𑍁𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌨𑍍 |
𑌅𑌣𑍍𑌡𑌜𑌾𑌨𑍍𑌸𑍍𑌵𑍇𑌦𑌜𑌾𑌨𑍍𑌵𑌾𑌪𑌿𑌜𑍀𑌵𑌾𑌨𑍍𑌪𑌶𑍍𑌯𑌤𑌿𑌯𑌾𑌨𑍍𑌸𑌦𑌾 ||

௬௬. 𑌜𑌾𑌗𑍍𑌰𑌚𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑍇𑌕𑍍𑌷𑌣𑍀𑌯𑌾𑌸𑍍𑌤𑍇𑌨𑌵𑌿𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇𑌤𑌤𑌃𑌪𑍃𑌥𑌕𑍍 |
𑌤𑌥𑌾𑌤𑌦𑍍𑌦𑍃𑌶𑍍𑌯𑌮𑍇𑌵𑍇𑌦𑌂𑌜𑌾𑌗𑍍𑌰𑌤𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑌿𑌷𑍍𑌯𑌤𑍇 ||

౬౫. చరన్జాగరితేజాగ్రద్దిక్షువైదశసుస్థితాన్ ।
అండజాన్స్వేదజాన్వాపిజీవాన్పశ్యతియాన్సదా॥

౬౬. జాగ్రచ్చిత్తేక్షణీయాస్తేనవిద్యంతేతతఃపృథక్ ।
తథాతద్దృశ్యమేవేదంజాగ్రతశ్చిత్తమిష్యతే॥

ஸ0-ஹா. இப்படியே ஜாகரதசையிலும் ஜீவனால் க்ரகிக்கப்படுகிற வஸ்துக்கள் அப்போதுண்டாயிருக்கிற சித்தத்தின் விகாரங்களேயாம். அந்த சித்தமும் அந்த ஜீவனேயாம். மற்றவை முன்போலவே அறியலாம்.

௬௭. 𑌉𑌭𑍇𑌹𑍍𑌯𑌨𑍍𑌯𑍋𑌨𑍍𑌯𑌦𑍃𑌶𑍍𑌯𑍇𑌤𑍇𑌕𑌿𑌂𑌤𑌦𑌸𑍍𑌤𑍀𑌤𑌿𑌚𑍋𑌚𑍍𑌯𑌤𑍇 |
𑌲𑌕𑍍𑌷𑌣𑌾𑌶𑍂𑌨𑍍𑌯𑌮𑍁𑌭𑌯𑌂𑌤𑌨𑍍𑌮𑌤𑍇𑌨𑍈𑌵𑌗𑍃𑌹𑍍𑌯𑌤𑍇 ||

౬౭. ఉభేహ్యన్యోన్యదృశ్యేతేకింతదస్తీతిచోచ్యతే ।
లక్షణాశూన్యముభయంతన్మతేనైవగృహ్యతే॥

ஸ0-ஹா. மநஸ்ஸும் மநஸ்ஸினால் காணப்படுகிற வஸ்துக்களும், ஒன்றுக்கொன்று தோற்றுகின்றன. ஜீவாத்மாவாகிய விஷயத்தை சித்தமானது வேண்டுகின்றது. ஆகையால் சித்தமாவது விஷயங்களாவது வாஸ்தவத்திலில்லை. ஸ்வப்நத்தில் யானை முதலிய வஸ்துக்களும், சித்தமும் பொய்யேயன்றோ. அதுபோலவே ஜாகரதசையிலும், பரமார்த்த ஸத்ஸ்வரூபத்தைவிட வேறொன்றுமில்லை என்று, விவேகிகள் கூறுகின்றார்கள். இவ்விரண்டும் வாஸ்தவத்தில் இல்லை என்பது, உண்டென்பதில் ப்ரமாணமில்லையாகையால் த்வைதிகளும் ஒப்புக்கொள்ளவேணும். வஸ்துவைவிட்டு ஜ்ஞாநந்தோற்றுவதில்லை. ஜ்ஞாநத்தைவிட்டு வஸ்துதோற்றுவதில்லை. ஆகையால் இவ்விரண்டையும் தனியே ப்ரமாணப்ரமேயங்களாக கல்பிப்பதற்குபாய முண்டாகாது. ஆகையாலிந்த சித்தமும் விஷயங்களும் கல்பிக்கப்பட்டவையேயாம்.

௬௮. 𑌯𑌥𑌾𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑌮𑌯𑍋𑌜𑍀𑌵𑍋𑌜𑌾𑌯𑌤𑍇𑌮𑍍𑌰𑌿𑌯𑌤𑍇𑌽𑌪𑌿𑌚 |
𑌤𑌥𑌾𑌜𑍀𑌵𑌾𑌅𑌮𑍀𑌸𑌰𑍍𑌵𑍇𑌭𑌵𑌨𑍍𑌤𑌿𑌨𑌭𑌵𑌨𑍍𑌤𑌿𑌚 ||

௬௯. 𑌯𑌥𑌾𑌮𑌾𑌯𑌾𑌮𑌯𑍋𑌜𑍀𑌵𑍋𑌜𑌾𑌯𑌤𑍇𑌮𑍍𑌰𑌿𑌯𑌤𑍇𑌽𑌪𑌿𑌚 |
𑌤𑌥𑌾𑌜𑍀𑌵𑌾𑌅𑌮𑍀𑌸𑌰𑍍𑌵𑍇𑌭𑌵𑌨𑍍𑌤𑌿𑌨𑌭𑌵𑌨𑍍𑌤𑌿𑌚 ||

௭௦. 𑌯𑌥𑌾𑌨𑌿𑌰𑍍𑌮𑌿𑌤𑌕𑍋𑌜𑍀𑌵𑍋𑌜𑌾𑌯𑌤𑍇𑌮𑍍𑌰𑌿𑌯𑌤𑍇𑌽𑌪𑌿𑌵𑌾 |
𑌤𑌥𑌾𑌜𑍀𑌵𑌾𑌅𑌮𑍀𑌸𑌰𑍍𑌵𑍇𑌭𑌵𑌨𑍍𑌤𑌿𑌨𑌭𑌵𑌨𑍍𑌤𑌿𑌚 ||

౬౮. యథాస్వప్నమయోజీవోజాయతేమ్రియతేపిచ ।
తథాజీవాఅమీసర్వేభవంతినభవంతిచ॥

౬౯. యథామాయామయోజీవోజాయతేమ్రియతేపిచ ।
తథాజీవాఅమీసర్వేభవంతినభవంతిచ॥

౭౦. యథానిర్మితకోజీవోజాయతేమ్రియతేపివా ।
తథాజీవాఅమీసర్వేభవంతినభవంతిచ॥

ஸ0-ஹா. ஸமஸ்த வஸ்துக்களையும் பொய்யென்றால் மநுஷ்யன் பிறப்பதும் சாவதும் ப்ரத்யக்ஷமா யிருக்கின்ற தாகையா லிதை யொருவரு மொப்பமாட்டார்,

என்று ஆக்ஷேபிக்கிறவனுக்கு ஸமாதாநமாக இந்த மூன்று சுலோகங்கள் கூறப்பட்டன. இவற்றின் கருத்து ஸ்பநத்திலும் இந்திரஜாலம் முதலிய மாயையிலும் மந்திரம் ஔஷதி இவற்றின்வ்யாபாரத்திலும் அண்டஜம், ஸ்வேதஜம் ஜராயுஜம்முதலிய அநேகஜீவராசிக ளுந்தோற்றவில்லையோ; ஆயினும் அவை பொய்யேயன்றோ. அப்படியே உலகத்தில் பிற ப்பது சாவது எல்லாம்பொய். ஆகையால் ஸம்வித்தென்கிற ஜ்ஞாநஸ்வரூபமாகிய ப்ரம் மமே மெய்யானது என்பதாம்.

௭௧. 𑌨 𑌕𑌶𑍍𑌚𑌿𑌜𑍍𑌜𑌾𑌯𑌤𑍇 𑌜𑍀𑌵𑌸𑍍𑌸𑌮𑍍𑌭𑌵𑍋𑌽𑌸𑍍𑌯 𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 ।
𑌏𑌤𑌤𑍍𑌤𑌦𑍁𑌤𑍍𑌤𑌮𑌂 𑌸𑌤𑍍𑌯𑌂 𑌯𑌤𑍍𑌰 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌨𑍍𑌨 𑌜𑌾𑌯𑌤𑍇 ॥

౭౧. నకంచిజ్జాయతేజీవస్సమ్భవోఽస్యనవిద్యతే ।
ఏతత్తదుత్తమంసత్యంయత్రకించిన్నజాయతే॥

ஸo-ஹா. வ்யவஹார ஸத்யமாகிய ஜீவாதிகளுக்குப் பிறப்புமுதலியவை ஸ்வப்நம் மாயை முதலியவற்றில் தோற்றுகிற ஜீவர்களுக்குப் போலவென்று ரூபித்தோம். பரமா ர்த்தத்திற்கு பிறப்புமுதலியவை யில்லை. மற்றவிசேஷங்கள் முன்சொன்னோம்.

௭௨. 𑌚𑌿𑌤𑍍𑌤𑌸𑍍𑌪𑌨𑍍𑌦𑌿𑌤𑌮𑍇𑌵𑍇𑌦𑌂 𑌗𑍍𑌰𑌾𑌹𑍍𑌯𑌗𑍍𑌰𑌾𑌹𑌕𑌵𑌦𑍍𑌦𑍍𑌵𑌯𑌮𑍍 ।
𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌷𑌯𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑌸𑌙𑍍𑌗𑌂 𑌤𑍇𑌨 𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌮𑍍 ॥

౭౨. చిత్తస్పన్దితమేవేదంగ్రాహ్యగ్రాహకవద్ద్వయమ్।
చిత్తంనిర్విషయంనిత్యమసఙ్గంతేనకీర్తితమ్॥

ஸo-ஹா. த்வைதமெல்லாஞ் சித்தத்தின் தோஷத்தால் வந்தது. வாஸ்தவத்தில் சித்தமென்பது ஆத்மஸ்வரூபமே யாகையாலதற்கு தோஷமில்லை. தோஷமாவது விஷ யஸங்கம். அதாவது ஆத்மாவுக்கு இல்லையென்று சுருதியினால் வெளியாகின்றது.

௭௩. 𑌯𑍋𑌽𑌸𑍍𑌤𑌿 𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌸𑌂𑌵𑍃𑌤𑍍𑌯𑌾 𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑍇𑌨 𑌨𑌾𑌸𑍍𑌤𑍍𑌯𑌸𑍌 ।
𑌪𑌰𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌾𑌭𑌿𑌸𑌂𑌵𑍃𑌤𑍍𑌯𑌾 𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌤𑌃 ॥

౭౩. యోఽస్తికల్పితసంవృత్యాపరమార్థేననాస్త్యసౌ ।
పరతంత్రాభిసంవృత్యాస్యాన్నాస్తిపరమార్థతః॥

ஸo-ஹா. வைதிகரும் சாஸ்திரம் ஆசாரியன் சிஷ்யன் எனப் பலவிஷயங்களை யொ ப்புக்கொண் டிருக்கின்றார் ஆனதால் நிர்விஷயமென்று கூறுவது தகாதென்றால் பர மார்த்தஜ்ஞாநத்திற்கு உபாயமாக அவை கல்பிக்கப்பட்டவையென்று முன்சொல்லி யிருக்கிறோம். இதரமதத்தில் ஒப்புக்கொள்ளுகிற வஸ்துக்கள் அஜ்ஞாந கல்பிதங்களெ ன்று ஸ்பஷ்டம். ஆகையால் நிர்விஷயமாவதில் விரோதமில்லை.

௭௪. 𑌅𑌜𑌃 𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌸𑌂𑌵𑍃𑌤𑍍𑌯𑌾 𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑍇𑌨 𑌨𑌾𑌪𑍍𑌯𑌜𑌃 ।
𑌪𑌰𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌾𑌭𑌿𑌨𑌿𑌷𑍍𑌪𑌤𑍍𑌤𑍍𑌯𑌾 𑌸𑌂𑌵𑍃𑌤𑍍𑌯𑌾 𑌜𑌾𑌯𑌤𑍇 𑌤𑍁 𑌸𑌃 ॥

౭౪. అజఃకల్పితసంవృత్యాపరమార్థేననాప్యజః ।
పరతంత్రాభినిష్పత్త్యాసంవృత్యాజాయతేతుసః॥

ஸo ஹா. வேத சம்மதமாகிய சிஷ்யாசார்யபேதம் முதலியவை யெல்லாம் பொய் யாயின், ஆத்ம ஸ்வரூபத்திற்கு நித்யத்வம் முதலியவையும் சாஸ்திரத்தாலே யோ தப்படுகின்றமையால் அவையும் பொய்யாகையால் ஆத்மஸ்வரூபமஜமானது என்பது முதலிய கீழ்ச்சொல்லிய ஸ்வரூபங்களும் பொய்யாகவேண்டியதே யன்றோ, என்கிற ஆ க்ஷேபத்திற்கு சமாதாந மிந்த சுலோகம். நாம் கீழ்ச்சொல்லியது அவாஸ்தவமே ஜந

மபரிணாமாதி கல்பனை இல்லையென்பதற்கு கல்பிக்கப்பட்டவையே அவையும் ஸ்வரூபமே ஸத்யமாகின்றது.

௭௫. அபூதாபிநிவேஶோஸ்தி த்வயம் தத்ர ந வித்யதே |
த்வயாபாவம் ஸ புத்த்வைவ நிர்நிமித்தோ ந ஜாயதே ||

౭౫. అభూతాభినివేశోఽస్తి ద్వయంతత్రనవిద్యతే ।
ద్వయాభావంసబుద్ధ్వైవనిర్నిమిత్తోనజాయతే॥

ஸ௦-ஹா. த்வைத விஷயத்தில் ப்ரமத்தாலாக்ரஹப்படுவதொழிய வாஸ்தவத்தில் த்வைதமில்லை. ஆகையாலிது ப்ராந்தியென்று அறிந்தபோதே காரணமில்லாமையால் நிவ்ருத்திக்கின்றது.

௭௬. யதா ந லபதே ஹேதூநுத்தமாதமமத்யமாந் |
ததா ந ஜாயதே சித்தம் ஹேத்வபாவே பலம் குதஃ ||

౭౬. యదానలభతేహేతూను_త్తమాధమమధ్యమాన్।
తదానజాయతేచిత్తంహేత్వభావేఫలంకుతః॥

ஸ௦-ஹா. அந்தந்தஜாதி ஆச்ரமங்களுக்கு, விதித்த தருமங்களை அந்தந்த தருமங்களுக்கு பலமாக விதித்திருக்கிறபலனை விரும்பாமல் அதருமங்கள் கலவாமல், செய்வதினுல் அடையக்கூடிய தேவத்வமுதலிய உத்தம பலங்களையும் அதருமங்கலந்த தருமத்தாலடையக்கூடிய மநுஷ்யத்வ முதலிய மத்யமபலன்களையும் அதருமங்களையே செய்வதினுலடையக்கூடிய திர்யக்த்வமுதலிய அதம பலன்களையும், அவித்யையினுல் கல்பிக்கப்பட்டவை யென் றுணர்ந்தவனுக்கு அந்தந்த கதிகளுக்குக் காரணங்களான அவித்யை ஸம்பந்தப்பட்ட கருமம் தருமம் முதலியவை நீங்கியபடியால் அவை யுண்டாகிறதில்லை. ஆத்ம தத்வமொன்றே கல்பனையில்லாததென் றுணர்ந்தவன் துன்பங்களையடைவனே. அறியாதார் ஆகாயத்தில் அழுக்கு முதலியவற்றை சிறுவர் காண்பதுபோல் ப்ரம்மத்தில் விகாரங்களைக் காண்கிருர்கள். ஜ்ஞாநிகளுக்கு அந்த காரணங்களழிகின்றமையால் அவையுண்டாகா. காரணமில்லாது காரியம் பிறக்குமோ. விதையில்லாமல் செடி முளைக்குமோ. ஆகையா லந்த சித்த விகாரங்கள் அப்போது பிறப்பதில்லை.

௭௭. அநிமித்தஸ்ய சித்தஸ்ய யாநுத்பத்திஃ ஸமாத்வயா |
அஜாதஸ்யைவ ஸர்வஸ்ய சித்தத்ருஶ்யம் ஹி தத்யதஃ ||

౭౭. అనిమిత్తస్యచిత్తస్యయానుత్పత్తిస్సమాద్వయా ।
అజాతస్యైవసర్వస్యచిత్తదృశ్యంహితద్యతః॥

ஸ௦-ஹா. இந்த சித்தமாவது ஆத்மஸ்வரூபஸ்புரணமாகையால் ப்ரமம் நீங்கிய போது ஸ்வதஸ் ஸித்தமாகின்றது. ஆகையால் எப்போதும் அத்வயமாய், நிர்விசேஷமாயிருக்கின்றது.

பதாந்வயார்த்தபேதங்கள்.

இந்த சுலோகத்தில் சொல்லப்பட்ட யுக்திகள் இந்தஸந்தர்பத்திற்காக இங்கும் சொலலப்பட்டவை யாகையால், இங்கு விசேஷமாய் விஸ்தரிக்கவில்லை.

௭௮. லப்த்வா நிமித்ததாம் ஸத்யாம் ஹேதும் ப்ருதகநாப்நுவந் |
வீதஶோகம் ததா காமமபயம் பதமஶ்நுதே ||

౭౮. బుద్ధ్వానిమిత్తతాం సత్యాం హేతుం పృథగనాప్నువన్।
వీతశోకం తదాకామమభయం పదమశ్నుతే॥

ஸ0-ஹா. ஆக, கீழ்ச்சொல்லிய காரணங்களால் காரிய காரண பாவங்களில் பரமார்த்தமில்லை யென்று ஸித்தித்தமையால் நிமித்தமில்லை யென்பது ஸத்யமென் றுணர்ந்து ஜந்மகாரணங்களான தருமா தருமங்களைவிட்டு, ஆசாபாசம் முதலிய அநர்த்தங்களி லகப்படாமலிருப்பவன், அவித்யா ஸம்பந்தங் கழிந்து ஜந்மமில்லாதவனாகிறான்.

௭௯. அபூதாபிநிவேசாத்தி ஸத்ருசே தத்ப்ரவர்த்ததே ।
வஸ்த்வபாவம் ஸ புத்த்வைவ நிஸ்ஸங்கம் விநிவர்த்ததே॥

౭౯. అభూతాభినివేశాద్ధి సదృశే తత్ప్రవర్తతే।
వస్త్వభావం స బుద్ధ్వైవ నిస్సంగం వినివర్తతే॥

ஸ0-ஹா. இல்லாதவஸ்துவி லிருப்பதாக ப்ரமித்திருந்தபோது அந்தப்ரமத்திற்குத் தக்கபடி அந்த சித்தமானது ப்ரவர்த்திக்கின்றது. வாஸ்தவத்தில் வஸ்துக்களில்லை என்றறிந்தபோது ஸங்கம்விட்டு அதில் நின்றும் நிவ்ருத்திக்கின்றது.

௮0. நிவ்ருத்தஸ்யாப்ரவ்ருத்தஸ்ய நிச்சலா ஹி ததா ஸ்திதி: ।
விஷயஸ்ஸ ஹி புத்தாநாம் தத்ஸாம்யமஜமத்வயம்॥

౮౦. నివృత్తస్యాప్రవృత్తస్య నిశ్చలా హి తదా స్థితిః ।
విషయస్స హి బుద్ధానాం తత్సామ్యమజమద్వయమ్॥

ஸ0-ஹா. இவ்வாறு வஸ்து சூந்யத்தை யறிந்து இதரவிஷயங்களில் செல்லாமல் எக்காலத்தில் நிச்சலமாய் மநஸ்ஸு நிற்கின்றதோ. அக்காலத்தில் ஸ்வரூபத்தில் ப்ரவேசித்ததாகின்றது.

௮௧. அஜமநித்ரமஸ்வப்நம் ப்ரபாதம் பவதி ஸ்வயம் ।
ஸக்ருத்விபாதோ ஹ்யேவைஷ தர்மோ தாதுஸ்வபாவத:॥

౮౧. అజమనిద్రమస్వప్నం ప్రభాతం భవతి స్వయమ్ ।
సకృద్విభాతో హ్యేవైష ధర్మో ధాతుస్వభావతః॥

ஸ0-ஹா. உலகத்தில் வஸ்துக்கள் ப்ரகாசிக்கும்போது ஸூரியன் விளக்குமுதலியவற்றின் ஸஹாயம் வேண்டப்படுகின்றது. அப்படியன்றி ஆத்மஸ்வரூபம் ஒருஸஹாயத்தையும் வேண்டாது தானேப்ரகாசிக்கும். எப்போது மிவ்வாறேப்ரகாசிக்கின்றது. இது பரமார்த்தஸ்வரூபமானது.

௮௨. ஸுகமாவ்ரியதே நித்யம் து:கம் விவ்ரியதே ஸதா ।
யஸ்ய கஸ்ய ச தர்மஸ்ய க்ரஹேண பகவாநஸௌ॥

౮౨. సుఖమావ్రియతే నిత్యం దుఃఖం వివ్రియతే సదా ।
యస్య కస్య చ ధర్మస్య గ్రహేణ భగవానసౌ॥

ஸ0-ஹா. இவ்வாறு பரமார்த்ததத்வமாகிய ப்ரம்மஸ்வரூபாபிந்நமாகிய ஆத்மஸ்வரூபமானது பலவிதங்களா லுபதேசிக்கப்படாமலும் இதை லோகத்தா ரங்கீகரியாததற்குக்காரணங் கூறுகின்றார். இந்தத்வைத ப்ரமத்தால் ஸுகஸ்வரூபம் மறைக்கப்படுகின்ற

மையாலும் இந்த பரமார்த்த ஸ்வரூபத்தை யறிவது வருத்தமாகையாலும், ஆசாரியர்களாலும் பல வேதாந்தங்களாலும் முறையிடப்பட்டாலும், இதில் சிரத்தை யுண்டாகிறதில்லை. இவ்வாறு மாயாவியான ஈச்வரன் செய்விக்கிறான்.

அ௩. 𑌅𑌸𑍍𑌤𑌿𑌨𑌾𑌸𑍍𑌤𑍍𑌯𑌸𑍍𑌤𑌿𑌨𑌾𑌸𑍍𑌤𑍀𑌤𑌿𑌨𑌾𑌸𑍍𑌤𑌿𑌨𑌾𑌸𑍍𑌤𑍀𑌤𑌿𑌵𑌾𑌪𑍁𑌨𑌃|
𑌚𑌲𑌸𑍍𑌥𑌿𑌰𑍋𑌭𑌯𑌾𑌭𑌾𑌵𑍈𑌰𑌾𑌵𑍃𑌣𑍋𑌤𑍍𑌯𑍇𑌵𑌬𑌾𑌲𑌿𑌶𑌃||

౮౩. అస్తినాస్త్యస్తినాస్తీతినాస్తినాస్తీతివాపునః ।
చలస్థిరోభయాభావైరావృణోత్యేవబాలిశః॥

ஸ०-ஹா. இந்தகாரணத்தாலும் பரமார்த்த நிச்சய மெளிதிலுண்டாகிறதில்லை. தார்க்கிகர் தேஹத்தைவிட வேறாய்ப்ரமாதாவாய் ஒராத்மா இருக்கிறானென்று கூறுகின்றனர். க்ஷணிகவாதிகளான பௌத்தர்கள் தேஹத்தைக்காட்டில் வேறாயினும் க்ஷணிகமாகிய புத்தியைவிட வேறான ஆத்மாவில்லை யென்கிறார்கள். திகம்பரவாதிகள், ஆத்மா இல்லையென்பதுதான் நிச்சயமென் றுரைக்கின்றார்கள், இவ்வாறு பண்டிதர்களுக்கெல்லாம் அபிநிவேசத்தால் தத்வம்தெரியாதபோது மூடஜனங்களுக்கு தத்வஜ்ஞானம் பிறவாமை யாச்சரியமன்று.

அ௪. 𑌕𑍋𑌟𑍍𑌯𑌶𑍍𑌚𑌤𑌸𑍍𑌰𑌏𑌤𑌾𑌸𑍍𑌤𑍁𑌗𑍍𑌰𑌹𑍈𑌰𑍍𑌯𑌾𑌸𑌾𑌂𑌸𑌦𑌾𑌵𑍃𑌤𑌃|
𑌭𑌗𑌵𑌾𑌨𑌾𑌭𑌿𑌰𑌸𑍍𑌪𑍃𑌷𑍍𑌟𑍋𑌯𑍇𑌨𑌦𑍃𑌷𑍍𑌟𑌸𑍍𑌸𑌸𑌰𑍍𑌵𑌦𑍃𑌕𑍍||

౮౪. కోట్యశ్చతస్రఏతాస్తుగ్రహైర్యాసాంసదావృతః।
భగవానాభిరస్పృష్టోయేనదృష్టస్ససర్వదృక్॥

ஸ०-ஹா. இவ்வாறு ஆத்மஸ்வரூபத்தை யாவரித்துக்கொண்டு தத்வநிச்சயம் பிறவாமலிருக்கும்படி யெப்போது மிருக்கிற இந்த அஸ்தி முதலிய நாலுகோடிகளிலிருந்து விடப்பட்டு சுத்தமான ஆத்மஸ்வரூபத்தை யறிந்து தெளிந்தவன் ஸமஸ்தத்தையு மறிந்தவனாகிறான்.

அ௫. 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌤𑌾𑌂𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌾𑌂𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍍𑌯𑌂𑌪𑌦𑌮𑌦𑍍𑌵𑌯𑌮𑍍|
𑌅𑌨𑌾𑌪𑌨𑍍𑌨𑌾𑌦𑌿𑌮𑌧𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌂𑌕𑌿𑌮𑌤𑌃𑌪𑌰𑌮𑍀𑌹𑌤𑍇||

౮౫. ప్రాప్యసర్వజ్ఞతాంకృత్స్నాంబ్రాహ్మణ్యమ్పదమద్వయమ్ ।
అనాపన్నాదిమధ్యాన్తంకిమతఃపరమీహతే॥

ஸ०-ஹா. இப்படி ஸமஸ்த ஸ்வரூபத்திலு முத்க்ருஷ்டமாகிய ஸர்வஜ்ஞத்வமென்கிற ச்ரேயஸ்ஸையடைந்து, அத்வைதரூபமாகிய ப்ராம்மண்ய மென்கிற ஸ்தானத்தைப் பெற்று, ஆதிமத்யாந்த மில்லாத ரூபமாகி, பின்பொருதுக்கத்தையு மடைகிறதில்லை.

அ௬. 𑌵𑌿𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌂𑌵𑌿𑌨𑌯𑍋𑌹𑍍𑌯𑍇𑌷𑌶𑌮𑌃𑌪𑍍𑌰𑌾𑌕𑍃𑌤𑌉𑌚𑍍𑌯𑌤𑍇|
𑌦𑌮𑌃𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌦𑌾𑌨𑍍𑌤𑌤𑍍𑌵𑌾𑌦𑍇𑌵𑌂𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍𑌶𑌮𑌂𑌵𑍍𑌰𑌜𑍇𑌤𑍍||

౮౬. విప్రాణాంవినయోహ్యేషశమఃప్రాకృతఉచ్యతే।
దమఃప్రకృతిదాంతత్వాదేవంవిద్వాన్శమంవ్రజేత్ ॥

ஸ०-ஹா. விப்ரர்களுக்கு விநயமும் சமமும் தமமும், ஸ்வபாவமானது; இந்த விநயம் முதலியவற்றின் ஸ்வரூபம் ப்ரம்மரூபமேயாம்.

௮௭. 𑌸𑌵𑌸𑍍𑌤𑍁𑌸𑍋𑌪𑌲𑌮𑍍𑌭𑌂𑌚𑌦𑍍𑌵𑌯𑌂𑌲𑍌𑌕𑌿𑌕𑌮𑌿𑌷𑍍𑌯𑌤𑍇।
𑌅𑌵𑌸𑍍𑌤𑍁𑌸𑍋𑌪𑌲𑌮𑍍𑌭𑌂𑌚𑌶𑍁𑌦𑍍𑌧𑌂𑌲𑍌𑌕𑌿𑌕𑌮𑌿𑌷𑍍𑌯𑌤𑍇॥

౮౭. సవస్తుసోపలమ్భఞ్చద్వయంలౌకికమిష్యతే ।
అవస్తుసోపలమ్భఞ్చశుద్ధంలౌకికమిష్యతే॥

ஸ௦-ஹா. கீழ்ச்சொல்லியபடி ஒன்றுக்கொன்று விருத்தமாகையாலும், ராகத்வேஷங்களுக்குக் காரணங்களாகின்றமையாலும், ஸம்ஸாரத்தை வ்ருத்திசெய்யுமவையாகையாலும் இவை பொய்யானவைஎன்று யுக்திகளால் நிருபித்துக்காட்டி, முன்காட்டிய நான்குகோடிகளும் நீங்கியதாய், ராகத்வேஷ முதலியவை யில்லாததாய், ஸ்வபாவமாய் சாந்த ரூபத்தையுடையதாயிருக்கிற அத்வைத மதமேசுத்தமான மதமென்று ஸாதித்தார். இனி அத்வைத மதபரிஷ்காரத்தைக் காட்டத்துடங்குகின்றார். வஸ்துக்களோடு கூடியதும், அறிவோடு கூடியதும், க்ராஹ்ய க்ராஹக பேதமுடையதும், லோகஸித்தமானதுமாகிய இந்த அவஸ்தையை ஜாகரிதமென்று ஒப்புக்கொள்ளுகிறோம். ஸமஸ்தவ்யவஹாரங்களும் இந்த அவஸ்தையிலுண்டாகின்றன. இப்படி வேதாந்தத்திற்கு ஸம்மதமான பொருள். வஸ்து சூந்யமாய், வஸ்துவில்லாவிடினும், வஸ்துஜ்ஞானத்தையுடையதாய், சுத்தமாய், ஸமஸ்த ப்ராணிகளுக்கும் ஸாதாரணமாயுமிருப்பது ஸ்வப்நமென்று ஒப்புக்கொள்ளப்படுகிறது.

௮௮. 𑌅𑌵𑌸𑍍𑌤𑍍𑌵𑌨𑍁𑌪𑌲𑌮𑍍𑌭𑌂𑌚𑌲𑍋𑌕𑍋𑌤𑍍𑌤𑌰𑌮𑌿𑌤𑌿𑌸𑍍𑌮𑍃𑌤𑌮𑍍।
𑌜𑍍𑌞𑌾𑌨𑌂𑌜𑍍𑌞𑍇𑌯𑌂𑌚𑌵𑌿𑌜𑍍𑌞𑍇𑌯𑌂𑌸𑌦𑌾𑌬𑍁𑌦𑍍𑌧𑍈𑌃𑌪𑍍𑌰𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌮𑍍॥

౮౮. అవస్త్వనుపలమ్భఞ్చలోకోత్తరమితిస్మృతమ్ ।
జ్ఞానంజ్ఞేయఞ్చవిజ్ఞేయంసదాబుద్ధైఃప్రకీర్తితమ్॥

ஸ௦-ஹா. வஸ்து சூந்யமாய் ஜ்ஞாந சூந்யமாய், க்ராஹ்யம் க்ராஹகம் என்கிற லோகநீதி நீங்கியதாயிருக்கிற இந்த அவஸ்தை ஸுஷுப்தி என்று சொல்லப்படுகிறது. ஆக, கீழ்ச்சொல்லிய மூன்றவஸ்தைகளுக்குள் ஜ்ஞாநம் ஜ்ஞேயம், என்கிற பேதமெல்லாமடங்கியிருக்கின்றது. பரமார்த்த விஜ்ஞாநஸ்வரூபம் தூரீயமெனப்படுகிறது. இப்படி ப்ரம்மவித்துக்கள் கண்டறிந்து சொல்லுகிறார்கள்.

௮௯. 𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌚𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑍇𑌜𑍍𑌞𑍇𑌯𑍇𑌕𑍍𑌰𑌮𑍇𑌣𑌵𑌿𑌦𑌿𑌤𑍇𑌸𑍍𑌵𑌯𑌮𑍍।
𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌤𑌾𑌹𑌿𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰𑌭𑌵𑌤𑍀𑌹𑌮𑌹𑌾𑌧𑌿𑌯𑌃॥

౮౯. జ్ఞానేచత్రివిధేజ్ఞేయేక్రమేణవిదితేస్వయమ్ ।
సర్వజ్ఞతాహిసర్వత్రభవతీహమహాధియః॥

ஸ௦-ஹா. இங்ஙனம் ஜ்ஞாநமும் மூன்றுவிதமான ஜ்ஞேயங்களும், க்ரமமாக அறியப்பட்டால் அந்த மஹா புத்திமானுக்கு ஸர்வஸ்வரூபஜ்ஞாநரூப முண்டாகின்றது. அதற்கு எக்காலத்திலு மெந்த தேசத்திலு மழிவில்லை. இந்தப்படி ஸ்தாநத்ரயத்திலுமில்லாத பரமார்த்த துரீயஸ்வரூபமறியப்பட்டால் தத்வஜ்ஞாநமுண்டாகின்றது.

௯௦. 𑌹𑍇𑌯𑌜𑍍𑌞𑍇𑌯𑌾𑌪𑍍𑌯𑌪𑌾𑌕𑍍𑌯𑌾𑌨𑌿𑌵𑌿𑌜𑍍𑌞𑍇𑌯𑌾𑌨𑍍𑌯𑌗𑍍𑌰𑌯𑌾𑌣𑌤𑌃।
𑌤𑍇𑌷𑌾𑌮𑌨𑍍𑌯𑌤𑍍𑌰𑌵𑌿𑌜𑍍𑌞𑍇𑌯𑌾𑌦𑍁𑌪𑌲𑌮𑍍𑌭𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌷𑍁𑌸𑍍𑌮𑍃𑌤𑌃॥

౯౦. హేయజ్ఞేయాప్యపాక్యాదివిజ్ఞేయాన్యగ్రయాణతః।
తేషామన్యత్రవిజ్ఞేయాదుపలమ్భస్త్రిషుస్మృతః॥

ஸ௦-ஹா. கீழ், லௌகிகங்களான வஸ்துக்களையும் க்ரமமாக அறியவேண்டுமென்று சொல்லியதால் அவையும் மெய்யேயென்று சங்கைப்படவேண்டாமென்று கூறுகின்றார். நாம் கீழ்ச்சொல்லிய மூன்றவஸ்தைகளும், ஹேயங்களென்பதற்காக அதை யறியும்படி சொன்னோம்; அறியத்தக்கது முன்சொன்ன நாலுகோடிகளும் நீங்கிய பரமார்த்த தத்வமேயாம். க்ஷணத்ரயங்களையும் விட்டவனால், பாண்டித்யம் பால்யம் மௌநமென்கிற ஸாதநங்களடையத்தக்கவை. ராகத்வேஷ முதலியவை பரிபக்வ தசையையடையும்படி செய்யத்தக்கவை. இந்த விபாகஜ்ஞாநத்திற்காக ஸந்யாஸியினால் எல்லாமறியவேண்டியவையாயின. முதலில் பரமார்த்த ஸத்ய ஸ்வரூபமே அறியத்தக்கது.

பதாந்வயார்த்தபேதங்கள்.

பாண்டித்யமாவது வேதாந்தங்களின் கருத்தை நன்குணர்ந்திருப்பது. அதாவது அத்வைத வஸ்து விசாரத்தால் பிறந்த ஜ்ஞாந சாதுர்யமே, அது ச்ரவணத்தாலுண்டாகின்றது, பால்யமாவது அஹங்காரம் மதம் முதலிய துர்க்குணங்களில்லாதிருப்பது. மௌநமாவதுதான் வேதாந்தங்களில் ஆசாரியனிடத்தில்கேட்ட அத்வைதத்தை யுக்திகளைக்கொண்டு சிந்திப்பது. மற்றவை முன்சொல்லப்பட்டபடி யுணர்க. இது ம்ரம்மவித்துக்கள் மதமென்றும் அவித்யையினால் இவையெல்லாம் தோற்றுமென்றும் முன்சொன்னபடி ரூபிக்கப்படுகிறது.

௯௧. 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑍍𑌯𑌾𑌕𑌾𑌶𑌵𑌜𑍍𑌜𑍍𑌞𑍇𑌯𑌾𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑍇𑌧𑌰𑍍𑌮𑌾 𑌅𑌨𑌾𑌦𑌯𑌃।
𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇𑌨𑌹𑌿𑌨𑌾𑌨𑌾𑌤𑍍𑌵𑌂𑌤𑍇𑌷𑌾𑌂𑌕𑍍𑌵𑌚𑌨𑌕𑌿𑌞𑍍𑌚𑌨॥

౯౧. ప్రకృత్యాకాశవజ్జ్ఞేయాస్సర్వేధర్మా అనాదయః ।
విద్యతేనహినానాత్వం తేషాంక్వచనకిఞ్చన॥

ஸ௦-ஹா. பரமார்த்த ஸ்வரூபத்தை யாலோசித்துப் பார்க்கும்போது இந்த ஜீவாத்மாக்கள் ஸ்வபாவத்தால் ஆகாயம்போல ஸூக்ஷ்ம ரூபமுடையவர்கள். தோஷமில்லாதவர்கள், எங்கும் நிறைந்தவர்கள். ஆதியில்லாதவர்கள். இவ்வாறு முமுக்ஷுக்கள், ஆத்மஸ்வரூபத்தை யறியவேணும். எப்போதும் அவர்களுக்கு எவ்விதத்திலும் பேதமில்லை. இங்கு நாம் ஆத்மாக்களென்று பன்மையாற் சொல்லியது கல்பித பேதத்தை யநுசரித்தென்றறிக.

௯௨. 𑌆𑌦𑌿𑌬𑍁𑌦𑍍𑌧𑌾𑌃 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑍍𑌯𑍈𑌵𑌸𑌰𑍍𑌵𑍇𑌧𑌰𑍍𑌮𑌾𑌸𑍍𑌸𑍁𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌾𑌃।
𑌯𑌸𑍍𑌯𑍈𑌵𑌮𑍍𑌭𑌵𑌤𑌿𑌕𑍍𑌷𑌾𑌨𑍍𑌤𑌿𑌸𑍍𑌸𑍋𑌽𑌮𑍃𑌤𑌤𑍍𑌵𑌾𑌯𑌕𑌲𑍍𑌪𑌤𑍇॥

౯౨. ఆదిబుద్ధాఃప్రకృత్యైవసర్వేధర్మాస్సునిశ్చితాః।
యస్యైవమ్భవతిక్షాన్తిస్సోఽమృతత్వాయకల్పతే॥

ஸ௦-ஹா. இந்த ஆத்மாக்களெல்லாரும் ஸ்வயம் ப்ரகாச ரூபமுடையவர்கள். எப்போதும் இப்படி விளங்குகிறவர்களாகையால் ஸந்தேஹமின்றி நிச்சயிக்கப்பட்ட ஸ்வரூபத்தை யுடையவர். ஆகையால் ஆத்மாக்களுக்கு ஜ்ஞேயத்தை வாஸ்தவமாக நினைக்கக்கூடாது. இவ்வாறு எவனறிந்து க்ருதக்ருத்தியனாய் சமத்தையடைகிறானோ; அவன் மோக்ஷத்திற்கு அதிகாரியாகிறான். இந்த ஆத்ம ப்ரகாசத்திற்கு ஸூரியனை த்ருஷ்டாந்தமாக எடுத்துக்கொள்ளவேண்டியது. ஸூர்யன் ஸ்வயமாகவே ப்ரகாசிக்கிறானன்றோ. அவன் ப்ரகாசிப்பதற்கு மற்றொரு தேஜஸ்ஸு வேண்டுவதில்லையன்றோ.

௬௩. 𑌆𑌦𑌿𑌶𑌾𑌨𑍍𑌤𑌾𑌹𑍍𑌯𑌨𑍁𑌤𑍍𑌪𑌨𑍍𑌨𑌾𑌃𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑍍𑌯𑍈𑌵𑌸𑍁𑌨𑌿𑌰𑍍𑌵𑍃𑌤𑌾𑌃।
𑌸𑌰𑍍𑌵𑍇𑌧𑌰𑍍𑌮𑌾𑌸𑍍𑌸𑌮𑌾𑌭𑌿𑌨𑍍𑌨𑌾𑌅𑌜𑌂𑌸𑌾𑌮𑍍𑌯𑌂𑌵𑌿𑌶𑌾𑌰𑌦𑌮𑍍॥

౬౩. ఆదశాంతాహ్యనుత్పన్నాః ప్రకృత్త్యైవసునిర్వృతాః
సర్వేధర్మాస్సమాభిన్నా అజంసామ్యంవిశారదమ్॥

பா0-ஷா. மோக்ஷமும் பரமார்த்தமன்று. நித்யமுக்தராயிருக்கிற ஆத்மாக்களுக்கு ஒருநாளில் முக்தியென்பது கூடுமோ. அவர்களுக்கு உத்பத்தி யுண்டோ. ஸமஸ்வரூப முடையவர்களன்றோ. பேதமில்லாதவர்களன்றோ. பரிசுத்தாத்மஸ்வரூப மிப்படிப்பட்டதாகையால் ஒருவராலும் ஒருபோது மொன்று மிதற்குச் செய்யவேண்டுவதில்லை. நித்யனும் எப்போதும் மாறாத ஒரே ஸ்வபாவமுடையவனுக்கு ஒரு வ்யாபாரத்தால் பயனுண்டோ.

௬௪. 𑌵𑍈𑌶𑌾𑌰𑌦𑍍𑌯𑌂𑌤𑍁𑌵𑍈𑌨𑌾𑌸𑍍𑌤𑌿𑌭𑍇𑌦𑍇𑌵𑌿𑌚𑌰𑌤𑌾𑌂𑌸𑌦𑌾।
𑌭𑍇𑌦𑌨𑌿𑌮𑍍𑌨𑌾𑌃𑌪𑍃𑌥𑌗𑍍𑌵𑌾𑌦𑌾𑌸𑍍𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌤𑍇𑌕𑍃𑌪𑌣𑌾𑌸𑍍𑌮𑍃𑌤𑌾𑌃॥

౬౪. వైశారద్యంతువైనాస్తిభేదేవిచరతాంసదా ।
భేదనిమ్నాఃపృథగ్వాదాస్తస్మాత్తేకృపణాస్మృతాః॥

பா0-ஷா. இவ்வாறு பரமார்த்த தத்வத்தை யறிந்தவரே தங்யரானவர்கள், மற்றோர்கள் க்ருபணர்களே யாவர்கள். அவர்கள் வஸ்துக்களுக்கு பேதத்தைக் கூறுகின்றார்களன்றோ. ஆகையால் அவர்கள் நீசர்களேயாகிறார்கள். பேதவாதிகள் தத்வ ஜ்ஞாநமில்லாதவர்களாகையா லவர்களுக்கு சுத்தியில்லை யன்றோ. அவித்யையினால் காணப்படுகிற பேதத்தில் புத்தியுடையவர்க ளாகிறார்களன்றோ. ஆகையா லவர்கள் நீசரே யாவர். இது தக்கதேயாமென்று கருத்து.

௬௫. 𑌅𑌜𑍇𑌸𑌾𑌮𑍍𑌯𑍇𑌤𑍁𑌯𑍇𑌕𑍇𑌚𑌿𑌦𑍍𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿𑌸𑍁𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌾𑌃।
𑌤𑍇𑌹𑌿𑌲𑍋𑌕𑍇𑌮𑌹𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌸𑍍𑌤𑌚𑍍𑌚𑌲𑍋𑌕𑍋𑌨𑌗𑌾𑌹𑌤𑍇॥

౬౫. అజేసామ్యేతుయేకేచిద్భవిష్యంతిసునిశ్చితాః।
తేహిలోకేమహాజ్ఞానాస్తచ్చలోకోనగాహతే॥

பா0-ஷா. இவ்வாறு பரமார்த்த ஸ்வரூபத்தை நிச்சயமாயறிந்தவரே மகாத்மாக்களாகிறார். ஒரு பெண்பிள்ளையாயினுமிந்த தத்வஜ்ஞாநமுடையளானால் அவளுக்கு தத்வஜ்ஞாநமில்லாத மகா பண்டிதனு மொப்பாகமாட்டான். அப்படிப்பட்டவர்களிடம் மகிமையை இவ்வுலக மறியாது. அப்படியில்லாத த்வைதிகளாகிய நீசர்களால் இந்த தத்வமடையப்படமாட்டாது.

பதாந்வயார்த்தபேதங்கள்.

இவ்விரண்டு சுலோகங்களில் முதல் சுலோகத்தில் த்வைதிகளை தூஷித்தார். இரண்டாவது சுலோகத்தா லத்வைதிகளைக் கொண்டாடினார், இது அத்வைதத்தி லனைவருக்கும் விருப்பமுண்டாவதற்காகவாம்.

௬௬. 𑌅𑌜𑍇𑌷𑍍𑌵𑌜𑌮𑌸𑌂𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌂𑌧𑌰𑍍𑌮𑍇𑌷𑍁𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌿𑌷𑍍𑌯𑌤𑍇।
𑌯𑌤𑍋𑌨𑌕𑍍𑌰𑌮𑌤𑍇𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌸𑌙𑍍𑌗𑌂𑌤𑍇𑌨𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌮𑍍॥

౯౬. అజేష్వజమసంక్రాన్తం ధర్మేషు జ్ఞానమిష్యతే।
యతో న క్రమతే జ్ఞానమసఙ్గం తేన కీర్తితమ్॥

ஸம்-ஹா. ப்ரமேயமென்றும் ப்ரமாணமென்றும் ப்ரமாதாவென்றும் பேதங்கள் தத்வநிச்சயத்தி லேற்படுகிறபடியால் அபேதங் கூடுமோவென்றால் இதற்குவிடையளிக் கின்றார். நித்யர்களான ஜீவாத்மாக்களுக்கு அஸங்கமான நித்யஜ்ஞாநஸ்வரூபத்தை யொப்புக்கொள்ளுகிறோம். ஸ்வரூபமே ப்ரமேயமாகின்றது. ஆகாயம்போல ஸங்கமான ஜ்ஞாநத்திற்கு எல்லலாங் கூடும். இங்கும் ஸூர்ய ப்ரகாசத்தை திருஷ்டாந்தமாகக் கொள்க.

௯௭. 𑌅𑌣𑍁𑌮𑌾𑌤𑍍𑌰𑍇𑌽𑌪𑌿 𑌵𑍈𑌧𑌰𑍍𑌮𑍍𑌯𑍇 𑌜𑌾𑌯𑌮𑌾𑌨𑍇𑌽𑌵𑌿𑌪𑌶𑍍𑌚𑌿𑌤𑌃।
𑌅𑌸𑌙𑍍𑌗𑌤𑌾 𑌸𑌦𑌾 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌕𑌿𑌮𑍁𑌤𑌾𑌵𑌰𑌣𑌚𑍍𑌯𑍁𑌤𑌿𑌃॥

౯౭. అణుమాత్రేఽపి వైధర్మ్యే జాయమానేఽవిపశ్చితః।
అసఙ్గతా సదా నాస్తి కిము తావరణచ్యుతిః॥

ஸம்-ஹா. அத்வைதிகளல்லாத வாதிகளுக்கு ஜ்ஞாநம் ஸவிஷயிகமென்று மதமா கையால், அஸங்கத்வமில்லை. அஸங்கத்வமில்லாமையால் ஸம்ஸார நிவ்ருத்தியில்லை.

௯௮. 𑌅𑌲𑌬𑍍𑌧𑌾𑌵𑌰𑌣𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌧𑌰𑍍𑌮𑌾𑌃 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌨𑌿𑌰𑍍𑌮𑌲𑌾𑌃।
𑌆𑌦𑍌 𑌬𑍁𑌦𑍍𑌧𑌾𑌸𑍍𑌤𑌥𑌾 𑌮𑍁𑌕𑍍𑌤𑌾 𑌬𑍁𑌧𑍍𑌯𑌨𑍍𑌤 𑌇𑌤𑌿 𑌨𑌾𑌯𑌕𑌾𑌃॥

౯౮. అలబ్ధావరణాస్సర్వే ధర్మాః ప్రకృతినిర్మలాః।
ఆదౌ బుద్ధాస్తథా ముక్తా బుధ్యన్త ఇతి నాయకాః॥

ஸம் ஹா. இதனால் அத்வைதிகள் மதத்தில் ஆவரணமென்கிற ஸம்ஸார பந்த மில்லை. ஸ்வபாவத்தாலே சுத்தரானவர்கள் ஜீவாத்மாக்கள் அநாதி ஸ்வயம் ப்ரகாசர் கள். நித்யமுக்த ஸ்வரூபர்கள். ஜ்ஞாநசக்தியை ஸ்வபாவமாக உடையவர்கள்; தங்களு க்கு தாங்களே ப்ரபுக்கள். ஆகையா லத்வைதத்திற்கு ஒரு தோஷமுமில்லை.

௯௯. 𑌕𑍍𑌰𑌮𑌤𑍇 𑌨 𑌹𑌿 𑌬𑍁𑌦𑍍𑌧𑌸𑍍𑌯 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌧𑌰𑍍𑌮𑍇𑌷𑍁 𑌤𑌾𑌯𑌿𑌨𑌃।
𑌸𑌰𑍍𑌵𑍇 𑌧𑌰𑍍𑌮𑌾𑌸𑍍𑌤𑌥𑌾 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌨𑍈𑌤𑌦𑍍𑌬𑍁𑌦𑍍𑌧𑍇𑌨 𑌭𑌾𑌷𑌿𑌤𑌮𑍍॥

౯౯. క్రమతే న హి బుద్ధస్య జ్ఞానం ధర్మేషు తాయినః।
సర్వే ధర్మాస్తథా జ్ఞానం నైతద్బుద్ధేన భాషితమ్॥

ஸம்-ஹா. பரமார்த்தத்தை யறிந்தவனுக்கு இதரவிஷயங்களில் ஜ்ஞாநம் போகாது ஆகாச ஸ்வரூபமாகியதன்றோ ஜ்ஞாநம். ஜீவாத்மாக்களும் ஆகாசத்தோடு ஸமாந ரூப முடையராகையாலே, சலியாமலிருக்கின்றார்கள். ஜ்ஞாநம் ஜ்ஞேயம், ஜ்ஞாதா, என் கிற பேதமில்லாத அத்வைத மதமானது புத்தனால் சொல்லப்பட்டதன்று. அத்வை தத்திற்கு ஸமீபமாக பாஹ்ய வஸ்துக்களில்லை யென்பது ஜ்ஞாநமே யுள்ளதென்பது இவை புத்தனால் சொலலப்பட்டன. ஆயினும் பரமார்த்தமான அத்வைத தத்வம் வேதாந்தங்களில் கண்டறியத்தக்கதேயாம். வேதாந்தங்களாவன "நஹித்ரஷ்டுர்த்ருஷ் டேர்விபரிலோபோவித்யதே" என்பதுமுதலியவையாம். இவற்றிற்குப்பொருள் ஜ்ஞாந மேஸத்யம் மற்ற வஸ்துக்கள் பொய்யென்பதாம்.

௧௦௦. 𑌦𑍁𑌰𑍍𑌦𑌰𑍍𑌶𑌮𑌤𑌿𑌗𑌮𑍍𑌭𑍀𑌰𑌮𑌜𑌂 𑌸𑌾𑌮𑍍𑌯𑌂 𑌵𑌿𑌶𑌾𑌰𑌦𑌮𑍍।
𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌵𑌾 𑌪𑌦𑌮𑌨𑌾𑌨𑌾𑌤𑍍𑌵𑌂 𑌨𑌮𑌸𑍍𑌕𑍁𑌰𑍍𑌮𑍋 𑌯𑌥𑌾𑌬𑌲𑌮𑍍॥

౧౦౦. దుర్దర్శమతిగమ్భీరమజం సామ్యం విశారదమ్।
బుద్ధ్వా పదమనానాత్వం నమస్కుర్మో యథాబలమ్॥

௱ஹா. சாஸ்திரஸாரத்தை எடுத்துச்செய்த கௌடபாதகாரிகையென்ற ப்ரபந்தமானது முடிவுபெறுகின்றமையால், முடிவில் மங்களத்தோடு முடிப்பதற்கு பரமார்த்த தத்வத்தை வணங்குவதாகிய நமஸ்கார மங்களத்துடன் முடிக்கின்றார். இதனுலத்வைதம் வணங்கத்தக்கியதென்று சொல்லப்படுகின்றமையால் இதற்கு சமானமாகிய மதமொன்றுமில்லையென்று ஸ்துதிசெய்யப்பட்டதாயிற்று. பரமார்த்ததத்வமெப்படிப்பட்டது? ஸத்தென்றும், அஸத்தென்றும் ஸதஸத்தென்றும் ஸதஸத்விலக்ஷணமென்றும் பலவகையாக விகல்பிக்கப்படுகின்றமையால் ஸுலபமாயறியக்கூடாதது. ஆகையாலறிவிலாதார்க்கு எளிதிலறியப்பார்த்தாலும் ஸமுத்ரம்போல் அவகாகிக்கமுடியாதது. நித்யமாய் ஸமமாய் ஸமர்த்தமாயிருப்பது. பேதங்கள் நீங்கியது, இப்படிப்பட்ட பரமார்த்த ப்ரம்மஸ்வரூபத்தை நன்குணர்ந்து அந்த ப்ரம்மஸ்வரூபத்தோடு ஐக்யத்தையடைந்து அந்த ப்ரம்மத்தை வணங்குவோமாக. அது வ்யவஹாரத்திற்கு கோசரமாகாததாயினும் நம்முடைய சக்திக்குத்தக்கப்படி வ்யவகாரத்திற்குக் கொண்டுவந்து நமஸ்கரிப்போமாக.

இதி கௌடபாதகாரிகாயாம்
சதுர்த்தம் அலாதசாந்திப்ரகரணம்.

பதாந்வயார்த்தபேதங்கள்.

கௌடபாதகாரிகையின் ப்ரகரணங்கள் நாலுக்கும் அத்வைத மதாசாரியராகிய சங்கராசாரியர் வ்யாக்நமாகச் செய்த பாஷ்யங்களையும் ஆனந்த கிரியாசாரியர் செய்த டீகையையும் அநுஸரித்து பண்டிதர்களினபிப்ராயங்களையும்சேர்த்து அத்வைத மத ஸ்தாபநமான வ்யாக்யாநக் கருத்துமாத்திர மெழுதப்பட்டது. பதார்த்தங்களை இதைக்கொண்டே அறிந்துகொள்க. இதுவுமன்றி த்வைத மதகண்டநரூபமாகிய இந்த க்ரந்தத்தில் சொல்லிய யுக்தியே புத்திமாங்களுக்கு முக்யமாயறியத்தக்கது. வேத மந்திரங்களுக்குப்போல பதார்த்தம் முக்யமல்ல. ஆகையால் பதார்த்த மெழுதவில்லை. விசேஷக்ரந்த விஸ்தரபயத்தாலென்றறிக.

சங்கராசாரியர் கௌடபாதகாரிகை பாஷ்யத்தின் முடிவில்செய்த மங்களசுலோகங்கள்.

அஜமபிஜநியோகம் ப்ராபதைச்வர்ய யோகாதகதிச கதிமத்தாம் ப்ராப தேகம்ஹ்யநேகம், விவிதவிஷய தர்மக்ராஹிமுக்தே க்ஷணாம் ப்ரணதபயவிஹந்த்ரு ப்ரம்மயத்தந்நதோஸ்மி "க"

ப்ரஜ்ஞாவைசாகவேதக்ஷுபிதஜலநிதேர் வேதநாம்நோந்தரஸ்த்தம் பூதாந்யாலோக்யமக்நாந்யவிரத ஜநநக்ராஹகோரேஸமுத்ரே, காருண்யாதுத்ததாராம்ருதமிதமமரைர்துர்லபம்பூதஹேதோர்யஸ்தம்பூஜ்யாபிபூஜ்யம்பரமகுருமமும்பாதபாதைர்நதோஸ்மி "உ"

யத்ப்ரஜ்ஞாலோகபாஸாப்ரதிஹதிமகமத்ஸ்வாந்தமோகாந்தகாரோமஜ்ஜோந்மஜ்ஜச்சகோரேஹ்யஸக்ருதுபஜநோதந்வதித்ராஸநேமே,யத்பாதாவாச்ரிதாநாம்ச்ருதிசமவிநயப்ராப்திரக்ராஹ்யமோகாதத்பாதௌபாவநீயௌபவபயவிநுதௌஸர்வபாவைர்நமஸ்யே"௩"

முதல்சுலோகத்திற்குக்கருத்து.

ஸமஸ்தோபநிஷத்துக்களிலும் பரமார்த்த தத்வமென்று ப்ரசித்தமாய், தன்னை வணங்கினோர்க்கவித்யை முதலிய தோஷபயங்களை நீக்குவதும், ஜந்மம் முதலிய விகாரங்களில்லாததும் தன்னுடைய ஐச்வர்யத்தால் ஜந்மத்தையுடையதும் சலநமில்லாததும் கதியுடையதும் ஒன்றாகியதும் மூடர்களுக்குப் பலவாகியது மாகிய ப்ரம்மத்தை வணங்குகின்றேனென்பதாம்.

இரண்டாவதுசுலோகத்திற்குக்கருத்து.

உலகத்தில் பிறப்பிறப்பு முதலிய துன்பக்கடலில் மூழ்கிக்கிடக்கிற ஜந்துக்களிடத்தில் கருணைகொண்டு வேதமாகிய சமுத்திரத்தில் தம்முடைய அறிவென்கிற மத்தினால் கடைந்து இந்த க்ரந்தமாகிய அம்ருதத்தை யெடுத்துத்தந்தவரும் பரமகுருவுமாகிய இவரடிபணிந்து வணங்குகின்றேன்.

மூன்றாவதுசுலோகத்திற்குக்கருத்து.

இந்தஸம்ஸாரஸாகரத்தில் மோகாந்தகாரமானது எவருடைய ஜ்ஞாநத்தாலே எனக்குநீங்கிற்றோ. எவருடைய அடிவணங்கினோர்க்கு சமதமாதிகுணங்களுண்டாகின்றனவோ; அவருடைய பாவநமான திருவடிகளை ஸமஸ்த ப்ரகாரத்தாலும் நமஸ்கரிக்கின்றேன்.

பதாந்வயார்த்தபேதங்கள்.

சங்கராசாரியர் கௌடபாதகாரிகைக்கு பாஷ்யம்செய்து முடித்து அந்தபாஷ்ய மனைவராலு மாதரிக்கப்படவேண்டுமென்று மூன்று சுலோகங்களால் மங்களம் செய்தார். அதில் முதல் சுலோகத்தில் ப்ரமத்தை வணங்கினார். இரண்டாவது சுலோகத்தால் க்ரந்தகர்த்தாவை வணங்கினார். மூன்றாவது சுலோகத்தால் தம்முடைய ஆசாரியரை வணங்கினாரென்றறிக.

கௌடபாதகாரிகை முற்றிற்று.

ஸ்ரீமத்குருப்யோநம:.

ஸ்ரீ:

ஸ்ரீபரப்ரம்மணேநம:.

ஓம் ஈசாதிஷடுபநிஷத் த்ராவிடபாஷ்யாரம்ப:.

ஓம் ஈசாவாஸ்யோபநிஷத் த்ராவிட

பாஷ்யாரம்ப:.

பதாந்வயார்த்தபேதங்கள்.

ஈசாவாஸ்யோப நிஷத்து, கேநோப நிஷத்து, கடோப நிஷத்து, ப்ரச்நோபநிஷத்து, முண்டகோப நிஷத்து, மாண்டூக்யோப நிஷத்து. இந்த ஆறு உபநிஷத்துக்களுக்கும் முன்மத்வ பாஷ்யத்திலுள்ள விசேஷார்த்தங்க ளெழுதப்படாமையால், இந்த ஆறு உபநிஷத்துகளுக்கும் மத்வமதாநு ஸாரமாகச்செய்த பாஷ்யங்களிலுள்ள விசேஷார்த்தங்க ளெழுதப்படுகின்றன. தைத்திரீயம் முதல், நாலுஉபநிஷத்துகளுக்கும் மற்ற இரண்டு பாஷ்யங்களோடு இந்த பாஷ்யமும் எழுதப்படும். அர்த்தபேதங்க ளுள்ளவிடத்தில் மாத்திரமே அந்தந்த அர்த்தபேதங்க ளெழுதப்படுமென்றறிக.

ஈசாவாஸ்யமத்வபாஷ்யாவதாரிகை.

இந்த ஈசாவாஸ்யோப நிஷத்து ஸ்வாயம்புவமநுவினால் கண்டுபிடிக்கப்பட்டு யஜ்ஞஸ்வரூபியாகிய பகவானை ஸ்தோத்திரம் பண்ணுகிற க்ரமத்திலே வெளியிடப்பட்டது. அந்தவிஷ்ணுவுக்கு யஜ்ஞமூர்த்தியென்றுபெயர். இதின் விஸ்தரம் ப்ரம்மாண்ட புராணத்திலும் பாகவதத்திலும் விளங்கும்.

ஈ - க, ம - பா. ப்ரக்ருதி என்கிற இந்த லோகதத்வமானது விஷ்ணுவினால் நடத்தப்படுகிறது. ஸ்வயமாக இதற்கு ப்ரவர்த்திக்க சக்தியில்லை. அந்த விஷ்ணுகொடுத்த பொருளைக்கொண்டு புசிக்கவேணும். ப்ரம்மாண்டபுராண மிவ்வாறே கூறுகின்றது.

ஈ - உ, ம - பா. கருமங்கள் செய்துவந்தாலும் ஜ்ஞாநிக்கு அவை முக்திக்கு விரோதமாகிய தந்தம்பயனைத் தராவாம். அஜ்ஞாநி க்ருஷ்ணமூர்த்தியை உபாஸநம் செய்யாதவனுக்கே கருமங்கள் மோக்ஷவிரோதமாக தந்தம்பயனைத் தருகின்றன. இவ்வாறு நாரதீயபுராணத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது.

ஈ - ங, ம - பா. விஷ்ணுவை யுபாஸியாதவர்கள், துன்பத்தைத்தருவது மஸுரர்களா லடையப்படுவதுமான நரகலோகத்தை யடைகிறார்கள். இதுதப்பாது. இவ்வாறு வாமநபுராணத்திலுங் கூறப்பட்டது.

ஈ - ச, ம - பா. இந்த சுருதியின் பொருள் ப்ரம்மாண்டபுராணத்தில் சொல்லப்பட்டது.

ஈ - ரு, ம - பா. இந்த சுருதியின்படி தத்வஸம்ஹிதையில் கூறப்பட்டது.

ஈ - சு, ம - பா. ஆத்மஸ்வரூபத்தை யறிந்தவனுக்கு பயமில்லை. இந்த விஷயம் ஸௌகராயண ச்ருதியிலுஞ் சொல்லப்படுகிறது.

ஈ - எ, ம - பா. எல்லாபூதங்களிலு மிருக்கின்றவர் பரமாத்மா ஒருவரே, என்றறிந்தவனுக்கு சோகமோஹங்களொன்றுமில்லை. ஜீவபரமாத்மாக்களுக்கு ஐக்யமில்லை.

இந்தப்பொருள் பிப்பலாதசாகையிலுள்ள ச்ருதியில் நன்ருய் விளங்குகின்றது. கீழ்சுருதியில் கூறிய விஷயத்தையே இங்குங்கூறியது பரமாத்மா எங்குமிருக்கிருனென்பதில் தாத்பர்யத்தை விளக்குவதற்காம்.

ஈ - ௮, ம - பா. இவ்வுலகம் பொய்யல்ல மெய்யாய் சாச்வதமானது. இதை விஷ்ணுபடைத்தார். இது வராஹபுராணத்தில் விரிவாய் கூறப்பட்டிருக்கிறது. இந்த பரமாத்மா ஸர்வஜ்ஞர்.

ஈ - ௯, ௧௦, ௧௧, ௧௨, ௧௩, ௧௪, ம - பா. இந்த சுருதிகளின்பொருள் கூர்மபுராணத்தில் வெளியிடப்பட்டிருக்கின்றது.

ஈ - ௧௫, ௧௬, ௧௭, ம - பா. இங்கு ஸூர்யமண்டலத்திலிருக்கும் பரமாத்மாவை யுபாஸிக்கிற ப்ரகாரஞ்சொல்லப்படுகிறது; இவ்விஷயம் இராமஸம்ஹிதையில் கூறப்பட்டது. இதனுல் ஜீவபரமாத்மாக்களுக்கு பேதம் ஸாதிக்கப்பட்டது.

ஈ - ௧௮, ம - பா. இந்த சுருதிக்கும் இராமஸம்ஹிதையின் வசநப்படி தத்வத்தில் பொருள்கொள்க.

ஈ - ௧௯, ம - பா. இந்த ச்ருதிக்கு ப்ரம்மதர்க்கவசநத்தை வ்யாக்யாநமாகக் கொள்க. நித்யமும் பக்தர்களை விஷ்ணுஸ்மரிக்கிருர் என்றுகருத்து.

ஈ - ௨௦, ம - பா. ஜ்ஞாநபக்திகளுடன் உன்னை வணங்குகிறும் எங்களுக்குப் பாபத்தைப்போக்கி ஜ்ஞாநத்தைத் தரவேணும் இந்தசுருதிக்கு, ஸ்காந்தபுராணத்தில் விவரணம் செய்யப்பட்டது.

பதாந்வயார்த்தபேதங்கள்.

கீழ்ச்சொல்லிய அந்தந்த புராணுதிகளிலிருந்து வசநங்கள் ப்ரமாணங்களாக எடுக்கப்பட்டு அந்தந்த சுலோகவாக்யங்க ளங்கங்கெழுதப்பட்டன. இதனுல் அந்தவசநங்கள் அந்தச்ருதிகளுக்கு உபப்ரம்மணங்க ளாகையாலந்த வசநங்களுக்கிணங்க அந்தசுருதிகளுக்குப் பொருள் சொல்லவேணும். ஆகையா லத்வைதத்திற் கிடமில்லை என்றுகருத்து வெளியிடப்பட்டது. அந்தந்தச் லோக வாக்யங்களையெல்லா மிங்கெழுதி அவற்றிற் கெல்லாம் பொருள் கூறுவதில் விஸ்தரமாகுமென்று விசேஷக்கருத்துக்களே யெழுதப்பட்டன. எழுதாத விடங்களில் இராமாநுஜ பாஷ்யத்தின் கருத்துப் போலவே என்று கண்டுகொள்க. அவ்விரண்டுபாஷ்யங்களிலும் இவ்வுபநிஷத்து பதினெட்டு மந்திரங்களாகப் பிரிக்கப்பட்டாலும் இந்த பாஷ்யத்தில் இருபது மந்திரங்களாகப் பிரிக்கப்பட்டது. "யோஸாவஸௌ புருஷஸ் ஸோஹமஸ்மி" என்கிற வாக்யத்தையும், "ஓங்க்ரதோஸ்மரக்ருதம்ஸ்மர" என்கிற இரட்டித்துப் படிக்கப்பட்ட இந்தவாக்யத்தையும் தனிமந்திரமாகக் கொண்டபடியால், இருபது மந்திரங்களாயின வென்றறிக.

ஸ்ரீபரப்ரம்மணேநமஃ

ஈசாவாஸ்யோபநிஷத்திற்குமத்வபாஷ்யம் முற்றிற்று.

ஸ்ரீபரப்ரம்மணேநம:.

𑌕𑍇𑌨𑍋𑌪𑌨𑌿𑌷𑌦𑍍𑌵𑌿𑌷𑌯𑌭𑌾𑌷𑍍𑌯𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌾𑌃.

ம - பா. இவ்வுபநிஷத்து நான்குகண்டங்களுக்கும் பொருள் ப்ரம்மஸாரத்தில் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. சதுர்முகப்ரம்மாவை, உருத்திரன் விஷ்ணுதத்வத்தை யறியவிரும்பி, ப்ரச்நம்பண்ணினதற்கு சதுர்முகப்ரம்மா இந்த உபநிஷதர்த்தத்தை யுபதேசித்திருக்கின்றார். பார்க்கடலில் கண்வளர்ந்தருளுகிற மகாவிஷ்ணுவை இந்த உபநிஷத்து ப்ரதிபாதிக்கின்றது. இதனாலும் ஜீவாத்மாக்களுக்கும் ப்ரம்மத்திற்கும் பேதமேவெளியிடப்பட்டது. இதனால் ஸமஸ்ததேவதைகளிலும் விஷ்ணுவேசிறந்தவரென்று காட்டப்பட்டது. இந்த உபநிஷத்தி லர்த்தத்தை சிலவிடங்களில் மற்றும்சில சுருதிகளும், கீதையும் சப்தநிர்ணயமும் வித்யாநிர்ணயமும் வெளியாக்குகின்றன.

பதாந்வயார்த்தபேதங்கள்.

இவ்வுபநிஷத்திற்கு வ்யாக்யாநமாக ப்ரம்ம ஸாரத்தில் சுலோகங்களையேஎழுதி யிருக்கிறார். முடிவில்சப்தநிர்ணயம் முதலியவற்றையும் ப்ரமாணமாகக் காட்டியிருக்கிறார். மற்றசில பதார்த்தங்கள் மிகவும் பேதப்படவில்லை. ஒவ்வொரு மந்திரத்திற்கும் தனியே வ்யாக்யாநம் செய்யப்படவில்லை என்றறிக.

ஸ்ரீபரப்ரம்மணேநம:.

கேநோபநிஷத்திற்கு மத்வபாஷ்யம் முற்றிற்று.

ஸ்ரீபரப்ரம்மணேநம:.

𑌕𑌠𑍋𑌪𑌨𑌿𑌷𑌦𑍍𑌵𑌿𑌷𑌯𑌭𑌾𑌷𑍍𑌯𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌾𑌃.

ம - பா. இவ்வுபநிஷத்தில் முதலத்யாயம் முதல்வல்லியில், அக்நியிலிருக்கிற பகவானை யுபாஸிக்கும் க்ரமம்முதலியவை சொல்லப்படுகின்றன. இந்தவல்லியிற் சொல்லுகிற அர்த்தங்களுக்கு வ்யாக்யாநங்களாக ப்ரம்மஸாரம், கதிஸாரம், பாத்மம், தத்வஸாரம் ப்ரம்மாண்டம், இவற்றிலுள்ள வசநங்களைக் காண்க. சிலவிடங்களில் கீதாதிவசநங்களையும் ஸம்வாதமாகக்கொள்க. இந்தவல்லி பகவத்ஸ்வரூபத்தைப் பற்றியதேயாம். கேவல அக்நிஸ்வரூபமாத்திரத்தால் அந்தந்த லோகப்ராப்திபலம் ஸித்தியாமையாலென்க. முக்தாத்மஸ்வரூபத்துக்கு நியாமகனாகிய பரமாத்மாவின் ஸ்வரூபத்தை ப்ரச்நம் பண்ணுகிறது. சிவன்முதலிய தேவதாந்தரங்களை முக்திப்ரதராக நினைக்கக்கூடாது.

ம - பா. இவ்வுபநிஷத்து முதலத்யாயம் இரண்டாவதுவல்லியில் ஜீவபரமாத்மாக்களுக்கு பேதஞ்சொல்லப்பட்டது. இதற்கு முன்பின்ஸந்தர்ப்பங்கள் அநுகூலங்களாயிருக்கின்றன. அபேதவாதத்திற்கு பூர்வோத்தர விரோதங்களும் யுக்திவிரோதங்களும் ஸந்தர்பவிரோதங்களுமுண்டு. ஆகையா லத்வைதமதம் யுக்தமானதல்ல. மற்ற சுருதிபுராணங்களும் இதற்கு ஸம்வாதங்களாயிருக்கின்றன. அத்வைதமதத்திற்கு யுக்திவிரோதங்

கள் பலவிருக்கின்றனவென்பது புத்திமான்களுக்கு ஸ்புடமேயாம். ஆகையால் ஜீவ பரமாத்மாக்களுக்கு வாஸ்தவத்தில் பேதமுண்டென்பது விளங்கும்.

ம - பா. இந்த கடோபநிஷத்து முதலத்யாயம் மூன்ருவது வல்லியில் ஸமஸ்ததேவதைகளினு முத்தமருன ஸ்ரீமந்நாராயணனை த்யாநம் செய்யவேண்டுமென்று விதிக்கின்றது.

பதாந்வயார்த்தபேதங்கள்.

கடோபநிஷத்து முதலத்யாயம் மூன்று வல்லிக்கும் முக்யக் கருத்து மாத்திரமே யெழுதப்பட்டது. மற்ற பதார்த்தங்களில் பேதங்களில்லை. இதற்கு சில விடங்களிலிருந்து சில வசநங்கள் ஸம்வாதமாக எழுதப்பட்டன. ஒவ்வொரு மந்திரத்திற்கும் தனித்தனியே வ்யாக்யாநம் செய்யப்படவில்லை.

ம - பா. கடோபநிஷத்து இரண்டாவது அத்யாயம் முதல் வல்லியிலும் பரமாத்மாவுக்கும் ஜீவாத்மாவுக்கும் பேதம் வாஸ்தவமென்றறிவிப்பதற்கு ஜீவாத்மபரமாத்மஸ்வரூபத்தை விரிவாய்ச்சொல்லுகிறது. உறக்கம் முதலிய தோஷங்களையுடையவன்ஜீவன், ஜீவர்களுறங்கும்போதும் தான் விழித்துக்கொண் டிருப்பவனும் சுத்தனுமாகியவன், பரமாத்மா; இவ்வாறு ஜீவபரமாத்மாக்களுக்கு பேதம் வாஸ்தவமென்பதற்கு பலயுக்திகள் சொல்லப்படுகின்றன. ஆக இவ்வாறு ஜீவபரமாத்மாக்களுக்கு பேதத்தைக் கூறியதால் சிலர் குணங்களுக்கும் அவ்வோ குணங்களையுடைய த்ரவ்யத்திற்கும் பேதத்தைச் சொல்லுகின்ருர்கள். அது கூடாதென்று தூஷிக்கின்றது. இப்படியேகாரண விஷ்ணுஸ்வரூபத்திற்கும் அவதாரங்களில் விஷ்ணுஸ்வரூபத்திற்கும் பேதமில்லாதிருக்க பேதத்தை நினைப்பது கூடாது. இவ்விரண்டு விஷ்ணுஸ்வரூபமும் பரப்ரம்மமேயாம். விஷ்ணு என்ருலும் பரப்ரம்மம் என்ருலும் பொருளொன்றே யாமென்றறிக.

ம - பா. கடோபநிஷத்து இரண்டாவது அத்யாயம் இரண்டாவது வல்லியிலும், ஜீவபரமாத்மாக்களுடைய ஸ்வரூபத்தை சோதித்து, பேதத்தை நிலைநிறுத்தி பரமாத்மாவுக்குவ்யாப்தியைச்சொல்லி கீழ்ச்சொன்னவற்றையே விஸ்தரித்திருக்கின்றது. இந்த வல்லியில்கூறிய இந்த விஷயங்களைத் தெளிவாகச் சொல்லுகிற கூர்மபுராணத்தியவசநங்களையும் மஹாவராஹ புராணவசநங்களையும் இந்த வல்லிக்கு வ்யாக்யாநமாகக் காண்க.

ம - பா. கடோபநிஷத்து இரண்டாவது அத்யாயம் மூன்ருவது வல்லியில் இந்த ஜகத்து ஸத்யமென்றும் ப்ரவாஹநித்யமென்றும் இதற்கு ஹரிஎன்கிற பரப்ரம்மமே மூலமாயிருக்கின்ற தென்றும் அந்த ஹரி, ஜீவர்களுக்குள் வஸிக்கிருரென்றும். இவ்விடத்திலிருக்கின்ற ஹரியை ஜ்ஞாநத்ருஷ்டியாலே யறியலாம். கண்ணுடியில் முகம்போல பித்ருலோகத்திலறியலாம். கந்தர்வலோகத்தில் அதைவிட ஸ்பஷ்டமாய்க்காணலாம். ப்ரம்மலோகத்தில் மிகவும் ஸ்பஷ்டமாய்க்காணலாம். என்றும், ஸர்வ தேவதைகளினும் விஷ்ணுவே உத்தமோத்தமரென்றும். இதை யறிந்தவன் ஸம்ஸாரபந்தத்திலிருந்து விடுபடுவானென்றும், ஸ்ருஷ்டிலயங்களுக்கு விஷ்ணுவே காரணமென்றும், சொல்லப்பட்டது. ஆகையால் விஷ்ணுவே ஸர்வோத்தம தேவதை யென்பது ஸித்தமாயிற்று.

ஸ்ரீபரப்ரம்மணேநம:

கடோபநிஷத்திற்கு மத்வபாஷ்யம் முற்றும்.

பரப்ரம்மணேநம:

ப்ரச்நோபநிஷத்பாஷ்யப்ராரம்ப:

ம - பா. ப்ரஜைகளை பரிபாலநம் செய்வதினுல் ப்ரஜாபதியென்று பெயரையுடைய விஷ்ணுவானவர், ஸூர்யனென்கிற பெயரையுடைய வாயுவையும், சந்திரனென்று பெயரையுடைய ஸரஸ்வதியையும், ஸூர்யசந்திரர்களிடத்தில் ஸ்ருஷ்டித்து, அவர்களிடத்திலாவேசித்து, ஸமஸ்தத்தையும் ஸ்ருஷ்டித்தார். அமூர்தங்களாகிய வஸ்துக்களில் வாயுவும், மூர்தங்களாகிய வஸ்துக்களில் ஸரஸ்வதியுமிருக்கின்றுர்கள். என்று ஸ்ருஷ்டிவிஸ்தரம் ப்ரச்நோபநிஷத்து முதலாவது ப்ரச்நத்தில் சொல்லப்படுகிறது; இதற்கு வ்யாக்யாநமாக ப்ரஜாபதி ஸம்ஹிதையிலுள்ள வசநங்களைக்காண்க.

ம - பா. ப்ரச்நோபநிஷத்து இரண்டாவது ப்ரச்நத்தில், வாயுரக்நி:, என்கிற மந்திரத்தில் வாயுசப்தத்தால் பூதவாயுவைச் சொல்லுகிறது. ப்ராணசப்தத்தால் ப்ரதாநவாயுவைச் சொல்லுகின்றதென்றுணர்க.

ம - பா. ப்ரச்நோபநிஷத்து மூன்றுவது ப்ரச்நத்தில் ஆத்மந:, என்கிற பதத்திற்கு பரமாத்மாவினிடத்திலிருந்து, என்று பொருள். அந்த பரமாத்மா விஷ்ணு. அந்த விஷ்ணுவினிடத்திலிருந்து வாயு உண்டானுன். அந்த வாயுவினிடத்திலிருந்து ஸமஸ்த தேவதைகளுமுண்டானுர்கள். அந்த வாயுவே பஞ்சப்ராண ஸ்வரூபியாய்க்கொண்டு, மோக்ஷம் முதலிய வற்றைத் தருகின்றுன். என்று சொல்லுகிறது. இந்த ப்ரச்நத்திற்கு வ்யாக்யாநமாக ப்ரபஞ்சநத்திலுள்ள வசநங்களைக்காண்க.

ம - பா. ப்ரச்நோபநிஷத்து நாலாவது ப்ரச்நத்தில், பரமாத்மாவுக்கு ஜீவர்கள் சரீரம்போன்றவரென்றும் அசேதநமாகிய சரீரத்திற்கு ஸுகங்கூடாமையால் ஜீவர்களிடத்தில் ஸுகமுண்டாகின்றதென்றும், சொல்லப்பட்டிருக்கின்றது. இதற்கும் புராண வசநங்களை வ்யாக்யாநமாகக்காண்க.

ம - பா. ப்ரச்நோபநிஷத்து ஐந்தாவது ப்ரச்நத்தில், ப்ரணவத்தினுல் ஹரி என்று நாமத்தையுடைய பரமாத்மாவாகிய நாராயணனை த்யாநம்செய்து ப்ரம்மலோகத்தையடைந்து அங்கு ப்ரம்மாவினுல் தத்வஜ்ஞாநத்தைப் பெற்று, முக்திபெறுகிறுனென்பதில் ஸந்தேஹமில்லை என்று சொல்லப்பட்டது.

ம - பா. ப்ரச்நோபநிஷத்து ஆறுவது ப்ரச்நத்தில், ஸமஸ்தகாரணமாகியவன் வாஸுதேவனென்று நாமத்தையுடைய பரமாத்மா. அவனைவிட வேறொருவரும் உத்தமரில்லை என்று சொல்லவேண்டுவதில்லை; ஸமாநரேயில்லை யன்றே. ஆகையாலவனை யறிந்து முக்தனுவானென்றும், உத்பத்தியில் க்ரமமும் சொல்லப்பட்டது. ஸமுத்திரத்தில் சேர்ந்த நதிஜலங்களுக்கு வேறு நாமரூபங்களுண்டாயிருந்தாலும் மூடராலறியப்படாததுபோல பரமாத்மாவையடைந்த ஜீவர்களுக்கு பேதப்பட்ட அநந்தநாமரூபங்களுண்டாயிருக்கின்றன. பேதப்பட்டவை யென்பதினுல்சூந்யமாயழிந்தனவென்று பொருள்சொல்லுகிறவர்கள்மிகவுமறிவிலாதவர்கள். பேதசப்தத்தை விநாசப்பொருளில் ப்ரயோகிப்பதில்லை. குடம் பேதப்பட்டது பிந்நமாயிற்றென்றுலும், அநேகாவயவங்களாய்ப் பிறிந்ததென்று பொருளாகிறதேயன்றி யழிந்ததென்று பொருளில்லை. அங்கு குடமழிந்ததென்பது வ்யங்க்யமாய்த் தோற்றுகின்றது. "பித்யதேதாஸாம்நாமரூபே" என்கிற விடத்தில் வ்யங்க்யமாயுங்கூட நாசந்தோற்றுது. நாமரூபங்களுக்கு கபாலமுதலிய வற்றைப்போல் நாநாபாவங்கூடாமையாலென்க. ஆகையால் பிந்நமாகிற தென்பதற்கு இவ்விட

த்தில் பரமாத்மாவுக்குண்டாகிய நாமரூபங்களைவிட வேறான நாமரூபங்களையுடையவர்களாகின்றார்கள் முக்தஜீவாத்மாக்களென்றே பொருள். இத்தால் முக்தியிலும் ஜீவபரமாத்மாக்களுக்கு பேதமுண்டென்பது ஸ்பஷ்டமாய் விளங்குகின்றதன்றோ. "அராஇவரதநாபௌகலாயஸ்மின்ப்ரதிஷ்டிதா:" என்று சொல்லுகிற த்ருஷ்டாந்தத்தாலுமிது விளங்கும். ஆகையால் முக்தியிலும் நாமரூபங்கள் ஜீவாத்மாக்களுக்குண்டென்றறியவேணும். சிலர், 'பரமாத்மாவில் ஜீவாத்மாக்கள் அஸ்தமிக்கிறார்கள்' என்றதினால் ஜீவர்களழிந்து போனார்களென்று தோற்றுகிறதென்று ஐயமுறுவர், அங்ஙனல்ல. 'ஸூரியன் அஸ்தமிக்கிறான்' என்றால் காணப்படுவதில்லையென்று பொருளேயன்றி, அழிந்துபோனானென்று பொருளல்லவன்றோ. அப்படியே ஜீவாத்மாக்களை யப்போது அறிவிலாதாறறியார்களென்று அஸ்தமிக்கிறார்களென்று சொல்லிற்றேயன்றி அழிந்துபோகின்றார்களென்று சொல்லவில்லை. ஆகையாலஸ்தமிக்கிறார்களென்பதினால் அழிகிறார்களென்று பொருள்கூறுவது யுக்தமல்ல. "நாமரூபாத்விமுக்த:" என்கிற விடத்தில் நாமரூபங்களால் விடுபட்டவனென்று பொருள் சொல்லக்கூடாது. முக்த சப்தத்திற்கு விடுபட்டவனென்று பொருளாயினும் விமுக்த சப்தத்திற்கு அப்பொருள் சொல்லக்கூடாது. எப்படியென்றால், ப்ரியமென்றால் இஷ்டமென்று பொருள். விப்ரியமென்றால் அந்தப்பொருள் இல்லை. அநிஷ்டமென்று பொருளாகிறதன்றோ. அப்படியே இங்கும் விமுக்த: என்கிற பதத்திற்கு நாமரூபங்களாலே விடுபடாதவனென்றே பொருளாகும். இப்படியே பல உதாரணங்களையுங்காண்க. "நாமரூபேவிஹாய" என்கிற விடத்திலும் 'நாமரூபே, அவிஹாய' என்று பதவிபாகம் செய்து நாமரூபங்களை விடாதவனாயென்று பொருள் சொல்லக்கடவது. "அநந்தம்வைநாமாநந்தாவிச்வேதேவா:" என்றும், "யத்ரபூர்வேஸாத்யாஸ்ஸந்திதேவா:" என்றும் இப்படி பல ச்ருதிகளாலும் அநேகரூபநாமங்களையடைந்திருப்பதாகச் சொல்லியிருக்கின்றதன்றோ. ஆகையால்தன்னில்பேதப்பட்ட அநந்தமுக்தர்களினு முத்தமனாய் பரமாத்மா நாராயணன் விளங்குகிறானென்பதுஸித்தம். இவ்விடத்திற்குப் பலவிடங்களிலுள்ள சுருதிஸ்ம்ருதி புராணவசநங்களை வ்யாக்யாநமாகக்காண்க.

ஸ்ரீபரப்ரம்மணேநம:.

ப்ரச்நோபநிஷத்திற்கு மத்வபாஷ்யம் முற்றிற்று.

ஸ்ரீபரப்ரம்மணேநம:

முண்டகோபநிஷத்பாஷ்யாரம்ப:.

ம-பா. வைவஸ்வதமநுவுக்கு ஆதியில் ப்ரம்மாவினிடத்திலிருந்து, அதர்வா என்பவன்பிறந்தான். பின்பு, மித்திரனும் வருணனும் ஹேதியும், ப்ரஹேதியும்,பிறந்தார்கள். ப்ரம்மாவினுடைய முதல் கல்பத்தில் சிவன் பிறந்தான். வராஹகல்பத்தில் ஸநகாதிகளுண்டானார்கள். இந்தப்ரம்மா விஷ்ணுவுக்குத் தலைமகனானவன். இருக்குமுதலிய வேதங்கள்விஷ்ணுவைஸ்தோத்திரம் செய்வதினால் பரவித்யையாகின்றன.இல்லாதபோது அபரவித்யையாகின்றன. பராத்பரனாகியவிஷ்ணுவையே இதிஹாஸபுராணம்முதலிய ஸமஸ்தமும் பேசுகின்றது. இந்த விஷ்ணுவைப் புருஷோத்தமனென்றறிகிறவர்கள் மகாபாகவதர்களாகிறார்கள். வேதம் ராமாயணம் பாரதம் இவை யெல்லாவற்றிலும், முதலிலும் நடுவிலும் முடிவிலும், விஷ்ணுவே சொல்லப்படுகிறார். ஆகையாலே விஷ்ணுவே பூஜிக்கத்தக்கவர் த்யாநிக்கத்தக்கவர், நமஸ்கரிக்கத்தக்கவர். இந்த விஷ்ணுபூஜைக் குபயோக

மாகிய வேதங்களே பரவித்யைகள். கருமத்திற்குபயோகப்பட்டவை அபரவித்யைகள். இவ்விடத்திற்கு விஸ்தரவ்யாக்யாநமாக பரஸம்ஹிதை ப்ரம்மாண்ட புராணம், வராஹ புராணம் பாரதம் நாராயண ஸம்ஹிதை முதலியவற்றிலுள்ள வசநங்களைக்காண்க. வேதவ்ரதம் செய்தவனுக்கே வித்யாதிகாரமுள்ளது, இது வ்யாஸஸ்ம்ருதியிலும் விளங்குகின்றது. இது முதல் முண்டகம் முதல்கண்டம் போதிக்கின்றது.

ம - பா. நிவ்ருத்தி தருமம் மிகவும் சிறந்தது. காமத்தை விடுதல் முக்யம். வ்யாஸஸ்ம்ருதியையும் காண்க. ஆயினும் ஸங்கமில்லாதவனாய் கருமங்களை யநுஷ்டிக்கவேணும். பலசுருதிஸ்ம்ருதிகளை யுதாகரணமாக இவ்விடத்திற்கு அறியக்கூடும். இது முதல் முண்டகம் இரண்டாவது கண்டத்திற்குக் கருத்து.

ம - பா. அக்ஷரமென்றால் ப்ரக்ருதி, அதற்கு மேலான அக்ஷரம் லக்ஷ்மி, அதற்கு மேலான அக்ஷரம் பரவாஸுதேவன், இது இரண்டாவது முண்டகம் முதல் கண்டத்தில் விசேஷம். இங்கும் பல ப்ரமாணங்களுண்டு.

ம - பா. ஜ்ஞாநிகளுக்கு கோசரிக்கிற பரமாத்மா ஜ்ஞநசக்தி முதலிய குணங்களுடையவன் ஜீவர்களை நியமிகிறவன். குணஸ்வரூபம் முன் சொல்லப்பட்டது. இது இரண்டாவது முண்டகம் இரண்டாவது கண்டத்திற்கு விசேஷம். பாகவதம் முதலியவற்றிலிருக்கிற வசநங்களை அதற்கு வ்யாக்யாநமாகக் காண்க.

ம - பா. ஜீவன், கருமபலத்தை போக்யமாக நினைத்து புசிக்கிறான். வாஸ்தவத்தில் அது ஸ்வாதுவல்ல. பரமாத்மா புசிப்பதில்லை. இதனால் ஜீவபேதம் ஸித்தமாயிற்று. தத்வஸாரம் முதலிய வற்றிலுள்ள வசநங்களை வ்யாக்யாநமாகக் காண்க. இது மூன்றாவது முண்டகம் முதல் கண்டத்தில் விசேஷம்.

ம - பா. மூன்றாவது முண்டகம் இரண்டாவது கண்டத்தில், பரமாத்மா ப்ராணனை அதிஷ்டித்து ஆவேசிக்கிறாரென்றும், பிசாசு முதலியவை யாவேசித்து புருஷனைச் சேர்ந்து ஸுகாதிகளை யநுபவிப்பதை இதற்கு த்ருஷ்டாந்தமாகக் கொள்ளவேணு மென்றும், ஹரி என்கிற பகவானை யடைவது முக்தியென்றும், ப்ரம்மலோகத்தி லிருப்பவர்களுக்கு ப்ரம்மாவின் அந்தகாலத்தி லவனுடன் முக்தியென்றும், இந்த முக்தி ப்ரம்மத்துடன் ஐக்யமல்ல; அவிரோதத்தாலும் ஸாத்ருச்யத்தாலும், ஏகதேசத்தி லிருப்பதாலும், ஐக்ய முண்டென்று சொல்லப்படுகிற தென்றும் அது ஸ்வரூபத்தாலல்ல வென்றும், நித்யமும் பிந்நரூப முடையவர்களுக்கு, ஸமுத்திரத்தில் கலந்த நீருக்குப்போலவே ஐக்யங் கூடாதென்றும், நாமரூபங்களில்லை யென்பது அந்த நாமரூபங்களை யறிவது முக்தி பெறாதவருக்கு அஸாத்யமாகையா லென்றும், ஸமுத்திரத்தில் கலந்திருக்கிற நதீ ஜலத்தை தனித்தறிவதற்கு நம்போல் வாருக்குச் சக்தியில்லை யாயினும் அதைத் தனியே வாயுவானவ னறிந்து மேகங்களி லேற்றுகிறானென்றும், முக்தர்களான மநுஷ்யர்களிலும் தேவதைகளுக்கு ஏற்றமுண்டு இவ்வாறே மற்றோரிடத்திலும் தாரதம்யத்தை யறியவேணுமென்றும் அறியாதபோது நற்கதி யடைவது அஸாத்யமென்றும், ஆகையால் குணபூர்ணனான விஷ்ணுவே உத்தமனென்றும்; கருத்து அடங்கியிருக்கின்றது, இதைமுக்தவிவேகம் மகாவராஹம் முதலிய க்ரந்தங்களால் தெளிவாயறியலாம்.

ஸ்ரீபரப்ரம்மணேநமஃ.

முண்டகோபநிஷத்திற்கு மத்வபாஷ்யம் முற்றிற்று.

ஸ்ரீபரப்ரம்மணேநம꞉.

𑌮𑌾𑌣𑍍𑌡𑍂𑌕𑍍𑌯𑍋𑌪𑌨𑌿𑌷𑌦𑍍𑌭𑌾𑌷𑍍𑌯𑌪𑍍𑌰𑌾𑌰𑌮𑍍𑌭𑌃.

அவதாரிகை.

ம - பா. இந்த மாண்டூக்யோபநிஷத்திஞல் நான்குரூபங்களேயுடைய நாராயணனை மண்டூகரூபியாகிய வருணன் ஸ்துதிசெய்தான். இது பாத்மபுராணத்தில் சொல்லப்பட்டது.

ம - பா. ஜகத்துக்கெல்லா மாதாரமாயிருக்கின்றமையால் ஓமென்று பரமாத்மா சொல்லப்படுகிருன். ப்ருஹத்ஸம்ஹிதையிலிது விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. ஆக பூர்ணஞகின்றமையால் ஓங்காரமே எல்லாமென்று, ஸ்துதிசெய்கிறது. இந்த உபநிஷத்து நாலுகண்டங்களின் கருத்தும் ப்ரம்மதர்க்கம் ப்ரம்மாண்டம் முதலியவற்றில் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

பதாந்வயார்த்த பேதங்கள்.

இந்த மாண்டூக்யோபநிஷத் பாஷ்யத்தில் புராணவசநங்கள் விசேஷமாயெழுதப்பட்டிருக்கின்றன. பலவிஷயங்களில் இராமாநுஜபாஷ்யத்திற்போலவே கருத்து கொள்ளப்பட்டிருக்கிறது.

மாண்டூக்யோபநிஷத்திற்கு மத்வபாஷ்யம் முற்றும்.

ஸ்ரீபரப்ரம்மணேநம꞉.

ௐ

பரப்ரம்மணேநம:

தைத்திரீயோபநிஷத்

த்ராவிடபாஷ்யப்ராரம்ப:

தைத்திரீயோபநிஷத்திற்குச் சங்கராசாரியர் செய்த பாஷ்யத்தில் மங்களச்லோகங்கள்.

க. 𑌯𑌸𑍍𑌮𑌾𑌜𑍍𑌜𑌾𑌤𑌂 𑌜𑌗𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌂 𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑍇𑌵 𑌵𑌿𑌲𑍀𑌯𑌤𑍇 ।
𑌯𑍇𑌨𑍇𑌦𑌂 𑌧𑌾𑌰𑍍𑌯𑌤𑍇 𑌚𑍈𑌵 𑌤𑌸𑍍𑌮𑍈 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌤𑍍𑌮𑌨𑍇 𑌨𑌮𑌃 ॥

உ. 𑌯𑍈𑌰𑌿𑌮𑍇 𑌗𑍁𑌰𑍁𑌭𑌿𑌃 𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌪𑌦𑌵𑌾𑌕𑍍𑌯𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌤𑌃 ।
𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌾𑌸𑍍𑌤𑌾𑌨𑍍𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌣𑌤𑍋𑌽𑌸𑍍𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ॥

౧. యస్మాజ్జాతంజగత్సర్వంయస్మిన్నేవవిలీయతే ।
యేనేదన్ధార్యతే చైవతస్మైజ్ఞానాత్మనేనమః॥

౨. యైరిమేగురుభిఃపూర్వమ్పదవాక్యప్రమాణతః ।
వ్యాఖ్యాతాస్సర్వవేదాన్తాస్తాన్నిత్యమ్ప్రణతోఽస్మ్యహమ్॥

முதல்மங்களசுலோகத்தின் கருத்து.

இவ்வுலகத்திற்கு எவன் முதற்காரணமும், நிமித்தகாரணமு மாகின்றானோ; எவனிடத்தில் இவ்வுலகு லயம்பெறுகின்றதோ; எவனாலிவ்வுலகு தரிக்கப்படுகின்றதோ; அந்தஜ்ஞாநமூர்த்தியை நாம் வணங்குவோமாக.

இரண்டாவதுமங்களசுலோகத்திற்கு கருத்து.

எந்த பூர்வாசாரியர்களால் வேதாந்தங்களுக்கு தர்க்கவ்யாகரண ப்ரமாணங்களுக்கிணங்க வ்யாக்யாநம்செய்யப்பட்டதோ; அவர்களை எப்போதும்யான்வணங்குகின்றேன்.

சங்கரபாஷ்யத்தில் ப்ரதிஜ்ஞைசுலோகம்.

𑌤𑍈𑌤𑍍𑌤𑌿𑌰𑍀𑌯𑌕𑌸𑌾𑌰𑌸𑍍𑌯 𑌮𑌯𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌤𑌃 ।
𑌵𑌿𑌸𑍍𑌪𑌷𑍍𑌟𑌾𑌰𑍍𑌥𑌰𑍁𑌚𑍀𑌨𑌾𑌂 𑌹𑌿 𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑍇𑌯𑌂 𑌸𑌂𑌪𑍍𑌰𑌣𑍀𑌯𑌤𑍇 ॥

తైత్తిరీయకసారస్య మయాచార్యప్రసాదతః ।
విస్పష్టార్థరుచీనాంహివ్యాఖ్యేయంసమ్ప్రణీయతే॥

இதற்குக் கருத்து.

இந்த தைத்திரீயோபநிஷத்திற்கு, குருகடாக்ஷத்தினால் இவ்வுபநிஷத்தில் பதார்த்தக்கருத்துக்களை யறியவிரும்புகிறவர்களுக்கு உபகாரமாக என்னால் வ்யாக்யாநம் செய்யப்படுகிறது.

சங்கரபாஷ்யத்தி லவதாரிகை.

பூர்வகாண்டத்தில், பலாபிஸந்தி என்கிற பலகாமனையோடு கூடியவர்களுக்கு ஜ்யோதிஷ்டோமம்முதலிய காம்யகருமங்களும், பலகாமனையில்லாதவர்களுக்கு கீழ்ச்செய்துள்ள பாபகருமங்களைக் கழித்துத்தருகிற தருமங்களும், கூறப்பட்டன. ஆக, கருமாநுஷ்டாநம் ஸம்ஸாரத்திற்குக் காரணமாகின்றது. ஆகையால், ஸம்ஸாரகாரணமாகிய கருமாநுஷ்டாநத்திற்குஹேதுவான காமத்தை நீக்குவதற்கு ப்ரம்மவித்யை உபநிஷத்தில் கூறப்படுகின்றது. வேதத்தால் கருமம் விதிக்கப்பட்டாலு மிதி லாசையுடையவ னிதைச் செய்யக்கடவனென்று விதிக்கப்படுகின்றமையால் காமமென்கிற ஆசையில்லாதவன் செய்யவேண்டுவ தில்லையாகையால் கருமத்தை யநுஷ்டிக்கச்செய்கிறது காமமேயாம், காமத்தாலன்றோ கருமத்தில் ப்ரவர்திக்கின்றான். காமங்களையடைந்தவர்களாயின், ஆத்மசுகத்தி லிருக்கின்றமையால், காமமற்றவர்களாகின்றமையால் ஒன்றிலும் ப்ரவர்திக்கமாட்டார்களன்றோ. ஒருமனிதனொன்றை விரும்பினவன் அதை யடைந்தபின் மற்றொன்றை விரும்புகிறானேயன்றி அதையேவிரும்புகின்ற தில்லையன்றோ. ஆகையா லெல்லாமடைந்தானாகில் ஒன்றையும் விரும்பானன்றோ. இவ்வாறு எல்லாமடைந்தவனை அவாப்தஸமஸ்த காமனென்றும் ஆப்தகாமனென்றுஞ் சொல்லுவர். ஆக, ஆப்தகாமன், தனக்கொன்றிலு மாசையில்லாமையினாலே ஒன்றிலும் ப்ரவர்திக்கமாட்டான் தன்னிலேதான்நிற்பான். இப்படி தன்னில்தான்நின்றபின், ஆத்மசுகத்தை யநுபவிக்கிறான். ஆத்மசுகத்தை யநுபவித்தா லவாப்தஸமஸ்தகாமனாகிறான். 'ஆத்மா' என்றாலும் 'தான்' என்றாலும்,பொருளொன்றேயாமென்றுணர்க. ஆக, காமங்களையடைவதே காமநிவ்ருத்திக்கு ஹேதுவாகையால், ப்ரம்மவித்யை காரணமாகாமையால் காமநிவ்ருத்திக்காக ப்ரம்மவித்யையென்று சொல்லிய தெங்ஙனமென் றய்யமுற வழியில்லை. ஏனென்றால் ப்ரம்மவித்யையினால் ஆத்மஜ்ஞாநமுண்டாகிறது. ஆத்மாவே ப்ரம்மம். இத்தால் ப்ரம்மவித்யையினா லாத்மஜ்ஞாநமுண்டாவதெங்ஙனமென்கிற ஸந்தேஹம்தீரும். இந்த ஆத்மஜ்ஞாநமாவது, ஆத்மாவேஸத்யம் மற்றவையெல்லாம் அஸத்யமென்பதாம். மெய்யானவஸ்துவில் ஆசையுண்டாகுமேயன்றி பொய்யானவஸ்துக்களி லாசையுண்டாகாது. ஆகையால் ஆத்மஜ்ஞாநத்தால் ஆசைஎன்கிற காமம் நீங்குகின்றது. ஆனதால் ஆசைப்பட்ட வஸ்துக்களையடைந்தவனுக்கு ஆசைநீங்குவதுபோல் ஆத்மஜ்ஞாந முடையவனுக்கும் காமமென்கிற ஆசை நீங்குகின்றமையால் ஆத்மஸ்வரூபத்தை யறிந்தவனை ஆப்தகாமனென்று சொல்லுகிறது. இவ்வாறு ப்ரம்மவித்யையினால் காமங்கள் கழிந்துபோகின்றமையாலென்க. இப்படி யறிந்தவனுக்கு மோக்ஷத்தைச்சொல்லுகிறது. மோக்ஷமாவது அவித்யைநீங்கி யாத்மஸ்வரூபத்தி லிருப்பதேயாம். அவித்யையாவது இதரவஸ்துக்களை ஸத்யமென்றுநினைத்திருப்பது இந்த அவித்யை நீங்குவது ஆத்மாவே ஸத்யமென்கிற வித்யையினாலே

இப்படி சுருதிகள் போதிக்கின்றன. அவையாவன, "அபயம்ப்ரதிஷ்டாம் விந்ததே" "ஏதமாநந்தமயமாத்மாந முபஸங்க்ராமதி" இவைமுதலியவை இவற்றிற்குப்பொருள். ஆத்ம ஸ்வயம்ப்ரகாசாநுபவமே மோக்ஷ மென்பதாம். ஆக இப்படிப்பட்ட மோக்ஷத்திற்கு விரோதியான ஸம்ஸாரத்திற்கு ஹேதுவாயிருக்கிற கருமங்களுக்குக் காரணங்களான காமங்களை யுண்டுபண்ணுகிற அவித்யை நீங்குவதற்கு ப்ரம்மவித்யை உபநிஷத்தில் கூறப்படுகின்றமையால், உபநிஷத்து மிகவும் முக்யமானது. இதனால் எல்லாசுகங்களும் கருமத்தினாலாகின்றனவாகையால் அந்த கருமத்தைச் சொல்லுகிற பூர்வகாண்டமே முக்யமென்றும் உபநிஷத்து அநவச்யகமென்றும் கூறுவதுகூடாது என்பது விளங்கிற்று. இனிகாம்யகருமங்களைச் செய்யாமல் பாபகருமங்களையும் விட்டிருந்தால் இதற்குமுன்செய்த பாபகருமங்கள் துக்காநுபவத்தாலொழிந்துபோ மாகையால் ப்ரம்மவித்யை யின்றியே மோக்ஷமுண்டாகுமென்றுவது, மோக்ஷமென்பது மகாசுகமாகையால் ஸ்வர்கமென்பதும் மகாசுகமேயாகையால், ஸ்வர்க்கத்திற்கு கருமமேஸாதநமென்று சுருதி சொல்லுகின்றமையால் கருமாநுஷ்டாநத்தாலே மோக்ஷமும் ஸித்திக்குமென்றுவது சொல்லலாமேயெனில்; அதுபொருந்தாது; அநேகபூர்வஜந்மங்களில் செய்த கருமங்கள் பலவாயும் விருத்தங்களாயு மிருக்கின்றமையால் இந்த ஜந்மத்திலே ஸமஸ்தகருமங்களு மநுபவித்துக்கழிக்க முடியாவாம். நரகஹேதுவான கருமத்தையும் ஸ்வர்க்கஹேதுவான கருமத்தையு மிந்த சரீரத்திலநுபவித்துக்கழிப்பது எப்படிகூடும். முன்செய்த கருமங்களில் இந்தஜந்மத்தில் பலனைத்தருகிற கருமங்கள்பல. ஜந்மாந்தரத்தில் பலனைத்தருமவை பல இவ்வாறு பலகருமங்க ளிருக்கின்றமையாலென்க. ஆனதா லிந்தஜந்மத்தி லநுபவித்த கருமங்கள்போக மற்றுள்ள கருமங்களால் ஜந்மாந்தரத்தை யடைவதுகூடும். இத்தாலிந்த ஜந்மத்தி லநுபவித்தருத க்ரமசேஷங்களுண்டென்று நிலைநிறுத்தப்பட்டது. இவ்வாறே சுருதிஸ்ம்ருதிகள்பலவும் முறையிடுகின்றன. அவையாவன "தத்ய இஹரமணீயசரணாঃ" "ததச்சேஷேண" இவைமுதலியவை. இவற்றிற்குப்பொருள். ஒருஜந்மத்தில் சிலகரும பலங்களை யநுபவித்து கருமசேஷங்களால் புண்யபாபங்களுக்குத் தக்கபடி ஜந்மாந்தரங்களை யடைகின்றார்களென்பதாம். இனி, நீங்கள்கூறும்வண்ணம் கருமங்கள் பலவுளவாயினும் அவையெல்லா மநுபவத்தா லொழியாவாயினும், அநுபவத்தாலழிந்த கருமங்களை யொழிந்த கருமசேஷங்கள் நித்யகருமங்களாகிய ஸந்த்யாவந்தந பஞ்சமஹாயஜ்ஞாதிகளா லழிந்துபோமாகையால் வேறுயத்நமின்றியே மோக்ஷம் ஸித்திக்குமென்று சொல்லவழியில்லை. ஏனென்றால்; நித்யகருமங்கள் செய்யாதபோது பாபத்தை போதிக்கின்றமையாலென்க. அதாவது, நித்யகருமங்கள் அவற்றைச்செய்யாவிடில் வருகிறபாபத்தை வரவொட்டாமற் செய்வதற்கு செய்யப்படுகின்றனவேயன்றி கீழ்ச்செய்த பாபங்களைப் போக்குவதற்கன்று. அப்படிச்ருதிவிதியாமையால்.ஆகையால்,

இவற்றைச் செய்யாவிட்டால் வரப்போகிற துன்பம்வாராமலிருப்பதற்காக நித்யகருமங்கள் செய்யப்படுகின்றனவேயன்றி கீழ்ச்செய்துள்ள பாபங்களைத் துலைப்பதற்கன்றென்று அனைவரு மொப்புக்கொள்ளவேணு மென்றவாறு ஆகையால் வேறுயத்நமின்றியே மோக்ஷம் ஸித்திக்குமென்பது கூடாதாயிற்று. கருமசேஷத்தால் ஜந்மாந்தரமே வருமாகையாலென்க. உங்களிஷ்டப்படி முன்செய்த கருமங்களையும் நித்யகருமங்கள் போக்குமென்று ஒப்புக்கொண்டாலும் பாபகர்மங்களைப் போக்குமேயன்றி புண்யகர்மங்களைப்போக்காது. ஏனென்றால் நித்யகருமங்களும் புண்யரூபங் ளாகின்றமையால் புண்யகருமங்களோடு இவற்றிற்கு விரோதமில்லை. ஒருவன், தனக்குவிரோதியையழிப்பானேயன்றி தன்னோடுசேர்ந்தவனைத் தானழிக்கமாட்டான். ஆகையால் விரோதிகளானபாபகர்மங்களை நித்யகருமங்கள் போக்குமேயன்றி விருத்தங்களாகாத புண்யங்களைப் போக்கமாட்டாவன்றோ. புண்யத்தோடு புண்யம் விரோதிக்குமோ. ஆகையாலே புண்யஜந்மங்களாலே மோக்ஷந்தடைப்படும். இதுவுமன்றி, இந்த ஜந்மத்தில் காம்யகர்மங்களைச் செய்மாமலிருப்பதும் தத்வஜ்ஞாநமில்லாதவனுக்கு ஸாத்யமன்று. ஏனென்றால் தத்வஜ்ஞாநமில்லாத போது காம்யகருமங்களைச் செய்வதற்குக் காரணமான காமங்கள் நீங்காமையால் காரணமுண்டாயிருக்கக் காரியம் பிறவாதிராமையாலென்க. ஆத்மஜ்ஞாநமில்லாதவனுக்கு காமங்கள்நீங்குமோ; இனி ஆத்மஜ்ஞாந முடையவர்களுக்கும், காமமிருக்கக்காண்கின்றமையால், தத்வஜ்ஞாநமும் காமநிவ்ருத்திக்கு ஹேதுவல்லவென் றையப்படவேண்டாம். தத்வஜ்ஞாநிக்குக் காமிக்கப்படும் பொருளேயில்லாமையால் காமமொருபோதுங்கூடாது. ஆத்மாவே ப்ரம்மமென்று முன்பேசொன்னோம். ஆகையால் ப்ரம்மத்தையடையவேணுமென்கிற காமமுமில்லையன்றோ. இதுவுமன்றி, நித்யகருமங்களைச் செய்யாமலிருக்கப்போகாதென்று ஒப்புக்கொண்டபடியால் அந்த நித்யகருமங்களாலுண்டாகிற புண்யபலத்தை நீக்குவதற்கு உபாயமில்லாமையாலும் மோக்ஷத்திற்கு வழியில்லை. புண்யபாபங்களிரண்டும் மோக்ஷத்திற்கு விருத்தங்களன்றோ. நித்யகருமங்கள் புண்யத்திற்கு ஹேதுவல்ல; பாபம்பிறவாமலிருப்பதற்கு ஹேது என்று முன்சொல்லப்பட்டதேயென்றால் அதுபொருந்தாது; ஏனென்றால், அபாவத்தினால் ஒருவஸ்துவும் பிறவாது என்பது எல்லோருமங்கீகரித்தவிஷயம். நித்யகருமங்களைச்செய்யாமையினால் பாபமுண்டாகிறதென்றும் அந்தபாபத்தை நித்யகருமங்கள் நீக்குகின்றனவென்றும் சொல்லும்போது பாபமென்கிறவஸ்து நித்யகருமங்களைச் செய்யாமையாகிற அபாவத்தாலுண்டாகிற தென்று ஒப்புக்கொள்ளப்பட்டதாகிறது. அதுவிருத்தமன்றோ. "அகுர்வந்விஹிதம்கர்ம" என்கிறவசநத்தில் நித்யகருமங்களைச் செய்யாமையினால் பாபமுண்டாமென்று சொல்லப்பட்டபடியால் நித்யங்களைச் செய்யாமையாகிற அபாவத்தால் பாபமாகிறவஸ்து பிறக்குமென்று ஒப்புக்கொள்ளவேணும். அபாவத்தால் ஒருவஸ்துவும் பிறவாதென்பது இந்

தவசநத்திற்கு விருத்தமாகையால் நம்பத்தக்கதல்லவென்றால், இதுதக்கதன்று. ஏனென்றால் இந்தவசநத்தில் நித்யகருமங்களைச் செய்யாமையினால் பாபமுண்டாமென்று சொல்லப்படவில்லை. நித்யகருமங்களைச் செய்யாததுகொண்டு இவனுக்குப் பாபம்கழிந்ததில்லை என்று அறிவுடையோ ரூகிக்கின்றார்கள் என்று சொல்லுகிறது. பாபம்நீங்கியவனுக்கே நித்யகருமங்களி னனுஷ்டாநத்தி லாசையுடனனுஷ்டிப்பது கூடுமாகையால் நித்யகருமங்களைச்செய்யாதவனைப் பாபியென் றூகிக்கலாமன்றோ. ஆகையா லந்தவசநத்திற்குப் பொருளறியாமல் நித்யகருமங்களைச் செய்யாமையாகிற அபாவத்தினால் பாபமென்கிறவஸ்து உண்டாகும்; அந்தபாபமானது நித்யகருமங்களைச்செய்வதினாலுண்டாகாமலிருக்கு மென்பதற்கு யுக்தியில்லை. ஆகையால் நித்யகருமங்களால் புண்யமேயுண்டாகிறது. அந்தபுண்யத்தால் மோக்ஷவிரோதம்வரும். ஆக இப்படி பலவழியாலும், புண்யம் பாபம், என்கிற கருமங்களை நீக்கப்போகாமையால், தத்வஜ்ஞாநமில்லாமலே, காம்யகர்மம் நிஷித்தகர்மம் இவற்றைச்செய்யாமலிருந்தால் தனக்குத்தானே மோக்ஷம் ஸித்திக்குமென்றும் இதற்காக ப்ரம்மவித்யை வேண்டுவதில்லையென்றும் சொல்லுகிறமுதல் பக்ஷம் தள்ளப்பட்டது. இனி, ஸ்வர்கம்போல உத்தமசுகமான மோக்ஷமும் கருமாநுஷ்டாநத்தாலே யுண்டாகுமாகையா லதற்காகப்ரம்மவித்யை வேண்டுவதில்லை என்றுசொல்லுகிற இரண்டாவதுபக்ஷமும் தக்கதன்று. ஏனென்றால், நித்யமாகியது ஒன்றாலுண்டுபண்ணப்படமாட்டாது மோக்ஷமென்பது நித்யமானதாகையால் கருமாநுஷ்டாநத்தா லுண்டாகாதன்றோ. யாதொன்று உண்டாக்கப்படுகின்றதோ அது அநித்யமாயிருப்பது உலகத்தில் காணப்பட்டிருக்கிறது. ஆகையால் நித்யமானமோக்ஷம் கருமாநுஷ்டாநத்தா லுண்டுபண்ணப்படமாட்டாது. வித்யையோடு கூடிய கருமாநுஷ்டாநத்திற்கு நித்யமான மோக்ஷத்தை யுண்டுபண்ணுகிற சக்தியுண்டென்று, ஒப்புக்கொள்ளுகிறோமென்றால் அதுவிருத்தம். நித்யமாகியது உண்டாகிறது என்பது கூடுமோ. இனி, ஒருபொருளழிந்தால் அதுவே மீண்டும்பிறப்பதில்லையாகையால் அந்த அழிவுக்கு அழிவில்லை. ஆகையால், த்வஸமென்கிற அந்த அழிவு நித்யமாயிருந்தாலும் ஒருகாரணத்தா லுண்டாகின்றதன்றோ. அதுபோல அழிவில்லாமையாலே நித்யமான மோக்ஷமும் கருமாநுஷ்டாநமாகிற காரணத்தாலே யுண்டாகுமென்பதில் விரோதமில்லையென்றால் அதுவும் சேராது. அபாவரூபமாகிய த்வஸமென்கிற அழிவு நித்யமாயிருக்கையில் அதுகாரணத்தாலே யுண்டானது அபாவரூபமாகையாலே; ஆகையால் வஸ்துவாகிய மோக்ஷம் நித்யமாகையால் காரணத்தாலுண்டாகாது. மோக்ஷம் அபாவரூபமல்லவன்றோ. வாஸ்தவத்தில் நிரூபித்துப்பார்த்தால், த்வஸமென்கிற அழிவுகாரணத்தா லுண்டாகிறதென்பதும் ப்ரமமேயாகின்றது. அதற்கொருவிசேஷமுங்கூடாதன்றோ. ஆகையால்த்வஸமும் உண்டாகிறதில்லை. இந்தத்வம்ஸத்திற்கு உத்பத்தியாவது ஸத்தாஸம்பந்தமென்றாவது விகாரஸம்பந்தமெ

ன்றுவது மற்றொருவிதமென்றுவது சொல்லமுடியாது. அவற்றை அப்ராவத்தி லங்கீகரிக்கவில்லையன்றோ. த்வம்ஸமும் அபாவமேயன்றோ. ஆகையால் நிர்விசேஷமமான இந்தத்வம்ஸத்தை யுண்டாயிற் றென்பது ப்ரமமேயாம். இதுவுமன்றி அபாவரூபமாகியத்வம்ஸத்தில் உத்பத்திமுதலிய விசேஷங்களை யங்கீகரிக்கவழியில்லை. இது ஒருவஸ்துவைப்பற்றி வ்யவஹரிக்கப்படுமேயன்றி தனியே வ்யவஹரிக்கப்படாது. ஆகையால் கடம் படம் என்று வஸ்து பேதத்தை வ்யவஹரிப்பதுபோல் கடாபாவம், படாபாவம், கடத்வம்ஸம், படத்வம்ஸம், என்றுக்ரியைமுதலியவற்றைச்சேர்த்து த்ரவ்யம்போல வ்யவஹரிக்கப்படுகிறது. வாஸ்தவத்தில் நிர்விசேஷமாகையால் இது ப்ரமமேயாகின்றது. இதுவுமன்றி, "நீலோத்பலம்" - 'கருநெய்தல்' என்கிற விடத்தில் கருமைபூவுக்கு விசேஷணமாயும் கருமைக்கு பூவிசேஷ்யமாயும் தோற்றுவதுபோல "கடத்வம்ஸம்" என்கிறவிடத்தில் த்வம்ஸத்திற்குகடம் விசேஷணமாயும், கடத்திற்கு த்வம்ஸம் விசேஷ்யமாயும் தோற்றுகிறதன்றோ. த்ருஷ்டாந்தமாகிய "கறுநெய்தல்" என்கிறவிடத்தில் விசேஷ்யமாகிய பூவானது விசேஷணமாகிய கறுமையோடு கூடியிருப்பதுபோல 'கடத்வம்ஸம்' என்கிறவிடத்தில் த்வம்ஸமென்கிற விசேஷ்யமாகிய அழிவானது விசேஷணமாகிய கடத்தோடு கூடியிருப்பதில்லையன்றோ. அப்படிகூடியிருக்குமாகில் கடத்தோடுகூடியிருக்கிற ஒருதேசம்போல த்வஸமும்ஒருவஸ்துவேயாமன்றோ, ஆகையா லொருவழியாலும் அபாவரூபமாகிய த்வஸ முதலிய வற்றிற்கு விசேஷஸம்பந்தஞ் சொல்லப்போகாமையால், இத்தை உத்பத்தி முதலிய தருமங்களோடு கூடியதாகநினைப்பது ப்ரமமேயாம், ஆகையால் அழிவில்லாமையால் நித்யமான த்வம்ஸம் ஒருகாரணத்தா லுண்டாவதுபோல அழிவில்லாமையால் நித்யமான மோக்ஷமும் கருமாநுஷ்டாநமாகிய காரணத்தால் உண்டாகலாமென்று சொல்லநினைப்பது மிகவுங்கூடாததாயிற்று. ஆகையால் கருமாநுஷ்டாநத்தினல் மோக்ஷ முண்டாகுமென்பது தகாது. இனி மோக்ஷம் நித்யமானுலும், வித்யை கருமாநுஷ்டாநம் இவைகளுக்கிடமாகிய ஆத்மா நித்யனுகையால் கங்காப்ரவாஹம் அழிவின்றிப் பெருகுவதுபோல் நித்யமான கருமாநுஷ்டாந ப்ரவாஹத்தால் மோக்ஷப்ரவாஹம் நித்யமாயிருக்கக்கூடுமென்று சொல்லுவதும் யுக்தமல்ல. மோக்ஷத்தை மிகவும் ஸுகரூபமாக ஒப்புக்கொண்டபடியால் மோக்ஷத்திற்கு கருமாநுஷ்டாந ப்ரவாஹம் வேணுமென்றுல் கருமத்தை யநுஷ்டிப்பது வருத்தமாயிருப்பதுபற்றி துக்கமுண்டாமாகையால் மோக்ஷத்திலும் துக்கத்தை யொப்புக்கொள்ளவேண்டுகின்றமையாலும் கருமாநுஷ்டாந மில்லையென்றுல் காரணமில்லாமையாலே மோக்ஷத்திற்கு அழிவு வருகின்றமையாலுமென்க. ஆகையால் தத்வஜ்ஞாநமின்றி யொருவழியாலும் மோக்ஷம் ஸித்தியாமையால், உலகமெல்லாம்பொய் ஆத்மா ஒருவனே பரமார்த்தபூதனென்று பிறக்கிற தத்வஜ்ஞாநத்தால் காமிக்கத்தகுந்த வஸ்துக்களில்லையென் றுணர்ந்தமையால் வஸ்துக்

களை மெய்யென்றெண்ணியிருந்த அஜ்ஞானமாகிற அவித்யையும், காமமுங் கழிந்து கருமங்களில் ப்ரவ்ருத்தியின்றி ஆத்மஸுகத்தில் நிலைநிற்கையே மோக்ஷமாகையால், ப்ரம்மமேயாகிய ஆத்மஸ்வரூபத்தை அறிவதற்கு ப்ரம்ம வித்யையே காரணமாகையால் அந்த ப்ரம்மவித்யையை ப்ரதிபாதிக்கிற உப நிஷத்து ப்ராரம்பிக்கப்படுகிறது. கர்பம் ஜந்மம் ஜரைமுதலிய துக்கங்களை நீக்குவதினால் ப்ரம்மவித்யைக்கு உபநிஷத்தென்று பெயரா யிருக்கிறது. அந்த ப்ரம்மவித்யையை வெளியிடுகிறபடியால் வேதாந்தபாகத்திற்கும் உப நிஷத்தென்று பெயராயிற்று,

இவ்வுபநிஷத்தின் மத்வபாஷ்யத்திலுள்ள மங்களச்லோகம்.

𑌸𑌤𑍍𑌯𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌨𑌨𑍍𑌤𑌮𑌾𑌨𑌨𑍍𑌦𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌸𑌰𑍍𑌵𑌶𑌕𑍍𑌤𑌿𑌕𑌮𑍍 ।
𑌸𑌰𑍍𑌵𑍈𑌰𑍍𑌦𑍇𑌵𑍈𑌰𑍀𑌡𑍍𑌯𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍍𑌵𑌾𑌖𑍍𑌯𑌂 𑌸𑌰𑍍𑌵𑌦𑍈𑌵 𑌨𑌮𑌸𑍍𑌯𑍇𑌽𑌹𑌮𑍍 ॥

సత్యంజ్ఞానమనన్తమానన్దంబ్రహ్మసర్వశక్తికమ్ ।
సర్వైర్దేవైరీడ్యంవిష్ణ్వాఖ్యంసర్వదైవనమస్యేఽహమ్॥

இதற்குக் கருத்து.

ஸமஸ்ததேவதைகளாலும் ஸ்துதிசெய்யப்படுகிறதாய் மிகவும் ப்ரியமா யிருப்பதாய், ஸத்யஜ்ஞாநாநந்த ஸ்வரூபமாய் ஆநந்தஸாகரமாய் ஸர்வசக்தி யுடையதாயிருக்கிற விஷ்ணுவென்கிற அத்விதீயப்ரம்மத்தை எப்போதும் வணங்குகின்றே னென்பதாம்.

இவ்வுபநிஷத்தின் மத்வபாஷ்யத்தி லவதாரிகை.

ஸூர்யமண்டலத்தி லிருக்கிற விஷ்ணுமூர்த்தியினிடத்தி லிருந்து வேதா ந்தரஹஸ்யங்களை ப்ரம்மாகேட்டு வருணனுக் குபதேசித்தார். வருணன் ப்ருகுவுக்கு உபதேசித்தான். ப்ருகு அந்தப்படி வேதாந்தரஹஸ்யங்களால் விஷ்ணுவை ஸ்துதிசெய்தார். இந்த உபநிஷத்தால் அவை வெளியிடப்படுகி ன்றன. இதை யஜுஸ்ஸம்ஹிதையில் காண்க.

இவ்வுபநிஷத்தின் இராமாநுஜபாஷ்யத்திலுள்ள
மங்களச்லோகங்கள்.

𑌅𑌤𑌸𑍀𑌗𑍁𑌚𑍍𑌛𑌸𑌚𑍍𑌛𑌾𑌯𑌮𑌞𑍍𑌚𑌿𑌤𑍋𑌰𑌃𑌸𑍍𑌥𑌲𑌂 𑌶𑍍𑌰𑌿𑌯𑌾 ।
𑌅𑌞𑍍𑌜𑌨𑌾𑌚𑌲𑌶𑍃𑌙𑍍𑌗𑌾𑌰𑌮𑌞𑍍𑌜𑌲𑌿𑌰𑍍𑌮𑌮 𑌗𑌾𑌹𑌤𑌾𑌮𑍍 ॥

అతసీగుచ్ఛసచ్ఛాయమఞ్చితోరఃస్థలంశ్రియా ।
అఞ్జనాచలశృంగారమఞ్జలిర్మమగాహతామ్॥

𑌵𑍍𑌯𑌾𑌸𑌂 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑌯𑍋𑌗𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌣𑌮𑍍𑌯𑌾𑌨𑍍𑌯𑌾𑌨𑍍 𑌗𑍁𑌰𑍂𑌨𑌪𑌿 ।
𑌤𑍈𑌤𑍍𑌤𑌿𑌰𑍀𑌯𑌕𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌵𑌿𑌵𑍃𑌤𑌿𑌙𑍍𑌕𑌰𑌵𑌾𑌣𑍍𑌯𑌹𑌮𑍍 ॥

వ్యాసంలక్ష్మణయోగీన్ద్రంప్రణమ్యాన్యాన్గురూనపి ।
తైత్తిరీయకవేదాన్తవివృతిఙ్కరవాణ్యహమ్॥

இவற்றுள் முதல்சுலோகத்திற்குக் கருத்து.

கறுத்த திருநிறத்தையுடையனாய் திருமார்பில் லக்ஷ்மியோடுகூடினவனாய், திருவேங்கடமலையி லெழுந்தருளியிருக்கிற ஸ்ரீநிவாஸனுக்கு நான்செய்கிற அஞ்சலிப்ரீதியை வளர்க்கவேணும் என்பதாம்.

இரண்டாவது சுலோகத்திற்குக் கருத்து.

ப்ரம்மஸூத்ரம்செய்த வ்யாஸரையும் பாஷ்யகாரரான பகவல்லக்ஷ்மணயோகீந்த்ரரையும் மற்றுமுள்ள ஆசாரியர்களையும் வணங்கி தைத்திரீயோபநிஷத்திற்கு நான் வ்யாக்யாநம் செய்கிறேனென்பதாம்.

இவ்வுபநிஷத்திற்கு இராமாநுஜபாஷ்யத்தி லவதாரிகை.

இந்த தைத்திரீயோபநிஷத்தில் ப்ரம்மப்ராப்திக்கு ஸாதநமான பரவித்யை கூறப்படுகிறது.

𑌹𑌰𑌿𑌃𑌓𑌮𑍍॥ 𑌶𑌨𑍍𑌨𑍋𑌮𑌿𑌤𑍍𑌰𑌶𑍍𑌶𑌂𑌵𑌰𑍁𑌣𑌃 । 𑌶𑌨𑍍𑌨𑍋𑌭𑌵𑌤𑍍𑌵𑌰𑍍𑌯𑌮𑌾 । 𑌶𑌨𑍍𑌨 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑍋𑌬𑍃𑌹𑌸𑍍𑌪𑌤𑌿𑌃 । 𑌶𑌨𑍍𑌨𑍋𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌰𑍁𑌰𑍁𑌕𑍍𑌰𑌮𑌃 । 𑌨𑌮𑍋𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 । 𑌨𑌮𑌸𑍍𑌤𑍇𑌵𑌾𑌯𑍋 । 𑌤𑍍𑌵𑌮𑍇𑌵𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌂𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌸𑌿 । 𑌤𑍍𑌵𑌾𑌮𑍇𑌵𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌂𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌦𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 । 𑌋𑌤𑌂𑌵𑌦𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 । 𑌸𑌤𑍍𑌯𑌂𑌵𑌦𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿॥ ௧॥

హరిః ఓమ్॥ శన్నోమిత్రశ్శంవరుణః । శన్నోభవత్వర్యమా । శన్న ఇంద్రోబృహస్పతిః । శన్నోవిష్ణురురుక్రమః । నమోబ్రహ్మణే । నమస్తేవాయో । త్వమేవప్రత్యక్షంబ్రహ్మాసి । త్వామేవప్రత్యక్షంబ్రహ్మవదిష్యామి । ఋతంవదిష్యామి । సత్యంవదిష్యామి॥ ౧॥

(ப-ம்.) 𑌮𑌿𑌤𑍍𑌰𑌃 - மித்திரனென்கிற ஸூர்யன், 𑌨𑌃 - நமக்கு, 𑌶𑌂 - ஸுகமாக, 𑌭𑌵𑌤𑍁 - ஆகவேணும், (ஸூர்யன் ஸுகத்தைத் தரவேணுமென்றவாறு; இவ்வாறே மேலுங்காண்க) 𑌵𑌰𑍁𑌣𑌃 - வருணதேவதை, 𑌨𑌃 - நமக்கு, 𑌶𑌂 - ஸுகமாக, 𑌭𑌵𑌤𑍁 - ஆகவேணும், 𑌅𑌰𑍍𑌯𑌮𑌾 - அர்யமா, என்கிறஸூர்யன், 𑌨𑌃 - நமக்கு, 𑌶𑌂 - ஸுகமாக, 𑌭𑌵𑌤𑍁 - ஆகவேணும், 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌃 - இந்திரனும், 𑌬𑍃𑌹𑌸𑍍𑌪𑌤𑌿𑌃 - இந்திரனுக்கு ஆசாரியராகிய ப்ருஹஸ்பதியும், 𑌨𑌃 - நமக்கு, 𑌶𑌂 - ஸுகமாக, 𑌭𑌵𑌤𑍁 - ஆகவேணும், 𑌉𑌰𑍁𑌕𑍍𑌰𑌮𑌃 - உரு - பெரிதான, க்ரமஃ - அடிவைப்புடைத்தாயிருக்கிற, 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃 - விஷ்ணுவானவர், 𑌨𑌃 - நமக்கு, 𑌶𑌂 - ஸுகமாக, 𑌭𑌵𑌤𑍁 - ஆகவேணும், (த்ரிவிக்கிரமாவதாரத்தில் உலகை அடியிட்டளந்த விஷ்ணு ஸுகத்தைத்தரவேணுமென்றவாறு.) "சந்நோபவத்வர்யமா" என்கிற வாக்யத்தி லிருக்கிற 'பவது' என்கிறபதத்தை மற்றவாக்யங்களிலும் கூட்டிக்கொண்டு பொருளுரைக்கப்பட்டிருக்கிறது. 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇-(𑌬𑍃𑌂) வாயுவுக்கு, (𑌰) வேதத்திற்கு, 𑌨𑌮𑌃 - நமஸ்காரம் செய்கிறேன், 𑌵𑌾𑌯𑍋 - வாயுபகவானே, 𑌤𑍇 - உனக்கு, 𑌨𑌮𑌃 - நமஸ்காரம், 𑌤𑍍𑌵𑌮𑍇𑌵 - நீயே, 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌂 - ப்ரத்யக்ஷமான, 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 - ப்ரம்மமாக, 𑌅𑌸𑌿 - ஆகிறாய், 𑌤𑍍𑌵𑌾𑌮𑍇𑌵 - உன்னையே, 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌂 - ப்ரத்

தியக்ஷமான, ப்ரஹ்ம - பரப்ரம்மமாக, வதிஷ்யாமி - சொல்லப்போகிறேன், ருதம் - நிச்சயிக்கப்பட்ட அர்த்தமாகவும், வதிஷ்யாமி - சொல்லப்போகிறேன், ஸத்யம் - ஸத்தியமாகவும், வதிஷ்யாமி-சொல்லப்போகிறேன், தத்- அந்த வஸ்துவானது, மாம் - என்னை, அவது - இரக்ஷிக்கட்டும், வக்தாரம் - என்னுடைய ஆசாரியனை, அவது - இரக்ஷிக்கட்டும், ஓம்சாந்தி: ஓம்சாந்தி: ஓம்சாந்தி: - சாந்தி.

விசேஷவிஷயங்கள்.

வேதசாகைகளில் அநுவாகமென்றும் பஞ்சாதி என்றும் சில வ்யவஹாரங்களுண்டு. அநுவாகமாவது ஒரு விஷயத்தை பூர்ணமாகச் சொல்லுகிற வாக்யஸமுதாயம். பத்துவாக்யங்கொண்டது ஒரு பஞ்சாதியாகிறது. இப்படிப்பட்ட பஞ்சாதிகள் ஒரு அநுவாகத்தில் பலவுமிருக்கும் ஒன்றுமிருக்கும். சில அநுவாகங்களில் பஞ்சாதிக் கணக்குக்குமேல் வாக்யங்களிருப்பதுமுண்டு. ஒவ்வோ ரநுவாகத்திலு மித்தனை பஞ்சாதி யடங்கியிருக்கிறதென்றும் அதிக வாக்யங்க ளித்தனையென்றும் கணக்கிடுகிற வாக்கியங்கள் அடிவரவுபோல் முன்னோர்களால் செய்யப்பட்டிருக்கின்றன. "ஸத்யம் வதிஷ்யாமி பஞ்சச" என்கிற வாக்யம் அந்த அடிவரவு வாக்யங்களிற் சேர்ந்தது. இந்த வாக்யத்திற்குப் பொருள், ஸத்யம் வதிஷ்யாமி, என்கிற வாக்கியம் வரையிலு மொரு பஞ்சாதியும்மே அஞ்சுவாக்யங்களு மிந்த அநுவாகத்திலடங்கியிருக்கின்றன வென்பதாம்.

ப்ரதம: முதலாவதான, அநுவாக:-அநுவாகமானது, இதி-முடிந்தது.க.

இவ்வநுவாகத்திற்கு சங்கரபாஷ்யம்.

இந்த அநுவாகத்தில், ப்ரம்மஜ்ஞானத்தை விரும்பிய முமுக்ஷுவானவன், ப்ரம்மஜ்ஞானத்திற்கு விக்நம் வராமலிருப்பதற்காக வாயுவை யுத்தேசித்து நமஸ்காரம் செய்கிறான். நீயே ப்ரம்மமென்று ஸ்துதிசெய்கிறான். அத்யாத்ம தேவதைகள் ஸுகத்தைத் தரவேணுமென்று வேண்டுகின்றான். ப்ராணவ்ருத்திக்கும் திநத்திற்கு மபிமாநி தேவதையான மித்ரனென்கிறவன் நமக்கு ஸுகந்தந்திடுவானாக. அபாநவ்ருத்திக்கும் இரவுக்கு மபிமாநி தேவதையான வருணனும் கண்ணுக்கும் ஸூரியனுக்கும் அபிமாநி தேவதையான அர்யமா என்பவனும், பலத்துக்கு அபிமாநி தேவதையான இந்திரனும் வாக்குக்கும் புத்திக்கு மபிமாநிதேவதையான ப்ருஹஸ்பதியும், பாதங்களுக்கு அபிமாநிதேவதையான த்ரிவிக்ரமரூபங்கொண்ட விஷ்ணுவும் இவ்வாறே ஸுகத்தை யுண்டுபண்ணவேணும். இந்த தேவதைகள் ஸுகத்தைத் தருவார்களாயின், ப்ரம்மவித்யை ப்ரதிபந்தமின்றி க்ரகிக்கப்படுமென்றோ. ஆகையால் ஸுகத்தை ப்ரார்த்திக்கிறது. ப்ரம்மமாவது - வாயு. அந்த வாயுரூபமான ப்ரம்மத்தை நமஸ்கரிக்கின்றேன். வாயுபகவானே உன்னை வணங்குகின்றேன். ப்ரத்யக்ஷமாயும் பரோக்ஷமாயும் வாயுவையே வணங்குகிறான். நீயே ப்ரத்யக்ஷமாய் க்ரகிக்கப்படுகிறா யாகையால் உன்னையே ப்ரத்யக்ஷ ப்ரம்மமாகச் சொல்லுகின்றேன். என்னெஞ்சில் தோற்றுகிற ஸத்யத்திற்கு நீயே காரணமாகையால் என் நெஞ்சில் தோற்றுகிற ஸத்யம் நீயே என்கிறேன். நினைத்த ஸத்யத்தின்படி ஸத்யமாய் நடப்பதற்கும் நீயே காரணமாகையால் நடத்தையில் ஸத்யமும் நீயே என்கிறேன்

ஸமஸ்தரூபமான வாயுவென்கிற அந்த ப்ரம்மமானது என்னல் இப்படி ஸ்துதிசெய்யப் பட்டதாய்க்கொண்டு ப்ரம்மஜ்ஞாநத்தை விரும்புகிற என்னை ப்ரம்மஜ்ஞாநத்தைத் தந்து ரக்ஷிக்கவேணும். அந்த வாயுரூபமான ப்ரம்மம் ஆசாரியனுக்கு உபதேசஸாமர்த்யத்தைத் தந்து ரக்ஷிக்கவேணும். 'அவதுமாம்' அவது வக்தாரம், என்று ஆதரத்தால் சொல்லப் பட்டது. ப்ராணரூபியான வாயுவை ப்ரத்யக்ஷமென்றது கண்முதலிய இந்திரியங்கள் ரூபம் முதலியவற்றை யறிவிக்கின்றமையால் அநுமாந ப்ரமாணத்தால் தோற்றுவதுபோலன்றி போக்தாவாகிய ஜீவனுக்கு ஸமீபத்திலிருந்து ஸாக்ஷி சைதந்யத்தால் க்ரஹிக்கப் படுவது பற்றி. இந்த ப்ராணனை ப்ரம்மமென்பது சரீரத்தைப் பெருக்கச்செய்வதினுலே யாம். இந்த அநுவாகத்திற்கு மத்வபாஷ்யத்தில் அர்த்த விசேஷங்கள் வ்யாக்யாநம் செய்யப்படவில்லை.

இந்த முதலநுவாகத்திற்கு இராமாநுஜபாஷ்யம்.

ப்ரம்வித்யைக்கு விக்நம்வாராம லிருப்பதற்கு இந்த அநுவாகத்தில் தேவதைகளை வேண்டுகிறது. ஸூர்யன், வருணன், அர்யமா என்கிற ஒரு ஸூர்யன், இந்திரன், ப்ருஹஸ்பதி விக்ரமமென்கிற பெரிய பதவிந்யாஸத்தையுடைய விஷ்ணு இவர்கள் ஸுகத்தைத் தருகிறவர்களாகவேணும். வேதத்திற்கு நமஸ்காரம் செய்கிறேன். வேதாக்ஷரங்களை யுச்சரிப்பதற்குக் காரணமாகிய வாயுவை வணங்கி ஸ்துதிசெய்து ப்ரார்த்திக்கின்றேன். ஜகத்துக்கு ப்ராணனும் ஜகத்து ஜீவித்திருப்பதற்குக் காரணமாயிருப்பது பெருமைபொருந்தி யிருப்பது, இவை முதலிய குணங்கள் பரப்ரம்மத்திற்கும் வாயுவுக்கும் ஸமாநங்களாயிருந்தாலும் வாயுவுக்கு ப்ரத்யக்ஷமாயிருப்பது விசேஷமென்று கருத்து. ருதமாவது - சப்தஸத்யத்வம். அதாவது அபப்ரம்சமில்லாமை. அபப்ரம்சமாவது வ்யாகரண விருத்தமான சப்தங்கள். ஆக, வ்யாகரணத்தின்படி நல்ல பதங்களைக்கொண்டு வ்யவஹரிப்பது. சப்தஸத்யத்வ மென்னதாயிற்று ஸத்யமாவது. கண்ட பொருளைக் கண்டபடி சொல்லுவது. ஆகையால் ருதம், என்றாலும் ஸத்யமென்றாலும், ஸத்யத்திற்கே பெயராகையால் ஒன்றை ப்ரயோகிப்பது போந்திருக்க இரண்டு பதங்களையும் ப்ரயோகித்தது புநருக்தி தோஷமாகிறதென்கிற ஸந்தேகத்திற் கிடமில்லை. இப்படி அர்த்தபேதங் கொள்ளுகின்றமையா லென்க. என்னு லத்யயநம் செய்யப்பட்ட வேதமானது வேதத்தை யோதுகிற என்னை ரக்ஷிக்கவேணும். எனக்கு வேதத்தை யோதுவிக்கிறஉபாத்யாயரையும் ரக்ஷிக்கவேணும். ரக்ஷிக்கையாவது விக்நங்களைப் போக்குவது. "மாமவது, வக்தாரமவது" என்கிற வாக்யங்களால் ப்ரார்த்திக்கப்பட்ட இந்த ரக்ஷணத்தையோ "அவதுமாம், அவது வக்தாரம்" என்கிற வாக்யங்களாலும் ப்ரார்த்திக்கிறது. ஆதராதிசயத்தாலே. முன்னிரண்டு வாக்யங்களுக்கும் பின்னிரண்டு வாக்கியங்களுக்கும் பதங்களை முன்பின்னுக மாற்றியிருப்பது விசேஷம். சாந்திஃ, என்கிற மூன்றுபதங்களோடு விக்நாநாம், அஸ்து" என்று இரண்டு பதங்களையும் கூட்டிக்கொண்டு விக்நங்களுக்கு சாந்தியுண்டாக வேணுமென்று பொருள் கொள்க. ௧.

𑌶𑍀𑌕𑍍𑌷𑌾𑌂 𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌸𑍍𑌯𑌾𑌮𑌃 । 𑌵𑌰𑍍𑌣𑌃 𑌸𑍍𑌵𑌰𑌃 । 𑌮𑌾𑌤𑍍𑌰𑌾 𑌬𑌲𑌮𑍍 । 𑌸𑌾𑌮 𑌸𑌨𑍍𑌤𑌾𑌨𑌃 । 𑌇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌶𑍀𑌕𑍍𑌷𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌃॥௩॥ 𑌶𑍀𑌕𑍍𑌷𑌾 𑌷𑌟𑍍॥௨॥ 𑌇𑌤𑌿 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑍋𑌽𑌨𑍁𑌵𑌾𑌕𑌃॥

శీక్షాం వ్యాఖ్యాస్యామః । వర్ణస్స్వరః । మాత్రా బలం । సామ సంతానః । ఇత్యుక్తశ్శీక్షాధ్యాయః ॥ శీక్షాం పఞ్చ ॥

(ப் - ம்.) ஶீக்ஷாம் - சிக்ஷையே, சிக்ஷையாவது இந்த எழுத்து இன்ன விடத்திலிருந்து பிறக்கின்றது இந்த யத்நமுடையது என்பவை முதலிய வற்றை போதிக்கிற சாஸ்திரத்தாலே சிக்ஷிக்கப்பட்ட எழுத்து, ஸ்வரம் முதலியவை, வ்யாக்யாஸ்யாம: - விவரிக்கின்றோம் அவையாவன, வர்ண: - எழுத்து, ஸ்வர: - உதாத்தம் முதலிய ஸ்வரங்கள், மாத்ரா - ஹ்ரஸ்வம் தீர்க்கம் முதலியவை, பலம் - யத்நதம், ஸாம - ஸமோச்சாரணம், ஸந்தாந: - ஸம்ஹிதை யென்கிற தொடர்ச்சி, என்கிற இவையாம், இதி - இப்படி, ஶீக்ஷாத்யாய: - எழுத்து முதலியவற்றை போதிக்கிற பாகமானது; உக்த: - சொல்லப்பட்டது, ஶீக்ஷாவல்லீ - இந்த அநுவாகத்தில அஞ்சுவாக்யங்க ளடங்கி யிருக்கின்றன.

ஸ௦-ஸா. ப்ரம்மஜ்ஞாநத்திற்காகவே உபநிஷத்தை யறிவதாகையால் உபநிஷத்திற்கு அர்த்தங்களைத் தெளியவறிவதுபோதும். உபநிஷத்து மூலத்தை சிக்ஷையென்கிற சாஸ்திரப்படி பாடம் செய்யவேண்டியது அநாவச்யகம். என்கிற ஸந்தேஹம் வராமலிருப்பதற்காக சீக்ஷாசாஸ்திர க்ரமப்படி உபநிஷத்தைப் படிக்கவேணுமென் றறிவிப்பதற்கு சிக்ஷாத்யாயம் சொல்லத் துடங்குகிறது. இங்கு 'சீக்ஷாம், என்கிற பதத்திற்கு சிக்ஷாசாஸ்திரத்தை என்ருவது எழுத்து முதலியவற்றை யென்ருவது பொருள் சொல்லக்கூடும். சிக்ஷா என்பது சீக்ஷா, என்று நீட்டப்பட்டது; இப்படி நீட்டுவது லோகத்தில் கூடாதாயினும் வேதத்தில் கூடும். இந்த சிக்ஷையை நன்ருகச் சொல்லுகிறோம். வ்யாக்யாஸ்யாம:, யென்கிற பதம் ச க்ஷிங், என்கிற தாதுவிலிந்து பிறந்தது. வர்ணமாவது அகரம் முதலிய வெழுத்துக்கள். ஸ்வரமாவது உதாத்தம் முதலியவை மாத்ரையாவது ஹ்ரஸ்வம் தீர்க்கம் முதலியவை. பலமாவது ப்ரயத்நம் ஸாமமாவது வர்ணங்களை ஸமாநமாக உச்சரிப்பது. ஸந்தாநமாவது-எழுத்துக்களைச் சேர்த்து உச்சரிப்பது. இவை நன்ரு யறியவேண்டியவையாம். ஆகையால் இவற்றைச் சொல்லுகிற அத்யாயம் சொல்லப்பட்டது. இது மேலுபயோகப்படுவது.

உ-ஸா. விஷ்ணுவினுடைய ரூபங்கள் வர்ணம் முதலியவற்றை யடைந்து அந்தவர்ணம் முதலியவற்றை யுச்சரிப்பது முதலியவற்றை யுண்டு பண்ணுகிறது. அதனுல் புருஷர்கள் அந்தந்த காரியங்களைச் செய்கிருர்கள். அந்த ரூபங்களுக்கு அந்தந்த வர்ணம் முதலியவற்றிற்குப் பேராகியவையே பேராகின்றன. இவை வாசகரூபங்களாம்.

ரா-ஸா. சீக்ஷை என்கிற வேதாங்கத்திற்கு உபயோகம் சொல்லப்படுகிறது. ஒவ்வொரு வேதங்கத்தினுலும் வேதத்திற்கு உபகாரமுண்டாகையால், வேதாங்களெல்லாவற்றையும் முமுக்ஷுவாய் வேதத்தினுலே ப்ரம்மஜ்ஞாநத்தை விரும்புகிறவர் அறிந்துக் கொள்ள வேணுமென்பது கருத்து. சீக்ஷை என்பது சீக்ஷை என நீண்டு கிடக்கிறது. சீக்ஷையில் சொல்லப்படு மவையாவன - வர்ணங்கள் ஸ்வரங்கள், மாத்திரைகள், யத்நங்கள், முதலியவை. வர்ணங்களாவன - அறுபத்துமூன்று அல்லது அறுபத்துநான்கு, என்று சிவமதத்தில் சொல்லப்பட்ட அகரம் முதலிய எழுத்துக்கள். ஸ்வரமாவது-உதாத்தம் அநுதாத்தம், முதலியவை. மாத்ரையாவது - ஹ்ரஸ்வம் ஒருமாத்திரை தீர்க்கம் இரண்டுமாத்திரைகள் என்று இவ்வாறு சொல்லப்படுமவை, பலமாவது அற்ப ப்ராணம் மகாப்ராணம் என்று சொல்லப்படுகிற யத்நங்கள். ஸாமமாவது - க்ருஷ்டம் ப்ரதம் முதலிய எழு ஸ்வரங்கள். ஸந்தாநமாவது - வர்ணங்கள் பதங்கள் இவற்றின் ஸம்ஹிதை

முதலியவை. இவற்றையெல்லா மறிவது சிக்ஷை என்கிற வேதாங்கத்தினாலேயாம் ஆகவே இவற்றின் ஜ்ஞானம் ப்ரம்ம வித்யைக்குபயோகமானது என்றதாயிற்று. இப்படியே மற்ற வேதாங்களுக்கு முபயோகத்தையறிக. இப்படி சிக்ஷை என்கிற க்ரந்தத்திற்கு உபயோகம் காட்டப்பட்டது. அத்யாய மென்றால் க்ரந்தம். உ.

𑌸𑌹 𑌨𑍌 𑌯𑌶𑌃 । 𑌸𑌹 𑌨𑍌 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌰𑍍𑌚𑌸𑌮𑍍 । 𑌅𑌥𑌾𑌤𑌸𑍍𑌸𑌂𑌹𑌿𑌤𑌾𑌯𑌾 𑌉𑌪𑌨𑌿𑌷𑌦𑌂 𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌸𑍍𑌯𑌾𑌮𑌃 । 𑌪𑌞𑍍𑌚𑌸𑍍𑌵𑌧𑌿𑌕𑌰𑌣𑍇𑌷𑍁 । 𑌅𑌧𑌿𑌲𑍋𑌕𑌮𑌧𑌿𑌜𑍍𑌯𑍌𑌤𑌿𑌷𑌮𑌧𑌿𑌵𑌿𑌦𑍍𑌯𑌮𑌧𑌿𑌪𑍍𑌰𑌜𑌮𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌮𑍍 । 𑌤𑌾 𑌮𑌹𑌾𑌸𑌂𑌹𑌿𑌤𑌾 𑌇𑌤𑍍𑌯𑌾𑌚𑌕𑍍𑌷𑌤𑍇 । 𑌅𑌥𑌾𑌧𑌿𑌲𑍋𑌕𑌮𑍍 । 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀 𑌪𑍂𑌰𑍍𑌵𑌰𑍂𑌪𑌮𑍍 । 𑌦𑍍𑌯𑍌𑌰𑍁𑌤𑍍𑌤𑌰𑌰𑍂𑌪𑌮𑍍 । 𑌆𑌕𑌾𑌶𑌃 𑌸𑌨𑍍𑌧𑌿𑌃 ॥க॥

సహ నౌ యశః । సహ నౌ బ్రహ్మవర్చసం । అథాతస్సగ్ంహితాయా ఉపనిషదం వ్యాఖ్యాస్యామః । పఞ్చస్వధికరణేషు । అధిలోకమధిజ్యౌతిషమధివిద్యమధిప్రజమధ్యాత్మం తా మహాసగ్ంహితా ఇత్యాచక్షతే । అథాధిలోకం । పృథివీ పూర్వరూపం । ద్యౌరుత్తరరూపం । ఆకాశస్సంధిః ॥ ౧ ॥

(ப - ம்.) 𑌨𑍌 - நமக்கிருவர்க்கும், 𑌯𑌶𑌃 - கீர்த்தியானது, 𑌸𑌹 - கூடிவரவேணும், 𑌨𑍌 - நமக்கிருவர்க்கும், 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌰𑍍𑌚𑌸𑌮𑍍 - ப்ரம்மதேஜஸ்ஸானது, 𑌸𑌹 - கூடியுண்டாகவேணும், 𑌅𑌥 - இனி, 𑌸𑌂𑌹𑌿𑌤𑌾𑌯𑌾𑌃 - ஸம்ஹிதையினுடைய, 𑌉𑌪𑌨𑌿𑌷𑌦𑌮𑍍 - உபநிஷத்தை, 𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌸𑍍𑌯𑌾𑌮𑌃 - விவரிக்கிறோம், 𑌪𑌞𑍍𑌚𑌸𑍁 - ஐந்தாயிருக்கிற, 𑌅𑌧𑌿𑌕𑌰𑌣𑍇𑌷𑍁 - இடங்களில் அவையாவன, 𑌅𑌧𑌿𑌲𑍋𑌕𑌮𑍍 - லோகவிஷயமும், 𑌅𑌧𑌿𑌜𑍍𑌯𑍌𑌤𑌿𑌷𑌮𑍍 - தேஜோவிஷயமும், 𑌅𑌧𑌿𑌵𑌿𑌦𑍍𑌯𑌮𑍍 - வித்யாவிஷயமும், 𑌅𑌧𑌿𑌪𑍍𑌰𑌜𑌮𑍍 - ப்ரஜாவிஷயமும், 𑌅𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌮𑍍 - ஆத்மவிஷயமும், 𑌤𑌾𑌃 - அவைகளை, 𑌮𑌹𑌾𑌸𑌂𑌹𑌿𑌤𑌾𑌃 𑌇𑌤𑌿 - சிறந்த ஸம்ஹிதைகளென்று, 𑌆𑌚𑌕𑍍𑌷𑌤𑍇 - சொல்லுகின்றார்கள், 𑌅𑌥 - இனி, 𑌅𑌧𑌿𑌲𑍋𑌕𑌮𑍍 - லோகவிஷயத்தைப்பற்றிச் சொல்லப்படுகிறது. 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀 - பூமியானது, 𑌪𑍂𑌰𑍍𑌵𑌰𑍂𑌪𑌮𑍍 - முதல்வடிவு, 𑌦𑍍𑌯𑍌𑌃 - ஸ்வர்க்கலோகமானது, 𑌉𑌤𑍍𑌤𑌰𑌰𑍂𑌪𑌮𑍍 - முடிவிலுள்ளவடிவு, 𑌆𑌕𑌾𑌶𑌃 - ஆகாயமானது, 𑌸𑌨𑍍𑌧𑌿𑌃 - சேர்க்கையாம்.

𑌵𑌾𑌯𑍁𑌸𑍍𑌸𑌨𑍍𑌧𑌾𑌨𑌮𑍍 । 𑌇𑌤𑍍𑌯𑌧𑌿𑌲𑍋𑌕𑌮𑍍 । 𑌅𑌥𑌾𑌧𑌿𑌜𑍍𑌯𑍌𑌤𑌿𑌷𑌮𑍍 । 𑌅𑌗𑍍𑌨𑌿𑌃 𑌪𑍂𑌰𑍍𑌵𑌰𑍂𑌪𑌮𑍍 । 𑌆𑌦𑌿𑌤𑍍𑌯 𑌉𑌤𑍍𑌤𑌰𑌰𑍂𑌪𑌮𑍍 । 𑌆𑌪𑌃 𑌸𑌨𑍍𑌧𑌿𑌃 । 𑌵𑍈𑌦𑍍𑌯𑍁𑌤𑌸𑍍𑌸𑌨𑍍𑌧𑌾𑌨𑌮𑍍 । 𑌇𑌤𑍍𑌯𑌧𑌿𑌜𑍍𑌯𑍌𑌤𑌿𑌷𑌮𑍍 । 𑌅𑌥𑌾𑌧𑌿𑌵𑌿𑌦𑍍𑌯𑌮𑍍 । 𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌃 𑌪𑍂𑌰𑍍𑌵𑌰𑍂𑌪𑌮𑍍 ॥உ॥

వాయుస్సంధానం । ఇత్యధిలోకం । అథాధిజ్యౌతిషం । అగ్నిః పూర్వరూపం । ఆదిత్య ఉత్తరరూపం । ఆపస్సంధిః । వైద్యుతస్సంధానం । ఇత్యధిజ్యౌతిషం । అథాధివిద్యం । ఆచార్యః పూర్వరూపం ॥ ౨ ॥

(ப - ம்.) 𑌵𑌾𑌯𑍁𑌃 - வாயுவானவன், 𑌸𑌨𑍍𑌧𑌾𑌨𑌮𑍍 - ஸந்தானமாகிறான், 𑌇𑌤𑌿 - இப்படி, 𑌅𑌧𑌿𑌲𑍋𑌕𑌮𑍍 - லோகவிஷயஞ் சொல்லப்பட்டது, 𑌅𑌥 -

இதற்கு மேலே, அதிஜ்யௌதிஷம் - தேஜோவிஷயத்தைச் சொல்லுகிறது, அக்நி꞉ - அக்கினியானது, பூர்வரூபம் - முதல் ரூபமாகிறது. ஆதித்ய꞉ - ஸூரியன், உத்தரரூபம் - உத்தரமான ரூபம், ஆப꞉ - ஜலமானது, ஸந்தி꞉ - ஸந்தியாகிறது. வைத்யுத꞉ - மின்னலில் ஸம்பந்தப்பட்ட அக்கினியானது, ஸந்தாநம் - ஸந்தாநமாகிறது. இதி - இப்படி, அதிஜ்யௌதிஷம் - தேஜோவிஷயஞ் சொல்லப்பட்டது. அத - இனி, அதிவித்யம் - வித்யாவிஷயஞ் சொல்லப்படுகிறது. ஆசார்ய꞉ - ஆசாரியரானவர், பூர்வரூபம் - முதல் ரூபமாகிறார்.

அந்தேவாஸ்யுத்தரரூபம் । வித்யா ஸந்தி꞉ । ப்ரவசநꣳ ஸந்தாநம் । இத்யதிவித்யம் । அதாதிப்ரஜம் । மாதா பூர்வரூபம் । பிதோத்தரரூபம் । ப்ரஜா ஸந்தி꞉ । ப்ரஜநநꣳ ஸந்தாநம் । இத்யதிப்ரஜம் ॥ ௩ ॥

అన్తేవాస్యుత్తరరూపం । విద్యాసంధిః ప్రవచనగ్ సంతానం ఇత్యధివిద్యం । అథాధిప్రజం । మాతాపూర్వరూపం । పితోత్తరరూపం । ప్రజాసంధిః । ప్రజననగ్ సంధానం । ఇత్యధిప్రజం॥3॥

(ப - ம்.) அந்தேவாஸீ - சிஷ்யனாகியவன், உத்தரரூபம் - மேல்ரூபம், வித்யா - வித்தையானது, ஸந்தி꞉ - ஸந்தியாகிறது. ப்ரவசநம் - ஓதிவித்தலானது, ஸந்தாநம் - ஸந்தாநமாகிறது, இதி-இப்படி, அதிவித்யம் - வித்யாவிஷயஞ் சொல்லப்பட்டது. அத - இனி, அதிப்ரஜம் - ப்ரஜாவிஷயத்தைச் சொல்லுகிறது. மாதா - தாயானவள், பூர்வரூபம் - முதல் ரூபம், பிதா - தந்தையானவன், உத்தரரூபம் - மேல்ரூபம், ப்ரஜா - ப்ரஜையானது, ஸந்தி꞉ - ஸந்தியாகிறது. ப்ரஜநநம் - ப்ரஜையை உண்டுபண்ணுதல், ஸந்தாநம் - ஸந்தாநமாகிறது, இதி - இப்படி, அதிப்ரஜம் - ப்ரஜாவிஷயஞ் சொல்லப்பட்டது.

அதாத்யாத்மம் । அதராஹநு꞉ பூர்வரூபம் । உத்தராஹநுருத்தரரூபம் । வாக்ஸந்தி꞉ । ஜிஹ்வா ஸந்தாநம் । இத்யத்யாத்மம் । இதீமா மஹாஸꣳஹிதா꞉ । ய ஏவமேதா மஹாஸꣳஹிதா வ்யாக்யாதா வேத । ஸந்தீயதே ப்ரஜயா பஶுபி꞉ । ப்ரஹ்மவர்சஸேநாந்நாத்யேந ஸுவர்க்யேண லோகேந ॥ ௪ ॥ ஸம்ஹிதாயா꞉ பூர்வரூபமித்யதிப்ரஜம் லோகேந ॥ ௩ ॥

అథాధ్యాత్మం । అధరాహనుః పూర్వరూపం । ఉత్తరాహనురుత్తరరూపం । వాక్సంధిః । జిహ్వాసంధానం । ఇత్యధ్యాత్మం । ఇతీమామహాసగ్ హితాః । య ఏవమేతామహాసగ్ హితా వ్యాఖ్యాతా వేద । సంధీయతే ప్రజయా పశుభిః । బ్రహ్మవర్చసేనాన్నాద్యేన సువర్గ్యేణ లోకేన ॥ 4॥ సంధిరాచార్యః పూర్వరూప మిత్యధిప్రజం లోకేన ॥ అను ॥ 3 ॥

(ப - ம்.) அத - இதற்குமேலே, அத்யாத்மம் - ஆத்ம விஷயத்தைச் சொல்லுகிறது. அதரா - கீழிருக்கிற, ஹநு꞉ - கன்னத்தில் சேர்ந்திருக்

கிற எனும்பானது, 𑌪𑍂𑌰𑍍𑌵𑌰𑍂𑌪𑌮𑍍-முதல் ரூபம், 𑌉𑌤𑍍𑌤𑌰𑌾 - மேலிருக்கிற, 𑌹𑌨𑍁𑌃 - கன்னத்தெலும்பானது, 𑌉𑌤𑍍𑌤𑌰𑌰𑍂𑌪𑌮𑍍 - மேலரூபம், 𑌵𑌾𑌕𑍍 - வாயானது, 𑌸𑌨𑍍𑌧𑌿𑌃 - ஸந்தியாகிறது. 𑌜𑌿𑌹𑍍𑌵𑌾 - நாக்கானது, 𑌸𑌨𑍍𑌧𑌾𑌨𑌮𑍍-ஸந்தாநமாகிறது. 𑌇𑌤𑌿 - இப்படி, 𑌅𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌮𑍍 - ஆத்மவிஷயஞ் சொல்லப்பட்டது. 𑌇𑌤𑌿 𑌇𑌮𑌾𑌃 - இப்படி சொல்லப்பட்ட இவை, 𑌮𑌹𑌾𑌸𑌂𑌹𑌿𑌤𑌾𑌃 - மஹா ஸம்ஹிதைகளாகின்றன. 𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑌾𑌃 - வ்யாக்யாநம் செய்த 𑌏𑌤𑌾𑌃 - இந்த, 𑌮𑌹𑌾𑌸𑌂𑌹𑌿𑌤𑌾𑌃 - மஹாஸம்ஹிதைகளை, 𑌏𑌵𑌮𑍍 - இந்தப்படி, 𑌵𑍇𑌦 - அறிகிறானோ; (அவன்) 𑌪𑍍𑌰𑌜𑌯𑌾 - ஸந்தாநத்தோடும், 𑌪𑌶𑍁𑌭𑌿𑌃 - பசுக்களோடும், 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌰𑍍𑌚𑌸𑍇𑌨 - ப்ரம்தேஜஸ்ஸோடும், 𑌅𑌨𑍍𑌨𑌾𑌦𑍍𑌯𑍇𑌨 - அந்நம் முதலிய வற்றோடும், 𑌸𑍁𑌵𑌰𑍍𑌗𑍍𑌯𑍇𑌣 - சுவர்க்கமென்கிற, 𑌲𑍋𑌕𑍇𑌨 - லோகத்தோடும், 𑌸𑌨𑍍𑌧𑍀𑌯𑌤𑍇 - சேருகிறான். (அதாவது இவற்றையெல்லா மடைகிறானென்றவாறு.) 𑌸𑌨𑍍𑌧𑌿𑌃 - "ஆகாசஸ்ஸந்தி:" என்கிற வாக்யம் வரையிலொரு பஞ்சாதியும், 𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌃𑌪𑍂𑌰𑍍𑌵𑌰𑍂𑌪𑌮𑍍 - 'ஆசார்ய: பூர்வரூபம்' என்கிற வாக்யம் வரையிலொரு பஞ்சாதியும், 𑌇𑌤𑍍𑌯𑌧𑌿𑌪𑍍𑌰𑌜𑌮𑍍 - 'இத்யதிப்ரஜம்' என்கிற வாக்யம் வரையிலொரு பஞ்சாதியும், 𑌲𑍋𑌕𑍇𑌨 - 'ஸுவர்க்கேணலோகேந' என்கிற வரையிலொரு பஞ்சாதியுமாக இந்த அநுவாகத்தில் நாலு பஞ்சாதிகளடங்கி யிருக்கின்றன.

𑌸𑌂-𑌹𑌾.-𑌪𑌾-𑌹𑌾. இப்போது ஸம்ஹிதோபநிஷத்து சொல்லாப்படுகிறது. இந்த ஸம்ஹிதோபநிஷத்தை யறிவதினுல் வருகிற யசஸ்ஸும் ப்ரம்மதேஜஸ்ஸும், எனக்கும் என்னுசாரியனுக்கும் ஸமானமாயுண்டாகவேணும் சிஷ்யன் ப்ரார்த்திக்கின்ருன். சிஷ்ய னே இந்த பலனையடையாததினுல் ப்ராத்திப்பான். ஆசாரியனுகில் இந்த பலனை யடைந்தவனுகையால் ப்ரார்த்திக்கமாட்டான். க்ருதார்த்தனு யிருப்பவனன்ருே ஆசாரிய னுகிருன்.

𑌯𑌶𑍍𑌛𑌨𑍍𑌦𑌸𑌾𑌮𑍃𑌷𑌭𑍋𑌵𑌿𑌶𑍍𑌵𑌰𑍂𑌪𑌃 । 𑌛𑌨𑍍𑌦𑍋𑌭𑍍𑌯𑍋𑌽𑌧𑍍𑌯𑌮𑍃𑌤𑌾𑌤𑍍𑌸𑌂𑌬𑌭𑍂𑌵 । 𑌸𑌮𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑍋𑌮𑍇𑌧𑌯𑌾𑌸𑍍𑌪𑍃𑌣𑍋𑌤𑍁 । 𑌅𑌮𑍃𑌤𑌸𑍍𑌯𑌦𑍇𑌵𑌧𑌾𑌰𑌣𑍋𑌭𑍂𑌯𑌾𑌸𑌮𑍍 । 𑌶𑌰𑍀𑌰𑌂𑌮𑍇𑌵𑌿𑌚𑌰𑍍𑌷𑌣𑌮𑍍 । 𑌜𑌿𑌹𑍍𑌵𑌾𑌮𑍇𑌮𑌧𑍁𑌮𑌤𑍍𑌤𑌮𑌾 । 𑌕𑌰𑍍𑌣𑌾𑌭𑍍𑌯𑌾𑌂𑌭𑍂𑌰𑌿𑌵𑌿𑌶𑍍𑌰𑍁𑌵𑌮𑍍 । 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌃𑌕𑍋𑌶𑍋𑌽𑌸𑌿𑌮𑍇𑌧𑌯𑌾𑌪𑌿𑌹𑌿𑌤𑌃 । 𑌶𑍍𑌰𑍁𑌤𑌂𑌮𑍇𑌗𑍋𑌪𑌾𑌯 । 𑌆𑌵𑌹𑌨𑍍𑌤𑍀𑌵𑌿𑌤𑌨𑍍𑌵𑌾𑌨𑌾 ॥௧॥

𑌕𑍁𑌰𑍍𑌵𑌾𑌣𑌾𑌚𑍀𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 । 𑌵𑌾𑌸𑌾𑌂𑌸𑌿𑌮𑌮𑌗𑌾𑌵𑌶𑍍𑌚 । 𑌅𑌨𑍍𑌨𑌪𑌾𑌨𑍇𑌚𑌸𑌰𑍍𑌵𑌦𑌾 । 𑌤𑌤𑍋𑌮𑍇𑌶𑍍𑌰𑌿𑌯𑌮𑌾𑌵𑌹 । 𑌲𑍋𑌮𑌶𑌾𑌂𑌪𑌶𑍁𑌭𑌿𑌸𑍍𑌸𑌹𑌸𑍍𑌵𑌾𑌹𑌾 । 𑌆𑌮𑌾𑌯𑌨𑍍𑌤𑍁𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌾𑌰𑌿𑌣𑌸𑍍𑌵𑌾𑌹𑌾 । 𑌯𑌶𑍋𑌜𑌨𑍇𑌽𑌸𑌾𑌨𑌿𑌸𑍍𑌵𑌾𑌹𑌾 । 𑌶𑍍𑌰𑍇𑌯𑌾𑌨𑍍𑌵𑌸𑍍𑌯𑌸𑍋𑌽𑌸𑌾𑌨𑌿𑌸𑍍𑌵𑌾𑌹𑌾 । 𑌤𑌂𑌤𑍍𑌵𑌾𑌭𑌗𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑌾𑌨𑌿𑌸𑍍𑌵𑌾𑌹𑌾 । 𑌸𑌮𑌾𑌭𑌗𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑌸𑍍𑌵𑌾𑌹𑌾 ॥௨॥

𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌸𑌹𑌸𑍍𑌰𑌶𑌾𑌖𑍇 । 𑌨𑌿𑌭𑌗𑌾𑌹𑌂𑌤𑍍𑌵𑌯𑌿𑌮𑍃𑌜𑍇𑌸𑍍𑌵𑌾𑌹𑌾 । 𑌯𑌥𑌾𑌪𑌃𑌪𑍍𑌰𑌵𑌤𑌾𑌯𑌨𑍍𑌤𑌿 । 𑌯𑌥𑌾𑌮𑌾𑌸𑌾𑌅𑌹𑌰𑍍𑌜𑌰𑌮𑍍 । 𑌏𑌵𑌂𑌮𑌾𑌂𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌾𑌰𑌿𑌣𑌃 ।

பாதராயணாநுஶாஸநவத்ஸ்வாஹா । ப்ருதிவ்யேஶோஸ்விப்ரூவாஹிப்ரூவ
ஶிக்ஷா ॥௬॥ விதந்வாநா ப்ரவிஶஸ்வாஹாஸப்த ச॥

యశ్ఛందసామృషభో విశ్వరూపః । ఛందోభ్యోఽధ్యమృతాత్సంబభూవ । సమేంద్రో మేధయా స్పృణోతు । అమృతస్య దేవధారణో భూయాసం । శరీరం మే విచర్షణం । జిహ్వా మే మధుమత్తమా । కర్ణాభ్యాం భూరి విశ్రువం । బ్రహ్మణః కోశోఽసి మేధయాపిహితః । శ్రుతం మే గోపాయ । ఆవహన్తీ వితన్వానా ॥ ౧ ॥

కుర్వాణాచీరమాత్మనః । వాసాꣳసి మమ గావశ్చ । అన్నపానే చ సర్వదా । తతో మే శ్రియమావహ । లోమశాం పశుభిస్సహ స్వాహా । ఆమాయన్తు బ్రహ్మచారిణస్స్వాహా । యశోజనేఽసాని స్వాహా । శ్రేయాన్వస్యసోఽసాని స్వాహా । తంత్వా భగ ప్రవిశాని స్వాహా । సమా భగ ప్రవిశ స్వాహా ॥ ౨ ॥

తస్మింత్సహస్రశాఖే । నిభగాహం త్వయి మృజే స్వాహా । యథాపః ప్రవతాయంతి । యథా మాసా అహర్జరం । ఏవం మాం బ్రహ్మచారిణః । ధాతరాయంతు సర్వతస్స్వాహా । ప్రతివేశోఽసి ప్రమాభాహి ప్రమాపద్యస్వ ॥ 3 ॥ వితన్వానా ప్రవిశ స్వాహా సప్త చ॥

(ப-ம்.) யஃ - யாதொரு ஓம்காரமென்கிற பிரணவமானது, சந்தஸாம் - வேதங்களுக்கு, ருஷபஃ - உயர்ந்ததோ, விஶ்வரூபஃ யெல்லா உருவங்களையுமுடையதோ, அதாவது யெல்லா வாக்குகளுக்கும் முதன்மையானதோ, தத்யதா ஶங்குநா ஸர்வாணி பர்ணாநி ஸந்த்ருண்ணாந்யேவமோங்காரேண ஸர்வா வாக் ஸந்த்ருண்ணோங்கார ஏவேதꣳ ஸர்வம் -என்கிறபடியே சகல வாக்குக்களுக்கும் பிரதானமானது என்று கருத்து, சந்தோப்யஃ - வேதங்களாகிற, அம்ருதாத் - அமுதத்தில் நின்றும், அதிஸம்பபூவ - மேன்மையை யடைந்தது. ஸஃ - அந்த, இந்த்ரஃ - சகலத்திற்கும் முக்யமான ஓங்காரமானது, மேதயா - அறிவினலே, மா - என்னை, ஸ்ப்ருணோது - பிரீதி பண்ணி வைக்கமட்டும் அல்லது பலத்தையுண்டு பண்ணட்டும், அம்ருதஸ்ய - மோக்ஷத்திற்குக் காரணமான பிரம்மக்யானத்திற்கு, (வா) அம்ருதஸ்ய - பரமாத்மாவுக்கு, தேவ - வாராய் பூஜ்யமாகிய ஓம்காரமே, தாரணஃ - தரிக்கிறவனாக, (வா) - மனதால் தியானிப்பவனாக, பூயாஸம் - ஆகக்கடவேன், மே - யென்னுடைய, ஶரீரம் - உடலானது, விசர்ஷணம் - யோக்யமானதாக (காந்தியுள்ளதாக), (பூயாத் - ஆகட்டும்) மே - என்னுடைய, ஜிஹ்வா - நாக்கு, மதுமத்தமா - மதுரமான வார்த்தை சொல்லுவதாக, (வா) - மதுரமான பிர்ம்மத்தைச் சொல்லுகிறதாக, (பூயாத் - ஆகட்டும்) கர்ணாப்யாம் - காதுகளாலே, பூரி - அதிகமாக, விஶ்ருவம் - கேட்கக் கடவேன், (வா) பிர்ம்மத்தையே சொல்லும்படியான சாஸ்திரங்களைக் கேட்கக்கடவேன், ப்ரஹ்மணஃ

ணஃ - பிர்மமாகிற கத்திக்கி, கோஶஃ - உறையாக, அஸி - ஆகிறாய், மேத யா - உலகத்திலுள்ள பொருள்களின் அறிவினாலே, பிஹிதஃ - மறைக்கப் பட்டவனாக, (அஸி - ஆகிறாய்) அதாவது உறையில் கத்தி யெப்படி தோற் றுகிறதோ அப்படியே பிர்ம்மத்தை யறியவிடமாக யிருக்கிறாய் கேவலம் உலகத்தில் அறிவால் மறைந்து யிருக்கிறாய், (௱ம்) பரமாத்மாவுக்கு பொக் ஷம்போல் இருப்பிடமாக யிருக்கிறாய் அதாவது பிர்ம்மத்தைச் சொல்லும் பதம் என்று கருத்து, மேதயாபிஹிதஃ - புத்தியினால் நிறைந்திருக்கிறாய் அல்லது புத்தியை யுண்டுபண்ணுகிறாய், மே-என்னுடைய, ஶ்ருதம் - கேள் வியினாலுண்டான வாத்மவின் னறிவை, கோபாய - காப்பாற்று அதாவது மறவாமல் யெப்பொழுதும் மனதிலிருக்கும்படி செய், ஆவஹந்தீ - உண்டு பண்ணுவதாயும், விதந்வாநா - விஸ்தாரப்படுத்துவதாயும், அசிரம் - சீக்கி றம், குர்வாணா-நிறைவேற்றுகிறதாயுமிருக்கிற (எதையென்றால்) ஆத்மநஃ- எனக்கு, வாஸாம்ஸி - வஸ்திரங்களையும், மம - எனக்கு, காவஶ்ச - பசுக்களை யும், அந்நபாநே-சாப்பிடும் வஸ்துக்களையும் குடிக்கும் வஸ்துக்களையும், ஸர்வதா - எக்காலத்திலும், யா - யாதொரு லட்சுமியானவள். (பவதி - இருக்கிறாளோ) தாம் - அந்த, லோமஶாம் - ஆடு முதலிய மயிருள்ளவைக ளோடு கூடியதாயும், பஶுபிஸ்ஸஹ-வேறு பசுக்களோடும் கூடியதாயு மிரு க்கிற, ஶ்ரியம் - லட்சுமியை, ததஃ - அந்த வறிவைக்கொடுத்த பிறகு, ஆவ ஹ - உண்டாகச்செய், (ஸ்வாஹா - என்று சொல்லுகிற மந்திரங்கள் ஓமத்தி லுபயோகிப்பதைக் காண்பிவைக்கிறது), (௱ம்) (யதஃ எந்த காரணத்தினால், த்வம் - நீ), ஆவஹந்தீ - உண்டுபண்ணுகிறவளோ, விதந்வாநா - விருத்தி பண்ணுகிறவளோ, ததஃ - ஆகையால், மே - எனக்கு, சீரம் - மரவுரியை வாஸாம்ஸி - வஸ்திரங்களையும், மாவஶ்ச - பசுக்களையும், அந்நபாநே - சாப்பிடும் வஸ்துக்களையும் குடிக்கும் வஸ்துக்களையும், ஸர்வதா - யெப் பொழுதும், குர்வாணாஸதீ - செய்கிறவளாய்க்கொண்டு, லோமஶாம் - அதிகமாயிருக்கிற, ஶ்ரியம் - வேதமாகிற சம்பத்தை, பஶுபிஸ்ஸஹ- யக்யத் திற்குபயோகிக்கும் பசுக்களுடன், ஆவஹ - உண்டுபண்ணு, ப்ரஹ்மசாரி ணஃ - பிர்மசர்யவிருதத்தை யனுஷ்டிக்குமவர்கள், மா - என்னைக் குறித்து, ஆயந்து - வரட்டும், ஜநே - ஜனங்களுக்குள், யஶஃ - கீர்த்தியையுடையவ னாக, அஸாநி - ஆகக்கடவேன், வஸ்யஸஃ-பணமுடையவர்களுக்குள், ஶ்ரே யாந் - உயர்ந்தவனாக, அஸாநி - ஆகக்கடவேன், (ஸ்வாஹா - என்பது முன் போலவே) ஹேபக-வாராய் பூஜிக்கத்தகுந்தவனே, (௱ம்) ஹேபக-வாராய் ஐசுவரியமே; தம் - முன்கூறிய, த்வா - உன்னை, ப்ரவிஶாநி - அடையக் கடவேன், (ஶம்) ப்ரவிஶாநி - அடைந்து உன்னுடன் ஒன்றாகக் கடவேன், (த்வம் - நீ), ஹேபக - வாராய் (ஐசுவரியமே) பூஜ்யனானவனே, ஸஃ - முன்

கூறிய, (த்வம் - நீ), மா - என்னை, ப்ரவிஶ - அடையக்கடவாய், (ஸம்)-(ஒன்றாகச் சேர்க்கக்கடவாய்) பகவ - பூஜ்யனானவனே, ஸஹஸ்ரஶாகே - அனேக பேதங்களையுடைய, தஸ்மிந் - மேற்கூறிய, த்வயி - உன்னிடத்தில், அஹம் - நான் - நிம்ருஜே - பாவத்தைப் போக்குகிறேன், (யம்) பகவ - வாராய் ஐசுவரியமே, ஸஹஸ்ரஶாகே - அனேக விதமான, தஸ்மிந்-அந்த, த்வயி - உன்னிடத்தில், (ப்ரவிஷ்ட: - சேர்ந்திருக்கிற) அஹம் - நான், நிம்ருஜே - பாபத்தைப்போக்கி சுத்தனாகிறேன், யதா - எவ்விதமாக, ஆப: - ஜலங்கள், ப்ரவதா - பள்ளமான விடத்தால், யந்தி - போகிறதுகளோ, (ரம்) ப்ரவதா: - ஓடுகிற, ஆப: - ஜலங்கள், யதா - எவ்வண்ணமாக, (திஶ: - திக்குக்களை) யந்தி - அடைகிறதுகளோ, யதா - எவ்வண்ணமாக, மாஸா: - மாதங்கள், அஹர்ஜரம் - வருஷத்தை, யந்தி - அடைகிறதுகளோ, (ரம்) அஹர்ஜரம் - சூரியனை), தாத: - வாராய் பரமாத்மாவே; ஏவம் - இந்தப் பிரகாரம், மாம் - என்னை, ப்ரஹ்மசாரிண: - பிர்ம்மசாரிகள், ஸர்வத: - எல்லாவிடத்தில் நின்றும், ஆயந்து - வரட்டும், ப்ரதிவேஶ: - சமீபத்திலிருக்கும் வீடாக, அஸி - ஆகிறீர், மா - என்னை, ப்ரபாஹி - மிகவும் காப்பாத்து, (ஸம்) ப்ரபாஹி - பிரகாசம் பண்ணு, மா - என்னை, ப்ரபத்யஸ்வ - அடைவாயாக (அதாவது அடைந்து உன்னுடன் ஒன்றாகச்செய், (ரம்) ப்ரபத்யஸ்வ - உன்னைச் சரணமடைந்தவனாகச் செய்.

ஸம-ஹா. அறிவை விரும்புகிறவனுக்கு ஜபத்தையும் தனத்தை விரும்புகிறவனுக்கு ஹோமத்தையும் இந்த அனுவாகம் சொல்லுகிறது. இதில் (ஶ்ருதம்மேகோபாய) என்கிற அளவும் புத்தியை விரும்புகிறவனுக்கு ஜபத்தைச் சொல்லுகிறது. மேல் முடியும் வரையில் தனத்தை விரும்புகிறவனுக்கு ஹோமத்தைச்சொல்லுகிறது. தனமானது கர்மங்களுக் குபயோகப்படுகிறது. கர்மங்களைச்செய்தலால் பாவங்கள் தொலைகின்றன. பாவங்கள் ஒழிந்தால் பிர்ம்மவித்தை தோன்றுகிறது. அதெப்படியெனில்; ஜ்ஞாநமுத்பத்யதே பும்ஸாம் க்ஷயாத்பாபஸ்ய கர்மண: யதாதர்ஶதலப்ரக்யே பஶ்யத்யாத்மாநமாத்மநி என்று ஸ்மிருதியில் சொல்லப்படுதலால்.

(ரா-ஹா.) பிர்ம்மவித்தையை யடைவதற்குப் பிரணவத்தை யிந்த மந்திரத்தால் பிரார்த்திக்கவேண்டியது. இதில் (ஆவஹந்தீ) என்பது முதல் லக்ஷ்மியைப் பிரார்த்திக்க வேண்டியது.

பூர்புவஸ்ஸுவரிதி வா ஏதாஸ்திஸ்ரோ வ்யாஹ்ருதய: | தாஸாமு ஹஸ்மை தாம் சதுர்த்தீம் | மாஹாசமஸ்ய: ப்ரவேதயதே | மஹ இதி | தத்ப்ரஹ்ம | ஸ ஆத்மா | அங்காந்யந்யா தேவதா: | பூரிதி வா அயம் லோக: | புவ இத்யந்தரிக்ஷம் | ஸுவரித்யஸௌ லோக: ||க||

மஹ இத்யாதித்ய: | ஆதித்யேந வாவ ஸர்வே லோகா மஹீயந்தே | பூரிதி வா அக்நி: | புவ இதி வாயு: | ஸுவரித்யாதித்ய: | மஹ இதி ச

𑌦𑍍𑌰𑌮𑌾𑌃 | 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑌸𑌾 𑌵𑌾𑌵 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌜𑍍𑌯𑍋𑌤𑍀𑌂𑌷𑌿 𑌮𑌹𑍀𑌯𑌨𑍍𑌤𑍇 | 𑌭𑍂𑌰𑌿𑌤𑌿 𑌵𑌾 𑌋𑌚𑌃 | 𑌭𑍁𑌵 𑌇𑌤𑌿 𑌸𑌾𑌮𑌾𑌨𑌿 | 𑌸𑍁𑌵𑌰𑌿𑌤𑌿 𑌯𑌜𑍂𑌂𑌷𑌿 ||௨||

𑌮𑌹 𑌇𑌤𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 | 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌾 𑌵𑌾𑌵 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌵𑍇𑌦𑌾 𑌮𑌹𑍀𑌯𑌨𑍍𑌤𑍇 | 𑌭𑍂𑌰𑌿𑌤𑌿 𑌵𑍈 𑌪𑍍𑌰𑌾𑌣𑌃 | 𑌭𑍁𑌵 𑌇𑌤𑍍𑌯𑌪𑌾𑌨𑌃 | 𑌸𑍁𑌵𑌰𑌿𑌤𑌿 𑌵𑍍𑌯𑌾𑌨𑌃 | 𑌮𑌹 𑌇𑌤𑍍𑌯𑌨𑍍𑌨𑌂 | 𑌅𑌨𑍍𑌨𑍇𑌨 𑌵𑌾𑌵 𑌸𑌰𑍍𑌵𑍇 | 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾 𑌮𑌹𑍀𑌯𑌨𑍍𑌤𑍇 | 𑌤𑌾 𑌵𑌾 𑌏𑌤𑌾𑌶𑍍𑌚𑌤𑌸𑍍𑌰𑌶𑍍𑌚𑌤𑍁𑌰𑍍𑌧𑌾 | 𑌚𑌤𑌸𑍍𑌰𑌶𑍍𑌚𑌤𑌸𑍍𑌰𑍋 𑌵𑍍𑌯𑌾𑌹𑍃𑌤𑌯𑌃 | 𑌤𑌾 𑌯𑍋 𑌵𑍇𑌦 | 𑌸 𑌵𑍇𑌦 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 | 𑌸𑌰𑍍𑌵𑍇𑌽𑌸𑍍𑌮𑍈 𑌦𑍇𑌵𑌾 𑌬𑌲𑌿𑌮𑌾𑌵𑌹𑌨𑍍𑌤𑌿 ||௩|| 𑌅𑌸𑍌 𑌲𑍋𑌕𑍋 𑌯𑌜𑍂𑌂𑌷𑌿 𑌵𑍇𑌦 𑌦𑍍𑌵𑍇 𑌚 | 𑌇𑌤𑌿 𑌪𑌞𑍍𑌚𑌮𑍋𑌽𑌨𑍁𑌵𑌾𑌕𑌃||

భూర్భువస్సువరితి వా ఏతాస్తిస్రో వ్యాహృతయః | తాసాము హస్మైతాం చతుర్థీం | మాహాచమస్యః ప్రవేదయతే | మహ ఇతి | తద్బ్రహ్మ | స ఆత్మా | అఙ్గాన్యన్యా దేవతాః | భూరితి వా అయం లోకః | భువ ఇత్యంతరిక్షం | సువరిత్యసౌ లోకః | ౧ ||

మహ ఇత్యాదిత్యః | ఆదిత్యేన వావ సర్వే లోకా మహీయంతే | భూరితి వా అగ్నిః | భువ ఇతి వాయుః | సువరిత్యాదిత్యః | మహ ఇతి చంద్రమాః | చంద్రమసా వావ సర్వాణి జ్యోతీꣳషి మహీయంతే | భూరితి వా ఋచః | భువ ఇతి సామాని | సువరితి యజూꣳషి | ౨ ||

మహ ఇతి బ్రహ్మ | బ్రహ్మణా వావ సర్వే వేదా మహీయంతే | భూరితి వై ప్రాణః | భువ ఇత్యపానః | సువరితి వ్యానః | మహ ఇత్యన్నం | అన్నేన వావ సర్వే | ప్రాణా మహీయంతే | తా వా ఏతాశ్చతస్రశ్చతుర్ధా | చతస్రశ్చతస్రో వ్యాహృతయః తా యో వేద | స వేద బ్రహ్మ | సర్వేఽస్మై దేవా బలిమావహంతి || ౩ || అసౌ లోకో యజూꣳషి వేద ద్వే చ || అను || ౩ ||

(ப் - ம்.) 𑌭𑍂𑌃 𑌭𑍁𑌵𑌃 𑌸𑍁𑌵𑌃 𑌇𑌤𑌿 𑌵𑌾 - பூ புவ ஸுவ என்று, 𑌏𑌤𑌾𑌃 - இந்த, 𑌤𑌿𑌸𑍍𑌰𑌃 - மூன்றும், 𑌵𑍍𑌯𑌾𑌹𑍃𑌤𑌯𑌃 - வ்யாக்ருதி யென்று பெயர் பெற்றதுகள், 𑌮𑌾𑌹𑌾𑌚𑌮𑌸𑍍𑌯𑌃 - மகாசமஸரென்கிற இருஷியின் பிள்ளை, 𑌏𑌤𑌾𑌂 - மேல்சொல்லப்போகிறதை, 𑌤𑌾𑌸𑌾𑌂 - அவைகளுக்கு, 𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑍀𑌂 - நான்காவதான வ்யாக்ருதியாக, 𑌪𑍍𑌰𑌵𑍇𑌦𑌯𑌤𑍇 𑌉 𑌹𑌸𑍍𑌮 - கண்டறிந்தார், ([illegible]) - சொல்லுகிறார், 𑌮𑌹 𑌇𑌤𑌿 - மக என்கிற, 𑌤𑌤𑍍 - அந்த வ்யாக்ருதியானது, 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 - பிர்ம்மம், 𑌸𑌃 - அந்த வ்யாக்ருதியானது, 𑌆𑌤𑍍𑌮𑌾 - எல்லாவற்றையும் வியாபரிக்கிறது. 𑌅𑌨𑍍𑌯𑌾𑌃 - வேறான, 𑌦𑍇𑌵𑌤𑌾𑌃 - தேவர்கள், 𑌅𑌙𑍍𑌗𑌾𑌨𑌿 - அவயவங்கள், 𑌭𑍂𑌰𑌿𑌤𑌿 𑌵𑌾 - பூ என்கிததானது, 𑌅𑌯𑌂 - இந்த, 𑌲𑍋𑌕𑌃 - உலகம், 𑌭𑍁𑌵 𑌇𑌤𑌿 - புவ என்கிறதானது, 𑌅𑌨𑍍𑌤𑌰𑌿𑌕𑍍𑌷𑌂 - ஆகாயம், 𑌸𑍁𑌵𑌰𑌿𑌤𑌿 - ஸுவ என்கிறதானது, 𑌅𑌸𑍌 - இந்த, 𑌲𑍋𑌕𑌃 - ஸ்வர்க்கலோகம், 𑌮𑌹 𑌇𑌤𑌿 : மக என்கிறதாவது, 𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌃 - சூரியன், 𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑍇𑌨 𑌵𑌾𑌵 - சூரியனுல்தானே, 𑌸𑌰𑍍𑌵𑍇 - எல்லா, 𑌲𑍋𑌕𑌾𑌃 - உலகங்கள், 𑌮𑌹𑍀𑌯𑌨𑍍𑌤𑍇 - விருத்தியை யடைகிறதுகள், ([illegible]) - பூஜையை யடைகிற

துகள், பூரிதிவா - பூ என்கிறதானது, அக்நி: - நெருப்பு, புவ இதி-புவ என்கிறதானது, வாயு: - காற்று, ஸுவரிதி - ஸுவ என்கிறதானது, ஆதித்ய: - சூரியன், மஹ இதி - மக என்கிறதானது, சந்த்ரமா: - சந்திரன், சந்த்ரமஸாவாவ-சந்திரனால்தானே, ஸர்வாணி-எல்லா, ஜ்யோதீம்ஷி-பிரகாசிக்கும் வஸ்துக்கள், மஹீயந்தே - விருத்தியடைகிறதுகள், (வா) - பூஜையை யடைகிறதுகள், பூரிதிவா - பூ என்கிறதானது, ருச: - ருக்வேதங்கள், புவ இதி - புவ என்கிறதானது, ஸாமாநி-சாமவேதங்கள், ஸுவரிதி - ஸுவ என்கிறதானது, யஜூம்ஷி - யஜுர்வேதங்கள், மஹ இதி - மக என்கிறதானது, ப்ரஹ்ம - பிர்ம்மம், ப்ரஹ்மணாவாவ - பிர்ம்மத்தினாலே தானே, ஸர்வே - எல்லா, வேதா: - வேதங்கள், மஹீயந்தே - விருத்தியடைகிறதுகள், (வா) பூஜையை யடைகிறனகள், பூரிதிவை - பூ என்கிறதானது, ப்ராண: - பிராணன், புவ இதி - புவ என்கிறதானது, அபாந: - அபானன் என்கிறது, ஸுவரிதி - ஸுவ என்கிறதானது, வ்யாந: - வியானன் என்கிறது, மஹ இதி - மக என்கிறதானது, அந்நம் - சாப்பிடும் வஸ்து. அந்நேநவாவ - சாப்பிடும் வஸ்துவினாலேதானே, ஸர்வே - எல்லா, ப்ராணா: - பஞ்சப் பிராணன்களும், மஹீயந்தே - விருத்தியடைகிறதுகள், (வா) - பூஜையை யடைகிறதுகள், தாவா - மேற்கூறிய, ஏதா: - இந்த, சதஸ்ர: - நான்கு வ்யாக்ரிதிகளும், சதுர்தா - நான்கு வகைப்பட்டது. சதஸ்ர: - நான்காயிருக்கிற, வ்யாஹ்ருதய: - வ்யாக்ருதிகளும், சதஸ்ர: - நான்கு வகையுடையதுகள், தா:-மேற்கூறிய அந்த வ்யாக்ருதிகளை, ய: - எவன், வேத - அறியுகிறானோ, ஸ: - அவன், ப்ரஹ்ம - பிர்ம்மத்தை, வேத - அறியுகிறான், ஸர்வே - எல்லா, தேவா: - தேவர்களும், அஸ்மை - இவன் பொருட்டு, பலிம் - பூஜையை, ஆவஹந்தி - செய்கிறார்கள்,

(ஸ0 - ஸா.) இந்த வனுவாகத்தால் வ்யாக்ருதி ரூபமாயிருக்கிற பிர்ம்மத்தின் தியானமானது ஸ்வரராஜ்யம் யென்கிற ஸ்வர்க்கத்துக் கரசனாயிருத்தலைக் குறித்து சொல்லப்படுகிறது. மேல் அனுவாகத்தில் சொல்லப்போகிற விசேஷங்களோடு கூடின பிர்ம்மமாக மக என்கிற வ்யாக்ருதியையும் மற்றமூன்று வ்யாக்ருதிகளையும் மேற்கூறிய நான்கு விதங்களாக வறியுமவன் சுவர்க்கத்துக் கரசனாகிறான். யெல்லாத் தேவர்களும் அவனுக்குப் பூஜைசெய்கிறார்கள்.

(ரா - ஸா.) மேல் அனுவாகத்தில் சொல்லப்போகிற பிர்ம்மவித்தைக்கு அங்கமான வ்யாக்ருதின் தியானம் இந்த அனுவாகத்தில் சொல்லப்படுகிறது. மக என்கிறது பெரியதான வஸ்துவைச் சொல்லுமாதலால் அதுவே பிர்ம்மம்; மற்ற தேவர்கள் அந்த பிர்ம்மத்தின் சரீரங்கள் இங்கு தேவர்கள் என்றது யெல்லாப் பொருளையும் காட்டுகிறது. மேற்கூறிய நான்கு விதமாய் வ்யாக்ரிதிகளை யெவன் தியானம் செய்கிறானோ அவனுக்கு மேல் அனுவாகத்தில் சொல்லப்போகிற பிர்ம்மவித்தை யுண்டாகிறது.

𑌸𑌯𑌏𑌷𑍋𑌽𑌨𑍍𑌤𑌰𑍍𑌹𑍃𑌦𑌯𑌆𑌕𑌾𑌶𑌃 । 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑌯𑌂𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌮𑌨𑍋𑌮𑌯𑌃 । 𑌅𑌮𑍃𑌤𑍋𑌹𑌿𑌰𑌣𑍍𑌮𑌯𑌃 । 𑌅𑌨𑍍𑌤𑌰𑍇𑌣𑌤𑌾𑌲𑍁𑌕𑍇 । 𑌯𑌏𑌷𑌸𑍍𑌤𑌨𑌇𑌵𑌾𑌵𑌲𑌂𑌬𑌤𑍇 । 𑌸𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌯𑍋𑌨𑌿𑌃 । 𑌯𑌤𑍍𑌰𑌾𑌸𑍌𑌕𑍇𑌶𑌾𑌨𑍍𑌤𑍋𑌵𑌿𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 । 𑌵𑍍𑌯𑌪𑍋𑌹𑍍𑌯𑌶𑍀𑌰𑍍𑌷𑌕𑌪𑌾𑌲𑍇 । 𑌭𑍂𑌰𑌿𑌤𑍍𑌯𑌗𑍍𑌨𑍌𑌪𑍍𑌰𑌤𑌿𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿 । 𑌭𑍁𑌵𑌇𑌤𑌿𑌵𑌾𑌯𑍌 ॥௧॥

𑌸𑍁𑌵𑌰𑌿𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑍇 । 𑌮𑌹𑌇𑌤𑌿𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌿 । 𑌆𑌪𑍍𑌨𑍋𑌤𑌿𑌸𑍍𑌵𑌾𑌰𑌾𑌜𑍍𑌯𑌂 । 𑌆𑌪𑍍𑌨𑍋𑌤𑌿𑌮𑌨𑌸𑌸𑍍𑌪𑌤𑌿𑌂 । 𑌵𑌾𑌕𑍍𑌪𑌤𑌿𑌶𑍍𑌚𑌕𑍍𑌷𑍁𑌷𑍍𑌪𑌤𑌿𑌃 । 𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌪𑌤𑌿𑌰𑍍𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌪𑌤𑌿𑌃 । 𑌏𑌤𑌤𑍍𑌤𑌤𑍋𑌭𑌵𑌤𑌿 । 𑌆𑌕𑌾𑌶𑌶𑌰𑍀𑌰𑌂𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 । 𑌸𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌰𑌾𑌮𑌂𑌮𑌨𑌆𑌨𑌨𑍍𑌦𑌂 । 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌸𑌮𑍃𑌦𑍍𑌧𑌮𑌮𑍃𑌤𑌂 ॥௨॥ 𑌇𑌤𑌿𑌪𑍍𑌰𑌾𑌚𑍀𑌨𑌯𑍋𑌗𑍍𑌯𑍋𑌪𑌾𑌸𑍍𑌸𑍍𑌵 । 𑌵𑌾𑌯𑌾𑌵𑌮𑍃𑌤𑌮𑍇𑌕𑌞𑍍𑌚 । 𑌷𑌷𑍍𑌠𑍋𑌽𑌨𑍁𑌵𑌾𑌕𑌃॥

సయఏషోంతర్హృదయఆకాశః । తస్మిన్నయంపురుషోమనోమయః । అమృతోహిరణ్మయః । అంతరేణతాలుకే । యఏషస్తనఇవావలంబతే । సేంద్రయోనిః । యత్రాసౌకేశాంతోవివర్తతే । వ్యపోహ్యశీర్షకపాలే । భూరిత్యగ్నౌప్రతితిష్ఠతి । భువఇతివాయౌ ॥ ౧ ॥

సువరిత్యాదిత్యే । మహఇతిబ్రహ్మణి । ఆప్నోతిస్వారాజ్యం । ఆప్నోతిమనసస్పతిం । వాక్పతిశ్చక్షుష్పతిః । శ్రోత్రపతిర్విజ్ఞానపతిః । ఏతత్తతోభవతి । ఆకాశశరీరంబ్రహ్మ । సత్యాత్మ ప్రాణారామం మనఆనందం । శాంతిసమృద్ధమమృతం ॥౨॥ ఇతిప్రాచీనయోగ్యోపాస్స్వ॥ వాయావమృతమేకంచ ॥

(ப-ம்.) 𑌯𑌃 - எந்த, 𑌏𑌷𑌃 - இந்த, 𑌅𑌨𑍍𑌤𑌰𑍍𑌹𑍃𑌦𑌯𑍇 - ஹிருதய கமலத்துக்குள், 𑌆𑌕𑌾𑌶𑌃 - இடைவெளியோ, 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍-அந்த விடைவெளியில், 𑌅𑌯𑌂 - அந்த இந்த, 𑌮𑌨𑍋𑌮𑌯𑌃 - ஜ்ஞானத்தாலறியத் தகுந்த (அல்லது) (மனதுக்கு அபிமானி தேவதையான) 𑌅𑌮𑍃𑌤𑌃 - மரணமில்லாதவனு, 𑌹𑌿𑌰𑌣𑍍𑌮𑌯𑌃 - பிரகாசிக்கிற சரீரத்தோடே கூடின, 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 - புருஷன், (𑌅𑌸𑍍𑌤𑌿 - இருக்கிறான்), 𑌤𑌾𑌲𑍁𑌕𑍇𑌅𑌨𑍍𑌤𑌰𑍇𑌣-தாடைகளின் நடுவில், 𑌯𑌃 - எந்த, 𑌏𑌷𑌃 - இந்த நரம்பானது, 𑌸𑍍𑌤𑌨𑌇𑌵 - ஸ்தனம்போல், 𑌅𑌵𑌲𑌂𑌬𑌤𑍇 - தொங்குகிறதோ, 𑌯𑌤𑍍𑌰 - எந்த விடத்தில், 𑌅𑌸𑍌 - இந்த, 𑌕𑍇𑌶𑌾𑌨𑍍𑌤𑌃 - மயிர்களுடைய வேரானது, 𑌵𑌿𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 - புரிந்திருக்கிறதோ, (𑌤𑌂 - அந்த, 𑌦𑍇𑌶𑌂 - இடத்தை, 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 - அடைந்து), 𑌵𑍍𑌯𑌪𑍋𑌹𑍍𑌯-பிளந்து, 𑌶𑍀𑌰𑍍𑌷𑌕𑌪𑌾𑌲𑍇 - மண்டையோட்டில், (𑌨𑌿𑌰𑍍𑌗𑌤𑌾 - வெளிக்கிளம்பி யிருக்கிறது), 𑌯𑌾 - எந்த நாடியோ, 𑌸𑌾 - அந்த நாடியானது, 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌯𑍋𑌨𑌿𑌃 - அந்த பிர்ம்மாவை யறிவதற்குக் காரணம், (𑌏𑌵𑌂 - இந்தப்படி, 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍 - அறிகிறவன், 𑌤𑌯𑌾 - அந்த நாடியால், 𑌨𑌿𑌷𑍍𑌕𑍍𑌰𑌮𑍍𑌯-வெளிக்கிளம்பி), 𑌭𑍂𑌃𑌇𑌤𑌿 - பூ என்கிற வ்யாக்ருதி ரூபியாய், 𑌅𑌗𑍍𑌨𑍌 - அக்நியில், 𑌪𑍍𑌰𑌤𑌿𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿 - இருக்கிறான், 𑌭𑍁𑌵𑌇𑌤𑌿 - புவ என்கிற வ்யாக்ருதி ரூபியாய், 𑌵𑌾𑌯𑍌-வாயுவில்,

ப்ரதிதிஷ்டதி - இருக்கிறான், ஸுவரிதி - ஸுவ என்கிற வ்யாக்ருதி ரூபி யாய், ஆதித்யே - சூரியனில், ப்ரதிதிஷ்டதி - இருக்கிறான், மஹ இதி - மக என்கிற வ்யாக்ருதியாய், ப்ரஹ்மணி - சதுர்முகனிடத்தில், ப்ரதிதிஷ்டதி- இருக்கிறான், ஸ்வாராஜ்யம்-தானே யரசனாகயிருக்கிறதை, ஆப்னோதி-அடை கிறான், மனஸஸ்பதிம் - யெல்லா மனதிற்கு மதிபதியான தன்மையை, ஆப்னோதி - அடைகிறான், வாக்பதி: - வாக்குகளுக்கு அரசனாகவும், சக்ஷுஷ்பதி: - கண்களுக்கு அரசனாகவும், ச்ரோத்ரபதி: - காதுகளுக்கு, அரச னாகவும், விஜ்ஞானபதி: - அறிவுக்கு அரசனாகவும், தத:-அதைவிட அதிக மாக, ஏதத் - இதுவானது, பவதி - உண்டாகிறது. ஆகாசசரீரம் - ஆகாயம்போல சூக்ஷ்மமான சரீரத்தையுடையதாயும், ஸத்யாத்ம - மெய் யான தன்மையையுடையதாயும், ப்ராணாராமம் - பிராணன்களிடத்திலேயே விளையாட்டையுடையதாயும், மனஆனந்தம் - சுகத்தைக் கொடுக்கத்தாக மன தையுடையதாயும், சாந்திஸம்ருத்தம் - சாந்தியால் நிரம்பினதாயும், அம்ருதம் - மரணமில்லாததாயு மிருக்கிற, ப்ரஹ்ம - பிர்ம்மமானது, (பவதி-ஆகிறது), ஹேப்ராசீநயோக்ய - வாராய் பிராசீன யோக்யமென்கிற சிஷ்யனே, இதி - என்று, உபாஸ்வ - தியானம் செய், (ரம் - பதார்த்தங்களினுடைய வும் அந்வயங்களுடையவும் பேதம்), தாலுகேஅந்தரேண - தாடைகளின் நடுவே, யஏஷ: - யாதொரு உந்த நாடியானது, ஸ்தனஇவ - பசுவின்முலை போல், அவலம்பதே - தொங்குகிறதோ, ஸா - அந்த நாடியானது, இந்த்ர யோநி: - மோக்ஷமென்கிற ஐசுவரியத்தை யடைகிற ஜீவனுக்கு வெளிப் படுகிறவழி, யத்ர - எந்த வழியில், அஸௌ - இந்த, கேசாந்த: - பிர்ம்மா ருத்திரன் இவர்களுக்குக் காரணமான மகாவிஷ்ணுவானவர், விவர்த்தே - விசேஷமாக யிருக்கிறாரோ, ஸ்வாராஜ்யம் - கர்மங்களுக்கு கீழ்படியாமையை, ஆப்னோதி - அடைகிறான், மனஸஸ்பதிம் - மனதுகளுக்கு யஜமானனான தன் மையை, ஆப்னோதி - அடைகிறான், தத: - அதற்குப் பிறகு, ஏதத் - இதுவானது, பவதி - உண்டாகிறது (எது வென்றால்), ஆகாசசரீரம் - விளங்குகிற சரீரத்தோடு கூடினதாயும், ப்ரஹ்ம - விளங்குகிற பரபிர்ம்மத் தின் ஸ்வரூபத்தோடு கூடினதாயும், ஸத்யாத்மப்ராணாராமம் - நித்திய சூரி களுக்கும் முக்தர்களுக்கும் பிராணன்போன்ற பிர்ம்மத்தையே போக்யமாக வுடையதாயும், மனஆனந்தம் - நினைத்த மாத்திரத்தில் உண்டாகும் ஆனந்தத் தையுடையதாயும், சாந்திஸம்ருத்தம் - சாந்தியோடே கூடினதாயும், அம்ருதம் - சம்சாரமில்லாததாயும், பவதி - ஆகிறது.

(ரா - ஸா.) மேற்கூறிய வ்யாக்ருதிகளில் மக என்கிற வ்யாக்ருதியை சது ர்முகப் பிர்ம்மரூபமாகவும், மற்ற வ்யாக்ருதி ரூபங்களான யெல்லா வஸ்துக்களையும் பிர்

ம்மாவின் அங்கங்களாகவும் தியானம் பண்ணுகிறவனுக்கு அப்படி தியானம் செய்யப்படும் பிர்ம்மாவினிடமும் அப்படி தியானம் செய்ததாலுண்டாகும் பயனும் அப்பயனை யடையும் வழியும் இதில் சொல்லப்படுகிறது. மேற்கூறிய பிர்ம்மா ஹிருதயகமலமென்கிற ஆகாயத்திலிருக்கிறான். மனதால் அறியத்தக்கவன் மரணமில்லாதவன் விளங்குகிற சரீரத்தோடு கூடியவன் அவனை யறியும் வழியாவது. இரண்டு தாடைகளின் நடுவில் எந்த நாடி தொடங்குகிறதோ எந்த மண்டையில் மயிர்களின் அடிபாகம் சம்பந்தப்பட்டிருக்கிறதோ அந்த மண்டையோட்டில் கிளம்பியிருக்கிறது எந்த நாடியோ அதுதான் அவனை யறியும் வழி. இப்படி யறிந்தவன் மேற்கூறிய நாடியில் வெளிக்கிளம்பி கிரமமாய் பூ புவ ஸுவ என்கிற மூன்று வ்யாக்ருதி ரூபியாய் அக்நி வாயு சூரியன் இதுகளிடத்தில் சேர்ந்து மக என்கிற பிர்ம்மாவினிடத்தில் சேருகிறான். அந்த பிர்ம்மாவுடன் ஒன்றாய் பிர்ம்மாவின் தன்மைகளை யடைகிறான். எல்லாப் பொருள்களும் இந்தப் பிர்ம்மாவுக்கு அவயவமாதலால் மனது முதலாகிய எல்லாப் புலன்களுக்கும் யஜமானனாகிறான். பிறகு பிர்ம்மத்துடன் ஒன்றாய் விடுகிறான்.

(ரா - ஸா.) மேற்கூறிய வ்யாக்ருதி தியானத்திற்கு அங்கியான பிர்ம்மவித்தையும் அதின் பயனும் இந்த வனுவாகத்தில் சொல்லப்படுகிறது. ஹிருதயகமலத்தின் நடுவில் நல்லமனதால் அறியத்தக்கவராயும் ஸம்சார ஸம்பந்தமில்லாதவனாயும் விளங்குகிற சரீரத்தோடும் எவன் இருக்கிறானோ, அவனே பரமாத்மா, அவனையே தியானம் செய்ய வேண்டும். எப்படி தியானம் பண்ணி மோக்ஷத்தை யடையப்போகிறவனுக்கு வழியேதென்றால், தாடைகளின் நடுவே பசுவின் முலைபோல் எந்த நாடிதொங்குகிறதோ எந்த வழியில் போகிறவனுக்கு பிர்ம்மா ருத்திரன் இவர்களுக்கும் காரணமாய் இவர்களை சங்கரிக்குமவனான பரமாத்மா அடையத்தக்கவனோ, அதுவே வழி இப்படி தியானம் செய்தவன் அந்த காலத்தில் மண்டையோட்டைப் பிளந்துகொண்டு பூ என்கிற வ்யாக்ருதியால் அக்நிலோகத்திலிருக்கிறான். மோக்ஷம் போகிறவர்கள் எல்லாருக்கும் அக்நிலோகத்தில் போகிறது பொதுவாயிருந்தபோதிலும் இந்த வ்யாக்ருதி தியானத்தோடுகூடின இந்த பிர்ம்மவித்தையை யனுஷ்டித்தவனுக்கு சிலகாலம் அந்தந்த உலகங்களில் சாவகாசமுண்டு. பிறகு கர்மங்களுக்கு கீழ்ப்படியாதவனாக வாகிறான், தான் நினைத்த மாத்திரத்தில் எல்லாப் பலன்களாலுண்டான அறிவுகளும் சுகங்களும் உண்டாகின்றன. நித்திய சூரிகளும் முக்தர்களும் எப்பொழுதும் அனுபவித்துக்கொண்டிருக்கிற பிர்ம்மத்தையே இவனும் அனுபவித்துக்கொண்டிருக்கிறான். "யம்காமம்காமயதேஸஸோஸ்யஸம்கல்பாதேவஸமுத்திஷ்டதி" என்று சுருதிசொல்லுகிறபடியே நினைத்தபோதே எல்லா ஆனந்தங்களு முண்டாகிறது, ஸம்சாரசம்பந்த மில்லாதவனாக வாகிறான்.

ப்ருதிவ்யந்தரிக்ஷம்த்யௌர்திஶோऽவாந்தரதிஶா: | அக்நிர்வாயுராதித்யஶ்சந்த்ரமா நக்ஷத்ராணி | ஆப ஓஷதயோ வநஸ்பதய ஆகாஶ ஆத்மா | இத்யதிபூதம் | அதாத்யாத்மம் | ப்ராணோ வ்யாநோऽபாந உதாந: ஸமாந: | சக்ஷு: ஶ்ரோத்ரம் மநோ வாக் த்வக் | சர்ம மாம்ஸம் ஸ்நாவாஸ்தி மஜ்ஜா | ஏததிவிதாய ருஷிரவோசத் | பாங்க்தம் வா இதம் ஸர்வம் ||க|| பாங்க்தேநைவ பாங்க்தம் ஸ்ப்ருணோதீதி | ஸப்தமோऽநுவாக: ||

పృథివ్యంతరిక్షం ద్యౌర్దిశోవాంతరదిశాః॥ అగ్ని ర్వాయురాదిత్యశ్చంద్రమా నక్షత్రాణి॥ ఆప ఓషధయో వనస్పతయ ఆకాశ ఆత్మా । ఇత్యధిభూతం । అథాధ్యాత్మం । ప్రాణో వ్యానో పాన

ఉదానస్సమానః । చక్షుశ్శ్రోత్రంమనోవాక్త్వక్ । చర్మమాంసగ్ స్నావాస్థిమజ్జా । ఏతదధి విధాయఋషిరవోచత్ । పాఙ్క్తంవాఇదగ్ సర్వం ॥ ౧ ॥ పాఙ్క్తేనైవపాఙ్క్తగ్ స్పృణోతీతి ॥ సర్వమేకంచ ॥

(ப - ம்) ப்ருதிவீ - பூமி, அந்தரிக்ஷம் - ஆகாயம், த்யௌ: - ஸ்வர்க்கலோகம், திச: - திக்குக்கள், அவாந்தரதிச: - மூலைத்திசைகள், அக்நி: - நெருப்பு, வாயு: - காற்று, ஆதித்ய: - சூரியன், சந்த்ரமா: - சந்திரன், நக்ஷத்ராணி - நக்ஷத்திரங்கள், ஆப: - ஜலங்கள், ஓஷதய: - கொடிகள், வநஸ்பதய: - மரங்கள், ஆகாச: - பூதமென்கிற ஆகாயமும், ஆத்மா - விராட்ரூபம், இதி - யென்று, அதிபூதம் - அதிபூதமென்கிற பெயர்கொண்டது, அத - பிறகு, அத்யாத்மம் - அத்யாத்மமென்கிற பெயர்கொண்டது, ப்ராண: - பிராணனும், வ்யாந: - வியானனும், அபாந: - அபானனும், உதாந: - உதானனும், ஸமாந: - ஸமானனும், சக்ஷு: - கண்ணும், ச்ரோத்ரம் - காதும், மந: - மனதும், வாக் - வாக்கும், த்வக் - இந்திரியரூபமான தோலும், சர்ம - மேல்தோலும், மாம்ஸம் - மாம்சமும், ஸ்நாவா - சியும், அஸ்தி - இலும்பும், மஜ்ஜா - உயிர்த்தண்ணியும், ஏதத் - இதுகளை, அதிவிதாய - கும்பலாகச் சேர்த்து, ருஷி: - இருஷியானவர், அவோசத் - சொன்னார், இதம் - இந்த, ஸர்வம் - எல்லாம், பாங்க்தம் - பாங்க்தம் என்கிற பெயர்கொண்டது. பாங்க்தேநைவ - மேற்கூறிய பாங்க்தத்தாலேதானே, பாங்க்தம் - வெளிப்பொருள்களை, ஸ்ப்ருணோதி - காப்பாற்றுகிறான், இதி - யென்று (சொன்னார்).

(பா - ஷா.) வ்யாக்ருதி ரூபமான பிர்ம்மத்தை தியானம் செய்யும்படி முன்னனுவாகத்தில் சொல்லி இந்த அனுவாகத்தில் சாங்க்த ரூபமாய் தியானம் பண்ணச் சொல்லுகிறது. பாங்க்தமென்றால் பங்க்தியோடே சேர்ந்ததற்கும் பெயர். பங்க்தியென்றால் வேதத்தில் ஒரு சந்தஸ்; அது ஐந்து பதங்களோடே கூடியது. ஆதலால் ஐந்தாகக் கூடியிருக்கும் பொருள்களெல்லாம் மேற்சொன்ன சந்தஸ்களுக்குச் சரியாயிருத்தலால் இப்பொருள்களையும் பாங்க்தமென்று சொல்லுகிறது. அப்படியே சுருதியிலும் "பஞ்சபதாபங்க்த: பாங்க்தோஜ்ஞ:" என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் இங்கு அதிபூதமென்று சொல்லப்பட்டது பதினைந்து பொருள்களாதலால் மூன்று பாங்க்தம் அதில் பூமிமுதல் ஐந்துக்கு உலகபாங்க்தமென்றும், நெருப்பு முதல் ஐந்துக்கு தேவதாபாங்க்தமென்றும், ஜலம் முதலான ஐந்துக்குப் பூதபாங்க்தமென்றும், பிராணன் முதலான ஐந்துக்கு வாயு பாங்க்தமென்றும், கண் முதலான ஐந்துக்கு இந்திரிய பாங்க்தமென்றும், தோல் முதலான ஐந்துக்குக் காது பாங்க்தமென்றும் இவைகளை ஆறு பாங்க்தங்களாகப் பிரித்து இவைகளைத் தியானம் செய்கிறவன் மேற்கூறிய பாங்க்தங்களை நிறைந்திருக்கிறான். அதாவது மேற்கூறிய பாங்க்தங்களில் நிறைந்திருக்கிற பிர்ம்மாவுடன் ஒன்றாகிறான் என்று இருஷி சொன்னார்.

(ரா - ஹா.) மேற்கூறிய ஐந்து பாங்க்தங்களையும் தியானம் பண்ணுகிறவன் இந்த பஞ்சபூதங்களால் நிறைந்திருக்கிற வுலகங்களைக் காப்பாற்றுகிறான். அதாவது இவ்வுலகங்களுக்கு அரசனாகிறான் என்று இவைகளைக் கண்டறிந்த ஓர் இருஷி சொன்னார்.

𑌓𑌮𑌿𑌤𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 | 𑌓𑌮𑌿𑌤𑍀𑌦𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 | 𑌓𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌤𑌦𑌨𑍁𑌕𑍃𑌤𑌿𑌹 𑌸𑍍𑌮 𑌵𑌾 𑌅𑌪𑍍𑌯𑍋 𑌶𑍍𑌰𑌾𑌵𑌯𑍇𑌤𑍍𑌯𑌾𑌶𑍍𑌰𑌾𑌵𑌯𑌨𑍍𑌤𑌿| 𑌓𑌮𑌿𑌤𑌿 𑌸𑌾𑌮𑌾𑌨𑌿 𑌗𑌾𑌯𑌨𑍍𑌤𑌿 | 𑌓𑌂 𑌶𑍋𑌮𑌿𑌤𑌿 𑌶𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌶𑌂𑌸𑌨𑍍𑌤𑌿 | 𑌓𑌮𑌿𑌤𑍍𑌯𑌧𑍍𑌵𑌰𑍍𑌯𑍁𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌗𑌰𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌗𑍃𑌣𑌾𑌤𑌿 | 𑌓𑌮𑌿𑌤𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌪𑍍𑌰𑌸𑍌𑌤𑌿 | 𑌓𑌮𑌿𑌤𑍍𑌯𑌗𑍍𑌨𑌿𑌹𑍋𑌤𑍍𑌰𑌮𑌨𑍁𑌜𑌾𑌨𑌾𑌤𑌿 | 𑌓𑌮𑌿𑌤𑌿 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌃 𑌪𑍍𑌰𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌨𑍍𑌨𑌾𑌹 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍋𑌪𑌾𑌪𑍍𑌨𑌵𑌾𑌨𑍀𑌤𑌿 | 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵𑍋𑌪𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿| 𑌓𑌂𑌦𑌶 | 𑌅𑌷𑍍𑌟𑌮𑍋𑌽𑌨𑍁𑌵𑌾𑌕𑌃||

ఓమితిబ్రహ్మ । ఓమితీదగ్ం సర్వం । ఓమిత్యేతదనుకృతిర్హస్మవా అప్యోశ్రావయేత్యాశ్రావయంతి । ఓమితిసామానిగాయంతి । ఓగ్ంశోమితిశస్త్రాణిశగ్ంసంతి । ఓమిత్యధ్వర్యుః ప్రతిగరం ప్రతిగృణాతి ॥ ఓమితిబ్రహ్మాప్రసౌతి । ఓమిత్యగ్నిహోత్రమనుజానాతి । ఓమితిబ్రాహ్మణః ప్రవక్ష్యన్నాహ । బ్రహ్మోపాప్నవానీతి । బ్రహ్మైవోపాప్నోతి ॥ ౧ ॥ ఓందశ ॥

(ப - ம்.) 𑌓𑌮𑌿𑌤𑌿 - ஓம் என்று சொல்லப்பட்ட சப்தமானது, 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 - பரபிரம்மம், 𑌇𑌦𑌂 - இந்த, 𑌸𑌰𑍍𑌵𑌂 - யெல்லாப் பொருள்களும், 𑌓𑌮𑌿𑌤𑌿 - ஓம் என்று சொல்லும் பதம்தான் அதாவது யெல்லாப் பொருள்களையும் சொல்லும் சப்தங்களுக்கு ஆதிகாரணமானதால், 𑌓𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌤𑌤𑍍-ஓம் என்கிற விதானது, 𑌅𑌨𑍁𑌕𑍃𑌤𑌿𑌃𑌹𑌸𑍍𑌮𑌵𑌾𑌅𑌪𑌿 - ஒருவன் ஒருகாரியத்தை யேவினால் அதற்கு வேறு மனிதனுடைய அங்கீகாரம் அன்றோ, 𑌓𑌶𑍍𑌰𑌾𑌵𑌯𑌇𑌤𑌿- ஓச்ராவய என்று, 𑌆𑌶𑍍𑌰𑌾𑌵𑌯𑌨𑍍𑌤𑌿 - யஞ்யத்தில் பிரதிச்ரவணம் பண்ணிவைக்கிறார்கள், 𑌓𑌮𑌿𑌤𑌿 - ஓம் என்று, 𑌸𑌾𑌮𑌾𑌨𑌿 - சாமங்களை, 𑌗𑌾𑌯𑌨𑍍𑌤𑌿 - யிடுகிறார்கள், 𑌓𑌂𑌶𑍋𑌮𑌿𑌤𑌿 - ஓம்சோம் என்று, 𑌶𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 - சஸ்திரம் என்கிற மந்திரங்களை, 𑌶𑌂𑌸𑌨𑍍𑌤𑌿 - சொல்லுகிறார்கள். 𑌓𑌮𑌿𑌤𑌿 - ஓம் என்று, 𑌅𑌧𑍍𑌵𑌰𑍍𑌯𑍁𑌃 - யக்யத்திலிருக்கும் அத்வர்யுவானவன், 𑌪𑍍𑌰𑌤𑌿𑌗𑌰𑌂 - பிரதிகரத்தை, 𑌪𑍍𑌰𑌤𑌿𑌗𑍃𑌣𑌾𑌤𑌿 - சொல்லுகிறான் அதாவது ஹோதாவென்கிற யக்யத்திலிருப்பவன் சஸ்திரமென்கிற மந்திரத்தைச் சொல்லும்போது ஓம் என்று சந்தோஷிக்கிறான், 𑌓𑌮𑌿𑌤𑌿 - ஓம் என்று, 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 - யக்யத்திலிருக்கும் ப்ரம்மாவென்று பெயர் பெற்றவன், 𑌪𑍍𑌰𑌸𑍌𑌤𑌿 - அனுமதி பண்ணுகிறான், 𑌓𑌮𑌿𑌤𑌿- ஓம் என்று, 𑌅𑌗𑍍𑌨𑌿𑌹𑍋𑌤𑍍𑌰𑌂 - அக்கினிஹோத்திரம் என்று சொல்லும் ஹோமத்தை, 𑌅𑌨𑍁𑌜𑌾𑌨𑌾𑌤𑌿 - அனுமதி பண்ணுகிறான், 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 - வேதத்தை, 𑌉𑌪𑌾𑌪𑍍𑌨𑌵𑌾𑌨𑌿 - அடையக் கடவேன், 𑌇𑌤𑌿 - என்கிற எண்ணத்துடன், 𑌪𑍍𑌰𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌨𑍍 - அத்யயனம் பண்ணப்போகிற, 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌃 - பிராமணன், 𑌓𑌮𑌿𑌤𑌿 - ஓம் என்று, 𑌆𑌹 - சொல்லுகிறான், 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵 - வேதத்தைத் தானே, 𑌉𑌪𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 - அடைகிறான்.

(𑌶𑌂 - 𑌭𑌾 - 𑌰𑌾 - 𑌭𑌾.) ப்ரம்மத்தியானத்திற்கு முக்யமான ஆதாரமாதலால் ப்ரணவத்தை இந்த அநுவாகத்தில் ஸ்தோத்திரம் செய்கிறது.

𑌋𑌤𑌂𑌚 𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌪𑍍𑌰𑌵𑌚𑌨𑍇 𑌚 । 𑌸𑌤𑍍𑌯𑌂𑌚 𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌪𑍍𑌰𑌵𑌚𑌨𑍇 𑌚 । 𑌤𑌪𑌶𑍍𑌚 𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌪𑍍𑌰𑌵𑌚𑌨𑍇 𑌚 । 𑌦𑌮𑌶𑍍𑌚 𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌪𑍍𑌰𑌵𑌚𑌨𑍇 𑌚 । 𑌶𑌮𑌶𑍍𑌚 𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌪𑍍𑌰𑌵𑌚𑌨𑍇 𑌚 । 𑌅𑌗𑍍𑌨𑌯𑌶𑍍𑌚 𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌪𑍍𑌰𑌵𑌚𑌨𑍇 𑌚 । 𑌅𑌗𑍍𑌨𑌿𑌹𑍋𑌤𑍍𑌰𑌂𑌚 𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌪𑍍𑌰𑌵𑌚𑌨𑍇 𑌚 । 𑌅𑌤𑌿𑌥𑌯𑌶𑍍𑌚 𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌪𑍍𑌰𑌵𑌚𑌨𑍇 𑌚 । 𑌮𑌾𑌨𑍁𑌷𑌂𑌚 𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌪𑍍𑌰𑌵𑌚𑌨𑍇 𑌚 । 𑌪𑍍𑌰𑌜𑌾𑌚 𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌪𑍍𑌰𑌵𑌚𑌨𑍇 𑌚 ॥௧॥

𑌪𑍍𑌰𑌜𑌨𑌶𑍍𑌚 𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌪𑍍𑌰𑌵𑌚𑌨𑍇 𑌚 । 𑌪𑍍𑌰𑌜𑌾𑌤𑌿𑌶𑍍𑌚 𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌪𑍍𑌰𑌵𑌚𑌨𑍇 𑌚 । 𑌸𑌤𑍍𑌯𑌮𑌿𑌤𑌿 𑌸𑌤𑍍𑌯𑌵𑌚𑌾 𑌰𑌾𑌥𑍀𑌤𑌰𑌃 । 𑌤𑌪 𑌇𑌤𑌿 𑌤𑌪𑍋𑌨𑌿𑌤𑍍𑌯𑌃 𑌪𑍌𑌰𑍁𑌶𑌿𑌷𑍍𑌟𑌿𑌃 । 𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌪𑍍𑌰𑌵𑌚𑌨𑍇 𑌏𑌵𑍇𑌤𑌿 𑌨𑌾𑌕𑍋 𑌮𑍌𑌦𑍍𑌗𑌲𑍍𑌯𑌃 । 𑌤𑌦𑍍𑌧𑌿 𑌤𑌪𑌸𑍍𑌤𑌦𑍍𑌧𑌿 𑌤𑌪𑌃 । 𑌪𑍍𑌰𑌜𑌾𑌚 𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌪𑍍𑌰𑌵𑌚𑌨𑍇 𑌚 𑌷𑌟𑍍𑌚 ॥ 𑌇𑌤𑌿 𑌨𑌵𑌮𑍋𑌽𑌨𑍁𑌵𑌾𑌕𑌃 ॥

ఋతంచస్వాధ్యాయప్రవచనేచ। సత్యంచస్వాధ్యాయప్రవచనేచ। తపశ్చస్వాధ్యాయప్రవచనేచ। దమశ్చస్వాధ్యాయప్రవచనేచ। శమశ్చస్వాధ్యాయప్రవచనేచ। అగ్నయశ్చస్వాధ్యాయప్రవచనేచ। అగ్నిహోత్రంచస్వాధ్యాయప్రవచనేచ। అతిథయశ్చస్వాధ్యాయప్రవచనేచ। మానుషంచస్వాధ్యాయప్రవచనేచ। ప్రజాచస్వాధ్యాయప్రవచనేచ॥ ౧॥

ప్రజనశ్చస్వాధ్యాయప్రవచనేచ। ప్రజాతిశ్చస్వాధ్యాయప్రవచనేచ। సత్యమితిసత్యవచారాథీతరః। తపఇతితపోనిత్యఃపౌరుశిష్టః। స్వాధ్యాయప్రవచనేఏవేతినాకోమౌద్గల్యః। తద్ధితపస్తద్ధితపః॥ ప్రజాచస్వాధ్యాయప్రవచనేచషట్చ॥

(ப - ம்.) 𑌋𑌤𑌂𑌚 - மெய்யும், 𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌪𑍍𑌰𑌵𑌚𑌨𑍇 𑌚 - வேதத்தை யோதலும் ஓதுவித்தலும், (𑌅𑌨𑍁𑌷𑍍𑌠𑍇𑌯𑌾𑌨𑌿 - அவசியம் நடத்தவேண்டியவைகள்), 𑌸𑌤𑍍𑌯𑌂𑌚 - யெல்லாவற்றிலும் சமமான புத்தியும், 𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌪𑍍𑌰𑌵𑌚𑌨𑍇 𑌚 - வேதத்தையோதலும் ஓதுவித்தலும், (𑌅𑌨𑍁𑌷𑍍𑌠𑍇𑌯𑌾𑌨𑌿 - அவசியம் நடத்தவேண்டியவைகள்), 𑌤𑌪𑌶𑍍𑌚 - உபவாஸாதிகளால் உடம்பை சுத்தமாக்குதலும், 𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌪𑍍𑌰𑌵𑌚𑌨𑍇 𑌚 - வேதத்தையோதலும் ஓதுவித்தலும், (𑌅𑌨𑍁𑌷𑍍𑌠𑍇𑌯𑌾𑌨𑌿 - அவசியம் நடத்தவேண்டியவைகள்), 𑌦𑌮𑌶𑍍𑌚 - வெளியிலிருக்கு மிந்திரியங்களை ஜயித்தனும், 𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌪𑍍𑌰𑌵𑌚𑌨𑍇 𑌚 - வேதத்தை யோதலும் ஓதுவித்தலும், 𑌅𑌨𑍁𑌷𑍍𑌠𑍇𑌯𑌾𑌨𑌿 - அவசியம் நடத்தவேண்டியவைகள், 𑌶𑌮𑌶𑍍𑌚 - உள்ளேயிருக்கும் மனதென்கிற இந்திரியத்தை ஜயித்தலும், 𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌪𑍍𑌰𑌵𑌚𑌨𑍇 𑌚 - வேதத்தையோதலும் ஓதுவித்தலும், (𑌅𑌨𑍁𑌷𑍍𑌠𑍇𑌯𑌾𑌨𑌿 - அவசியம் நடத்தவேண்டியவைகள்), 𑌅𑌗𑍍𑌨𑌯𑌶𑍍𑌚 - கார்ஹபத்தியம் ஆகவனீயம் தக்ஷிணம் என்று சொல்லப்பட்ட மூன்று அக்நிகளும், (𑌆𑌧𑌾𑌤𑌵𑍍𑌯𑌾𑌃 - வளர்க்கவேண்டியவைகள்), 𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌪𑍍𑌰𑌵𑌚𑌨𑍇 𑌚 - வேதத்தையோதலும் ஓதுவித்தலும், (𑌅𑌨𑍁𑌷𑍍𑌠𑍇𑌯𑍇) - அவசியம் நடத்த

வேண்டியவைகள்) அ஗்நிஹோத்ரம் ச - அக்நிஹோத்திரம் என்று சொல்லப் பட்ட கர்மமும், (ஹோதவ்யம் - ஹோமம் செய்யத்தக்கது), ஸ்வாத்யாயப்ரவசநே ச - வேதத்தையோதலும் ஓதுவித்தலும், (அநுஷ்டேயே - அவசியம் நடத்தவேண்டியவைகள்), அதிதயஃ ச - அதிதிகளும், (பூஜ்யாஃ-பூசிக்கத் தகுந்தவர்கள்), ஸ்வாத்யாயப்ரவசநே ச - வேதத்தையோதலும் ஓதுவித்தலும், அநுஷ்டேயே - அவசியம் நடத்தவேண்டியவைகள்), மாநுஷம் ச - உலகத்தின் நடவடிக்கைகளும், ஸ்வாத்யாயப்ரவசநே ச-வேதத்தையோதலும் ஓதுவித்தலும், (அநுஷ்டேயாநி - அவசியம் நடத்தவேண்டியவைகள்), (ப்ர) மாநுஷம் ச - இறந்த மனிதர்களைக் குறித்துச் செய்யும் ஸ்ராத்தம் முதலிய கர்மங்களும் அல்லது, ந்யாயம் ப்ராப்தஸம்வ்யவஹாரஃ | திஸம்யக்ஞாநவாநுஸம்க்ஷாஸவஹாராதயோநுஷ்டேயாநி - யென்று சொல்லப்பட்ட பரமாத்மாவின் ஆராதனமும், ப்ரஜா ச - குழந்தைகளும், உத்பாத்யாஃ - உண்டாக்கத்தக்கவைகள், ஸ்வாத்யாயப்ரவசநே ச - வேதத்தையோதலும் ஓதுவித்தலும், (அநுஷ்டேயே - அவசியம் நடத்தவேண்டியவைகள்), ப்ரஜநஃ ச - ருதுகாலத்தில் மனையாளைப் புணர்தலும், ஸ்வாத்யாயப்ரவசநே ச - வேதத்தையோதலும் ஓதுவித்தலும், (அநுஷ்டேயாநி - அவசியம் நடத்தவேண்டியவைகள்), ப்ரஜாதிஃ - பேரன் முதலியவர்களை யுண்டுபண்ணிவைத்தலும், ஸ்வாத்யாயப்ரவசநே ச - வேதத்தையோதலும் ஓதுவித்தலும், (அநுஷ்டேயாநி - அவசியம் நடத்தவேண்டியவைகள்), ஸத்யம் இதி-சத்தியமே முக்யமென்று, ஸத்யவசாஃ - மெய்யான வார்த்தைகளைச் சொல்லும் தன்மையையுடைய அல்லது ஸத்ய வசா என்று பெயர்கொண்ட, ராதீதரஃ - ரதீதரா என்று பெயர்கொண்ட இருஷியின் பிள்ளையானவர், (மந்யதே - யெண்ணுகிறார்), தபஃ இதி - தபஸ்ஸே முக்யமென்று, தபோநித்யஃ - நித்தியம் தவம்செய்யுமவரான அல்லது தபோநித்யரென்று பெயர்கொண்ட, பௌருஶிஷ்டிஃ - பூருசிஷ்டருடைய பிள்ளையானவர், (மந்யதே - யெண்ணுகிறார்), ஸ்வாத்யாயப்ரவசநே ஏவ இதி - வேதத்தையோதலும் ஓதுவித்தலுமே முக்யமென்று, நாகஃ- நாகர் என்று பெயர்கொண்ட, மௌத்஗ல்யஃ - முத்கலர் என்று இருஷியின் பிள்ளையானவர், (மந்யதே - யெண்ணுகிறார்), தத் ஹி-அதுதானே, தபஃ - தவம்.

(ஸ்ரீ-பா.) அறிவினாலேயே பயனுண்டாகிற தென்று கீழ்ச்சொல்லி யிருக்கிறது. ஆதலால் வேதங்களிலும் அதை யனுசரித்த ஸ்மிருதிகளிலும் சொல்லியிருக்கும் கர்மங்களைச் செய்யவேண்டியது. ஏனெனில் அவைகளும் மேற்கூறிய பயனுக்குரியவைகள் ஆதலால் அவைகளும் அவசியம் நடத்தவேண்டியவைகள் என்று இந்த அனுவாகத்தில் சொல்லப்படுகிறது.

(ஶா-ஹா.) தினந்தோறும் ப்ரம்மத்தின் தியானம் செய்யவேண்டியதாதலால் அந்த தியானத்திற்கு மனது சுத்தமாக இருக்கவேண்டுமாதலாலும், அப்படி மனது சுத்தமாக வேண்டியதற்கு பாவங்கள் நீங்கவேண்டியதாதலாலும், அந்தப்படி பாவங்கள் நீங்க வேண்டியதற்காக நித்திய கர்மங்களை யவசியம் செய்யவேண்டியது. என்று இந்த அனுவாகத்தில் சொல்லுகிறது.

𑌅𑌹𑌂𑌵𑍃𑌕𑍍𑌷𑌸𑍍𑌯𑌰𑍇𑌰𑌿𑌵𑌾 | 𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌃𑌪𑍃𑌷𑍍𑌠𑌂𑌗𑌿𑌰𑍇𑌰𑌿𑌵 | 𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑍋𑌵𑌾𑌜𑌿𑌨𑍀𑌵𑌸𑍍𑌵𑌮𑍃𑌤𑌮𑌸𑍍𑌮𑌿 | 𑌦𑍍𑌰𑌵𑌿𑌣𑌂𑌸𑌵𑌰𑍍𑌚𑌸𑌂 | 𑌸𑍁𑌮𑍇𑌧𑌾𑌅𑌮𑍃𑌤𑍋𑌕𑍍𑌷𑌿𑌤𑌃 | 𑌇𑌤𑌿𑌤𑍍𑌰𑌿𑌶𑌙𑍍𑌕𑍋𑌰𑍍𑌵𑍇𑌦𑌾𑌨𑍁𑌵𑌚𑌨𑌂 | 𑌅𑌹𑌂𑌷𑌟𑍍||

అహంవృక్షస్యరేరివా । కీర్తిః పృష్ఠంగిరేరివ । ఊర్ధ్వపవిత్రో వాజినీవస్వమృతమస్మి । ద్రవిణగ్ం సవర్చసం । సుమేధా అమృతోక్షితః । ఇతి త్రిశంకోర్వేదానువచనం ॥ అహగ్ంషట్ ॥

சங்கர ரங்க ராமானுஜபாஷியங்களில் பதவுரையே மிகவும் வேறுபட்டிருப்பதால், அந்தந்த பாஷியங்களில் உள்ள பதவுரைகள் தனித்தனியே எழுதப்பட்டிருக்கின்றன.

(ஶம - ப - ம.) அஹம் - நான், வ்ருக்ஷஸ்ய - ஸம்சாரமாகிற விருக்ஷத்திற்கு, ரேரிவா - நடத்துகிறவன் அதாவது முளைக்கச்செய்கிறவன், (மம - என்னுடைய), கீர்த்தி: - புகழானது, கிரே: - மலையினுடைய, ப்ருஷ்டமிவ - நுனிபோல், (உச்ச்ரிதா - உயர்ந்திருக்கிறது), ஊர்த்வபவித்ர: - பரிசுத்தமான பிர்ம்மத்தை என்னுடைய அறிவினால் விளங்கச் செய்கிறவனாகவும், வாஜினீவ - சூரியனிடத்திலேபோல, ஸ்வம்ருதம் - நல்ல பரிசுத்தமான ஆத்மவஸ்துவாக, அஸ்மி - ஆகிறேன், ஸவர்சஸம் - நல்ல வொளியோடகூடின, த்ரவிணம் - தனத்தைப்போல எல்லாராலும் ஆசைப்படத் தகுந்ததாகவும், அஸ்மி - ஆகிறேன் அல்லது, த்ரவிணம்-தனம்போன்ற ப்ரம்மஞானமானது, (மயா - என்றால், ப்ராப்தம் - அடையப்பட்டது), ஸுமேதா: - நல்ல அறிவுடன் கூடினவனும், அம்ருதோக்ஷித: - அமுதத்தால் நனைக்கப்பட்டவனாகவும், அஸ்மி - ஆகிறேன், இதி - யென்று, த்ரிசங்கோ: - திருசங்கு யென்கிற இருஷியின், வேதாநுவசநம் - ஆத்மாவொன்று யென்கிற ஞானத்தைக் குறித்துச் சொல்லும் வார்த்தை. இது திருசங்குவினால் கண்டறியப்பட்ட ஓர் வேதமந்திரம் ஆத்மா வொன்றுயென்கிற ஆத்மவித்தையை இந்த வனுவாகத்தில் தெளிவாகச் சொல்லுகிறது. ப்ரம்மவித்யை யுண்டாகும் பொருட்டு இதை ஜபிக்கவேண்டும்

(ரா - ப - ம.) வித்தைக்கு அங்கமாய் ஜபிக்கவேண்டிய மந்திரத்தைச் சொல்லுகிறது. இந்த அனுவாகம், அஹம் - நான், வ்ருக்ஷஸ்ய - விருக்ஷம் போல் வேறுடன் போகத்தகுந்த வஹங்காரத்திற்கு, ரேரிவா - நாசம்செய்கிறவன், (மம - என்னுடைய), கீர்த்தி: - கீர்த்தியானது, கிரே: - மேரு

முதலிய பர்வதத்தினுடைய, 𑌵𑍃𑌷𑍍𑌣𑍀𑌵 - கொடிமுடிபோல் யெல்லாராலும் கொண்டாடத் தக்கதாயிருக்கிறது. 𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌃 - பரிசுத்த வஸ்துக்களெல்லாவற்றிலும் உயர்ந்தவனாயிருக்கிற நான், 𑌵𑌾𑌜𑌿𑌨𑌿 - யெல்லா வஸ்துக்களையும் அனுபவிக்கிற பரமாத்மாவினிடத்தில், 𑌸𑍍𑌵𑌮𑍃𑌤𑌮𑌿𑌵 - நல்ல வமுதம் போல் அவன்புக்கு இடமாய், 𑌅𑌸𑍍𑌮𑌿 - ஆகிறேன், (𑌤𑌸𑍍𑌯) - அந்த பரமாத்மாவினுடைய), 𑌸𑌵𑌰𑍍𑌚𑌸𑌂 - நல்ல வொளியோடேகூடின, 𑌦𑍍𑌰𑌵𑌿𑌣𑌂 - தனமாக அதாவது அவன் அனுபவிக்கிற வஸ்துவாக, 𑌅𑌸𑍍𑌮𑌿 - ஆகிறேன், 𑌸𑍁𑌮𑍇𑌧𑌾𑌃 - அந்த பரமாத்மாவுக்கு தாஸன் என்கிற நல்லறிவோடுகூடினவனும், 𑌅𑌮𑍃𑌤𑌃 - ஸம்சாரமில்லாதவனும், 𑌅𑌕𑍍𑌷𑌿𑌤𑌃 - நாசமில்லாதவனும், 𑌅𑌸𑍍𑌮𑌿 - ஆகிறேன், 𑌇𑌤𑌿 - என்று, 𑌤𑍍𑌰𑌿𑌶𑌙𑍍𑌕𑍋𑌃 - திருசங்கு என்கிற ருஷியின், 𑌵𑍇𑌦𑌾𑌨𑍁𑌵𑌚𑌨𑌂 - வேதமந்திரம் அவரால் கண்டறியப்பட்ட வேதமந்திரம்.

𑌵𑍇𑌦𑌮𑌨𑍂𑌚𑍍𑌯𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑍋𑌽𑌨𑍍𑌤𑍇𑌵𑌾𑌸𑌿𑌨𑌮𑌨𑍁𑌶𑌾𑌸𑍍𑌤𑌿 | 𑌸𑌤𑍍𑌯𑌂𑌵𑌦 | 𑌧𑌰𑍍𑌮𑌂𑌚𑌰 | 𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌾𑌨𑍍𑌮𑌾𑌪𑍍𑌰𑌮𑌦𑌃 | 𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌾𑌯𑌪𑍍𑌰𑌿𑌯𑌂𑌧𑌨𑌮𑌾𑌹𑍃𑌤𑍍𑌯𑌪𑍍𑌰𑌜𑌾𑌤𑌨𑍍𑌤𑍁𑌂𑌮𑌾𑌵𑍍𑌯𑌵𑌚𑍍𑌛𑍇𑌤𑍍𑌸𑍀𑌃 | 𑌸𑌤𑍍𑌯𑌾𑌨𑍍𑌨𑌪𑍍𑌰𑌮𑌦𑌿𑌤𑌵𑍍𑌯𑌂 | 𑌧𑌰𑍍𑌮𑌾𑌨𑍍𑌨𑌪𑍍𑌰𑌮𑌦𑌿𑌤𑌵𑍍𑌯𑌂 | 𑌕𑍁𑌶𑌲𑌾𑌨𑍍𑌨𑌪𑍍𑌰𑌮𑌦𑌿𑌤𑌵𑍍𑌯𑌂 | 𑌭𑍂𑌤𑍍𑌯𑍈𑌨𑌪𑍍𑌰𑌮𑌦𑌿𑌤𑌵𑍍𑌯𑌂 | 𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌪𑍍𑌰𑌵𑌚𑌨𑌾𑌭𑍍𑌯𑌾𑌂𑌨𑌪𑍍𑌰𑌮𑌦𑌿𑌤𑌵𑍍𑌯𑌂 ||௧||

𑌦𑍇𑌵𑌪𑌿𑌤𑍃𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌭𑍍𑌯𑌾𑌂𑌨𑌪𑍍𑌰𑌮𑌦𑌿𑌤𑌵𑍍𑌯𑌂 | 𑌮𑌾𑌤𑍃𑌦𑍇𑌵𑍋𑌭𑌵 | 𑌪𑌿𑌤𑍃𑌦𑍇𑌵𑍋𑌭𑌵 | 𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌦𑍇𑌵𑍋𑌭𑌵 | 𑌅𑌤𑌿𑌥𑌿𑌦𑍇𑌵𑍋𑌭𑌵 | 𑌯𑌾𑌨𑍍𑌯𑌨𑌵𑌦𑍍𑌯𑌾𑌨𑌿𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 | 𑌤𑌾𑌨𑌿𑌸𑍇𑌵𑌿𑌤𑌵𑍍𑌯𑌾𑌨𑌿 | 𑌨𑍋𑌇𑌤𑌰𑌾𑌣𑌿 | 𑌯𑌾𑌨𑍍𑌯𑌸𑍍𑌮𑌾𑌕𑌂𑌸𑍁𑌚𑌰𑌿𑌤𑌾𑌨𑌿 | 𑌤𑌾𑌨𑌿𑌤𑍍𑌵𑌯𑍋𑌪𑌾𑌸𑍍𑌯𑌾𑌨𑌿 ||௨||

𑌨𑍋𑌇𑌤𑌰𑌾𑌣𑌿 | 𑌯𑍇𑌕𑍇𑌚𑌾𑌸𑍍𑌮𑌚𑍍𑌛𑍍𑌰𑍇𑌯𑌾𑌂𑌸𑍋𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌃 | 𑌤𑍇𑌷𑌾𑌂𑌤𑍍𑌵𑌯𑌾𑌸𑌨𑍇𑌨𑌪𑍍𑌰𑌶𑍍𑌵𑌸𑌿𑌤𑌵𑍍𑌯𑌂 | 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌯𑌾𑌦𑍇𑌯𑌂 | 𑌅𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌯𑌾𑌦𑍇𑌯𑌂 | 𑌶𑍍𑌰𑌿𑌯𑌾𑌦𑍇𑌯𑌂 | 𑌹𑍍𑌰𑌿𑌯𑌾𑌦𑍇𑌯𑌂 | 𑌭𑌿𑌯𑌾𑌦𑍇𑌯𑌂 | 𑌸𑌂𑌵𑌿𑌦𑌾𑌦𑍇𑌯𑌂 | 𑌅𑌥𑌯𑌦𑌿𑌤𑍇𑌕𑌰𑍍𑌮𑌵𑌿𑌚𑌿𑌕𑌿𑌤𑍍𑌸𑌾𑌵𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌵𑌿𑌚𑌿𑌕𑌿𑌤𑍍𑌸𑌾𑌵𑌾𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 ||௩||

𑌯𑍇𑌤𑌤𑍍𑌰𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌸𑍍𑌸𑌮𑌰𑍍𑌶𑌿𑌨𑌃 | 𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌆𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌃 | 𑌅𑌲𑍂𑌕𑍍𑌷𑌾𑌧𑌰𑍍𑌮𑌕𑌾𑌮𑌾𑌸𑍍𑌸𑍍𑌯𑍁𑌃 | 𑌯𑌥𑌾𑌤𑍇𑌤𑌤𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑍇𑌰𑌨𑍍 | 𑌤𑌥𑌾𑌤𑌤𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑍇𑌥𑌾𑌃 | 𑌅𑌥𑌾𑌭𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑍇𑌷𑍁 | 𑌯𑍇𑌤𑌤𑍍𑌰𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌸𑍍𑌸𑌮𑌰𑍍𑌶𑌿𑌨𑌃 | 𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌆𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌃 | 𑌅𑌲𑍂𑌕𑍍𑌷𑌾𑌧𑌰𑍍𑌮𑌕𑌾𑌮𑌾𑌸𑍍𑌸𑍍𑌯𑍁𑌃 | 𑌯𑌥𑌾𑌤𑍇𑌤𑍇𑌷𑍁𑌵𑌰𑍍𑌤𑍇𑌰𑌨𑍍 ||௪||

𑌤𑌥𑌾𑌤𑍇𑌷𑍁𑌵𑌰𑍍𑌤𑍇𑌥𑌾𑌃 | 𑌏𑌷𑌆𑌦𑍇𑌶𑌃 | 𑌏𑌷𑌉𑌪𑌦𑍇𑌶𑌃 | 𑌏𑌷𑌾𑌵𑍇𑌦𑍋𑌪𑌨𑌿𑌷𑌤𑍍 | 𑌏𑌤𑌦𑌨𑍁𑌶𑌾𑌸𑌨𑌂 | 𑌏𑌵𑌮𑍁𑌪𑌾𑌸𑌿𑌤𑌵𑍍𑌯𑌂 | 𑌏𑌵𑌮𑍁𑌚𑍈𑌤𑌦𑍁𑌪𑌾𑌸𑍍𑌯𑌂 | 𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌪𑍍𑌰𑌵𑌚𑌨𑌾𑌭𑍍𑌯𑌾𑌂𑌨𑌪𑍍𑌰𑌮𑌦𑌿𑌤

வ்யம் | தாநித்வயோபாஸ்யாநி ஸ்யாத்தேஷுவர்தேரந்ஸப்தச | இதி
ஶிக்ஷாவல்யாமேகாதஶோநுவாக: ॥

వేదమనూచ్యాచార్యోంతేవాసినమనుశాస్తి । సత్యంవద । ధర్మంచర । స్వాధ్యాయాన్మాప్రమదః। ఆచార్యాయప్రియంధనమాహృత్య ప్రజాతన్తుంమావ్యవచ్ఛేత్సీః । సత్యాన్నప్రమదితవ్యం। ధర్మాన్నప్రమదితవ్యం । కుశలాన్నప్రమదితవ్యం । భూత్యైనప్రమదితవ్యం । స్వాధ్యాయప్రవచనాభ్యాంనప్రమదితవ్యం ॥ ౧ ॥

దేవపితృకార్యాభ్యాం నప్రమదితవ్యం । మాతృదేవోభవ । పితృదేవోభవ । ఆచార్యదేవోభవ । అతిథిదేవోభవ । యాన్యనవద్యానికర్మాణి । తానిసేవితవ్యాని । నోఇతరాణి। యాన్యస్మాకగ్ంసుచరితాని । తానిత్వయోపాస్యాని ॥ ౨ ॥

నోఇతరాణి । యేకేచాస్మచ్ఛ్రేయాగ్ంసోబ్రాహ్మణాః । తేషాంత్వయాఽఽసనేనప్రశ్వసితవ్యం। శ్రద్ధయాదేయం । అశ్రద్ధయాదేయం । శ్రియాదేయం । హ్రియాదేయం । భియాదేయం । సంవిదాదేయం । అథయదితేకర్మవిచికిత్సావా వృత్తవిచికిత్సావాస్యాత్ ॥ 3 ॥

యేతత్రబ్రాహ్మణాస్సమ్మర్శినః । యుక్తాఆయుక్తాః । అలూక్షాధర్మకామాస్స్యుః । యథాతేతత్రవర్తేరన్ । తథాతత్రవర్తేథాః । అథాభ్యాఖ్యాతేషు । యేతత్రబ్రాహ్మణాస్సంమర్శినః । యుక్తాఆయుక్తాః । అలూక్షాధర్మకామాస్స్యుః । యథాతేతేషువర్తేరన్ ॥ ౪ ॥

తథాతేషువర్తేథాః । ఏషఆదేశః । ఏషఉపదేశః । ఏషావేదోపనిషత్ । ఏతదనుశాసనం । ఏవముపాసితవ్యం । ఏవముచైతదుపాస్యం ॥ స్వాధ్యాయ ప్రవచనాభ్యాం నప్రమదితవ్యం। తానిత్వయోపాస్యా నిస్యాత్తేషువర్తేరన్ సప్తచ ॥

(ப - ம்.) வேதம் - வேதத்தை, அநூச்ய - அத்தியயனம் பண்ணிவைத்து, ஆசார்ய: - ஆசாரியன், அந்தேவாஸிநம் - சிஷ்யனை, அநுஶாஸ்தி - ஆக்யாபிக்கிறான் (அதாவது அடியில் வருமாறு), ஸத்யம் - மெய்யான வர்த்தத்தை, வத - சொல்லு, தர்மம் - தர்மத்தை, சர - செய், ஸ்வாத்யாயாத் - வேதமோதுதலில் நின்றும், மாப்ரமத: - தப்பாதே அதாவது (சாவதானமாய் வேதமோது), ஆசார்யாய - ஆசாரியன்பொருட்டு, ப்ரியம் - இஷ்டமான, தநம் - பொருளை, ஆஹ்ருத்ய - கொண்டு கொடுத்து, ப்ரஜாதந்தும் - ப்ரஜோத்பத்தியின் வரிசையை, மாவ்யவச்சேத்ஸீ: - அறுக்காதே அதாவது பிள்ளைகளின் வரிசையை யுண்டுபண்ணு, ஸத்யாத் - மெய்யான வார்த்தை விருந்து, நப்ரமதிதவ்யம் - தப்பாதே அதாவது பொய்வார்த்தை சொல்லாதே, தர்மாத் - தர்மத்தில் நின்றும், நப்ரமதிதவ்யம் - தப்பாதே அதாவது அதர்மத்தைச் செய்யாதே, குஶலாத் - தன்னைக் காப்பாற்றும் காரியத்தில் நின்றும், நப்ரமதிதவ்யம் - தப்பாதே, பூத்யை - மங்களகாரியத்தில் நின்றும், நப்ரமதிதவ்யம் - தப்பாதே, ஸ்வாத்யாயப்ரவசநாப்யாம் -

வேதத்தையோதல் ஓதுவித்தல் இவைகளில் நின்றும், ந ப்ரமதிதவ்யம் - தப்பாதே, தேவபித்ருகார்யாப்யாம் - தேவர்கள் பிதுர்க்கள் இவர்களின் காரியங்களில் நின்றும். ந ப்ரமதிதவ்யம் - தப்பாதே, மாத்ருதேவ: - மாதாவை- அதாவது தாயைத் தெய்வமாகப் பாவிக்கிறவனாக, பவ-இரு, பித்ருதேவ:, தகப்பனைத் தெய்வமாகப் பாவிக்கிறவனாக, பவ - இரு, ஆசார்யதேவ: - ஆசிரியனைத் தெய்வமாகப் பாவிக்கிறவனாக, பவ - இரு, அதிதிதேவ: - அதிதிகளை அதாவது விருந்தாளிகளைத் தெய்வமாகப் பாவிக்கிறவனாக, பவ - இரு, அதாவது தெய்வத்தைப்போல் மேற்கூறியவர்களை யுபசரிக்க வேண்டுமென்பது, யாநி - எந்த, கர்மாணி - கர்மங்கள், அநவத்யாநி - பாவமில்லாதவைகளோ, தாநி-அவைகள், த்வயா-உன்னால், உபாஸ்யாநி - செய்யத்தக்கவைகள், இதராணி - வேறுபாவத்தோடு கூடியவைகள், நோ உபாஸ்யாநி - செய்யத்தகாதவைகள், யாநி - எவைகள், அஸ்மாகம் - ஆசிரியனை வெங்களுடைய, ஸுசரிதாநி - நன்னடக்கைகளோ, தாநி - அவைகள், த்வயா-உன்னால், உபாஸ்யாநி-செய்யத்தக்கவைகள், நோ இதராணி - வேறு நடத்தைகள், நோ உபாஸ்யாநி - செய்யத்தகாதவைகள், யேகேச - எந்தெந்த, ப்ராஹ்மணா: - ப்ராமணர்கள், அஸ்மச்ச்ரேயாம்ஸ: - நமக்கு உயர்ந்தவர்களோ, தேஷாம் - அவர்களுக்கு, த்வயா - உன்னால், ஆஸநேந - ஆசனம் முதலானதுகளாலே, ப்ரச்வஸிதவ்யம் - இளைப்பாறுதல் செய்துவைக்கவேண்டியது அல்லது தேஷாம் - அவர்களுடைய, ஆஸநே - உட்கார்ந்திருக்கு மிடத்தில், த்வயா - உன்னால், ந ப்ரச்வஸிதவ்யம் - மூச்சுவிடக் கூடாது அதாவது அவர்கள் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கு மிடத்தில் அவர்கள் சொல்லும் நல்வார்த்தைகளை சாவதானமாய்க் கேட்க வேண்டியது. அவர்களுக்கு சமமாய் மறுமொழியுரைக்கக் கூடாது, (வா) தேஷாம் - அவர்களுடைய, ஆஸநே - உட்காருமிடத்தில், த்வயா - உன்னால், ந ப்ரச்வஸிதவ்யம் - சமமாய் உட்காரக்கூடாது, ச்ரத்தயா - விசுவாஸத்தினால், தேயம் - கொடுக்கவேண்டியது, அச்ரத்தயா - சிரத்தையில்லாவல், அதேயம் - கொடுக்கக்கூடாது, ச்ரியா - முகமலர்ச்சியுடன், தேயம் - கொடுக்கவேண்டும், ஹ்ரியா - வெட்கத்துடன், தேயம் - கொடுக்கவேண்டியது, பியா - பயத்துடன், தேயம் - கொடுக்கவேண்டியது, ஸம்விதா - சங்கல்பஞ் செய்வதுடன், (வா) - சினேகத்துடன், தேயம் - கோடுக்கவேண்டியது, அத - பிறகு, தே - உனக்கு, கர்மவிசிகித்ஸா - அக்நிஹோத்திரம் முதலிய கர்மங்களில் சந்தேகமாவது, வ்ருத்தவிசிகித்ஸா வா - நன்னடத்தையில் சந்தேகமாவது, ஸ்யாத் யதி - இருக்கக் கூடுமேயானால், தத்ர - அந்த கர்மங்களில், யே - எந்த, ப்ராஹ்மணா: - ப்ராமணர்களை, ஸம்மர்சிந: - ஆலோசித்து நடத்துகிறவர்களோ, யுக்தா: - வேதங்களிலும் சாஸ்திரங்களிலும்

வல்லவர்களோ, ஆயுக்தா: - லௌகிகம் தெறிந்தவர்களோ, (ஸம்) ஆயுக்தா: - அயலான் புத்தியைக் கேளாதவர்களோ, அலூக்ஷா: - கோபம் ஆசையில்லாதவர்களோ, (ஸம்) அலூக்ஷா: - குரூரமான புத்தியில்லாதவர்களோ, தர்மகாமா: - தர்மத்தில் விருப்பமுள்ளவர்களாகவும், ஸ்யு: - இருப்பார்களோ, தே - அந்த ப்ராம்மணர்கள், தத்ர - அந்த கர்மங்களில், யதா - எப்படி, வர்தேரந் - நடப்பார்களோ, ததா - அப்படி, தத்ர - அந்த கர்மங்களில், வர்தேதா: - நடக்கவேண்டும், அத - பிறகு, அப்யாக்யாதேஷு - தோஷமுள்ளவர்கள் என்று சந்தேகிக்கப்பட்ட, தத்ர - அந்த புருஷனிடத்தில், யே - எந்த, ப்ராஹ்மணா: - ப்ராம்மணர்கள், ஸம்மர்சிந: - ஆலோசித்துச் செய்கிறவர்களோ, யுக்தா: - வேதங்களிலும் சாஸ்திரங்களிலும் வல்லவர்களோ, ஆயுக்தா: - லௌகிகம் தெரிந்தவர்களோ, (ஸம்) ஆயுக்தா: - அயலான் புத்தியைக் கேளாதவர்களோ, அலூக்ஷா: - கோபம் ஆசையில்லாதவர்களோ, (ஸம்) - குரூரமான புத்தியில்லாதவர்களோ, தர்மகாமா: - தர்மத்தில் விருப்பமுள்ளவர்களாகவும், ஸ்யு: - இப்பார்களோ, தே - அவர்கள், தேஷு - அந்த புருஷர்களிடத்தில், யதா - யெப்படி, வர்தேரந் - நடப்பார்களோ, ததா - அப்படி, தேஷு - அந்த புருஷர்களிடத்தில், வர்தேதா: - இருக்கவேண்டும், ஏஷ: - இதுவானது, ஆதேச: - கட்டளை, ஏஷ: - இதுவானது, உபதேச: - ஹிதமானவார்த்தை, ஏஷா - இதுவானது, வேதோபநிஷத் - வேதத்தின் உட்கொண்ட பொருள், ஏதத் - இதுவானது, அநுசாஸநம் - ஈசனது வார்த்தை, (ஸம்) - ஆசாரியன் சிஷ்யனைக்குறித்துச் சொல்லும் வார்த்தை, ஏவம் - இந்த ப்ரகாரம், உபாஸிதவ்யம் - நடத்தவேண்டியது, ஏதத் - இதுவானது, ஏவம் உ - இந்த மாதிரியாகவே, உபாஸ்யம் - நடத்தவேண்டியது.

(ஸம் - ஹ.) இந்த அனுவாகத்தின் கருத்து பதார்த்தம்போல இந்த இரண்டு அனுவாகங்களிலும் கர்மங்களை யநுஷ்டிக்கும்படி விதிக்கப்பட்டிருக்கிறது. அது எந்த பயனைப் பெறுவதற்கு கர்மங்களைச் செய்து மோக்ஷம் என்று சொல்லும் பயனை யடையவா? அல்லது வித்தையுடன் அதாவது வித்தையங்கமாக்கி மேற்குறித்த கர்மங்களைச் செய்து அந்தப் பயனை யடையவா? அல்லது வித்தையையும் கர்மங்களையும் சமமாக வனுஷ்டித்து மேற்குறித்த பயனை யடையவா? கர்மங்களை யங்கமாக்கி வித்தையினாலேயா? அல்லது வித்தையினாலே மாத்திரமா? மேற்கூறிய பயனை யடைவது, என்று விசாரிப்போம். கர்மங்களாலே மாத்திரம் மோக்ஷத்தை யடையலாமென்று சொல்லக்கூடும். ஏனெனில் "வித்வாங்யஜதே வித்வாங்யாஜயதி" என்று வேதங்களின் பொருள்களை யுணர்ந்தவனுக்கே யாகம் முதலிய கர்மங்களைச் செய்ய விதித்தலாதி எல்லா உபநிஷத்துக்களின் பொருள்களையு மறியவேண்டியதவசியமாதலாலும் கர்மங்களினால் மோக்ஷமில்லை யெனில் மற்றப்பயன்களெல்லாம் பொய்யாகையாலும் கர்மங்களை செய்யச் சொல்லும். சுருதிகள் வியர்த்தமென்று சொல்லவமையும் ஆதலால் கர்மங்களாலேயே மோக்ஷமென்று சொல்வோமென்னில் மோக்ஷமென்று சொல்லும்பயன்; அழிவில்லாத

தாகையாலும் கர்மங்களாலே யுண்டுபண்ணப்படும் பயன்கள் அழிவுள்ளனவாகக் காணப்படுதலாலும் கர்மங்களாலுண்டுபண்ணப்படும். மோக்ஷமென்றும் பயனும் அழிவுள்ளதாக யேற்படுமாதலால். அப்படி சொல்ல வொண்ணாது வித்தையை யங்கமாகச் செய்து கர்மங்களாலேயே மோக்ஷம் பெறலாமென்பதும் வித்தையையும் கர்மங்களையும் சரியாகச்செய்து மோக்ஷம்பெறலாமென்கிறது. மேற்கூறிய காரணங்களாலேயே கூடாது. ஆனால் வித்தையும் கர்மங்களும் மோக்ஷத்தையுண்டாக்கும் காரணங்களல்ல. விலக்குகளை நீக்குகிறவைகள் ஆதலால் மோக்ஷமழிவில்லை யென்பதற்குக் குறையில்லை. வித்தையினாலும் கர்மங்களாலும் விலக்குகள் நீக்கப்பட்டாய் "ஸூர்யத்வாரேண தயோர்த்தவமாயன்" என்கிற சுருதிகளின்படியே மோக்ஷத்தை யடையலாமென்னில் மோக்ஷம் எல்லாவிடத்திலும் வியாபித்ததாலும் மோக்ஷமென்பது ப்ரம்மத்தைக் காட்டிலும் வேறானதல்லவாகையாலும் மோக்ஷத்தை யடைகிறவர்களும் அந்த ப்ரம்மத்தைக் காட்டிலும் வேறுபட்டவர்களல்லாமையாலும் மோக்ஷம் அடையவேண்டுவதாகிய வேறுவஸ்துவல்ல ஒரு வஸ்துவை யடைகிற தென்றால் அடையப்பட்ட பொருள் அடைகிற பொருளைக்காட்டிலும் வேறுபட்டதாயன்றோ இருக்கவேண்டும். அப்படி ஏற்படவில்லை "தத்ஸ்ருஷ்டவா ததேவானுப்ராவிஶத் க்ஷேத்ரஜ்ஞஞ்சாபிமாம்வித்திஸர்வக்ஷேத்ரேஷு" என்கிற சுருதிஸ்மிருதிகளாலிரண்டும் ஒன்றே யென்று ஏற்படுகிறது. ஆனால் அடைகிறான் என்றும் சுகங்களை யவ்விடத்திலனுபவிக்கிறான் என்றும் சொல்லியிருக்கிற "ஸஎகதா; ஸயதிபித்ருலோககாமஃ ஸ்த்ரிபிர்வாயாநைர்வா" என்கிற சுருதிகளுக்கு யென்னவழியென்னில் அவைகள் காரிய ப்ர்ம்மத்தைச் சொல்லுகின்றன. காரணமாகிய ப்ரம்மத்தினிடத்தில் "ஏகமேவாந்திதீயம்; யத்ரநாந்யத்பஶ்யதி; தத்கேநகம்பஶ்யேத்" என்கிற சுருதிகளின்படியே பேதங்களில்லையன்றோ மேலும் வித்தைக்கும் கர்மங்களுக்கும் விரோதமாதலால் இரண்டும் ஒன்றுசேரமாட்டாது. ஏனெனில் வித்தையோ ப்ர்ம்மம் ஒன்றேயுளது. மற்ற பேதங்கள் பொய்யானவைகள் என்கிற அறிவு கர்மங்களோ செய்கிறவன் தேவதை கருவிகள் முதலிய வனேக பேதமுள்ளது. இவை யிரண்டும் சத்யமானவையென்று சொல்லவொண்ணாதாகையால் "யத்ரஹித்வைதமிவபவதி; ம்ருத்யோஸ்ஸம்ருத்யுமாப்நோதி; அதயத்ராந்யத்பஶ்யதிதல்பம்; அந்யோஸாவந்யோஹமஸ்மிதி; உதரமந்தரம்குருதே அததஸ்யபயம்பவதி" என்கிற சுருதிகளினாலும் "ஏகதைவாநுத்ரஷ்டவ்யம்; ஏகமேவாந்திதீயம் ப்ரஹ்மைவேதம்ஸர்வம் ஆத்மைவேதட்ஸர்வம்" என்கிற சுருதிகளினாலும் ஒன்று என்கிற வறிவே மெய்யறிவென்றும் பேதங்களைக் காட்டுமறிவு பொய்யறிவென்றும் ஏற்படுகிறது. ஆனால் வேதங்களில் கர்மங்களைச் செய்யவேண்டுமென்று ஏற்படுகிறதே வேதங்களோ புருஷர்களுக்குப் பயன்கொடுக்கு மவைகளைச் சொல்லுகின்றன வென்கிறதற்கு விரோதிக்காதோ வென்னில் வித்தையைச் சொல்லுகிற சுருதிகள் சம்சாரத்திலிருந்து சீவனுக்கு முத்தியைத்தரவேண்டி சம்சாரத்திற்கு காரணமாகிய அவித்தை வித்தையால் போய்விடுகிறது என்று சொல்லுகிறது. கர்மங்களைச் சொல்லும் சுருதிகளோ கர்மங்களைச்செய்து அதினால் மோக்ஷத்தை யடையவேண்டியவர்களுக்குபாயத்தை நீக்குகிறதையும் அல்லாதவர்களுக்கு பசு பிள்ளை முதலியவைகளை யடைகிறதென்கிற பயன்களைச் சொல்லுகிறதே தவிர அவைகளில் சொல்லிய மேற்கூறிய பேதங்களை மெய்யென்று சொல்லுவதில் அவைகளுக்குக் கருத்தில்லை. உபாயமாகிய விலக்கு இருந்தால் மேற்கூறிய வித்தையுதிக்கமாட்டாது. வித்தை யுதியாவிடில் அவித்தை நீங்கமாட்டாது. அவித்தை நீங்காவிடில் சம்சாரம் ஒழியாது. ஆகையால் பாபங்களைப் போக்குவதற்குக் கர்மங்களைச் செய்யவேண்டுவதாதலால் கர்மங்களைச் செய்யவேண்டுமென்கிற சுருதிகளுக்கு விரோதமில்லை. மேற்கூறிய காரணங்களால் கர்

மங்கள் வித்தைக்கு விலக்குகளாயிருக்கிற பாவங்களைப்போக்கி வைக்கிறதாகையால் வித்தையுண்டானவனுக்குக் கர்மங்களால் பயனில்லை. அக்நிஹோத்திரம் முதலான கர்மங்களில் இல்லறமில்லாதவர்களுக் கதிகாரமில்லா திருந்தபோதிலும், எல்லாருக்கும் பொதுவாகப் பேசப்பட்ட சத்யம் சொல்லுதல் முதலிய கர்மங்களைக்கொண்டு மற்றவர்களுக்கும் வித்தையுதிக்கலாம்.

(பா - ஹா.) பதார்த்தம்போலே கருத்து.

𑌶𑌂 𑌨𑍋 𑌮𑌿𑌤𑍍𑌰𑌃 𑌶𑌂 𑌵𑌰𑍁𑌣𑌃 | 𑌶𑌂 𑌨𑍋 𑌭𑌵𑌤𑍍𑌵𑌰𑍍𑌯𑌮𑌾 | 𑌶𑌂 𑌨 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑍋 𑌬𑍃𑌹𑌸𑍍𑌪𑌤𑌿𑌃 | 𑌶𑌂 𑌨𑍋 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌰𑍁𑌰𑍁𑌕𑍍𑌰𑌮𑌃 | 𑌨𑌮𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 | 𑌨𑌮𑌸𑍍𑌤𑍇 𑌵𑌾𑌯𑍋 | 𑌤𑍍𑌵𑌮𑍇𑌵 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌸𑌿 | 𑌤𑍍𑌵𑌾𑌮𑍇𑌵 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌵𑌦𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 | 𑌋𑌤𑌂 𑌵𑌦𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 | 𑌸𑌤𑍍𑌯𑌂 𑌵𑌦𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 ‖௧‖ 𑌤𑌨𑍍𑌮𑌾𑌮𑌵𑌤𑍁 | 𑌤𑌦𑍍𑌵𑌕𑍍𑌤𑌾𑌰𑌮𑌵𑌤𑍁 | 𑌅𑌵𑌤𑍁 𑌮𑌾𑌮𑍍 | 𑌅𑌵𑌤𑍁 𑌵𑌕𑍍𑌤𑌾𑌰𑌮𑍍 | 𑌓𑌂 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌃 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌃 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌃 | 𑌸𑌤𑍍𑌯𑌂 𑌵𑌦𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌪𑌞𑍍𑌚 | 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌥𑌮𑍋𑌽𑌨𑍁𑌵𑌾𑌕𑌃 | 𑌶𑍀𑌕𑍍𑌷𑌾𑌵𑌲𑍍𑌲𑍀𑌪𑍍𑌰𑌥𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃

శన్నో మిత్రశ్శం వరుణః । శన్నో భవత్వర్యమా । శన్న ఇన్ద్రో బృహస్పతిః । శన్నో విష్ణురురుక్రమః । నమో బ్రహ్మణే । నమస్తే వాయో । త్వమేవ ప్రత్యక్షం బ్రహ్మాసి । త్వామేవ ప్రత్యక్షం బ్రహ్మ వదిష్యామి । ఋతం వదిష్యామి । సత్యం వదిష్యామి ॥ ౧ ॥ తన్మామవతు । తద్వక్తారమవతు । అవతు మామ్ । అవతు వక్తారమ్ । ఓం శాన్తిః శాన్తిః శాన్తిః । సత్యం వదిష్యామి పఞ్చ ॥

(ப - ம.) 𑌮𑌿𑌤𑍍𑌰𑌃 - சூரியன், 𑌨𑌃 - நமக்கு, 𑌶𑌂 - சுகத்தைத்தருபவனாக, 𑌭𑌵𑌤𑍁 - ஆகட்டும், 𑌵𑌰𑍁𑌣𑌃 - வருணன், 𑌨𑌃 - நமக்கு, 𑌶𑌂 - சுகத்தைக்கொடுக்கிறவனாக, 𑌭𑌵𑌤𑍁 - ஆகட்டும், 𑌅𑌰𑍍𑌯𑌮𑌾 - துவாதசாதித்தவர்களில் ஒருவனான யமனானவன், 𑌨𑌃 - நமக்கு, 𑌶𑌂 - சுகத்தைக்கொடுக்கிறவனாக, 𑌭𑌵𑌤𑍁 - ஆகட்டும், 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌃 - இந்திரனும், 𑌨𑌃 - நமக்கு, 𑌶𑌂 - சுகத்தைக்கொடுக்கிறவனாக, 𑌭𑌵𑌤𑍁 - ஆகட்டும், 𑌬𑍃𑌹𑌸𑍍𑌪𑌤𑌿𑌃 - பிருகஸ்பதியானவன், 𑌨𑌃 - நமக்கு, 𑌶𑌂 - சுகத்தைக்கொடுக்கிறவனாக, 𑌭𑌵𑌤𑍁 - ஆகட்டும், 𑌉𑌰𑍁𑌕𑍍𑌰𑌮𑌃 - விஸ்தாரமான வடிவைப்பையுடைய, 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃 - விஷ்ணுவானவர், 𑌨𑌃 - நமக்கு, 𑌶𑌂 - சுகத்தைக்கொடுக்கிறவராக, 𑌭𑌵𑌤𑍁 - ஆகட்டும், 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 - வாயுவின்பொருட்டு, 𑌨𑌮𑌃 - சேவிக்கிறேன், (பா) 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 - வேதத்தின்பொருட்டு, 𑌨𑌮𑌃 - சேவிக்கிறேன், 𑌹𑍇 𑌵𑌾𑌯𑍋 - வாராய் வாயுவே, 𑌤𑍇 - உன்பொருட்டு, 𑌨𑌮𑌃 - சேவிக்கிறேன், 𑌤𑍍𑌵𑌮𑍇𑌵 - நீதானே, 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌂 - புலப்படக்கூடிய, 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 - ப்ரம்மமாக, 𑌅𑌸𑌿 - ஆகிறாய், 𑌤𑍍𑌵𑌾𑌮𑍇𑌵 - உன்னைத்தானே, 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌂-புலப்படும்படியான, 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮- ப்ரம்மமாக, 𑌵𑌦𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 - சொன்னேன், 𑌋𑌤𑌂 - சாஸ்திரத்தின்படி நிச்சயிக்கப்பட்ட பொருளாக. (பா) 𑌋𑌤𑌂 - தோஷமில்லாத சப்தத்தை, 𑌵𑌦𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿- சொன்னேன், 𑌸𑌤𑍍𑌯𑌂 - அப்படி நிச்சயித்து வாயினாலே சொல்லப்பட்டும் சரீரத்தால் செய்யப்பட்டுமிருக்கும் பொருளாக, (பா) 𑌸𑌤𑍍𑌯𑌂 - மெய்ப்பொருளடங்கின வார்த்தையை, 𑌵𑌦𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 - சொன்னேன், 𑌤𑌤𑍍 - யென்

னால் ஸ்தோத்திரம் செய்யப்பட்ட வாயுவென்று பெயர்கொண்ட ப்ரம்மமானது, (𑌋𑌤𑌂) 𑌤𑌤𑍍 - யென்றால் ஓதப்பட்ட வேதமானது, 𑌮𑌾𑌂 - வேதமோதுகிற வென்னை, 𑌅𑌵𑌤𑍁 - காப்பாற்றிவிட்டது. 𑌤𑌤𑍍 - அந்த வாயுமென்கிற ப்ர்ம்மமானது, (𑌋𑌤𑌂) 𑌤𑌤𑍍 - அந்த வேதமானது. 𑌵𑌕𑍍𑌤𑌾𑌰𑌂 - ஓதுவித்த வாசிரியனை, 𑌆𑌵𑍀𑌤𑍍 - காப்பாற்றிவிட்டது, 𑌮𑌾𑌂 - என்னை, 𑌆𑌵𑍀𑌤𑍍-காப்பாற்றிவிட்டது, 𑌵𑌕𑍍𑌤𑌾𑌰𑌂 - ஓதுவித்தவனை, 𑌆𑌵𑍀𑌤𑍍 - காப்பாற்றிவிட்டது. அதிக ஆதரம் தோற்றுகைக்காக ஒன்றையே யிரட்டிப் பேசுகிறது, 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌃 - விரோதிகளுடைய சாந்தியானது, (𑌅𑌸𑍍𑌤𑍁 - உண்டாகட்டும்).

(𑌶𑌂-𑌹𑌾𑌰𑌾-𑌹𑌾.) இரண்டு பாஷியங்களும் பதார்த்தம்போலே.

𑌶𑍀𑌕𑍍𑌷𑌾𑌵𑌲𑍍𑌲𑍀 𑌸𑌂𑌪𑍂𑌰𑍍𑌣𑌂.

𑌆𑌨𑌨𑍍𑌦𑌵𑌲𑍍𑌲𑍀.

𑌹𑌰𑌿𑌃 𑌓𑌮𑍍 | 𑌸𑌹 𑌨𑌾𑌵𑌵𑌤𑍁 | 𑌸𑌹 𑌨𑍌 𑌭𑍁𑌨𑌕𑍍𑌤𑍁 | 𑌸𑌹 𑌵𑍀𑌰𑍍𑌯𑌂 𑌕𑌰𑌵𑌾𑌵𑌹𑍈 | 𑌤𑍇𑌜𑌸𑍍𑌵𑌿 𑌨𑌾𑌵𑌧𑍀𑌤𑌮𑌸𑍍𑌤𑍁 𑌮𑌾 𑌵𑌿𑌦𑍍𑌵𑌿𑌷𑌾𑌵𑌹𑍈 | 𑌓𑌂 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌃 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌃 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌃 | 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌪𑌰𑌮𑍍 | 𑌤𑌦𑍇𑌷𑌾𑌭𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌾 | 𑌸𑌤𑍍𑌯𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌨𑌨𑍍𑌤𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 | 𑌯𑍋 𑌵𑍇𑌦 𑌨𑌿𑌹𑌿𑌤𑌂 𑌗𑍁𑌹𑌾𑌯𑌾𑌂 𑌪𑌰𑌮𑍇 𑌵𑍍𑌯𑍋𑌮𑌨𑍍 ||௧||

𑌸𑍋𑌽𑌶𑍍𑌨𑍁𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍 𑌕𑌾𑌮𑌾𑌨𑍍 𑌸𑌹 | 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌾 𑌵𑌿𑌪𑌶𑍍𑌚𑌿𑌤𑍇𑌤𑌿 | 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌵𑌾 𑌏𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑌾𑌤𑍍𑌮𑌨 𑌆𑌕𑌾𑌶𑌸𑍍𑌸𑌂𑌭𑍂𑌤𑌃 | 𑌆𑌕𑌾𑌶𑌾𑌦𑍍𑌵𑌾𑌯𑍁𑌃 | 𑌵𑌾𑌯𑍋𑌰𑌗𑍍𑌨𑌿𑌃 | 𑌅𑌗𑍍𑌨𑍇𑌰𑌾𑌪𑌃 | 𑌅𑌦𑍍𑌭𑍍𑌯𑌃 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀 | 𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑌾 𑌓𑌷𑌧𑌯𑌃 | 𑌓𑌷𑌧𑍀𑌭𑍍𑌯𑍋𑌽𑌨𑍍𑌨𑌂 | 𑌅𑌨𑍍𑌨𑌾𑌤𑍍𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 ||௨||

𑌸 𑌵𑌾 𑌏𑌷 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌽𑌨𑍍𑌨𑌰𑌸𑌮𑌯𑌃 | 𑌤𑌸𑍍𑌯𑍇𑌦𑌮𑍇𑌵 𑌶𑌿𑌰𑌃 | 𑌅𑌯𑌂 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌃 𑌪𑌕𑍍𑌷𑌃 | 𑌅𑌯𑌮𑍁𑌤𑍍𑌤𑌰𑌃 𑌪𑌕𑍍𑌷𑌃 | 𑌅𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 | 𑌇𑌦𑌂 𑌪𑍁𑌚𑍍𑌛𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾 | 𑌤𑌦𑌪𑍍𑌯𑍇𑌷 𑌶𑍍𑌲𑍋𑌕𑍋 𑌭𑌵𑌤𑌿 ||

హరిఃఓమ్ సహనావవతు । సహనౌభునక్తు । సహవీర్యంకరవావహై । తేజస్వినావధీతమస్తుమావిద్విషావహై । ఓంశ్శాంతిశ్శాంతిశ్శాంతిః॥ బ్రహ్మవిదాప్నోతిపరం తదేషాభ్యుక్తా। సత్యంజ్ఞానమనంతంబ్రహ్మ । యోవేదనిహితం గుహాయాంపరమేవ్యోమన్ ॥ ౧ ॥

సోఽశ్నుతేసర్వాన్ కామాన్ సహ । బ్రహ్మణావిపశ్చితేతి।తస్మాద్వాఏతస్మాదాత్మనఆకాశస్సంభూతః । ఆకాశాద్వాయుః । వాయోరగ్నిః । అగ్నేరాపః । అద్భ్యఃపృథివీ । పృథివ్యాఓషధయః । ఓషధీభ్యోఽన్నం । అన్నాత్పురుషః ॥ ౨ ॥

సవాఏషపురుషోఽన్నరసమయః । తస్యేదమేవశిరః । అయందక్షిణఃపక్షః । అయముత్తరఃపక్షః । అయమాత్మా । ఇదంపుచ్ఛంప్రతిష్ఠా । తదప్యేషశ్లోకోభవతి ॥

(ப - ம்.) நௌ - சிஷ்யன் ஆசிரியன் ஆகிய நம்மிருவர்களையும், ஸஹ - ஒரேகாலத்தில், அவது - ப்ரம்மவித்தையானது காப்பாற்றட்டும், நௌ - நம்மை, ஸஹ - ஒரேகாலத்தில், பு⁴நக்து - ப்ரம்மத்தை யனுபவிக்கும்படி செய்யட்டும், (வா) பு⁴நக்து - காப்பாற்றட்டும், வீர்யம் - ப்ரம்மவித்தைக் குரிய சாமர்த்தியத்தை (வா) வீர்யம் - பயனை சீக்கிரம் விளைவிக்கும் சாமர்த்தியத்தை, ஸஹ - ஒரேகாலத்தில், கரவாவஹை - செய்யக்கடவோமாக, நௌ - நம்மிருவர்களுடைய, அதீ⁴தம் - ஓதப்பட்ட வேதமானது, தேஜஸ்வி - பயனை விளைவிக்கிறதாக, அஸ்து - ஆகட்டும், மாவித்³விஷாவஹை ஒருவர்க்கொருவர் த்வேஷத்தை யடையக்கடவோமல்லோம், விக்⁴நாநாம் - (ப்ரம்மவித்தைக்குண்டாகிற தடங்கல்களுக்கு), ஶாந்தி: - முடிவானது, (அஸ்து - உண்டாகட்டும்), ப்³ரம்ஹவித் - ப்ரம்மத்தை யறிந்தவன், பரம் - உயர்ந்த ப்ரம்மத்தை, ஆப்நோதி - அடைகிறான், (வா) ப்³ரம்ஹவித் - ப்ரம்மத்தை தியானிக்கிறவன், தத் - முன்வாக்யத்தின் பொருளில், ஏஷா-இந்த ருக்கானது, அப்⁴யுக்தா - ஓதப்பட்டது, தத³பி⁴-மேல்வாக்கியத்தில்கூறிய ப்ரம்மத்தைக் குறித்து, ஏஷா - இந்த ருக்கானது, உக்தா - சொல்லப்பட்டது. ப்³ரம்ஹ - ப்ரம்மமானது, ஸத்யம் - விகாரமுள்ள வஸ்துக்களைக் காட்டிலும் வேறுபட்டது. ஜ்ஞாநம்-அறிவில்லாத வஸ்துக்களைக் காட்டிலும் வேறுபட்டது, அநந்தம்-முடிவுள்ள வஸ்துக்களைக்காட்டிலும் வேறுபட்டது, (வா) ஸத்யம் - எப்பொழுதும் ஒரேவடிவுள்ளது, ஜ்ஞாநம் - எப்பொழுதும் சுருக்கமில்லாத வறிவையே வடிவாகவுடையது அநந்தம்-முடிவில்லாதது, பரமே - இருதயத்திலிருக்கிற, வ்யோமந் - ஆகாயத்திலிருக்கிற, கு³ஹாயாம்- அறிவில், நிஹிதம் - வைக்கப்பட்டிருக்கிற ப்ரம்மத்தை, ய: - எவன், வேத³ - அறிகிறானோ, ஸ: - அவன், விபஶ்சிதா - எல்லாவற்றையு முணர்ந்த, ப்³ரம்ஹணா-ப்ரம்மரூபத்தினால் அதாவது எல்லாவற்றையு முணர்ந்த ப்ரம்மத்துடன் ஒன்றாய், ஸஹ - ஒரேகாலத்தில், ஸர்வாந் - எல்லா, காமாந் - இஷ்டமான சுகங்களை, அஶ்நுதே - அனுபவிக்கிறான், (வா) அநந்தம்- விஷ்ணுவை, கு³ஹாயாம் - இருதயகுகையில், நிஹிதம் - வைக்கப்பட்டவனாக, ய: - எவன், வேத³ - அறிகிறானோ, ஸ: - அவன், பரமேவ்யோமந் - பரமபதத்தில், விபஶ்சிதா - எல்லாமுணர்ந்த, ப்³ரம்ஹணாஸஹ - ப்ரம்மத்தோடுகூட, ஸர்வாந் - எல்லா, காமாந் - அந்த ப்ரம்மத்தின் குணங்களையும், அஶ்நுதே - அனுபவிக்கிறான், இதி - என்று (இருக்கு சொல்லப்பட்டது), தஸ்மாத்³வா ஏதஸ்மாத் - மேற்கூறிய ப்ராம்மணத்தினால் சுருக்கமாயும் மந்திரத்தால் விரிவாயும் சொல்லப்பட்ட, ஆத்மந: - ப்ரம்மத்தினிடத்தில் நின்றும், ஆகாஶ: - ஆகாயமானது, ஸம்பூ⁴த: - உண்டாயிற்று,

ஆகாஶாத் - ஆகாயத்தில் நின்றும், வாயு: - காற்றானது, ஸம்பூத: - உண்டாயிற்று, வாயோ: - காற்றினிடத்தில் நின்றும், அக்நி: - நெருப்பானது, ஸம்பூத: - உண்டாயிற்று, அக்நே: - நெருப்பினிடத்தில் நின்றும், ஆப: - ஜலம், ஸம்பூதா: - உண்டாயிற்று, அத்ப்ய:-ஜலங்களில் நின்றும், ப்ருதிவீ - பூமியானது, ஸம்பூதா - உண்டாயிற்று, ப்ருதிவ்யா: - பூமியில் நின்றும், ஓஷதய: - கொடிசெடிகள், ஸம்பூதா: - உண்டாயின, ஓஷதீப்ய: - கொடிசெடிகளில் நின்றும், அந்நம்-உணவானது, ஸம்பூதம் - உண்டாயிற்று, அந்நாத் - ஆகாரத்தில் நின்றும், புருஷ: - புருடன், ஸம்பூத: - உண்டானன், ஸவைஏஷ: - அந்த இந்த, புருஷ: - புருஷன், அந்நரஸமய: - ஆகாயத்தில் சாரமான பாகத்தால் உண்டானவன், தஸ்ய - அந்த புருஷனுக்கு, இதமேவ - இந்த கண்ணால் காணப்படுகிறதலை தானே, ஶிர: - தலை, அயம் - இந்த வலது கையானது, தக்ஷிண: - வலது, பக்ஷ: - இறகு, அயம் - இந்த இடது கையானது, உத்தர: - இடது, பக்ஷ: - இறகு, அயம் - இந்த சரீரத்தின் இடைப்பாகம் அதாவது நாபிக்கு மேலும் கழுத்துக்குக் கீழுமான பாகம், ஆத்மா - ஆத்மா, இதம் - இந்த நாபிக்குக் கீழ்பாகமானது, ப்ரதிஷ்டா - ஆதாரமான, புச்சம் - வால், தத் - மேற்கூறிய பொருளில், ஏஷ: - இந்த, ஶ்லோகோऽபி - மந்திரமும், பவதி - இருக்கிறது.

(ஶம் - ஹா.) முன் சீக்ஷாவல்லியில் அறியப்பட்ட ப்ரம்மவித்தைக்கு உண்டாகிய விக்நங்களுடைய சாந்தியைக் குறித்து ப்ரார்த்தனை செய்யப்பட்டது. இப்போது இனியோதப்போகிற ப்ரம்மவித்தையினுடைய விக்நசாந்தியைச் சாந்திச் சாந்தி யென்கிற வரையில் கூறுகிறது. ஸம்ஹிதையில் செய்யவேண்டிய தியானங்களைச் சொல்லி பிறகு வ்யாக்ருதி வழியாக ஸ்வாராஜ்யம் என்கிற பலத்தினாலேயும் ஆன்மாவின் ஞானமுண்டாகுமென்று சொல்லப்பட்டது. அதினால் சம்சாரத்திற்குக் காரணமான வஜ்ஞானம்கூட விருத்தலால் மேற்கூய வஜ்ஞானம் வேருடன் பிடுங்கப்பட்டதாகாது. ஆகையால் மேற்கூறிய வஜ்ஞானம் வேருடன் போகும்பொருட்டு எல்லா பேதங்களும் ஒழிந்த பரிசுத்தமான ஆத்மாவின் உபாஸநம் சொல்லப்படுகிறது. அதில் "ப்ரம்மவிதாப்நோதி பரம்.' என்கிற வாக்யத்தால் பயன் அதை யடைகிறவன் இதை யடையவுபாயம் இவையென சுருங்கச்சொல்லப்படுகின்றன. இதில் ப்ரம்மத்தை யறிந்தவன் பரப்ரம்மத்தை யடைகிறான்என்றுசொல்லப்பட்டிருக்கிறது. ப்ரம்மமானது எல்லாவிடத்திலும் நிறைந்ததென்றும் எல்லாவஸ்துக்களுடனும் பேதமில்லாததென்றும் மேல்சொல்லப்போகிறது. அடைகிறான் என்பது தன்னையொழிய அடையும் வஸ்து வேறு இருந்தாலன்றோ சொல்லக்கூடும் எல்லாவிடத்திலும் நிறைந்து கலந்திருக்கும் வஸ்துவை யடையவேண்டுவதில்லையே. ஆகையால் இங்கு அடைகிறான் என்பது கூடுமோவென்னில் அடைகிறான் என்பது பார்க்கிறான் என்கிற பொருளை எடுத்துக்கொள்ளுகிறதாதலால் ப்ரம்மம் எல்லாவிடத்திலும் நிறைந்திருந்தபோதிலும் சரீரத்தையே ஆத்மாவாகப் பிரமித்து அதினால் தன்னுடைய தன்மையும் ப்ரம்மத்தின் தன்மையும் உள்ளபடி யறியாத விவன்மேற் சொல்லப்போகிற தியானத்தைச்செய்து; அதினால் ப்ரம்மத்தைப் பார்க்கிறான் என்று

சொல்லத்தட்டில்லை. கீழ்ச்சொன்ன ப்ரம்மத்தின் ஸ்வரூபத்தை விவரித்துச் சொல்லவும் ப்ரம்மத்தை தன்னுடன் வேறுபடாததாகத் தியானம்செய்யவேண்டுமென்று சொல்லவும் அப்படி தியானம் செய்து ப்ரம்மத்தை யடைகிறதென்று சொல்லப்பட்ட பயனும சம்சாரங்களையும் அதற்குக் காரணமான அவித்தையையும் நீங்கு பரிசுத்தமான ப்ரம்மத்துடன் ஒன்றுகுதலே யென்று சொல்லவும், மேல் இருக்குக்கள்உதகரிக்கப்படுகின்றன. சத்யம் ஞானம் அனந்தம் ; என்கிற மூன்று பதங்களும் ப்ரம்மம் என்கிற பதத்திற்கு விசேஷணங்கள். ஆதலால் விசேஷணங்கள் பெரும்பாலும் தன்னுடைய விசேஷ்யத்தை அதின் ஒரேசாதியான வஸ்துக்களில் நின்றும் வேறுபடுத்தும் தன்மையுள்ளன. அதெப்படி யென்றுல், கறுத்ததாமரை இங்கு கறுத்த என்கிற விசேஷணம் தன்னுடைய விசேஷ்யமான தாமரையை அதின் ஒரேசாதியாகிய வெண்டாமரை செந்தாமரை முதலிய தாமரை வர்க்கங்களைக் காட்டிலும் வேறுபடுத்திக் காண்பிக்கிறது. அதெப்படியே இங்கும் ஒரேசாதியாகிய ப்ரம்மம் அனேக மிருந்தாலல்லவோ ஸத்ய முதலிய பதங்கள் விசேஷணமாய்க்கொண்டு ப்ரம்மத்தை யதின் வர்க்கத்தில் நின்றும் வேறுபடுத்தும் ப்ரம்மம் ஒன்றே யாதலால் இவ்விசேஷணங்கள் வீண் அல்லவோவென்னில் ப்ர்ம்மம் ஒன்றுயிருந்தபோதிலும் அதை யறியாதவன் ப்ரம்மம் எவ்விதமாக இருக்குமென்று வினவில் அந்த ப்ரம்மத்தின் அடையாளத்தைச் சொல்லியதைத் தெரியப்படுத்தவேண்டுமெல்லவோ. எப்படியெனில் ஆகாயம் ஒன்றேயாகிலும் இடைவெளியாயிருப்பது ஆகாயமென்று அதின் அடையாளத்தைச் சொல்லித் தெரியப்படுத்தும் வண்ணமாக இங்கும் ப்ரம்மத்தின் அடையாளங்களைச் சொல்லித் தெரியப்படுத்துகிற தாதலால் வீணல்ல. இங்கு ஞானமென்றுல் அறிவுமென்று அர்த்தம் ஆதலால் அறிவே ப்ரம்மமென்று சொல்லப்பட்டது. அதுசரியல்ல எனெனில் "தஸ்மாத்வாஏதஸ்மாதாத்மநঃ" என்றும் "ஏதமாநந்தமயமாத்மாநமுபஸம்க்ராமதி" என்றும் "தத்ஸ்ருஷ்ட்வாததேவாநுப்ராவிஶத்" என்றும் ப்ரம்மத்தை ஆத்மாவாக வோதப்படுதலாலும் ஆத்மாவே யறிகிறவன் என்று உலகத்தில் வழங்கி வருதலாலும் "ஸோகாமயத" என்று ஆசைப்படுகிறதாகச்சொல்லியிருத்தலாலும் அறிகிறவனே யாசைப்படுகிறவனுனதாலும் ஞானம் என்று சொல்லுகிறது. "ஞா" என்கிற தாதுவின் பொருளாதலால் தாதுவின் பொருள்களெல்லாம் கருவிகளால் செய்யப்படுதலாலும் ஆதலால் ப்ரம்மத்தை அநித்யமென்று சொல்லவேண்டி வருமாதலாலும் தாதுவின் பொருள்கள்; தனது கருவிகளுக்கு வசப்பட்டுவருமாதலால் இங்கு ஞானத்தை ப்ரம்மமென்றுசொல்லி ப்ரம்மம் வேறுவஸ்துவுக்கு வசப்படவேண்டி வருதலாலும் அறிகிறவனையே ப்ரம்மமென்று சொல்லவேண்டுமென்னில் மேற்கூறிய தாதுவின் பொருளாகச் சொல்லப்பட்டவறிவும் ப்ரம்மமென்று சொல்லப்பட்அவறிவும் வேறுபட்டதாதலால் ப்ரம்ம அநித்யமாகவும் ஒன்றுக்கு வசப்பட்டதாகவும் ஆகவேண்டுவதில்லை. அதாவது கண் முதலிய வைம்புலன்களின் வழியாய் வெளியில் பரவி யந்தந்த வஸ்துக்களின் உருவமாய்த் தோற்றுகிற அறிவாகிய தாதுவின்பொருள் ப்ரம்மமோ சூரியன் ஒளிபோல் எப்பொழுதும் குன்றுமல் பிரகாசித்துக்கொண்டிருக்குமறிவு அதற்கு வேறு கருவிகள் வேண்டுவதில்லை. அந்த அறிவு மிகவும் சூக்ஷ்மமாதலால் அதற்குப் புலப்படாத வஸ்துக்கள் எப்பொழுதுமில்லை. ஆதலாலது எல்லாவற்றையும் அறியும் தன்மையுள்ளது. அப்படியே சுருதிகளில் சொல்லப்பட்டிருக்கின்றது. "அபாணிபாதோஜவநோக்ருஹீதாபஶ்யத்யசக்ஷுஸ்ஸஶ்ருணோத்யகர்ணঃ ஸவேத்திவேத்யம்நசதஸ்யாஸ்திவேத்தாதமாஹுரக்ர்யம்புருஷம்மஹாந்தம்மிதி" என்றும் "நஹிவிஜ்ஞாதுர்விஜ்ஞாதேர்விபரிலோபோவித்யதே" என்றும் அனந்தமென்றுல் முடிவில்லாதது என்று பொருள் அது மூன்றுவிதம் இடத்தால் முடிவில்லாததென்றும் காலத்தால் முடிவில்லாத

தென்றும் பொருளால் முடிவில்லாததென்றும், இடத்தால் முடிவில்லாதது. ஆகாயம் ஏனெனில் எல்லாவிடங்களிலும் நிறைந்திருத்தலால் அப்படியே ப்ரம்மமும் காலத்தால் முடிவில்லாதது. ப்ரம்மம் எல்லா வஸ்துக்களும் முந்தியில்லாமல் ஒருகாலத்தில் உண்டாக்கிய தாதலால் காலத்தால் முடிவுபெற்றவைகள். ப்ரம்மமோ ஒன்றினுலும் உண்டாக்கப்படாமல் எப்பொழுதும் ஒரேவிதமாக விருத்தலால் காலத்தால் முடிவில்லாதது. அப்படியே பொருள்களால் முடிவு இல்லாததும் ப்ரம்மமே பொருளினுல் முடிவாவது மற்றொரு பொருள்களைக் காட்டிலும் வேறுபட்டிருக்கை. எல்லா வஸ்துக்களும் ஒன்றுக்கொன்று வேறுபட்டிருத்தலால் ப்ரம்மம் ஒன்றே எல்லாவஸ்துக்களாக விருத்தலாலும் அதுவே பொருளினுல் முடிவில்லாதது. அப்படியே "வாசாரம்பணம்விகாரோ நாமயேயம்முருத்திகேத்யேவஸத்யம்; ஸதேவஸத்யம்" என்கிற சுருதிகளினுல் எல்லா வஸ்துக்களும் ப்ரம்மத்தினிடத்திலிருந்து உண்டானவைகளாதலால் அதைக்காட்டிலும் வேறுபட்டவைகளல்லவென்றும் ப்ரமமமொன்றுமே நிஜமென்றும் மற்றவைகள் பொய்யென்றும் ஏற்பட்டிருக்கிறது. மேல்ஞான ஸ்வரூபியான ப்ரம்மத்தைக் காண்பிவைத்தற்கு முதலில் கிளையைக்காட்டி அதின்வழியாக சந்திரனைக்காட்டுவதுபோல் நாம் இதுகாலம் வரையில் ஆத்மாவென்று ப்ரமித்திருந்த சரீரத்தை முற்படக்கூறி உள்ளிருக்கும் மேன்மேலும் சூக்ஷமங்களான வஸ்துவைக் காண்பித்துக்கொண்டு போகிறது.

(ரா - ஹா.) உயர்ந்த பொருளான பரமாத்மாவையும் அவனை யடைவதற்கு இதமான வுபாயமும் மனிதர்களுடைய பேறும் ஓதப்படுகிறது. இந்த ஆனந்தவல்லியில் இதில் "ப்ரம்மவித்" என்கிற விடத்தில் "ஆவ்ருத்திரஸக்ருதுபதேசாத்" என்கிற வதிகரணத்தில் சொல்லிய நியாயத்தால் ப்ரம்மத்தை யறிந்தவனென்றால் ப்ர்ம்மத்தைத் தியானம் செய்தவனென்றே யர்த்தம் இங்கு ப்ர்ம்மம் அதின் அறிவு அடைகிறது. அடையவேண்டிய பொருள். இன்னுன்கும் இவ்வாக்கியத்தில் சொல்லப்பட்டிருக்கிறதல்லவோ. அவைகளில் "ப்ரமம்" என்கிறது என்ன ? அதின் அறிவு எப்படிப்பட்டது? அடைகிறது எவ்வண்ணமாக? அடையவேண்டிய வஸ்து எம்மாதிரியானது? என்கிறகேள்விகளுக்கு மறுமொழியுரைக்க மேல்மந்திரம் கூறப்படுகிறது. அதில் "ஸத்யம" என்ருல் எப்பொழுதும் ஒரேமாதிரியாக இருக்கிறது என்று பொருள் இதனுல் எப்பொழுதும் மாறிமாறியிருக்கு முருவத்தையுடைய வறிவில்லாத வஸ்துக்களிலும் அவைகளோடே சேர்ந்திருக்கிற பத்தர் என்கிற ஆத்மாக்களிலும் ப்ரம்மத்திற்கு அதாவது பரமாத்மாவுக்கு வேறுபாடுதோற்றுகிறது. அந்த வஸ்துக்கள் வெவ்வேறு பெயர்களை யடையத்தக்க வெவ்வேறு மாறுதல்களை யடைகின்றனவாதலால் அவைகள் ஸத்யமென்று சொல்லத்தக்கவைகளல்ல. "ஜ்ஞாநம்" என்பது எப்பொழுதும் குறுகாமல் எல்லா வஸ்துக்களிலும் வியாபித்த அறிவையே குணமாகவும் உருவமாகவுமுடையவனென்றும் சொல்லுகிறது. இதனுல் சிலகாலம் சம்சாரமண்டலத்திலிருந்து பிறகு மோக்ஷத்தை யடைந்த முத்தரென்று சொல்லப்பட்ட ஜீவர்கள் வேறுபாடு தோற்றுகிறது. அவர்கள் முக்தியடைந்திருக்கும் காலத்தில் எல்லா வஸ்துக்களிலும் வியாபித்த ஞானத்தையுடையவர்களாக விருந்தபோதிலும் எப்பொழுதும் அப்படிப்பட்ட ஞானத்தையுடையவர்களல்ல சம்சாரத்தில் இருந்தகாலத்தில் செய்வினைகளால் அவர்கள் அறிவு குறுகியிருத்தலால், "அநந்தம்" என்கிறது. உருவத்தாலும் குணங்களாலும் முடிவில்லாதது என்பது இத்தால் மேற்கூறிய பத்தர் முக்தர் என்கிற விருவகைப்பட்ட ஜீவர்களைக்காட்டிலும் வேறுபட்டவர்களான. நித்தியர் என்று சொல்லப்பட்ட ஜீவர்களைக்காட்டிலும் வேறுபாடுதோற்றுகிறது. அவர்கள் குணங்களால் முடிவுபெற்றவர்கள் பரமாத்மாவின் குணங்களில் குறைந்த குணமுடையவர்களாதலால் இங்கு அனந்தம் என்பது மூவகைப்பட்

டது. அதாவது இடத்தாலும் காலத்தாலும் பொருள்களாலும் முடிவில்லாதது. இதில் இடத்தால் முடிவாவது இந்த வஸ்து இந்த விடத்தில்தான் அந்த விடத்திலில்லை என்பது விடத்தால் முடிவு. இந்தகாலத்தில்தான் அந்தகாலத்திலில்லை. என்பது காலத்தினால் முடிவு. இந்தப்பொருள் இதைக்காட்டிலும் தாழ்ந்தது என்பது பொருளினால் முடிவு. பரமாத்மாவோ வென்றால் எல்லாவிடங்களிலும் வியாபித்திருத்தலாலும் நித்யமானதால் எப்பொழுதும் அழிவில்லாதிருத்தலாலும், "நாந்தம்குணாநாம்கச்சந்திதேநாநந்தோயமுச்யதே" என்கிற ஸ்மிருதியின்படியே குணங்களினாலும் உருவத்தினாலும் எல்லாப்பொருளிலும் உயர்ந்ததாதலாலும் மேற்கூறிய மூவகைப்பட்ட முடிவுகளுமில்லாதவனென்று சொல்லப்படுகிறான். இதினால் ப்ரம்மத்தின் ஸ்வரூபத்தைச் சொல்லி "யோவேதநிஹிதம்குஹாயாம்" என்கிறதினால் அதின் அறிவையும் சொல்லி மேல்பாகங்களினால் அடையவேண்டிய பயனையும் சொல்லுகிறது.

𑌅𑌨𑍍𑌨𑌾𑌦𑍍𑌵𑍈 𑌪𑍍𑌰𑌜𑌾𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌯𑌨𑍍𑌤𑍇 । 𑌯𑌾𑌃 𑌕𑌾𑌶𑍍𑌚 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀𑌂 𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌃 । 𑌅𑌥𑍋 𑌅𑌨𑍍𑌨𑍇𑌨𑍈𑌵 𑌜𑍀𑌵𑌨𑍍𑌤𑌿 । 𑌅𑌥𑍈𑌨𑌦𑌪𑌿 𑌯𑌨𑍍𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌤𑌃 । 𑌅𑌨𑍍𑌨𑌂 𑌹𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌜𑍍𑌯𑍇𑌷𑍍𑌠𑌮𑍍 । 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑍌𑌷𑌧𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 । 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌵𑍈 𑌤𑍇𑌽𑌨𑍍𑌨𑌮𑌾𑌪𑍍𑌨𑍁𑌵𑌨𑍍𑌤𑌿 । 𑌯𑍇𑌽𑌨𑍍𑌨𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍋𑌪𑌾𑌸𑌤𑍇 । 𑌅𑌨𑍍𑌨𑌂 𑌹𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌜𑍍𑌯𑍇𑌷𑍍𑌠𑌮𑍍 । 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑍌𑌷𑌧𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ॥௧॥

𑌅𑌨𑍍𑌨𑌾𑌦𑍍𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌜𑌾𑌯𑌨𑍍𑌤𑍇 । 𑌜𑌾𑌤𑌾𑌨𑍍𑌯𑌨𑍍𑌨𑍇𑌨 𑌵𑌰𑍍𑌧𑌨𑍍𑌤𑍇 । 𑌅𑌦𑍍𑌯𑌤𑍇𑌽𑌤𑍍𑌤𑌿 𑌚 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 । 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑌨𑍍𑌨𑌂 𑌤𑌦𑍁𑌚𑍍𑌯𑌤 𑌇𑌤𑌿 । 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌵𑌾 𑌏𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑌨𑍍𑌨𑌰𑌸𑌮𑌯𑌾𑌤𑍍 । 𑌅𑌨𑍍𑌯𑍋𑌽𑌨𑍍𑌤𑌰 𑌆𑌤𑍍𑌮𑌾 𑌪𑍍𑌰𑌾𑌣𑌮𑌯𑌃 । 𑌤𑍇𑌨𑍈𑌷 𑌪𑍂𑌰𑍍𑌣𑌃 । 𑌸 𑌵𑌾 𑌏𑌷 𑌪𑍁𑌰𑍁𑌷𑌵𑌿𑌧 𑌏𑌵 । 𑌤𑌸𑍍𑌯 𑌪𑍁𑌰𑍁𑌷𑌵𑌿𑌧𑌤𑌾𑌮𑍍 । 𑌅𑌨𑍍𑌵𑌯𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌵𑌿𑌧𑌃 ॥௨॥

𑌤𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌾𑌣 𑌏𑌵 𑌶𑌿𑌰𑌃 । 𑌵𑍍𑌯𑌾𑌨𑍋 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌃 𑌪𑌕𑍍𑌷𑌃 । 𑌅𑌪𑌾𑌨 𑌉𑌤𑍍𑌤𑌰𑌃 𑌪𑌕𑍍𑌷𑌃 । 𑌆𑌕𑌾𑌶 𑌆𑌤𑍍𑌮𑌾 । 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀 𑌪𑍁𑌚𑍍𑌛𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾 । 𑌤𑌦𑌪𑍍𑌯𑍇𑌷 𑌶𑍍𑌲𑍋𑌕𑍋 𑌭𑌵𑌤𑌿 । 𑌇𑌤𑌿 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑍋𑌽𑌨𑍁𑌵𑌾𑌕𑌃 ॥

అన్నాద్వై ప్రజాః ప్రజాయంతే ॥ యాః కాశ్చ పృథివీగ్ం శ్రితాః । అథో అన్నేనైవ జీవంతి । అథైనదపియంత్యంతతః । అన్నగ్ం హి భూతానాం జ్యేష్ఠం తస్మాత్సర్వౌషధముచ్యతే । సర్వం వై తేఽన్నమాప్నువంతి । యేఽన్నం బ్రహ్మోపాసతే । అన్నగ్ం హి భూతానాం జ్యేష్ఠం । తస్మాత్సర్వౌషధముచ్యతే ॥౧॥

అన్నాద్భూతాని జాయంతే । జాతాన్యన్నేన వర్ధంతే । అద్యతేఽత్తి చ భూతాని । తస్మాదన్నం తదుచ్యత ఇతి । తస్మాద్వా ఏతస్మాదన్నరసమయాత్ । అన్యోఽంతర ఆత్మా ప్రాణమయః । తేనైష పూర్ణః । స వా ఏష పురుషవిధ ఏవ ॥ తస్య పురుషవిధతాం । అన్వయం పురుషవిధః ॥ ౨ ॥

తస్య ప్రాణ ఏవ శిరః । వ్యానో దక్షిణః పక్షః । అపాన ఉత్తరః పక్షః । ఆకాశ ఆత్మా । పృథివీ పుచ్ఛం ప్రతిష్ఠా । తదప్యేష శ్లోకో భవతి ॥

(ப் - ம்.) 𑌯𑌾𑌃 𑌕𑌾𑌶𑍍𑌚 - எல்லா, 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀𑌂 - பூமியை, 𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌃 - அடைந்திருக்கிற, 𑌪𑍍𑌰𑌜𑌾𑌃 - ஜங்கமம் ஸ்தாவரம் என்று சொல்லப்பட்ட பிரஜைகள், 𑌅𑌨𑍍𑌨𑌾𑌦𑍍𑌵𑍈 - அன்னத்தில் நின்றன்றோ, 𑌪𑍍𑌰𑌜𑌾𑌯𑌨𑍍𑌤𑍇 - உண்

டாகிறார்கள், அதோ - அப்படியுண்டான பிறகு, அந்நேநைவ - அன்னத்தினாலே தானே, ஜீவந்தி - ஜீவிக்கிறார்கள், அத - அப்படி ஜீவித்த பிறகு, அந்ததஃ - ஜீவதசையின் முடிவில், ஏதத் - இந்த அன்னத்தை, அபியந்தி - லயிக்குமிடமாகச் சேருகிறார்கள், ஹி யாதொரு காரணத்தால், அந்நம் - அன்னமானது, பூதாநாம் - உலகத்திலுள்ள வஸ்துக்களுக்குள், ஜ்யேஷ்டம் - சிரேஷ்டமானதோ, தஸ்மாத் - ஆதலால், ஸர்வௌஷதம் - எல்லாவற்றிற்கும் மருந்தாக, உச்யதே - சொல்லப்படுகிறது. யே - எவர்கள், அந்நம் - அன்னத்தை, ப்ரஹ்ம - ப்ரம்மமாக, உபாஸதே - தியானம் செய்கிறார்களோ, தே - அவர்கள், ஸர்வம் - எல்லா, அந்நமேவ - போக்ய வஸ்துவைத்தானே, ஆப்நுவந்தி - அடைகிறார்கள், ஹி-யாதொரு காரணத்தாலே, அந்நம் - அன்னமானது, பூதாநாம் - உலகத்திலுள்ள வஸ்துக்களுக்குள், ஜ்யேஷ்டம் - உயர்ந்ததோ, தஸ்மாத் - ஆகையாலே, ஸர்வௌஷதம் - எல்லாவற்றிற்கும் மருந்தாக, உச்யதே - சொல்லப்படுகிறது. (௩௦) ஹி - யாதொரு காரணத்தினாலே, அந்நம் - அன்னமானது, பூதாநாம் - ஆகாளம் முதலிய பஞ்சபூதங்களுக்குள், ஜ்யேஷ்டம் - உயர்ந்ததோ, தஸ்மாத் - ஆகையாலே, ஸர்வௌஷதம் - சகலமான வோஷதிகளில் நின்றுமுண்டானதாக, உச்யதே - சொல்லப்படுகிறது. அந்நாத் - அன்னத்தில் நின்றும், பூதாநி - பிராணிகள், ஜாயந்தே - உண்டாகிறதுகள், ஜாதாநி - உண்டான வஸ்துக்கள், அந்நேந - அன்னத்தினாலே, வர்த்தந்தே - விருத்தியடைகிறதுகள், (பூதைஃ - பிராணிகளாலே), அத்யதே - புசிக்கப்படுகிறது, பூதாநி - பிராணிகளை, அத்தி ச - புசிக்கிறது (அதாவது மரணமடைவிக்கிறது), தஸ்மாத் - ஆகையாலே, தத் - அந்த வன்னமானது, அந்நம்இதி-அன்னம் என்று, உச்யதே - சொல்லப்படுகிறது. தஸ்மாத்வா ஏதஸ்மாத் - அந்த இந்த, அந்நரஸமயாத் - அன்னரஸமயமென்று சொன்ன ப்ரம்மத்திற் காட்டிலும், அந்யஃ - வேறுபட்டும், அந்தரஃ-உள்ளுமிருக்கிற, ப்ராணமயஃ- வாயுரூபியானவன், ஆத்மா - பரமாத்மா, ஏஷஃ - இந்த வன்னமயமானது, தேந - அந்த ப்ராணமயனாலே, பூர்ணஃ - நிறைந்தது. ஸவா ஏஷஃ - அந்த இந்த பிராணமயனானவன், புருஷவித ஏவ - புருடர்களின் ஆகிருதியுள்ளவன்தான், தஸ்ய - அந்த வன்னமயனுடைய, புருஷவிததாம் அநு - புருஷாகிருதியாயிருத்தலை யனுஸரித்து, அயம் - இந்த ப்ராணமயனானவன், புருஷவிதஃ - புருஷர்களின் ஆகிருதியுள்ளவன், தஸ்ய- அந்த ப்ராணமயனுக்கு, ப்ராண ஏவ - பிராணவாயுவே, ஶிரஃ - தலை, வ்யாநஃ - வியானனானவன், தக்ஷிணஃ - வலது, பக்ஷஃ - பார்சுவம், அபாநஃ-அபானனானவன், உத்தரஃ - இடது, பக்ஷஃ-பார்சுவம், ஆகாஶஃ - ஆகாயமானது, ஆத்மா - ஆத்மா, ப்ருதிவீ - பூமியானது, ப்ரதிஷ்டா - ஆதாரமான, புச்

𑌪𑍁𑌚𑍍𑌛𑌂 - வால், 𑌤𑌤𑍍 - முன்சொன்னவற்றில், 𑌏𑌷𑌃 - இந்த, 𑌶𑍍𑌲𑍋𑌕𑍋𑌽𑌪𑌿 - சுலோகமும், 𑌭𑌵𑌤𑌿 - இருக்கிறது.

(𑌸𑌂-𑌹𑌾.) அன்னத்தால் ஜனித்தும் அதனால் ஜீவனத்தை யடைந்தும், அதனால் மரணத்தையுமடைகிறபடியால் அன்னத்தையே ப்ரம்மமென்று சொல்லுகிறது. எவர்கள்அன்னத்தில்பிறந்துவளர்ந்து இறப்பவர்களாகையால் நாமே அன்னம்என்று தியானம் சொல்லுகிறார்களோ அவர்கள் எல்லாப்பொருளிலும் உயர்ந்த வன்னத்தை யடைகிறார்கள். அன்னமயன் முதலாக வானந்தமயனிறுதியாக அதிசூட்சமமாயுள்ள ஜீவாத்மாவை இனி காண்பிக்கப் புகுகிறதாக அவித்தையாலுண்டாகப்பட்ட இந்த வைம்பூதங்களையும் நீக்கிசலிப்பதால், உமிதவுடுகளை அரிசியில் நின்றும் பிரிப்பதுபோல் அன்னமயனைக்காட்டிலும் நுட்பமாயும் அன்னமயனிடத்தில் சொன்ன வண்ணமாக பக்ஷபுச்சாத்மாக்களோடும் கூடியிருக்கும் பிராணமயனைக் காட்டுகிறது. இங்கு உயிர்ப்பிப்பதால் பிராணனென்றும், சரீரமெல்லாம் வியாபித்திருக்கும் காற்றுக்கு வியானனென்றும், பிருஷ்டபாகத்திலிருக்கும் காற்றிற்கு அபானனென்றும், ஆகாயம் காற்றிற்கு சஞ்சரிக்குமிடமாதலால் அதைரிடலான ஆத்மாவென்றும், உதானன் என்று சொல்லப்பட்ட உயரநோக்கி வாயுவால் காற்று வெளியில் போகாத வண்ணமாக பூமியின் தேவதையானது தாங்குதலாலும், மேற்கூறிய வாகாயத்திற்கும் பூமியாதாரமாயிருத்தலாலும், பிராணமயனுக்கு பூமியையும் யாதாரமாகச் சொல்லப்பட்டது.

(𑌰𑌾-𑌹𑌾.) அடியில் "ப்ரம்மவிதாப்நோதிபரம்" என்கிற பிராம்மணத்திலும் "ஸத்யம்ஞ்ஞாநமநந்தம்ப்ரம்ம" என்கிற மந்திரத்திலும் ப்ரம்மமே சகல ஜகத்திற்கும் காரணமென்றும், சகல சகத்திலும் அந்தர்யாமியாயிருக்கிற தென்றும் ஏற்பட்டது. அந்த ஆத்மாவானது எதுவென்று கேள்வி பிறக்கும் காலத்தில் ஆநந்தமயனே அந்த ஆத்மாவென்று காண்பிவைக்கிறதற்காக, அருந்ததி நக்ஷத்திரத்தைப்பார்க்க விருப்பமுள்ளவனுக்கு அந்த சிறியதான அருந்ததி நக்ஷத்திரத்திற்கு சமீபத்திலிருக்கும், பெரிய நக்ஷத்திரத்தை இதுவே அருந்ததியென்று சொல்லி யவனுக்குமந்த நக்ஷத்திரம், புலப்பட்டவாறே அப்படி புலப்பட்ட நக்ஷத்திறத்திற்கு சமீபத்திலிருக்கும் மெய்யான அருந்ததியை எளிதில் புலப்படுத்தும் வண்ணமாக பெரியதான உடலிலிருக்கும் ப்ராணமயனை ஆத்மாவாக முதலில் சொல்லுகிறது. எவன் அன்னத்தை ப்ரம்மமாகத் தியானம் செய்கிறானோ அவன் இச்சித்தபடி யெல்லாம் அன்னத்தை யடைகிறான், ப்ரம்மம் எப்படி படைத்தல் காத்தல் அழித்தல் இவைகளுக்குக் காரணமோ, அப்படியே அன்னமும் மேற்கூறியவைகளுக்குக் காரணமாகையால் ப்ரம்மமென்று தியானிக்கக் குறையில்லை.

𑌪𑍍𑌰𑌾𑌣𑌂 𑌦𑍇𑌵𑌾 𑌅𑌨𑍁 𑌪𑍍𑌰𑌾𑌣𑌨𑍍𑌤𑌿 । 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌃 𑌪𑌶𑌵𑌶𑍍𑌚 𑌯𑍇 । 𑌪𑍍𑌰𑌾𑌣𑍋 𑌹𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌮𑌾𑌯𑍁𑌃 । 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌾𑌯𑍁𑌷𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 । 𑌸𑌰𑍍𑌵𑌮𑍇𑌵 𑌤 𑌆𑌯𑍁𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 । 𑌯𑍇 𑌪𑍍𑌰𑌾𑌣𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍋𑌪𑌾𑌸𑌤𑍇 । 𑌪𑍍𑌰𑌾𑌣𑍋 𑌹𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌮𑌾𑌯𑍁𑌃 । 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌾𑌯𑍁𑌷𑌮𑍁𑌚𑍍𑌯𑌤 𑌇𑌤𑌿 । 𑌤𑌸𑍍𑌯𑍈𑌷 𑌏𑌵 𑌶𑌾𑌰𑍀𑌰 𑌆𑌤𑍍𑌮𑌾 । 𑌯𑌃 𑌪𑍂𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 ॥௧॥

𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌵𑌾 𑌏𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌣𑌮𑌯𑌾𑌤𑍍 । 𑌅𑌨𑍍𑌯𑍋𑌽𑌨𑍍𑌤𑌰 𑌆𑌤𑍍𑌮𑌾 𑌮𑌨𑍋𑌮𑌯𑌃 । 𑌤𑍇𑌨𑍈𑌷 𑌪𑍂𑌰𑍍𑌣𑌃 । 𑌸 𑌵𑌾 𑌏𑌷 𑌪𑍁𑌰𑍁𑌷𑌵𑌿𑌧 𑌏𑌵 । 𑌤𑌸𑍍𑌯 𑌪𑍁𑌰𑍁𑌷𑌵𑌿𑌧𑌤𑌾𑌮𑍍 । 𑌅𑌨𑍍𑌵𑌯𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌵𑌿𑌧𑌃 । 𑌤𑌸𑍍𑌯 𑌯𑌜𑍁𑌰𑍇𑌵 𑌶𑌿𑌰𑌃 । 𑌋𑌗𑍍𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌃

𑌪𑌕𑍍𑌷𑌃 । 𑌸𑌾𑌮𑍋𑌤𑍍𑌤𑌰𑌃 𑌪𑌕𑍍𑌷𑌃 । 𑌆𑌦𑍇𑌶 𑌆𑌤𑍍𑌮𑌾 ॥ ௨ ॥ 𑌅𑌥𑌰𑍍𑌵𑌾𑌙𑍍𑌗𑌿𑌰𑌸𑌃 𑌪𑍁𑌚𑍍𑌛𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾 । 𑌤𑌦𑌪𑍍𑌯𑍇𑌷 𑌶𑍍𑌲𑍋𑌕𑍋 𑌭𑌵𑌤𑌿 । 𑌇𑌤𑌿 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑍋𑌽𑌨𑍁𑌵𑌾𑌕𑌃 ॥

ప్రాణందేవాఅనుప్రాణంతి । మనుష్యాఃపశవశ్చయే । ప్రాణోహిభూతానామాయుః । తస్మాత్సర్వాయుషముచ్యతే । సర్వమేవతఆయుర్యంతి । యేప్రాణంబ్రహ్మోపాసతే । ప్రాణోహిభూతానామాయుః । తస్మాత్సర్వాయుషముచ్యతఇతి । తస్యైషఏవశారీరఆత్మా । యఃపూర్వస్య ॥

తస్మాద్వాఏతస్మాత్ప్రాణమయాత్ । అన్యోంతరఆత్మామనోమయః । తేనైషపూర్ణః । సవాఏషపురుషవిధఏవ । తస్యపురుషవిధతాం । అన్వయంపురుషవిధః । తస్యయజురేవశిరః । ఋగ్దక్షిణః ॥ పక్షః । సామోత్తరఃపక్షః । ఆదేశఆత్మా ॥ ౩ ॥ అథర్వాంగిరసఃపుచ్ఛంప్రతిష్ఠా । తదప్యేషశ్లోకోభవతి ॥

(ப - ம்.) 𑌦𑍇𑌵𑌾𑌃-அக்நிமுதலிய தேவர்களும், 𑌯𑍇-எந்த, 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌃-மனிதர்களோ, 𑌪𑌶𑌵𑌃-பசுக்களுமோ, (𑌤𑍇-அவர்கள்), 𑌪𑍍𑌰𑌾𑌣𑌂-ப்ராணவாயுவை 𑌅𑌨𑍁𑌪𑍍𑌰𑌾𑌣𑌨𑍍𑌤𑌿 - அனுசரித்து ஜீவிக்கிறார்கள், 𑌹𑌿 - யாதொரு காரணத்தினாலே, 𑌪𑍍𑌰𑌾𑌣𑌃 - பிராணனானது, 𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 - பிராணிகளுக்கு, 𑌆𑌯𑍁𑌃 - ஆயுளோ, 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 - ஆதலால், 𑌸𑌰𑍍𑌵𑌾𑌯𑍁𑌷𑌂 - எல்லார்க்குமாயுளாக, 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 - சொல்லப்படுகிறது. 𑌯𑍇 - எவர், 𑌪𑍍𑌰𑌾𑌣𑌂 - ப்ராணவாயுவை, 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 - ப்ரம்மமாக, 𑌉𑌪𑌾𑌸𑌤𑍇 - தியானம் செய்கிறார்களோ, 𑌤𑍇 - அவர்கள், 𑌸𑌰𑍍𑌵𑌂 - பூர்ணமான, 𑌆𑌯𑍁𑌰𑍇𑌵-ஆயுளைத்தானே, 𑌯𑌨𑍍𑌤𑌿-அடைகிறார்கள், 𑌹𑌿 - யாதொரு காரணத்தாலே, 𑌪𑍍𑌰𑌾𑌣𑌃-ப்ராணனானது, 𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 - ப்ராணிகளுக்கு, 𑌆𑌯𑍁𑌃 - ஆயுளோ, 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 - ஆதலால், 𑌸𑌰𑍍𑌵𑌾𑌯𑍁𑌷𑌂 - எல்லார்க்குமாயுளென்று, 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 - சொல்லப்படுகிறது. 𑌇𑌤𑌿 - என்று, 𑌤𑌸𑍍𑌯 - அந்த ப்ராணனுக்கு, 𑌏𑌷𑌃 - இந்த, 𑌶𑌾𑌰𑍀𑌰𑌏𑌵 - சரீரத்திலிருக்கும் ப்ராணன்தானே, 𑌆𑌤𑍍𑌮𑌾 - ஆத்மா, 𑌯𑌃 - யாதொரு ஆத்மாவானது, 𑌪𑍂𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 - முன்னன்னமய ப்ரம்மத்திற்கோ, 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌵𑌾𑌏𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌣𑌮𑌯𑌾𑌤𑍍 - அந்த இந்த ப்ராணமயனைக் காட்டிலும், 𑌅𑌨𑍍𑌯𑌃-வேறுபட்ட, 𑌅𑌨𑍍𑌤𑌰𑌃 - உள்ளிருக்கும், 𑌆𑌤𑍍𑌮𑌾-ஆத்மாவானது, 𑌮𑌨𑍋𑌮𑌯𑌃-மனது ரூபியானது, 𑌏𑌷𑌃 - இந்த ப்ராணமயமானது, 𑌤𑍇𑌨-அந்தமனோமயனாலே, 𑌪𑍂𑌰𑍍𑌣𑌃-நிறைந்தது. 𑌸𑌵𑌾𑌏𑌷𑌃-அந்த இந்த மனோமயனவன், 𑌪𑍁𑌰𑍁𑌷𑌵𑌿𑌧𑌏𑌵 - புருஷாக்ருதியுள்ளவன்தான், 𑌤𑌸𑍍𑌯 - அந்த ப்ராணமயனுடைய, 𑌪𑍁𑌰𑍁𑌷𑌵𑌿𑌧𑌤𑌾𑌂 - புருஷாக்ருதியாயிருக்கும் தன்மையை, 𑌅𑌨𑍁 - அனுஸரித்து, 𑌅𑌯𑌂 - இந்த மனோமயனும், 𑌪𑍁𑌰𑍁𑌷𑌵𑌿𑌧𑌃 - புருஷாக்ருதியுள்ளவன், 𑌤𑌸𑍍𑌯-அந்த மனோமயனுக்கு, 𑌯𑌜𑍁𑌰𑍇𑌵-யசுர்வேதமே, 𑌶𑌿𑌰𑌃 - சிரசு, 𑌋𑌕𑍍 - ருக்வேதமானது, 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌃 - வலது, 𑌪𑌕𑍍𑌷𑌃 - பக்கம், 𑌸𑌾𑌮 - சாமவேதமானது, 𑌉𑌤𑍍𑌤𑌰𑌃 - இடது, 𑌪𑌕𑍍𑌷𑌃 - பக்கம், 𑌆𑌦𑍇𑌶𑌃 - வேதத்தின் ப்ராம்மணமென்கிற பாகமானது, 𑌆𑌤𑍍𑌮𑌾 - ஆத்மா, 𑌅𑌥𑌰𑍍𑌵𑌾𑌙𑍍𑌗𑌿𑌰𑌸𑌃 - அதர்வர் என்றும் அங்கிரா என்றும் சொல்

லப்பட்ட இருஷிகளால் கண்டுபிடிக்கப்பட்ட அதர்வணவேதமானது, ப்ரதி ஷ்டா - ஆதாரமான, புச்சம் - வால்-தக-மேற்கூறிய வர்த்தத்தில், ஏஷ:- இந்த, ஶ்லோக:அபி - சுலோகமும், பவதி - இருக்கிறது.

(ஸ௦ - ஹா.) இந்த அனுவாகத்தில் மேற்கூறிய ப்ராணமயனைக் காட்டிலும், நுட்பமான மனோமயனை ஆத்மாவாகச் சொல்லுகிறது. இந்த மனோமயனுக்கு சிரசு வலது பக்கம் இடது பக்கங்களை யசுர்வேதமாகவும் ருக்வேதமாகவும் சாமவேதமாகவும் சொல்லப்பட்டது. யசுஸ் முதலிய பெயர்கள் மந்திரங்களுக்கே யாதலாலும், மந்திரங்கள் மனதினுலேயே ஆவர்த்திக்கப்படவேண்டுமாகையாலும் அவைகள் மனோவிருத்திகள் என்பதுகொண்டு, ஆதலால் மனோவிருத்தியிலிருந்துகொண்டும் யசுஸ் முதலிய பெயர்களைப் பெற்றும், ஒருகாலத்திலும் அழிவில்லாமலும் உற்பத்தியில்லாமலும் இருக்கிறது. ஆத்மா என்கிற சைதந்யம். இப்படி ஆத்மசைதந்யமே மனோவிருத்தியிலிருந்து, யசுஸ்முதலிய மந்திரங்களானதுகொண்டு வேதங்களை நித்தியமென்று சொல்லுகிறது. அப்படி வேதங்களை நித்தியமென்று சொல்லாவிடில், "ஸர்வேவேதாயத்ரைகம்பவந்திஸமாநஸீந ஆத்மா" என்றும் "ருசோஅக்ஷரேபரமேவ்யோமன்யஸ்மின்தேவாஅதிவிஸ்வேநிஷேது:" என்றும் நித்யமான ஆத்மாவோடு வேதங்களை ஒன்றுகச்சொல்லும் சுருதி விரோதிக்கும், இங்கு ஆதேசம் என்று சொல்லுவது கட்டளையிடவேண்டிய காரியங்களை ஏவுகிற வேதத்தின் ப்ராம்மணமென்கிற பாகத்தை.

(ரா-ஹா.) சிரம் முதலியதாகப் பேசப்பட்ட யசுஸ்முதலிய பதங்களுக்கு இங்கு யசுர்முதலிய வேதங்களின் அறிவுக்குக் காரணமாகிய மனதின் செய்கையைச் சொல்லுகிறது. இல்லாவிடில் யசுர்முதலிய வேதங்களுக்கும், மனதுக்கும் கிஞ்சித்தேனும் சம்பந்தமில்லாததால், மேற்கூறிய வேதங்களை சிரம் முதலியதாக ரூபிக்கவொண்ணுது. "ஆதேஶ:" என்பது இதைச்செய் இதைச்செய்யாதே என்கிற விதிவிலக்குகளுடைய அறிவுக்குக் காரணமான மனதின் செயலைச் சொல்லுகிறது. "அதர்வாங்கிரஸ:" என்கிற விடத்திலும் அதர்வணவேதத்தின் அறிவுக்குக் காரணமான மனதின் செயல் என்பது அர்த்தம்.

யதோ வாசோ நிவர்தந்தே | அப்ராப்ய மநஸா ஸஹ | ஆநந்தம் ப்ரஹ்மணோ வித்வாந் || ந பிபேதி கதாசநேதி | தஸ்யைஷ ஏவ ஶாரீர ஆத்மா | ய: பூர்வஸ்ய | தஸ்மாத்வா ஏதஸ்மாந் மநோமயாத் | அந்யோऽந்தர ஆத்மா விஜ்ஞாநமய: | தேநைஷ பூர்ண: | ஸ வா ஏஷ புருஷவித ஏவ ||௩|| தஸ்ய புருஷவிததாம் | அந்வயம் புருஷவித: | தஸ்ய ஶ்ரத்தைவ ஶிர: | ருதம் தக்ஷிண: பக்ஷ: | ஸத்யமுத்தர: பக்ஷ: | யோக ஆத்மா | மஹ: புச்சம் ப்ரதிஷ்டா | ததப்யேஷ ஶ்லோகோ பவதி | இதி சதுர்தோऽநுவாக:

యతో వాచో నివర్తంతే । అప్రాప్య మనసా సహ । ఆనందం బ్రహ్మణో విద్వాన్ । న బిభేతి కదాచనేతి । తస్యైష ఏవ శారీర ఆత్మా । యః పూర్వస్య । తస్మాద్వా ఏతస్మాన్మనోమయాత్ । అన్యోఽంతర ఆత్మా విజ్ఞానమయః । తేనైష పూర్ణః । స వా ఏష పురుషవిధ ఏవ ॥ 3 ॥

తస్య పురుషవిధతాం అన్వయం పురుషవిధః । తస్య శ్రద్ధైవ శిరః । ఋతం దక్షిణః పక్షః । సత్యముత్తరః పక్షః । యోగ ఆత్మా । మహః పుచ్ఛం ప్రతిష్ఠా । తదప్యేష శ్లోకో భవతి ॥ అను ॥ 4 ॥

(ப - ம்.) யதஃ - யாதொன்றினிடத்தில், வாவஃ - வாக்குக்களானவைகள், உநஸாஸஹ - மனதுடன்கூட, அவ்ராவ்ய - முடிவையடையாமல், நிவத்தந்தெ - திரும்புகிறதுகளோ, ப்ரஹ்மணஃ - ப்ரம்மத்தினுடைய, ஆநந்தம் - ஆனந்தத்தை, விஃாநு - அறிந்தவன், கஜாவந - ஒருக்காலும், நவிபேதி - பயப்படுவதில்லை. உதி - என்று, தஸ்ய - அந்த ப்ராணமயனுக்கும், ஏஷஃ - இந்த, ஶாரீரஃஏவ - சரீரத்திலிருக்கிற மனதுதானே, ஆத்மா - ஆத்மா, யஃ - யாதொன்றானது, வூர்வஸ்ய - முன்கூறப்பட்ட பிராணமயனுக்கோ, தஸ்மாத்வா ஏதஸ்மாத் - அந்த இந்த, மநோமயாத்-மனோமயனைக் காட்டிலும், அந்யஃ - வேறுபட்ட, அந்தரஃ-உள்ளிருக்கிற, ஆத்மா - ஆத்மாவானது, விஜ்ஞாநமயஃ - நிச்சயரூபமான அறிவு, (ஶம்) விஜ்ஞாநமயஃ - அறிவைக்காட்டிலும் வேறுபட்ட ஜீவன், தேந-அந்த விஞ்ஞானமயனாலே, ஏஷஃ - இந்த மனோமயன், வூணஃ - நிறைந்தவன், ஸவாஏஷஃ - அந்த இந்த விஞ்ஞானமயனானவன், வுருஷவிய ஏவ - புருஷனுடைய வுருவமுள்ளவன்தான், தஸ்ய - அந்த மனோமயனுடைய, வுருஷவிய தாம் - புருஷனுடைய உருவுள்ள தன்மையை, அநு - அனுஸரித்து, அயம், இந்த விஞ்ஞானமயனும், வுருஷவியஃ - புருஷனுடைய உருவுள்ளவன்- தஸ்ய-அந்த விஞ்ஞானமயனுக்கு, ஶ்ரத்தைவ - சிரத்தைதானே, ஶிரஃ - சிரம், ருதம் - மெய்யான சப்தமே, தக்ஷிணஃ - வலது, வக்ஷஃ - பக்கம், ஸத்யம் - அர்த்தத்தின் மெய்யானது, உத்தரஃ - இடது, வக்ஷஃ - பக்கம், யோகஃ - சமாதானமானது, (ஶம்) யோகஃ ஓஜிதஸ்ராத்மாநம்யஞ்ஜித - என்று சொல்லப்பட்ட அறிவு, ஆத்மா - ஆத்மா, மஹஃ - மகாந் என்று சொல்லப்பட்ட தத்வமானது, (ஶம்) மஹஃ - மேற்கூறிய யோகத்தின் விரோதிகளைத் தடுக்கும் சாமர்த்தியம், ப்ரதிஷ்டா - ஆதாரமான, வுச்ஸம் - வால், தத - அந்த வர்த்தத்தில், ஏஷஃ - இந்த, ஶ்லோகொ - சுலோகமும், ஹவதி - இருக்கிறது.

(ஶ - ஸா.) மனோமயனை ஆத்மாவை அறியவும் சொல்லவும் வேறொருமனது முதலியதில்லை யாதலாலும் தன்னைத்தானறிய நிலமில்லாமையாலும், மேற்கூறிய மனோமயனை வாக்குக்கும் மனதுக்கும் நிலமில்லாதவனென்று சொல்லுகிறது. மேற்கூறிய தியானத்திற்குப் பயனான ஆனந்தத்தை யறிகிறவன் கர்ப்பவாஸம் முதலிய துன்பங்களுக்கு பயப்படான் என்று சொல்லுகிறது. மனோமயனை ஆத்மா வேதங்களின் உருவமென்று சொல்லப்பட்டதால், அந்தவேதங்களின் உண்மையான அறிவையே விஞ்ஞானமயமென்று சொல்லப்படுகிறது. அது மனதின் செயலானதால் மேல் இந்த விஞ்ஞானமே யக்யங்களைச் செய்கிறது என்று சொல்லப்போகிறது. வேதங்களின் பொருள்களை முடிவாக அறிந்து யக்யம்செய்யவேண்டுமென்பதை நினைத்து; இப்படி முடிவான அறிவுள்ளவனுக்கு ஒவ்வொரு காரியத்திலும் சிரத்தை முற்பட்டதாகையால் அதைச் சிரமாகவும் சமாதானமுள்ளவனுக்கு அங்கமாக சிரத்தையிருந்தால், உண்மையான பொருளை யறிய சக்தியுண்டாகுமாதலால், யோகமென்கிற சமாதனத்தை ஆத்மாவாகவும் மகான்

என்கிற தத்வமானது "மஹத்யக்ஷம்ப்ரதமஜம்வேத" என்று சுருதியில் சொல்லியபடியே எல்லா அறிவுகளுக்கும் காரணமாகையால், தன்னிடத்திலுண்டான செடி மரம் முதலியவைகளுக்கு பூமி எவ்வண்ணமாக வாதாரமோ அவ்வண்ணமாக அதுவே ஆதாரமாகையால் மகாஊ புச்சமாகச்சொல்லப்பட்டது.

(ப - ம்.) அடியில் சொன்ன ப்ரகாரம் ஆத்மாவாகிற அவிஸ்ஸைப் பரமாத்மாவிடத்தில் சேர்ப்பிக்கிறதாகிற யாகத்திற்கு வழங்கிவருகிற யாகத்தின் கருவிகளல்லாமல் வேறு கருவிகளைச் சொல்லி இந்த யாகத்தைப் புகழுகிறது. தஸ்ய - அந்த, ஏவம் - முன்சொல்லியபடி, விதுஷ꞉ - அறிந்தவனுடைய, யஜ்ஞஸ்ய - யாகமான சரணாகதிக்கு, ஆத்மா - ஆன்மாவானது, யஜமாந꞉ - யஜமானன், ச்ரத்தா - தெய்வபக்தியானது, பத்நீ - பத்நி, ஶரீரம் - உடம்பு, இத்மம் - விறகு, உர꞉ - மார்பு, வேதி꞉ - அக்னிகுண்டம், லோமாநி - உடம்புமயிர்கள், பர்ஹி꞉ - பரிஸ்தரணம், ஶிகா - குடுமி, வேத꞉ - தர்ப்பக்கட்டு, ஹ்ருதயம் - இருதயகமலமானது, யூப꞉ - யூபஸ்தம்பம், காம꞉ - ஆசையானது, ஆஜ்யம் - நெய், மந்யு꞉ - கோபமானது, பஶு꞉ - பசு, தப꞉ - ஆலோசிக்கிற அறிவு, அக்நி꞉ - நெருப்பு, 'ஸர்வஸ்ய வஶீ ஸர்வஸ்யேஶாந꞉ ஸ்ரஷ்டா தமாம்ஸி ப்ராதிஷ்ட꞉' - என்கிறபடியே, எல்லாவஸ்துவும் அனுகூலங்களென்கிற அறிவு, தக்ஷிணா - தக்ஷிணை, வாக் - வாக்கானது, ஹோதா - ஹோதாவென்கிறவன், ப்ராண꞉ - ப்ராணனானது, உத்காதா - சாமகானம் பண்ணுகிற ருத்விக், சக்ஷு꞉ - கண், அத்வர்யு꞉ - அத்வர்யு என்கிற ருத்விக், மந꞉ - மனது, ப்ரஹ்மா - ப்ரம்மாவென்கிற ருத்விக், ஶ்ரோத்ரம் - காது, அக்நீத் - அக்னீத்திரன் என்கிற ருத்விக், யாவத் - எவ்வளவு, த்ரியதே - உயிருடனிருக்கிறானோ, ஸா - அது, தீக்ஷா - தீக்ஷைக்ஷ, யத் - யாதொன்றை, அஶ்நாதி - புசிக்கிறானோ, யத் - யாதொன்றை, பிபதி - குடிக்கிறானோ, தத் - அது, அஸ்ய - இந்த யாகத்திற்கு, ஸோமபாநம் - சோமாசத்தை அருந்துகிறது. ரமதே - விளையாடுகிறான், ததியத் - என்கிறது யாதுஉண்டோ, தத் - அது, உபஸத꞉ - உபஸத் என்கிற யாகம், ஸஞ்சரதி - செல்லுகிறான், உபவிஶதி - உட்காருகிறான், உத்திஷ்டதே - எழுந்திருக்கிறான், ததியத் - என்கிறது யாது உண்டோ, ஸ꞉ - அது, ப்ரவர்க்ய꞉ - ப்ரவர்க்யம் என்கிற யாகம், யத் - யாதொரு, முகம் - முகமோ, தத் - அது, ஆஹவநீய꞉ - ஆகவனீயமென்கிற அக்னி, அஸ்ய - இவனுடைய, யத் - யாதொரு, விஜ்ஞாநம் - அறிவோ, தத் - அதை, ஜுஹோதி - ஹோமஞ்செய்கிறான், ஸாயம் - மாலையும், ப்ராத꞉ - காலையும், அத்தி - சாப்பிடுகிறான், ததியத் - என்கிறது யாது உண்டோ, தத் - அது, ஸமித꞉ - சமித்துக்கள், ஸாயம் - மாலை, ப்ராத꞉ காலை, மத்யந்திநம் - மத்தியானம், ததியத் - என்கிறது யாது உண்டோ, தாநி - அந்த மூன்று, ஸவநாநி - மூன்று சவனங்கள், யே - யாதொரு, அஹோராத்ரே - பகலிரவுகளோ, தே - அவைகள், தர்ஶபூர்ணமாஸௌ - தர்சம் பூர்ணமாசம் என்கிற விஷ்டிகள், யே - யாதொரு, அர்தமாஸாஶ்ச - பக்ஷங்களும், மாஸாஶ்ச - மாதங்களுமோ, தே - அவைகள், சாதுர்மாஸ்யாநி - சாதுர்

மாஸ்யமென்கிற யாகங்கள், யே - யாதொரு, க்ரதவ꞉ - ருதுக்களோ, தே - அவைகள், பஶுபந்தா꞉ - பசுபந்தமென்பவைகள், யே - யாதொரு, ஸம்வத்ஸரா꞉ - வருஷங்களோ, பரிவத்ஸரா꞉ - அவைகளினுட்பிரிவுகளோ, தே - அவைகள், அஹர்கணா꞉ - அகர்க்கணமென்பவைகள், ஏதத் - இந்த, ஸத்ரம் - யாகமானது, ஸர்வவேதஸம் - எல்லாக்கைப்பொருளேயும் தக்ஷிணையாகக்கொண்டது, யத் - யாதொரு, மரணம் - சாவோ, தத் - அது, அவப்ருத꞉ - அவபிருதமென்பது, ஏதத் - இது, ஜராமர்யம் - வயதுசென்றால் முடிவதான, அக்நிஹோத்ரம் - அக்னிஹோத்ரம், ய꞉ - எவன், ஏவம் - இந்த ப்ரகாரம், வித்வாந் - தியானம் செய்கிறவன், உதகயநே - உத்தராயணத்தில், ப்ரமீயதே - இறக்கிறானே, (ஸ꞉ - அவன்), தேவாநாமேவ - தேவர்களுடைய, மஹிமாநம் - உலகத்தை, கத்வா - அடைந்து, ஆதித்யஸ்ய - சூரியனுடைய, ஸாயுஜ்யம் - சாயுஜ்யத்தை, கச்சதி - அடைகிறான், அத - பிறகு, ய꞉ - எவன், தக்ஷிணே - தக்ஷிணாயணத்தில், ப்ரமீயதே - இறக்கிறானே, பித்ருணாமேவ - பிதுர்க்களுடைய, மஹிமாநம் - உலகத்தை, கத்வா - அடைந்து, சந்த்ரமஸ꞉ - சந்திரனுடைய, ஸாயுஜ்யம் - சாயுஜ்யத்தை, கச்சதி - அடைகிறான், ஏதௌ - இந்த, ஸூர்யாசந்த்ரமஸோ꞉ - சூரியன் சந்திரன் இவர்களுடைய, மஹிமாநௌ - உலகங்களை, வித்வாந் - அறிந்தவனான, ப்ராஹ்மண꞉ - ப்ரம்மத்தியானம் செய்கிறவன், அபிஜயதி - அடைகிறான், தஸ்மாத் - அதில் நின்றும், ப்ரஹ்மண꞉ - ப்ரம்மத்தினுடைய, மஹிமாநம் - உலகத்தை, ஆப்நோதி - அடைகிறான், தஸ்மாத்ப்ரஹ்மணோமஹிமாநம் - என்று முடிவில் இரட்டித்துச் சொல்லுகிறது, இதி - இந்தப்படி, உபநிஷத் - உபநிஷத் முடிந்தது என்று கருத்து.

இராமானுஜபாஷ்யமும் மத்வபாஷ்யமும் ஒற்றுமையா யிருந்தபடியால் மத்வபாஷ்யம் ப்ரத்தியேகமாய் எழுதவில்லை.

தைத்திரீயோபநிஷத்பாஷ்யம் சம்பூர்ணம்.

நாராயணவல்லி முடிந்தது.

ஸ்ரீ

ஹரி꞉ ஓம்.

ஐதரேயோபநிஷத்.

இது ருக்வேதத்தின் உபநிஷத்து. ஆகையால் "வாங்மநஸி" என்கிற மந்திரமே இதற்குச் சாந்திபாடம்.

ஐதரேயத்தின் இரண்டாவது ஆரணத்தில் நாலு ஐந்து ஆறு அத்யாயங்கள். இவ்வுபநிஷத்துகள் ஒன்று இரண்டு மூன்று அத்யாயமாய்ப் படிக்கப் படுகின்றன.

இதற்கு விசிஷ்டாத்வைதபாஷ்யம் கிடையாது. சங்கரபாஷ்யார்த்தமும் மத்வபாஷ்யார்த்தமும் காட்டப்படுகின்றன.

ஹரி꞉ ஓம், ஆத்மா வா இதமேக ஏவாக்ர ஆஸீத் நாந்யத்கிஞ்சந மிஷத் ஸ ஈக்ஷத லோகாந்நு ஸ்ருஜா இதி ॥ க ॥

(ப - ம்.) இதம் - இப்போது காணப்படும் ஜகத்தானது, அக்ரே - ஜகத்ஸ்ருஷ்டிக்கு முன்னே, ஏக꞉ - ஒரு, ஆத்மா ஏவ - பரப்ரம்மமே யாக வல்லவோ, ஆஸீத் - இருந்தது, அந்யத் - வேறு, மிஷத் - வ்யாபாரமுடையதாவாவது வியாபாரமில்லாததாவது, கிஞ்சந - ஒன்றும், ந - இல்லாமலிருந்தது, ஸ꞉ - அந்தப் பரப்ரம்மமானது, லோகாந் நு - உலகங்களை, ஸ்ருஜா இதி - ஸ்ருஷ்டிக்க வேண்டுமென்று, ஈக்ஷத - நினைத்தது.

(ஸம் - ஹா.) ஆப்தியும் அதனமும் அதனமும் ஆத்மசப்தத்துக்கு அர்த்தம். ஆப்தியாவது ஜ்ஞானமும் எல்லா விடங்களிலும் வ்யாபித்து நிற்கையும் தன் நிலைமையாலும் ஸ்புரணத்தாலும் எல்லாவற்றையும் வ்யாபிக்கை யாகையாலே ஸர்வஜ்ஞமும் ஸர்வசக்தியுமான தென்கை. அந்தமானது ஜகத்தை ஸம்ஹரிக்கை. அதனமாவது வஸ்து தேச கால பரிச்சேதமென்னும் மூவகை அளவுமில்லாதவனென்கை. ஆகவே ஸம்ஸாரசம்பந்தமற்றதும் தோஷலேசமுமில்லாததுமானது ப்ரம்மமென்றதாயிற்று. பெயர் ரூபம் வியாபாரம் இவைகளினால் இப்போது பலவகையாகத் தென்படும் ஜகத்தானது முன்னே ப்ரம்ம மொன்றாகவே யிருந்தது. கீழ்ச்சொன்ன நாமரூப கர்மபேதமில்லாதபோது ஆத்மா ஒன்றேயாக விருந்தது. ஜலம் ஒன்றே நுரை சுழி அலை என்னும் பலபெயர்களால் அனேகம் பொருளாகத் தென்பட்டாலும் தீரயோசித்தலால் ஜலமொன்றேயாக அறியப்படுவதுபோல வெளித்தோற்றத்திற்குப் பலவகையாகத் தென்பட்டபோதிலும் நன்றாய் யோசிக்குமிடத்து ப்ரம்மமொன்றே யென்று தெளிவாய் விளங்கும். ஸாங்க்ய மதஸ்தர் சொல்லுகிறபடி ப்ரகிருதியாவது தார்க்கிகர்கள் சொல்லுகிறபடி பரமாணுக்களாவது வேறெந்த வஸ்துக்களாவது இல்லை. "அபாணிபாதோஜவனோக்ருஹீதா" என்கையாலே கரசரணாதி அவயவங்களும் சரீரமும் இல்லாதிருந்தும் ப்ரம்மம் ஸர்வஜ்ஞஸ்வபாவமாகையாலே ஜகத்ஸ்ருஷ்டி செய்ய நினைக்கத் தடையில்லையென்றுகொள்க. ப்ராணிகள் கர்மபலத்தை அனுபவிக்கும்பொருட்டு ஜலம் முதலியவைகளை ஸ்ருஷ்டிக்க நினைத்தது.

ஸ இமாம்ல்லோகாநஸ்ருஜத அம்போ மரீசீர்மரமாபோऽதோऽம்ப꞉ பரேண திவம் த்யௌ꞉ ப்ரதிஷ்டாऽந்தரிக்ஷம் மரீசய꞉ ப்ருதிவீ மரோ யா அதஸ்தாத்தா ஆப꞉ ॥ உ ॥

(ப-பா-ம்.) (இப்படி நினைத்து) ஸ꞉-அந்த ப்ரம்மமானது, அம்ப꞉ - ஜலமென்றும், மரீசீ꞉ - ஆகாசமென்றும், மரம்-பூமியென்றும், ஆப꞉-பாதாள

லோகங்கள் என்றும் சொல்லப்பட்ட, ஈமாநு-இந்த, லொகாநு-உலகங்களை, அஸ்ருஜத - படைத்தது, அதோ௱ம்ஃ - இங்கு அம்பச் சப்தத்தால் சொல்லப் பட்ட லோகங்கள், திவம்வரேண - தேவலோகத்திற்கு மேலிருக்கின்றன. ஸ்வர்க்கலோகத்திற்கு மேல்பட்ட மஹர்லோகம் ஜனோலோகம் தபோலோகம் ஸத்யலோகம் இவைகள் இங்கு அம்பசப்தத்தால் சொல்லப்படுகின்றனவென்று கருத்து. இவ்வம்போலோகத்திற்கு, த்யௌஃ - த்யுலோகமானது, ப்ரதிஷ்டா - ஆச்ரயம், அந்தரிக்ஷம் - அந்தரிக்ஷலோகமானது. மரீசயஃ-மரீசி சப்தத்தால் சொல்லப்படுகிறது, ப்ருதிவீ - பூலோகமானது, மரஃ - மரமென்று சொல்லப்படுகிறது, யாஃ - எந்த உலகங்கள், அதஸ்தாத் - பூமிக்குக்கீழ் இருக்கின்றனவோ, தாஃ - அவை, ஆபஃ - அப்சபதத்தால் சொல்லப்படுகின்றன.

ஸஈக்ஷதேமேநுலோகாலோகபாலாநுஸ்ருஜா இதி ஸோத்ப்ய ஏவ புருஷம்ஸமுத்த்ருத்யாமூர்ச்சயத் ||௩||

(ப-ம்.) இமே - இந்த, லோகாஃ - உலகங்கள், (ஸ்ருஷ்டா)நு-ஸ்ருஷ்டிக்கப்பட்டனவே, லோகபாலாநு - இவ்வுலகங்களைக் காப்பாற்றுகிறவர்களை, ஸ்ருஜை நு - படைக்கக்கடவேனல்லவா, இதி - என்று, ஸஃ-அந்த ப்ரம்மம், ஐக்ஷத - நினைத்தது, ஸஃ - அந்த ப்ரம்மமானது, அத்ப்ய ஏவ - ஜலங்களினின்றுமே, புருஷம் - புருஷாகார தேஹமுடைய ஒன்றை, ஸமுத்த்ருத்ய - எடுத்து, அமூர்ச்சயத் - பஞ்சபூதங்கள் ஒன்றுக்கொன்று சேரும் பெருஞ்சேர்க்கையுடன் சேர்த்தான்.

(ஶ௦ - ஸா.) ப்ராணிகள் கர்மபலங்களை அனுபவிக்க இடமாக நாலுவகை உலகங்களைப் படைத்த பின்பு ப்ரம்மமானது இவ்வுலகங்கள் ரக்ஷகனில்லாதிருந்தால் நாசமாய் விடுமாகையால் லோகபாலகர்களை ஸ்ருஷ்டிக்கவேண்டுமென்று நினைத்து ஜலம் முதலிய பஞ்ச பூதங்களினின்றும் தலை முதலிய உறுப்புகளோடு கூடிய விராட்புருஷனை பூமியிலிருந்து மண்ணையெடுத்துக் குயவன் பானை முதலியன செய்வதுபோல ஸ்ருஷ்டித்துத் தன்னவயத்தோடு சேர்த்து வைத்தது.

தமப்யதபத்தஸ்யாபிதப்தஸ்ய முகம்நிரபித்யத யதாண்டம்முகாத்வாக்வாசோக்நிர்நாஸிகே நிரபித்யேதாம் நாஸிகாப்யாம் ப்ராணஃ ப்ராணாத்வாயுரக்ஷிணீ நிரபித்யேதாம் அக்ஷிப்யாம் சக்ஷுஶ்சக்ஷுஷ ஆதித்யஃ கர்ணௌ நிரபித்யேதாம் கர்ணாப்யாம் ஶ்ரோத்ரம் ஶ்ரோத்ராத்திஶஸ்த்வங்நிரபித்யத த்வசோ லோமாநி லோமப்ய ஓஷதிவநஸ்பதயோ ஹ்ருதயம் நிரபித்யத ஹ்ருதயாந்மநோ மநஸஶ்சந்த்ரமா நாபிர் நிரபித்யத நாப்யா அபாநோ அபாநாந்ம்ருத்யுஃ ஶிஶ்நம் நிரபித்யத ஶிஶ்நாத்ரேதோ ரேதஸ ஆபஃ ||௪||

(ப-பா-ம்.) அந்த ப்ரம்மமானது, தம்-அந்த விராட்புருஷனைக் குறித்து, அப்யதபத் - ஸங்கல்பித்தது, அபிதப்தஸ்ய - ஸங்கல்பிக்கப்பட்ட, தஸ்ய - அந்த விராட்புருஷனுக்கு, அண்டம்யதா - பக்ஷியின் முட்டைபோல, முகம் - முகமானது, நிரபித்யத - தோன்றியது முகாகாரமாகரு ஒவிவரமுண்டா

யிற்று, முகாத் - அம்முகத்தினின்றும், வாக் - வாக்கு உண்டாயிற்று, வாச: - வாக்குக்கு, அக்நி: - அக்னியானது அதிஷ்டான தேவதை வாக்கின் அதிஷ்டான தேவதையான அக்னியென்றும் லோகபாலன் வாக்கினின்றும் தோன்றினன் என்றும்பொருள், நாஸிகே —— மூக்குகள், நிரபித்யேதாம்- தோன்றின, நாஸிகாப்யாம் - அம்மூக்குகளில் நின்றும், ப்ராண: - க்ராணேந்திரியமும், ப்ராணாத் - அந்த க்ராணேந்திரியத்தினின்றும், வாயு: - அதன் அதிஷ்டான தேவதையும் லோகபாலகனுமான வாயுவும் தோன்றின, அக்ஷிணீ - கண்கள், நிரபித்யேதாம் ——, அக்ஷிப்யாம் - கண்களினின்றும், சக்ஷு: - நேத்ரேந்திரியமும், சக்ஷுஷ:-நேத்ரேந்திரியத்தினின்றும்' ஸூர்ய: - அதன் அதிஷ்டான தேவதையும் லோகபாலகனுமான ஸூர்யனும் உண்டாயின, கர்ணௌ - காதுகள், நிரபித்யேதாம் ——, கர்ணாப்யாம்- காதுகளினின்றும், ஶ்ரோத்ரம் - ஶ்ரவணேந்திரியமும், ஶ்ரோத்ராத்-ஶ்ரவணேந்திரியத்தினின்றும், திஶ: - அதன் அதிஷ்டான தேவதையான திக்குகளும் உண்டாயின, த்வக் - தோலானது, நிரபித்யத ——, த்வச: - அந்த த்வகிந்திரியத்தினின்றும், லோமாநி உரோமங்களும், லோமப்ய: - அந்த உரோமங்களினின்றும், ஓஷதிவநஸ்பதய: - அவைகளின் அதிஷ்டான தேவதைகளான ஓஷதிகளும் வனஸ்பதிகளும் தோன்றின, ஹ்ருதயம்- அந்தக் கரணத்தின் அதிஷ்டானமான இருதயமானது, நிரபித்யத ——, ஹ்ருதயாத்- அவ்விருதயத்தினின்றும், மந:-அந்தக்கரணமும், மநஸ:- மனதினின்றும், சந்த்ரமா: - அதன் அதிஷ்டான தேவதையான சந்திரனும் தோன்றினார்கள், நாபி: - நாபி ரந்திரமானது, நிரபித்யத ——, நாப்யா:-நாபியினின்றும், அபாந: - பாயுவென்றும் இந்திரியமும், (குதமும்) அபாநாத் - அவ்வபானத்தினின்றும், ம்ருத்யு: - அதன் அதிஷ்டான தேவதையான மிருத்தியுவும் தோன்றின, ஶிஶ்நம் - புருஷலிங்கமான குஹ்யமானது, நிரபித்யத ——, ஶிஶ்நாத் - அவ்வாண்குறியினின்றும், ரேத:-ரேதஸ்ஸுடன்கூடிய குஹ்ய இந்திரியமும், ரேதஸ: - அவ்விந்திரியத்தினின்றும், ஆப:-அதன் அதிஷ்டான தேவதையான ஜலமும் தோன்றின.

(உ - ஹா.) ப்ரளயகாலத்தில் லக்ஷ்மியோடுங்கூட நாராயணன் ஒருவனே யிருந்தார். எக்காலத்திலும் எங்கும் பரந்தகுணங்களையுடையவராகையால் அவர் ஆத்மாவென்று ச்ருதிகளில் சொல்லப்பட்டார். காலத்தாலும் குணத்தாலும் இவ்வுலக மனைத்திற்கும் முன்பே அவைகளுக்கு முதன்மையாயிருப்பவர். அவரே லக்ஷ்மி. அவருடன்கூடவே இருப்பவளாயினும் குணத்தினால் அவருக்குக் குறைந்தவளாதலாலும் விஷ்ணுவுக்கு விதேயையாகையாலும் முன்னிருந்ததாகவாவது மேன்மையாயிருந்ததாகவாவது சொல்லவிடமில்லை. ப்ரம்மாவாவது சிவனாவது மற்ற வ்யாபாரமுடைய எந்த வஸ்துவாவது இல்லை. ப்ரம்மா சிவன் முதலிய பத்த ஜீவர்கள் தூங்குவதினாலும் நித்ய முக்தர்களும் லக்ஷ்மியும் தூங்காமலிருந்தாலும் பராதீனர்களாதலினாலும் நாராயணனொருவனே ஸ்வாதீன ஜ்ஞானனான காரணவஸ்து. அவனல்லது ஸ்வதந்த்ர குணசாலிகள் யாருமில்லை. சந்யாசி பராதீனமான தனத்தினாலே போஜனாதிகள் செய்து வந்தாலும் அவன் தனவானென்று சொல்லப்படுவனா. அதுபோல லக்ஷ்மியும் நித்ய முக்தர்களும் பராதீனர்களாகையாலே இருந்தும் இல்லாதவர்கள் போலவே. அந்தப் பகவான் உலகங்களையும் லோக

பாலர்களையும் தேவதைகளையும் ஜடலோகங்களையும் ஸ்ருஷ்டிக்கவேண்டுமென்று இச்சித்தார்.

தா ஏதா தேவதா꞉ ஸ்ருஷ்டா அஸ்மிந்மஹத்யர்ணவே ப்ராபதம்ஸ்தமஶநாபிபாஸாப்⁴யாமந்வவார்ஜத்தா ஏநமப்³ருவந்நாயதநம் ந꞉ ப்ரஜாநீஹி யஸ்மிந்ப்ரதிஷ்டி²தா அந்நமதா³மேதி ॥ க ॥

(ப்-பா-ம்.) ஸ்ருஷ்டா꞉-ஸ்ருஷ்டிக்கப்பட்ட, தா ஏதா꞉ - அந்த இந்த தேவதா꞉ - அக்னி முதலிய தேவர்கள், அஸ்மிந் - இந்த, மஹதி - பெரிதான, அர்ணவே - ஸம்ஸார ஸமுத்திரத்தில், ப்ராபதந் - விழுந்தார்கள், தம் - இவைகளை உண்டாகக் காரணமாயிருந்த முதல் புருஷ பிண்டத்தை, அஶநாபிபாஸாப்⁴யாம் - பசிதாகங்களோடு, அந்வவார்ஜத் - கூட்டிவைத்தான், யஸ்மிந் - எந்த ஸ்தானத்தில், ப்ரதிஷ்டி²தா꞉ - இருந்தவர்களாய், அந்நம் - அன்னத்தை, அதா³ம - புஜிப்போமோ அப்படிப்பட்ட, ஆயதநம் - ஸ்தானத்தை, ந꞉ - எங்களுக்கு, ப்ரஜாநீஹி - ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும், இதி - என்று, தா꞉-இப்படிப் பசிதாகங்களாலே பிடிக்கப்பட்டவர்கள், ஏநம் - இந்தக் காரணபுருஷனை, அப்³ருவந் - கேட்டார்கள்.

தாப்⁴யோ கா³மாநயத்தா அப்³ருவந்ந வை நோ(அ)யமலமிதி தாப்⁴யோ(அ)ஶ்வமாநயத்தா அப்³ருவந்ந வை நோ(அ)யமலமிதி ॥ உ ॥

(ப் - ம்.) இப்படிப்பட்ட ஈச்வரன், தாப்⁴ய꞉-அவர்களின் பொருட்டு, கா³ம் - பசுவை, ஆநயத் - காட்டினார், ந꞉ - எங்களுக்கு, அயம் - இப்பசு, நாலம் வை - போதாதல்லவா, இதி - என்று, தா꞉-அவர்கள், அப்³ருவந்-சொன்னார்கள், தாப்⁴ய꞉ - அவர்களின் பொருட்டு, அஶ்வம் - குதிரையை, ஆநயத் - காட்டினார், ந꞉ - எங்களுக்கு, அயம் - இந்தக் குதிரை, நாலம் வை - போதாதல்லவா, இதி - என்று, தா꞉ - அவர்கள், அப்³ருவந்-சொன்னார்கள்.

(ஸம் - ஸா.) தம். வ்யஷ்டி தேஹஸ்ருஷ்டி சொல்லப்படுகிறது. பசுவின் ஆகாரமும் குதிரையின் ஆகாரமும் அந்த ஜலங்களினின்றும் முன்போல் பிண்டமாகச் சேர்த்தெடுத்துக் கட்டியாக்கிக் காட்டப்பட்டன. கோவிற்கு மேல்பல்லில்லையாகையால் அறுகம் புல்முதலியவைகளை வேர்பிடுங்கச் சாத்தியமில்லையென்றும் குதிரைக்கு இரண்டுவரிசைப் பற்கள் இருந்தாலும் விவேகமின்மையால் அயோக்யமென்றும் தள்ளிவிட்டபடி.

தாப்⁴ய꞉ புருஷமாநயத்தா அப்³ருவந்ஸுக்ருதம் ப³தேதி புருஷோ வாவ ஸுக்ருதம் தா அப்³ரவீத்³யதா²யதநம் ப்ரவிஶதேதி ॥ ங ॥

(ப் - ம்) தாப்⁴ய꞉ - அவர்களின் பொருட்டு, புருஷம் - புருஷனை, ஆநயத் - காட்டினார். ஸுக்ருதம் - நன்றாகச் செய்யப்பட்டது, ப³த - சந்தோஷம், இதி - என்று, தா꞉ - அந்தத் தேவதைகள், அப்³ருவந் - சொன்னார்கள் ஆகையாலே, புருஷோ வாவ - புருஷனே, ஸுக்ருதம்-ஸுக்ருதமென்று சொல்லப்படுகிறான், யதா²யதநம் - உங்கள் கார்யத்துக்குரிய ஸ்தானங்களில், ப்ரவிஶத - ப்ரவேசியுங்கள், இதி - என்று, தா꞉ - அந்தத் தேவதையைக் குறித்து, அப்³ரவீத் - ஈச்வரன் சொன்னான்.

(ஸம் - ஸா.) தம். இப்படியே ஒவ்வொன்ருய்க் காட்டப்பட்ட திர்யக் தேகங்களெல்லாம் தள்ளப்பட்ட பின்பு விராட்புருஷ தேஹம்போன்ற புருஷதேகம் காட்டப்பட்டது. அதைப்பார்த்து அவர்கள் ஸுக்ருதமென்றதனல் புருஷனே ஸுக்ருதமென்னப்படுகிருன். எல்லாப்புண்ய கர்மங்களுக்கும் ஹேதுவென்பது அல்லது தானே தன்மாயையால் ஆத்மாவினல் ஸ்ருஷ்டிக்கப்பட்டதென்பது ஸுக்ருதமென்பதின் அர்த்தம். எல்லாருக்கும் ஸ்வயோநியில் ப்ரீதியாகையால் இவர்கள் இதை அங்கீகரித்தார்களென்று நினைத்து உங்கள் காரியத்துக்குரிய ஸ்தானத்தைச் சேருங்கள் என்ருன். அக்னிக்கு வார்த்தைச் சொல்வது காரியம் அதற்குரிய ஸ்தானம் முகம் இப்படியே எங்கும் கண்டுகொள்வது.

𑌅𑌗𑍍𑌨𑌿𑌰𑍍𑌵𑌾𑌗𑍍𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 𑌮𑍁𑌖𑌂 𑌪𑍍𑌰𑌾𑌵𑌿𑌶𑌦𑍍𑌵𑌾𑌯𑍁𑌃 𑌪𑍍𑌰𑌾𑌣𑍋 𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 𑌨𑌾𑌸𑌿𑌕𑍇 𑌪𑍍𑌰𑌾𑌵𑌿𑌶𑌦𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌶𑍍𑌚𑌕𑍍𑌷𑍁𑌰𑍍𑌭𑍂𑌤𑍍𑌵𑌾𑌽𑌕𑍍𑌷𑌿𑌣𑍀 𑌪𑍍𑌰𑌾𑌵𑌿𑌶𑌦𑍍𑌦𑌿𑌶𑌃 𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌂 𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 𑌕𑌰𑍍𑌣𑍌 𑌪𑍍𑌰𑌾𑌵𑌿𑌶𑌨𑍍𑌨𑍋𑌷𑌧𑌿𑌵𑌨𑌸𑍍𑌪𑌤𑌯𑍋 𑌲𑍋𑌮𑌾𑌨𑌿 𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 𑌤𑍍𑌵𑌚𑌂 𑌪𑍍𑌰𑌾𑌵𑌿𑌶𑌂𑌶𑍍𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑌾 𑌮𑌨𑍋 𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 𑌹𑍃𑌦𑌯𑌂 𑌪𑍍𑌰𑌾𑌵𑌿𑌶𑌨𑍍𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌰𑌪𑌾𑌨𑍋 𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 𑌨𑌾𑌭𑌿𑌂 𑌪𑍍𑌰𑌾𑌵𑌿𑌶𑌦𑌾𑌪𑍋 𑌰𑍇𑌤𑍋 𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 𑌶𑌿𑌶𑍍𑌨𑌂 𑌪𑍍𑌰𑌾𑌵𑌿𑌶𑌨𑍍 ॥௪॥

(ப - ம்.) 𑌅𑌗𑍍𑌨𑌿𑌃 - வாக்கின் அபிமானியான அக்னியானது, 𑌵𑌾𑌕𑍍 - வாக்காக, 𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 - ஆகி, 𑌮𑍁𑌖𑌂 - தன் ஸ்தானமாக முகத்தை, 𑌪𑍍𑌰𑌾𑌵𑌿𑌶𑌤𑍍 - ப்ரவேசித்தது, 𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌃 - சக்ஷுராபிமானியான ஸூர்யன், 𑌚𑌕𑍍𑌷𑍁𑌰𑍍𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 - கண்ணுகி, 𑌅𑌕𑍍𑌷𑌿𑌣𑍀 - நேத்ரஸ்தானங்களை, 𑌪𑍍𑌰𑌾𑌵𑌿𑌶𑌤𑍍 ——, 𑌦𑌿𑌶𑌃 - ச்ரோத்ராபிமானிகளான திக்குகள், 𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌂𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 - காதுகளாகி, 𑌕𑌰𑍍𑌣𑍌 - ச்ரோத்ரேந்த்ரிய ஸ்தானத்தை, 𑌪𑍍𑌰𑌾𑌵𑌿𑌶𑌨𑍍 ——, 𑌓𑌷𑌧𑌿𑌵𑌨𑌸𑍍𑌪𑌤𑌯𑌃 - ஓஷதியும் வனஸ்பதிகளும் (லோமாபிமானியானவை), 𑌲𑍋𑌮𑌾𑌨𑌿𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 - மயிர்களாகி, 𑌤𑍍𑌵𑌚𑌂 - அவைகளின் ஸ்தானமான த்வக்கிந்த்ரியத்தை, 𑌪𑍍𑌰𑌾𑌵𑌿𑌶𑌨𑍍 ——, 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑌾𑌃 - மனேபிமானியான சந்த்ரன், 𑌮𑌨𑍋𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 - மனமாகி, 𑌹𑍃𑌦𑌯𑌂 - இதயத்தை, 𑌪𑍍𑌰𑌾𑌵𑌿𑌶𑌤𑍍 ——, 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌃 - அபானுபிமானியான மிருத்யு, 𑌅𑌪𑌾𑌨𑍋𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 - அபானமாகி, 𑌨𑌾𑌭𑌿𑌂 - நாபியை, 𑌪𑍍𑌰𑌾𑌵𑌿𑌶𑌤𑍍 ——, 𑌆𑌪𑌃 - ரேதோபிமானியான ஜலங்கள், 𑌰𑍇𑌤𑍋𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 - ரேதஸ்ஸாகி, 𑌶𑌿𑌶𑍍𑌨𑌂 - குஹ்யத்தை, 𑌪𑍍𑌰𑌾𑌵𑌿𑌶𑌤𑍍 ——,

(ஸம் - ஸா.) தம். சேனதிகாரிகள் அரசன் ஆஞ்ஞையின்படி நகரத்தில் ப்ரவேசிப்பதுபோலே ஸர்வேச்வரன் ஆஞ்ஞையின்படி அதனதன் அபிமானிகளான அந்தந்தத் தேவதைகள், தந் தம் காரணரூபங்களைக்கொண்டு தங்கள் உத்பத்தி ஸ்தானத்தை அடைந்தார்கள்.

𑌤𑌮𑌶𑌨𑌾𑌯𑌾𑌪𑌿𑌪𑌾𑌸𑍇 𑌅𑌬𑍍𑌰𑍂𑌤𑌾𑌮𑌾𑌵𑌾𑌭𑍍𑌯𑌾𑌮𑌭𑌿𑌪𑍍𑌰𑌜𑌾𑌨𑍀𑌹𑍀𑌤𑌿 𑌤𑍇 𑌅𑌬𑍍𑌰𑌵𑍀𑌦𑍇𑌤𑌾𑌸𑍍𑌵𑍇𑌵 𑌵𑌾𑌂 𑌦𑍇𑌵𑌤𑌾𑌸𑍍𑌵𑌾𑌭𑌜𑌾𑌮𑍍𑌯𑍇𑌤𑌾𑌸𑍁 𑌭𑌾𑌗𑌿𑌨𑍍𑌯𑍌 𑌕𑌰𑍋𑌮𑍀𑌤𑌿 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌯𑌸𑍍𑌯𑍈 𑌕𑌸𑍍𑌯𑍈 𑌚 𑌦𑍇𑌵𑌤𑌾𑌯𑍈 𑌹𑌵𑌿𑌰𑍍𑌗𑍃𑌹𑍍𑌯𑌤𑍇 𑌭𑌾𑌗𑌿𑌨𑍍𑌯𑌾𑌵𑍇𑌵𑌾𑌸𑍍𑌯𑌾𑌮𑌶𑌨𑌾𑌯𑌾𑌪𑌿𑌪𑌾𑌸𑍇 𑌭𑌵𑌤𑌃 ॥௫॥

(ப - ம்.) இப்படித் தேவதைகள் தம்தம் ஸ்தானங்களில் நின்ற பிறகு இடமில்லாதிருந்த, 𑌅𑌶𑌨𑌾𑌯𑌾𑌪𑌿𑌪𑌾𑌸𑍇 - பசியும் தாகமும், 𑌆𑌵𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 - எங்களுக்கு, 𑌅𑌭𑌿𑌪𑍍𑌰𑌜𑌾𑌨𑍀𑌹𑌿 - இடம் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்,

இதி - என்று, தம் - அந்த ஈச்வரனை, அப்ரூதாம் - கேட்டதுகள், வாம் - உங்களை, ஏதாஸ்வேவ தேவதாஸு - இந்தத் தேவதைகளிடத்திலேயே, ஆப ஜாமி - பிரித்து இருக்கச் செய்கிறேன், ஏதாஸு - இத்தேவதைகளிடத்திலே, பாகிந்யௌ - பாகமுடையவர்களாக, கரோமி - செய்கிறேன், இதி - என்று, ஸ: - அந்த ஈச்வரன், தே - அந்தப் பசிதாகங்களைக் குறித்து, அப்ரவீத் - சொன்னார், தஸ்மாத் - ஆகையால், யஸ்யை கஸ்யை ச - யாதாமொரு எந்த, தேவதாயை - தேவதையின் பொருட்டு, ஹவி: - ஹவிஸ்ஸானது, க்ருஹ்யதே - கிரகிக்கப்படுகிறதோ, அஸ்யாம் - இந்தத் தேவதை இடத்தில், அசநாயாபிபாஸே - பசியும் தாகமும், பாகிந்யௌ ஏவ - பாகமுடையனவாகவே, பவத: - ஆகின்றன.

(ஸம் - ஸா.) தம். நீங்கள் தர்மமாசையாலே சேதனவிம் பந்தமின்றிப் போஜனுகிகள் கிடையாதாகையால் வ்யஷ்டி தேஹசதங்களான அத்யாத்மமென்னும் தேவதைகளிடத்திலும், ஸமஷ்டியான விராட்தேஹத்திலுள்ள அதிதேவதமென்னும் அக்நியாதி தேவதைகளிடத்திலும் பிரித்து இருக்கச்செய்கிறேன். தேவதைகளிடத்தில் பாகம்வைக்கச் சாத்தியமில்லை யாகையால் தேவதைகளின் அம்சத்தால் பாகம்செய்து வைக்கிறேன். எந்தத் தேவதையின் பாகம் எதுவோ, அந்தப் பாகத்தில் உங்களுக்கு அம்சம் கொடுக்கிறேன் என்று ஸ்ருஷ்டியின் முதலிலேயே ஈச்வரன் ஸங்கல்பித்ததனுல் இவை சிலகாலத்தில் இந்த்ரிய தேவதைகளைக் கார்யான் முகமாகஎவுவதும் சிலகாலத்தில் அதில்லாமையாகிய உபசாந்தியுமாயிருக்கிறது. ஆகவே, ஹவிஸ்ஸினுல் தேவதாத்ருப்தியுண்டானுல் அசனுயாபியாஸைகளும் த்ருப்தியடைந்து உபசாந்தியுண்டாகிற தென்று கருத்து.

ஸ ஈக்ஷதேமே நு லோகாஸ்ச லோகபாலாஸ்சாந்நமேப்ய: ஸ்ருஜா இதி ||௧||

(ப - ம்.) இமே - இந்த, லோகாஸ்ச - லோகங்களும், லோகபாலாஸ்ச - லோகபாலகர்களும், [ஸ்ருஷ்டா:] நு - ஸ்ருஷ்டிக்கப்பட்டார்களல்லவா, ஏப்ய: - இவர்களின் பொருட்டு, அந்நம் - அன்னத்தை, ஸ்ருஜை - ஸ்ருஷ்டிக்கிறேன், இதி - என்று, ஸ: - அந்த ஈச்வரன், ஈக்ஷத - நினைத்தது.

(ஸ - ஸா.) தம். லோகங்களையும் லோகபாலகர்களையும் ஸ்ருஷ்டித்துப் பசிதாகங்களோடும் சேர்த்து வைத்தோம். அன்னமில்லாமல் இவர்கள் நிலைபெறுவது அசக்யமாகையால் இவர்க்குரிய உணவை உண்டாக்கவேண்டுமென ஈச்வரன் நினைத்தான். லோகத்திலும் அரசன் தானேஸ்வதந்த்ரனுய் நிக்ரஹாநுக்ரஹங்களைச் செய்வதால் ஸர்வேச்வரனுன ப்ரம்மமும் ஸ்வதந்த்ரமாகவே நிக்ரஹாநுகரங்களைச் செய்கிறது.

ஸோ(அ)போ(அ)ப்யதபத்தாப்யோ(அ)பிதப்தாப்யோ மூர்த்திரஜாயத யா வை ஸா மூர்த்திரஜாயதாந்நம் வை தத் ||௨||

(ப - ம்.) ஸ: - அந்த ஈச்வரன், அப: - ஜலங்களை, அப்யதபத் - தபித்தான், இவற்றினின்றும் மனுஷ்யர்களுக் காஹாரமாகிய தான்யங்களென்றும் ஸ்தாவரமான அன்னமும் பூனை முதலானவைகளுக் காஹாரமாகிய ஜந்துக்களென்னும் சரான்னமும் உண்டாகட்டுமென்று ஸங்கல்பித்தான், அபிதப்தாப்ய: - தபிக்கப்பட்ட, தாப்ய: - அந்த ஜலங்களினின்றும், மூர்த்தி: - கனமான ரூபத்தோடு ப்ராணுதாரமான சராசர ரூபான்னமானது, அஜாயத - உண்டாயிற்று, யா ஸா வை மூர்த்தி: - எந்த அந்த மூர்த்தி, அஜாயத - உண்டாயிற்றோ, தத் - அது, அந்நம் வை - அன்னமே அல்லவா.

(ஸூ0 - ஊா. தம். இங்கு ஜலமென்றது பஞ்சபூதங்களையும.

ததேநத்ஸ்ருஷ்டம் பராங்த்யஜிகாம்ஸத்தத்வாசாஜிக்ருக்ஷத்தந்நாஶக்நோத்வாசா க்ருஹீதும் ஸயத்தைநத்வாசாக்ருஹைஷ்யதபிவ்யாஹ்ருத்ய ஹைவாந்நமத்ரப்ஸ்யத் ||௩||

(ப - ம்.) தத் - அங்கு அந்த அன்னமானது, அபிஸ்ருஷ்டம் - லோகபாலகர்களுக்கெதிராக அனுப்பப்பட்டதாய், அத்ஸ்ருஜத் - கூச்சலிட்டுக்கொண்டு, பராங் - திரும்புமுகமாய், அதி - அவர்களை விட்டு, அஜிகாம்ஸத் - ஓடிவிட நினைத்தது. இவ்விதமான அன்னத்தின் அபிப்பிராயத்தை அறிந்துகொண்ட லோகபால ஸமூகமானது, தத் - அந்த அன்னத்தை, வாசா - வாக்கினாலே, அஜிக்ருக்ஷத் - கிரகித்துக்கொள்ளவேண்டுமென்று நினைத்து, தத் - அதை, வாசா - வாக்கினால், க்ருஹீதும் - கிரகிக்க, நாஶக்நோத் - ஸமர்த்தமாகவில்லை, ஸ: - அந்த லோகபால ஸங்காதமானது, யத் ந - இந்த அன்னத்தை, வாசா - வாக்கினால், அக்ருஹைஷ்யத் - கிரகிக்குமானால், அப்போது எல்லா லோகமும், அன்னம் - அன்னத்தை, அபிவ்யாஹ்ருத்ய - சொல்லியே சொல்வதினாலேயே, அத்ரப்ஸ்யத் - திருப்தியடையும்.

தத்ப்ராணேநாஜிக்ருக்ஷத்தந்நாஶக்நோத்ப்ராணேந க்ருஹீதும் ஸயத்தைநத்ப்ராணேநாக்ருஹைஷ்யதபிப்ராண்ய ஹைவாந்நமத்ரப்ஸ்யத் ||௪||

(ப் - ம்.) ப்ராணேந - ப்ராணனாலே, அபிப்ராண்ய - மோந்து பார்த்தே மற்றவை முன்போலவே.

தச்சக்ஷுஷாஜிக்ருக்ஷத்தந்நாஶக்நோச்சக்ஷுஷா க்ருஹீதும் ஸயத்தைநச்சக்ஷுஷாக்ருஹைஷ்யத்த்ருஷ்ட்வா ஹைவாந்நமத்ரப்ஸ்யத் ||௫||

(ப் - ம்.) சக்ஷுஷா - கண்ணாலே, த்ருஷ்ட்வா - பார்த்தே. மற்றவை முன்போலவே.

தச்ச்ரோத்ரேணாஜிக்ருக்ஷத்தந்நாஶக்நோச்ச்ரோத்ரேண க்ருஹீதும் ஸயத்தைநச்ச்ரோத்ரேணாக்ருஹைஷ்யச்ச்ருத்வா ஹைவாந்நமத்ரப்ஸ்யத் ||௬||

(ப் - ம்.) ஶ்ரோத்ரேண - காதினாலே, ஶ்ருத்வா - கேட்டே மற்றவை முன்போலவே.

தத்த்வசாஜிக்ருக்ஷத்தந்நாஶக்நோத்த்வசா க்ருஹீதும் ஸயத்தைநத்த்வசாக்ருஹைஷ்யத்ஸ்ப்ருஷ்ட்வா ஹைவாந்நமத்ரப்ஸ்யத் ||௭||

(ப் - ம்.) த்வசா - த்வக்கிந்திரியத்தினாலே, ஸ்ப்ருஷ்ட்வா - தொட்டே மற்றவை முன்போலவே.

தந்மநஸாஜிக்ருக்ஷத்தந்நாஶக்நோந்மநஸா க்ருஹீதும் ஸயத்தைநந்மநஸாக்ருஹைஷ்யத்த்யாத்வா ஹைவாந்நமத்ரப்ஸ்யத் ||௮||

(ப் - ம்.) உநஸா - மனதினாலே, யூாகுவாணவ - தியானம் செய்தே, மற்றவை முன்போலவே.

தஹிஸெ நாஜிஹூக்ஷ துஹாஸகொஹிஸெ நஹூஹி தஂஸயஜெஸ ஹிஸெ நாஹ ஜெஹஷூஜ்ஸூஜஜுஹெஹவாணஉதுஜூஸு. ||கூ||

(ப் - ம்) ஶிஸெ ந - குஹ்யத்தாலே, விஸூஜுவணவ - ஆனந்த கர்மத்தாலேயே, மற்றவை முன்போலவே.

(ஶ0 - ஹா.) தம். சேதனமான சராங்கம் ஓடப்பார்த்தது. அசேதனமான தான் னியான்னம் முகத்தில் ப்ரவேசியாமல் வெளியே நின்று விட்டது. பிண்டரூபமாயிருந்த விராட்புருஷ தேஹத்தையே இங்கு லோகபாலசர்களென்கிறது. கார்ய காரணவஸ்தைகளாலே முகத்தால் கிரகிப்பதாவது வார்த்தை சொல்வதாலேயே அன்னத்தைப் புஜிப்பது. அதன் கார்யமான சரீரம் சக்தியற்றதாகையாலே காரணமான சரீரத்துக்குச்சக்தியில்லையென்று தெரிந்தது. இவ்வுலகமெல்லாம் அன்னமென்று சொல்வதினாலேயே திருப்தி அடைகின்றனவில்லையே; ஆதலால் அதன் காரணமான ப்ரதம சரீரமும் சக்தியற்றதாயிற்றென்று அறிகிறோம்.

(சங் - வித்.) மற்றவைகளும் இப்படியே ச-ரு-கூ-எ-அ-கூ.

தஉவாநெ நாஜிஹூக்ஷ துஉாவயதுவணஷொஉஹூஹூ ஹொயஉாவ யஂாணாயஂவூாவணஷயஉாயஂ ||கo||

(ப் - ம.) இவ்விதமாய்க்கரணவ்யாபாரங்களினால் அன்னத்தைக்கிரகிக்கச்சக்தியற்ற லோகபால ஸமூகமானது, தக - அந்த அன்னத்தை, அவா நெ ந - முகமார்க்கமாக உள்ளே செல்லுகிற வாயுவினாலே, அஜிஹூக்ஷக - கிரகிக்க நினைத்தது, தக - அதை, ஆவயக - கிரகித்துக்கொண்டது, யக வாயஂ - அபானமென்னும் வாயு யாதொன்றோ, ஸணஷ - அந்த இந்த வாயுவானது, அணஹூஹ ஹ - அன்னத்தைக் கிரகிக்கச் சக்தியுடையது, யஉாயஂ - அபானவாயு யாதொன்றோ, வஹ - இந்த வாயு, அணாயஂ வெ - அன்னத்தையே ஜீவனதாரமாக உடையது.

ஸஂஈக்ஷதகயஂ நிஉஂஉஜெதஸூதி திஸஂஈக்ஷதக தறெணவூவ உூாஇதிஸஂஈக்ஷதயதிவாவாஉவிஹூாஹூதஂயதிவூாணெநாவிவூாணி தஂயதிவக்ஷஂஷாஉஷஂயதிஸெூாதெூணஶூதஂ யதிகுவாஸூஷஂயதி உநஸாயூாதஂ யஉூவாநெநாஹூவாநிதஂயதி ஶிஸெநவி ஸூஜூஷூயெ கொஉஹஜிதி ||கக||

(ப் - ம்) உஉஂ - இந்தக் கார்யரூபமான ஜகத்தானது, உஉதெ - என்னை விட்டு, கயஂஹூாக - எப்படியாகும், இதி - என்று, ஸஂஈக்ஷத - அந்த ப்ரம்மம் நினைத்தது, கதறெண - எந்த மார்க்கத்தால், வூவஜெ - இஜ்ஜீவ சரீரத்தில் ப்ரவேசிக்கலாம், இதிஸஂஈக்ஷத - என்று அந்த ப்ரம்மம் நினைத்தது, வாவா - வாக்கினாலே, அவிஹூாஹூதஂயதி - நிஷ்ப்ரயோஜனமாகச் சொல்லப்படுமேயானால், வூாணெந - க்ராணேந்த்ரியத்தினாலே, அவிவூாணிதஂயதி - விருதாவாக முகரப்பட்டால், வக்ஷஂஷாஉஷஂயதி - கண்ணால் வீணாகப் பார்க்கப்பட்டால், ஸெூாதெூணஶூதஂயதி - காதினால் விருதா

வாகக் கேட்கப்பட்டால், 𑌤𑍍𑌵𑌚𑌾𑌸𑍍𑌪𑍃𑌷𑍍𑌟𑌂𑌯𑌦𑌿 - த்வகிந்த்ரியத்தினால் வீணே தொடப்பட்டால், 𑌮𑌨𑌸𑌾𑌧𑍍𑌯𑌾𑌤𑌂𑌯𑌦𑌿 - மனஸினால் வீணாக த்யானம் செய்யப்பட்டால், 𑌅𑌪𑌾𑌨𑍇𑌨𑌾𑌭𑍍𑌯𑌪𑌾𑌨𑌿𑌤𑌂𑌯𑌦𑌿 - அபானமென்னும் வாயு வீணாகவே ஆபானிக்குமானால், 𑌶𑌿𑌶𑍍𑌨𑍇𑌨𑌵𑌿𑌸𑍃𑌷𑍍𑌟𑌂𑌯𑌦𑌿 - குஹ்யேந்த்ரியம் விருதாவாக ஆனந்த கர்மத்தைச் செய்யுமானால், 𑌅𑌥 - அதன் பின்பு, 𑌕𑍋𑌽𑌹𑌂 - யான் யார், 𑌇𑌤𑌿 - என்று, 𑌈𑌕𑍍𑌷𑌤 - நினைத்தது.

𑌸 𑌏𑌤𑌮𑍇𑌵𑌸𑍀𑌮𑌾𑌨𑌂𑌵𑌿𑌦𑌾𑌰𑍍𑌯𑍈𑌤𑌯𑌾𑌦𑍍𑌵𑌾𑌰𑌾𑌪𑍍𑌰𑌾𑌪𑌦𑍍𑌯𑌤𑌸𑍈𑌷𑌾 𑌵𑌿𑌦𑍃𑌤𑌿𑌰𑍍𑌨𑌾𑌮𑌦𑍍𑌵𑌾𑌸𑍍𑌤𑌦𑍇𑌤𑌨𑍍𑌨𑌾𑌨𑍍𑌦𑌨𑌂𑌤𑌸𑍍𑌯 𑌤𑍍𑌰𑌯 𑌆𑌵𑌸𑌥𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌯𑌃𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑌾 𑌅𑌯𑌮𑌾𑌵𑌸𑌥𑍋𑌽𑌯𑌮𑌾𑌵𑌸𑌥𑍋𑌽𑌯𑌮𑌾𑌵𑌸𑌥 𑌇𑌤𑌿 ||௧௨||

(ப-பா-ம்.) 𑌸𑌃 - அந்த ப்ரம்மமானது, 𑌏𑌤𑌂 - இந்த, 𑌸𑍀𑌮𑌾𑌨𑌮𑍇𑌵 - எல்லையான சிரஸ்ஸையே, 𑌵𑌿𑌦𑌾𑌰𑍍𑌯 - பிளந்துகொண்டு, 𑌏𑌤𑌯𑌾 𑌦𑍍𑌵𑌾𑌰𑌾 - இந்த மார்க்கத்தினாலே, 𑌪𑍍𑌰𑌾𑌪𑌦𑍍𑌯𑌤 - உள்ளே ப்ரவேசித்தது, 𑌸𑍈𑌷𑌾𑌦𑍍𑌵𑌾𑌃 - இந்த வழியே, 𑌵𑌿𑌦𑍃𑌤𑌿𑌰𑍍𑌨𑌾𑌮 - விதிருதியென்று பெயர் பெற்றது, 𑌤𑌦𑍇𑌤𑌤𑍍 - இந்த வழியே, 𑌨𑌾𑌨𑍍𑌦𑌨𑌂-𑌨𑌨𑍍𑌦𑌨𑌂-ஸந்தோஷத்தைத் தருவது, 𑌅𑌯𑌮𑌾𑌵𑌸𑌥𑌃 - இதுஸ்தானம், 𑌅𑌯𑌮𑌾𑌵𑌸𑌥𑌃 - இதுஸ்தானம், 𑌅𑌯𑌮𑌾𑌵𑌸𑌥𑌃 - இதுஸ்தானம், 𑌇𑌤𑌿 - என்று, 𑌤𑍍𑌰𑌯𑌆𑌵𑌸𑌥𑌾𑌃 - மூன்று ஸ்தானங்கள், 𑌤𑍍𑌰𑌯𑌃𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑌾𑌃 - மூன்று அவஸ்தையும் ஸ்வப்னங்களேயாம்.

𑌸 𑌜𑌾𑌤𑍋 𑌭𑍂𑌤𑌾𑌨𑍍𑌯𑌭𑌿𑌵𑍍𑌯𑍈𑌕𑍍𑌷𑌤𑍍 𑌕𑌿𑌮𑌿𑌹𑌾𑌨𑍍𑌯𑌂𑌵𑌾𑌵𑌦𑌿𑌷𑌦𑌿𑌤𑌿𑌸 𑌏𑌤𑌮𑍇𑌵𑌪𑍁𑌰𑍁𑌷𑌂𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌤𑌤𑌮𑌮𑌪𑌶𑍍𑌯𑌦𑌿𑌦𑌮𑌦𑌰𑍍𑌶𑌮𑌿𑌤𑍀 ௩ ||௧௩||

(ப-பா-ம்.) 𑌜𑌾𑌤𑌃𑌸𑌃 - இப்படி ஸம்ஸாரியாக ஆன அந்த ப்ரம்மம், 𑌭𑍂𑌤𑌾𑌨𑍍𑌯𑌭𑌿 - பூதங்களை உத்தேசித்து, 𑌵𑍍𑌯𑍈𑌕𑍍𑌷𑌤𑍍 - ஆலோசித்தது, (வித் - 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 - பூதங்களைப்பற்றி, 𑌅𑌭𑌿𑌵𑍍𑌯𑍈𑌕𑍍𑌷𑌤𑍍 - முழுதும் விவேகித்தறிந்தது), 𑌅𑌨𑍍𑌯𑌂𑌕𑌿𑌂𑌵𑌾𑌵𑌦𑌿𑌷𑌦𑌿𑌤𑌿 - ஆத்மாவொன்றல்லது ஸ்வாபாவிக ஸத்தையுடையது வேறுண்டென்று சொல்ல நினைக்கலாமோ கூடாதென்று நிச்சயித்து, 𑌸𑌃 - அந்த ஜீவனானவன், 𑌏𑌤𑌮𑍇𑌵 - இவனையே, 𑌪𑍁𑌰𑍁𑌷𑌂-தேஹத்தில் இருப்பவனாகவும், 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮-ப்ரம்மஸ்வரூபியாகவும், 𑌤𑌤𑌮𑌂-𑌤𑌤𑌤𑌮𑌂-ஸர்வ வ்யாபியாகவும் தெரிந்துகொண்டு, 𑌇𑌦𑌮𑌦𑌰𑍍𑌶𑌮𑌿𑌤𑌿 - இப்படிப்பட்ட ஆத்மஸ்வரூபத்தைப் பார்த்தேனென்று, 𑌅𑌪𑌶𑍍𑌯𑌤𑍍-பார்த்தான்.

𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑌿𑌦𑌨𑍍𑌦𑍍𑌰𑍋 𑌨𑌾𑌮𑍇𑌦𑌨𑍍𑌦𑍍𑌰𑍋 𑌹 𑌵𑍈 𑌨𑌾𑌮 𑌤𑌮𑌿𑌦𑌨𑍍𑌦𑍍𑌰𑌂𑌸𑌨𑍍𑌤𑌮𑌿𑌨𑍍𑌦𑍍𑌰 𑌇𑌤𑍍𑌯𑌾𑌚𑌕𑍍𑌷𑌤𑍇 𑌪𑌰𑍋𑌕𑍍𑌷𑍇𑌣 𑌪𑌰𑍋𑌕𑍍𑌷𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌇𑌵 𑌹𑌿 𑌦𑍇𑌵𑌾𑌃 𑌪𑌰𑍋𑌕𑍍𑌷𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌇𑌵 𑌹𑌿 𑌦𑍇𑌵𑌾𑌃 ||௧௪||

(ப-பா-ம்.) 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 - இப்படிப் பரமாத்மாவை ஸாக்ஷாத்கரித்ததினால், 𑌇𑌦𑌨𑍍𑌦𑍍𑌰𑍋 𑌨𑌾𑌮 - இவ்வாத்மா இதந்த்ரனென்று பெயரை உடையது, 𑌇𑌦𑌨𑍍𑌦𑍍𑌰𑍋 𑌹 𑌵𑍈 𑌨𑌾𑌮 - இப்பரப்ரம்மமானது இதந்த்ரமென்னும் பெயரை

உடையதாக லோகத்தில் ப்ரசித்தமன்றோ, 𑌤𑌮𑌿𑌦𑌂𑌦𑍍𑌰𑌂𑌸𑌨𑍍𑌤𑌂 - இதந்த்ரனாகிய அப்ரம்மத்தையே, 𑌪𑌰𑍋𑌕𑍍𑌷𑍇𑌣 - மறைவிடமாக, 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰 𑌇𑌤𑌿 - இந்த்ரனாக, 𑌆𑌚𑌕𑍍𑌷𑌤𑍇 - சொல்லுகிறார்கள், 𑌦𑍇𑌵𑌾𑌃 - தேவதைகள், (வித்யா - பூஜ்யர்கள் எல்லாரும்), 𑌪𑌰𑍋𑌕𑍍𑌷𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌇𑌵𑌹𑌿 - பரோக்ஷமாக (மறைவிடமாகச்) சொல்வதிலேயே ப்ரீதியுடையவர்கள் அல்லவா, 𑌪𑌰𑍋𑌕𑍍𑌷𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌇𑌵𑌹𑌿 - முன்போலவே பொருள்,

(உ - ஸா.) அந்த நாராயணன் இவர்களுக்கு அன்னத்தை ஸ்ருஷ்டிக்கவேண்டுமென்று நினைத்தார். (௧)

(உ - ஸா.) முன்னே தான் ஸ்ருஷ்டித்த அப்பு என்னும் தேவதைகளையும் ப்ரம்மாதிகளையும் தாமரைபோன்ற அகன்ற கண்களினால் பார்த்தார். அவர் பார்வையாலும் அவரிச்சையினாலும் அவர்களின் தேஹத்தில் ஒரு பாகத்திலிருந்து வேறு தேஹம் தோற்றியது. (௨)

ஐதரேயோபநிஷத்து முதல் அத்தியாயம்.

(2 - வது ஆரணத்தின் நாலாவது அத்தியாயம்).

முற்றிற்று.

𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑍇 𑌪𑍍𑌰𑌥𑌮𑌃 𑌖𑌣𑍍𑌡𑌃,

𑌪𑍁𑌰𑍁𑌷𑍇𑌹𑌵𑌾𑌅𑌯𑌮𑌾𑌦𑌿𑌤𑍋𑌗𑌰𑍍𑌭𑍋𑌭𑌵𑌤𑌿𑌯𑌦𑍇𑌤𑌦𑍍𑌰𑍇𑌤𑌸𑍍𑌤𑌦𑍇
𑌤𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑍇𑌭𑍍𑌯𑍋𑌽𑌙𑍍𑌗𑍇𑌭𑍍𑌯𑌸𑍍𑌤𑍇𑌜𑌃𑌸𑌂𑌭𑍂𑌤𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑍍𑌯𑍇𑌵𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂𑌬𑌿𑌭𑌰𑍍𑌤𑌿𑌤
𑌦𑍍𑌯𑌦𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌾𑌂𑌸𑌿𑌞𑍍𑌚𑌤𑍍𑌯𑌥𑍈𑌨𑌜𑍍𑌜𑌨𑌯𑌤𑌿𑌤𑌦𑌸𑍍𑌯𑌪𑍍𑌰𑌥𑌮𑌂𑌜𑌨𑍍𑌮 ॥௧॥

(ப-பா-ம்.) 𑌅𑌯𑌂 - இந்த ஜீவாத்மா, 𑌪𑍁𑌰𑍁𑌷𑍇𑌹𑌵𑍈 - புருஷ சரீரத்திலேயே அல்லவா, 𑌆𑌦𑌿𑌤𑌃 - முதலில், 𑌗𑌰𑍍𑌭𑌃 - கர்ப்பமாக, 𑌭𑌵𑌤𑌿 - ஆகிறான், 𑌰𑍇𑌤𑌃𑌯𑌤𑍍 - ரேதஸ்ஸு என்பது எதுவோ, 𑌏𑌤𑌤𑍍 - இதுதான் அக்கர்ப்பம், 𑌤𑌦𑍇𑌤𑌤𑍍 - புருஷ கர்ப்பமாகிய அந்த இந்த ரேதஸ்ஸானது, 𑌸𑌰𑍍𑌵𑍇𑌭𑍍𑌯𑌃 𑌅𑌙𑍍𑌗𑍇𑌭𑍍𑌯𑌃 - புருஷ சரீரத்திலுள்ள எல்லா அங்கங்களினின்றும், 𑌸𑌂𑌭𑍂𑌤𑌂𑌸𑌤𑍍 - ஸாரபூதமாய்ச்சேர்ந்து, 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 - ரூபாந்தரமான தன்னை, 𑌆𑌤𑍍𑌮𑌨𑍍𑌯𑍇𑌵 - தன் சரீரத்திலேயே, 𑌬𑌿𑌭𑌰𑍍𑌤𑌿 - போஷிக்கிறது, 𑌤𑌤𑍍 - அந்த ரேதஸ்ஸை, 𑌯𑌦𑌾 - எப்போது, 𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌾𑌂 - ஸ்திரீயினிடத்தில், 𑌸𑌿𑌞𑍍𑌚𑌤𑌿 - யோகஞ்செய்கிறானோ, 𑌅𑌥 - அப்போது, 𑌏𑌨𑌤𑍍 - வேறு ஜீவனுடன் கூடிய ரேதோரூபமான சரீரத்தை, 𑌜𑌨𑌯𑌤𑌿 - பிதா உண்டுபண்ணுகிறான், 𑌤𑌤𑍍 - அதுவே இப்படி ரேதோரூபமாய் பித்ரு சரீரத்தைவிட்டு வெளிப்படுவதே, 𑌅𑌸𑍍𑌯 - இவனது, 𑌪𑍍𑌰𑌥𑌮𑌂𑌜𑌨𑍍𑌮 - முதலாவது ஜன்மம். (௧)

முதல்கண்டம்.

𑌤𑌤𑍍𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌾𑌆𑌤𑍍𑌮𑌭𑍂𑌯𑌂𑌗𑌚𑍍𑌛𑌤𑌿𑌯𑌥𑌾𑌸𑍍𑌵𑌮𑌙𑍍𑌗𑌂𑌤𑌥𑌾𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍇𑌨𑌾𑌂𑌨𑌹𑌿𑌨
𑌸𑍍𑌤𑌿𑌸𑌾𑌸𑍍𑌯𑍈𑌤𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑌤𑍍𑌰𑌗𑌤𑌂𑌭𑌾𑌵𑌯𑌤𑌿 ॥௨॥

(ப்-பா-ம்.) தசு - இப்படி ஸ்த்ரீ கர்ப்பத்தில் ப்ரவேசித்த அந்த ரேதஸ் ஸானது, ஸ்வசரீரம்யதா - சொந்த சரீரம்போலவே, ஸ்த்ரியா: - ஸ்திரீயினு டைய, ஆத்மபூயம் - சரீரமாயிருப்பதை, கச்சதி - அடைகிறது, தஸ்மாத் - அதனால், ஏநாம் - இந்த ஸ்திரீயை, நஹினஸ்தி - ஹிம்ஸிக்கிறதில்லை, ஸா - கர்ப்பவதியான அந்த ஸ்த்ரீ, அத்ரகதம் - கர்ப்பத்தை அடைந்திருக்கிற, ஆத்மாநம் - புத்ரருமான, அஸ்யவேதம் - இவனது இந்த ரேதஸ்ஸை, பாவ யதி - பரிபாலிக்கிறாள்.

(உ)

ஸாபாவயித்ரீபாவயிதவ்யாபவதிதம்ஸ்த்ரீகர்ப்பம்பிபர்திஸோக்ர ஏவகுமாரம்ஜந்மனோக்ரேதிபாவயதி ஸயத்குமாரம்ஜந்மனோக்ரே திபாவயத்யாத்மாநமேவதத்பாவயத்யேஷாம்லோகாநாம்ஸந்தத்யா ஏவம்ஸந்ததாஹீமேலோகாஸ்ததஸ்யத்விதீயம்ஜந்ம॥

(ப்-பா-ம்.) பாவயித்ரீ-பர்த்தாவின் சரீராந்தரமான கர்ப்பத்தை ரக்ஷிக் கிற பத்னியானவள், பாவயிதவ்யா - பர்த்தாவினால் ரக்ஷிக்கத்தக்கவளாக, பவதி - ஆகிறாள், ஸ்த்ரீ - ஸ்த்ரீயானவள், தம்கர்ப்பம் - அந்தக்கர்ப்பத்தை, பிபர்தி - பரிக்கிறாள், ஸ:-அந்தப் பிதாவானவன், குமாரம்-அந்தப் புத் ரனை, அக்ரஏவ-முன்னேயும் ஜனனகாலத்திலும், ஜந்மனோக்ரே-ஜனனத்து க்குப் பிறகும், அதிபாவயதி - சாஸ்த்ரீய ஸம்ஸ்காரங்களால் அதிகனுக்கு கிறான், ஸ: -அந்தப் பிதாவானவன், குமாரம் - புத்ரனை, ஜந்மனோக்ரே - ஜனனத்துக்கு முன்னும்பின்னும் ஜனனகாலத்திலும்,அதிபாவயதிஇதியத்-ஸம்ஸ்கரிக்கிறான் பது யாதோன்றோ, தத் - அதனால், ஆத்மாநமேவபாவ யதி - தன்னையே ஸம்ஸ்கரித்துக் கொள்ளுகிறான் இப்படித்தானே புத்ரனாக ஜனிப்பது, ஏஷாம்லோகாநாம் - இந்த லோகங்களுடைய, ஸந்தத்யை - விச்சேதமில்லாமைக்காகவே, தத் - இப்படி மாத்ரு சரீரத்தைவிட்டுப் புத்ர னாய் வெளிப்படுவது, அஸ்ய-இவனுக்கு, த்விதீயம்ஜந்ம-இரண்டாவது ஜன்மம்.

இரண்டாவதுகண்டம்.

ஸோஸ்யாயமாத்மா புண்யேப்ய: கர்மப்ய: ப்ரதிதீயதே‌அதாஸ்யாயமிதர ஆத்மாக்ருதக்ருத்யோவயோகத:ப்ரைதிஸஇத:ப்ரயன்னேவ புநர்ஜாயதேததஸ்யத்ருதீயம்ஜந்மதது‌க்தம்ருஷிணா ॥க॥

(ப்-பா-ம்.) அஸ்ய-பிதா புத்ரன் என்று இரண்டு தேஹத்தை வஹித்த பிதாவினுடைய, ஸ:அயமாத்மா - புத்ரனென்றும் இந்தத் தேஹமானது, புண்யேப்ய:கர்மப்ய:-புண்ய கார்யங்களுக்காக, ப்ரதிதீயதே - ப்ரதிநிதி யாகச் செய்யப்படுகிறான், அத - பிறகு, அஸ்ய-இந்த பிதாவினுடைய, அயம்

ஐதாஜூதா - பித்ரு தேஹமானது, க்ருதக்ருத்யஃ - ஜன்ம ப்ரயுக்தமான எல்லாக் கார்யங்களையும் செய்து முடித்தவனாய், வயோமதஃ-வ்ருத்தனாய், ப்ரைதி - மரணமடைகிறான், ஸஃ - அந்த வ்ருத்தன், இதஃ - இந்த லோகத்தினின்றும், ப்ரயன்னேவ-வெளியில் புறப்பட்ட உடனே, புநர்ஜாயதே- மறுபடி தன் கர்மத்துக்குத் தக்கபடி ஸ்வர்க்கத்திலோ நரகத்திலோ மனுஷ்ய லோகத்திலோ ஜனிக்கிறான், தத் - இப்படி மறுபடி ஜனிப்பதே, அஸ்ய - இவனுக்கு, த்ருதீயம்ஜந்ம - மூன்றாவது ஜன்மம், தத் - அது இப்படி ஸம்ஸாரத்தினுடைய கஷ்டமும் தத்வஜ்ஞானத்தால் அது நீங்கும் விதமும், ருஷிணா - மந்த்ரத்தால், உக்தம் - சொல்லப்பட்டிருக்கிறது. (க)

மூன்றாவது கண்டம்.

கர்பே நு ஸந்நந்வேஷாமவேதமஹம் தேவாநாம் ஜநிமாநிவிச்வா ஶதம் மா புர ஆயஸீரரக்ஷந்நதஃ ச்யேநோ ஜவஸா நிரதீயமிதி। கர்ப ஏவைத ச்சயாநோ வாமதேவ ஏவமுவாச ॥க॥

(ப - ம்.) கர்பே நு - கர்ப்பத்திலேயே, ஸந் - வாஸம்செய்கிற, அஹம்- நான் கர்ப்பவாஸம் செய்யும்போதே, ஏஷாம்தேவாநாம் - அக்னி முதலிய இந்தத் தேவதைகளுடைய, விச்வாஜநிமாநி - உத்பத்தியெல்லாவற்றையும், அவேதம் - அறிந்தேன், அதஃ - இதற்கு முன்பு, மா - என்னை, ஆயஸீஃ - இரும்பு விலங்குபோன்ற, ஶதம்புரஃ - நூறு தேகங்கள், அரக்ஷந் - திருடனை விலங்கிட்டுச் சிறையிலடைத்து வெளியே புறப்பட ஒட்டாமல் காவல் காப்பதுபோல நான் தத்வஜ்ஞானத்தால் முக்தியடையாதபடி சரீர சம்பந்தங்கள் தடுத்து வந்தன, ச்யேநஃ-ச்யேநமென்னும் பக்ஷிசிரேஷ்டம்போலே, ஜவஸா - வேகமாய், நிரதீயம்-வெளிப்பட்டேன் வலையை உதறிவிட்டு ச்யேனம் போய்விடுவதுபோல் ஆத்மக்யான ஸாமார்த்யத்தால் ஸம்ஸாரத்தை விட்டு வெளிப்பட்டேன், இதி - என்பது மந்த்ரத்தின் முடிவைக்காட்டுகிறது, வாமதேவஃ - வாமதேவர், கர்பே ஶயாநஏவ - கர்ப்பத்தில் வஸிக்கும் போதே, ஏதத்-இம்மந்த்ரத்தை, ஏவம் - இப்படி, உவாச-சொன்னார். ()

(ஸம - ஹா.) குருப்ரஸாதத்தாலும் சாஸ்த்ரானுக்ரஹத்தாலும் தத்வஜ்ஞானம் பெற்றபடியால் இவ்வவித்யை நான் விடைம்பெற்றேன் என்று வாமதேவருஷிதாயாரின் கர்ப்பத்திலிருக்கும்போதே சொன்னார். (க)

ஸ ஏவம்வித்வாநஸ்மாச்சரீரபேதாதூர்த்வ உத்க்ரம்யாமுஷ்மிந்ஸ்வர்கே லோகே ஸர்வாந்காமாநாப்த்வாம்ருதஸ்ஸமபவத்ஸமபவத் ॥உ॥

(ப - ம்.) ஏவம்வித்வாந்-இப்படி ஆத்மதத்வத்தை அறிந்த, ஸஃ-அந்த வாமதேவர், அஸ்மாச்சரீரபேதாத் - இத்தேஹம் போனபின்பு, ஊர்த்வ- உத்தரகாலத்தில், (அங்-ஊர்த்வஃ - ஞானஸ்வரூபியாய் விட்டதால் ஸம்ஸாரத்

துக்கு மேலானவராக) இருந்து, உத்க்ரம்ய - ஸம்ஸார பந்தங்களையெல்லாம் விட்டு நீங்கி, அமுஷ்மிந் - இந்திரியங்களால் காணமுடியாத, ஸ்வர்கே - நல்ல கியானத்தால் ஸம்பாதிக்கப்பட்டதாகையாலே ஸ்வர்க்கமென்று பெயருடைய, லோகே - ஸ்வயம் ப்ரகாசமாகக் காணப்படுகிற ஆத்மஸ்வரூபத்தில், ஸர்வாந்காமாந் - தைத்தரீயத்தில் சொன்ன ஸார்வபௌம போகம்முதல் ப்ரம்மபோகம் அளவான போகங்களையெல்லாம், ஆப்த்வா - அடைந்து, அம்ருத: - முக்தனாக, ஸமபவத் - ஆனார் மறுபடி, ஸமபவத் - என்றது அத்தியாயம் முடிந்ததைக் காட்டுகிறது.

(உ - ஹா.) ரேதஸ்ஸு அந்நம் முதலிய சப்தங்களும் விஷ்ணுவையே சொல்லுகின்றன. (௫)

(உ - ஹா.) ஸ:. அக்ர:. ஏவ. ச்ரேஷ்டனான அந்த விஷ்ணுவே. புத்திரனைக் கொண்டாடுவதும் அங்குள்ள பகவானைக் கொண்டாடுவதாகவே ஆகிறது. இப்படிப் பாவிப்பவர்களுக்கே மோக்ஷம் உண்டாகிறது. (௬)

ஐதரேயோபநிஷத் இரண்டாவது அத்தியாயம்

உ - வது ஆரணம் ஐந்தாவது அத்தியாயம்

முற்றிற்று.

த்ருதீயாத்யாயே ப்ரதம: கண்ட:.

கோऽயமாத்மேதி வயமுபாஸ்மஹே கதர: ஸ ஆத்மா யேந வா பஶ்யதி யேந வா ஶ்ருணோதி யேந வா கந்தாநாஜிக்ரதி யேந வா வாசம் வ்யாகரோதி யேந வா ஸ்வாது சாஸ்வாது ச விஜாநாதி ||க||

(ஸம் - ஹா.) கீழ் அத்தியாயத்தில் மூன்று ஜன்மம் நிரூபிக்கப்பட்டது. அம்முகமாய் வைராக்யம் பிறந்து கியானமுண்டாகவேண்டுமாகையாலே, பாதார்த்தஸ்வரூபத்தை நன்றாகச் சோதியாதபோது வைராக்கியமொன்றினாலே மாத்திரம் கியானமுண்டாகமாட்டாதாகையால் இம்மூன்றும் அத்தியாயத்தில் பதார்த்தசோதனம் செய்யப்படுகிறது.

ப்ரஹ்ம வித்தையினால் ப்ரஹ்மைக்கியமென்னும் பலம் கைவருமென்பது வாமதேவர் முதலியவர்களினது பரம்பரையில் வேதவாக்கியங்களால் சொல்லப்பட்டிருக்கிறது. இது பிருஹ்மக்கியானிகளின் சபையில் மிகப்பிரசித்தமானது. இவ்விஷயத்தை அறிந்துகொண்ட இப்போதைய பிராஹ்மணர் சிலர் பேதக்கியானமென்னும் ஸம்ஸாரத்தை நீக்கி ஐக்கியமென்னும் மோக்ஷத்தைப் பெறும்பொருட்டு விசாரம்செய்யத் தொடங்கினார்கள்.

எந்த ஆத்மாவை உபாஸநம்செய்து வாமதேவர் மோக்ஷமடைந்தாரோ, அதே ஆத்மாவை நாம் உபாசிக்க நினைத்திருக்கிறோம். அவ்வாத்மா எது, என்பது விசாரவிஷயம்.

இவ்வாறு விசாரிக்கும்போது இந்தச் சரீரத்தில் கால்வழியாய் ஒன்றும் தலைவழியாய் ஒன்றுமாக இரண்டு ஆத்மாக்கள் (பிராணனும் ஆத்மாவும்) பிரவேசித்திருப்பது அவர்களுக்கு ஞாபகத்தில் வந்தது. இவ்விரண்டில் ஒன்றில்லாவிட்டாலும் இந்தத் தேகம் நிற்கமாட்டாதாகையால் இவ்விரண்டும் ஆத்மாவாக இருக்கவேண்டுமென்று அவர்கள் நினைத்தார்கள்.

இவ்விரண்டில் உபாஸிக்கத்தக்கது ஒன்றேயாதலின் எதை யாம் உபாசிக்கக் கடவோமென்று மறுபடியும் விசாரிக்கத்தொடங்கினார்கள்.

அவர்கள் மனோசுத்தியுடையவர்களாகையால் உடனே அவர்களுக்குத் தத்வநிச்சயம் பிறந்தது. இந்த தேஹத்தில் இரண்டு ஆத்மாவிருக்கின்றன. அதில் ஒன்று அறிவதும் ஒன்று அறிவதற்குத் துணையாயிருப்பதும். ஆதலின் அறிவது ஆத்மா, துணையாயிருக்கும் பிராணன் ஆத்மாவல்ல என்று அவர்களுக்குத் தெளிவு பிறந்தது.

கண்ணினால் காண்கிறான், காதினால் கேட்கிறான், மூக்கினால் முகருகிறான், வாக்கினால் பேசுகிறான், நாக்கினால் ருசியையறிகிறான். ஒரு காரணமே இப்படிப் பல பிரிவுகளை அடைகிறது.

யதேதத்ஹ்ருதயம் மநச்சைதத் ஸம்ஜ்ஞாநமாஜ்ஞாநம் விஜ்ஞாநம் ப்ரஜ்ஞாநம் மேதா த்ருஷ்டிர் த்ருதிர் மதிர் மநீஷா ஜூதி: ஸ்ம்ருதி: ஸங்கல்ப: க்ரதுரஸு: காமோ வச இதி ஸர்வாண்யேவைதாநி ப்ரஜ்ஞாநஸ்ய நாமதேயாநி பவந்தி ||௨||

(ஸ0 - ஹா.) ஹ்ருதய மென்றும் மனஸ்ஸென்றும் சொல்லப்பட்ட கரணமொன்றே பல பிரிவாகிறது. கண்ணாயிருந்து பார்க்கிறது, காதாயிருந்து கேட்கிறது, மூக்காயிருந்து முகருகிறது, வாக்காயிருந்து பேசுகிறது, நாவாயிருந்து ருசியை அறிகிறது, ஆலோசனைக்குரிய மனமென்னும் தானாயிருந்து ஆலோசிக்கிறது. இருதயமாயிருந்து நிர்த்தாரணம் செய்கிறது. ஆதலின் இவையெல்லாம் செய்வதென்றே. இவ்விஷயம் கௌஷீதகீ பிராஹ்மண்டலத்திலும் வாஜஸனேயத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி ஹ்ருதம் என்றும் மனஸ்ஸென்றும் சொல்லப்படும் கரணமொன்றே அறிவதற்குத்துணையாகையால் அவைகளுக்கு ஆத்மாவான பிராணனானது நமக்கு உபாஸ்யமானதன்று. இவற்றை அறியும் ஆத்மாவே நாம் உபாஸிக்கத்தக்கதென்று அவர்கள் முடிவுசெய்து கொண்டார்கள்.

இப்பிராணியைச் சேதநனென்று சொல்லுகிறதற்குக் காரணமான விருத்தி ஸம்ஜ்ஞானம், தான் யஜமானனாயிருத்தல் ஆஜ்ஞானம், கலைகளில் தெளிவுவிஜ்ஞானம். அந்தந்தஸமயத்திற் கேற்றபடி புத்தியில் தோன்றுவது ப்ரஜ்ஞானம், கிரந்தங்களைத் தரிக்கும் சக்திமேதை, இந்திரியங்களின் மூலமாய் வெளி விஷயங்களை அறிகை திருஷ்டி, தளர்வுற்ற சரீரேந்த்ரியங்களைத் திடமாக்கித் தரிப்பது திருதி, ஆலோசித்தல் மதி, அதில்ஸ்வாதந்த்ர்யம்மனீஷை, ரோகம் முதலியவைகளால் வரும் மனத்துயரமே ஜூதி, முன் நடந்த விஷயத்தை நினைத்தலே ஸ்மிருதி, கறுப்பு வெளுப்பு என்று பிரித்தறிவது ஸங்கல்பம், திடநிச்சயம்க்ரது, பிழைதிருத்தல் முதலியவைகளுக்குரிய விருத்தியே அஸு, நெருக்கமில்லாத விஷயத்தை இச்சித்தல் காமம், ஸ்திரீகளுடன் புணர விரும்புதல் வசம்.

இவைமுதலிய அந்தக்கரணத்தின் வியாபாரங்கள் கேவல ஜ்ஞானரூபனும் அறிபவனுமான ஆத்மாவுக்கு உபாதியானவை. அந்த ஆத்மா நாமரூபமில்லாதவன். உபாதியால் சேரும் குணங்களின் பெயரான ப்ரஜ்ஞானம் முதலிய இவையெல்லாம் ஞானமாத்ரமான அந்த ஆத்மாவின் பெயர்களே.

இதனால் கரணத்திலும் கரண வ்யாபாரத்திலும் வேறுபட்டு ஸ்வப்ரகாசமாய் ஸர்வஸாக்ஷியாயுள்ளது ஆத்மா ஒன்றே யென்று ஸித்தாந்தமாயிற்று.

ஏஷ ப்ரஹ்மைஷ இந்த்ர ஏஷ ப்ரஜாபதிரேதே ஸர்வே தேவா இமாநி ச பஞ்ச மஹாபூதாநி ப்ருதிவீ வாயுராகாச ஆபோ ஜ்யோதீம்ஷீத்யேதாநீமாநி ச க்ஷுத்ரமிச்ராணீவ பீஜாநீதராணி சேதராணி சாண்டஜாநி

𑌨𑌿 𑌚 𑌜𑌾𑌰𑍁𑌜𑌾𑌨𑌿 𑌚 𑌸𑍍𑌵𑍇𑌦𑌜𑌾𑌨𑌿 𑌚𑍋𑌦𑍍𑌭𑌿𑌜𑍍𑌜𑌾𑌨𑌿 𑌚𑌾𑌶𑍍𑌵𑌾 𑌗𑌾𑌵𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾 𑌹𑌸𑍍𑌤𑌿𑌨𑍋 𑌯𑌤𑍍𑌕𑌿𑌞𑍍𑌚𑍇𑌦𑌂 𑌪𑍍𑌰𑌾𑌣𑌿 𑌜𑌙𑍍𑌗𑌮𑌂 𑌚 𑌪𑌤𑌤𑍍𑌰𑌿 𑌚 𑌯𑌚𑍍𑌚 𑌸𑍍𑌥𑌾𑌵𑌰𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌤𑌤𑍍 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌤𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌨𑍇 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌂 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌤𑍍𑌰𑍋 𑌲𑍋𑌕𑌃 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 ॥௩॥

(ஸ0 - ஹா.) இப்படிக் கீழ்ச்சொன்ன ப்ரஜ்ஞானரூபமான ஆத்மா ஒன்றே. அந்தக்கரணமென்னும் உபாதிகளில் பிரவேசித்துப் பல ஜலங்களில் சூர்யபிம்பங்கள் பலவாறாக பிரதிபலிப்பதுபோல பலவாறு பிரதிபலிக்கிறது. இதுவே ஹிரண்யகர்ப்பன்; இதுவே தேவேந்திரன்; இதுவே முதலில் பிறந்த லிங்க சரீராபிமானியான பிரஜாபதி. கீழ் இப்பிரஜாபதியின் முகம் முதலியவைகளினின்றும் அக்னி முதலிய லோகபாலகர்கள் உண்டானதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதுவே எந்த அக்னி முதலியதேவதைகள்; எல்லாத் தேஹங்களுக்கும் காரணமாய் நிற்கும் பஞ்சமஹாபூதங்களும் இதுவே; ஸர்ப்பம் முதலியவைகளும் இதுவே; ஸ்தாவரமென்னும்,ஜங்கமம் என்றும், இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கிறவை யெல்லாம் இதுவே; முட்டையினின்று வெளிப்படும் பக்ஷி முதலியவைகளும், கர்ப்பப் பையிலிருந்து பிறக்கும் மனிதர் முதலியவர்களும் புழுக்கத்தால் உண்டாகும் பேன் முதலியவைகளும் விரைகளில் நின்று முளைக்கும் மரம் முதலியவைகளும் இதுவே. குதிரை, பசு, மனிதர், யானைகள், மற்றுமுள்ள பிராணிகள் யாவும் இதுவே. நடப்பதும் பறப்பதும் சலியாது ஸ்திரமாய் நிற்பதும் எல்லாம் இப்பிரஜ்ஞானத்தாலேயே ஸத்தையை யடைவிக்கப்படுகின்றேன் உத்பத்திஸ்திதி ப்ரளயகாலங்களில் பிரமத்தினிடத்திலேயே நிற்கிறது. இஜ்ஜகத்துக்கெல்லாம் ப்ரவர்த்தகம் அந்த ப்ரம்மமே. அது ஒன்றுதான் ஸத்யமானது. அதுதான் பர்யவஸாநஸ்தலம். அதுதான் பரப்ரஹ்மம்.

கீழ்ச்சொன்ன உபாதிகள் நீங்கப்பெற்றுன் இப்பிரஹ்மம் ஒன்றே குணங்களும் கிரியையும் இல்லாது நிர்மலமாய்ப் பரமானந்தஸ்வரூபமாய் நிர்விசேஷமாய் நிற்கிறது. இது பரிசுத்தமான பிரஜை யென்னும் உபாதியுடன் சேர்ந்து இருப்பது. இது ஸர்வஜ்ஞனமானது. இதுவே ஈசுவரன் என்று சொல்லப்படுகிறது. ஸர்வ ஜகத் காரண ஸமஷ்டி புத்தியில் ஆத்மத் வாபிமானம் வைப்பதினுல் நியந்தாவாகி அந்தர்யாமி யென்றுசொல்லப்படுகிறது. ஜகத்துக்கு ஹேதுவான புத்தியை ஆத்மாவாக அபிமானிக்கும்போது ஹிரண்ய கர்ப்பனென்று சொல்லப்படுகிறது. அண்டத்துக்குள் தோன்றியமுதல் சரீரத்தை உபாதியாகக்கொள்ளும்போது விராட் பிரஜாபதியென்னும் பெயரைப் பெறுகிறது. அதில் நின்றும் வெளியான அக்னி முதலியவைகளை உபாதியாகக்கொள்ளும்போது, அந்தந்தத் தேவதைகளாகச் சொல்லப்படுகிறது. இப்படியே பிரஹ்மாமுதல் சப்பட்டைக்கொள்வதும் கோரைவரையில்உள்ள சரீரங்களை உபாதியாகக்கொள்ளுவதும் அதன் அதன் பெயரை அடைவதும் இப்படி ஏகதத்வமான பிரம்மமொன்றே கீழ்ச்சொன்ன பல உபாதிகளினுலே எல்லா மனிதர்களும் பண்டிதர்களும் பலவாறாக நினைக்கும்படியிருக்கிறது.

𑌸 𑌏𑌤𑍇𑌨 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑍇𑌨𑌾𑌤𑍍𑌮𑌨𑌾𑌸𑍍𑌮𑌾𑌲𑍍𑌲𑍋𑌕𑌾𑌦𑍁𑌤𑍍𑌕𑍍𑌰𑌮𑍍𑌯𑌾𑌮𑍁𑌷𑍍𑌮𑌿𑌨𑍍𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑍇 𑌲𑍋𑌕𑍇 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍𑌕𑌾𑌮𑌾𑌨𑌾𑌪𑍍𑌤𑍍𑌵𑌾𑌮𑍃𑌤𑌃 𑌸𑌮𑌭𑌵𑌤𑍍𑌸𑌮𑌭𑌵𑌤𑍍 ॥௪॥

(ஸ0 - ஹா.) வாம தேவர்போலவே பிரஜ்ஞானத்தை ஆத்மாவாக அறிந்து உபாஸனம் செய்கிறவன் பேதஜ்ஞானமென்றும் ஸம்ஸாரத்தைவிட்டு ஜீவன் முக்தியென்னும் ஸ்வர்க்கானந்தங்களை அனுபவித்து விதேஹ முக்தியை அடைவான்.

ஐதரேயம் மூன்றாவது அத்தியாயம்
இரண்டாவது ஆரணம் ஆறாவது அத்தியாயம்
முற்றிற்று.

ஹரி: ஓம்.

ப்ருஹதாரண்யகோபநிஷத்.

ஓம் நமோ ப்ரஹ்மாதிப்யோ ப்ரஹ்மவித்யாஸம்ப்ரதாயகர்த்ருப்யோ வம்ஶர்ஷிப்யோ நமோ குருப்ய:.

உஷாவா என்று தொடங்கி வாஜஸநேயஶாகையைச் சேர்ந்த உபநிஷத் அதற்குச் சுருக்கமான உரை ஆரம்பிக்கப்படுகிறது.

உபநிஷத் என்றால் உபநி என்கிற உபஸர்க்கத்தைச் சேர்ந்த ஸதி என்கிற தாதுவுக்கு போக்கடிக்கிறதென்கிற அர்த்தமாதலால் ஸம்ஸாரத்தையும் அதின் காரணமான அவித்தையையும் போக்குகிற ப்ரஹ்மஜ்ஞானத்தை உண்டுபண்ணுதலால் உபநிஷத்என்று பெயர் பெற்ற இந்த 6 அத்தியாயங்களும் காட்டில் ரிஷிகளால் ஓதப்பட்டதினால் ஆரண்ணியகமென்றும் பெரிய க்ரந்தமாதலால் ப்ருஹத் என்றும் சேர்ந்து ப்ருஹதாரண்யகமெனப்பெயர் பெற்று விளங்குகிறது. வேதம் இரண்டுபாகம் கர்மகாண்டம் என்றும் ப்ரஹ்மகாண்டம் என்றும் அதில் கர்மகாண்டத்துக்குரிய யஜ்ஞம் முதலிய கர்மங்கள் கர்த்தா வென்றும் க்ரியை என்றும் அங்கங்கள் என்றும் பலவித வேற்றுமைகளோடே கூடியது மோக்ஷத்தில் ஆசையுள்ளவனுக்கு ப்ரஹ்மம் ஒன்றே சத்தியம் மற்றதெல்லாம் பொய் என்கிற ஜ்ஞானமே மோக்ஷகாரணமாதலால் மேல்கூறிய கர்மகாண்டத்தினால் இதற்கு விரோதமே யொழிய வேறில்லை ஆகையால் மோக்ஷத்தில் ஆசையுள்ளவர்களுக்கு அதற்குக் காரணமாகிய ப்ரஹ்மம் ஒன்றே மெய் என்கிற புத்தியை உண்டாக்கத்தக்க உபநிஷத் ஆரம்பிக்கப்படுகிறது. இதில் முதலில் அஶ்வமேதம் என்கிற யாகத்தைச் சேர்ந்த ஜ்ஞானத்தை சொல்லுவதில் பயன் அஶ்வமேதத்தில் அதிகாரமில்லாத ப்ராஹ்மணர்களுக்கு இந்த ஜ்ஞானத்தினால் வித்யயாவா கர்மணாவா வென்றும் 'அஶ்வமேதயாஜிதே, யஉசைநமேவம்வேத' - என்றும் சரியான பலன் உண்டென்று தெரியப்படுத்துவது தான் அதில் எல்லாக் கர்மங்களுக்கும் ஸம்ஸாரபலம் உண்டென்றும் கர்மங்கள் எல்லாவற்றிற்கும் உயர்ந்த அஶ்வமேதயாகத்துக்கு ஸம்ஸாரபலத்தைச் சொல்லுதலால் இதில் தாழ்ந்த கர்மங்களுக்கும் இதுவே பலனென்று ஏற்படுகிறதாதலால் மோக்ஷத்தில் ஆசையுள்ளவனுக்கு கர்மங்களில் வெறுப்பு உண்டாகிறதற்காக ப்ரஹ்மஜ்ஞானத்தைச் சொல்லும் உபநிஷத்தில் அஶ்வமேதத்தைச் சேர்ந்த ஜ்ஞானத்தை சொல்லியிருக்கிறது.

அதவீமாம்ஸஸ்யாயம் விதாரஸம்ஶ்ரயா | கஞ்ஜநாபஸாம்ராஜ்யம் ஜயிகர்மஹாதாம் | வ்யாஸஸம்க்ஷேபயோர்மத்ய ப்ரணீதாநந்த மாநவி | ப்ருஹதாரண்யகவ்யாக்யா கரோதிவிமலாஷதம் ||

8. அத்யாயங்கள் அடங்கின ப்ருஹதாரண்யகோபநிஷத்தில் ப்ரவர்க்யமென்றும் உபஸத்தென்றும் அஶ்வமேதயாகத்தின் அங்கங்களைச் சொல்

னும் முதல் இரண்டத்தியாயங்களை விட்டு மேலுள்ள அத்யாயங்கள் உரைக்கப்படுகின்றன. அதில் இந்த உஷாவா என்கிற வாக்கியங்களும் அஶ்வமேத கர்மத்தைச் சார்ந்ததாயிருக்கினும் ப்ருஹதாரண்யகத்திற் படிக்கச் சொல்லுகையால் ப்ரஹ்மஜ்ஞானத்தைச் சேர்ந்ததென்று அதற்குப் பொருளுரைப்பது உசிதமாயிருக்கிறது.

ஹரி: ஓம்.

உஷா வா அஶ்வஸ்ய மேத்யஸ்ய ஶிர: | ஸூர்யஶ்சக்ஷுர்வாத: ப்ராணோ வ்யாத்தமக்நிர்வைஶ்வாநர: ஸம்வத்ஸர ஆத்மாஶ்வஸ்ய மேத்யஸ்ய த்யௌ: ப்ருஷ்டமந்தரிக்ஷமுதரம் ப்ருதிவீ பாஜஸ்யம் திஶ: பார்ஶ்வே அவாந்தரதிஶ: பர்ஶவ ருதவோங்காநி மாஸாஶ்சார்தமாஸாஶ்ச பர்வாண்யஹோராத்ராணி ப்ரதிஷ்டா நக்ஷத்ராண்யஸ்தீநி நபோ மாம்ஸாநி | ஊவத்யம் ஸிகதா: ஸிந்தவோ குதா யக்ருச்ச க்லோமாநஶ்ச பர்வதா ஓஷதயஶ்ச வநஸ்பதயஶ்ச லோமாந்யுத்யந் பூர்வார்தோ நிம்லோசஞ்ஜகநார்தோ யத்விஜ்ரும்பதே தத்வித்யோததே யத்விதூநுதே தத்ஸ்தநயதி யந்மேஹதி தத்வர்ஷதி வாகேவாஸ்ய வாக் ||

(ப - ம்.) மேத்யஸ்ய யாகத்துக்குரிய, அஶ்வஸ்ய - குதிரையினுடைய, ஶிர: - தலை, உஷா வா - விடியற்காலம், சக்ஷு: - கண், ஸூர்ய: - சூரியன், ப்ராண: - உயிர்காற்று, வாத: - வாயு, வ்யாத்தம் - திறக்கப்பட்ட வாய், வைஶ்வாநர: - வைசுவாநரன் என்கிற பெயருள்ள, அக்நி: - நெருப்பு, ஆத்மா - சரீரம், ஸம்வத்ஸர: - வருஷம், மேத்யஸ்ய - யாகத்துக்குரிய, அஶ்வஸ்ய - குதிரையினுடைய, ப்ருஷ்டம் - முதுகு, த்யௌ: - சுவர்க்கம், உதரம் - வயிறு, அந்தரிக்ஷம் - ஆகாயம், பாஜஸ்யம் - மார்பு, ப்ருதிவீ - பூமி, பார்ஶ்வே - பக்கம், திஶ: - திசைகள், பர்ஶவ: - பக்க எலும்புகள், அவாந்தரதிஶ: - மூலைத்திசைகள், அங்காநி - அவயவங்கள், ருதவ: - ருதுக்கள், பர்வாணி - கணுக்கள், மாஸா: - ச - அர்தமாஸா: - ச - மாஸங்களும் பக்ஷங்களும், ப்ரதிஷ்டா - கால்கள், அஹோராத்ராணி - பகலிரவுகள், அஸ்தீநி - எலும்புகள், நக்ஷத்ராணி - நக்ஷத்திரங்கள், மாம்ஸாநி மாம்ஸங்கள், நப: - மேகம், ஊவத்யம் - பாதிஜரித்திருக்கிற ஆகாரம், ஸிகதா: - மணல்கள், குதா: - நரம்புகள், ஸிந்தவ: - ஆறுகள், யக்ருத் - ச - க்லோமாந: - ச - மார்பின் கீழிருக்கிற இரண்டு மாம்ஸ உண்டைகள், பர்வதா: - மலைகள், லோமாநி - மயிர்கள், ஓஷதய: - ச - சிறுசெடிகளும், வநஸ்பதய: - ச - மரங்களும், உத்யந் - உதயமாகிற, ஸூர்ய: - சூரியன், பூர்வார்த: - உடம்பின் முன்பாதி, நிம்லோசந் - அஸ்தமனத்தை அடைகிற, ஸூர்ய: - சூரியன், ஜகநார்த: - உடம்பின் பின்பாதி - விஜ்ரும்பதே - இதி யத் - கொட்டாவி விடுகிறது என்று யாதொன்றோ, தத் - அது, வித்யோததே - மின்னல் மின்னுகிறது அதாவது கொட்டாவி விடுகிறதே மின்னல் என்று பொருள், விதூநுதே - இதி யத் - மயிர்களை உதறுகிறதென்கிற யாதொன்றுண்டோ, தத் - அது, ஸ்தந

𑌯𑌤𑌿 - கர்ஜனம்பண்ணுகிறது அதாவது மயிர்களை உதறுகிறதே மேகங்களின் இடி முழக்கம் என்று பொருள், 𑌯𑌨𑍍𑌮𑍇𑌹𑌤𑌿 - மூத்திரம் விடுகிறதென்கிற யாதொன்றோ, 𑌤𑌤𑍍 - அது, 𑌵𑌰𑍍𑌷𑌤𑌿 - மழைபெய்கிறது, 𑌅𑌸𑍍𑌯 அந்தக் குதிரையின், 𑌵𑌾𑌗𑍇𑌵 - சப்தம்தானே - 𑌵𑌾𑌕𑍍 - வாக் தேவதை.

(𑌸𑌂 - 𑌹𑌾) அஸ்வமேதத்தில் பண்ணும் ஞானத்தைக் குறித்துச் சொல்லுவதற்காக அஸ்வமேதம் என்று பெயராதலால் குதிரையே முக்கியமான அங்கமாதலால் குதிரையிடத்தில் பண்ணும் புத்தியைச் சொல்லுகிறது.

(𑌰𑌾 - 𑌹𑌾.) 'தாத்பரியபேதம்'யதேவவித்யயாகரோதிஶ்ரத்தயோபநிஷதா "ததேவ வீர்யபத்தரம்பவதீ" என்று சொல்லி யிருக்கையால் கர்மங்களுக்கு அதிக பலத்தை அதாவது சீக்கிரம் பயனைக் கொடுக்கத்தக்க சக்தியை உண்டுபண்ணுவதான தியானத்தைச் சொல்லுகிறது.

𑌅𑌹𑌰𑍍𑌵𑌾 𑌅𑌶𑍍𑌵𑌂 𑌪𑍁𑌰𑌸𑍍𑌤𑌾𑌨𑍍𑌮𑌹𑌿𑌮𑌾𑌨𑍍𑌵𑌜𑌾𑌯𑌤 𑌤𑌸𑍍𑌯 𑌪𑍂𑌰𑍍𑌵𑍇 𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑍇 𑌯𑍋𑌨𑍀𑌰𑌾𑌤𑍍𑌰𑌿𑌰𑍇𑌨𑌂 𑌪𑌶𑍍𑌚𑌾𑌨𑍍𑌮𑌹𑌿𑌮𑌾𑌨𑍍𑌵𑌜𑌾𑌯𑌤 𑌤𑌸𑍍𑌯𑌾𑌪𑌰𑍇 𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑍇 𑌯𑍋𑌨𑌿𑌰𑍇𑌤𑍌 𑌵𑌾 𑌅𑌶𑍍𑌵𑌂 𑌮𑌹𑌿𑌮𑌾𑌨𑌾𑌵𑌭𑌿𑌤𑌃 𑌸𑌂𑌬𑌭𑍂𑌵𑌤𑍁𑌃 𑌹𑌯𑍋 𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 𑌦𑍇𑌵𑌾𑌨𑌵𑌹𑌦𑍍𑌵𑌾𑌜𑍀 𑌗𑌨𑍍𑌧𑌰𑍍𑌵𑌾𑌨𑌰𑍍𑌵𑌾𑌸𑍁𑌰𑌾𑌨𑌶𑍍𑌵𑍋 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑍍𑌸𑌮𑍁𑌦𑍍𑌰 𑌏𑌵𑌾𑌸𑍍𑌯 𑌬𑌨𑍍𑌧𑍁𑌃 𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑍋 𑌯𑍋𑌨𑌿𑌃 ||௨||

(ப - ம்.) 𑌅𑌶𑍍𑌵𑌂 𑌪𑍁𑌰𑌸𑍍𑌤𑌾𑌤𑍍-குதிரைக்கு முன்பக்கத்தில், 𑌅𑌹𑌰𑍍𑌵𑌾- கல்ப, 𑌮𑌹𑌿𑌮𑌾 - மஹிமா என்கிற பெயருடைய தங்கத்தால் செய்த ஹோமம் செய்யவேண்டிய பதார்த்தம் வைத்திருக்கிற பாத்திரமாக, 𑌅𑌨𑍍𑌵𑌜𑌾𑌯𑌤-ஆய்விட்டது, 𑌤𑌸𑍍𑌯 - அந்த பாத்திரத்துக்கு, 𑌪𑍂𑌰𑍍𑌵𑍇 - கிழக்குத் திசையில் இருக்கிற, 𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑍇 - சமுத்திரம், 𑌯𑍋𑌨𑌿𑌃 - வைக்கும் இடம், 𑌏𑌨𑌂 𑌪𑌶𑍍𑌚𑌾𑌤𑍍 - குதிரைக்குப் பின்பாகத்தில், 𑌮𑌹𑌿𑌮𑌾 - மஹிமா என்று பெயர் கொண்ட வெள்ளியால் செய்யப்பட்ட மேற்கூறிய பாத்திரம், 𑌰𑌾𑌤𑍍𑌰𑌿𑌃-இரவாக, 𑌅𑌨𑍍𑌵𑌜𑌾𑌯𑌤 - ஆய்விட்டது, 𑌤𑌸𑍍𑌯 - அதற்கு, 𑌅𑌪𑌰𑍇 - மேலைத்திசையிலிருக்கிற, 𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑌃 - சமுத்திரம், 𑌯𑍋𑌨𑌿𑌃 - வைக்கும் இடம், 𑌏𑌤𑍌- இந்த, 𑌮𑌹𑌿𑌮𑌾𑌨𑍌 - மஹிமா என்ற பெயருள்ள மேற்கூறிய பாத்திரங்கள், 𑌅𑌶𑍍𑌵𑌮𑌭𑌿𑌤𑌃 - குதிரைக்கு இரண்டு பக்கத்திலும், 𑌸𑌂𑌬𑌭𑍂𑌵𑌤𑍁𑌃 - உண்டாய் விட்டன அதாவது இரண்டு பக்கத்திலும் வைக்கப்பட்டிருக்கின்றன. 𑌹𑌯𑌃 - அயமென்கிற ஜாதியுள்ள குதிரையாக, 𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 - ஆய்விட்டு, 𑌦𑍇𑌵𑌾𑌨𑍍 - தேவர்களை, 𑌅𑌵𑌹𑌤𑍍 - சுமந்தது, 𑌵𑌾𑌜𑍀 - வாஜி என்கிற ஜாதியுள்ளதாய், 𑌗𑌨𑍍𑌧𑌰𑍍𑌵𑌾𑌨𑍍 - கந்தர்வர்களை, 𑌅𑌵𑌹𑌤𑍍-சுமந்தது, 𑌅𑌰𑍍𑌵𑌾-அர்வா என்கிற ஜாதியுள்ளதாய், 𑌅𑌸𑍁𑌰𑌾𑌨𑍍 - அசுரர்களை, 𑌅𑌵𑌹𑌤𑍍 - சுமந்தது, 𑌅𑌶𑍍𑌵𑌃 - அசுவமென்கிற ஜாதியுள்ளதாய், 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌨𑍍 - மனிதர்களை, 𑌅𑌵𑌹𑌤𑍍 - சுமந்தது, 𑌅𑌵𑌹𑌤𑍍 - என்கிறதை மூன்று இடங்களிலும் இழுத்துக் கொள்ள, 𑌅𑌸𑍍𑌯 - இந்தக் குதிரைக்கு, 𑌸𑌮𑍁𑌦𑍍𑌰 𑌏𑌵 - சமுத்திரம் தானே அல்லது பரப்ரம்மம் தானே, 𑌬𑌨𑍍𑌧𑍁𑌃-கட்டும் இடம், 𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑌃-சமுத்திரம், 𑌯𑍋𑌨𑌿𑌃 - உண்டாகும் இடம்.

(𑌸𑌂 - 𑌹𑌾 - 𑌰𑌾 - 𑌹𑌾.) குதிரைக்கு முன் பின் இரண்டு பக்கங்களிலும் வைக்கப்பட்ட பொன்னினாலும் வெள்ளியினாலும் செய்யப்பட்ட இரண்டு பாத்திரங்களில்

பண்ணப்படுவதான தியானத்தை சொல்லுகிறது. இதிசத்யாத்யாதேப்ரதமம் ப்ராம் மணம்.

𑌨𑍈𑌵𑍇𑌹 𑌕𑌿𑌂𑌚𑌨𑌾𑌗𑍍𑌰 𑌆𑌸𑍀𑌨𑍍𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌨𑍈𑌵𑍇𑌦𑌮𑌾𑌵𑍃𑌤𑌮𑌾𑌸𑍀𑌦𑌶
𑌨𑌾𑌯𑌯𑌾 𑌅𑌶𑌨𑌾𑌯𑌾 𑌹𑌿 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌸𑍍𑌤𑌨𑍍𑌮𑌨𑍋 𑌽𑌕𑍁𑌰𑍁𑌤𑌾𑌤𑍍𑌮𑌨𑍍𑌵𑍀 𑌸𑍍𑌯𑌾𑌮𑌿𑌤𑌿 𑌸𑍋
𑌽𑌰𑍍𑌚𑌨𑍍𑌨𑌚𑌰𑌤𑍍𑌤𑌸𑍍𑌯𑌾𑌰𑍍𑌚𑌤 𑌆𑌪𑍋 𑌽𑌜𑌾𑌯𑌨𑍍𑌤𑌾𑌰𑍍𑌚𑌤𑍇 𑌵𑍈 𑌮𑍇 𑌕𑌮𑌭𑍂𑌦𑌿𑌤𑌿 𑌤
𑌦𑍇𑌵𑌾𑌰𑍍𑌕𑌸𑍍𑌯𑌾𑌰𑍍𑌕𑌤𑍍𑌵𑌂। 𑌕𑌂 𑌹 𑌵𑌾 𑌅𑌸𑍍𑌮𑍈 𑌭𑌵𑌤𑌿 𑌯 𑌏𑌵𑌮𑍇𑌤𑌦𑌰𑍍𑌕𑌸𑍍𑌯𑌾
𑌰𑍍𑌕𑌤𑍍𑌵𑌂 𑌵𑍇𑌦 ॥௧॥

(ப - ம்.) 𑌇𑌹 - இந்த ஜகத்தில், 𑌅𑌗𑍍𑌰𑍇 - ஆதிகாலத்தில், 𑌕𑌿𑌂𑌚𑌨 - ஒருபொருளும், 𑌨𑍈𑌵𑌾𑌸𑍀𑌤𑍍 - இல்லை, 𑌇𑌦𑌂 - இந்த ஜகத்தானது, 𑌅𑌶𑌨𑌾𑌯𑌯𑌾 - சுருக்கவேணுமென்கிற எண்ணம் கொண்ட, 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌨𑌾-ப்ரகிருதியை உடம்பாகவுடைய ப்ரம்மத்தினாலே, 𑌆𑌵𑍃𑌤𑌂 - சூழப்பட்டதாக, 𑌆𑌸𑍀𑌤𑍍 - இருந்தது, 𑌹𑌿 - யாதொரு காரணத்தால், 𑌅𑌶𑌨𑌾𑌯 - சம்ஹரிக்க எண்ணமானது, 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌃 - மிருத்தியு என்று கூறப்பட்டதோ, 𑌤𑌤𑍍-அந்த ப்ரம்மமானது, 𑌆𑌤𑍍𑌮𑌨𑍍𑌵𑍀 - சரீரத்தையுடையவனாக, 𑌸𑍍𑌯𑌾𑌂 - ஆகக்கடவேன், 𑌇𑌤𑌿 - என்று, 𑌮𑌨𑌃 - மனதை, 𑌅𑌕𑍁𑌰𑍁𑌤 - பண்ணிற்று, 𑌸𑌃 - அந்த ப்ரம்மமானது, 𑌅𑌰𑍍𑌚𑌨𑍍 - தனக்கு ஆனந்தம் உண்டுபண்ணும் பொருட்டு, 𑌅𑌚𑌰𑌤𑍍 - சஞ்சரித்து, 𑌅𑌰𑍍𑌚𑌤𑌃 - ஆனந்திக்கிற, 𑌤𑌸𑍍𑌯-அந்தப் பரமாத்மாவினிடத்திலிருந்து, 𑌆𑌪𑌃 - ஜலங்களானவை, 𑌅𑌜𑌾𑌯𑌨𑍍𑌤 - உண்டாயின, 𑌅𑌰𑍍𑌚𑌤𑍇 - ஆனந்தப்படுவதின் பொருட்டு எத்தனித்த, 𑌮𑍇 𑌵𑍈-என்பொருட்டுதானே, 𑌕𑌂 - ஜலமானது, 𑌅𑌭𑍂𑌤𑍍 - உண்டாயிற்று, 𑌇𑌤𑌿 - என்று, (𑌅𑌮𑌨𑍍𑌤 - எண்ணிற்று), 𑌤𑌦𑍇𑌵 - ஆகையினாலே தானே, 𑌅𑌰𑍍𑌕𑌸𑍍𑌯 - அர்க்கனென்றும் பெயர்கொண்ட ப்ரம்மத்துக்கு, 𑌅𑌰𑍍𑌕𑌤𑍍𑌵𑌂 - அர்க்கனென்றும் பெயருடைமை, 𑌯𑌃 - யாதொருவன், 𑌅𑌰𑍍𑌕𑌸𑍍𑌯 - அர்க்கனென்னும் ப்ரம்மத்தினுடைய, 𑌅𑌰𑍍𑌕𑌤𑍍𑌵𑌂 - அர்க்கனென்றும் பெயருடைய, 𑌏𑌵𑌂 - இப்படி, 𑌵𑍇𑌦 - அறிகிறானோ, 𑌅𑌸𑍍𑌮𑍈 - இவன்பொருட்டு, 𑌕𑌂 𑌹𑌵𑍈 - கம்யென்று பெயர்கொண்ட சுகம் தானே, 𑌭𑌵𑌤𑌿 - உண்டாகிறது.

(ஸம் - ஸா.) அசுவமேதமென்கிற யாகத்துக்கு வேண்டிய கருவியாகிய அக்கினியின் உற்பத்தி சொல்லப்படுகிறது. இந்த சம்சாரமண்டலத்தில் ஒன்று பெயர் உருவங்களால் வகுக்கப்பட்ட ஒரு பேதங்களும் உலகத்தின் உற்பத்திக்கு முந்தி இல்லை. ஆனால் இங்கு ஒன்றுமில்லை என்றதுக்கு சூன்னியமென்று அர்த்தமன்று. ஏனென்றால் காரியம் உண்டாவதற்கு முந்தி காரணம் அவசியம் இருக்கவேண்டியது. உலகத்தில் குடம் உண்டாவதற்கு முந்தி மண் முதலான காரணங்கள் இருக்கிறதைக் கண்டிக்கிறோம். இல்லாவிடில் முயல்கொம்பு உண்டாகலாம். ஆதலால் காரணமுந்தியே இருக்கவேண்டியது. அப்படியே காரியமும் மண் உருண்டையில் இல்லாத குடம் உண்டாகில் முன்னிருந்த மண்ணுருண்டையைக் காட்டிலும் அதிக நிறை இருக்கவேண்டும். மேலும் கடவுளின் பிரத்தியக்ஷம் எல்லா வஸ்துக்களையும் அறிகிறதென்று சித்தமாயிருக்கிறதாதலால் குடம் உண்டாகப்போகிறதென்று அறிகையில் குடமில்லாவிடில் என்னமாய்ப் பிரத்தியக்ஷத்தால் அறியலாம். ஆனால் குடம் உண்டாகிறது, குடம் உடைந்தது என்கிற வார்த்தைகளில் குடம் உண்டானதாக ஏற்படுகிறதென்றால் குடத்தின் தோற்றத்தைச் சொல்லுகிறது. சுவர் முதலானதுகளால் குடம் மறைக்கப்பட்டால் குடம் நாசமடைந்த தென்றும் மறைவு நீங்கினால் குடம் உண்டாயிற்றென்றும் புத்தி உண்டாகிறதில்லையே என்னில் சுவர் முதலானவைகள் குடமிருக்கும் இடத்திற்கு வெளியில் இருந்து மறைக்கின்

றன, மண்ணுருண்டையில் இருக்கும் மறைவோ அப்படியல்ல, குடமிருக்கும் மண்ணுருண்டையிலேயே இருந்து மறைக்கின்றன. ஆகையால் சுவர் மறைக்குமிடத்தில் மறைத்ததென்றும் மறைவு நீங்கினல் தெரிகிறதென்றும் மண்ணுருண்டையில் குடம் மறைந்திருக்கும் காலத்தில் குடம் இல்லையென்றும் குடம் உண்டாயிற்றென்றும் புத்தி உண்டாகின்றது. மேலும் மேல்வாக்கியத்தில் "ஆவ்ர்தமாஸீத்" என்று மறைக்கப்பட்டிருக்கிறதென்று சொல்லுகையால் முயல்கொம்பு மறைக்கப்பட்டிருக்கிறதென்று உலகத்தில் சொல்லக்காணுமையால் வஸ்து இருக்கிறதென்றே ஏற்படுகிறது. "அஶநாத்" என்றுல் சாப்பிடவேணுமென்கிற ஆசை அதனுலன்றே ஐந்துக்களைச் சொல்லுகிறது. ஆதலால் அது "ம்ருத்யு" வென்று சொல்லப்படுகிறது. நான்முகனுக்கு மேற்கூறிய சாப்பிடவேணுமென்கிற ஆசை இருக்கிறபடியால் அவனை "ம்ருத்யு" வென்று சொல்லப்படுகிறது. அவனுல் இந்தக் காரியங்கள் மறைக்கப்பட்டிருந்தது. அந்த நான்முகன் காரியங்களை உண்டுபண்ணவேணுமென்று ஆலோசனைக்கு உரியமனதை நான் நல்லமனதை உடையவனுகக்கடவேன் என்ற எண்ணத்தால் உண்டுபண்ணினுர். அந்த நான்முகன் தன்னைப் புகழ்ந்துகொண்டிருந்தார். அப்பொழுது ஜலங்கள் உண்டாயின. இந்த ஜலங்களை சொன்னது வேறு உபநிஷத்துக்களுடைய ஒற்றுமையால் ஆகாயம், வாயு, அனல் இவைகளையும் சொல்லுகிறது. புகழ்ந்துகொண்டிருக்கிற என்னிடத்திலேயே ஜலமுண்டாயிற்று என்று எண்ணிற்றுதலால் அசுவமேத யாகத்துக்குரிய நெருப்புக்கு அர்க்கனென்று பெயர் உண்டாயிற்று.

(ஶா - ஷா.) அசுவமேதத்துக்குரிய குண்டத்திலிருக்கும் நெருப்பில் அசுவமேதத்துக்குக் காலமான ஒருவருஷகாலத்திலும் ப்ரம்மமாகத் தியானிக்கச் சொல்லப்போகிறதாய் நெருப்பின் உற்பத்தியைச் சொல்லுகிறது. அல்லது அக்னி ப்ரம்மத்தின் சரீரமாதலால் அப்படி நினைந்து அக்னியில் ஹோமம் பண்ணும்பொருட்டு ப்ரம்மத்தினிடத்தில் அக்னிக்கு உற்பத்தியைச் சொல்லுகிறது. ப்ரத்தியக்ஷமாய்த் தெரிகிற உலகங்கள் உற்பத்திகாலத்துக்கு முன் இல்லையென்றுல் குடம் உற்பத்திகாலத்துக்கு முந்தி இருந்ததென்றுல் மண்ணுருண்டை இருந்ததென்று அர்த்தம் ஆகிறதுபோல் காரணமாகிய வஸ்து இருந்ததென்று அர்த்தம் அதாவது "யஸ்யாக்ஷரம்ஶரீரம் யஸ்யம்ருத்யுஶ்ஶரீரம் ஏஷஸர்வபூதாந்தராத்மாஅபஹதபாப்மாதிவ்யோதேவஏகோநாராயண:" என்றுசொல்லி இருக்கையால் "ஸூக்ஷ்மமாந மூலப்பிரகிருதியைச் சரீரமாகவுடைய ப்ரம்மம் இருந்தது. அந்த ப்ரம்மம் உலகங்களை உடம்பாக உடையவனுய் ஆகக்கடவேனென்று யோசித்து மனஸ் என்கிற இந்திரியத்தைச் சிருஷ்டித்தது. மனஸ் என்றது எல்லா இந்திரியங்களையும் அதற்கு முன்னிட்ட ப்ரகிருதி மஹாந் ஆங்காரம் இவைகளையும் சொல்லுகிறது. இந்த ப்ரம்மம் தன்னைச் சந்தோஷப்படுத்தவேணுமென்று இச்சையுடையதாய் இருந்தது. அப்படி இச்சித்த ப்ரம்மத்தினிடத்தில் ஜலங்கள் உண்டாயின. சந்தோஷப்படுத்துவதில் எத்தனித்த என்னிடத்தில் ஜலம் உண்டாயிற்று என்று எண்ணிற்று. ஆகையால் அந்த ப்ரம்மத்துக்கு அர்க்கனென்று பெயர் உண்டாயிற்று. அப்படியே "அர்கோவாஜஸாக்ரம்தீ" என்று ஸஹஸ்ரநாமத்தில் சொல்லியிருக்கிறது.

ஆபோவா அர்க: தத்³யத³பாம் ஶர ஆஸீத்தத்ஸமஹந்யத ஸா ப்ருதி²வ்யப⁴வத்தஸ்யாமஶ்ராம்யத்தஸ்ய ஶ்ராந்தஸ்ய தப்தஸ்ய தேஜோரஸோ நிரவர்ததாக்³நி:॥

(ப - ம்.) ஆப: - ஜலங்கள், அர்க: - அக்நி, தத் - ஆதலால், யத் - யாதொரு, அபாம் - ஜலங்களுடைய, ஶர: - ஸாரமான பாகம், ஆஸீத் - இருந்ததோ, தத் - அது, ஸமஹந்யத - சேர்ந்தது, ஸா - அது, ப்ருதி²வீ - பூமியாக, அப⁴வத் - ஆச்சுது, தஸ்யாம் - அதில், அஶ்ராம்யத் - ப்ரயத்தனம் பண்ணினுர், ஶ்ராந்தஸ்ய - ப்ரயத்தனம் பண்ணிக்கொண்டிருக்கிற, தப்தஸ்ய - ஆலோசித்துக்கொண்டிருக்கிற, தஸ்ய - அந்த பரமாத்மாவுக்கு, தேஜோரஸ: - தேஜஸ் என்கிற வஸ்துவின் ஸாரமான, அக்³நி: - அக்நியானது, நிரவர்தத - உண்டாயிற்று.

(ஶம் - ஸா.) முன் அர்க்கனென்று சொல்லப்பட்டது. இப்பொழுது பின் வருமாறு வரிக்கப்படுகிறது. ஜலங்களே அர்க்கனென்று சொல்லப்படுகிறது. அதாவது

அர்க்கனென்று சொல்லப்பட்ட "அப்ஸுசாக்நிঃப்ரதிஷ்டிதঃ" அக்நியிடத்தில் உண்டாகிறது. அந்த ஜலங்களின் சாரமான பாகம் சேர்ந்து அண்டமுண்டாயிற்று. அந்த அண்டத்தில் ப்ரம்மன் இளைப்புடன் இருந்தான். அப்படி இளைப்புடைய அதினால் வேர்வையடைந்த ப்ரம்மனுக்கு தேஜஸ்ஸாகிற சாரம் உடம்பில் நின்றும் வெளியில் கிளம்பிற்று, அதுதான் அக்நி.

(ரா - ஹா.) அண்டம் விஷ்ணுவுக்குச் சரீரமான ஐம்பூதங்களினால் உண்டாக்கப்பட்டதென்பதைச்சொல்லுவதற்காக ஐம்பூதங்களில் ஒன்றான ஜலம் விஷ்ணுவுக்கு உடலென்று சொல்லுகிறது. ஜலங்கள் அர்ககனென்று சொல்லப்பட்ட விஷ்ணுவுக்கு உடல். அந்த ஜலங்களின் சாராம்சம் சேர்ந்து அதில் நின்றும் அண்டமுண்டாயிற்று. "தாஆபஸ்தத்தரண்மயமண்டமபவத்" என்று மஹோபநிஷத்தில் சொல்லியிருக்கிறது. அண்டமுண்டான பிறகு பரமாத்மாவானவர் ப்ரயத்தனம் பண்ணினார். அப்படி ப்ரயத்தனப்பட்ட ஆலோசனை பண்ணிக்கொண்டிருக்கிற பரமாத்மாவினுடைய உடம்பில் நின்றும் தேஜஸ்ஸுகளின் சாரமான அக்நி உண்டாயிற்று.

𑌸 𑌤𑍍𑌰𑍇𑌧𑌾𑌽𑌽𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌵𑍍𑌯𑌕𑍁𑌰𑍁𑌤𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌂 𑌤𑍃𑌤𑍀𑌯𑌂 𑌵𑌾𑌯𑍁𑌂 𑌤𑍃𑌤𑍀𑌯𑌂 𑌸 𑌏𑌷 𑌪𑍍𑌰𑌾𑌣𑌸𑍍𑌤𑍍𑌰𑍇𑌧𑌾 𑌵𑌿𑌹𑌿𑌤𑌃 𑌤𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌾𑌚𑍀 𑌦𑌿𑌕𑍍𑌛𑌿𑌰𑍋𑌽𑌸𑍌 𑌚𑌾𑌸𑍌 𑌚𑍇𑌰𑍍𑌮𑍌 𑌅𑌥𑌾𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌤𑍀𑌚𑍀 𑌦𑌿𑌕𑍍𑌪𑍁𑌚𑍍𑌛𑌮𑌸𑍌 𑌚𑌾𑌸𑍌 𑌚 𑌸𑌕𑍍𑌥𑍍𑌯𑍌 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾 𑌚𑍋𑌦𑍀𑌚𑍀 𑌚 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑍇 𑌦𑍍𑌯𑍌𑌃 𑌪𑍃𑌷𑍍𑌠𑌮𑌨𑍍𑌤𑌰𑌿𑌕𑍍𑌷𑌮𑍁𑌦𑌰𑌮𑌿𑌯𑌮𑍁𑌰𑌃 𑌸 𑌏𑌷𑍋𑌽𑌪𑍍𑌸𑍁 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑍋 𑌯𑌤𑍍𑌰 𑌕𑍍𑌵 𑌚𑍈𑌤𑌿 𑌤𑌦𑍇𑌵 𑌪𑍍𑌰𑌤𑌿𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑍍𑌯𑍇𑌵𑌂 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍 ‖௩‖

(ப - ம்.) 𑌸𑌃 - அந்த அக்நி, 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 - தன்னை, 𑌤𑍍𑌰𑍇𑌧𑌾 - மூன்று விதமாக, 𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌂 - ஸூர்யனை, 𑌤𑍃𑌤𑍀𑌯𑌂-மூன்றாவதாக, 𑌵𑌾𑌯𑍁𑌂 - காற்றை, 𑌤𑍃𑌤𑍀𑌯𑌂 - மூன்றாவதாக, 𑌵𑍍𑌯𑌕𑍁𑌰𑍁𑌤 - பண்ணிற்று, 𑌯𑌃-யாதொரு அக்நியானது, 𑌤𑍍𑌰𑍇𑌧𑌾 - அக்நி வாயு ஸூர்யன் என்று மூன்றுவிதமாக, 𑌵𑌿𑌹𑌿𑌤𑌃- செய்யப்பட்டதோ, 𑌸𑌏𑌷𑌃 - மேற்கூறிய இந்த அக்நியானது, 𑌪𑍍𑌰𑌾𑌣𑌃- ப்ரம்மம், 𑌤𑌸𑍍𑌯 - அந்த அக்நிக்கு, 𑌶𑌿𑌰𑌃 - சிரஸானது, 𑌪𑍍𑌰𑌾𑌚𑍀𑌦𑌿𑌕𑍍- கிழக்குத் திக்கு, 𑌅𑌸𑍌𑌚𑌾𑌸𑍌𑌚 - வடகிழக்கு தென்கிழக்கு மூலைகள், 𑌈𑌰𑍍𑌮𑍌 - கைகள், 𑌅𑌸𑍍𑌯 - இந்த அக்நியினுடைய, 𑌪𑍁𑌚𑍍𑌛𑌂 - வால், 𑌪𑍍𑌰𑌤𑍀𑌚𑍀𑌦𑌿𑌕𑍍 - மேற்குத்திசை, 𑌅𑌸𑍌𑌚𑌾𑌸𑍌𑌚 - வடமேற்குத் தென்மேற்கு மூலைகள், 𑌸𑌕𑍍𑌥𑍍𑌯𑍌 - தொடைகள், 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌚𑍋𑌦𑍀𑌚𑍀𑌚 - தென்திசை வடதிசைகளும், 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑍇-பக்கங்கள், 𑌪𑍃𑌷𑍍𑌠𑌂 - முதுகு, 𑌦𑍍𑌯𑍌𑌃-சுவர்க்கம், 𑌉𑌦𑌰𑌂 - வயிறு, 𑌅𑌨𑍍𑌤𑌰𑌿𑌕𑍍𑌷𑌂 - ஆகாசம், 𑌉𑌰𑌃 - மார்பு, 𑌇𑌯𑌂 - இந்தப் பூமி, 𑌸𑌏𑌷𑌃 - மேற்கூறிய இந்த அக்நி, 𑌅𑌪𑍍𑌸𑍁 - ஜலங்களில், 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌃 - ஸ்தாபிக்கப்பட்டது, 𑌏𑌵𑌂 - இம்மாதிரி, 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍-அறிந்தவன், 𑌯𑌤𑍍𑌰𑌕𑍍𑌵𑌚 - எந்த இடத்தில், 𑌏𑌤𑌿 - போகிறானோ, 𑌤𑌦𑍇𑌵 - அவ்விடத்திலே தானே, 𑌪𑍍𑌰𑌤𑌿𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿 - இருப்பை அடைகிறான்.

